29. விடாமுயற்ச்சியின் குத்துக்கள்;: விடத்தல்தீவில் கராத்தே தற்காப்புக் கலையின் சமூக மற்றும் கலாச்சார எழுச்சி பிரதான ஆய்வாசிரியார்: அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங் தகவல் வழங்கியோர்: அருளானந்தம் அமல்ராஜ், மத்தியாஸ் அண்ரனி இன்பராஜ், ஜே. ராஜஜ், புஷ்பராசா ஜூட் சதீஸ்குமார், கிறிஸ்ரியான் பற்றிக், மரியா கற்பலங்காரன் அருந்தவநாதன், ஜேம்ஸ் சுதாகரன், சிலுவைராசா ஸ்ரனிஸ்லஸ், செபமாலை பறீமன் ராசா, சவிரிமுத்து றேமன் அருந்தவறாஜ் சூசைதாஸ் சுயந்தன்
30. தொடர்ச்சியான தாளங்கள்: விடத்தல்தீவின் பாரம்பரிய மேடைக் கலைகளின் பரிணாமம், உயிர்ப்பும் மறுமலர்ச்சியும் அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர்
31. கிராமவேர்களிலிருந்து தேசிய சேவையின்வரை: இடப்பெயர்ச்சியின் மத்தியில் விடத்தல்தீவின் அரச ஊழியர்கள் மற்றும் நிபுணர்களின் கதை - கிறிஸ்ரீன் கியோமர் பயஸ்

நகரத் திட்டமிடல்

32. விடத்தல்தீவுக்கான கடலோர நகரமைப்பின் இலக்குவைத்த மறுமுனைப்பு திட்டம் - தங்கதுரை கார்த்தீஸ்வரன்

பொருளாதாரம், நிலம், வாழ்வாதாரம்

33. “பண்டமாற்றுத் துறைமுகங்கள் முதல் போருக்குப் பிந்தைய மீட்பு வரை: இலங்கை விடத்தல்தீவின் பொருளாதாரப் பயணம்” - ஜெனற் தனுஜா கீர்த்திசிலன்
34. “பண்டமாற்று முறையிலிருந்து வங்கி முறை வரை: பல நூற்றாண்டுகளாக விடத்தல்தீவு சமூகத்தின் நிதி பரிணாமம்” - கீதபொன்கலன் லொயிஸ் நிஷ்கலன்
35. “வணிகம், மோதல் மற்றும் உயிர்வாழ்வு: விடத்தல்தீவு மற்றும் மாந்தை மேற்கில் முஸ்லிம்களின் பொருளாதார வரலாறு” - எம்.ஐ. அனீஸ்
36. “பாரம்பரியத்தில் ஊன்றி, புதுப்பித்தலுக்காகப் போராடுதல்: விடத்தல்தீவின் கடலோர சமூகத்தில் பொருளாதார மாற்றங்கள்”- ஜெயசீலன் ஞானசீலன்
37. பாரம்பரியத்திலிருந்து கொந்தளிப்பு வரை: விடத்தல்தீவில் நில மதிப்பீடு பற்றிய வரலாற்று மற்றும் சமகால ஆய்வு - ஜெயசீலன் ஞானசீலன்

மீன்பிடி, கரையோர வளங்கள், நிலைத்திருத்தல்

38. “மாற்றத்தின் உப்பு நீரோட்டங்கள்: விடத்தல்தீவின் மீன்பிடி பாரம்பரியத்தில் கலாச்சாரம், மோதல் மற்றும் உயிர்வாழ்வு” - ஜெயசீலன் ஞானசீலன்
39. “பாரம்பரிய அலைகள்: விடத்தல்தீவில் மீன்வளத்தின் சமூக-கலாச்சார மற்றும் சூழலியல் மரபு” - சந்தியாப்பிள்ளை சாந்தகுமார்

40. “காலம் மற்றும் மாற்றத்தின் அலைகள்: விடத்தல்தீவின் கடலோரம் மற்றும் கடல் பாரம்பரியம்” - கிருஸ்னானந்தசெல்வன் அர்ஜூனன் , தனபாலசிங்கம் கீர்த்தனாராம்

41. “வளமிக்க கடற்கரைகள்: விடத்தல்தீவின் கடலோர மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகள்” எடிசன் மேரிநாதன்

42. “வாழும் நிலப்பரப்புகள்: விடத்தல்தீவின் சுற்றுச்சூழல் வளம் மற்றும் பாதுகாப்பு சவால்கள் பற்றிய பல்லுயிர் ஆய்வு” - மீரா சாஹிபு தமீம்

43. “புதுப்பிக்கும் சிறகுகள்: விடத்தல்தீவு மற்றும் மன்னாரின் கடலோர சரணாலயங்களில் பறவைகளின் சுற்றுச்சூழல் மற்றும் வரலாற்று பயணக் காவியம்” - அருளானந்தம் லோரன்ஸ்

44. “பற்றாக்குறையிலிருந்து நிலைத்தன்மை வரை: விடத்தல்தீவின் நீர் வழங்கல் வரலாற்றை ஆய்வு செய்தல்” மசனெட் எட்வர்ட் சுதர்சன்

45. “கிணறுகளிலிருந்து உயர்ந்த நீர் தொட்டிகள் வரை: இலங்கையின் விடத்தல்தீவில் நீர் உள்கட்டமைப்பின் வரலாற்றுப் பயணம் மற்றும் மோதலுக்குப் பிந்தைய மறுமலர்ச்சி” - மசனெட் எட்வர்ட் சுதர்சன்

46. வேர்களை மீட்டெடுப்பது: இலங்கையின் விடத்தல்தீவில் விவசாயம் மற்றும் விவசாயம் பற்றிய சமூக-வரலாற்று பகுப்பாய்வு. - மீரா சாஹிபு நஜிமுதீன்

47. வாழ்க்கையை நிலைநிறுத்துதல்: விடத்தல்தீவில் நீர்வளம் மற்றும் பாரம்பரிய மேலாண்மை பற்றிய ஆய்வு” - குளத்தான் முஜம்மில்

48. விடத்தல்தீவில் விவசாயப் புத்துயிர்ப்பு: கொள்கைகள், சந்தைகள் மற்றும் எதிர்காலப் பாதைகள - புஸ்பராசா யூட் ஆனந்தகுமார்

49. புத்துயிர் பெறும் வேர்கள்: இலங்கையின் விடத்தல்தீவில் மோதலுக்குப் பிந்தைய விவசாயம், பாரம்பரிய அறிவு விடாமுயற்சியின் தேவை - ஜெயசீலன் ஞானசீலன்

50. “எல்லைகளை ஆக்கிரமித்தல்: இலங்கையின் விடத்தல்தீவில் விவசாயம் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு காட்டு விலங்குகள் அச்சுறுத்தல்கள்” - சோமசுந்தரம் கனகேந்திரா

51. “உணவு, நினைவாற்றல், வாழ்வாதாரம் மற்றும் நிலைத்தன்மை: போர்க்கால விடத்தல்தீவில் பாரம்பரிய ஊட்டச்சத்து நடைமுறைகள்” - நான்சி லொயிஸ் நிஷ்கலன்

52. “உணவுமுறை, கலாச்சாரம் மற்றும் நோய்: விடத்தல்தீவில் இறைச்சி நுகர்வு மற்றும் இதய ஆரோக்கியத்தை ஆராய்தல்” - தவசீலன் ஞானசீலன்

சுகாதாரம்,கல்வி,சமூக அபிவிருத்தி

53. “வரலாற்றின் வழியில் குணப்படுத்துதல்: விடத்தல்தீவில் சுகாதாரம் மற்றும் மருத்துவத்தின் பரிணாமம்” குணசீலன் ஞானசீலன்

54. எதிர்நீச்சலில் கற்றல் விதைகள்: விடத்தல்தீவு மற்றும் ஜோசவாஸ் நகரில் பாலர் கல்வியின் சமூக வரலாறு - ஜோசப் சரோஜினி, தேவதாசன் ஆன் சித்திரா, றொபேட் சார்லஸ் லெற்றீசியா

55. “கோயில்களிலிருந்து வகுப்பறைகள் வரை: இலங்கையின் விடத்தல்தீவு மற்றும் ஜோசவாஸ் நகர் கல்வியின் வரலாற்றுப் பயணமும் மறுமலர்ச்சியும்” - - ஜெயசீலன் ஞானசீலன்

56. “மொழியில் உயிர்வாழ்தல்: விடத்தல்தீவில் ஆங்கில சரளத்தின் பரிணாம வளர்ச்சியைக் கண்காணித்தல்” - அலோசியஸ் அமல்ராஜ்

57. நம்பிக்கை மற்றும் அடையாளத்தை மீண்டும் உயிர்ப்பித்தல்: ஜோசப் வாஸ் நகரின் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார பரிணாமம் - டெனிஸ்ரின் சுபாஸ் சந்திரன்

58. “பராமரிப்பாளர்களிடமிருந்து மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் வரை: விடத்தல்தீவு மற்றும் ஜோசப்வாஸ் நகரில் பெண்களின் சமூக வரலாறு” - சுபோஜினி அருள் ஜெயக்குமார்

59. “இடப்பெயர்விலிருந்து புதுப்பித்தல் வரை: விடத்தல்தீவின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுப் பயணம்” - கரோலின் விஜயசந்திரன் அன்ரனிஸ்

60. “கற்றல் மரபு: விடத்தல்தீவு புனித யோசேவாஸ் மகா வித்தியாலயத்தின் வரலாற்றுப் பயணம் மற்றும் சமூகத்தின் தாக்கம்” - ஜோன்சன் கியோமர் பயஸ்

61. *மறக்கப்பட்ட கடற்கரை: வட இலங்கையின் விடத்தல்தீவில் அரசு சாரா அமைப்புகளின் பங்களிப்பு மற்றும் அடிமட்ட மக்களின் உயிர்வாழ்தல் - மரியாம்பிள்ளை மரியசெல்வம்*
62. *“விடத்தல்தீவு அலிகார்” - வரலாற்றுப் பார்வை - சுஜப் எம் காசிம்*

அறிவியல், தொழில்நுட்பம், உட்கட்டுமானம், இயக்கம்

63. *“பாரம்பரியத்திலிருந்து நிலைத்தன்மை வரை: இலங்கையின் விடத்தல் தீவின் சிவில் பொறியியல் மற்றும் உள்கட்டமைப்பு ஆய்வு” - சாந்தசீலன் ஞானசீலன்*
64. *“டிஜிட்டல் பிளவை இணைத்தல்: விடத்தல்தீவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கிராமப்புற மாற்றம்” - மெனெற் தனுஷா தோமை செல்வா*
65. *காலத்தின் வழியே செல்லும் பாதைகள்: விடத்தல்தீவில் போக்குவரத்து, போர் மற்றும் சமூக வலிமை - சவேரிதாசன் செல்ரன் யூடிற்*

1. 1985ம் ஆண்டு தொடங்கிய எம் வாழ்க்கை - வரப்பிரகாசம் நிஷாந்தான்

எம்மை இவ் உலகு தத்தெடுத்த ஆண்டு. எம் இனத்தின் இடம்பெயர்வு தொடங்கிய காலமும் எம் ஊர் மக்கள் வேறு ஊர் தேடி அலைந்து திரிந்த ஆண்டும். பல பிரச்சினைகள் மத்தியில் இவ் உலகு எம்மை ஏற்றுக்கொண்ட ஆண்டு.

போற இடத்திலே தங்கள் பிரசவத்தை எதிர்கொண்ட எம் தாய்மார்கள். நாம் பிறக்கும்போதே எம் இனத்தின் பிரச்சினையை எதிர்கொண்ட பிள்ளைகள். 1985ம் ஆண்டு பிறந்த எம் பார்வையில் எம் ஊர்.....,

ஆரம்ப பள்ளி யோசப்பின் கொஸ்கா சித்திரா என மிக மிக அருமையான ஆசான்;கள் சிறுவர்கள் போல் மாறி நளினத்தோடு கற்றுத் தருவதில் வல்லவர்கள். பெரிய மூடைகளில் பால்மா கொண்டு வருவதும் அதை எமக்கு தருவதும் வெள்ளிக்கிழமைகளில் இலை கஞ்சி கொடுத்து எமது உடலை பலப்படுத்துவது என்று பல செயல்பாடுகள் அதற்காகவே விரும்பி பாடசாலை சென்ற காலங்கள் அது. எந்த ஒரு துன்பமும் அறியாது எமக்கான சிறுபிள்ளைத்தனத்தோடு கையடக்க தொலைபேசி இல்லாது சிறுவர்களுக்கான சேட்டைகள் அனைத்தும் செய்து மகிழ்வாக இருந்த காலங்கள் பிள்ளையார் கோயிலில் பொங்கல் கடலை வடையென அனைத்தும் வாங்கி உண்பதும் புதுக்கட்டு என்பது அது அப்போது எமக்கு மிகப்பெரும் மைதானம் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாடி உள்ள வீடுகள் அற்ற வெறும் தரவை அதில் உட்கார்ந்து அனைத்து உணவையும் உண்ட பின் பிள்ளையார் குண்டு தாவீது குண்டு நீர்த்தேக்கங்களில் எங்கள் கை கால் முகம் என அனைத்தையும் கழுவி மகிழ்ந்த காலம் இன்று வரை மறக்க முடியுமா? மதங்கள் மூன்று இருந்தாலும் அனைவரின் மனதிலும் ஊர் என்ற ஒரு மனமே. ஆரம்பப் பள்ளி முடித்து பாடசாலை தொடங்கிய காலம் ஆத றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மணி மாஸ்டர் அதிபராகவும் மலர், கிறிஸ்டின், சாந்தி, விர்றேசன,; கிருசாந்தி என்னும் பல தொண்டர் ஆசிரியர்கள் ஆரம்ப காலத்திலேயே எம்மை பண்படுத்திய ஆசிரியர்கள் மாந்தை பிரதேசத்தில் மிகப்பெரும் பாடசாலை எமது பாடசாலையே என பெருமை பட்டோம்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்களின் இடம்பெயர்வால் எமது சொந்தங்கள் பல எமது ஊரை தேடி உறவுகளை தேடி அகதிகள் ஆக்கப்பட்டு வந்தார்கள் அப்போது நாம் சிறு பிள்ளைகள் என்பதால் அவர்களின் வலிகள் எமக்கு புரியவில்லை அந்த நாட்களில் எமது இஸ்லாமிய உறவுகள் இடம் பெயந்து அகதிகளாக புத்தளத்திற்கு வெளியேற்றப்பட்ட நேரம் நான் மிகவும் சிறியவன் அவர்கள் பார ஊர்தியில் ஏற்றி அனுப்பப்பட்டார்கள் என நினைக்கின்றேன் அவ்வேளையில் எமது ஊர் அணைத்து மக்களும் அவர்களை கண்ணீர் மல்க அனுப்பியது சிறிது நினைவு இருக்கிறது அவர்கள் சென்றதினால் அவர்களின் வீடுகள் அவர்களின் நிலங்கள் யாரும் அற்று வெறுமையால் வாடியாது பின்பு இடம் பெயர்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் இஸ்லாமிய மக்களின் வீடுகளில் குடியேறினார்கள் அவர்களின் வருகையால் எமது பாடசாலையில் மாணவர்கள் நிறைந்து வழிந்தார்கள் இதில் ஒன்றை கூறவேண்டும் அப்போது அலிகார் பாடசாலை நிறைய குடும்பங்கள் வாழும் ஓர் வாழ்விடத்தை வழங்கி மக்களின் கண்ணீர் துடைத்தது மாணவர்கள் கூடியதால் பல ஓலை கொட்டகைகளில் திறந்த வகுப்பறைகளில் என அனைத்திலும் மாணவர்கள் கல்வி கற்ற காலம் அது. புத்தகங்களின் பற்றாக்குறையால் இருவர் மூவர் என ஒரு புத்தகத்தை சேர்ந்து ஒரு மாணவர் வீட்டிலே இரண்டு மூன்று மாணவர்கள் சேர்ந்து இரவு நேரங்களில் கல்வி கற்று அவர்கள் வீட்டிலேயே இரவு உணவு உண்ட சந்தோசமான தருணங்கள் இன்று வரை மறக்க முடியாத நேரங்கள் அவை. மாலை 6:00 மணி ஆனது என்றால் தெருக்களிலே பாடசாலை மாணவர்கள் வருவதென்றால் அவசிய தேவைகளுக்கு மட்டுமே. இல்லையென்றால் பல பேரின் பிரம்படி வாங்க வேண்டும். மிகவும் கட்டுப்பாடான மிகவும் ஒழுக்கமான சமூகத்தை உருவாக்க பல பேரும் முயற்சி செய்தார்கள். யாருடைய பிள்ளைகளை தண்டித்தாலும் பெற்றோர்கள் ஏதும் சொல்வதில்லை. தப்புகள் செய்யும்போது யாரும் தண்டிக்கலாம் என்றொரு மனப்பாங்கு எமது மக்கள் மத்தியில். அதனாலேயே எமது ஊர் பல பேரின் கைகளால் செதுக்கி எடுக்கப்பட்ட சிற்பத்தை போன்று மிக ஒழுக்கமான சமூகமாக வளர்த்தெடுக்கப்பட்டது. அந் நாட்களில் தொலைக்காட்சி பெட்டி ஓரிரு வீட்டில் தான் வைத்திருந்தார்கள். திரைப்படம் பார்ப்பதானால் இந்து கோயில் திருவிழாக்கள் எமது ஊரின் திருமண வீடுகள் என்று சிறு விசேஷங்கள் வந்தால் தான் கண்ணன் அண்ணனினால் திரைப்படம் காண்பிக்கப்படும். இந்தத் தொலைக்காட்சி பெட்டியும் மிகவும் கஷ்ரப்பட்டு தான் இயக்க வேண்டும் என்பது நிறைய பேருக்கு ஞாபகம் இருக்கும்.

அந் நாட்களில் தினமும் சனி கிழமைகளில் இரவு ஒன்பது மணியளவில் ஜெய் ஹனுமான் என்னும் ராமாயண நாடகம் இந்திய தொலைக்காட்சி ஒன்றில் ஒளி பரப்பாகியது அதைப் பார்ப்பதற்கு தொலைக்காட்சி பெட்டி உள்ள வீடுகளுக்கு எம் மக்கள் குடும்பங்களாக சென்றது இன்றும் நினைவிருக்கிறது. எமது பாடசாலையில் மணி மாஸ்டர் ஓய்வு பெற்ற பிற்பாடு திரு.ராஜகோன் அதிபராகவும் டெயிசி ஆசிரியை உப அதிபராகவும் வரும்போது நாம் கொஞ்சம் வளர்ந்து விட்டோம். அடிகளுக்குப் பஞ்சமில்லை நாம் செய்த தப்புகளும் கொஞ்சம் இல்லை பாடசாலை பக்கத்தில் சேமக்காலை அதனில் ஒளிந்திருந்து பாடசாலைக்கு போவதில்லை யாராச்சும் கண்டுவிட்டால் வீட்டிலும் பாடசாலையிலும் அடிக்கு பஞ்சம் இல்லை. ராயகோன் அதிபரைக் கண்டுவிட்டால் தப்பேதும் செய்யாவிட்டாலும் கை கால் நடுங்கும் அவ்வளவு பயம் கலந்த

மரியாதை கணக்கு வாய்ப்பாட்டை தலைகீழாக கேட்கும்போது சொல்லாமல் தடுமாறி அடியும் வேண்டி உள்ளோம்
டெயிசி டீச்சர் ஆங்கிலம் கற்பிப்பார். மிக மிக கண்டிப்பானவர். ஒழுக்கத்தை மிகவும் எதிர் பார்ப்பவர். தவறுகள் செய்துவிட்டால் யார் என்று பார்க்க மாட்டார் அனைவருக்கும் ஒரே மாதிரியான அடிதான். பெனெடிற் மாஸ்டர் மற்றும் மரியசீலி ஆசிரியை போன்றோர் மறக்க முடியாதவர்கள். பெனெடிற் மாஸ்டரிடம் ஆங்கிலம் கற்றவர்கள் இன்று வரை அவர் கற்பித்த முறையை மறக்க முடியாது வகுப்பறையில் கடைசி மேசையில் உள்ளவர் வரை ஒரு பாடத்தை கற்று முடித்தால் தான் அடுத்த பாடமே ஆரம்பமாகும் அப்படி ஒரு அக்கறை கொண்ட ஆசிரியர் அவர் கற்பித்த முறை இன்றும் ஞாபகம் இருக்கின்றது அவர் ஆங்கிலத்தில் கற்பிக்கும் போது மிகவும் சுவாரஸ்யமாக கற்று தருவார். மரியசீலி ஆசிரியர் மிகவும் பிடித்த ஆசிரியர் அவரிடம் கண்டிப்பு எப்போதுமே இருக்காது. அன்பினால் அனைவரையுமே திருத்தி எடுத்து விடுவார். அவர் கற்பிக்கும் முறையே வித்தியாசம். அவர் கற்பிக்கும் போதே அனைவருடைய மனசிலும் பதிந்துவிடும். அவர் கற்பிக்கும் போது அந்தப் பாடத்தையே கதையாக சொல்லிவிடுவார். அதனாலேயே அவருடைய பாடம் என்றால் அனைவருக்கும் ரொம்ப பிடிக்கும்.

பாடசாலை பின்புறத்தில் கடல் நீர் ஆறு வேறு ஆத்துக்குள்ள இறங்குவதும், பல அழுக்குகளை பிரட்டுவதும், மீன் குஞ்சு பிடிப்பதும், இறால் முட்டை தேடுவதும், சிப்பி எடுத்து விளையாடுவதும், சிறு நண்டு பிடிப்பதும் என்று பல பொழுதுபோக்கு. திருகுளத்தில் குளிக்காத மாணவர்கள் மிக

அரிதாக இருப்பார்கள் அவர்கள் விரும்பி ஒன்றும் குளிப்பதில்லை பாடசாலை முடிந்ததும் அல்லது பாடசாலை இறுதி நாளில் பாடசாலை பெறுபேறு சான்றிதழ் தந்த உடன் எங்களுக்குள்ளே விடுமுறை வரும் மகிழ்ச்சியினால் ஒவ்வொரு ஆளாக தள்ளுமுள்ளு பட்டு விழுந்து விடுவோம் என்றுமே பச்சைக் கலரில் காட்சி தரும் திருகுளம் நீர் அன்று மட்டும் நிறம் மாறி காணப்படும். பாடசாலை தோட்டத்திற்கு திருகுள நீரையே அள்ளி ஊற்றுவோம். யுத்தத்தின் கொடூரம் எம்மை விட்டு வைத்ததில்லை பல குண்டு சத்தம் பல விமான இரைச்சல் என பலவற்றுக்கும் பாதுகாப்பு தேடி மரத்தின் அடியிலும் பதுங்கு குழியிலும் ஆலய முற்றத்திலும் படுத்து எழும்பிய அனுபவங்கள் எமக்கு நிறையவே உண்டு. பலவற்றுக்கும் பயந்து பயந்து பழகிய காலம் என்றாலும் கடவுளின் கிருபையால் எமது ஊர் எப்போதும் பாதுகாத்து வரப்பட்டது என்பது யாரும் மறக்க முடியாத உண்மை. இருந்தபோதிலும் சில உயிர்களையும் விமான செல் தாக்குதலில் பலிக்கொடுத்த கண்ணீர் வலிகளும் அனுபவித்தோம்.

குருசு கோயில் திருவிழா வந்துவிட்டால் ஊர் கூடி உலை வைத்து சமைத்து ஒற்றுமையாய் ஊரோடு உண்டு மகிழ்ந்தோம். கோயில்குளம் அந்தோணியார் கோயில் திருவிழாக்கள் வந்து விட்டாலும் ஊர் கூடி உலை வைத்து சமைத்து உண்ட சந்தோச காலங்களும் உண்டு. நுங்கு வெட்டி அய்யனார் கோயில் திருவிழா வந்துவிட்டால் அதில் எம் மக்களின் எண்ணிக்கையே அதிகம் சமயங்கள் தெரிவதில்லை சாதிகள் தெரிவதில்லை சந்தோசம் மட்டுமே அதில் தெரியும். கோயிலுக்கு போனவர்கள் வரும்போது விளாங்காய், புளியம்பழம் என்று பலதையும் கட்டி சுமந்தபடி வீடு வந்து சேர்வார்கள். வாரத்தில் சனிக்கிழமை வந்து விட்டால் குளமே கொந்தளிக்கும் ஊர் முழுதும் குளத்தில் நிற்கும் இளசுகள் மட்டும்; மதுர மரத்தில் நிற்கும். போட்டி போட்டு பாய்வதும் குளத்தை நன்கு கலக்குவதும் ஊரவரிடம் திட்டு வாங்குவதும் அதிலும் ஒரு சந்தோசம் தான். குடி தண்ணி மறக்கவே முடியாது. நாலு மணிக்கு எழுந்திருச்சு படையெடுக்க ஆரம்பித்தால் நல்ல தண்ணி கிணறு தாங்காது. துவிச் சக்கர வண்டியின் பின்புறம் இரண்டு குடம் முன்புறம் இரண்டு குடம் கரியரில் தண்ணி கேன் என்று ஒரு வாகனத்தில் ஏற்றும் பாரத்தை போல் குடி தண்ணி அள்ளிச் செல்வார்கள் இது ஆண்களின் வேலை. பெண்களோ பள்ளிவாசல் கிணறு, யாகப்பர் ஆலய கிணறு, அலிகார் பாடசாலைக்கு முன்னுள்ள குழாய் கிணறு அனைத்திலும் வரிசை கட்டி நிற்பார்கள்.

தலையில் இருக்கும் குடம் இடுப்பில் ஒரு குடம் என்று சிறு உவர் கலந்த நீரை பாத்திரங்கள் கழுவுவதற்கும் முகம் கை கால்கள் கழுவுவதற்கும் அள்ளி சரிப்பார்கள் அதில் சிங்கம் ஐயாவின் மாட்டு வண்டி தண்ணி அள்ள வரும் அழகே தனி வண்டியில் தண்ணியை அள்ளிவிட்டால் யாருடைய உதவியும் இன்றி தனக்குரிய பாணியில் வீதியின் ஓரமாக நடந்து சென்று வீடு சேரும் அப்படி ஒழுக்கமான மாடுகள். காலை ஆறு மணி மட்டும் தண்ணி அள்ளி முடித்துவிட்டு திருப்பலிக்கு போக வேண்டும். போகா விட்டால் அதற்கு வேறு அடி வாங்க வேண்டும். அனைத்திலும் ஒழுக்கங்கள் பழையவர்கள் சொல்லி கேள்விப்பட்டதுண்டு றெயிஸ் இராஜநாயகம் பங்குத் தந்தைதான் எமது ஊரை நல்வழிப்படுத்தியவர் எமது கழகங்களை ஒன்றிணைத்து ஐக்கிய விளையாட்டு கழகம் உருவாக்கியவர் என்றும் மறக்க முடியாதவர் என்றும் நாம் கேள்விப்பட்டோம்.; ஆனால் எங்கள் காலத்திலும் மறக்க முடியாத பங்குத்தந்தை ஒருவர் பணி செய்தார் இரண்டு கோயில் அமைப்புகளையும் ஒன்றாக்கி மக்களிடையே அன்பு என்னும் ஒரு விளக்கை ஏற்றி முன்மாதிரியாக வாழ்ந்தவர். அருள்மாரி மண்டபம் என்று உருவாக்கி அதில் மாணவர்கள் தங்கி படிக்கும் வசதியும் செய்து தந்தார் அனைவருக்கும் பிடித்தவர் மிகவும் நேர்மையானவர் வின்சன் பற்றிக் அடிகளார். பாடசாலை செல்லுங்காலங்களில் ஒரு றாத்தல் பாண் வாங்கி நாலு துண்டாக வெட்டி தேனீர் உண்ட காலங்கள். ஆளுக்கொரு ஆட்டுக்காலுடன் கையிலே சீனியை கொட்டி தேனீர் தொட்டு குடித்த காலங்கள். சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது கடாவி தோடம்பழ இனிப்பு என்று பலவற்றுடன் தேனீர் பருக்கிய

அனுபவமும் உண்டு. அதுதான் எம் வறுமையை உணர்த்தியது இரவு கடலுக்குப் போய் வருபவர்களின் மீன்களை எடுத்து அந்த நேரத்திலே புளி மிளகாய் வைத்து உண்ணும்போது அந்த சுவை வேறு எதிலும் கிடைக்காது இன்னமும் அந்த ருசி நாவிலே இருக்கு. லுக்ஸ் ஐயா, செபமணி சிலுவை ஐயா போன்றோரின் வள்ளம் வரும் வரை காத்திருந்து 50ரூபாய்கு ஒருகிலோ கொட்டுவலை விளமீன் வாங்கியதும் சாலமோன் அண்ணன் வாடியில் ஐஸ் எடுத்து உண்பதும் இன்னும் மறக்க முடியாதவை. மாசி பங்குனி காலங்களில் எம்மை கண்ணா காடுகளில் அதிகமாக காணலாம் கிளிக்குஞ்சு எடுப்பதும் அதை வித்து வரும் பணத்தில் செல்லன் மத்தேஸ்அப்பா, வலோரியான் ஐயா போன்றோரின் கடைகளில் தின் பண்டங்கள் வாங்கி தின்பதும் இலந்தைகாய், புளியம்பழம் பிடுங்கி தூள் போட்டு சாப்பிடுவது என்று சொல்லில் அடங்காதவை. இந்த சந்தோஷங்கள் மத்தியிலும் சில கசப்பான சம்பவங்களும் நம் மக்களுக்கு இடம் பெற்றன எமக்கு விவரம் தெரிய முன்னரே இஸ்லாமிய சகோதரர்கள் இடம்பெயர்வு இடம் பெற்றதால் இஸ்லாமிய சகோதரர்களுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு எமக்கு கிடைக்கவில்லை ஆனால் நம் பெற்றோர்களின் வாய் மூலமாக அவர்களுடன் வாழ்ந்த ஒற்றுமை நல்லிணக்கம் பற்றிய தகவல்கள் எமக்கு பரிமாறப்பட்டன. ஆதலால் அவர்களைப் பற்றிய தகவல் கொஞ்சம் அதிகம் எமக்கு தெரியும். 1999ம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னாடி எம் ஊரின் கட்டுப்பாடு ஒழுக்கங்கள் தளர்த்தப்பட்டன என்று கூறுவேன்.

இடம்பெயர்வின் முன்னாடி நம் மக்களிடம் பெரிதாக பணம் இல்லை பெரிதாக அபிவிருத்தி இல்லை ஆனால் அன்புக்கு பஞ்சமில்லை, பல திறமைக்கு பஞ்சமில்லை பல ஊர்களின் முன்மாதிரி எம் ஊராகவே இருந்தது இன்று அனைத்தும் சிறு கேள்விக்குறி ஆகவே இருக்கின்றது. 1985ம் ஆண்டு தலைமுறையே எமது ஊரின் அனைத்து சுகங்களையும் கண்ட கடைசி தலைமுறை அதன் பின் உள்ளவர்கள் இடப்பெயர்வின் பின்னர் 1999ம் பின்னாடி உள்ள வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். அந்தக் கால வாழ்க்கைக்கும் தற்போதுள்ள இந்தக் கால வாழ்க்கைக்கும் வித்தியாசம் பல உண்டு. அன்று சந்தோசம் நிறைந்திருந்தது. வீட்டில் பல உறவுகள் நிறைந்திருந்தது. உறவுகளுடன் சேர்ந்திருக்கும் நேரம் நிறைந்திருந்தது. இன்று இதில் எதுவும் இல்லை அவசர உலகம் உழைக்கும் நேரம் அதிகம். உறவுகள் பக்கத்தில் இல்லை. சேர்ந்து உண்ணும் காலமும் இல்லை. தொலைத்து விட்டோம் எமது ஒழுக்கத்தை. எமது பண்பாட்டை எமது பெருமையை. எப்போது மீட்டெடுப்போம் எமது ஒற்றுமை நமது பண்பாடு எமது பாரம்பரியம். கேள்விக்குறியே சில பாரம்பரிய பழக்கங்களை அடுத்த தலைமுறைக்கு கடத்திச் செல்வோம். இருக்கும் எமது ஊரின் கொஞ்ச பாரம்பரியத்தையாவது கட்டிகாப்போம்.

நாம் கண்ட ஊர், நாம் வாழ்ந்த ஊர், நாம் கண்ட ஒற்றுமை இனி எப்போது வரும். தொலைந்து போகுறது தொலைபேசியில் சில உறவுகளின் பொழுது போக்கும் பாச பிணைப்பும் தொலையாமல் மீட்டெடுக்க முயற்சியே இந்த மாநாடு.

கொடி கட்டி பறந்த எமது ஊரும் இப்போ கொடி கட்டி பறக்க துடிக்கும் நமது ஊரும்

பாப்பா மோட்டை தொடங்கி பள்ளிக்குடா வரைக்கும் கடல் முழுதும் ஆண்ட பரம்பரை பல ஊருக்கு கூலி கொடுத்து வாழ வைத்த பரம்பரை இன்று கடல் சுருங்கி கையளவு வந்த பின்பு மற்றவரின் ஊருக்கு போய் கையேந்தும் நிலை வந்திடுமோ அன்று ஊர் கூடி ஒன்றாய் நின்றோம் ஒருவர் நம்மை தொட நினைத்தால் நம் ஊரின் ஒற்றுமை தான் அவர்கள் கண் முன்னே தோன்றி விடும். வானுயர் ஆலயங்கள் இரண்டாக இருந்தாலும் மிகச் சிறப்பாக திருவிழாக்கள் வருடம் தோறும் செய்து விடுவோம் வடையுடன் மோதகமும் சர்க்கரைப் பொங்கலுடன் கடலையும் இனிதாய் சாப்பிட்டு மகிழவே நம்ம ஊரு பிள்ளையார் கோயில் பணி நம்மை நித்தமும் அழைத்திடும். ரமலான் மாதம் வந்து விட்டால் நோன்பு கஞ்சிக்கு பஞ்சம் இல்லை ஒவ்வொரு வீடாக கொண்டு வந்து தந்து விடுவார். இப்படி நம் சமயங்கள் ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து இருந்ததுவே. விளையாட்டை எடுத்து விட்டால் எம்மை அடிக்க ஆள் இல்லை ஊரோடு சென்றிடுவோம் அங்கேயே தங்கிடுவோம் வெற்றி கிண்ணம் கையில் ஏந்தும் மட்டும் சமையல் பல செய்திடுவோம் எத்தனை நாள் ஆனாலும் விளையாட்டு முடித்துவிட்டு வெற்றிக் கிண்ணத்தோடு ஓடி வந்து சேர்ந்திடுவோம் அத்தனை செலவுகளையும் அன்று எம் சம்மட்டிமார் பார்த்திடுவார்.

அறுவடைக்கு சென்று விட்டால் அக்கம் பக்கம் வீட்டார் என்று திருவிழாவே நடந்து விடும் வந்தவர் பசியாற உண்டு விட்டு செல்லும் போது நெல்லு மூட்டை கொடுத்து விடுவோம்.
கல்வி என்றால் தனித்திறமை விடத்தல் தீவான் எங்கு சென்றாலும் படிப்பை என்றும் விட்டதில்லை என மற்றவர்கள் சொல்லி எம் காது பட கேட்டிருக்கிறோம் ஆடல் பாடல் நாடகம் ஒப்பாரி அனைத்தும் ஓர் தனி ரகம் அவை அனைத்தும் இப்போது இந்த எழுத்துக்களில் மட்டும்தானே உள்ளது அத்தனையும் தொலைந்துகொண்டு போகுறதே எம் கண்முன்னே அடுத்து வரும் தலைமுறைக்கு எதை நாம் தருவோம்?
பஞ்சம், பசி, பகை இவைகள் மட்டுமா கொஞ்சம் சிந்திப்போம் ஒற்றுமையை விதைப்போம் ஊரை ஒன்றிணைப்போம் இழந்தவற்றை மீட்டெடுப்போம் ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவோம் மீண்டும் எமது கொடி பறக்க ஒன்று சேருவோம்.
வளத்தை பாத்துக்காத்து கொடுக்கா விட்டால் நாமும் நமக்கு பின்னால் உள்ள சந்ததி வாழ வழி ஏது.,........

1926 அன்று செபஸ்தி விசிறித்தம்மா ஆகியோருக்கு மகளாக பிறந்த சவிரியம்மா(புஸ்பம்) மிகுந்த அமைதியும் கடவுள் பக்தியும் கொண்டு பெற்றோர்களால் வளர்க்கப்பட்டார.; இளமை காலத்திலே எல்லோரோடும் நன்று பழகி பாசம் காட்டி வந்தார். அவர் மக்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம் உள்ளபடியினால் தன் தாய் விசிறித்தம்மா செய்துவந்த பிள்ளை பெறுப்பேற்று சேவையை தானும் செய்ய ஆசைப்பட்டு எங்கு பிரசவம் பார்க்க அவர் அம்மா செல்வாரோ அங்கெல்லாம் அவரும் கூடவே செல்வார.; அப்படி சென்று பிள்ளை பேறுவிக்கும் முறைகள் அனைத்தையும் கற்று படிக்காமலே வைத்தியர் ஆனார.; பின்பு மனுவேல் பிள்ளை என்பவரை திருமணம் செய்தும் அவர் பிள்ளை பெறுவிக்கும் பணியை தொடர்ந்து செய்து வந்தார் அவர் கணவரும் அதற்கு முழு ஆதரவு வழங்கினார் எந்த நேரம் ஆனாலும் எந்த இருட்டு ஆனாலும் யார் வந்து கூப்பிட்டாலும் உடனே சென்றிடுவார் அந்த பிள்ளை நல்லபடியாக பிறகும்மட்டும் இருந்து பிள்ளையை பெறுவித்துவிட்டுத்தான் வீடு வருவார். விடத்தல் தீவு, கள்ளியடி, பெரியமடு என்று எல்லா இடங்களிலும் அவர் சேவை செய்திருக்கிறார். பல நூற்றுகணக்கான பிள்ளைகளை பெறுவித்து இருக்கிறார் பெறுவிக்கும்போது எந்த இழப்பும் நடந்ததில்லை. கடவுளுக்கு நன்றி அவர் தன்னால் முடியும் வரைக்கும் அந்த பணியை செய்தார் அவர் பேரன் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் இப்போது இத்தனை நவீனத்துவம் வந்தும் சுகமாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டு போகின்றது அன்று எந்த வசதியும் இல்லாமல் எல்லாம் சுகமாக பெறுவிக்கபப்ட்டது என்பது குறிப்பிடதக்கது.

இயற்கை சொத்தின் அபிவிருத்தியே.... விடத்தல்தீவு கடல்சார் சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் வாழ்வாதாரங்களுக்கு அதன் நீண்டகால பொருத்தம்.

கரையோர மீனபிடி சமூகம் இன்றைய வாழ்வாதார சாவால்களை எதிர் கொல்லவதற்கு நிறைய பிரச்சனைகளை முகாம்கொடுக்க நேரிடுகின்றது

1. இயற்கை அனர்த்தம்
2. நவீன தொழில் முறை
3. வளங்களை கொள்ளையிடுதல்
4. பெறுகிவரும் சனத்தொகை

1. இயற்கை அனர்த்தம்

அனர்த்தத்தினால் பலத்த காற்று அதிக வெள்ளபெருக்கு அதி கூடிய மழை கடல் கொந்தளிப்பு போன்றவற்றினால் கடல் வளங்கள் அழிகின்றன பவள பாறைகள் உடைகின்றன கடல் தாவரம் அழிகின்றன இதனால் கடல் தொழில் செய்வோர் பெரிதும் சவால் களை எதிர் கொள்கின்றனர் இயற்கையை நாம் கட்டுப்படுத்த முடியாது ஆனால் அவை வராமல் இருக்க நாம் சில இயற்கைக்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபடுவதை தடுக்க முடியும் உதாரணம் சொல்வதானால் கடல் காடுகளை அழித்தல் பவள பாறைகளை அழகுக்காக உடைத்து கொண்டுவருதல் நவீன ஆயுதங்களை கடலில் பரிசோதித்தல் தொழில்சலை கழிவுகள் கடலுடன் கலக்கவிடுதல் இப்படியான செயல் முறைகளை நாம் கைவிடுவோம் ஆனால் இயற்கை அனத்ததித்தில் இருந்து கடல் வளங்களை பாது காத்து கொள்ளமுடியும் அதிக சுற்றுலா படகுகளில் இருந்து பிளாஸ்டிக் பொருட்களை கடலில் வீசுவதால் அதை உண்ணும் கடல் உயிரினம் கடல் பறவைகள் இறக்கின்றன ஆகவே இயற்கை அனத்தத்தை நாம் தடுப்பதற்கு ஏற்ற வழிமுறைகளை கையாளுவோம் கடல் வளம் பெருக வழி செய்வோம்

2. நவீன தொழில் முறையால் கடல் வளம் பாதிக்கப்படும்

ஆரம்ப கால தொழில் முறைகளில் இயற்கைக்கும் கடல் நீருக்கும் எந்தபாதிப்பும் இல்லை இப்போது வரும் தொழில் முறைகள் பல தொழில்நுட்ப்ப வளர்ச்சி காரணமாக இயற்கைக்கும் கடலுக்கும் நம்மை அறியாமலேயே பல பாதிப்புகளை உண்டு பண்ணுகின்றது கடலில் பயணிக்கும் கடல் இயந்திரத்தினால் வெளியிடப்படும் எண்ணை கசிவுகளும் அதன் புகைகளும் இயந்திரத்தின் இரைச்சல்களும் கடலையும் இயற்கையையும் பெரிதும் பாதிக்கின்றன கடலில் உள்ள தாவரங்களை இயந்திரத்தின் வேகத்தை கூட்டுவதற்காக பின்னால் பொருத்தப்பட்டிருக்கும் விசிறியினால் வெட்டி செல்வதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது இதனால் கடல் தாவரங்கள் அழிவடைந்து செல்கின்றன மற்றும் இலுவைப் படகின் வரவினால் கடலின் அடிமட்டத்தில் உள்ள அனைத்து பொருட்களும் மண்ணோடு அள்ளப்பட்டு அழிவடையச் செய்கின்றன ஒருமுறை ஓரிடத்தில் இலுவை படகு அதன் தொழில் நுட்பத்தைக் கொண்டு அதன் வலையை போட்டு இழுத்து செல்லும்போது அதில் உள்ள அனைத்து தாவர செடிகளும் கடலூரில் உள்ள சிப்பி சங்கு சிறிய சிறிய உயிரினங்கள் அனைத்தும் அழிகின்றன மற்றும் தங்கூசி வலையின் வருகையினால் கடலில் உள்ள மீன் இனத்தின் வாழ்விடங்கள் இடமாற்றப்படுகின்றன ஏனெனில் தங்குசி வலையில் இருந்து வரும் ஒலியானது மீனுக்கு ஒருவகை பயத்தை உண்டாக்குகின்றது என பல ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்துள்ளார்கள் இதனால் மீன்கள் அவைகளின் வாழ்விடங்களை மாற்றுகின்றன மேலும் பெரும் ஒளியை உண்டாக்கக்கூடிய வெடி மருந்துகளை கடலினுள் போட்டு அவ் சத்தத்தினால் மீன்களைக் கொண்று மீன்பிடிக்கும் முறையும் உருவாகியுள்ளது.

இம்முறையானது கூடுதலாக பவளப்பாறையை அண்டிய பகுதிகளிலே பெரிதும் பாவிக்கப்படுகின்றது இதனால் பவளப்பாறை பெரிதும் பாதிக்கப்படுகின்றது அவ் பவளப்பாறையில் இனப்பெருக்கத்திற்காக வருகின்ற மீன்களும் அல்லது புதிதாக உருவாகிய சிறிய வகை மீன்களும் இறக்க நேரிடுகின்றது அதுமட்டுமல்லாமல் வெடிமருந்தின் துர்நாற்றத்தினால் அவ்விடத்திற்கு மீன்கள் வருவதை தவிர்த்து விடுகின்றது இவ்வாறாக நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பயன்படுத்தப்படும் அனைத்து விதமான மீன்பிடி முறைகளும் பெரிதும் மீன் வளங்களை அழிய செய்வதாகவே இருக்கின்றது எனவே இவ் வழிமுறைகளை நாம் முடிந்தவரை தவிர்த்துகொள்வது எமக்கும் எம் சந்ததியினருக்கும் சிறந்ததாக இருக்கும்

3. வளங்களை கொள்ளையிடுதல்

அரசு அதிகாரங்கள் இருப்பவர்கள் குறுகிய இலாபத்திற்காக கடலும் கடல் சார்ந்த நிலங்களிலும் ரசாயனம் கலந்த கடல் உணவுப் பொருட்களை வளர்ப்பதற்கு அனுமதி அளித்தல் அதற்கான நிலங்களை வழங்குதல் பவளப்பாறையில் உள்ள விலை உயர்ந்த மீன் வகைகளை நண்டு மற்றும் சிங்கி இறால் வகைகளை பிடிப்பதற்காக பவளப்பாறைகளை உடைத்தல் கூடிய லாபம் பெறுவதற்காக இரவினில் மின் விளக்குகள் பயன்படுத்தி சிறிய வகை அட்டைகளை எடுத்தல் அளவுக்கு அதிகமான தொழில் முறைகளை பயன்படுத்தி அளவுக்கு அதிகமாக கடல் உணவுப் பொருட்களை பிடித்தல் சிறிய படகுகள் தொழில் முயற்சியில் ஈடுபடும் ஆழம் குறைந்த பகுதிகளில் பெரிய படகினை பயன்படுத்தி தொழில் செய்தால் கண்டல் மற்றும் கண்ணா தாவரங்களை வெட்டிச் செல்லுதல் எல்லை தாண்டி மீன் பிடித்தால் வெடி மருந்து வைத்து மீன் பிடித்தல் இது போன்ற அரச சட்டங்களுக்கு எதிரான வேலைகளை செய்வதனால் கடல் சொத்துக்கள் சூறையாடப்படுவதுடன் கடல் வளங்களும் அழிக்கப்படுகின்றன இவைகள் மிகவும் தண்டனைக்குரிய குற்றமாகும் இவைகள் மீன்பிடித் துறையின் எதிர்காலத்தையே பாதித்துவிடும் என்பதனை நாம் மனதில் கொள்ள வேண்டும்

4. பெருகி வரும் சனத்தொகை

ஆரம்ப காலங்களில் குறைந்த மக்களினால் குறைந்த அளவான கடல் உணவு பொருட்களே பிடிக்கப்பட்டன கடல் உணவு பொருட்களுக்கான கேள்விகளும் குறைந்ததாகவே இருந்தன காலம் செல்லச் செல்ல சனத்தொகை பெருகியதால் கடல் உணவுப் பொருட்களின் கேள்விகள் அதிகரித்தன கடலினில் தொழில் செய்யும் மக்களின் தொகையும் விரைவாக அதிகரிக்கிறது இதனால் கடலில் தொழில் செய்யும் எல்லைகள் விரிவாக்கப்பட்டது கரை தொடங்கி ஆழக்கடல் வரை அனைத்து இடங்களிலும் மக்கள் மீன்பிடிக்கத் தொடங்கின இதனால் அதிகளவான கடல் உணவுப் பொருட்கள் பிடிக்கப்படுகிறது கடல் உணவுப் பொருட்களின் இனப்பெருக்கங்கள் குறைவடைந்து போகின்றன இனப்பெருக்கத்துக்கான வாழ்விடங்களும் அளிக்கப்படுகின்றன அளவுக்கு அதிகமான தொழில் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன இவ்வாறு இருப்பினும் கடல் சார்ந்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான வருமானங்கள் மிகக் குறைந்து கொண்டே போகின்றது இது சனத்தொகையின் அதிகரிப்பு கூடியதும் ஒரு காரணம் எனலாம்

மேற்கூறிய அனைத்தையும் அரசாங்கமானது கருத்தில் கொள்ள வேண்டும் கடல் வளத்தை பெருக்குவதற்கு அதன் இனப்பெருக்கத்துக்குரிய வதிவிடங்களை பாதுகாக்க வேண்டும் கடல் உணவுப் பொருட்களை பாதுகாப்பான இனப்பெருக்கம் செய்ய வைத்து அதன் குஞ்சுகளை கடலில் விட வேண்டும் அனைத்து மீனவர்களுக்குமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் தொழில் முறைகளில் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் சட்டத்தை மீறுவர் மீது கடுமையான தண்டனை வழங்க வேண்டும் கடலோர பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் கண்டல் காடு மற்றும் கண்ணா காடுகளையும் மற்றும் கடல் தாவரங்களையும் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் இவை அனைத்தும் அரசு மட்டும் நடைமுறைப்படுத்தினால் போதாது மீன்பிடியில் ஈடுபடும் அனைத்து மக்களும் இதற்கான ஒத்துழைப்புகளை அரசுக்கு வழங்க வேண்டும் பிளாஸ்டிக் பொருட்களை கடலில் வீசுவது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும் இவ்வாறு நமக்கு இயற்கையாகவோ அருளப்பட்டுள்ள மிகப்பெரும் சொத்தான கடல் வளத்தை பாதுகாப்பது மூலம் கரையோர மீன் புடி சமுதாயத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன் இயற்கையின் சொத்தை அபிவிருத்தி செய்தால் என்றும் நமது வாழ்வாக முன்னோக்கிய செல்லும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை இயற்கையை பாதுகாப்போம் இயற்கையோடு ஒன்றித்திருப்போம் இயற்கை எம்மை மேன்மைப்படுத்தும்

2. நினைவுகளுடன் 80களின் அனுபவப் பகிர்வு - ஆசிரியை திருமதி. சறோஜாதேவி பாலசுந்தரம்

அறிமுகம்

நான் பிறந்து வளர்ந்த காலம், இப்போது ஒரு கனவு போல உணரும் இடம் மன்னார் மாவட்டத்தில் மறைந்திருக்கும் இலங்கையின் அமைதியான மூலையான விடத்தல்தீவு. உலக வரைபடத்தின் பிரமாண்டமான வீச்சில், அது ஒரு புள்ளியாகத் தோன்றலாம், ஆனால் எனக்கு, அது வாழ்க்கை, அரவணைப்பு மற்றும் சொல்லப்படாத அழகு ஆகியவற்றால் நிறைந்த ஒரு முழு பிரபஞ்சமாக இருந்தது. இந்தக் கட்டுரை 1980களின் அந்த நினைவுகளை மீண்டும் உயிர்ப்பிக்கவும் பதிவு செய்யவும் எனது இதயப்பூர்வமான முயற்சி. நான் யார? நான் எதை மதிக்கிறேன் என்பதை வடிவமைத்த ஒரு தசாப்தம்.

நான் நினைவில் கொள்வதற்காக மட்டுமல்ல, எனக்குப் பின் வந்தவர்களுக்கு, நான் பார்த்ததை ஒருபோதும் பார்க்காதவர்களுக்கு அல்லது நான் வாழ்ந்ததை வாழ்ந்தவர்களுக்கு கடத்துவதற்காக எழுதுகிறேன். இந்தப் பக்கங்களில், எங்கள் சேற்று வயல்களையும் மின்னும் குளங்களையும், அந்தி வேளையில் ஒருவருக்கொருவர் துரத்தும் குழந்தைகளின் மென்மையான சிரிப்பையும், எங்கள் கோயில்கள் மற்றும் தேவாலயங்களின் மணியோசையையும், எங்கள் பெரியவர்களின் அமைதியான கண்ணியத்தையும், எங்கள் பல மத கிராமத்தை ஒரே குடும்பத்தைப் போல ஒன்றாக வைத்திருந்த நட்புறவையும் மீண்டும் பார்க்கிறேன்.

இவை வெறும் நினைவுகள் அல்ல அவை வாழும் உண்மைகள். புளிய மரங்களின் கீழ் பள்ளி நாட்கள், எங்கள் தாழ்மையான தெருக்களை நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் திருவிழாக்களாக மாற்றிய திருவிழாக்கள், ஸ்கோர்போர்டு இல்லாமல் ஆனால் முடிவில்லா மகிழ்ச்சியுடன் நாங்கள் விளையாடிய விளையாட்டுகள் பற்றி நான் பேசுகிறேன். நிகழ்காலம் அந்த கடந்த காலத்திலிருந்து எவ்வளவு தூரம் நகர்ந்துள்ளது என்பதையும், நம் குழந்தைகள் இப்போது மணலுக்குப் பதிலாக திரைகளுடன், மரங்களுக்குப் பதிலாக கூண்டுகளில் பறவைகளுடன் வளர்கிறார்கள் என்பதையும் நான் சோகத்தின் குறிப்போடு பிரதிபலிக்கிறேன்.

வரலாற்றை வழங்குவதாக நான் கூறவில்லை. நான் வழங்குவது நான் பார்த்த, உணர்ந்த, என் எலும்புகளில் சுமந்த வாழ்க்கையை. இது என் கிராமத்திற்கும், என் மக்களுக்கும், பணத்தில் அளவிட முடியாத வழிகளில் நாம் பணக்காரர்களாக இருந்த காலத்திற்கும் ஒரு அஞ்சலி. என் வார்த்தைகள் வாசகரின் இதயத்தில் ஆர்வத்தையோ அல்லது தொடர்பையோ விதைக்க முடிந்தால் நான் என் கடமையை சரியாக செய்திருப்பேன்.

விடத்தல்தீவு - ஒரு அறிமுகம்

இலங்கை வரைபடத்தில் மிகச் சிறிய புள்ளியாகத் தோன்றும் விடத்தல்தீவு என்னும் கிராமம் மன்னார் நகரத்திலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில், A32வது நெடுஞ்சாலையில் உள்ள பள்ளமடு சந்தியில் இருந்து மேற்கே பிரியும் சாலையில் 1.25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது மன்னார் மாவட்டத்தின் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டது. மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட தீபகற்பம் போலவும், மற்றொரு பக்கம் மேட்டுநிலத்துடன் எல்லை கொண்ட நில அமைப்பையும் கொண்டது.

இது ஒரு முக்கியமான பழமையான கிராமம். இங்கு காணப்படும் “விடத்தல்” மரங்கள் மற்றும் பூமியின் அமைப்பில் இந்த தீவுக்கோடுகள் சேர்ந்ததால் “விடத்தல்தீவு” எனப் பெயர் பெற்றதாகவும், மத்திய பக்கம் நீரோட்டம் இல்லாத காரணமாக வடக்கு, தெற்கில் மட்டுமே நதிகள் இருந்ததால் மையம் ‘விடப்பட்டது” என்பதனால் “விடத்தல்தீவு” எனவும் பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

இயற்கை வளமும், மக்கள்திறமையும் மிக்க எங்கள் இந்த விடத்தல்தீவு, இஸ்லாம், இந்து, கத்தோலிக்கம் ஆகிய மதங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்த சகோதரத்துவ பூமி. மதங்கள் வேறாக இருந்தாலும், மனங்கள் ஒன்றாக இருந்த காலம் அது. அந்த நினைவுகள் இந்த பதிவின் மூலம் அடுத்த தலைமுறையிடம் சென்று சேரவேண்டும் என்பதே என் நோக்கம்.

- பள்ளமடு குளமும் எம்மூரும்: குளத்தில் காலையில் குதித்து நீராடியதை மறக்க முடியாது. எல்லோரும் ஒன்றாக நீராடி புத்துணர்ச்சி பெற்று சென்றனர். மழை இல்லாமல் குளம் வறண்ட காலங்கள் மக்களின் எதிர்பார்ப்பு பாட்டாக உருவானது.
- பள்ளிப் பருவ நினைவுகள்: மர நிழலில் பாடம் படித்த காலம், மாலை மணிச் சத்தத்தைக் கேட்டதும் வீடு திரும்பிய காலம். மின்சாரம் இல்லாத நாட்களில் குப்பிவிளக்கே ஒளியாக இருந்தது.
- விளையாட்டு அனுபவங்கள்: பள்ளிக்கால போட்டிகள், இசை, அரட்டைகள், பால்ரொபி, அதனோடு கூடிய திட்டங்கள் இவை அனைத்தும் மனதில் அழியாத இடம் பிடித்தவை.
- திருவிழாக்கள், நாடகங்கள்: 1978 இல் நடந்த கலைக்காட்சிகள், நாடகங்கள், திருப்பாடுகள் இவை அனைத்தும் கிராமத்தை மகிழ்ச்சி மற்றும் கலாச்சார துடிப்பின் வர்ணங்களால் வரைந்தன.
- அட்டைத்தீவுப் பகுதிகள்: நீராடும் குளங்கள், அல்லிப்பூ மாலைகள், விவசாய நிலங்கள், வயல் பூமி இவை அனைத்தும் உடல், இதயம் மற்றும் நினைவகம் மூலம் நம்மை நிலத்துடன் பிணைத்தன.
- நிகழ்ச்சிகள், பயிற்சிகள்: 1981ல் நடைபெற்ற சாரணர் பயிற்சி முகாம், சிரமதான பணிகள் அனைவரும் சமூகப் பொறுப்பு மற்றும் ஒத்துழைப்பின் விதைகளை விதைத்தனர்.

- மழைக் காலம், பசுமை நினைவுகள்: மழையில் காகிதக் கப்பல், மீன்குஞ்சுகள், தம்பளப்பூச்சிகள் குழந்தைப் பருவக் கண்களால் இயற்கையின் அனைத்து மந்திரங்களும் நினைவில் உள்ளன. முழு நிலவுக்காலங்களும், பாட்டிகளின் பழங்கதைகளும், உறவுகளை ஒன்று சேர்த்த அந்த வீட்டு முற்றமும் இனி இல்லை. பசுமை இனி குறைவாகி விடும்.
- இன்றைய சந்ததி: கண்ணாடித் தொட்டிகளில் மீன்கள், கூண்டுக்குள் பறவைகள் இவை சுதந்திரமற்ற அழகு. நம் காலத்தின் சுவைகள், அனுபவங்கள் இனி அறியப்படமாட்டா போல!

மரநிழலில் பாடம் படித்த காலம்...

முடக்கோலாக இருந்த கல்வி நிலையங்கள், ஆனால் அதற்குள் மலரும் ஆசைகள்! நிழலில் ஆசிரியர்களுடன் கற்கும் நேரங்கள், சூரியன் மேற்கில் கலங்கிக் கொள்ளும் போது வீட்டை நோக்கி நடக்கும் காலடி ஓசைகள் அவை எல்லாம் ஓவியமாக மனதில் நிற்கின்றன.
மறக்க முடியாத அந்த 'பால்ரொபி' நாட்கள்... பள்ளி மைதானத்தில் பள்ளி மாணவர்கள் நடத்திய நாடகங்கள். அந்த நாட்களில் நாங்கள் செய்யும் சின்னச் சின்ன சேட்டைகள் அதிபரின் கடும் எச்சரிக்கைகளாகவே முடிந்தாலும், இன்று அது புன்னகை தரும் பரிசுகளாக மனதிற்குள் சிரித்துக் கொண்டு ஓடுகிறது.

மன்னாரின் மேடைகளில் எம்மூரின் கலைவிழா:

1978ல் நடந்தது எம்மூரின் திருப்பாடுகளும், கலைக்காட்சிகளும், சாத்தியமற்றது போல் தோன்றிய மேடைகளும். ஒரு கிராமத்தை ஒரு நாடாக மாற்றியது அந்த நிகழ்வு. இரு நாட்களும் உற்சவமாக எம்மூரே கொந்தளித்தது. நாட்டுக்கூத்து, நாடகங்கள், தெருமுனை பாடல்கள் எல்லாம் ஒரே பரிசளிப்பு. எங்கள் மனங்களில் இன்னமும் மேடை கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

அட்டைத்தீவு: குளம், அல்லிப்பூ, மழை, நெற்செய்கை...

அட்டைத்தீவுக்குச் செல்லும் பாதை இன்றளவும் நெஞ்சில். முழங்கால் அளவு தண்ணீரில் தள்ளாடிய நினைவுகள், பனை நுங்கு, இளநீர், அல்லிப் பூ மாலைகள்... எல்லாம் வெறும் நிகழ்வுகள் இல்லை அவை நம் வாழ்க்கையை வாசகமாக மாற்றிய கவிதைகள்.
அங்கே இருந்த நீர்வளங்களைப் போலவே, எங்கள் பெண்கள் பகல் நீர்த் தட்டிகள் சுமந்து வீடு திரும்பும் வழியில் தங்கும் அந்தக் காட்சிகள், இன்று ஒரு ஆவணப்படத்தை போல மனதில் விரிந்து கிடக்கின்றன.

மழை கால நினைவுகள்...........

வானம் கரைந்து மழையோடு துளியாய்த் தரையில் விழும் ஒவ்வொரு துளியும் எங்கள் குழந்தைப் பருவத்தையே பிரதிபலித்தது. காகிதக் கப்பல்களின் ஓட்டமும், மாமா வீட்டில் விளையாடும் பஞ்சமிருகக் கதைகளும் அந்த மழை ததும்பும் நாட்கள், இன்றைய மின்சாரக் கட்டிடங்களில் இல்லாத உயிர்க்காற்றை கொண்டு வந்தன.

பாட்டி சொன்ன கதைகள், சந்திக்கும் உறவுகள், மறைந்த ஒற்றுமை...........

முற்றத்தில் பாட்டி சொல்வது பழங்கதை. பிள்ளைகள் களித்தாட்டும் பாண்டியம், பட்டம் விடும் பரவசம்... இவை எல்லாம் காணாமல் போன காட்சிகள். இன்றைய குழந்தைகளுக்கு, கண்ணாடித் தொட்டியில் மீன், கூண்டுக்குள் பறவைகள்... பிணைத்த பாசமும் சுதந்திரமும் இல்லாமல் வளர்கிறார்கள்.

இப்படி வாழ்ந்தோம், வளர்ந்தோம், வழி வகுத்தோம். இன்று நம்மைச் சுற்றி மின் விளக்குகள் எவ்வளவு பிரகாசமாக இருந்தாலும், அந்த மின்மினிப் பூச்சியின் ஒளி போல அந்த காலத்தின் ஒளி எம்முள்ளம் பொலிந்து கொண்டே இருக்கிறது. இன்றைய வீட்டில் ஒரு அறையில் அடைக்கப்பட்ட வாழ்க்கை. ஆனால் எங்கள் வாழ்வு ஓர் முழுமையான கிராமமாகவே இருந்தது.

"கண்ணில் தெரியாத பசுமை... ஆனால் மனதில் பதிந்த பசுமை!"

என்றாலும், அந்த வாழ்வியல் சுவைகள் எங்கோ பறந்துவிட்டன. இப்போது நம் பிள்ளைகள்...

"நுங்கும் தெரியாது... கொந்தல் மாங்காயும்... அந்த சுவையும் தெரியாது."

நாட்டுப்புற விளையாட்டுகள்: வெறும் விளையாட்டு இல்லை அவை வாழ்க்கைபாடங்கள்.

மணல் பூசிய மைதானங்களில் நடந்தது வாழ்க்கையின் முதல் பாடங்கள். "சிப்பி வைத்தது" விளையாட்டில் சுழலும் கை, "ஆடு-புலி"யில் நம்ம பக்கத்தோன எதிரியும் ஆவதற்கான உழைப்பு... இவையெல்லாம் வீண் இல்லை. இவங்கதான் நம்ம ஒவ்வொரு முடிவுகளுக்கும் முன்னோட்டம்.

பழைய மேட்டுத் திடல்கள், புதுக்கட்டும், கஸ்பார்பிட்டியும் அங்கங்கே எங்களின் உதைப்பந்தாட்ட களமாக இருந்தன. காலணியே இல்லாத கால்களில் நாங்களே காலத்தோடு பயணித்தோம். வாடும் காற்றும் வாடாத உற்சாகமும் நம்ம பக்கம்!

அந்தோழியின் மரபுக் கதைகள்: ஒலி இல்லாமல் பதிந்த ஒலிகள்

முழுமதி நிலவுக்குள் பாட்டி பேசும் பொழுது, பக்கத்து பிள்ளைகள் ஒவ்வொருவரும் சொர்க்க வாசலுக்கே செல்வதுபோல் இருந்தது. "பாண்டியம்" விடும், "பட்டம்" சுழலும், "பழந்தமிழர் விளையாட்டுகள்" அங்கு ஒவ்வொரு இரவும் உறவுக்குழுமமாக மாறும்.

அந்த ஒலியை இப்போது யாரும் கேட்க முடியாது. காரணம்? பாட்டியும் இல்லை, அந்தத் தொண்டு வீடும் இல்லை. இருப்பதெல்லாம் வாய்ஸ் நோட் அனுப்பும் பாட்டிகள்!

மீன்கள், பறவைகள், நுங்குகள் – இன்றைய குழந்தைகளுக்கு தெரியாத சுவைகள்

இப்போது காணப்படும் மீன்கள் கண்ணாடித் தொட்டியில் உலாவும் வண்ண மீன்கள், கூண்டுக்குள் பறக்கும் பறவைகள்... ஆனா தண்ணீரில்லா சூழலில் வளர்ந்த சுவையில்லா வாழ்வுகள்தான் இன்றைய கலாச்சாரம்.

நாங்களோ? நுங்கை அடித்து, நகத்தால் குடைந்து, மாங்காயை கடித்து சுவைத்தோம். அந்த வெப்பமும், அந்த வாய்விட்ட சிரிப்பும், அதே சமயத்தில் வயிற்றுப்புண்ணும் எல்லாமே நம் வாழ்வின் பரிசுகள்தான்.

கடந்த வாழ்வின் அழகும் – இன்றைய சாயலும்............

இப்போது வீட்டில் இல்லாத முழுமதி. பண்டிகைகளும் மண்டபங்களுக்குள் அடைக்கப்பட்டு விட்டன. சமயமும் சமூகமும் தனித்தனி மெசேஜ் குழுக்களில் வாழ்கின்றன.

அந்தக் காலத்துக்கு வீடு ஒரு வானம்... இப்போ வீடு ஒரு அறை. மின்சார ஒளியில் எல்லாமே தெரிந்தாலும், மனசுக்குள்ள ஒளி வேறுதான்.

"இரவுகளை பகலாக்கும் எல்இடி விளக்குகள் – ஆனால் நம்ம முன்னோர்கள் இருளில் வாழ்ந்தாலும் மனசில் வெளிச்சமா இருந்தாங்களே!"

இந்த வாசிப்பின் முடிவில் நிறுத்த முடியாத ஓர் உண்மை – விடத்தல்தீவு என்பது ஒரு இடம் மட்டுமல்ல. அது ஒரு காலம். ஒரு நாடு. ஒரு எளிமையான மகிழ்ச்சி. ஒரு முழுமையான வாழ்வு.

"நமக்குப் பிறந்த அந்த காலம், நம்ம பிள்ளைகளுக்குச் சொல்லப்பட வேண்டிய நாகரிகக் கதைகள்!"

இதோ, இப்பொழுது அந்தக் கதையை நான் எழுதினேன். நீங்களும் சொல்லுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் பாருங்கள்... அந்த அல்லிப்பூ வாசனை எங்கேயோ நம் மனசுல இருக்குது. அதைப் பிரித்து விட முடியாது.

சமய விழாக்கள் – சமூகம் ஒட்டிய புனித நாட்கள்..........

விழாக்கள் என்றால் எங்களுக்குக் கொண்டாட்டம்தான். நத்தார் புதுவருடங்கள், ஒளிவிழா, கிறிஸ்துமஸ், கரோல் பாடல்கள் இவை எல்லாம் வீடுகளுக்குள் வாழ்த்துக்காட்சிகள் பரிமாறும் தருணங்கள். ஒவ்வொரு வீடுகளும் "இரக்கம் எங்கே இருக்கின்றதோ அங்கே தான் கடவுளின் முகம்" என்பதைக் காட்டியது.

1978ல், எம்மவர்களின் முயற்சியில் உருவான திருப்பாடுகள் மன்னாரின் மக்களை வியக்க வைத்தது. அந்த மேடைகள், ஒளியமைப்புகள், நம் ஊர் இளைஞர்களின் அர்ப்பணிப்பு இன்றைக்கும் நினைவில் ஜொலிக்கின்றன.

நட்டுக்கூத்து, நாடகங்கள் – மேடையிலிருந்த சமூக கருத்துக்கள்

அப்போது நடந்த நாடகங்கள் – 'சத்யவான் சாவித்திரி', 'நல்ல தங்காள்', 'ஞானசௌந்தரி' எல்லாம் நம் சமுதாயத்தின் கதைகளை அரங்கேற்றின. நாடகக்குழுவில் எம்மூரைச் சேர்ந்த அண்ணா விமானம் போல பறந்தார்.

முதல் முறையாக எமது பிள்ளையார் கோவில் முன்றலை திரையரங்காக மாற்றி மூடி படம் பார்க்கப்பட்ட காலம்... இரவு வெளியே போவதற்கே பயந்த காலம் அது. ஆனாலும் "அண்ணா ஒரே படம்" என்று அழுது அடம்பிடித்து அனுமதி வாங்கி வந்த நாட்கள் அது தான் உண்மையான திரையரங்க அனுபவம்.

சிறுவயது சத்தியாக்கிரகம் – மழையில் போராட்டம்!......

சுற்றுச்சூழல் சீரமைப்புக்காக இளைஞர்கள் இணைந்து 'சிரமதானம்' செய்த 81ம் ஆண்டு நிகழ்வு, நம் சமூக விழிப்புணர்வுக்கான ஒரு அடையாளம். செம்மண் எடுத்து சாலை மேம்பாடு செய்தோம். சன்னார் குளத்தில் குளித்தும், பாடியும், ஆடியும் மகிழ்ந்தோம்.

அதே காலப்பகுதியில் மாந்தை பகுதியில் நடந்த சத்தியாக்கிரகம். மாதா கோவிலில் திருப்பலி முடிந்து நான்கு இளைஞர்கள் முதன்மையாக நின்று கொண்டு போராட்டத்தில் கலந்து கொண்டோம். அப்போது திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பாடிய அந்த பாடல் இன்னும் நம் வாயில் நுனியில்:

"தென்னிலங்கை வடமார்பில் இரந்த கங்கை
தெருவெல்லாம் சுடுகாடாய்ப் பிணக்குவியல்..."

அந்த வரிகளும், அந்த உணர்வும், ஒரு நாட்டின் பக்கவாட்டுத் துயரத்தை கண்ணீராய் சுமந்தன.

அட்டைத்தீவு – மழை, நெற்கதிர், கடலாடல்.............

அங்கே குளத்தில் அல்லிப் பூ மலர்ந்திருக்கும, குழந்தைகள் நீராடி, மாலை தொடுத்துக் கொண்டாடும் அழகு. ஆனால் அட்டைத்தீவுக்கு செல்லும் போது, ஒரு நாட்டு நதி கடக்க வேண்டியதுண்டு. மழைக்காலங்களில் அது முழங்கால் தாண்டும் அளவு நீர். வயலில் நாங்கள் காலையிலேயே கிளம்பி, வழுக்கி விழுந்து எழுந்து, சிரித்துச் சென்ற நாட்கள்.

கடற்காற்றும், வயல் பசுமையும் நம் நினைவுகளை வருடும். சோற்றுக்கு கட்டிச் சோறு, மாலையில் வீடு திரும்பும் முன் குருசுக் கோவிலுக்குச் சென்று வேண்டுதல் வைத்து குளம் அல்லது ஆற்றில் ஒரு குளியல்... இது எல்லாம் மறக்க முடியாத கிராமமரபுகள்.

பசுமைச் சுடர்கள் – நம் நிலம் கொடுத்த வாழ்க்கை வகைகள்...........

அங்கு பனையின் நுங்கும், பனம் பழமும், அல்லக் கிழங்கும், கற்றாளையும் உண்டோம். கற்றாளையை ஏழு முறை கழுவி சாப்பிட வேண்டும் என்பதே நம் மூதாதையர்களின் அறிவுரை. பொன்னங்காணி, எலிச்சவிக்கீரை, உபரிக்கீரை இவை எல்லாம் இலவசமான இயற்கை உணவுகள்.

அந்தச் சமயத்தில், பசுமையும் சுவையும் ஒன்று சேர்ந்தே இருந்தன. இப்போது உணவுப் பண்டங்களில் இனிப்பும் , பேக்கெட்டில் அடைக்க பட்டதாய் இருக்கலாம், ஆனா அந்த சுவை இருக்கு?

புதுப்பெயரில்லா புது தலைமுறைகள்: ஒரு கவலையின் வேர்கள்.............

இன்று வளரும் பிள்ளைகள் கண்ணாடித் தொட்டியில் மீனைப் பார்க்கிறார்கள், ஆனால் கடல் பார்த்ததில்லை. கூண்டில் பறவையைப் பார்க்கிறார்கள், ஆனால் இறக்கையில் காற்று எட்டியதில்லை. அவர்களுக்கு நுங்கும் தெரியாது... கொந்தல் மாங்காயும் தெரியாது.

"முழு நிலவை முழுமையாக கொண்டாட வீடும் இல்லை|
பழங்கதை சொல்ல பாட்டியும் இல்லை..."

மின் வெளிச்சம் இரவை பகலாக்கிவிட்டாலும், அந்த மின்மினிப் பூச்சியின் ஒளி எங்கே?

இறுதிக் குரல்: வீடு இல்லாத நினைவுகளின் வீடு
இப்போது, அடுக்குமாடி கட்டிடங்களில் நமக்கு ஒரு அறை... அது வீடா? அங்கே மனிதர்களுக்கொரு அறை. பிறருக்குத் தேவைப்படுவோர் மட்டும் இருக்கின்றனர். அந்த அடுக்குகளுக்கு இடையில், நம் பழங்கதைகள் சிக்கிக் கிடக்கின்றன.

"இது என் காலத்தின் கதை. என் ஊரின் உரிமை. என் வாழ்வின் வாசல்."

3. சேவைக்கால அனுபவப் பகிர்வுகள் - ஏ.எம். முஹ்ஸின்

வவுனியா வெங்கலச் செட்டிகுள முன்னாள் பிரதேச செயலாளர்

ஆசிரியரின் சுயவிவரம்: வவுனியா வெங்கலச் செட்டிகுள முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எம். முஹ்ஸின் பிரதேச மக்களால் நன்கு அறியப்பட்ட சேவையாளர். தமது பதவிகளை மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்திச் சேவையாற்றிய முன்னுதாரண புருஷர். மக்கள் பணியில் மானிடத்தை முன்னிறுத்திச் செயலாற்றியதால், முஹ்ஸினுக்கு இப்பிரதேசத்தில் தனி மரியாதை உள்ளது. குறிப்பாக யுத்த காலங்களில் இவராற்றிய மனிதாபிமானப் பணிகள் எக்காலத்திலும் நிலைப்படும் விசேட சேவை உத்தியோகத்தராகவும் கிராம சேவை உத்தியோகத்தராகவும், பிரதேச செயலாளராகவும் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகவும், கூட்டுறவு ஆணையாளராகவும் பணியாற்றி பலரதும் நன்மதிப்பை வென்றுள்ள முஹ்ஸின் தமது அனுபவங்களைப் பகிர்ந்து பலருக்கும் படிப்பினைக்காக சமர்ப்பிக்கிறார்.

பொதுப் பணியில் முதலாவது அனுபவத்தை விடத்தல்தீவு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகச் செயலாற்றிய காலத்தில் கற்க முடிந்தது. 1979 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை, இப்பதவியூடாக எனக்கு மக்கள் பணியாற்றக் கிடைத்தது. இக்காலத்தில் இச்சங்கத்தின் தலைவராக அ.ஜேம்ஸ் பணியாற்றினார். முதல் அனுபவமே எதிர் நீச்சலாட வேண்டிய சங்கடத்துக்கு என்னை ஆளாக்கியது. சங்கத்தின் நிதி நிலைமைகள் திவாலாகி செயற்பாடுகள் குன்றிக்கும் அளவுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் நிலைமைகள் இருந்தன. இதற்கான காரணங்களை ஆராய்ந்தபோது பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. முன்னரிருந்த நிர்வாகத்தின் திறமையீனம் மற்றும் சங்கத்திலிருந்து கடன் பெற்றோர் அவற்றை மீளச் செலுத்தாதமை என்பவைதான், சங்கத்தின் நிதிப் புரள்வில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக உணர்ந்தேன். உடனடியாகச் செயற்பட்டு, சங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் கடன்களை மீள அறவிடவும் வழிவகைகள் முன்னெடுக்கப்பட்டன. கடலட்டை ஏற்றுமதியை ஊக்குவிப்பதனூடாக வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் திட்டத்துக்கு வந்தேன். இதனால், நுகர்வோரும் ஏற்றுமதியாளர்களும் ஆர்வத்துடன் செயற்பட முன்வந்தனர். எதிர்பார்த்ததுபோல, வருவாய் அதிகரித்து, சங்கத்தின் செயற்பாடுகள் வீரியமடைந்தன.சங்க உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குமளவுக்கு சங்கத்தின் நிதி நிலைமைகள் முன்னேறின.

1981 முதல் 1982 காலப்பகுதி

மாந்தை தெற்கு உயிலங்குளம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளை மீளாய்வு செய்யுமாறு மன்னார் மாவட்ட கூட்டுறவு ஆணையாளரால் எனக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. சுமார் ஐந்து வருடங்களாக இச்சங்கத்தின் வருவாய்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாமலிருந்தன. இதனாலேயே இவ்வுத்தரவு எனக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்தது. உடன் செயற்பட்ட நான், ஆணையாளர் பிறப்பித்த காலக்கெடுவுக்கு முன்னராகவே கணக்குகளை மீளாய்வு செய்து எண் (இலக்க) பார்வையாகச் சமர்ப்பித்தேன். இதற்காக ஐயாயிரம் ரூபா கொடுப்பனவாக எனக்கு வழங்கப்பட்டது. எனது செயற்பாட்டின் வினைத்திறனையறிந்த மன்னார் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர், மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிலுவைகளையும் ஆராய்ந்து கணக்கறிக்கையாக சமர்ப்பிக்குமாறு வேண்டினார். இதனைச் செவ்வனே செய்தமைக்காக ஊதியமும் நற்சான்றிதழும் எனக்கு வழங்கப்பட்டது.

1982 முதல் 1984 காலப்பகுதி

பொதுத் தொண்டில் பழுத்த அனுபவங்களைப் பெற்றிருந்த எனக்கு இக்காலப் பகுதியில்தான், அரச சேவையில் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. விசேட சேவை உத்தியோகத்தராக பதவி கிடைத்த கையோடு, வெள்ளாங்குள கிராம அலுவலர் பிரிவில் முதலாவதாகப் பணியாற்றப் பணிக்கப்பட்டது. தேவன்பிட்டி, பாலியாறு, வெள்ளாங்குளம் ஆகிய கிராமங்களில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோரை இனங்கண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையூடாக வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தேன். இது தவிர, மக்களுக்கான பணிகளை முன்னெடுப்பதற்கான சாத்திய வழிகள் சகலதையும் பயன்படுத்தினேன். குடிநீர்க்கிணறுகளை அமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல் மற்றும் பாடசாலைகளில் முன்னெடுக்க வேண்டிய சகல செயற்பாடுகளும் கிராமோதய சபையூடாக முன்னெடுக்க என்னால் முடிந்தது.

1984 பிற்பகுதியிலிருந்து 1987 நடுப்பகுதி வரை

விசேட சேவை உத்தியோகத்தராக வெள்ளாங்குளப் பிரதேசத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கையில், இடமாற்றலாகி சொந்த ஊரான விடத்தல்தீவுக்கு வரக் கிடைத்தது. இக்காலப் பகுதியில் ஏ.சீ.எம். மஹ்ரூப் மற்றும் அ.ஜேம்ஸ் ஆகியோர் விடத்தல்தீவு கிராமோதய சபையின் தலைவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவர்களது சகவாசம் மேலும் என்னை மக்கள் பணிக்குத் தூண்டியது. இவற்றில் இரண்டை பிரதானமாகக் குறிப்பிடலாம். பள்ளமடுவிலிருந்து விடத்தல்தீவு வரையான பிரதான பாதை

மற்றும் பழைய வைத்தியசாலையிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் பாதை என்பன புனரமைக்கப்பட்டன. இத்துடன் புனரமைக்கப்பட வேண்டிய ஏனைய பாதைகளும் புனரமைக்கப்பட்டு வீடில்லாதிருந்த ஏழைகளுக்கு வீடமைக்க உதவிகளும் வழங்கப்பட்டன.

பள்ளமடுக்குளம் அபிவிருத்தி

விடத்தல்தீவு மக்களின் பழங்கால வாழ்க்கையில் பள்ளமடுக்குளம் பிரதான பங்காற்றியது.ஊர் மக்கள் குளிக்கவும், துணி துவைக்கவும் அவசியமான வேளைகளில் வேறு தேவைக்காகவும் இக்குளத்து நீரையே பயன்படுத்தினர். இதனால், இக்குளத்தில், சில முன்னேற்பாட்டு செயற்பாடுகளையும் செய்ய வேண்டியேற்பட்டது. பெண்கள் ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கான மறைவிடம், குளிக்கும் கரைகளில் படிக்கட்டுக்கள் என்பவற்றை அமைக்கும் தேவைகள் உணரப்பட்டு உடனடியாகச் செய்யப்பட்டன. இதற்கான முன்னோடிச் செயற்பாட்டாளர்களில் நானும் ஒருவன். அமரர் தோப்பியாஸின் ஆலோசனை, வழிகாட்டல்களால் இவை செய்யப்பட்டன.

வைத்தியசாலையின் மேம்பாடுகள்

கிராமத்தவர்களின் சுகாதார நலனில் அக்காலத்தவர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டதால், வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டது. இதற்காகவென்றே அபிவிருத்திக் குழுவும் அமைக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் வைத்தியசாலைகளில் எழுந்த தேவைகளை நிவர்த்திக்க இக்குழு முயன்றது. நோயாளர்களுக்கான கட்டில்கள், நுளம்பு வலைகள், மின்சாரம் தடைப்படும் நேரங்களில் பயன்படுத்தவென மின்பிறப்பாக்கி உள்ளிட்ட தேவைகளைப் பெற்றுக் கொடுக்க இயங்கிய இக்குழுவில், நானும் ஓயாத உழைப்பாளியாக இருந்தேன். இக்காலப்பகுதியில் கிராம சபையின் வளர்ச்சியில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களில் எம்.கலீல் (றாசிக்) ஆசிரியர் மற்றும் ஏ.ஜேம்ஸ் ஆகியோரை என்னால் மறக்க முடியாதுள்ளது.

1987 நடுப்பகுதியிலிருந்து 1990 வரையான காலம்

இதுவரை காலமும் விசேட சேவை உத்தியோகத்தராகப் பணியாற்றிய நான், இக்காலப்பகுதியில்தான் கிராம அலுவலகராக நியமனம் பெற்றேன். இப்பதவியுடன் முதற் தடவையாக பெரியமடுவில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இப்பணியை சிரமமின்றி முன்னெடுக்க இங்கு கிராமோதய சபைத் தலைவராகப் பணியாற்றிய பி.எம். மனாப் கூடியளவில் ஒத்துழைத்ததையும் குறிப்பிட்டேயாக வேண்டும். வழமைபோல, ஏழைகளுக்கு வீடுகளை நிர்மாணிப்பதிலேயே எனது கவனம் சென்றது. 08 மைல் தூரமுடைய பெரிய மடுவிலிருந்து விடத்தல்தீவுக்கு வரும் பாதையை புனரமைத்தமை அக்காலத்துச் சாதனைகளில் பிரதான இடம் பிடித்தது. மன்னார் அரசாங்க அதிபர் எம்.எம். மக்பூலின் உதவி இதற்காகப் பெறப்பட்டது. இந்தப் பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னரேயே, இடை நிறுத்தப்பட்ட பஸ் சேவையை மன்னார் போக்குவரத்துச் சபை மீளவும் ஆரம்பித்தது.
குறிப்பாக நினைவுபடுத்தக் கூடிய மிக முக்கியமான சம்பவத்தையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது நமது சேவைகளுக்கு அழகூட்டலாம். இராணுவத்தினர் 1987 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் விடத்தல்தீவைச் சுற்றி வளைத்தனர். நாட்டில் அந்தக் காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்லையில், இவ்வாறான சம்பவங்கள் சாதாரணமாக நடப்பவைதான்.

இதில் நேரடியாகப் பாதிக்கப்படுவதும் மனங்கலங்குவதும் குறிப்பாகப் பெற்றோர்கள் என்பதை எவரும் மறக்க முடியாது. இராணுவத்தின் இச்சுற்றி வளைப்பில் இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ இளைஞர்கள் ஐம்பது பேர் கைதாகி அழைத்துச் செல்லப்பட்டனர்.இந்நிலையில், மன்னாரிலிருந்து விடத்தல்தீவுக்கான பாதை பயணிக்க முடியாதளவுக்கு அக்காலத்தில் சிதைந்திருந்ததையும் வாசகர்களின் நினைவுக்கு விடுகிறேன். நிலைமையின் விபரீதம் கருதிய பெரியமடு கிராம சேவையாளரான நானும், கிராமோதய சபைத் தலைவராகவிருந்த அ.ஜேம்ஸ் மற்றும் கிராம சபையின் முன்னாள் தலைவரும் வர்த்தகருமான கே.எம்.மீரான் மொஹிதீன் ஆகியோரும் மன்னாருக்கு கடல்வழியாகச் சென்று, மன்னார் அரசாங்க அதிபர் மக்பூலைச் சந்தித்து இளைஞர்களின் விடுதலைக்கு வழியமைத்தோம்.

1990 வெளியேற்றத்தின் பின்னர்

முஸ்லிம்களை வெளியேறுமாறு விடுதலைப்புலிகளின் நிர்வாகம் விடுத்த உத்தரவு வடபுலத்தின் இயல்பு நிலையை தலைகீழாக்கியது. இந்த உத்தரவின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளும் ஆவலுடனிருந்த முஸ்லிம்களுக்கு இறுதியில் ஏமாற்றமே காத்திருந்தது. 1990-10-23 ஆம் திகதி எனது இல்லத்துக்கு வந்திருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அதே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியேற நேரிடும் எனத் தெரிவித்ததுடன், வெளியேறும் உறுதியான தினத்தை நாளை அறிவிப்பதாகவும் குறிப்பிட்டனர்.பின்னர்

வெளியேறுவதற்கான திகதி *26* என, உறுதியாக அறிவிக்கப்பட்டது. பள்ளிவாசல்களின் உதவியுடன் இதுபற்றி மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. பெரும் அமளி துமளியேற்பட்டிருந்த அந்த நேரத்தில் மக்களின் பயண ஏற்பாடுகளைச் செய்வதில், நாம் தீவிர கவனம் செலுத்தினோம்.
நாளொன்றுக்கு ஐம்பது குடும்பத்தினர் வெளியேறத் திட்டமிட்டிருந்தனர். முதல் நாளன்று பள்ளிவாசலின் முன் மண்டபத் தளத்திலிருந்து விடத்தல்தீவு பங்குத் தந்தை செபமாலை அடிகள் கண்ணீர் மல்க சொற்பொழிவாற்றி வழியனுப்பி வைத்தார். இறுதி நாளான *30* ஆம் திகதி நானும் எனது குடும்பமும் பள்ளிவாசல் நிர்வாகத்தினருடன் வெளியேற நேர்ந்தது. இந்தக் காட்சியைக் கண்ணுற்ற இந்து, கிறிஸ்தவ மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றிருந்த காட்சி இன்று வரைக்கும் மனிதாபிமானத்தின் அடையாளம்தான்.

1990-11-03 தொடக்கம் *2002-10-01* வரை

கிராம அலுவலகரான நான் புத்தளம் நகரில் எனது வதிவிடத்தை அமைத்ததுடன், மக்களுக்கான பணிகளை புத்தளம் பிரதேச செயலகத்திலுள்ள கிராம அலுவலர்களுடன் இணைந்து முன்னெடுத்தேன். இதே காலப்குதியில்தான் கிராம அலுவலகர்களை தரம் *01* க்கு தரமுயர்த்தும் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இந்த பரீட்சையின் முடிவுகள் *1994* ஆம் ஆண்டு வெளியானபோது, மன்னார் மாவட்டத்திலேயே முதலிடம் பெற்றிருந்தேன். இதனால், எனக்கு பதவி உயர்வும் கிடைத்தது. இதையறிந்த மன்னார் அரச அதிபரான எஸ். எம். குரூஸ் புத்தளத்திலிருந்து கடல் மார்க்கமாக மன்னார் வருமாறு என்னை அழைத்தார். அங்கு சென்று அரசாங்க அதிபரைச் சந்தித்த எனக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தோரின் இணைப்பாளராக பணியாற்றும் வாய்ப்பும் கிட்டியது.

எனக்கு வழங்கப்பட்ட பணிகள்

இடம்யெர்ந்த அரச ஊழியர்களின் சம்பளங்களை மாதாந்தம் கொண்டு சென்று அவர்களிடம் ஒப்படைப்பது, இடம்பெயர்ந்த நிலையில் நாடு பூராகவும் பரந்து வாழும் முதியோர்களின் மாதாந்த உதவிப் பணத்தை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவரவர் வாழும் பகுதிகளுக்கு அல்லது அகதி முகாம்களுக்கு ஒப்படைப்பது என்பவற்றை பிரதான பணிகளாக முன்னெடுத்தேன். இவர்களின் நிதியைப் பாதுகாப்பாகக் கொண்டு உரியவர்களிடம் சேர்ப்பதற்காக, விசேட முகாமைத்துவ உதவியாளர் அல்லது சிறாப்பர் ஒருவரையும் எனக்கு உதவியாக நியமித்தனர்.
இந்தப் பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளையில்தான், மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு ஆசிரியர் நியமங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்காக நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் அனுமதிக் கடிதங்கள் கிடைத்த சகலரும் தோற்றியிருந்தனர். பரீட்சையில் தோற்றுவோர் தாம் பிறந்த கிராமத்துடைய கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் ஒப்படைக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டிருந்தனர். இதை வழங்காதவிடத்து நியமனம் மறுக்கப்படும் என்று கண்டிப்பான உத்தரவும் இடப்பட்டது.

அந்தக் காலத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள பிறந்த கிராமங்களுக்குச் செல்வதை கற்பனையால் கூட, நினைக்க முடியாதிருந்தது. இவர்களின் இப்பரிதாப நிலை குறித்து எனக்கு உணர்த்தப்பட்டதால், மன்னார் அரசாங்க அதிபரிடம் இதுபற்றிப் பேசத் தீர்மானித்தேன். பிற்பகல் நான்கு மணியளவில் அரசாங்க அதிபர் குரூஸை சந்தித்து பரீட்சைக்குத் தோற்ற விருப்புள்ளவர்களின் நிலையை எடுத்துரைத்தேன். உடனடியாக தமது பிரத்தியேகச் செயலாளரை அழைத்த அரசாங்க அதிபர், சகல திணைக்களங்களுக்கும் ஒரு அறிவிப்பை விடுத்தார். மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் அதிகாரத்தை இணைப்பாளரான தம்மிடம் (முஹ்ஸின்) ஒப்படைப்பதாக அறிவித்து, அவசரமாக இந்தச் சுற்றறிக்கையை சகல திணைக்களங்களுக்கும் அனுப்புமாறு செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அடுத்த கணமே இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. இன்றளவும்கூட மன்னார் அரசாங்க அதிபரின் இந்த மனிதாபிமானத்தை மக்கள் நன்றியுடன் நினைப்பதை நானறிவேன்.

இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்ளீர்ப்பு

காலங்கள் இவ்வாறு சுழன்றடித்துக் கொண்டிருக்கையில், இலங்கை நிர்வாக சேவைக்குள் ஆட்களைச் சேர்ப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் *2000* ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதற்கு நானும் விண்ணப்பித்ததால்,*2002* ஆம் ஆண்டில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றக் கிடைத்தது. இலங்கை ரீதியில் ஆறாவது இடத்துக்கு தெரிவான நான், *2003-10-02* ஆம் திகதி நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டேன். ஸ்ரீலங்கா அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் சுமார் மூன்று மாதங்கள் பயிற்சி முடித்து, வவுனியா வெங்கலச் செட்டிகுள பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகப் பணியாற்றத் தொடங்கினேன்.

2003-10-02 தொடக்கம் 2011-01-08 வரை

வவுனியா வெங்கலச் செட்டிகுளத்தில் பதவிகளைப் பொறுப்பேற்ற வேளையில், கண்டிப்பான ஒரு பெண் அதிகாரியுடன் அறிமுகம் ஏற்படத் தொடங்கியது. வேலை, அலுவலகம் நிர்வாகம் என்பவற்றில் கண்டிப்பும், கவனமும் உள்ள நிர்வாகி அவர். பிரதேச செயலக ஊழியர்கள் குழுக்களாகப் பிரிந்து பணியாற்றும் நிலை ஏற்படுமளவுக்கு பிரதேச செயலகத்தில் நிலைமைகள் இருந்தன. இவர்களில் சிலர், பிரதேச செயலாளருக்கு சார்பாகவும், இன்னும் சிலர் எதிர்ப்பாகவும் மற்றும் சிலர் நடுநிலையுடனும் செயற்பட்டனர்.

இதனால், சிறிது காலங்களுக்குப் பின்னர் பிரதேச செயலாளர் வவுனியாவுக்கு மாற்றலாகிச் செல்லும் நிலையும் ஏற்பட்டது. இதன் பின்னர், பிரதேச பதில் செயலாளராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அன்று முதல் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருந்த சகல குழுக்களும் ஒன்றிணைந்து எனது செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கின. நிர்வாகத்தை திறன்பட நடத்துவதற்கு இக்குழுக்களின் ஒன்றிணைவுகள் உதவின. யுத்தம் கோரத் தாண்டவமாடிய காலம் என்பதால், வவுனியாவில் இயங்கிய சகல அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டேன். அவதியுறும் மக்களுக்கு அதிகரித்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்க இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்புகள், பாரியளவில் உதவியதையும் குறிப்பிட வேண்டும்.

எட்டு வருடங்களிலான இக்காலப்பகுதிகளில் இரட்டைச் சவால்களை எதிர்கொள்ளும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் அடுத்தது வடகிழக்கு யுத்தத்தில் பாதிப்புற்று புலம்பெயர்ந்த தமிழ் மக்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் என்பவையே அவை.

குறிப்பாக *1977* மற்றும் *1978* ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தென்னிலங்கையில் நிகழ்ந்த கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்த மலையக மக்களுக்கும் எதையாவது செய்வதற்கு இந்தத் தொடர்புகள் உதவின. பொதுவாக வீடில்லாதிருந்த குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல், புலம்பெயர்ந்து வந்தோரை மீளக் குடியமர்த்தல் மற்றும் ஸ்தம்பித்திருந்த இக்குடும்பங்களின் இயல்பு நிலையை இயங்கச் செய்ய வாழ்வாதார உதவிகளை வழங்குதல் என்பவற்றில்தான், எனது கவனம் குவிந்திருந்தது. பதில் செயலாளராகக் கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை இதற்காக உச்சளவில் பயன்படுத்தக் கிடைத்ததை பெரும் பாக்கியமாகவே கருதிகிறேன்.

மெனிக்பாம், கந்தசாமி புரம், தட்டாங்குளம் போன்ற கிராமங்களில் மலையகத்தவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். இடப்பெயர்வு என்பது வார்த்தைகளால் விளக்க முடியாதளவுக்கு துயர் நிறைந்த சவாலுள்ள வாழ்க்கையாகும். பூச்சியத்திலிருந்து வாழ்வாதாரத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்புலப்பெயர்வில் உள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். எனவே, இவர்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுக்கவும் தொழில் முயற்சிகளுக்கு வழிகாட்டவும் வழியேற்பட்டது.

காணிகளில்லாமல் செட்டிகுளப் பிரதேசத்தில் வாழ்ந்தோருக்கு காணிகளை வழங்கும் நோக்குடன் காணிக் கச்சேரி நடத்தி, சின்னச் சிப்பிகுளம் மற்றும் பெரியகட்டு கிராம அலுவலகர் பிரிவுகளில் இம்மக்களுக்கு காணிகள் வழங்க நடவடிக்கை எடுத்தோம். மூவினத்தவர்களிலிருந்தும் ஐம்பது குடும்பங்களைத் தெரிவு செய்து, முன்மாதிரி வீட்டுத் திட்டங்களும் வழங்கப்பட்டன. தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீடில்லாதோருக்கு வீடுகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாதாந்தம் நடமாடும் சேவைகளை நடாத்தி மக்களின் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. இந்த நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ஊழியர்களதும் பொது மக்களினதும் ஒத்துழைப்புக்கள் கிடைத்தன.

மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்த செட்டிகுளப் பிரிவில் எனக்குப் பணியாற்ற கிடைத்ததை மகிழ்ச்சியுடன் பார்க்கிறேன். *95* தமிழ் கிராமங்கள், எட்டு முஸ்லிம் கிராமங்கள் என, *103* கிராமங்கள் இந்த செட்டிகுளப் பிரிவில் இருந்தன. இந்த ஒற்றுமை எனது கடமையை செவ்வனே செய்வதற்கும் வழிகோலியது. இந்த திருப்தியில் இன்புற்றிருக்கையில் மற்றொரு பேரிடியாக வன்னிப்போர் உக்கிரமடைந்தது. உச்சந் தொட்டிருந்த போரின் போக்குகள் வன்னி, முல்லைத்தீவு பிரதேசங்களிலிருந்து மக்களைப் புலம்பெயரச் செய்தது. ஏதிலிகளாக வெளியேறிய மக்களும் எதையாவது செய்யும் பொறுப்புக்கள் எனது பதவிக்கு வந்து சேரலாயின.

செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள கல்லாற்று பாலம் தொடக்கம் பறையனாலங்குளம் வரையிலான அரச காணிகள் *5000* ஏக்கர் வரை துப்புரவு செய்யப்பட்டு மக்களை குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப்படலாயின. வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் மூலம் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு பத்துக்கு மேற்பட்ட முகாம்களும் அமைக்கப்பட்டன. *2008* ஆம் ஆண்டில் ஆரம்பமான இறுதிப்போரில் சரணடைந்த பொதுமக்களின் ஒரு தொகுதியினரை *2008* நவம்பர் *28* ஆம் திகதி இராணுவம் பொறுப்பேற்று

எம்மிடம் ஒப்படைத்தனர். இவர்கள் செட்டிகுளம் மத்திய மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். இந்த அகதிகள் வந்து சேர்ந்த அதேநாள் இரவு 12.30 மணியளவில் உறக்கத்துக்குச் சென்றபோது நள்ளிரவு 2.30 மணியளவில் எனக்கு வந்த தொலைபேசி அழைப்பு என்னைக் கதிகலங்க வைத்தது.
எனது மனைவி காலமானதாக அறிவிக்கப்பட்டதால் செய்வதறியாது நின்றிருந்த நிலையில் இன்னுமொரு தொலைபேசி அழைப்பில், இன்னுமொரு மக்கள் கூட்டம் அகதிகளாக வவுனியா வந்து சேர்வதாக அந்த அழைப்பில் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி மேல்மட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டு சக பணியாளர்களுக்கு தெரியப்படுத்தினேன். இதன் பின்னர் அரசாங்க அதிபரின் அனுமதியுடன் 2008-11-29 அதிகாலை 4.30 மணிக்கு மனைவியின் ஜனாஸா நல்லடக்கத்தில் பங்கேற்பதற்காக புத்தளம் புறப்பட்டேன். அதே மன நிலையுடன் 2008-11-30 மீளவும் கடமைக்குத் திரும்பினேன்.

மனைவியை இழந்த சோகம் ஒரு புறமும் இடம்பெயர்ந்தவர்களின் துயரம் மறுபுறமும் என்னை நிலை தடுமாற வைத்தன. இருந்தாலும் எனக்கு நானே ஆறுதல் கூறி மக்கள் பணியாற்ற மீண்டும் தலைப்பட்டேன். வன்னிப் போரில் 2009-08-18 வரை சரணடைந்திருந்த சுமார் மூன்றரை இலட்சம் மக்களும் எனது நிர்வாகத்தின் கீழ், மீளத் தங்க வைக்கப்பட்டனர். பத்துக்கு மேற்பட்ட முகாம்கள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் இன்னும் சில பொது இடங்களில் இம்மக்கள் தங்க வைக்கப்பட்டதுடன், நாளாந்த தேவைகளை நிவரத்திக்கும் பணிகளும் முடுக்கி விடப்பட்டன.
அரச அதிபரின் வழிகாட்டலில் நிர்வாகக் கடமைகளைப் பொறுப்பேற்று ஐநூற்றுக்கும் மேற்பட்ட கள அலுவலர்கள், தொண்டர்கள், வைத்தியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளின் துணையுடன் இம்மக்களுக்கான நாளாந்த உதவிப் பணிகள் தொடர்ந்தன. எவ்வித தயக்கமோ அல்லது பாரபட்சமோ இல்லாமல் வன்னி அகதிகளை மீளக் குடியமர்த்தும் வரை இவர்கள் சகலரும் உழைத்தனர். இந்த உயரிய பண்பாளர்களை என்னால் மறக்க முடியாது.

இந்நிலையில், 2011-01-08 ஆம் திகதி நான் ஓய்வு பெற்றேன். எனக்கு 2011-01-10 ஆம் திகதி வழங்கப்பட்ட பிரிவுபசாரம், கௌரவிப்பு என்பவை என்றைக்கும் பெருமிதமாகவே உள்ளன. ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவுகளிலும் எனக்கு வழங்கப்பட்ட கௌரவங்களை வாழ்நாள் வரைக்கும் நன்றியுடன் நோக்குவதால் நான், பூரிப்படைகிறேன்.

4. சித்திர பெருநாளும் விடத்தல்தீவாரும். - ஜேம்ஸ். சுதாகரன்

மன்னார் மாவட்ட கிராமங்களில் மாந்தை மேற்கு பகுதியில் அதிகளவான கத்தோலிக்கர் வாழ்ந்த எமது விடத்தல்தீவில் கத்தோலிக்க திருமறை சார்ந்த அனைத்து விழாக்களும் சிறப்பாக கொண்டாடப்பட்டவை என்றால் அது மிகையாகாது.

திருச்சபையால் கொண்டாடப்படும் திருவிழாக்கள் , வருடத்தில் வரும் எமது இரண்டு ஆலயங்களின் திருவிழாக்களோடு நத்தார், வருடப்பிறப்பு,மடுத்திருவிழா காலங்கள் என்பவற்றுடன் சித்திரை பெருநாளும் எம்மவர்களால் சிறப்பாக கொண்டாடப்படுவதுண்டு.

திருநீற்றுப்புதன்.

இயேசு கிறிஸ்து பாடுகள் பட்டு உயிர்த்தெழும் தவக்கால நாட்கள் குறோசும என்று எம்மவர்களால் அழைக்கப்படும் சித்திர பெருநாள். இது திருநீற்று புதன் அன்று அமளிதுமளியாக ஆரம்பிக்கப்படும். இந்த திருநீற்றுப்புதன் அன்று கடந்த வருடத்தில் குருத்தோலை ஞாயிறு தினத்தில் வழங்கப்படும் குருத்தோலைகளை அறவீட்டில் கொடுத்து அதை அவர்கள் எரித்து சாம்பலாக வைத்து குறோசும தொடங்கும் திருநீற்றுப்புதன் அன்று கோயிலில் நெத்தியில் சிலுவை அடையாளம் வரையப்பட்டு" மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கு திரும்புவாய் மறவாதே என்றும் "என்ற பாடலோடு சாவு பற்றிய பயத்தையும் ஞாபகப்படுத்தி தவசுகாலம் தொடங்கும்.

பல மந்திரவாதிகளுக்கு கட்டுப்படாத பரம்பர குடிகாரர்கள், யார் சொல்லியும் எவருடைய பேச்சையும் கேட்காத குடிகாரர்கள், கள்ளு தவறனையே தஞ்சம் என்டு காலம வெள்ளநண்டோட போய் நடுராத்திரி வரைக்கும் அங்கேய படுத்தெழும்பும் ஆக்கள் எல்லாம் குடியை விட்டு பரிசுத்த சம்மனசுகளாக அவதாரம் எடுக்கும் நாட்களாக இந்த குறோசும 40 நாளும் இருக்கும்.

எங்கட ஊரில சிறுசுகள் தொடங்கி பெரியவர்கள் வரைக்கும் திருநீற்று புதன்கிழமை கொண்டாடி தீர்ப்பார்கள். தங்கட முற மச்சான், மச்சாள்மாருக்கென்றே முட்டைகளை தாட்டுவச்சு அவற்றை எடுத்து தருணம் பாத்து தலையில் அடிப்பதும், ஒரு வீடு விடுபடாமல் எல்லா வீடுகளிலும் இருந்து சாம்பலை வாளி வாளியாக கரைத்து வாற போறவர்களை இலக்கு வைத்து ஒருவர் தப்பாமல் எத்துவதும் ,சாம்பல் முடிஞ்ச

கையோட றோட்டில கிடக்கிற சாணிகளால் எதிரே வருபவர்களை பதம்பார்ப்பதுமாக அந்த நாள் முடியும். அதிலும் சில பேர் தங்களுக்கு முட்டையால அடிப்பார்கள், சாம்பலால எத்துவார்கள் என தெரிந்தும், அடிக்கடி வீட்டில் இருந்து வெளியே வந்து இடம் எடுப்பதும் வேடிக்கையாக இருக்கும்.

அத்தோடு திருநீற்று புதன் அன்றில் இருந்து மாலை நேரங்களில் வியாகுல பிரசங்கம் வாசித்து ஒப்பாரி பாடுவது. எமது ஊரின் பழமைகளில் முக்கியமானவைகளில் ஒன்றாகும் தொடர்ந்து வரும் ஞாயிறு திருப்பலிகளில் நற்கருணை வழங்கப்படும் போது நற்கருணை பாடல் பாடப்படமாட்டாது அவ்வேளையில் வியாகுல பிரசங்கம் வாசிக்கப்படுவதும் எமது ஊரின் வழமையாகும். எமது பாடசாலையில் வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் வாரத்தில் இரு நாட்களில் சிலுவைப்பாதை வழிபாடுகள் ஆலயங்களிலும் இடம்பெறுவதும் வழமையே.

அத்துடன் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒருசந்தி புடிச்சு ஒறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் எமது ஊரின் பாரம்பரிய பழக்கவழக்கமாக இருந்து வருகிறது.

குருத்தோலை ஞாயிறு.

குருத்தோல ஞாயிற்றுக்கிழமைக்கு முதல் நாள் குருத்தோலைகளை வெட்ட பெரியமடுவிற்கு போய் அத வெட்டிக்கொண்டுவாற பொறுப்பு ஊரில இருக்கிற பூசைக்கு உதவிற ஞானப்பிரகாசியார் கூட்ட சிறுவர்களையே சார்ந்திருக்கும். எங்கட ஊரில 2 கோயில்கள் இருக்கிறதால ஒரு கோயில்ல இருந்து மற்ற கோயிலுக்கு குருத்தோலைகள ஏந்தி பவனியாக வந்து பூச நடக்கும். அந்த குருத்தோலைகள குருசாக செய்து வீட்டில வைச்சிருப்போம் அதுதான் அடுத்த வருசம் திருநீற்று புதன் அன்று எரித்து சாம்பலாக எடுக்கபடும்.

பெரிய கிழமை புனித வார நிகழ்வுகள்.

கத்தோலிக்க விசுவாச நடைமுறைகளை கைக்கொண்டு கிறிஸ்தவ பாரம்பரியத்தில் தழைத்தோங்கி அதிலே அதீத நாட்டம் கொண்ட எமது ஊரில் பெரிய கிழமை வழிபாடுகள் சிறப்பாக அனுஸ்டிக்கப்படும். அந்த வகையிலே பெரிய வியாழன் வழிபாடுகள் நடைபெற்று பாதம் கழுவும் சடங்கு நடைபெறம் அந்த வேளையில் பாடப்படம் :உங்களுக்கன்பு நான் செய்தது போலவே" ...என்ற பாடல் மனதை அதன்பால் ஈர்க்கும் தருணமாகவே அமையும். நற்கருணை இடம்மாறுவதற்காக சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட இடத்தில் நற்கருணை எழுந்தேற்றம் பண்ணிவைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறுவதும் எமது ஊரில் உள்ள வழமையான நிகழ்வாகும்.
பாதம் கழுவப்படுவதற்கு ஊரில் உள்ள மூத்த வயோதிபர்களே தெரிவுசெய்யப்படுவார்கள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் பங்குத்தந்தையால் பாண் வழங்கப்படுவது இன்றுவரை தொடர்கின்றது.

பெரிய வெள்ளி .

பெரிய வெள்ளி தினத்தில் எமது ஊரில் யாருமே தொழிலுக்கு போகமாட்டார்கள். காலம பெரிய சிலுவைப்பாதை ஊரச்சுத்தி நடைபெறும். அது முடிய அங்க இங்க எண்டு மூல முடுக்கெல்லாம் எங்கட ஊரில தாகசாந்தி வழங்கப்படும் .இத அந்த காலத்தில எங்கட ஊரில இருந்த *VAJ, PMS, DDR* சம்மாட்டிமார் வாகனத்தில கொண்டு ஊர சுத்தி கொடுப்பார்கள் , இன்னும் சிலபேர் தங்கட தங்கட வசதிகளுக்கு , அந்தஸ்துக்கு ஏற்றால்போல் தாகசாந்திய வழங்குவார்கள்.

இப்படி ஒருபக்கம் தாகசாந்தி வழங்கப்படும் போது எங்கட ஊரில இருக்கிற பக்தி சபையினர்கள் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப தங்கள் தங்கள் நேர அட்டவணையில் கோயில்ல வந்து நற்கருணை வழிபாட்டை நடத்துவார்கள். மற்றும் தனிப்பட்ட ரீதியாகவும், குடும்பம் குடும்பமாகவும் வந்து எமது கோயில் அன்றைய நாள் வழிபாடுகளால் அதிரும். நற்கருணை வழிபாட்டில் ஈடுபடும் இளசுகள் அடிக்கடி தங்கட உடுப்புகள மாத்தி மாத்தி மணிக்கு ஒரு தடவையென நற்கருணை சந்திப்பில் ஈடுபடுவதும் எம்மூரில் நடந்தேறும்.

பின்னேரம் முன்று மணிக்கு பொது வழிபாடு இடம்பெறும். இடைக்கிடைய வியாகுல பிரசங்கம் வாசிக்கப்பட்டு ஒப்பாரி பாடப்படுவதும் எமது ஊரின் வழமையே. தொடர்ந்து மாலை வழிபாடுகள் இடம்பெற்று சிலுவை முத்தி செய்யும் நிகழ்வு இடம்பெறும், சிலுவை முத்தியின் போது பாடப்படும் ஆணி கொண்ட உம் காயங்களை....என்று தொடங்கும் பாடல் அந்த தருணத்தில் பல நெகிழ்ச்சிகளை உண்டுபண்ணும்.

சிலுவை முத்தியை தொடர்ந்து வழிபாடுகள் நிறைவுற்று இயேசுவின் சிலுவை மரண திருப்பாடுகளின் காட்சி காண்பிக்கப்படும்.

அதற்காகவே கோயில் கல்லற பெட்டிக்குள் வைத்திருக்கும் இயேசுவின் திருவுருவத்தை எடுத்து சரிபிழைகளை பாத்து பெயின்ற் அடித்து சரிக்கட்டி வைத்துவிட்டுவார்கள். பின்னர் அதனை உரிய இடத்தில் சிலுவையில் நிறுத்தி இயேசுவின் மரண நிகழ்வை பிரதிபலிக்கும் காட்சி காண்பிக்கப்படும் அந்த வேளையில் பிரசங்கம் வாசிக்கபபட்டு ஒப்பாரி பாடப்படும். எம்மவர்கள் வடமோடி இராகத்தில் ஒப்பாரி பாடுவதில் வல்லவர்கள். அவர்கள் பாடும் விதம், பிரசங்கம் வாசிக்கும் விதம் என்பன மனதை அந்த நிகழ்விலே ஒருங்கிணைய செய்துவிடும். எமது ஊரில் ஒப்பாரி ,பிரசங்கத்திற்கு பெயர்போனவர்கள் பலர் அதிலும் அமரர் வ. செபஸ்தியாம்பிள்ளை , ம.பிரான்சிஸ் இருவருடைய குரலும் அவர்கள் பிரசங்கம் வாசிக்கும் விதமும் ஒப்பாரி பாடம் தன்மையும் கேட்போரை மெய்மறக்கச்செய்துவிடும்.

அந்த தருணத்தில் தனது மாஜாஜால ஒளி மற்றும் ஒலி அமைப்புகளால் அந்த நாட்களில் இயேசு இறக்கும் போது நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளையும் மனக்கண்முன்னே கொண்டுவந்திடுவார் எமது ஊரின் யா.ஜோசப் அண்ணன் அவர்கள்.

திருப்பாடுகளின் காட்சி நிறைவுற்றதும் சிலுவையில் இருந்து இறக்கப்படும் இயேசுவின் திருவுடல் ஏற்கனவே கோயில்ல இருக்கும் தோம்ப எனப்படும் இறந்தவர்களை சவுக்காலைக்கு தூக்கிச்செல்ல பயன்படுத்தப்படும் சாதனத்தை கறுப்பு வெள்ளை நிறத்தால் அலங்கரிக்கப்பட்டு ஆசந்தி பவனியாக எமது ஊரச்சுத்தி ஊரவர்கள் கையல் மெழுகுவர்த்திகளை ஏந்தியவர்களாக கொண்டுவருவார்கள் அந்த நேரத்தில் எம்மவர்களால் பாடப்படும் ஒப்பாரிகளும், தாழிசைகளும் குறிப்பாக’ ஐயோ, ஐயோ என் மகனே “......என்ற ஒப்பாரி பாடலும் ஒருவர் இறந்துவிட்டதான உணர்வை மக்களிடத்திலே உண்டுபண்ணும்.

இவ்வாறு ஊரை சுத்தி ஆசந்தி பவனியாக கொண்டுவரப்பட்ட இயேசுவின் திருவுடல் ஆலயத்தின் போட்டிக்கோவில் வைத்து இறுதியில் புனிதர்கள் பிராத்தனை வாசிக்கப்பட்டு மக்களின் அஞ்சலிகளோடு நிறைவுறும்.

கிறிச்சான் குறுப்பின் பங்கு.

பெரிய வெள்ளி இயேசுவின் பாடுகள் மரணத்தை முன்னிட்டு ஆலயங்களில் ஆலய மணி ஓசை எழுப்பப்படாது மாறாக ஆலயத்தின் வழிபாடுகளுக்கான நேர காலத்தையும் அவை ஆரம்பமாகுவதையும் அறிவிக்கும் பொருட்டு கிறிச்சான் குழு ஊரில் உள்ள மூலை முடுக்கெல்லாம் திரிஞ்சு அறிவிக்கும் பழக்கம் எமது ஊரில் இருந்து வருகிறது. இந்த கிறிச்சான் குழுவில் அதிகமாக புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபையினரே இருக்கவேண்டும் என்பது மாற்றப்படாத விதியாக இருந்துவருகிறது. முதலாம் மணியாம்........ ஆய்த்தமணியாம், 12 மணியாம்......என்ற கோசத்தோடு கிறிச்சான் குழு ஊரை வலம்வரும். 12 மணியாம் என்ற கோசம் ஊரின் சில பகுதிகளில் சொல்லப்படும் போது மணிக்கூட்டில் மணி ஒண்டை தாண்டியிருப்பதும் வேடிக்கையானதாகும்.

அல்லேலூயா சனி.

பெரிய வெள்ளியன்று இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்பு தியானிக்கப்பட்டு மறுநாள் சனிக்கிழமை அல்லேலூயா சனியாக எமது ஊரில் அறியப்பட்டு வருகிறது.

அல்லேலூயா சனிக்கிழமை ஆசந்தியாக தூக்கிவரப்பட்ட இயேசுவின் உடலை ஆலயத்தினுள் வைத்திருப்பார்கள். அந்த நேரத்தில் இயேசுவின் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரைக்கும் நூல் அளந்து அதை கையில் கட்டுவது எம்மவர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. கத்தரின் நூல் அளந்து கையில் கட்டும் செயல்பாடானது இளைஞர்களிடேயே அந்தநாட்களில் விரும்பத்தக்க செயலாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அல்லேலூயாசனியில்அலகைகளின், பேய்களின்அட்டகாசம் சொல்லிமீளாது. இயேசுவை கொன்று அவரின் சாவை தங்கள் வெற்றிநாளாக எண்ணிய அலகைகளின் செயல்பாட்டை மனக்கண்முன்னே கொண்டுவரும் செயல்பாடாக அலகைகள் போல வேடமிடப்பட்டு எமது ஊரையே அல்லோலகல்லோலப்படவைத்து அலப்பறைசெய்யும் அலகைகளின் அட்டகாசமும் அந்நாளில் நடந்தேறும்.

அத்தோடு குறோசுமு காலம் 40 நாளும் எமது ஊரில் முடி வெட்டி தாடி வளிக்காமல் குறோசுமய கடைப்பிடித்து இருந்த எமது ஊரவர்கள் முடிவெட்டி தாடி வளிக்க எமது ஆசமுத்து அண்ணனுடைய கடையில் முந்தியடிப்பதும் வாடிக்கையானதொன்றாகும்.

சனி நள்ளிரவு திருப்பலி

உயிர்த்த சனி எனப்படும் நள்ளிரவு திருப்பலியின் போது எங்கும் இருள் நிறைந்திருக்கும் மின்குமிழ்கள்

ஒளிரா, அவ்வேளையில் ஆலய முன்றலில் புதுநெருப்பு மூட்டி பாஸ்கா மெழுகுவர்த்தி ஏற்றியவாறு ஆலயத்தினுள் செல்வோம் அங்கே பாஸ்காவிழாவை முன்னிட்டு ஆசிநீர் தெளிக்கப்பட்டு ஞானஸ்ஞானத்தின் போது நாம் வழங்கிய வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்படும். தொடர்ந்து திருப்பலியின் போது இயேசுவின் உயிர்ப்பு விழாவாக கொண்டாடப்படும்.

உயிர்ப்பு ஞாயிறு.

குறோசும காலத்தில விட்ட அனைத்தும் தொடரப்படும் நாளாகவே இந்த உயிர்ப்பு ஞாயிறு அமையும். காலம பூசைக்கு போய் பூச முடிஞ்சபாதி முடியாத பாதியாக இறச்சி கடைக்கு போய் வரிசையில நிண்டு இறச்சிய வாங்கி குடுப்பதோடு வீட்டு கடம முடியும்.

தங்கள் தங்கள் வயதுபிரிவினரோடு மெச் விளையாட சில இளஞர்கள் கிரவுண்டுக்கு போவார்கள். சிலர் பெரியவர்கள் பழைய குருடி கதவ திறடி என்பதைப்போல குறோசும நாளில நிப்பாட்டிவைச்சத திரும்ப தொடர பள்ளமடு கள்ளு தவறணைக்கு நடப்பார்கள். வேறு சிலர் வீட்டில் விருந்து வைத்து தமது இனம் சனத்தோடு உறவினரோடு விழாவை தொடங்குவார்கள்.

காலம பூச முடிஞ்ச கையோட தொடங்கும் சிலரது பாட்டி சாமம் சென்றாலும் முடியாது அது மட்டுமா விடிய திங்கட்கிழம கடல போகாமல் இருக்கும் அளவிற்கு பாட்டி தொடர்ந்து எங்கட சித்திர பெருநாள் முடிவுக்கு வரும்.

5. விடத்தல்தீவு எனும் நம் சொந்த பண்டையூர் - ஜனகராணி ஜெகநாதன்

ஒரு மைல் சுற்றளவு கொண்ட கடலால் சூழப்பட்ட தீவு. மூன்று பக்கம் கடல், தரைவழிப் பாதை பள்ளமடு வரை உள்ளது. பள்ளமடு இங்கிருந்து ஒரு மைல் தூரம் ஆகும். மூவின மக்கள் முறையே கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள் ஆகியோர் தனித்தனியே வழிபாட்டு தலங்கள் கட்டி வாழ்ந்தார்கள், முதன்முதலில் ஒரு பிள்ளையார் கோயில் தனி ஒருவரால் கட்டப்பட்டு, அதற்கான மானியங்கள், காணிகள், சொத்துக்கள் ஆகியன கோவிலுக்காக தானம் செய்யப்பட்டு இயங்கி வந்தன.இவர்களது வாழ்க்கை அக்கம்பக்க நடைமுறையில் இல்லாதது. ஊர் மக்கள் அனைவரும் குளிக்கவும் சலவை செய்யவும் பள்ளமடு குளம் மட்டுமே தனிக் குளமாக இருந்தது.நாளாந்தம் அதிகாலையில் மக்களும் குளமும் விழித்து விடும். விரைந்து நீர் வற்றும் காலங்களிலும் கூட, அக்கம்பக்கம் உள்ள சிறு சிறு நீர்நிலைகளில் குளித்து, மிகச் சிரமப்பட்டும் வாழ்ந்தாலும் திடம்காத்திரமும் ஆரோக்கியமும் கொண்டே வாழ்ந்தார்கள்.
ஊரின் வடக்குப் பக்கமாக மூன்று கோவில்கள், ஒரு கிராமிய சபை, ஒரு கிராமிய நீதி மன்றம், ஒரு சிறு வைத்திய நிலையம் ஆகியனவும் தெற்கு கடற்கரைப் பக்கமாக ஊரின் மத்தியில் எட்டு எட்டு தொடுத்துக் கட்டப்பட்ட வாளி மலசலகூடங்களும் இருந்தன.
ஊரின் பாதையை கூட்டிப் பெருக்க மூவர், சுத்திகரிப்பிற்காக மூவர் என்று தொழிலாளர்களும் கிராமசபைக்கு உட்பட்டு இருந்தனர். ஊரின் மத்தியில் ஓர் உடையார் வளவு பணிமனையும் அவ்விடமே சாகுல் ஹமீது என்பவரே உடையாராக இருந்தார். அவரே ஊரின் செயல்பாட்டிற்கும் சமூக வேலைகளுக்கும் உரிமையாளர். அவர் அயல் கிராமங்களுக்கும் இரு ஊழியர்களோடு மாட்டு வண்டியில் பயணம் செய்வார்.
இஸ்லாமியர்களில் உடையாராக வேலை பார்ப்பது மிக அரிது. இருந்தும் இவ்வூர் உடையார் ஒரு முகம்மதியரே ஆவார்.

சிறு வைத்திய நிலையம்
இங்கே அன்றாட நோய்களுக்கும் காயங்களுக்கும் வைத்தியம் செய்யப்படும்.
அங்கு முதன்முதலில் மருந்துக் கலவையாளராகவும் இரத்தக் காயங்களுக்கு வைத்தியம் செய்யவும் அமரத்தப்பட்டவர் அமரர் திரு வல்லிபுரம் கந்தையா அவர்கள். அவருக்குப் பின் திரு வல்லிபுரம் சின்னையா அவர்கள் ஓய்வு பெறும் வரை பணி புரிந்தார். வைத்தியரின் தங்குமிடம் வைத்திய நிலையத்தின் பின்புறம் இருந்தது. இவரே பள்ளமடு வைத்தியசாலைக்கு , தினந்தோறும் சென்று வைத்தியம் பார்ப்பார்.
நாட்டு வைத்தியராக அடைக்கலம் பரியாரியார் அவர்கள். அவரது தந்தையும், பேரன் அமிர்தநாதனும் வைத்தியப் பணி செய்தவர்கள். (பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கல நாதனின் தந்தையார்)
முதலில் புனித யாகப்பர் தேவாலயமும் பின்னர் மாதா கோவிலுமாக இரண்டு கிறிஸ்துவர் தேவாலயங்கள் கட்டப்பட்டன. இஸ்லாமியர் பள்ளிவாசல் குளக்குண்டு மையமாக, நடுவே ஓர் கொட்டுக்கிணறும் இருந்தது. காலப் போக்கில் தைக்காப்பிட்டியில் ஓர் பள்ளிவாசலும் இருந்தது.

மாணவர் கல்விக்கூடங்கள்
இரண்டு – ஒன்று கடற்கரை பிட்டியில் புனித யாகப்பர் தேவாலயத்திற்கு அருகே ஒரு கிறிஸ்தவ ரோமன் கத்தோலிக்க பாடசாலை. இது முழுக்க முழுக்க தேவாலய மக்களின் வழி நடத்தப்பட்டதாகும். இந்துக்களும் இங்கேயே கல்வி பயின்றனர். பள்ளிவாசலுக்கு அருகே ஊரின் மத்தியில் அரசுப் பள்ளி இயங்கியது. அது

1905ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதில் பெரும்பாலும் முஸ்லீம் மாணவர்களே அதிகம் இருந்தனர். வாசிப்புக் கட்டமைப்புபத்தாம் ஆண்டுவரை காணப்பட்டது. அலி ஆசிரியர் மற்றும் மீரா லெப்பை ஆசிரியர் ஆகியோரும் வகுப்பு நடத்தினர். முதலில் ஐந்தாம் ஆண்டிற்கு கீழேயான வகுப்புகளே இருந்தன. காலப்போக்கில் பத்தாம் ஆண்டு வரை வகுப்புகள் உயர்ந்தன. இந்துகளுக்காக பள்ளி இருக்கவில்லை. அதனால் அவர்கள் இரு பள்ளிகளிலும் (கிறிஸ்துவர் மற்றும் அரசுப் பள்ளி) கற்றார்கள். அயல் கிராமத்துப் பிள்ளைகளும் இங்கேயே கல்வி பயின்றனர்.

தொழில்
மீன்பிடித் தொழிலே முக்கியத் தொழிலாக இருந்தது. கடற்கரையை அண்டியுள்ள கிறிஸ்தவர்கள் இதனை தொழிலாகக் கொண்டனர். இவர்கள் முற்குகன் வெடியரசன் கடற்கோட்டை கட்டியாண்ட முற்குகன் வழிவந்தவர்கள். முக்கியர் எனப்படுவர். சிலர் விவசாயமும் செய்தனர். விவசாயம் இந்துக்களும் முஸ்லீம்களும் செய்தனர். அதிகமாக முஸ்லீம்கள் கால்நடை வளர்ப்பும், வியாபாரமும் செய்தனர். மற்றையோர் தம் சொந்த தேவைக்காக வீடுகளில் பசுமாடுகளை வளர்த்து பயன்பெற்றனர்.

கட்டிடம்
கல்லால் ஆன வீடுகள் அதிகம் இருக்கவில்லை. இருந்த வீடுகள் முருகக்கற்களால் கட்டப்பட்டன. இந்துக்கள் கிராம மத்தியில் வாழ்ந்தார்கள். அவர்களின் வீடுகளில் சில முருகக் கற்களால் கட்டப்பட்டிருந்தன.

முக்கிய வீடுகள்:
இராசையாப்பா, கந்தையாப்பா, பொன்னையாப்பா, குரும்பி கந்தையாப்பா, ஆறுதல் மடம், பிள்ளையார் கோவில், துரையப்பர், மாதா நீக்கிலாப் பிள்ளை உடையார் வீடு, பத்தர் வீடு, மாரிமுத்தாச்சி ஆகியோரின் வீடுகள் முருகக்கற்களால் கட்டப்பட்டன. தென்னங்கீற்றுக் கிளைகளைப் பயன்படுத்தி கட்டப்பட்ட வீடுகளே அதிகமாக இருந்தன.அவை ஓட்டுவீடுகளாக அமைந்திருந்தன.

பயிர்ச் செய்கை
முன்னர் தோட்டப் பயிர்ச்செய்கையாக புகையிலையையே முக்கியமாகச் செய்தனர்.
அட்டைதீவு, பள்ளமடு, குளத்துத் தோட்டப்பிட்டி எல்லா இடங்களிலும் புகையிலைத் தாவரமே பயிரிடப்பட்டது. மாட்டெரு, ஆட்டெரு ஆகியனவே இந்தப் பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்பட்டன. நெற்செய்கை ஊர் எல்லையைத் தாண்டி, பள்ளமடுப் பக்கம் சுல்தான் கமம், புலக் காடு, இலவக் குளம், கிழவிகமம், கரம்பை, மொங்கனா குளம், பம்போசடி, வாடியடி ஆகிய இடங்களிலும் நடைபெற்றது.

நீதித் துறை
ஒரு கிராமிய நீதிமன்றம் ஊருக்கு மத்தியில் இயங்கியது. இது ஐரோப்பிய காலத்தில் “அமர்வு நீதிமன்றம்” என்ற பெயரில் ஏனைய ஊர்களையும் உள்ளடக்கிய நீதிமன்றமாக இருந்தது.
மாதத்திற்கு ஒரு முறை இயங்கி வழக்குகள் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டது. அதிகமாக விவசாயிகள் தொடர்பான வழக்குகள் இருந்தன.

பதிவுகள்
இறப்பு, பிறப்பு பதிவுகள் முன்னர் கிறிஸ்தவ தேவாலயங்களில் இருந்தன. பின்னர் அரசு முறைப்படி பதிவு செய்யப்பட்டது. முதல் இறப்பு, பிறப்பு பதிவாளராக திரு சிவகுரு அவர்கள் பின்னர் ஜனாப் காதர் முகைதீன் ஆகியோர் பணியாற்றினார்கள்.

ஊரமைப்பு
ஆங்காங்கே கேணி, கிணறு, குளம் எனத் தூணீர் சேரும் குண்டுகள் இருந்தன. முக்கியக் கிணறுகள்/குளங்கள்: பிள்ளையார் கேணி, புதுக்கட்டுக் குளம் (வயல்வெளியின் முன்பக்கம்), அருகில் முத்தம்மாச்சி குண்டு, பள்ளிவாசல் அருகே கிணறும் குளமும், யாகப்பர் கோவில் முன்றலில் துரவிக் குளம். ஊரின் நீர் தேங்கி நிற்காமல், இதன் வழியாகச் சிறு சிறு குண்டுகளில் தேங்கி நிற்கும். பிறகு கால்வாய்கள் வழியாக வெளியேறும். இது கால்நடைகள் பசியாறவும் மக்கள் பயன்பெறும் வகையிலும் அமைந்த அமைப்பாக இருந்தது.

மேடுகள் (பிட்டிகள்):
கிராமிய இடங்களில் உயர்ந்த மேடுகளை ‘பிட்டி’ என்பர். பொதுவாக: பிள்ளையார் பிட்டி, கஸ்பார் பிட்டி, வடலிப் பிட்டி, சுடுகாட்டுப்பிட்டி, மையத்துப்பிட்டி, தைக்காப்பிட்டி, புதையாப்பிட்டி, அட்டைத்தீவுப் பிட்டி.
அட்டைத்தீவுப் பிட்டி ஊருக்கு தெற்குப்பக்கம் சற்று தொலைவில் அமைந்திருந்தது.
இது மிக உயர்ந்த பிட்டியாக அமைந்தது, ஏனெனில் பழைய இராசதானியாக இருந்த இடம் ஆகும். அங்கு செல்ல ஒரு பாதையும் இருந்தது.

வரலாறு கொண்ட விடத்தல்தீவு

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனிசிறந்தனவே... நாம் பிறந்து வளர்ந்த மண்ணின் வரலாற்றுச் சிறப்பை சிறந்த ஆய்வுகள் மூலம் துல்லியமாகக் கூற முடியும். கண்டி இராச்சியத்தில் நெடுங்காலமாக தடுப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்த பிரித்தானியரான றொபேட் நொக்ஸ் 17 ஆம் நூற்றாண்டில் எழுதிய நூலில் தமிழர் தேசம் பற்றிய குறிப்புகள் பல ஆதாரங்களோடு உள்ளதால் அதனையும் அடிக் குறிப்பிட்டு திரு ஜே. பி. பி. லூயிஸ் எழுதிய இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு என்ற நூலில் விடத்தல்தீவு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில், விடத்தல்தீவு ஒரு பெரிய வியாபாரச் சந்தை என்றும், இது ஒரு தனி மாவட்டமாகவும் இருந்தது என்றும், இந்தத் தீவில் இருந்து பெரும்பாலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருமானம் ஈட்டப்பட்டதாய் கூறப்பட்டுள்ளது.

வாடிக்கைகள்/தொகுப்புகள்: உப்பு, புகையிலை, சுங்கம், நெல், அங்கு, நத்தை, முத்து, மீன், மீன் முள்ளு, மாட்டு எலும்புகள், நிறை கூடிய மீன் சுறாக்கள். இவைகள் அனைத்தும் வணிகமாக மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. வணிகப் பாதைகள் மொத்தம் 18, அதில் விடத்தல்தீவு ஒரு முக்கியப் பாதை ஆகும். இதன் வழியே யாழ்ப்பாண வியாபாரிகள் வர்த்தகம் செய்தனர். அதற்காக வரி வசூலிக்கப்பட்டது.

தீவு என்பதாலே கடல்வழிப் பயணம் சுலபமானது. அதே காரணமாக, பிரெஞ்சுப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்திற்குள் இத்தீவு வந்தது. அதனால், இத்தீவிலிருந்து இறக்குமதி, ஏற்றுமதி ஆகியன இடையூறு இல்லாமல் நடைபெற்றன. வறுமைக் குறைவு, வருமான உயர்வு ஆகியவை வியாபார சந்தை மூலமாகவே இருந்தன.

நிறைவு:

வன்னியோடு அல்லது மன்னாரோடு இணைந்த ஒரு தனி மாவட்டமாக விடத்தல்தீவு இயங்கியிருக்கிறது. வன்னி நிர்வாகத்திற்கு விடத்தல்தீவு நெற்கனிஞ்சிகள் (அதாவது விளைச்சல் தரும் தரையகங்கள்) மட்டுமே தொடர்புடையது; மற்ற எந்த நிர்வாக அதிகாரமும் இத்தீவுடன் நேரடி தொடர்பில் இல்லை. விடத்தல்தீவு தனது காலத்தில் அமர்வு நீதிமன்றம், துறைமுக அதிகாரம் ஆகியவற்றை கொண்டிருந்தது — இது அதன் உயரிய நிர்வாக நிலையை வெளிப்படுத்துகிறது.

அமர்வு நீதிமன்றம் விடத்தல்தீவு: அமர்வு நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள வீடு, ஊரின் மத்தியில் 100 வருடங்களாக இருந்த ஒரு பாரம்பரிய மாளிகை ஆகும். களஞ்சியம் மாண்ட காப்பீட்டுத் திட்டத்தில் 15 டொலருக்குள் தொகுக்கப்பட்டுள்ளது. அதேத் தரவிலேயே காணொளி, தாசில்தார், செயலாளர், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் கிளார்க் ஆகியோரின் பங்களிப்பும் பதிவாகியுள்ளது.

6. விடத்தல் ஊற்றின் விளைநிலம் ஜோசப்வாஸ்நகர் - ஜேம்ஸ் சுதாகரன்

இலங்கைத்தீவின் வடக்கே அமைந்துள்ள மன்னார் மாவட்டத்தின் A 32 பிரதான வீதியில் அமைந்துள்ள பள்ளமடு சந்தியில் இருந்து மேற்கே ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது எமது சொந்த ஊர் விடத்தல்தீவு .எமது கிராமத்தை பொறுத்தமட்டில் கத்தோலிக்க மக்கள் , இந்துக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் ஆகிய மூன்று மதத்தினரும் தத்தமது மத விழிமியங்களுடன் சுமார் ஆயிரம் குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தமை சிறப்பு .எமது பிராதான தொழில் மீன்பிடி மற்றும் விவசாயம் என்றாலும் பிறப்பிலேயே அறிவாற்றலையும் கல்வியறிவையும் , தெய்வபக்தியையும் ,இறை விசுவாசத்தையும் தன்னகத்தே கொண்ட கிராமம் எமது விடத்தல்தீவு கிராமம் என்றால் மிகையாகாது.

அந்தவகையில் இரண்டு கத்தோலிக்க ஆலயங்களான புனித அடைக்கலமாதா ஆலயம் மற்றும் புனித யாகப்பர் ஆலயமும் , அதில் புனித யாகப்பர் ஆலயம் இலங்கை கத்தோலிக்க வரலாற்றில் அமையப்பெற்ற 400 வருடங்கள் பழமைவாய்ந்த முதலாவது யாகப்பர் ஆலயம் என்பதும் , அத்துடன் பிள்ளையார் கோவில் மற்றும் இரண்டு பள்ளிவாசல்களும் எம்மவர்களின் ஆன்மீகத்தை வளர்த்தவை என்றால் மிகையாகாது. எமது புனித யாகப்பர் ஆலய திருவிழா ஆடி மாதம் 25 ம் திகதி மற்றும் புனித அடைக்கல மாதா ஆலய திருவிழா புரட்டாதி மாதம் 8ம் திகதி நடைபெறும் நாட்கள், கிறிஸ்து பிறப்பு விழா மார்கழி 25 மற்றும் வருடப்பிறப்பு தை மாதம் 1ம் திகதி போன்ற திருவிழா நாட்களில் ஊரே விழாக்கோலம் பூண்டு அமளிதுமளியாக கொண்டாடி மகிழ்வதும், தைப்பொங்கல், மற்றும் ஏனைய திருவிழா நாட்களில் பிள்ளையார் கோவிலில் விழா எடுப்பதும், நோன்பு பெருநாள் காலங்களில் நோன்பு கஞ்சியை ,பலகாரங்களை பகிர்ந்து கொடுத்த உண்ட அந்த நாட்கள் என்றும் பசுமையே.

அத்துடன் கிராமத்தில் அமையப்பெற்ற புனித ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம், அலிகார் மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் எம்மவர்களின் கல்வியறிவை மிளிரசெய்தவை அதாவது நகர்புற பாடசாலைகளுடன் மற்றும் நகர்புற கிராமங்களுடன் ஒப்பிடுகையில் ஆரம்பத்தில் போதிய அடிப்படை வசதிவாய்ப்புக்கள் இல்லாதிருந்தும் குறிப்பாக கடற்றொழிலில் பெரும் முதல்களுடன் கூடிய ஆழ்கடல் மீன்பிடி மற்றும் இயந்திர படகுகள் போன்றவை அற்ற நிலையில் சிறியரக கடற்கலங்களை கொண்டு செய்யப்படுகின்ற சிறகுவலை (பட்டிவலை) ,மணல வலை , வளிச்சல் வலை ,கொட்டுவலை ,முரல் வலை ,பறிக்கூடு ,நண்டுவலை ,போன்ற கடற்றொழில் மீன்பிடியில் பெறும் குறைவான வருமானங்களிலும் தங்களின் பிள்ளைகளை படிக்கவைக்கவேண்டும் என்ற எம் பெற்றோரின் உன்னத இலட்சியத்தாலும், பிறப்பிலிருந்து அமையப்பெற்ற அறிவாற்றலின் நிமித்தம் படிப்பில் எம்மவர்கள் ஒளிவீசினார்கள் என்பதும் சிறப்பு .

மன்னாரில் ஆரம்பத்திலிருந்த நல்லாயன் பாடசாலையில் ஆசிரியர்களாக சேவையாற்றியதிலிருந்து தற்போதுள்ள புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் ஆசிரியர்களாக, அதிபர்களாக சேவையாற்றி புனித டிலாசால் விடுதிசாலையில் பெருநிலப்பரப்பிலிருந்து அதிகளவு மாணவர்களை விடுதி மாணவர்களாக கொண்டிருந்ததும் தேசிய பாடசாலையில் பயின்று பல்வேறு துறைகளில் பட்டம் பெற்றிருப்பதும் மன்னார் மண்ணில் பல நகர்புற கிராமங்களை புறம் தள்ளி தன்னகத்தே கத்தோலிக்க அருட்தந்தையர்கள், டிலாசால் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் , வலய உதவி கல்விப்பணிப்பாளர்கள் , அதிபர் ,ஆசிரியர்கள் ,மருத்துவர்கள் மருத்துவ மாதுக்கள் பொறியியலாளர்கள் , தொளில்நுட்ப உத்தியோகஸ்தர்கள் ,கிராம சேவையாளர் ,உதவி அரசாங்க அதிபர்கள் ,அரச அரசசார்பற்ற திணைக்களங்களின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் மற்றும் பிரதேச சபை ,மாகாண சபை , பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளமையும் சிறப்பம்சமாகும் .

அத்துடன் கிராமம் ஒன்றுக்கு தேவையான பௌதீக வளங்கள் எமதுகிராமத்தில் கிடைக்கப்பெற்றிருந்தன பாலர் பாடசாலை ,சனசமூக நிலையம் ,வைத்தியசாலை ,விளையாட்டுமைதானம், கமநலசேவைகள் திணைக்களம் நெல்லுச்சங்கம் , உபதபாற் கந்தோர் மற்றும் நாங்கள் சுத்தமாக தன்னை அழுக்காக்கிகொண்டிருக்கும் எமது பள்ளமடு குளம் போன்றவைகளை குறிப்பிடலாம். விளையாட்டை பொறுத்தமட்டில் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள விளையாட்டுக்கழகங்கள் அனைத்திலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் பயிற்சிகள் பயிற்றுவிப்பாளர்கள் அற்ற நிலையிலும் உதைபந்து வலைப்பந்து மற்றும் கிரிக்கட் போன்ற விளையாட்டுக்களிலும் தடகள போட்டிகளிலும் அதிகளவில் வெற்றிகளை ஈட்டிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

கலை கலாசாரங்களை பொறுத்தமட்டில் பல நாடகங்களையும் நாட்டுக்கூத்துகளையும் அரங்கேற்றியதுடன், இயல்பிலேயே இனிமையான குரல்வளம் மற்றும் இசை நாடக மற்றும் நாட்டுக்கூத்து கலைநயம் மிக்கவர்களாகவும் பல அண்ணாவிமார்களை தன்னகத்தே கொண்டதும் பல கலாபூசண விருதுவென்ற சாதனையாளர்களையும் கொண்டிருப்பதும் எமது கிராமத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். 90 களில் எமது கிராம இறங்கு துறையானது மற்றைய கிராமங்களை போல் அல்லாது வாடை ,சோளகம் போன்ற இரண்டு பருவ காலத்திலும் கடல் நீர் வற்றாமல் தொழிலுக்கு எவ்வேளையிலும் செல்லும் தன்மை இருந்தாலும், இருப்பதாலும் மற்றும் கடல் வழியாக நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமம் எமது விடத்தல்தீவு கிராமம் என்பதாலும் பாதைகள் பூட்டப்பட்ட காலத்தில் 1990 களின் பிற்பகுதியில் மன்னார், விடத்தல்தீவு நன்பர்கள் நலன்புரி சங்க படகு சேவையை எமது ஊரில் இருந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினூடாக நடைமுறைப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நகருக்கு வெளியே பல்வேறுபட்ட திறமைகளையும் ,கல்வியறிவையும் ,அரச அரசசார்பற்ற நிர்வாகத்தில் பணியாளர்களையும் கொண்டிருந்த கொண்டிருக்கும் எமது கிராமத்தின் எழிலை மதிப்பை சிதைக்க 1999 ம் ஆண்டில் இடம்பெற்ற ஒட்டுமொத்த கிராமத்தின் இடப்பெயர்வு மூலகாரணம் என்பேன் . உள்நாட்டு யுத்தம் ஈழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஆரம்பகாலத்திலும் ,1990 , 1995 ம் ஆண்டுகளிலும் அதற்கு பின்னரும் இலங்கையின் வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்ற ஒவ்வொரு தமிழ்மகனுக்கும் எமது கிராமம் வந்தாரை வாழவைக்கும் வாழ்விடமாகவும் இடைத்தங்கல் இடமாகவும் இருந்தாலும் அவ் நேரத்தில் கூட நாம் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து இந்தியா செல்லவில்லை. இலங்கை இராணுவம் எமது ஊருக்கு வந்து வீடுகளை எரித்த நேரத்திலும் பூசாக்கு கைது பண்ணி கொண்டுசென்ற போதும் , பம்பர் , ஹெலிகாப்டர் என்பன குண்டுகளை பொழிந்த நேரங்களில் கூட அயலில் உள்ள படகுத்துறை , ஊத்தங்கரை ,வெள்ளப்பிட்டி கோயில்குளம் புதுக்குளம் ,கள்ளியடி போன்ற இடங்களில் தங்கியிருந்த நாம் சுமார் ஓரிரு மாதங்களுக்குள் வீடு வந்திருந்தோம் ,

அவ்வாறு ஈழத்தில் இடம்பெயராமல் ஒற்றுமையாக இருந்து மகிழ்ந்திருந்த எமது கிராமத்தில் 1999 ம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் நாள் இடம்பெற்ற எறிகணை வீச்சுக்கள் சரித்திரத்தையே மாற்றிப்போட்டது

மார்கழி லீவும் எங்கட ஊரும்.

சிறகு முளைத்த பறவைகளாக தத்தமது தேடலுக்காக தொலைதூரம் சென்ற குருவிகள் மாலையானதும் தாயை தேடி கூடு திரும்புவதை போல ஒரே தாய் மடியில் உறங்கிய பிள்ளைகள் என்ற உணர்வோடு எட்டுத்திசை எங்கிலிமிருந்து ஊருக்கு வரும் உணர்வு மார்கழி மாத விடுமுறை காலம். “சொர்க்கமே என்றாலும் அது நம்மூர போல வருமா”? இந்த பாடல் வரிகள் எல்லா ஊருக்கும் பொருந்துதோ இல்லையோ எமக்கும் எம் ஊருக்கும் இது ரொம்பவே பொருந்தியிருந்தது.

மன்னார் மாவட்ட A32 பிரதான வீதியிலிருந்து சுமார் 1 km தூரத்தில் மேற்கே உள்ளது எமது சொந்த ஊர் விடத்தல்தீவு காஞ்ச ஊர் , கருவாட்டு ஊர் என்று ஏனையவர்களால் வர்ணிக்கப்பட்டாலும் நாமும் எமது ஊரும் கொண்டிருந்த அருமை பெருமைகள் சொல்லி மீளாது. நகர் புற கிராமங்கள் பலவற்றை புறந்தள்ளி ஒரு ஊர் கொண்டிருக்க வேண்டிய பல பௌதீக வழங்களை நாமும் எமது ஊரும் கொண்டிருந்தோம்.
அந்த வகையில் இரு பாடசாலைகள், இரு ஆலயங்கள், இரு பள்ளிவாசல்கள்,கற்பக பிள்ளையார் கோவில், கிராமிய வைத்தியசாலை, கமநல சேவைகள் திணைக்களம், உபதபாற் கந்தோர், பிரதேச சபை உப அலுவலகம், மற்றும் நெற்களஞ்சிய சாலை, போன்றவை எமதூரில் அமையப்பெற்றிருந்தது.

எமது கிராமத்தில் மின்சார இணைப்பு வசதிகள் இல்லாதிருந்தாலும் குப்பி விளக்கிலும், லாம்பிலும் படித்தும், விடியப்புறம் கடலபோற்று வந்து பள்ளிக்குடம் வந்தும் படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று உயர் பதவிகளை வகிப்பவர்கள் எம்மூரவர் என்றால் அது மிகையாகாது.
கடற்றொழில் தான் எங்களது சீவனோபாயம், ஆழ்கடல் மீன்பிடி கலன்கள், வலைகள் குறைவு. ஆழம் குறைந்த பகுதிகளில் சிறியரக தோணிகளை கொண்டு செய்யப்படும் சிறகுவலை (கண்டிவலை) தொழிலை மூலதனமாக கொண்டு நகர்புற கிராமங்களோடு பல்வேறு துறைகளில் குறிப்பாக கல்வியில் போட்டி போட்டு எம்மவர்கள் சிறந்துவிளங்கினார்கள். இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஊர்களில் இருந்த வசதிவாய்ப்புகள் எமக்கு இல்லாதிருந்தும் நாமும் எமது ஊரும் அடைந்த மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் குதுகலத்திற்கும் அளவே இல்லை. அந்த வகையில் எமது ஊரானது பெருநிலப்பரப்பில் அதிகளவு மக்கள் தொகையுடன் கல்வி ,கலை கலாச்சாரம், விளையாட்டு போன்ற பல்வேறுபட்ட வரலாறுகளை கொண்டிருந்தோம்.

இலங்கையின் வடக்கே பருத்தித்துறையில் இருந்து தெற்கை உள்ள தெய்வேந்திர முனை மட்டும் பரந்து வாழும் எமது ஊரவர்கள் ஊரில் ஒன்றுகூடுவது வருடாந்த ஆலயத்திருவிழா இரண்டிற்கும் மற்றும் மார்கழி விடுமுறையில் வரும் நத்தார் பண்டிகை , வருடப்பிறப்பிற்காகவுமே. மார்கழி லீவு , நிப்போட் பள்ளிக்குடத்தில தந்த அந்த நேரம் முதல் வருடப்பிறப்பு மட்டும் நாங்க அடையும் மகிழ்ச்சிக்கும், குதுகலத்திற்கும் அளவே இல்ல. நிப்போட் வாங்கி திரவுகுள கட்டால வாற எல்லாரையும் குளத்துக்க தள்ளி விடுவதிலிருந்து ஆரம்பிக்கும் எமது அமளிதுமளிகள். ஆங்காங்கே பல்வேறுபட்ட மாவட்ட பல்கலைகழகத்திலிருந்து லீவுக்கு ஊருக்கு வரும் கைம்பஸ் பொடிகளும் பொம்புளப்பிள்ளைகளும், Brothers ,Sisters, குருமட மாணவர்கள், மன்னாரிலிருந்து லீவுக்கு வரும் பொடிகள், பொம்புளப்பிள்ளைகளால் நிறையும் எமது ஊர்.பள்ளமடு Tகட்டும், ஆலமர ஆம்புள கரையும் மாரி லீவு காலத்தில் நிறைஞ்சு வழியும் . பக்கத்தில இருக்கும் கள்ளியடி குளம், அட்டத்தீவு குளம் மழ தண்ணி நிறஞ்சு வழியும்.

கண் ரெத்த சிகப்பா மாறி வீட்ட இருந்து ஆக்கள் தேடிவருமட்டும் முழுக்கு தொடரும். “டே துலைவாரே அங்கால போய் முழுகுங்கடா என்ட திட்டுகள காதில் எடுக்காது ஒருவருடைய தோழில் எறி பக்கத்தில முழுகிற ஆக்களுக்கு மேல் பாய்வதை எளிதில் மறந்துவிட முடியாது. பின்னேரம் 3 மணி ஆனதும் பைப்படி நிறையும், தன்னி குடத்தோடு வீட்டிலிருக்கிற அம்மாமாரும், அக்காமாரும் முண்டியடித்தபடி பைப்படியில லயின்ல நிக்கிற காட்சியும் , பூட்ச தோழில போட்டுக்கண்டு பள்ளிக்குட வளவால கிரவுண்டுக்கு விளையாட போக வாற பொடிகள் அங்க நிக்கிற பொம்புளப்பிள்ளைகளுக்கு ஏதாவது கத சொல்லி நக்கல் விட்டு போறதும் பசுமையான நினைவுகள். போளையும் ,கையுமாக ஒழுங்கைகள் எல்லாம் சுற்றி திரிஞ்சு போள விளையாடும் சின்னஞ்சில்லாட்டுக்கள், வட்டக்கோடும், பாண்டி பலகையும் விளையாடும் பொம்புளப்பிள்ளைகள், ஆளயால தெரியாம இருட்டுப்பட்டாலும் தொடரும் கிளிக்கோடும், அதனால் வரும் சில்லற சண்டைகளும் எண்டு ஒவ்வொரு நாளும் கழியும் எமது பொழுதுகள்.

இத விட ஈச்சங்கம்பில தடம் செய்து ஒரு பூவரசு விடாம ஓணாண் பிடிப்பதும், பூத்து காய்க்கும் பூவரசு மரத்தின் மொட்டங்காய் , அலரிக்காய்களை பிடுங்கி குழுக்கழாக பிரிந்து ஆளையால் மாறி மாறி எறிந்து விளையாடுவதும், புளியங்காய் புடுங்க பம்போஸ் அடிக்கும், பொன்னாமோட்டைக்கும் போவதும், காக்காப்பாட கமத்திற்கு போய் இலையே இல்லாத மா மரத்தில மா பிஞ்சுகளை தேடுவதும், அங்கிருந்த தென்னை மரத்தில் குரும்பைகளை பிடுங்குவதும் மறப்பதற்கில்லை. வேட்ட நாய்களை சாச்சுக்கண்டு சமைக்க நூடில்ஸ் வாங்கி கொம்புதீவு, அட்டத்தீவு என்று அலைஞ்சு திரிஞ்சு முயல் புடிச்சு கறிகாச்சி தின்னுவதும், மாரி வெள்ளத்தால் தரவைக்கு ஏறும் மணலை பிடிக்க மாயவலையுடன் சுடுகாட்டு தரவை, அட்டத்தீவு தரவ ,ஊருக்கு கிட்ட இருக்கும் அனைத்து படுவைகளுக்கும் போய் மாயவலையில்

மணல பிடிப்பதும் மறக்கமுடியாத நினைவுகள். தரவைகளில் மாரி காலத்தில் தங்கும் மாடுகளை திரத்தி மாட்டு மயிரால் தடம் செய்து கண்ணி குத்தி குருவிகள், பிடிப்பதும் எமது ஊரில் நாம் ஈடுபாடுடன் அனுபவித்தவைகளே.

ஊரில் ஏகப்பட்ட பக்தி சபைகள் இருந்த காலம் பின்னேரம் 3 மணிக்கு தொடங்கும் இறையிரக்கம். கூடுதலாக (நயின்ரி) 90s என்டு நாங்க கூப்பிடுற வயது போனவர்களே கோயில் நிறைய இருப்பார்கள். ஆறுகள், ஓடைகள் ஏல்லாம் மாரி வெள்ளத்தால நிறைஞ்சு இருக்கும். ஆத்த மறிச்சு சார் அடைச்சு சாமம் சாமமாய் மீன் பிடிச்சு சுட்டு சாப்பிடும் சுவையே தனி.
மாரி காலத்தில் வெள்ள றால் சீசன் . துறை முழுவதும் தோணிகள் நிறைய வெள்ள றால் எம்மவர்கள் ஆங்காங்கே தோணிகளில் றால் தெரிஞ்சுகொண்டிருப்பார்கள். சில நேரம் கள்ளாத்தில கலக்காம், கீளிமீன் ஓடையில கலக்காம், துறைக்கு சாய கொம்புதீவு நேரில கலக்காம் என்டு வலைகளை பிடுங்கி பாய அல்லோல கல்லோலப்படும் சந்தர்ப்பங்களும் நிறைவேறியதுண்டு.
வீட்டில இருக்கும் ஒரு சில அம்மாமார், சில அக்காமாரும் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப ஆறுகளில் பிடிறாலுக்காக இறங்கி றால் பிடிப்பதும் வழமையே.

மார்கழி முதல் ஞாயிற்றுக்கிழமையே பூசையில பாதர் கரோல் பாட்டுக்கு பொறுப்பா பாடகர் குழாம அறிவிச்சு பாட்டுப்பழக சொல்லுவார். அன்றிலிருந்து பின்னேரத்தில் பாட்டுப்பழக நேசறி, அருள்மாரி மண்டபத்தில எல்லாரும் ஒன்றுசேருவோம். மார்கழி 24ம் திகதி இரவு அமளிதுமளியான ஆய்த்த வேலைகளோடு தொடங்கும் கரோலுக்கு வெள்ள , சிகப்பு நிற உடுப்போடு பொடிகளும், பொம்புளப்பிள்ளைகளும் ,பெற்றோல் மெக்ஸ் பிடிக்க கொண்சன் அண்ணன், பிறேமன் அண்ணன் இவர்களோடு ஆய்தமாக இருப்போம். சாம பூச முடிய ,அஞ்சாறு பாட்டுக்கு கோயில் போட்டிக்கோவில போடுற ஆட்டம் இருக்கே சட்டப்படிதான்.

மாரி ,மழ வெள்ளம் ஊரில் பல இடங்களை நிறைத்திருந்தாலும் ஒரு வீடு விடுபடாமல் பாலன் பிறப்பு செய்தியை மகிழ்வோடு அறிவித்த அந்த மறக்கமுடியாத நினைவுகள் .அந்த காலத்தில் காதல் ஜோடிகள் சந்திப்பதை ரேண் என்று நாங்க குறிப்பிடுவது வழமை. கரோல்,ஒளிவிழா, ஒளி இரவு போன்ற நிகழ்வுகளை சாக்காக பயன்படுத்தி பல காதல் ஜோடிகள்(ரேண்) சந்திப்பதுண்டு. கரோல் போய்கொண்டிருக்கும் போது தீடிரென காணாமல் போய், மறைஞ்ச காதல் ஜோடிகள் தத்தமது வீடுகளில் பிடிபட்டதும் உண்டு. 24ம் திகதி சாம பூசைக்கு முதலும், பூச முடிஞ்ச பிறகும் ஊரில கரோல் போவோம். எல்லா வீடுகளிலும் இல்லாவிட்டாலும் சில வீடுகளில் கரோல் குழுவுக்கு சிற்றுண்டிகளும், தேனீர் விருந்துபசாரமும் வழங்கப்படுவதும் வழமையே. 24ம் திகதி பாலன் கொட்டில் வீடுகளில் வைப்பதற்காக தோணிகளிலும், சைக்கிளிலும் மின்னிமெறிஞ்சான் பக்கம் போய் சாத்தாவாரி, சவுக்கு, கீரி வெட்டிக்கொண்டு வந்து பாலன் கொட்டில் வைப்பதும், குப்பையில கிட்கிற பழைய பெற்றிகள எடுத்து, கொட்டில்ல போய் ஐஸ் பெட்டி ஆணி 2 ,3 வாங்கி பலகயில வச்சு அடிச்சு பல்பு எரியச்செய்வதும் மறக்கமுடியாத நினைவே.

ஊரில கரோல் முடிஞ்ச கையோட பள்ளமடு, மொங்கானா குளம், புலக்காடு ,எமில்ரன் அண்ணன்ர கமம், சன்னார், ஈச்சளவக்க, பெரியமடு, சவிரிகுளம், கோவிற்குளம், புதுக்குளம், கூராய், ஆத்திமோட்ட, கள்ளியடி, கத்தாளம்பிட்டி, கட்டாடி வயல், இலுப்பக்கடவ, படகுதுற, அந்தோனியார் புரம், தேத்தாவாடி, மூனாம்பிட்டி, பாலியாறு, தேவன்பிட்டி இப்படி ஒரு இடம் விடாம 27ம் திகதி மட்டும் கரோல், கரோல் என்டு திரிஞ்ச காலம் எனி வருமா?. 27ம் திகதி நடக்கும் ஒளி இரவு நிகழ்ச்சி இரவு 7 மணிக்கு தொடங்கி சாமம் செல்லும் முடிய ,யானைக்கு வால் வைத்தல், ரொம்போலா, தலயன சண்ட, மெழுகுதிரி கொழுத்துதல், போத்தலுக்கு வளையம் போடுதல், பாசல் பரிமாறுதல், சங்கீத கதிரை, நற்செய்தியாளர் நான்கு, கோல் சூட் போடுதல், நெற்போல் சூட் போடுதல், பாசல் எடை பார்த்தல், பாவைக்கு பெயர் வைத்தல், கிறிஸ்மஸ் மரம், கரம் போட், மாவுக்குள் பணம் தேடுதல் இப்படி எக்கச்சக்க விளையாட்டுக்கள் நடப்பது எங்கட ஊரில் களைகட்டும்.

மார்கழி பிறந்தவுடனே,எங்கட ஊரில் உள்ள அண்ணாவிமார்களினால் தொடங்கும் நாடக பழக்கங்கள், நாட்டுக்கூத்துகள், வில்லுப்பாட்டு, கோலாட்டம், தாள லயம், என்ற ஏகப்பட்ட நிகழ்ச்சிகள். இவையாவும் 29ம் திகதி நடக்கும் பங்கு ஒளிவிழாவுல அரங்கேறுவதற்காகவே. இதைவிட அயலிலுள்ள ஊர்களில் இருந்தும் எமது ஊருக்கு ஒளிவிழாவுக்கு நிகழ்ச்சி கொண்டுவரும் அயல் ஊரவர்களையும் அவர்களது நிகழ்ச்சிகளையும் பார்த்து இரசித்து அதப்பற்றி கதைகள் சொல்லுவதும் நாம் எமதூரில் செய்தவைகளே. ஊரிலிருந்தது ஒரே ஒரு பேக்கரி அதால நத்தாருக்கு கேக் அடிச்சு பேக்கரியில குடுக்க சனங்கள் முந்தியடிப்பதும், குடுத்த கேக் சிலவேளைகளில் கருகி பேக்கரிக்காரர் முட்டைக்கும், மாஜரினுக்கும் ஓடுப்பட்டுத்திரிஞ்சு விடியப்புறம் திரும்ப தாங்க கேக் அடிச்சு குடுத்ததும் உண்டு. வெளியில ஆயிரம் சலூன் இருந்தாலும் ஊரிலுள்ள றவீந்திரன் அண்ணன், யேசசதாசன் அண்ணன், அன்ரனி அண்ணன் இவங்கட கையாலதான் முடி வெட்டி சேவ் எடுக்க நாங்க முந்தியடிப்போம், அதேபோல தான் பாதிமாமா ,தேவன் அண்ணன், றாஜன் அண்ணனிடம் ரவுசர், சேட் தைக்காட்டி எமக்கு பத்தியப்படாது. சில வேளைகளில் தையலுக்கு நிறைய உடுப்புகள் இருந்து பூசைக்கு மணியடிக்க மட்டும் பாதிமாமாட ரெயிலர் கடையில நின்டு வாங்கி கொண்டு போன சந்தர்ப்பங்களும் உண்டு.

இதே போலதான் புதுசா தைச்ச உடுப்புகள சாமம் சென்றாலும், எந்த நேரம் என்றாலும் அச்சு பிசகாம அயன் பண்ணி தருவாங்க பூபால் அண்ணனும், ராதா அண்ணனும்.
எங்கும் இல்லாதவாறு ஊரில வீடுகள் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமா இருப்பத போலதான் நாங்க கொண்டிருந்த உறவுகளும், பரஸ்பரங்களும். வேலியால என்ன கறி இன்டைக்கு ? எண்டு கேட்டு காய்ச்சின கூறிய குடுத்து ,வாங்கி, சாப்பிட்டு வாழ்ந்த அந்த ஒப்பற்ற இனிய வாழ்வும் ஊரில நாங்க அனுபவிச்சதெல்லாம் 1999 இடப்பெயர்வுக்கு முன்னரே ஆகும்.

அன்று இந்த நாள் ஏன் வந்தது?

1999ம் ஆண்டு ஆனி மாதம் வவுனியா மன்னார் பிரதான வீதியினூடாக இராணுவம் முன்னேறி உள்நாட்டு போர் உக்கிரமடைந்து போர் மேகங்களால் நிறைந்து மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச கிராம மக்கள் ஒவ்வொன்றாக இடம்பெயரந்து கொண்டிருந்தனர். அடம்பன் பிரதேச அனேக கிராம மக்கள் இடம்பெயர்ந்து மடுக்கோவிலிலும் ,சில கிராம மக்கள் எங்கள் ஊரிலும் தஞ்சமடைந்து ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், ஏனைய பொது இடங்களிலும் தங்கியிருந்தனர். அக்காலப்பகுதியில் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம்பெயர்ந்து எமது ஊரில் அதிகளவான மக்கள் வசித்து வந்தனர்.

விமான குண்டுவீச்சுக்கள், எறிகனை வீச்சுக்கள் என்பவற்றின் பேரிரைச்சல்களும் , கருமேகங்களும் எமது ஊரை சூழ்ந்து நிசப்தத்தை நிர்மூலமாக்கிய ரணங்களாக நாட்கள் நகரந்துகொண்டிருந்தது .
"உடனடியான ஊரை விட்டு எழும்புங்க, ஆமி மூவ் பண்ணி வாறான் ஊரவிட்டு போங்க " என மாவட்ட தளபதி லக்ஸ்மன் அண்ணன் மற்றும் அந்த காலத்தில் பொறுப்பாளராக இருந்த செங்கோட்டை அண்ணன் அவர்களும் எமக்கு பொதுக்கூட்டத்தில சொல்லிச்சென்றிருந்தனர்.

அந்த காலகட்டத்தில் அருட்பணி ஜெயபாலன் அடிகளார் எமது ஊரின் பங்குத்தந்தையாக இருந்தார்."எல்லாரும் உங்க உங்க பாதுகாப்ப தேடிக்கொள்ளுங்க ஊரில ஒரு ஆள் இருந்தாலும் நான் இருப்பன் ஊர விட்டு போகமாட்டேன் " என்றவரிடம் ,"நாங்க ஊர விட்டு வெளிக்கிட மாட்டோம் நடக்கிறது நடக்கட்டும் " என்ற பதிலை பாதரிடம் ஊர் ஒருமித்தவர்களாக சொன்னோம்.
ஊர் சனங்கள் அனேகர் அடைக்கலமாதா கோவிலிலும், சந்தியோகுமையோர் கோவிலிலும் நிறைந்திருந்தனர்.

சில குடும்பங்கள் தத்தமது விருப்பத்திற்கிணங்க அருகில் உள்ள கள்ளியடி, முழங்காவில் போன்ற இடங்களுக்கு சென்றுமிருந்தனர். 28/6/1999 செல்வின்ர பிறந்த நாள் அன்று திரவுகுளத்தில் இருந்த அருள்மாரி மண்டப தவனேசன் அண்ணனின் கடையிலும், தங்கப்பொன் அக்காவின் கடையிலும் கொத்துரொட்டி வாங்கி சாப்பிட்ட நினைவுகள். ஊருக்கு மேலாக எறிகணை செல் வீச்சுக்கள் போய்கொண்டிருந்த சத்தமும் ,அவை ஊரை சுத்தி விழுந்து வெடிச்ச சத்தமும் இன்னும் பயத்தை உண்டுபண்ணியது. இடைவிடாத செல் மழையால் ஊரே அல்லோலகல்லோலப்பட்ட நாட்களை எளிதில் மறக்க முடியாது.

காலையில் இருந்து பின்னேரம் வரைக்கும் தொடரும் செல்வீச்சுக்களுக்கு மத்தியிலும் பள்ளமடுவுக்கு முழுக நடந்து போனோம் .நெல்லுச்சங்க தரவையில செத்துக்கிடந்த மாடுகள் கொஞ்சநஞ்சமில்ல, அவைகளை கடந்து போய் குளத்தில முழுகிற்று வந்தோம். கையில் றேடியோவுடன் கோஸ்டி கோஸ்டியாக லண்டன் பி பி சீ செய்தியின் மாணிக்கவாசகரின் இலங்கைக்கான செய்தி கண்ணோட்டத்தை ஆவலாக கேட்ட அந்த நாட்கள் மறக்கமுடியாத ஞாபகங்கள். நாங்கள் செய்த புண்ணியம் இவ்வளவு செல் மழை பொழிந்தும் ஒன்றுகூட ஊருக்குள்ள விழேல. இவ்வாறு நாட்கள் நகர்ந்தன, என்ன நடந்தாலும் ஊரவிட்டு போறேல நடக்கிறது நடக்கட்டும் என்ற வைராக்கியத்தோடு இருந்த அந்த நேரம் நடந்த துன்பியல் நிகழ்வு எமது ஊரின் வரலாற்றையே மாத்திப்போட்டது. 29/6/1999 அன்று இரவு மாதா கோயில் வக்கடியில ஏதோ பிரச்சினையாம் எண்டு கேள்விப்பட்டோண சூட்டிமாமி வீட்ட இருந்த நான் கோட்வினோட மாத கோயில் வக்கடிக்கு ஓடிப்போய் பார்த்தா அங்க தள்ளுமுள்ளுப்பட்டு வாய்த்தர்க்கம் நடந்துகொண்டிருந்தது.

விசயம் பாதர் ஜெயபாலன் அவர்களுக்கு எட்டி அவர் அறவீட்டில் சம்மந்தப்பட்டவர்களோடு கதைச்சுக்கொண்டிருக்கும் அந்த நேரத்தில யாரும் எதிர்பாராத விதமாக செல் வீச்சு கூவிக்கொண்டு போய் வெடிச்ச சத்தத்தோடு ஊரின் அமைதியை குலைத்து மக்களின் அலறல் சத்தம் அந்த இரவில் வானை பிளந்தது. "சந்தியோகுமையோர் கோவில்ல விழுந்திற்றாம் எண்டதும் விழுந்தடிச்சு ஓடி போய் சங்ககடைக்குகிட்ட வரும்போது அடுத்த செல் கூவிக்கண்டு வந்து விழுந்து வெடிச்சது. அதிலிருந்து சந்தியோகுமையோர் கோவில் வரை ஒரே புகைமண்டலமும் மர இலைகளும் தூசி நிறைஞ்சு வெடிமருந்து வாடையும் எங்கும் நிறைந்திருந்தது.கோயில்ல படுத்திருந்த சனத்திர மரண ஓலமும், அலறலும் சொல்லி மீளாது. ஓடிப்போய் வீட்டு வாசல்ல ஏற வாசல் நிறைய ரத்தம் கிடந்தது ஒருவரையும் காணேல யாருக்கு என்ன நடந்திருக்கோ எண்டு அலறியடிச்சு அங்கலாய்த்த போது "தம்பி உங்கட அக்காக்கு செல்பட்டு கொண்டு போறாங்க எண்டு பக்கத்து வீட்டு அண்ணன் சொல்லவும் அங்கிருந்து சந்தியோகுமையோர் கோயில் வாசலில் நிண்டு நன்பன் ஜோண்ராஜ்ச கூப்பிட்டன்.

அன்று நல்ல நிலவு வானத்தில் செல் தூசியும் புகையும் எல்லா இடத்திலும் நிறைந்திருந்தது ,கோயில்ல இருந்த சனம் அபயக்குரல் எழுப்பியவாறு பிள்ளைகள் ,பெற்றோர்கள், உறவினர்கள என ஒருவரை ஒருவர் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள். அடுத்த செல் வர முதல் கோயில்ல நிண்ட சனத்த பள்ளிக்கூடத்திற்கும் கோயிலுக்கும் இடையில் இருந்த மதிலால் ஒவ்வொருவராக தூக்கி விட்டுக்கொண்டிருந்தோம்.

அந்த நேரத்தில் யாரோ அழும் குரல் கேட்டது ,அங்க போய் பாக்க பள்ளிக்கூட மெயின் கேற்றுக்கு கிட்ட றஞ்சினி அழுதுகொண்டிருந்தாள். யாரோ ஒருவருடைய உடம்பெல்லாம் மண் மூடி மூச்சுப்பேச்சின்றி அசைவில்லாமல் குப்பற கிடந்தது. “யார் புள்ள இது ஏன்று கேட்கவும் எங்கட தம்பி என்றவாறே அழுதார் . அங்கு வந்த எட்மன் சேரும் அவனை பார்த்து அழுதுகொண்டிருந்தார்.

நானும் ,ஜோண்ராஜும் அதில வந்த நிசாந்தனும் ,அவன தூக்கிக்கொண்டு போய் பள்ளிக்கூட பின் கேற்றடியில இருந்த பூவரசு மரத்துக்கு கீழ வளத்தினோம். காயப்பட்ட ஆக்கள அறவீட்டுக்கு கொண்டுவரட்டாம் பாதற்ற வேன் நிக்குது எண்டு சொல்லவும் அந்த இடத்தில வந்த பெரியவர் ஒருவருடம் இவன தூக்கிக்கொண்டு போய் வேனில ஏத்துறீங்களா? என்றேன் எப்படி நான் இவன தூக்கிறது ? வெள்ள சேட்டோட நிக்கிறன் ரெத்தம் பிரண்டிடும் என்றவரை “ இதில நிக்காம போங்க மாமா “ என்று பேசி அனுப்பினான் ஜோன்ராஜ். நிசாந்தனையும் ,எட்மன் சேரையும் சொன்னேன் தூக்கிக்கொண்டு அறவீட்ட போங்க இல்லாட்டி கடக்கரைக்கு கொண்டுவாங்க தோணியில ஏத்துவம் எண்டிற்று ஜோண்ராஜ்சோடு கோயிலுக்க ஓடினேன். கோயில் வளவு முழுவதும் புகையும் சனத்திர பாய் , தலவணிகள் ,வெற்சீற்றுக்கள், எல்லாம் திக்குதிக்கா கிடந்தது, எல்லா இடமும் சாமன்சட்டுக்களாகவே காணப்பட்டது.

பக்கத்து வீட்ட இருந்த கேணி ஆச்சி காயப்பட்டு செத்திற்றா எண்டு நினைச்சு விடிய அதபற்றி பாப்பம் எண்டிற்று கோயில் விறாந்தையில காயப்பட்ட ஆக்கள வளத்தினோம். புஸ்பசீலி மாமியும் அங்கே வளர்த்தப்பட்டிருந்தார்.முத்தன் மாமாட கால் காயத்த பிறைம் குமார் அண்ணனும், றெஜி அண்ணனும் வெற்சீற்ற கிழிச்சு கட்டினார்கள். சிறில் பப்பாட காயத்த ஜோண்ராஜ் சுத்தி கட்டினான். பக்கத்தில காயப்பட்டு கிடந்த டெய்சி ரீச்சற்ற முதுகில நகுலன் கைவைக்க “யாரிது?என்டு டெய்சி ரீச்சர் கேட்டது “ இன்னும் நினைவில உள்ளது. அது நான் நகுலன் அக்கா என்டிற்று ரீச்சற்ற இடுப்பு காயத்த சுத்தி நகுலன் கட்டினான். ரெங்கும் மயான அமைதி நிலவியது, வெத்தான ஆக்கள் யாருமே இல்ல , கோயில் வளவு வெறிச்சோடி போயிருந்தது. சரியான வத்து நேரம் ,சுடுகாட்டு ஓடையில கிடந்த ஜோண்ராஜ்சிட பெரிய தோணிய போய் கஸ்டப்பட்டு தக்குமுக்குப்பட்டு தள்ளி சவுக்கால பிட்டிக்கு இழுத்துக்கொண்டு வந்தோம்.

கோயில்ல கிடந்த தலவணிகள கொண்டந்து தோணிக்க வடிவா மெத்தபோல அடிக்கி காயப்பட்டவங்கள ஒவ்வொருவராக காவு தடி செய்து தூக்கிக்கொண்டு வந்து தோணிக்க வளத்தினோம். எல்லாரயும் தோணிக்க வளத்திற்று வேறு யாராவது காயப்பட்ட ஆக்கள் கிடக்கிறாங்களா என்டு கோயில சுத்தி ஒருக்க பாப்பம் எண்டு கோயில் வளவ சுத்தி வரும்போது யாரோ ஒருவருடைய உருவம் சந்தியோகுமையோர் கோவில் அறவீட்ட தெரிஞ்சது. ஆற்றா அது என்டு கிட்ட போய் பாத்தோம்,அது சத்தி அப்புட பெரியண்ணண், வாய் பேச முடியாதவர். அவருக்கு கிட்ட சத்தியப்புவும் படுத்திருந்தார். அவர்களை யாரும் அந்த நேரத்தில் கையேற்கவோ, தங்களோடு கூட்டிக்கண்டு போகவோ இல்லை, அந்தரவழியில் அவர்களை விட்டு சென்றிருந்தனர்.

தோணிக்க இடமில்ல, விடிய வந்து இவங்கள ஏத்துவம் எண்டிற்று ,கிடந்த தலவணிகள அடுக்கி ரெண்டுபேரையும் வாழத்திப்போட்டு அவங்கள சுத்தி தலவணிகளால மறச்சு வெற்சீற்றால போத்தீற்று படுங்க விடிய வந்து ஏத்திறம் எண்டிற்று வந்து தோணிய தள்ளினோம். வத்தால தோணி மிதக்காம கஸ்டப்பட்டு தள்ளி கொடுவாப்பள்ளம் வரை வந்தோம். நானும் நகுலனும் தோணியில் காயப்பட்டவங்கள ஏத்தி வர மற்றவங்க சுடுகாட்டு தரவயால நடந்துபோனாங்க. அப்ப வெறும் மரக்கல் தான். நகுலன் தாங்க நான் அணியத்தில இருந்தேன். “யார் ஆக்கள் ? எங்க போறீங்க ? “எண்ட உரப்பலுடன் ரோச் லைற் முகத்துக்கு வந்தது ,

அது நாங்க ,காயப்பட்ட ஆக்கள கொண்டு போறம் எண்டு கனத்த மனதுடன் பல ஏக்கங்களுடன் பிறந்த மண்ணை விட்டுப்பிரிந்து கள்ளியடி நோக்கி தாங்கினோம். 1999ம் ஆண்டு எமது ஊரில் நடந்தேறிய எறிகணை வீச்சின் துன்பியல் நிகழ்வின் காரணமாக ஊரில் இருந்து ஒட்டுமொத்த கிராம மக்களும் இடம்பெயர்ந்தனர். சிலர் தரை மார்க்கமாகவும் கடல் வழியாகவும் அயல் கிராமங்களான கள்ளியடி ,இலுப்பைக்கடவை, தேவன்பிட்டி போன்ற ஊர்களில் தஞ்சம் அடைந்திருந்தனர். அவ்வாறே 30/6/1999ம் ஆண்டு வீடுகளிலும், ஆலயங்களிலும் தங்கியிருந்த மக்களில் சுமார் 99 குடும்பங்கள் கடல்வழியாக 32 தோணிகளில் மன்னார் பள்ளிமுனை கரையை அடைந்தனர். அல்லோல கல்லோலப்பட்டு உயிரை மட்டும் காப்பாற்றிக்கொள்ள வெறும் கையோடு பள்ளிமுனை கரையை அடைந்த எமது மக்களுக்கு பள்ளிமுனை பங்குத்தந்தை மற்றும் மக்களால் சமைத்த உணவு மற்றும் உடுத்த உடைகள் என்பன வழங்கப்பட்டது.

பாராளுமன்ற.உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் மக்களை தேடி ஆவலாய் வருகைதந்து இன்னலுற்ற மக்களுக்கு உடுத்த உடைகளை வழங்கியிருந்தார். 1/7/1999 ம் ஆண்டு பேசாலையில் உள்ள நலன்புரி நிலையத்திற்கு அரசாங்க அதிபர் மூலமாக மக்கள் கொண்டுசெல்லப்பட்டார்கள். அங்கே வங்காலையை சேர்ந்த சோதி என அறியப்படுகிற கிராம சேவையாளர் நலன்புரி நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றியிருந்தார் .அங்கே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 3 நாட்கள் சமைத்த உணவு எமக்கு வழங்கப்பட்டு நிரையான கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டோம். ஒரு ஊருக்குள்ளே பல கட்டுப்பாடுகளோடு, வரையறைகளோடு, ஒரே சமூகமாக வாழ்ந்த நாம் பல்வேறுபட்ட சமூகங்களை ,பல்வேறுபட்ட சமூகசீர்கேடுகள் காணப்பட்ட பல சமூக மக்களோடு வாழ நேர்ந்தது. அதிகளவான கிளிநொச்சி மாவட்ட மக்கள் இருந்த இடத்தில் நாங்கள் 10:10 அளவுடைய குடிசைகளில் சுமார் 400 குடும்பங்களை விடத்தல்தீவை சொந்த இடமாக கொண்டவர்கள் நலன்புரி நிலையத்திலும் சுமார் 75 குடும்பங்கள் தத்தமது வசதிகளுக்கு ஏற்ப மன்னாரிலும் வாழ்ந்தோம்.

மலசல கூட வசதிகள், கல்வி வசதிகள், சுகாதார வசதிகள் உட்பட அடிப்படை வசதிகள் இல்லாத அந்த முகாம் வாழ்க்கை எம் மக்களுக்கு துயரை வருவித்திருந்தது. எமது இடப்பெயர்வை கேள்விப்பட்ட எமது ஊரில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் எம்மை தேடி வந்தமை மனமகிழ்வை வருவித்திருந்தது. அந் நேரத்தில் பேசாலை சமூக மக்களால் உடுத்த உடைகள் எமக்கு வழங்கப்பட்டமையும் எளிதில் மறந்துவிட முடியாது. அடுத்தநாள் 2/7/1999 காலை மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் பேசாலை நலன்புரி நிலையத்தில் எம்மை வந்து சந்தித்தார். அந்நாட்களில் மன்னார் மாவட்ட கதாதோலிக்க நிறுவனமான வாழ்வுதய நிறுவனம் எமக்கு உதவியிருந்தார்கள். UNHCR நிறுவனம் சமைத்த சாப்பாட்டு பொதிகளை வழங்கியதுடன் சிங்கள சகோதர மொழி பேசும் இளைஞர் மன்றத்தினர் எமக்கு உடைகளை வழங்கியிருந்தனர்.

எமது கிராமத்தில் நாம் கொண்டிருந்த அமைப்புகளையும், சங்கங்களையும் இடம்பெயர்ந்த நிலையிலும் கொண்டு நடாத்தியிருந்தோம் அந்த வகையில் விடத்தல்தீவு மேற்கு மீனவ கூட்டுறவு சங்கம், மன்/தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய பாடசாலை நிர்வாகம், தேசிய இளைஞர் மன்றம், விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக மற்றும் ஏனைய சங்கங்கள் அமைப்புகளை ஆரம்பித்திருந்தோம்.

வாழ்வாதாரமும், தொழில் துறையும்.

எமது சீவனோபாயம் கடற்றொழில் எமது தொழில் உபகரணங்கள் யாவும் கைவிடப்பட்ட நிலையிலேயே நாம் வைத்திருந்த தோணிகளில் மன்னார் நோக்கி இடம்பெயர்ந்திருந்தோம் .பள்ளிமுனை துறையில் எமது தோணிகள் யாவும் இலங்கை கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. எமக்கான தொழில் வசதிகள் பேசாலை நலன்புரி நிலைய ஆரம்ப நாட்களில் இல்லாது அன்றாட சீவியத்தை போக்குவதற்காக மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியிருந்தோம்.

யுத்த காரணத்தால் பாதுகாப்பு படையினரின் கெடுபிடிகள் நிறைந்த காலம், யாரும் முகாமை விட்டு வெளியே செல்ல முடியாத நாட்கள், பேசாலை நலன்புரி நிலையத்தில் அடிக்கடி நிகழும் சுற்றிவளைப்புகளும், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யபாபடுவதும், பொலிசாரின் சோதனை நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெற்றதால் எமது சீவியத்தை போக்குவதற்கு நாங்கள் பட்ட வேதனைகளும், துன்பங்களும் சொல்லிமீளாதவைகள். கைக்குழந்தைகள் ,சிறுவர், இளைஞர், முதியவர்கள் என பல்வேறுபட்ட எம்மவர்கள் ஒருபோதும் அனுபவித்திராத அடைந்திடாத துன்பதுயரங்களை முகாம் வாழ்க்கை எமக்கு கற்றுத்தந்தது. எமது அன்றாட சீவியத்திற்காக நடுக்குடா பக்கம் சென்று கரைவலை இழுக்க கூலிக்கு சிலர் சென்றிருந்தனர், சிலர் வீடுகள் மேய்வதற்கு கூலிக்கு சென்றிருந்தனர், சிலர் மலசலகூடம் நிரம்பி அதனை மீள எடுப்பதற்கு முகாமிற்கு வரும் கொள்கலன் வண்டிக்கு பாதையமைத்து தகரம் போடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர், இன்னும் சிலர் பேசாலை வாழ் மக்கள் சிலருடைய வீட்டு வேலைகளுக்கு கூலிக்கு சென்றும் வந்திருந்தனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட கூலிவேலைகளை செய்து எமது நாளாந்த சீவியத்தை போக்கிவந்த எமது மக்களுக்கு எமது மீனவ கூட்டுறவு சங்கத்தின் அனுமதியோடு மன்னார் புனித டிலாசால் சபை அருட்சகோதரர்களால் 8 வெளியிணைப்பு இயந்திரங்கள் மானிய அடிப்படையில் எமது மண்ணின் மைந்தனும் டிலாசால் சபை அருட்சகோதரருமான ஸ்ரனிஸ்லொஸ் அவர்களது முன்னிலையில் வழங்கப்பட்டது. மேலும் தொழில் செய்வதற்குரிய வலைகள் மானிய அடிப்படையில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது. எமது மீனவர்கள் பள்ளிமுனை துறையூடாக 1999ம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து 2000ம் ஆண்டுவரை தொழிலுக்கு சென்றுவந்தனர். அதன் பின்னர் மன்னார் பாலத்தடி ஊடாக பனங்கட்டுக்கொட்டு சங்கத்தின் அனுமதியோடு 2000ம் ஆண்டு தொடக்கம் 2002ம் ஆண்டு வரை தொழிலுக்கு சென்றுவந்தனர்.பின்னர் கோந்தப்பிட்டி துறையின் ஊடாக பல்வேறுபட்ட அசம்பாவிதங்களையும் இடஞ்சல்கள், இடையூறுகளையும் சந்தித்தவர்களாக கடந்த 2002ம் ஆண்டில்

இருந்து இன்றுவரை தொழிலுக்கு சென்றுவருகிறார்கள்.

பாடசாலையும் கல்வியும்....

இடம்பெயர்ந்த நிலையில் சுமார் *400* குடும்பங்களை கொண்ட நாம் எதை இழந்தாலும் எமது கல்வியை இழக்கக்கூடாது என்ற சிந்தனையில் எமது பிள்ளைகளின் கல்வியை பேசாலை பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் அவர்களது அனுமதியுடனும் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய நிர்வாக சபையின் அனுமதியுடனும் ஆலய வளாகத்தில் எமது பாடசாலையின் ஆசிரிய வளத்தை கொண்டு மன்னார் *ADS* திருமதி கணபதிப்பிள்ளை அவர்கள் வடமாகாண கல்வி பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுத்தந்த அனுமதியுடன் அங்கே தொடர்ந்தோம். உள் நாட்டு யுத்தத்தினால் மாந்தை மேற்கு மடு வலய பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையில் இராணுவம் கைப்பற்றியிருந்த தட்சனா மருதமடு பாடசாலையில் இருந்த ஒரு தொகுதி தளபாடங்களை மடு வலய கல்வி அதிகாரிகளின் அனுமதியோடு எமது பாடசாலையில் கல்வி கற்பித்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களான திரு.ஜேம்ஸ் சுதாகரன் மற்றும் திரு.பொன்ராசா ஸ்ரிபன் ஆகியோர் மன்னார் கச்சேரிக்கு சொந்தமான லொறியில் சென்று தளபாடங்களை கொண்டுவந்திருந்தார்கள்.

அந்த காலப்பகுதியில் இடம்பெயர்ந்த நிலையிலும் எமது பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியை எமது மக்களின் நிதிப்பங்களிப்பிலும் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மண்ணின் மைந்தனுமாகிய செல்வம் அடைக்கலநாதன் அவர்களது நிதிப்பங்களிப்பினூடாகவும் மிக விமர்சையாக நடாத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் *2001*ம் ஆண்டளவில் மடுவலய கல்வி திணைக்களம் எமக்கென தனியாக பாடசாலை அமைக்கும் திட்டத்தை முகாமில் ஆரம்பித்து நடவடிக்கைகள் மேற்கொண்ட பொழுது சிறிது காலத்திற்கு பேசாலை பற்றிமா பாடசாலையில் மாணவர்களும் சில ஆசிரியர்களும், சென் மேரீஸ் பாடசாலையில் மாணவிகளும் சில ஆசிரியர்களும் சென்று கல்வி கற்கவும், கற்பிக்கவும் பணிக்கப்பட்டோம். அதன் பின்னர் எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் என்ற பெயரில் எமக்கென தனியாக பாடசாலை பேசாலை நலன்புரி நிலையத்தில் அமைத்து தரப்பட்டது.

அந்த காலப்பகுதியில் இலங்கை நாடு நழுவிய கல்விச்சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்து அதிபர் விஸ்வராஜா அவர்களது தலைமையில் பேசாலை நலன்புரி நிலையத்தில் இருந்து சென்றிருந்தோம் அந்த கல்வி சுற்றுலா தென் இலங்கையின் பல முக்கிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்ததுடன் குறிப்பாக இலங்கை பாராளுமன்றத்தை பார்வையிடும் வாய்ப்பாகவும் அமைந்திருந்தது மேற்படி வாய்ப்பை எமக்கு வழங்கி பாராளுமன்றத்தில் எமக்கான மதிய உணவையும் வழங்கிதந்த பெருமை எமது மண்ணின் மைந்தனும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களையே சாரும்.

இன்னும் பேசாலை நலன்புரி நிலையத்தில் இயங்கிய எமது பாடசாலை தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய மாணவர்களை அவ்வப்போது மடு கல்வி வலயம் சார்பாக நடைபெறும் ஆங்கில தின போட்டிகள், தமிழ் தின போட்டிகள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றுக்கு ஆசிரியை திருமதி இம்மானுவேல் அன்னமலர், ஆசிரியை மாக்கிறற், ஆசிரியை மேரி சுஜாதா ஆசிரியை திருமதி சாள்ஸ் ஜோசப் ,மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஜேம்ஸ் சுதாகரன் ஆகிய ஆசிரியர்கள் கொண்டுசென்று பல சான்றிதழ்களையும், வெற்றிகளையும் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

முகாம் வாழ்க்கையும் விளையாட்டும் .

இடம்பெயர்ந்து பொழுதுபோக்குகள் அற்று அடிக்கடி நிகழும் சுற்றிவளைப்புகளுக்கும், கைதுகளுக்கும் மத்தியில் வாழ்ந்த எமக்கு பின்னேரங்களில் முகாம் நுழைவில் அமைந்த தவரை பற்றைகளை துப்பரவு செய்து விளையாடும் அனுமதி கிடைத்தது. எமது முன்னாள் ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள், நலன்விரும்பிகளின் உந்துதலுடன் ஐக்கிய விளையாட்டு கழக நிர்வாகத்தை அமைத்து மன்னாரில் நிகழ்ந்த உதைபந்தாட்ட மற்றும் கிரிக்கட் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றியதுடன், எமது விடத்தல்தீவு பகுதிகளில் நடைபெற்ற போட்டிகளுக்கு கடல்வழியாக படகுகளிலும், தோணிகளிலும் சென்று விளையாடி வந்த அந்த நாட்கள் என்றும் பசுமையே.

ஆன்மீக வழிபாடுகளும் ஆலய விழாக்களும்.

மன்னார் மறைமாவட்ட கிராமங்களில் இறைபக்தியிலும், இறைவிசுவாசத்திலும் சிறந்துவிளங்கிய எம்மவர்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் தமது விசவாச ஆன்மீக வாழ்க்கையில் தளர்வின்றி வாழ்ந்தனர். அந்த நாட்களில் முகாமில் இரு சிறிய கொட்டகையில் அமைந்த அந்தோனியார் ஆலயம் அங்கு ஏற்கனவே அகதிகளாக இருந்த மக்களால் பேணப்பட்டிருந்தாலும் எமது மக்களின் வருகைக்கு பிற்பாடு அந்த சிற்றாலயம் சிறப்பு பெற்றது என்றால் அது மிகையாகாது. ஊரில் இருந்தபோது எவ்வாறு ஆலயத்தை முன்னிலைப்படுத்தி ஆன்மீக காரியங்களில் சிறந்து விளங்கினது போலவே சிறியவர் முதல் பெரியவர்

வரை நேரம் தப்பாமல் அடிக்கடி சென்று சிற்றாலயத்தில் வழிபட்டனர். ஊரில் கொண்டிருந்த அனைத்து பக்தி சபைகளையும் முகாமிலும் நடைமுறைப்படுத்தி மாணவர்களுக்கு மறைக்கல்வி வகுப்புகளை நடாத்தியதுடன் இறை இரக்க பக்தி செபமாலையையும் நாள் தவறாமல் சொல்லியிருந்தோம். ஊரில் நாள் பூசை தவறாதவர்கள், ஞாயிற்றுக்கிழமை பூசை தவறாதவர்கள் இருந்தும் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்திற்கு மணல் பாங்கான இடத்தால் நடந்து செல்லுவது முதியவர்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு முடியாமல் போனதால் முதியோர் வீட்டிலே இருக்க வேண்டி இருந்தது. முகாமில் எம்மை தரிசிக்க வந்த ஆயர் அவர்களிடம் ஆசிரியர் யோ.கியோமர் பயஸ் அவர்கள் சிற்றாலயத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுப்பது சம்மந்தமான கோரிக்கையை முன்வைத்திருந்தார். அதன் அடிப்படையில் ஆயர் அவர்களது அனுமதியோடு கிழமையில் 2 நாட்கள் முகாமில் அமைந்த சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு எமது முதியோரும் சிறியவரும் தமது ஆன்மீக தேவைகளை பூர்த்திசெய்திருந்தனர். மற்றும் எமது ஆலய திருவிழாக்களான ஆடி 25 மற்றும் புரட்டாதி 8 ஆகிய திருவிழாக்களை இடம்பெயர்ந்த நிலையிலும் சிறப்பாக சிற்றாலயத்தில் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் 2000ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தில் நடைபெற்ற மருதமடு மாதாவின் வருகையை முன்னிட்டு விசேடமாக இடம்பெயர்ந்த எமக்கு வழங்கப்பட நேரத்தின் அடிப்படையில் பிரமாண்டமான சிகரம் அமைத்து பேசாலை நலன்புரி நிலைய பிரதான வாயிலில் அதனை அமைத்து எமது விடத்தல்தீவு பங்கு சார்பாக அதனை நிறுத்தியிருந்தோம். அத்தோடு அமலமரி தியாகிகள் சபையின் உலக தலைவர்கள் கலந்துகொண்ட நிகழ்வும் எமது முகாமில் நடைபெற்றிருந்தது.

ஜோசப்வாஸ் நகருக்கு குடியேற்றம்.

இவ்வாறு பல்வேறுபட்ட அடிப்படை பிரச்சனைகளை எதிர்கொண்டு பல சமூகங்களுக்கு மத்தியில் வாழ்ந்த எமக்கு கிடைத்த மாபெரும் விடிவுதான் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் வளங்கிய மறைமாவட்டத்திற்கு சொந்தமான நிலப்பரப்பில் வாழ்வதற்கான இந்த மாபெரும் வாய்ப்பு. அதன் அடிப்படையில் தோட்டவெளி பகுதியில் மன்னார் மறைமாவட்டத்திற்கு சொந்தமாக அமைந்த அடர்ந்த காட்டு பகுதியில் விடத்தல்தீவை சொந்த இடமாக கொண்ட சுமார் 310 குடும்பங்களுக்கான காணி வழங்கப்பட்டு பகுதி பகுதியாக அவை துப்பரவாக்கப்பட்டது .

அந்நாட்களில் எமக்கான காணியை தோட்டவெளி பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி அ.செபமாலை அடிகளார் தலைமையில் அளந்து தரப்பட்டதுடன், சுமார் 50 குடும்பங்கள் முதன்முதலாக பேசாலை நலன்புரி நிலையத்தில் இருந்து தோட்டவெளி பகுதிக்கு 2001 ம் ஆண்டு 8 ம் மாதம் 30ம் திகதி குடியமர்த்தப்பட்டனர். மறுநாள் 1/9/2001 ம் ஆண்டு தோட்டவெளி பங்குத்தந்தையாக அருட்பணி கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் பொறுப்பேற்றிருந்தார். எமக்கான அளந்துதரப்பட்ட நிலத்தில் கிராம அபிவிருத்தி நிதியத்தினூடாக (RDF) 10:10 அளவுடைய குழாய் கம்பியிலான குடிசை வீடு தரப்பட்டது. அதற்கு UNHCR நிதியுதவிகளை வழங்கியிருந்தார்கள். பொது மலசலகூடங்கள், 11 குடிநீர் கிணறுகள் மற்றும் வீதி அமைப்பை கிராம அபிவிருத்தி நிதியம் வன்னி புணர்வாழ்வு அமைச்சின் நிதியினூடாக மேற்கொண்டிருந்தது இதனை எமது கிராமத்தின் அமரர் சு.வரப்பிரகாசம் அவர்கள் தலைமையேற்று நடாத்தியிருந்தார்.

அதன் பின்னரான காலப்பகுதியில் தனித்தனி குடும்பங்களுக்கான மலசல கூட வசதிகளை மன்னார் வாழ்வுதயம் நிறுவனம் வழங்கியிருந்தது.2002 ம் ஆண்டு எமது பாடசாலை தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை மன்னார் சாலையின் பேரூந்துச்சேவை என்பன ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. திருப்பலி மற்றும் ஏனைய வழிபாடுகளுக்கு தோட்டவெளி புனித வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்திற்கு சென்றுவந்த எமது மக்களின் ஆன்மீக தேவைகருதி 2002 ம் ஆண்டு வைக்காசி மாதம் தோட்டவெளி பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி வாஸ் அடிகளாரின் முன்னிலையில் சிற்றாலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

எமது கிராமத்தில் அந்நாட்களில் இலங்கைக்கான புனிதராக புனித நிலைக்கு உயர்த்துவதற்கான நிலையில் இருந்த தூய ஜோசப்வாஸ் அடிகளாரது திருச்சுரூபம் 2004 ம் ஆண்டு 5ம் மாதம் திறந்துவைக்கப்பட்டது. சிற்றாலயத்திற்கு தேவையான கூரை தகடுகளை வாழ்வுதய இயக்குநர் அருட்பணி ஜெசுராஜா அடிகளார் வழங்கியிருந்தார். ஆரம்ப நாட்களில் எமது கிராமத்திற்கான வீதி அமைப்பு, மின்சார வசதிகளை மேற்கொள்ளுவதற்கான நிதியினை தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்களும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் வழங்கியிருந்தார்கள்.

எமது கிராம இளைஞர் ,யுவதிகளின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட நிதிப்பங்களிப்பினூடாகவும், UNDP நிறுவனம் வழங்கிய ரூபா 500000/= (ஐந்து இலட்சம்) நிதிப்பங்களிப்பினூடாகவும், மைதான காணி வாங்கப்பட்டதுடன் மேலதிகமாக செலுத்தப்பட வேண்டிய

மைதான கொள்வனவுக்கான மீதித் தொகையினை காணியில் இருந்து பெறப்பட்ட மண் விற்று முழுத்தொகையும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மைதான காணி கொள்வனவு செய்வதற்கான குழுவில் திரு.பே.எமிலியானுஸ் பிள்ளை, திரு. செ.அந்தோனிப்பிள்ளை, திரு.ச.எலியாஸ், திரு.மா. பிரான்சிஸ், திரு.வெ.தயானந்தன், அமரர் அ.கீர்த்திசீலன் ,திரு.பொ.கியோமராசா,திரு.ம.நெவிலஸ் மற்றும் செ.யூட்றோசர் ஆகியோர் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்பத்தில் சுற்றுமதிலை அமைப்பதற்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் ரூபா 2000000/= (இருபது இலட்சம்) மற்றும் முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் 1000000/= (பத்து இலட்சம்) ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார்கள். அத்துடன் மின்மாற்றி (Transformar) ,மற்றும் களியினால் ஆன வீதிக்கு 2 மில்லியன் ரூபா நிதியை எமது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் 1 மில்லியன் ரூபா நிதியை முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களும் வழங்கியிருந்தார்கள்.

எமது கிராமத்தில் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சரும் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன் அவர்களது 500000/= நிதி ஒதுக்கீட்டினூடாகவும் ,வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களின் 1500000/= நிதி ஒதுக்கீட்டினூடாகவும் நூலகம் அமையப்பெற்றது. ஊரில் உள்ள மீள் எழுர்ச்சி கட்டடம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்தை முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் தமது நிதி ஒதுக்கீட்டில் வழங்கியிருந்தார். மேலும் சுற்றுமதில் நூலகத்திற்கு எமது மண்ணின் மைந்தனும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் தமது நிதி ஒதுக்கீட்டின் ஊடாக வழங்கியிருந்தார். நூலகத்திற்கான கணணியை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் வழங்கியிருந்தார். தொடர்ந்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஸ்தான் அவர்கள் 2கட்டமாக வீதி அமைக்க நிதி(600000 + 1000000) ஒதுக்கியிருந்தார், மற்றும் ஜோசப்வாஸ் நகர் நற்கருணை ஆண்டவர் ஆலய அறவீட்டிற்கு ரூபா 500000/=யும் வீதிக்காக ரூபா 300000/= நிதியையும் ஒதுக்கியிருந்தமை குறிப்பிட்த்தக்கது.

கௌரவ வன்னி பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதீயுதீன் அவர்கள் விளையாட்டு மைதானத்தில் மலசல கூடம் அமைப்பதற்கும் ,வீதி அபிவிருத்திக்கும் 2கட்டமாக 1000000/= மற்றும் 2 மில்லியன் ரூபா நிதியை எமக்கு ஒதுக்கியிருந்தார். எமது மண்ணின் மைந்தன் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் 225000/=ரூபா நிதியை மீனவ சங்க சுற்று மதிலுக்கும், ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கு 300000/= நிதியையும், வீதி அபிவிருத்திக்கான நிதியாக ரூபா 850000/= முதியோர் சங்கத்திற்கு 225000/=நிதியையும் நூலகத்திற்கான மலசல கூடம் அமைக்க ரூபா 225000/=நிதியையும் ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நற்கருணை ஆண்டவர் ஆலய நிர்மாணம்.
எமது மக்களின் ஆன்மீக தேவைக்காக ஆலயம் அமைக்கும் அனுமதியை மறைந்த ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை வழங்கியதோடு ஆலயத்திற்கான அடிக்கல் 2009/7/5ம் திகதி ஆயர் ஆண்டகை அவர்களால் நாட்டப்பட்டது.இவ் அடிக்கடி நாட்டும் நிகழ்வு முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி யூட்குரூஸ் அடிகளார் தலமையில் நடைபெற்றதுடன் ஆலயத்திற்கான அடிக்கல் ஒன்றும் அவரால் நாட்டப்பட்டது.

எமது ஜோசப்வாஸ் நகர் நற்கருணை ஆண்டவர் ஆலய திறப்புவிழா முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி மரியதாசன் குரூஸ் அடிகளார் இலங்கை திருச்சபையில் வரலாற்றில் இடம்பிடிக்கும் வகையில் பல ஆயர்களின் பிரசன்னத்தில் எமது மன்னார் மறைமாவட்ட முன்னார் ஆயர் மறைந்த அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களது 75வது பிறந்த தினத்தில் 2016ம் ஆண்டு 4ம் மாதம் 16ம் திகதி ஆசீர்வதிக்கப்பட்டு அபிசேகம் செய்யப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி ராஜநாயகம் அடிகளார் தலமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுக்கான நினைவாலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது, இதற்கான நிதியை எமது கிராம மக்களும் , வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மண்ணின் மைந்தனுமாகிய கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் வழங்கியிருந்தனர். ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களது நினைவாலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இம்மனுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களால் 7/1/2024 ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. மேற்படி நினைவாலயம் அமைப்பதற்கான நிதியை மக்களிடமிருந்து திரட்டியதுடன் மற்றும் ஏனைய ஒழுங்குகளை திரு.மா.பிரான்சிஸ், திரு. பே.எமிலியானுஸ்பிள்ளை, திரு.சி.பர்ணபாஸ், திரு.ச.எலியாஸ், திரு.ஞா.பேனாட் ஆகியோர் தலமையேற்று மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது ஜோசப்வாஸ்நகர் நற்கருணை ஆண்டவர் ஆலய பங்கு பணிமனைக்கு முன்னாள் பங்குத்தந்தையான அருட்பணி ஆரோக்கியம் அடிகளார் அடிக்கல் நாட்டியதுடன் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி ராஜநாயகம் அவர்கள் பங்குபணிமனையை திறந்துவைத்தார். எமது ஜோசப்வாஸ் நகர் ஆயர் இராயப்பு ஜோசப் விளையாட்டு மைதானம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஒழுங்கமைத்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை முன்னிட்டு 2017ம் ஆண்டு 18ம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் எமது ஜோசப்வாஸ் நகரின் பங்குத்தந்தைகள் வரிசையில் அருட்பணி யூட்குரூஸ் அடிகளார், அருட்பணி நேரு அடிகளார், அருட்பணி நெவின்ஸ் அடிகளார் (உதவி பங்குத்தந்தை) அருட்பணி ஜெகானந்தன் அடிகளார் (உதவிபங்குத்தந்தை) ஆகியோர் பணியாற்றியதுடன் ஜோசப்வாஸ் நகர் தனி பங்காக மாற்றப்பட்டு அருட்பணி மரிடிகோல் அடிகளார், அருட்பணி லக்கோனஸ் அடிகளார், அருட்பணி ஆரோக்கியம் அடிகளார், அருட்பணி ராஜநாயகம் அடிகளார் பணியாற்றியதுடன் தற்பொழுது அருட்பணி ஜெயபாலன் அடிகளார் பணியாற்றி வருகிறமை குறிப்பிடத்தக்கது. மருதமடு அன்னையின் வருகை மன்னார் மறைமாவட்ட பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது 2024/1/9 ம் திகதி எமது ஜோசப்வஸ் நகர் பங்கிற்கு எடுத்துவரப்பட்டது. இடம்பெயர்ந்த பின் பல மாற்றங்களையும், வழர்ச்சிகளையும், முன்னேற்றங்களையும் அடைந்திருந்தாலும். ஊரைப்பற்றி நினைக்கும் போது ,ஏதோ ஒன்றை பறிகொடுத்தாற் போலும், ஏதோ ஒன்றை இழந்தது போலவும் என்னை அறியாமலே கண்களில் கண்ணீர் வரும்.

7. விடத்தல்தீவு - குழந்தை பருவ வசந்தகாலங்கள் - ஞானசீலன் வசந்தசீலன்

நான் வசந்தசீலன். உங்களைப் போலவே இந்த உலகத்தினுள் சொல்லாமல் கொள்ளாமல் தள்ளிவிடப்பட்டவன். சாதாரண மனிதப் பிராணி. ஆனால் நான் வாழும் இந்த உலகைப் பற்றியும் என்னைச் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மனிதர்களைப் பற்றியும் மிக முக்கியமாக 'வசந்தசீலன்' என்று பெயரிடப்பட்டு எனக்கு தரப்பட்டிருக்கும் இந்த உடலை அல்லது உயிரைப் பற்றியும் நிறைய யோசித்துக் கொண்டிருப்பவன். சொல்லாமலே தரப்பட்டு சொல்லாமலே பறிக்கப்படப் போகும் இந்த வாழ்க்கையை முழுதாக வாழ்ந்து விடத் துடிக்கும் ஒரு சுயநலவாதி.

முகம் ஒன்று. உதய தினம்...
சற்றுப் பின்தங்கிய ஒரு கிராமம். அத்தியாவசியத் தேவையான வைத்தியத்திற்கும் சுமார் ஒன்றரைக் கிலோமீட்டர் தள்ளியிருக்கும் அரசினர் வைத்திய சாலைக்கு செல்லும் மக்கள். இற்றைக்கு சரியாக நாற்பத்து மூன்று வருடங்களுக்கு முன்பு மார்கழி மாதக் குளிரில் அந்த வைத்தியசாலையில் ஒரு பிரசவம். தந்தை, தாய், பிறப்புப் போட்டியில் முந்திவிட்ட நான்கு சகோதரர்கள், உற்றார் உறவினர் சற்றுப் படபடப்புடன் எதிர்பார்த்திருக்க ஐந்தாவதாக ஓர் ஆண் குழந்தை இப்பூமியின் மிச்சமிருக்கும் வளங்களிலும் பங்கு போட வந்து ஜெனிக்கிறது. எல்லோர் வாயிலும் உச்...ஆண் குழந்தை பிறந்தால் சந்தோசிக்கும் கலாச்சாரத்தில் பிறந்தும் ஐந்தாவதாக பெண் குழந்தை பிறந்தால் குடும்பத்திற்கு யோகம் என்றொரு இன்னொரு நம்பிக்கை அதனைக் குழப்ப இதுவும் ஆண் குழந்தைதானா என்ற ஒரு சலிப்பு மேலிட அனைவரும் வீடு திரும்புகின்றனர். பல மைல் தூரத்திற்கு அப்பால் இருந்து வந்த அதன் பெரியப்பா அந்தக் குழந்தையைப் பார்க்காமலே தன் ஊருக்கு போய் விடுகிறார். அது பிறந்த அன்று கொண்டாடப்படும் ஒரு கிறிஸ்தவத் தெய்வமான 'லூசி' என்ற ஒரு பெண் பெயர் கூட ஏற்கனவே தயாராய் வைத்திருந்தார்கள். ஆனால் அதனை வைக்க முடியாமல் போய்விடுகிறது. அந்தக் குழந்தையின் அப்பா மற்றும் அண்ணாமார்களின் பெயர்கள் எல்லாம் 'சீலன்' என்ற பெயரில் முடிவடையும். எனவே இக்குழந்தைக்கும் 'சீலன்' என்று முடிப்பதற்கு அமைவாக பெயர் தேடப்பட்டு இறுதியில் 'வசந்தசீலன்' என்று திரு நாமம் வழங்கப்படுகிறது...! (கொஞ்சம் ஓவராத்தான் போறமோ...?!)

என் அப்பா ஓர் அரசாங்க உத்தியோகத்தர். மாதாமாதம் நிச்சயமாக சம்பளம் வந்துவிடும்; அதனால் சாப்பாட்டுக்காவது பஞ்சமிருக்காது என்ற உத்தரவாதமளிக்கப்பட்ட அரசு பதவி. அரசு இயந்திரத்தின் ஆயிரமாயிரம் கைகளில் ஒன்றான ஓர் இயந்திரன். மும்மொழிகளில் எழுத வாசிக்க பேச முடிந்த அதிதிறமைச் சித்தியாளராய் இருந்தாலும் 'காக்கா பிடித்தல்' எனும் அரச தேசிய மொழியில் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாதவர்.

என் அம்மா ஓர் இல்லத்தரசி. உண்மையிலேயே எங்கள் வீட்டின் ஆட்சியாளர். அப்பாவின் மதிப்பான பதவியின் மிகக் குறைந்த சம்பளத்தில் குடும்பம் நடத்திய ஆறாம் வகுப்பு வரை மட்டுமே படித்த பிரமாதமான பொருளியல்வாதி. அப்பா எட்டு மணி நேரம் வீட்டுக்காக உழைக்க அம்மா இருபத்து நான்கு மணி நேரம் உழைத்தார். மேலதிகமாக தையல் மெசினை வேலை வாங்கி கொஞ்சம் சம்பாதித்தவர். அதன் புண்ணியத்தில் எங்கள் ஆடைகளின் தையல் கூலி இல்லாமல் போனது.

நான் பிறந்து நான்கு வருடங்களின் பின் எனக்கு சுய உணர்வு வந்தபோது என் மூத்த அண்ணா குருவானவராகும் முயற்சியில் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்தார். இரண்டாவது அண்ணன் மன்னாரில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் படிப்பதற்காக அங்கிருக்கும் விடுதியில் சேர்ந்திருந்தார். அப்பா, அம்மா, எனக்கு நேர் மூத்த இரு அண்ணாக்கள் இவர்களுடன் விடத்தல் தீவு எனும் சற்று அழகிய கிராமத்திலே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த என் வாழ்க்கை இனிதே ஆரம்பித்தது...

முதலில் என் கிராமம். அழகிய பூஞ்சோலைகள் நிறைந்த பச்சைப் பசேலென விரிந்த வயல் வெளிகள் நிறைந்த....இப்படி வர்ணிக்க முடியாவிட்டாலும் (!) அது ஒரு வித்தியாசமான கிராமம். இலங்கை நாட்டின் மன்னார்மாவட்டத்தில்நகரிலிருந்து சுமார்பதினைந்து மைல்கள்தள்ளி கடற்கரைஅருகில்அமைந்திருக்கிறது. ‘நாயாறு’ என்றழைக்கப்படும் ஒரு ‘நதி’ கிராமத்தின் அருகே கடலில் கலக்கிறது. கிராமத்திலிருந்து ஒரு மைல் தள்ளி மக்களின் ஒற்றுமைச் சின்னமாக ஒரு குளம். இப்படி ஒரு கிராமத்திலேயே ஆறு, குளம், கடல் என்பன இருப்பது மட்டும் ஆச்சரியமல்ல. ஊரவர்களின் பிரதான தொழில்களாக மீன் பிடி, விவசாயம் என இரண்டுமே காணப்பட்டன. இங்கே பெரும்பான்மையாக கத்தோலிக்கர்கள் வாழ்ந்ததாலோ அல்லது அவர்களின் ‘சாதி’ ஒற்றுமையை காட்டும் விதமாகவோ மாதா மற்றும் யாகப்பர் என இரு தேவாலயங்கள் காணப்படுகின்றன. இன்னும் சைவர்களுக்கு ஒரு கோவிலும் இஸ்லாமியர்களுக்கு ஒரு மசூதியும் காணப்படுகின்றன. அடுத்த தலைமுறை புத்திசாலிகளை உருவாக்குவதற்கு ஒரு கத்தோலிக்க பாடசாலையும் ஓர் இஸ்லாமிய பாடசாலையும் காணப்படுகின்றன. என் வீடு ஊரின் நடுவில் அமைந்திருக்கிறது.

எனக்கு இந்த வாழ்க்கையின் மிக மிக ஆரம்ப நினைவாக ஒரு சம்பவம். நான் என் வீட்டின் உள் அறையிலிருந்து வெளியே வந்து வெளி வாசற் படியில் அமர்கின்றேன். அப்போது உள்ளேயிருந்து அம்மாவின் குரல் ‘ஒரு உடுப்பும் அணியாமல் வெளியே இருக்காதே!’என்று கண்டிக்கிறது. அப்போதுதான் நான் ஆதாமை போல நிர்வாணம் என்றால் என்பதை முதன்முதலாக உணர்ந்து சென்று காற்சட்டையை போட்டுக் கொள்கிறேன்!

எங்கள் வீடு சிறு மொட்டை மாடியைக் கொண்டது. ஆனால் நான் பிறக்கும் போதே அந்த வீட்டிற்கு நாற்பது வயதாகிவிட்டிருந்தது. பழங்காலத் தூண்கள், கோலங்களைக் கொண்டது.
என் வீட்டுக் கண்ணாடியினால் வெளியே பார்த்தால் அக்கண்ணாடியின் அமைப்பினால் வெளியே வரும் நபர் நான்கைந்து பேராகத் தெரிவார். அதனை பார்த்துக் கொண்டிருப்பதும் முற்றத்துக் கேற்றைப் பிடித்து தொங்கிக் கொண்டே அங்குமிங்குமாக ஆடுவதும் மொட்டை மாடியில் நின்று கொண்டு வீதியில் போய் வருவோரை வேடிக்கை பார்ப்பதும்தான் என் பொழுதுபோக்காக இருந்தது. சில நேரங்களில் வீட்டுக் கதிரைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிவிட்டு பக்கத்து சிறுவர்களுடன் ‘பஸ் விளையாட்டு’ விளையாடுவோம்.

எனது இரண்டாவது தெளிவான நினைவுச் சம்பவம் நான் நேசரிக்குச் சென்றது. ஆனால் அந்நேசரிக்குப் போவதற்கு முன்பே எங்கள் ஊரப் பிள்ளைகள் என் வீட்டிற்கு அருகில் ஒரு மண் வீட்டில் வசித்த ஒரு பெண்மணியிடம் ஆரம்ப எழுத்துக்கள் படிக்க போனது ஞாபகமிருக்கிறது. ஆனால் நானும் போனதாய் இல்லை. நான் நேசரிக்குச் செல்ல ஆரம்பித்த பின் ஒருநாள் நாங்களும் ஆசிரியரும் ஆலயத்திற்கு சென்று செபம் செய்தபின் வெளியே வந்தோம். “சரி, எல்லோரும் வீட்டுக்குப் போங்க..” என்று டீச்சர் சொன்னதுதான் தாமதம் எல்லோரும் ‘ஓ’ என்று கூச்சலிட்டபடியே ஓடினார்கள். (எங்கள் வீடுகள் அருகிலேயே இருந்தமையால் எங்களைக் கூட்டிப் போக பெரியவர்கள் யாரும் வருவதில்லை) . ஆனால் நான் கூச்சலிடவுமில்லை. ஓடவுமில்லை. நான் பிறப்பிலேயே அமைதியான கூச்ச சுபாவமுள்ளவனாகத்தான் இருந்திருக்கிறேன். என் நண்பன் மைக்கேல் தன் சேர்ட்டைக் கழற்றி காற்றில் சுழற்றியபடி ஓடினான். நான் வீட்டுக்கு வந்தவுடன் இதை என் அம்மாவிடம் சொன்னேன். “அதெல்லாம் கெட்ட பழக்கம். அப்படியெல்லாம் செய்யக்கூடாது, சரியா?” என்று அம்மா எனக்கு அறிவுறுத்தினார். நான் முதன் முதலாக நல்ல பிள்ளையாக இருப்பதற்கான ஒரு விதியை அறிந்து கொண்டவனாக தலையாட்டினேன்.
நாங்கள் எங்கள் அப்பாவின் பெரியய்யா வீட்டிலேயே இருந்தோம். எங்கள் வீட்டில் பெரிய வீடு, சிறிய வீடு என் இரு பகுதிகள் இருக்கின்றன. சிறிய வீடு இரு அறைகளையும் ஒரு சமையலறையையும் கொண்டது. அதில் பெரியய்யாவும் பெரியம்மாவும் வசித்தார்கள். பெரிய வீடு அளவில் பெரிய இரு அறைகளையும் வரவேற்பறையையும் கொண்டது. அதில் நாங்கள் வசித்தோம். பெரியய்யாவுக்கு பிள்ளைகள் இல்லை. அவர் தன் வீட்டின் முன் பகுதியை ஒரு பல சரக்கு கடையாக நடத்தி வந்தார்.

நான் அப்போது கடைசிப் பிள்ளையாக இருந்ததனால் எல்லோரும் என்னைக் ‘கடைக் குட்டி’ என்று அழைத்தார்கள். ஆனால் அப்பதவியும் வெகு விரைவில் பறி போனது. என் ஐந்தாவது வயதில் அம்மாவின் வயிற்றில் உண்மையான கடைக்குட்டி தோன்றிவிட்டது. ஒரு நாள் நான் நேசரி முடிந்து வந்தபோது அம்மாவைச் சுற்றி அண்ணாக்கள் நின்றிருந்தார்கள்.
அம்மா “ தம்பி வயிற்றில் உதைக்கிறான், தொட்டுப்பார்...”என்றார்.
பார்த்தேன். அப்படி ஏதும் உதைக்கவில்லை.

“இல்லையே!” என்று மறுத்தேன். எல்லோரும் சிரித்தார்கள்.
எனக்கு ஆறு வயதாகியபோது எல்லோரும் பெண் பிள்ளையை எதிர்பார்த்து சலித்து ஓய்ந்திருந்தபோது ஆறாவது பிள்ளையாக என் தங்கை பிறந்தாள். அவளின் குழந்தை பிராய நினைவுகள் இன்னும் என் மனதினின்றும் அகலவில்லை. பெரியய்யாவும் பெரியம்மாவும் அவள் மீது பாச மழையே பொழிந்தார்கள். ஒரேயொரு தங்கச்சி, ஒரேயொரு மகள், கடைக்குட்டி, ஐந்து அண்ணன்மாருக்கு ஒரே தங்கச்சி என்ற பல பட்டங்களை அவள் தன் தலையில் சுமந்தாள். சிறுவயதில் அவள் அடம்பிடித்து அழும் காட்சி இன்னும் என் கண் முன் நிற்கிறது. வாயை தன் பெரியம்மா போல உம்மென்று கோணலாக வைத்துக்கொண்டு மண்ணில் விழுந்து புரண்டு அழுவாள். அதில் வேடிக்கை என்னவென்றால் வீட்டுக்குள் இருந்தாலும் வெளியே முற்றத்திற்கு ஓடி வந்து மண்ணில் ‘தொபீரென’ விழுவாள். அவள் அழுவதை பார்த்து நாங்கள் சிரிப்போம். பெரியய்யா அவள் மீது உயிரையே வைத்திருந்தார். அவர் அவளை தன் மடியில் வைத்துக் கொண்டு “தங்கம்...தங்கம்...என்ட தங்கம்...தங்கம்...”என்று தாலாட்டுப் பாடுவது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அவள் மேல் இருந்த பாச மிகுதியால் தன் வீட்டை தனக்கு பின் அவளுக்கு என உயில் எழுதி வைத்தார்...

அவர் சரியா கஞ்சன் என்பார்கள். ஆனால் என் தங்கைக்கு நிறைய செலவழிப்பார். ஒருதடவை சின்ன சைக்கிள் வாங்கிவந்தார். பின்னால் குசன் போலிருந்த சேரில் அவளை அமர்த்திவிட்டு முன்னால் சைக்கிளை செலுத்த டிரைவராக என்னை தூக்கி அமர்த்தினார். ஆனால் என் உருவம் அப்போதே அதற்கு பொருத்தம் இல்லாமலிருக்க என் பதவி உடன் பறி போய் என் அன்ரி மகன் நியமிக்கப்பட்டான்.
ஒரு முறை பக்கத்து வீட்டு இளம்பெண் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்து என் தங்கையுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் செல்லமாக தங்கையைப் பார்த்து “ அடிக் கள்ளி!” என்றார். அதைக் கேட்டதுதான் தாமதம் பெரியய்யா “என் தங்கத்தையா கள்ளி என்று சொல்கிறாய்?” என்று அவளை கண்டபடி ஏச ஆரம்பித்து விட்டார். அவள் அழ அழ விடாமல் பெரியய்யா தொடர்ந்து ஏசிக் கொண்டேயிருக்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த என் அம்மா ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் “அவள் என் மகளைத்தானே சொன்னாள். பரவாயில்லை. நீங்கள் அதுக் கொன்றும் சொல்லத் தேவையில்லை!” என்று முகத்திற்கு நேரே சொல்லிவிட அவர் அதிர்ந்து பேச்சு மூச்சில்லாமல் போனார்.

என் அம்மா அப்படி பெரியவர்களை மதிக்காமல் பேசுபவரல்ல. (வழமையாக அவர் பெரியய்யாவுடன் பேசவேமாட்டார்.) ஆனால் சில நேரங்களில் தன் மனதில் அநியாயம் என்று பட்டால் யாரென்றும் பாராமல் பொங்கிவிடுவார்.
என் தங்கை மீது வைத்திருந்த அளவற்ற பாசத்தால் அந்த நேரத்தில் பெரியய்யாவும் ஒரு குழந்தையாக மாறிவிட்டிருந்தார் அல்லது கள்ளி என்ற சொல்லில் அவரைக் கடுப்பேற்றக்கூடிய மேலதிக சாதிசார் அர்த்தங்கள் ஏதும் இருந்தனவோ தெரியவில்லை.
ஆனால் இந்த சம்பவம் பெரியய்யாவை வெகுவாக பாதித்துவிட்டது. அவர் இறந்த பிறகு அவரது டைரியில் இதனைக் குறிப்பிட்டு ‘இன்று என் தங்கத்தை ஏசியவளை நான் ஏசினேன். ஆனால் அதன் அம்மாவோ என்னை ஏசி விட்டார் ‘ என்று எழுதியிருந்ததை வாசித்தோம்.
இந்த இடத்தில் பெரியய்யாவைப் பற்றி சில விடயங்கள்...பெரியய்யா பழைய படங்களில் வரும் அப்பாக்களைப் போலல்லாமல் உடல் திடகாத்திரமும் உயரமும் கொண்டவர். வயது அப்போது எண்பத்தி நான்கு. கொஞ்சம் கர்வம் பிடித்தவர் என்றும் சொல்லலாம்.

ஒரு தாயினைப் பார்த்து இப்படிக் கேட்ட அவரின் சிறுபிள்ளைத்தனத்தை இப்போது நான் யோசித்துப் பார்க்கின்றேன். சிலவேளைகளில் அவரின் வார்த்தைகளுக்கு வேறு மறைமுக அர்த்தங்களும் இருந்திருக்கலாம். அது இப்படி ஒரு சிறு பிள்ளைத்தனமான கேள்வியாக உருவெடுத்திருக்கலாம். ஏனெனில் அப்பா ஒரு காதல் தோல்வியில் திருமணமே வேண்டாம் என்றிருந்தவர். முப்பது வயதில் அம்மாவை பேரூந்தில் பார்த்து விரும்பி பெற்றோர் உறவினர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தார். எதிர்ப்பின் காரணம் வர்க்கம் அல்லது பிதேசவாதமாக இருக்கலாம். இதனால் அம்மாமீது ஒரு வெறுப்புணர்வு உறவினர்களுக்கு இருந்திருக்கலாம். அது இவ்வாறான அற்ப காரணங்களிலும் வெடித்திருக்கலாம். ஆனாலும் என் அம்மா அழுது நான் பார்த்த முதல் நிகழ்ச்சி இது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை உங்களுக்கு உறுதியாகாக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே நான் விபரிக்கின்ற மற்றும் விபரிக்கப் போகின்ற சம்பவங்களில் சம்பந்தப்படும் நபர்களின் நடத்தைகளைப் பற்றிய என் எண்ணக்கருக்களை மட்டுமே நான் கூறுகிறேன். ஒரே சம்பவத்தை வேறு வேறு நபர்கள் வேறு வேறு விதமாக பார்ப்பார்கள். நான் எப்போதுமே யாரையுமே நல்லவர்கள், கெட்டவர்கள் என வரையறுத்துவிடுவதில்லை. ஒரு குறிப்பிட்ட நபர் குறிப்பிட்ட சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்கிறார் என்றும் அந்த இடத்தில் அவரது நடத்தை சரியா பிழையா என்பதை மட்டும் என கண்ணோட்டத்தில் விதந்துரைக்கின்றேன். அந்த உறவினர், அம்மா,நீங்கள் மற்றும் நான் உட்பட எல்லோரும் சூழ்நிலைக் கைதிகளே என்பதை மனதிற் கொள்க.நிற்க. என் தங்கையின் புராணத்தை தற்காலிகமாக இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

அப்பா ஒரு விவசாய போதனாசிரியர் என்பதனால் அப்போது அவர் ஒரு கோழிப்பண்ணையை வீட்டில் ஆரம்பித்தார். அதற்காக ஒரு கொட்டிலும் கட்டினார். சுமார் ஐம்பது அறுபது கோழிகள் இருக்கும். அதற்கு தண்ணீர் வைப்பதும் அதன் தரையில் உமி போட்டதும் மற்றும் அவற்றின் சத்தங்களும் விடியற்காலையில் மாமரத்தின் அடியில் மாங்காய் பொறுக்குவதுபோல கோழி முட்டைகள் சேகரிப்பதும் ஞாபகங்களில் இருக்கின்றன. நாங்கள் வளர்த்து தங்கையை பயமுறுத்துகிற கழுத்து வெட்டி கோழியின் முகம் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. தங்கை இப்போதும் கூட கோழி என்றாலே பயந்தோடுவாள்.

அடுத்து எல்லோர் வாழ்விலும் மறக்க முடியாத சம்பவமாக அமைவதுதான் என் வாழ்விலும் நடந்தது. அது நான் முறைசார் கல்விக்குள் காலடி எடுத்து வைத்த நாள். அதுதான் நான் பாடசாலைக்கு சென்ற முதல் நாள். எங்கள் கிராமத்து பாடசாலைதான். பெயர் ‘விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை’. அப்பா...பேரை சொல்லும்போதே சின்னப் பொடியன் ஆன மாதிரி ஓர் உணர்வு... அப்பாதான் என்னைக் கூட்டிக் கொண்டு போனார். நான் எந்த அடமும் பிடிக்கவில்லை.அதிபரின் அறைக்கு சென்றோம். அப்பா என் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி அதிபருடன் நீண்ட நேரமாக திட்டமிட்டுக் கொண்டிருக்க நான் அந்த அறையிலிருந்த யேசுநாதர் படம் போட்ட நாட்காட்டியையே பார்த்துக் கொண்டிருந்தேன். இரக்கமான கண்கள். அருள் வழங்கும் கைகள். இதே மாதிரியான ஜேசுவின் படம் நான் ஏற்கனவே நான் பார்த்திருந்தாலும் அன்றைக்கு ஏனோ நெடுநேரம் உற்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

பின் முதலாம் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்னை அழைத்துச் சென்றார். நான் அப்பா எங்கே போனார் என்று கூட கவனிக்காமல் அவர் பின்னாலேயே சென்றேன். வகுப்பில் எப்படித்தான் வந்தவுடனேயே என்னைப் பற்றி கணித்து விட்டார்களோ தெரியவில்லை; கடைசி வரிசையில் இருத்தப்பட்டேன்! ஒரே ஊரானபடியாலும் வகுப்பில் இருந்த மாணவர்களில் அநேகம்பேரைத் தெரிந்திருந்தமையாலும் பயம் ஏதும் ஏற்படவில்லை.

என் பக்கத்தில் ரஜினி அமர்ந்திருந்தான்! அவன் என் பக்கத்து வீட்டுக்காரன்தான். அவன்தான் என் முதலாவது தோழன். ஆனால் என் முதல் நாளை மறக்கமுடியாமல் ஆக்கியவனும் அவன்தான். தன் பென்சில் கூர் முறிந்து விட்டது என்று என்னுடையதைக் கேட்டான். கொடுத்தேன். அடுத்த நிமிடம் என் பென்சிலேயே இரண்டாக முறித்துவிட்டான். அதைப் பற்றி நான் பெரிதாக கவலைப்படாமல் இருந்தேன். பின் ஆசிரியர் வந்து “முதல் நாளே பென்சிலை முறித்துவிட்டாயா?”என்று என்னை ‘செல்லமாக’ கேட்டபோதுதான் அதனைப் பற்றிக் கவலைப் படவேண்டும் என்று புரிந்தது. எனக்கு முதன் முதலாக கவலை என்ற எண்ணக்கருவைக் கற்பித்தவர் அவர்தான்.

நான் முதன் முதலாக ஆனா ஆவன்னா எழுதியது ஞாபகம் இல்லை என்றாலும் முதன்முதலாக என் பெயரை ஆங்கிலத்தில் எழுதியது இருக்கிறது. ஏனெனில் அதை சொல்லித் தந்தது என் அப்பா. வீட்டு முற்றத்தில் நான் கேட்டதற்காக அதனை மண்ணில் எழுதிக் காட்டினார். *VASANTHASEELAN*
அதை வெற்றிகரமாக எழுதி முடித்தபோது எவ்வளவு பெருமையாக இருந்தது தெரியுமா?

அடுத்து நான் முதன் முதலாக காயப்பட்ட ஞாபகம் நெஞ்சில் இனிக்கின்றது....! எனக்கும் விளையாட்டிற்கும் போன ஜென்ம விரோதம். கடும் பகை. இது வரைக்கும் எங்குமே விளையாட்டுப் பக்கம் தலை வைத்து படுத்ததில்லை. என் உடலுக்கும் முக்கியமாக என் மனத்திலும் விளையாட்டு ஓர் ஒவ்வாமையாக இருந்தது. அதனால் முதலாம் ஆண்டில் பாடசாலையில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடந்தபோது அதனை வேடிக்கை பார்க்கக் கூட போகாமல் வகுப்பில் இருந்தேன். பின் யாரோ ஒருவன் வற்புறுத்தினான் என்று புறப்பட்டேன். மைதானம் பாடசாலைக்கு பின்னால் இருந்தது. விதி ‘நேர் வழியால் போனால் ஆசிரியர்கள் அடிப்பார்கள் என்று அறுந்து கிடந்த முட்கம்பி வேலியால் போவோம்...வா...!’ என்றது. என்னோடு வந்தவன் வெகு லாவகமாக நுழைந்து அப்பக்கம் சென்றுவிட்டான். நான் நுழைந்தபோது ‘இவ்வளவு நல்ல சிறுவன் இப்படி குறுக்கு வழியெல்லாம் பாவிக்க அனுமதித்தால் கெட்டுப் போய்விடுவான்’ என்று எண்ணிய முட்கம்பி, உடனடியாக எனக்கு தண்டனை கொடுக்க எண்ணி, என் தலையில் ஆழமாக ஒரு கீறு போட்டது. வெளியே வந்து விட்ட எனக்கு முதலில் அது உறைக்கவில்லை. சற்று நேரத்தில் ‘என்ன இது தலையில் ஏதோ திரவமாக கசகசக்கிறது’ என்று தலையில் கை வைத்துப் பார்த்த எனக்கு திக்கென்றது. அப்படியே ‘கொழகொழவென’ ரத்தம் கொட்டியது. முதலில் அதற்கு என்ன செய்யவேண்டும் என்றே புரியாமல் நின்றேன். அப்போது அருகில் நின்ற அருமை நண்பன் அதைப் பார்த்து விட்டு “ ஆஹா, தலையில காயம்பட்டு விட்டாயா... உன் வீட்டில் நல்லா அடி வாங்கப் போகிறாய்!” என்று கை கொட்டி சிரித்தான். எனக்கு அப்போதுதான் காயம் வலிக்க ஆரம்பித்தது. ஆனால் அதை விட இக்காயத்தை யாரும் பார்த்துவிடுவார்களோ என்ற பயம் மேலோங்கியது.

பாடசாலையில் யாரிடமும் சொல்லாமலே வீட்டை நோக்கி ஓடினேன். ஆனால் வீட்டில் இதனை சாதரணமாக எடுத்துக் கொண்டார்கள். நடந்த சம்பவத்தைக் கேட்டார்கள். நான் முழு உண்மையும் சொன்னேன். அருகிலுருந்த ஒரு நாட்டு வைத்தியரிடம் கொண்டு போய் தலையில் வட்டமாக கட்டுப் போட்டு விட்டார்கள். அம்மா “பார்த்துப் போறதில்லையா?” என்று ஒரு வரிதான் கண்டித்தார். ஆனால் மருந்து போட்டு விட்ட அவ்வைத்தியர் நான்தான் ஏதோ இந்த ஊரிலேயே தலை சிறந்த குழப்படிகாரன் என்று முடிவு செய்து சிகிச்சை முடியும் வரை அறிவுரை என்ற பெயரில் திட்டி கொண்டே இருந்தார்!

ஆனால் இச் சம்பவத்தில் ஒரு உண்மையைக் கற்றுக் கொண்டேன். என்ன சம்பவம் நடந்தாலும் உண்மையை எல்லோரிடமும் முக்கியமாக வீட்டில் சொல்லி விடுவது நல்லது. விளைவு எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இத்தீர்மானத்தின் மூலம் நான் சில பக்க விளைவுகளையும் பிற்காலத்தில் சந்தித்தேன்.
அடுத்து முதன் முதலாக ஏமாற்றமடைந்த சம்பவம். என் அப்பா ஒரு யமஹா பைக் வைத்திருந்தார். ஆனால் சத்தியமாக அதில் நான் பிரயாணித்ததாக இதுவரைக்கும் எனக்கு ஞாபகம் இல்லை.சிலவேளை மிகச் சிறு வயதில் சென்றிருக்கலாம்.

ஒரு நாள் அப்பா என் அண்ணாவை பைக்கில் ஏற்றிக் கொண்டு எங்கோ செல்லப் போவதை கண்ட நான் என்னையும் கொண்டு செல்லும்படி அடம்பிடித்தேன். முடியாது என்று மறுத்த என் பெற்றோர் கடைசியில் ‘பின்னேரம் வந்து அப்பா என்னைக் கூட்டிச் செல்வார்’ என்று வாக்குறுதி தந்தார்கள். நானும் சமாதானமாகிவிட்டேன். எவர் எதைச் சொன்னாலும் உடனே நம்பிவிடும் ‘அப்பாவிக்’ குணம் எனக்கு பிறப்பிலேயே இருந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

அன்று முழுவதும் மாலை எப்போது வரும் எங்கள் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தபடியே காத்திருந்தேன். ஆனால் அன்று இரவாகியும் அப்பா வரவேயில்லை. எங்கேயோ தங்கிவிட்டார். அது அம்மாவிற்கும் தெரியும். என்னைச் சமாளிப்பதற்காக பொய் சொல்லி இருக்கிறார்கள். பின் நான் அம்மாவிடம் கேட்டபோது அம்மா பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு “ ஐயோ, அப்பா இன்னும் வரவில்லையே...” என்றார். பின் தையல் வேலையாக வீட்டுக்கு வந்திருந்த பக்கத்து வீட்டுப் பெண்ணிடமும் விஷயத்தை அம்மா சொல்ல அவரும் “பிள்ளையை பைக்கில ஏத்திக் கொண்டு போறதெண்டு சொல்லிப் போட்டு ஏமாத்திப் போட்டார்தானே...!” என்று
‘உச்’ கொட்டினார். இருவரும் உண்மையாகக் கவலைப்படவில்லை. நடிக்கிறார்கள் என்பது எனக்கு அப்போதே புரிந்தது.

நான் அப்பாவுடன் பைக்கில் போகாமல் விட்டதைவிட அப்பாவும் அம்மாவும் என்னிடம் பொய் கூட சொல்வார்களா என்பதே எனக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது. பிற்காலத்தில் நான் மிக உறுதியாக சிலவற்றை எதிர்பார்க்கும்போதே அடிமனதில் நான் ஏமாந்தும் போகலாம் என்ற ஒரு எண்ணம் ஓடுவதை இச்சம்பவத்தின் தாக்கத்தால் தவிர்க்கமுடியாமல் போனது.

சிறுவயதில் ‘போளை’ என்று எங்களூரில் அழைக்கப்பட்ட கோலிக்குண்டு விளையாட்டு, கடற் சிப்பிகளைக் கொண்டு ஆடும் ஒரு வகை ஆட்டம் மற்றும் கிளித்தட்டு போன்றவற்றை நானும் அயல் சிறுவர்களுடன் எங்கள் வீட்டின் முன்னால் இருக்கும் வீதியில் ஆடியிருக்கிறேன். ஆனால் ‘அழாப்பாமல்’(கள்ள ஆட்டம் ஆடாமல்) தோற்றுப் போகிறவனும் நான்தான். நல்லவன் என்பதால் அல்ல. அப்படி ஆடும் அளவுக்கு எனக்கு திறமை இல்லை என்பதே உண்மை.

கடற்கரை அருகே அமைந்த ஊர் என்றதும் நீண்ட வெள்ளை மணல்கள் பரந்திருக்க அலைகள் ஓவென ஓடிவந்து கால் நனைத்துவிட்டுப் போகும் கடல் என்று எண்ணிவிடாதீர்கள். எங்கள் ஊர்க் கரை ஓரம் முழுவதும் கடலில் கண்டல் காடுகள் சூழ்ந்திருப்பதால் ஊருடன் தொட்டுக் கொண்டிருக்கும் கடலில் அலைகளைக் காண முடியாது. அமைதியான கடலில் தோணிகளும் இயந்திரப் படகுகளும் வரிசை கட்டிக் கொண்டு நிற்பதை மட்டுமே காணலாம். ஆனால் அந்தக் கண்டல் காடுகளின் முக்கியத்துவம் பற்றி உங்களுக்கு தெரிந்திருக்கும்.

என் அப்பா ஒரு அரசாங்க உத்தியோகத்தர் என்பதால் கடலுக்கும் எனக்கும் வெகு தூரம். அப்போதுதான் இனப்பிரச்சினையானது *1983* யூலைக் கலவரத்தின் தொடர்ச்சியாக தெளிவான வன்முறை வடிவம் எடுத்திருந்தது.

அப்பா வேலைக்கு சென்று மாலை திரும்பினால் செய்தித்தாள் வாசிப்பதும் எங்கள் வீட்டின் வெளி மதிலுக்கு கீழிருக்கும் படிக்கட்டில் அவரும் அவரது நண்பர்களும் அமர்ந்திருந்து வானொலிச் செய்தி கேட்டுவிட்டு அரசியல் பேசுவதும்தான் வழமை. முதன்முதலாக சைக்கிள் ஓடிப் பழகும்போது பிரேக் ஒழுங்காக இல்லாததால் அதை நிறுத்த அதே படிக்கட்டில்தான் போய் காலைத் தேய்த்து நிறுத்துவேன்...! சைக்கிள் பழகிய வீரத்தழும்புகள் அது தனிக்கதை...!

ஊரில் கட்டிளம் பருவத்தினருக்கு பகுதி நேர வேலையே தங்கள் அப்பாக்களின் கடற்தொழிலுக்கு உதவுவதுதான். முக்கால்வாசி வீடுகளில் விதம்விதமான வலைகளும் ‘பறி’ எனப்படும் றால் போன்றவற்றை பிடிக்கப் பயன்படும் பெட்டிகளும் காணப்படும். ஆனால் ஒரு மீனவக் கிராமத்தில் பிறந்திருந்தாலும் என் பெற்றோருக்கு அதில் சம்பந்தமோ ஆர்வமோ இல்லாத காரணத்தினால் எனக்கு கடல் தொழிலைப் பற்றியோ குறைந்தது மீன்களின் வகைகளைப் பற்றியோ கூட தெரியாமற் போய்விட்டது.

எங்கள் ஊரின் இரு ஆலயங்களுக்கும் பொறுப்பாக ஒரு பாதிரியார் இருந்தார். அவர் பெயர் பீற்றர். அவர் ஞானப்பிரகாசியார் பீடப் பணியாளர் சபையை நடத்தினார். அதில் சிறுவர்கள் நாங்கள் இணைந்திருந்தோம். மாதாந்தம் கூட்டங்கள் நடைபெறும். எட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் திருப்பலி வேலையில் குருவானவருக்கு உதவி செய்வதற்காக இச்சபையில் சேர்க்கப்பட்டார்கள். கொடுக்கப்பட்ட நேர அட்டவணைப் படி தினப் பூசையிலும் ஞாயிறுப் பூசைகளிலும் பாதிரியாரைப் போலவே நீண்ட தொங்கலாடைகளை அணிந்துகொண்டு பங்குபற்றினோம். ஞாயிறு பூசை சற்று பெரிய சடங்குகளில் கூடிய பூசை என்பதால் சற்றுப் ‘பெரிய’ சிறுவர்களே அனுமதிக்கப்பட்டார்கள்.

தினமும் கடமை தரப்பட்ட மூன்று சிறுவர்களும் பூசை ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே ஆலயத்திற்கு சென்று பூசைக்கான ஆயத்த வேலைகளை செய்வோம். சிலவேளைகளில் காலை ஆறுமணிக்கு ஆரம்பிக்கும் பூசைக்கு ஐந்து மணிக்கே தனியே புறப்பட வேண்டியிருக்கும். அப்படி ஒருமுறை அதிகாலை இருளில் ஆலயத்துக்கு செல்லும்போது வீதியில் படுத்திருந்த நாயை மிதித்து அது சீறிப் பாய, உயிரைக் கையில் பிடித்தபடி விழுந்தடித்துக் கொண்டு ஓடியது ஞாபகம் வருகிறது. அங்கே ஆயத்த வேலையை சிறு செபமாலை சொல்லித்தான் முடிப்போம். அதில் வழமையாக இறுதியில் பாடும் ‘அம்மா என்று அழைத்தால், குழந்தாய் என்று வருவாய்’ என்ற பாடலை இப்போது பாடிப் பார்த்தாலும் மெய்சிலிர்க்கும்.
நான் அச்சபையில் சேர்ந்து முப்பத்தாறு தடவைகள் பூசையில் பணியாற்றியிருக்கிறேன். அதை நான் எண்ணியதற்கான காரணத்தை சொன்னால் உங்களுக்கு சற்று சிரிப்பாக இருக்கும். மூன்றாம் ஆண்டு படிக்கும் போதே எனக்கு எதிர்காலம் பற்றி நிறைய கனவுகள் இருந்தன. அதிகம் யோசிப்பேன். அப்போதே அம்மா வாசிக்கும் நிறைய கதைப் புத்தகங்களை நானும் படித்ததாலோ என்னவோ பெரியவனானதும் நான் எப்படி வாழ்வேன், கதைகளில் நடக்கும் சம்பவங்கள் என் வாழ்க்கையிலும் நடக்குமா என சிந்திப்பேன். ஆனால் உறுதியாக நான் எதிர்காலத்தில் பணக்காரனாக புகழ் பெற்று வாழ்வேன் என்றுதான் நினைத்திருந்தேன். சிலவேளைகளில் இது கூட எல்லோரும் சின்ன வயதில் ஆசைப்படும் விடயமாக இருக்கலாம். ஆனால் புகழ் பெற்ற நபர்களின் வாழ்க்கை வரலாற்றினை பாடப் புத்தகங்களில் படிக்கும்போது அவர்கள் புகழ் பெறுமுன் அவர்களது சிறுவயதில் நடந்த சிறு விடயங்களைக் கூட எழுதியிருப்பார்கள். ‘அந்த மகான் இத்தனையாம் ஆண்டு இன்ன திகதியில் இன்னாருக்கு மகனாக அவதரித்தார்...சின்ன வயதில் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றன’ என்றெல்லாம் விபரித்திருப்பார்கள். அப்படியென்றால் நான் பெரியவனானதும் அதுவும் ‘பெரிய ஆளானதும்’ சின்ன வயதிலே நடந்த சம்பவங்களை என்னிடம் கேட்பார்கள் அல்லவா...?! அதற்காகவே சற்று மிதமிஞ்சிய தன்னம்பிக்கையுடன் எல்லாவற்றையும் ஞாபகம் வைத்திருக்க முயற்சித்தேன்!

பீற்றர் பாதர் ஒரு வினோதமான மனிதர். எப்போது சிரிப்பார், எப்போது கொதிப்பார் என்றே சொல்ல முடியாது. அவருக்கு ஹிஸ்டீரியா நோய்தான் இருந்திருக்க வேண்டும். முதன்முதலாக ஞாயிறு பூசையில் பீடபணியாளராக களமிறக்கி விடப்பட்டபோது வழமையாக நான் பணியாற்றும் தினப் பூசைகளை விட வித்தியாசமான சடங்குகளைக் கொண்டிருந்ததால் பூசை வேளையில் ஏதோ தவறு செய்துவிட்டேன். அப்போதே பாதரின் முகம் அஷ்ட கோணலாவதை கவனித்தேன். உள்ளூர நடுக்கத்துடன் பூசை கழிந்தது. கடைசிப் பாடல் பாடப்பட்டு பூசை முடிய பாதரும் நாங்களும் கோயிலின் பின் அறைக்குள் நுழைந்தோம். அவ்வளவுதான் அடுத்த கணம் பாதர் காத்திருந்ததுபோல வேகமாக வந்து ‘கொடக்’கென்று தலையில் கொட்டினார்...அப்பா... இப்போதும் வலிக்கிறது!

ஆனால் அவரே பின்பு என்னைக் கூப்பிட்டு மன்னிப்புக் கேட்பது போல மென்மையாக பேசியபோது ஆச்சரியமாக இருந்தது. அப்போதுதான் அவர் என் பெயர் என்னவென்று கேட்டார். ‘வசந்தசீலன்’ என்றதும் “என்ன பெயர் இது? வசந்தன் கேள்விப்பட்டிருக்கிறேன். சீலன் கேள்விப்பட்டிருக்கிறேன். இது என்ன வசந்தசீலன்! வித்தியாசமான கலவையாய் இருக்கு. எனிவே, நைஸ் நேம் “ என்றார். அவர் பேசிய ஆங்கிலம் புரியாவிட்டாலும் ஏதோ நைஸ் என்று நல்லதாகத்தான் பாராட்டுகிறார் என்று சந்தோசமாயிருந்தது. நான் கோபம் எதுவுமில்லாமல் புன்னகைப்பதைப் பார்த்த பாதர் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத அந்த வார்த்தைகளைக் கூறினார். “எனக்கு பெரியவர்களை விட உங்களைப் போல சிறுவர்களைத்தான் பிடிக்கும். ஏனென்றால் நீங்கள் தான் யார் உங்களுக்கு எந்தத் தீமை செய்தாலும் உடனடியாகவே அதனை மறந்து பழைய மாதிரியே பழகுவீர்கள். அந்த மன்னிக்கின்ற குணம் எனக்கு மிகவும் பிடிக்கும்” என்றார்.

அவர் சொன்னது சரிதான். நாம் சிறுவர்களாய் இருக்கும்போது பெரியவர்களோ அல்லது நண்பர்களோ நம்மோடு எப்படிக் கோபித்தாலும் சண்டை பிடித்தாலும் அடுத்த நாளே மறந்து மன்னித்து பழையபடி சேர்ந்து விடுகிறோம். ஆனால் பெரியவர்களாக வளர வளர இந்த மன்னிக்கும் குணம் அருகி மன்னிப்பவன் ஏமாளி என்பது போன்ற ஒரு மாயைக்குள் சிக்கிவிடுகிறோம். அதையே நினைத்து நினைத்து பழிவாங்கும் எண்ணத்தை வளர்த்து நமக்கு நாமே மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

ஆனால் பாதரின் விசித்திரமான குணத்திற்கு சிறந்த உதாரணமாக ஊரார் அடிக்கடி பேசிக் கொள்ளும் ஒரு சம்பவம் உண்டு. இந்தக் கதையை ஊரில் பலவிதமாக சொல்வார்கள். எனக்கு ஞாபகம் இருக்கும் அளவில் சொல்கிறேன்.

சில சிறுவர்கள் ஏதோ ஆலய வேலையாக பாதரை சந்திக்கச் சென்றிருந்தார்கள். அது பாதர் மதியம் சாப்பிட்டுவிட்டு தூங்கும் நேரம். எனவே அவர்கள் அவர் தூங்கும் அறைக்கு வெளியே வரவேற்பறையில் சத்தம் போடாமல் அமர்ந்து காத்திருந்தார்கள். அப்போது ஒரு பிச்சைக்காரி அங்கே வந்தாள். பாதரை விசாரித்தாள். அவர்கள் நிலைமையைச் சொல்லி தூங்குபவரை எழுப்ப முடியாது. போய்விட்டு பிறகு வரச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த பெண் கேட்கவில்லை. அவர்கள் பொய் சொல்லுகிறார்கள் என்று நினைத்து விட்டாளோ என்னவோ பிடிவாதமாக பாதரை கூப்பிடும்படி கேட்டுக் கொண்டே நின்றாள். இந்தத் தகராறு சப்தத்தில் பாதர் விழித்து விட்டார். வேலைக்காரனைக் கூப்பிட்டு என்னவென்று கேட்டார். அவன் விடயத்தை சொல்ல “ ஒன்றும் கிடையாது . போகச் சொல்லு!” என்றார் தூக்கம் கலைந்த கோபத்தில். அவனும் வந்து சொல்ல அப்போதும் அவள் “ சோறாவது போடுங்க சுவாமி!”என்று உரத்துக் கத்தினாள். அவ்வளவுதான். பாதருக்கு வந்ததே கோபம். “சோறா வேண்டும் இரு, வருகிறேன்” என்றபடி சமையலறைக்குள் போய் அடுப்பில் இருந்த சுடுதண்ணிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து அவள் முகத்திலே வீசிவிட்டார். எல்லோரும் அப்படியே விக்கித்துப் போய்விட்டார்கள்.
பொதுவாக சினிமாக்களிலும் நம் மனங்களிலும் பாதிரிமார்கள் என்றாலே கையில் பைபிளுடன் சாந்தமான முகத்துடன் பின்னணியில் தேவாலயம் தெரிய ஆலய மணி ஒலிக்கும்படியாகத்தான் கற்பனை தோன்றும். ஆனால் அவர்களும் மனிதர்கள்தான். சாதாரண மனிதர்களின் கோபதாபங்கள், நேசபாசங்கள் அவர்களுக்கும் உண்டு என்பதை நான் இத்தால் புரிந்துகொண்டேன்...

ஆனால் மேற்படி சம்பவத்தை வைத்துக் கொண்டு அவர் கஞ்சன் என்று முடிவெடுத்துவிடாதீர்கள். அவரும் தாராளமாக தானம் செய்துதான் இருக்கிறார். மனிதர்கள் தங்கள் சமுதாயத்தில் எந்த முகமூடியை அணிந்துகொண்டு நடமாடினாலும் தனிமனித அடிப்படை உணர்ச்சிகளை கட்டுப் படுத்துவது மிகக் கடினம்தான்.

பாடசாலையில் முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நண்பகல் பன்னிரண்டு மணியுடன் பாடசாலை முடிந்துவிடும். நான் அவ்வகுப்புகளில் படிக்கும்போது, எனக்கு பாடசாலை முடிந்தபின்பும் அண்ணாக்களுக்கு வகுப்புகள் நடைபெறுவதைப் பார்த்து ‘அதெல்லாம் பெரிய வகுப்புகள், பெரிய படிப்பு’ என்று எண்ணிக் கொள்வேன். அதனால் மூன்றாம் ஆண்டில் முதலாம் நாள் இடைவேளைக்கு வீட்டிற்கு சென்று பின் திரும்பவும் பாடசாலை செல்ல வேண்டும் என்று சொல்லி என்னை அண்ணா கூட்டிச் சென்றபோது முதன் முதலாக நான் ஒரு படி நிலை உயர்ந்தது போலவும் மறுபடியும் புதிதாக பாடசாலை செல்வது போலவும் உணர்ந்தேன். அந்த நாளும் என் மனதில் பசுமையாக நிற்கின்றது.

இதனை படிப்பவர்களுக்கு இதெல்லாம் முக்கியமான சம்பவங்களாக படாமல் இருக்கலாம். ஆனால் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா? மிகச் சிறுவயதில் நடந்த சில அற்ப சம்பவங்கள் கூட வாழ்க்கையின் அரைவாசியைக் கடந்தபின் நினைத்து பார்க்கும்போது நெஞ்சில் ஒரு பரவசம் பரவுகிறது. நான் ஏற்கனவே கூறியது போல நான் சிறுவயதில் நம்பியதைப் போல நான் ‘பெரிய ஆளாக’ வரமுடியாமற் போனாலும் அதன் ஞாபக அலைகள் தரும் சுக உணர்வை நான் இழக்க விரும்பவில்லை. அதனால் இனிவரும் வருடங்களில் நான் அவற்றை மறந்துவிடக்கூடாது என்பதனாலேயே இப்பதிவுகள் இடம்பெறுகின்றன. அவை மூன்றாம் நபரான உங்களுக்கு சிலவேளை சுவாரசியப்படாமல் போகலாம்...என்ன செய்வது? நாம் வாழ்ந்தோம் என்பதற்கான ஆதாரமே நமது வாழ்வின் கடந்த கால நினைவலைகள்தானே...!

அப்புறம் எங்கள் ஊரின் சிறப்பு பெற்ற குளியல்தலமான பள்ளமடுக் குளத்தைப் பற்றி சொல்லியே ஆக வேண்டும். அது ஊரிலிருந்து ஒரு கிலோமீட்டர் தள்ளி அமைந்திருக்கிறது. அதன் பக்கத்திலேயே குடி தண்ணீர்க் கிணறு ஒன்றும் இருக்கிறது. ஊர் மக்களின் தாகத்தை தீர்க்கும் ஒரே அமுத ஊற்று அதுதான். சைக்கிள்களின் பின் கரியரில் இரு குடங்களைக் கட்டக் கூடியவாறாக இரு பக்கமும் அரை வட்டமாக வெட்டப்பட்ட பலகை ஒன்று இருக்கும். அதில் நீர் நிரப்பப்பட்ட குடங்களுடன் சைக்கிள்கள் ஊருக்குள் நுழைவதும் வெளியேறுவதும் வாடிக்கை காலைக்காட்சி. அக்குளத்தில் அப்பாவின் முதுகில் ஏறியபடி நீண்டதூரம்(?) நீந்தியது ஞாபகமிருக்கிறது. குளத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே படித்துறைகள் உள்ளன. அப் படிகளில் நின்று குளத்திற்குள் பாய்வதும் குளத்தின் நடுவே உள்ள மரம் வரை நீந்தி அதன் கிளைகளில் ஏறி பின் குதிப்பதும் அப்போது அதி சாகச வீரங்கள்.
ஊரிலிருந்து அக்குளத்திற்கு போகும் வழியில் தரவை எனப்படும் பரந்த வெட்டவெளி ஒன்று வரும். சில காலங்களில் காற்று அதிகமாக வீசினால் அதனுடாக யாரும் பிரயாணிக்க முடியாமல் போகும். சைக்கிளை எதிர்க் காற்றிற்கு மிதிக்க முடியாது. அத்துடன் கடுங்காற்றினால் மேலெழுந்து வேகமாக வரும் மணல் துகள்கள் கால்களில் முட்களைப் போல குத்திச் செல்லும். இயற்கையுடன் சில சமயங்களில் வேறு வழியில்லாமால் சமரசம் செய்துகொண்டே ஆகவேண்டும் என்பது புரிந்தது.

எங்கள் ஊரின் ‘ராசுவைப்’ பற்றி சொல்லவேண்டும். எங்களுக்கு இரண்டு வீடு தள்ளி இருந்தார். வயது முப்பது இருக்கும். அவர் ஒரு மன நோயாளி. ஆனால் அது பேச்சில் அவ்வளவாக தெரியாது. ஒருவித அதி மேதாவித்தனம் தென்படும். உலக விடயங்களைப் பற்றி எல்லாம் பேசுவார். ஆனால் அவருக்கு அடிக்கடி காக்காய் வலிப்பு வரும். அதனால் எங்களுக்கு அவர் அருகில் இருந்து பேசுவதற்கே பயமாக இருக்கும்.

எங்கள் வீட்டுக்கு வந்து வேப்ப மரத்தின் கீழ் தேடித்தேடி வேப்பம் விதைகளைத் சேகரிப்பார். சிப்பிகள், வெற்றுத் தீப்பெட்டிகள் என எங்களுக்கு போட்டியாக நூற்றுக்கணக்கில் சேர்த்து வைத்திருந்தார்.
அந்நேரத்தில் 'எங்களையும் வாழவிடுங்கள்' என்ற பெயரில் விலங்குகள் நடித்திருந்த படம் ஒன்று வெளியாகியிருந்தது. மனிதர்கள் விலங்குகளை பிடித்து அவற்றைத் துன்பப்படுத்தி பிழைப்பு நடத்துவதையும் பின் விலங்குகள் ஒன்று சேர்ந்து போராடி இறுதியில் சுதந்திரம் பெற்று காட்டுக்கு திரும்புவதாக கதை செல்லும். அந்தப் படத்தை பற்றி அவர் மிக விருப்பத்துடன் விலாவாரியாக பேசுவார்.

ஒரு நாள் இரவு அவரது தாயார் தன் கோழியைக் காணவில்லை என லாம்பைப் பிடித்தபடி தேடினார். அது ஏன் எனக்கு இன்னும் மறக்காமல் இருக்கிறது என்றால் அதற்கு அடுத்த நாள் காலையில்தான் ராசு அண்ணன் ஆற்றில் இறங்கியபோது வலிப்பு வந்து தண்ணீருக்குள் விழுந்து மூச்சுத் திணறி இறந்து போனார்.

நான் இப்போது இக்காலப்பகுதியில் எனக்கும் என் நண்பனுக்கும் இருந்த ஒரு பழக்கத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன். அந்தப் பழக்கத்தைப் பற்றி நான் பிற்காலத்தில் யோசித்துப் பார்க்கும் போது அது எனக்கு வாழ்க்கையின் மிகப் பெரும் தத்துவங்களில் ஒன்றைக் கற்பித்தது.

நான் மூன்றாமாண்டில் படிக்கும் போது என் எதிர் வீட்டு நண்பன் ரஜினியும் நானும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டோம். பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் உடனடியாக சப்பாத்துக்களை கழற்றி வைத்து விட வேண்டும். சப்பாத்துக்களைக் கழற்றாமல் வேறு வேலை எதுவும் செய்யக்கூடாது. முக்கியமாக யாருடனும் எதுவும் பேசக்கூடாது. தவறினால் அடுத்த நாள் மற்றவருக்கு சொல்ல வேண்டும். எவ்வளவு வார்த்தைகள் பேசினோமோ அவ்வளவு குட்டுகள் மற்றவரிடம் வாங்கவேண்டும். இப்படி ஒரு 'த்ரிலான' யோசனையை சொன்னது சத்தியமாக நான்தான்!

அந்த யோசனையை கொஞ்ச நாள் செயற்படுத்தி மாறி மாறி கொஞ்சக் குட்டிக் கொண்டதும் ஞாபகமிருக்கிறது. நான் அவனோ ஒருவருக்கொருவர் பொய் கூட சொல்லித் தப்பித்திருக்கலாம். ஆனால் சொல்லவில்லை. சந்தோசமாக குட்டு வாங்கிக் கொண்டோம். (ஏன் என்று குழந்தை உளவியலாளர்கள் யாராவது இருந்தால் சொல்லுங்க..!)
மனிதனுக்கு சும்மா ஒரே மாதிரியாக இருக்க இயலாது என்றே நினைக்கிறேன். அது சந்தோசமான தருணங்களாக இருந்தால் கூட....!
சில சம்பிரதாயங்களை சடங்குகளை தவறாமல் கடைப் பிடிப்பதில் அவனுக்கு உள்ளூர ஒரு சந்தோசம் இருக்கிறது. அது இக்காலத்திற்கு பொருத்தமானதா அல்லது தேவையானதா என்று கூட பார்ப்பதில்லை...
மூன்றாமாண்டில் இன்னொரு சம்பவம். பாடசாலை மண்டபத்தில் ஏதோ ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நான் அருகில் இருந்த நண்பனுடன் பேசிக் கொண்டிருக்க ஆசிரியை கண்டுவிட்டார். என்னைக் கூப்பிட்டார். அடிக்கப் போகிறார் என்று நினைத்தேன். ஆனால் அதை விடக் கொடுமையாக முற்றத்து மணலில் முழந்தாளில் இருக்கும்படி கூறிவிட்டார். நாங்கள் கிறிஸ்தவர்கள். தேவாலயத்தில் நீண்ட நேரம் முழந்தாளில் இருந்து பழக்கம் இருக்கிறது. ஆனால் நேரமோ நடுப் பகல். மணல் கொதித்துக் கொண்டிருந்தது. போய் முழந்தாற்படியிட்டேன். நேரம் போகிறது... போகிறது.... ஆசிரியை என்னை மறந்தே போய்விட்டார். எனக்கோ அந்த நெருப்பு மணலில் தொடர்ந்து இருக்க முடியாமல் போனது. அதுவரையில் நான் ஆசிரியர், பெற்றோர் போன்ற 'பெரியோரின்' உத்தரவை மீறி பழக்கமேயில்லை. ஆனால் சூழ்நிலை அதை மீறச் செய்தது. என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று எழுந்து மறுபடி உள்ளே சென்றேன். ஆசிரியரும் என்னைக் கவனிக்கவில்லை. சாதாரணமாய் முடித்துவிட்டது அச்சம்பவம். ஆனால் இப்போது அதைப் பற்றி யோசிப்பேன். நான் செய்த சிறு தவறுக்கு ஆசிரியரின் இத்தண்டனை பெரியது. என்னை நீண்ட நேரம் கவனிக்காமல் விட்டது அவரது இன்னொரு தவறு. அதனாலேயே நீதி என்று எனக்கு சொல்லப்பட்டதையும் மீறும் துணிவு வந்தது. ஒரு தவறுதானே இன்னொரு தவறின் கருவறை.

வேறொரு நாள் பள்ளமடு குளத்தில் குளித்துவிட்டு வீட்டுக்கு போகாமல் நானும் என் நண்பன் ஒருவனும் என் சித்தப்பா வீட்டிற்கு வந்தோம். சித்தப்பா தன் வீட்டில் 'மினி' எனப்பட்ட சினிமா கொட்டகையை நடத்தி வந்தார். பெரிய டிவி மற்றும் டெக்கில் படம் காட்டினார். உள்ளே நுழைய ஐந்து ரூபாய். ஆனால் சிலவேளைகளில் என்னை சும்மா விட்டுவிடுவார். ஆனால் அன்று நான் அதிக தடவைகள் ஏற்கனவே பார்த்திருந்ததாலோ அல்லது என்ன காரணமோ உள்ளே விடாமல் வீட்டுக்கு போகச் சொன்னார். தடுத்தால்தானே இன்னும் ஆர்வம் வரும். வெளியே வந்து கொட்டகையின் மறு பக்கத்திற்கு வந்தோம். கொட்டகையின் அப்பக்கத்தில் சுவரின் ஒரு கல் பெயர்ந்து சதுரமாய் ஓட்டை ஒன்று இருந்தது. அதனூடாக பார்த்தால் டிவி தெரிந்தது. என் நண்பன் முண்டியடித்துக் கொண்டு முதலில் முகத்தை நுழைத்துப் பார்த்தான். நான் அவனைக் கெஞ்சிக் கேட்டு விலக்கி விட்டு என் முகத்தை நுழைத்தேன். கொஞ்ச நேரம் படம் பார்த்தேன்.

"டேய்,டேய், விடுறா நானும் பாக்கிறேன்!"
அவன் கத்த, சரி பாவம் என்று விடுவோம் என்று முகத்தை வெளியே எடுக்க முயற்சித்தால் முடியவில்லை.

சதுரத்திற்குள் மாட்டிக் கொண்டுவிட்டது. அதை எடுக்கப் பட்ட பாடு! அந்த நேரம் மனதில் தோன்றிய பயங்கர உணர்ச்சிகள்! அப்பா, சும்மா சொல்லக் கூடாது. பானைக்குள் தலை விட்டு மாட்டிக் கொண்ட கன்றின் தலையை வெட்டி எடுத்தது போலத்தான் எடுக்க வேண்டி வருமோ என்று கூட நடுக்கம் வந்தது. ஒருவாறாக பெரும்பாடுபட்டு எடுத்து விட்டேன். சாதாரணமாய் எடுத்திருந்தால் சாதாரணமாய் வந்திருக்கும். பதறிய காரியம் சிதறிப் போகும் என்ற பழமொழியை பயங்கரமாக அனுபவித்த நாள் அது!

ஒரு முறை பள்ளமடு குளத்தில் குளிப்பதற்காக நானும் குணமண்ணாவும் என் ஒன்றுவிட்ட தம்பி ஞானராஜும் சைக்கிளில் புறப்பட்டோம். தம்பி முன்னாலும் நான் 'பெரியவன்' என்பதால் முதல் தடவையாக பின்னாலும் ஏறிக் கொண்டோம். ஒரு வளைவில் திரும்பியபோது என் கால் சில்லுக்குள் சிக்கிக்கொண்டது. "அம்மா, ஐயோ ...!" என்று நான் கத்த, அண்ணா நிறுத்தி இறங்கிப் பார்த்த போது பின் பாதத்தில் ஒரு துண்டுப் பகுதி அப்படியே வெட்டப்பட்டு காணாமல் போயிருந்தது. இரத்தம் குபு குபுவென புறப்பட ஆரம்பித்தது. "ஆ ...ஆ ..." நான் வலியில் அரற்ற இப்போது அண்ணாவின் சைக்கிள் என்னை முன்னால் ஏற்றிக் கொண்டு குளத்தையும் தாண்டி வேகமாகப் பறந்தது. பள்ளமடு வைத்தியசாலையில் எனக்கு மருந்து போட்டு ஊசியும் குத்தி அனுப்பினார்கள். இந்த இரண்டிலும் அதிக வலி தரக்கூடியது காயத்திற்கு மருந்து போடுவதுதான். 'அது ஒரு காயம்; அதைத் தொட்டால் வலிக்கும்' என்ற எண்ணம் சற்றும் கூட இல்லாமல் இந்த இரக்கம் கெட்ட நர்சுகள் எப்படி அலட்சியமாக அதனைத் தேய்ப்பார்கள், தெரியுமா? போதாக்குறைக்கு,"ஏய், கால ஆட்டக் கூடாது...!" என்ற அதட்டல் வேறு...

பின்பு அக்காயத்திற்கு மீண்டும் இரண்டு மூன்று தடவை மருந்து கட்டப்போனபோது முதலில் காயத்திற்கு மருந்து போட்டுவிட்டு பின்புதான் ஒப்பீட்டளவில் வலி குறைவான ஊசி போடுவதற்கு போவேன். எனக்கு முதலில் பெரிய துன்பத்தை அனுபவித்து முடித்துவிட வேண்டும். அப்போதுதான் மிச்சமாக இருக்கும் சிறிய துன்பம் துன்பமாகவே தெரியாது. அதையே அனுபவித்து விட்டோம்...இது என்ன பெரிய...என்ற எண்ணமாக இருக்குமோ...என்னவோ...?!

இனி என்னைப் பாதித்த சில மரணங்கள்...
முதலாவது என் அப்பம்மா. எனக்கு அப்பம்மா என்றதும் ஞாபகம் வருவது அவரது மரண வீடு மட்டுமே. அது என் மனதில் ஆழமாக பதிந்ததற்கு காரணம் இருக்கிறது. நான் முதன் முதலாக ஒரு மரணவீட்டில் முழுமையாக கலந்துகொண்டது அப்போதுதான்.

புத்தருக்கு போதிமரத்தடியில் ஞானம் வந்தது போல எனக்கு இந்த வாழ்வின் இறுதிப் பயங்கர விதி அப்பம்மாவின் அடக்க நேரத்தில் அறிவுறுத்தப்பட்டது. ஒரு மனிதரை ஒரு சடப் பொருளைப் போல மதித்து வெள்ளைச் சேலையால் உடல் முழுதும் மறைத்து கட்டி சவப் பெட்டிக்குள் வைத்து அதனைக் குழிக்குள் இறக்கியபோது என் அடி வயிற்றில் ஏதோ செய்தது. முக்கியமாக முகத்தை மூடிக் கட்டியபோது எனக்கே மூச்சுத் திணறியது. சிலவேளை அவருக்கு மறுபடியும் உயிர் அல்லது சுயநினைவு வந்தால் எப்படி அவ்வளவு கட்டுகளையும் அவிழ்த்து எறிந்து சவபெட்டியை உடைத்து வெளியே வருவாரெனக் கவலைப்பட்டேன். எனக்கு அப்போது வாழ்வு முடிவதை விட அதன் இறுதிகட்டச் சடங்குகள் பெரும் பயத்தை ஏற்படுத்தின.

இரண்டாவது என் நண்பன் ஒருவன். அவன் பெயர் கூட மறந்துவிட்டது. நானும் அவனும் இன்னொருவனும் அடுத்தநாள் கோயில் பூசையில் உதவியாளர்களாக நேர அட்டவணையில் குறிக்கப்பட்டிருந்தது. எனவே முதல் நாள் அவனை சந்தித்து அதனைப் பற்றி பேசியிருந்தேன். அடுத்தநாள் பின்னேரம் படங்களில் வருவதைப் போல வானம் இருட்டி கடும் மழை பெய்தது. மழை விட்டதும் என் வீட்டினுள் நுழைந்த இன்னொரு நண்பன் அவனின் மரணச் செய்தியை அறிவித்தான். இருவரும் அவன் வீட்டை நோக்கி ஓடினோம். அவன் விறாந்தையில் கிடத்தப்பட்டிருந்தான். எல்லோரும் 'கோ'வென கதறி அழுது கொண்டிருந்தார்கள். அவனது அப்பா அவனுக்கு அருகில் இருந்த கதவில் சாய்ந்து நின்றபடி லாம்பு வெளிச்சத்தில் அவன் முகத்தையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களில் நீர் தேங்கியிருந்தது. அங்கு கேட்ட அவ்வளவு அழுகைச் சத்தத்தையும் விட அவரின் அந்த சிந்தாத கண்ணீர்த் தேக்கம் உறவு இழப்பின் தாக்கத்தை என்னுள் உறைக்க வைத்தது.

இதே போல சின்னய்யா மகன் மரணம்...
அவனை நினைத்தவுடன் ஞாபகம் வருவது அவன் ரேடியோவை எப்போதும் நோண்டிக்கொண்டிருப்பதுதான். அதிகபட்சம் இரண்டு வயதிருக்கலாம். ஏதோ நோயினால் இறந்து போனான். அவனை புதைத்த கல்லறையில் தொடர்ச்சியாக சின்னையா இரவு பகல் பாராமல் படுத்துக் கிடந்தார். புத்திர சோகம் பெரும் சோகம்தான்...
இன்னுமொரு மரணம் மனித ஆசைகளின் வீச்சைக் காட்டியது. யாரோ ஒருவர் எங்கள் ஊரில் இறந்து விட்டார். அவரை புதைப்பதற்கு எடுத்துச் செல்கிறார்கள். எங்கள் வீட்டுக்கு முன்னால் வரும்போது அம்மா அந்த விடயத்தைச் சொன்னார். வழமையாக புதைப்பதற்காக ஊர் வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்படும் எந்த சவப்பெட்டியும் மூடித்தான் இருக்கும். ஆனால் இவரது பெட்டியோ அவரது முழு உடலும் தெரியும்வண்ணம் திறந்திருந்தது. ஏனெனில் இறப்பதற்கு முன்பு அவர் அப்படி ஆசைப்பட்டாராம். தன் இறுதி ஊர்வலத்தில் தன்னை எல்லோரும் பார்க்க வேண்டுமென்றாராம். சற்றே ஆடியபடி சென்ற அவரது முகம் இன்னும் என்

மனக் கண்களில் ஆடுகிறது. அவர் இப்போது வானத்தில் இருந்தபடி தன் ஆசை நிறைவேறுவதைப் பார்த்து சந்தோசப்பட்டுக்கொண்டிருப்பார் என அப்போது நினைத்துக் கொண்டேன். அடப்பாவி மனுசா! இருக்கிற நேரம் எல்லா ஆசையும் பட்டுவிட்டு தின்று குடித்து ஆடிவிட்டு அடங்கவேண்டியதுதானே?! இறந்த பிறகு என்ன ஆசை இது?!

அடுத்து நான் சந்தித்தது ஒரு கொலை.
ஒரு நாள் எங்கள் வீட்டில் எல்லோரும் பரபரப்பாய் இருந்தார்கள். ஆளுக்காள் பேயறைந்த முகத்துடன் பார்த்துக் கொண்டார்கள். தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அரைகுறையாய் விளங்கியதில் மூன்று மாதத்திற்கு முன்னால் ஒரு போராளிக் குழுவினால் ஒரு குற்றம் சாட்டப்பட்டு கூட்டிச் செல்லப்பட்டிருந்த எங்கள் பெரியய்யாவை மறுபடியும் ஊருக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று புரிந்தது. யாரோ ஒரு பெரியவர் ஊரின் மையத்தில் இருக்கும் பிரதான பேரூந்து தரிப்பிடத்தை நோக்கி விரைய நானும் பின்னால் ஓடினேன். ஆனால் அரைவாசியில் அவர் என்னைக் கண்டுபிடித்து வீட்டுக்கு திரும்பிச் செல் என துரத்தினார். நானும் திரும்பினேன். ஆனால் பலர் அந்த திசையில் ஓடினார்கள். சற்று நேரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டன. பின் கதை தெளிவாக சொல்லப்பட்டது.
பெரியய்யா ஒரு துரோகி என தீர்மானிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்படுவதற்காக பேரூந்து தரிப்பிடத்தில் இருந்த தபால் பெட்டி தூணில் கட்டப்பட்டிருந்தார். போராளிக் குழுவில் இருந்த அவரது உறவினர் அவரைச் சுடுவதற்கு ஆயத்தமாக இருந்தார். சனங்கள் எல்லாம் ஆசையாய் பார்த்திருக்க, அவரது கடைசி ஆசை என்னவென்று கேட்கப்பட்டது. அவர் ஒன்றும் சொல்லாமல் கிறிஸ்தவ செபங்களைச் உரக்கச் சொல்ல ஆரம்பித்தார். வெடிகள் தீர்க்கப்பட்டன. வீட்டுக்குள் கொண்டு வந்து கிடத்திய பின்பும் அவரது மண்டையோட்டிலிருந்து ரத்தம் வந்து கொண்டேயிருந்தது. முதன் முதலாக ரத்தம் நிலத்தில் சிந்தாமல் இருப்பதற்காக கீழே ஒரு கோப்பை வைக்கப்பட்டதை கண்டேன்.

ஏற்கனவே மரணங்களில் அனுபவங்கள் இருந்ததினால் பெரியய்யா இனி வரமாட்டார் எனப் புரிந்தது. அதனை வெளி வாசலில் நின்றபடி என் நண்பனிடம் சொன்னது ஞாபகம் இருக்கிறது.
யார் குற்றவாளி, யாரில் தவறு என நான் ஆராயப்போவதில்லை. போர் என்றால் அதுதான். அப்படித்தான். அது இரு முனையிலும் கூர் கொண்ட கத்தி. அதற்கு அதுதான் தெரியும். அதனை விட்டு விடுங்கள்.
ஆனால் இச்சம்பவத்தில் என்னை உறுத்திய விடயங்களே வேறு. வன்முறை மனித மனங்களில் ஊறிப்போன ஒன்றா? அடி மனதின் ஆசைகளில் ஒன்றா? மனிதனின் பிறப்பியல்பா? சுடப்பட்டவர் ஏதாவது தவறு செய்திருக்கலாம். ஆனால் அவர் தனது கொள்கையில் உறுதியாய் இருந்தார். சாகும்போது கூட தன்னில் குற்றமில்லை என்றுதான் நினைத்திருக்கிறார். ஏனெனில் அந்த எழுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட கிழவர் ஏதோ மகான் சாவது போல தன் மரண நேரத்திலும் பக்திமான் போல செபங்களை உரக்கச் செபித்தார். மறுபக்கத்தில் சுட்டவரும் தன் கொள்கையில் உறுதியாய் இருந்திருக்கிறார். தான் சார்ந்திருந்த குழுவின் கொள்கைக்காக உறவுகளைக்கூட இந்தளவுக்கு துச்சமாய் மதிக்கிறேன் என நிருபிப்பதற்காக தன் உறவினரையே அவர் சுட்டார். கொள்கை மயக்கத்திலிருந்த இந்த இருவரின் செயல்களை விட்டுவிடுவோம். ஒரு உயிர் துடிதுடித்து இறப்பதை வேடிக்கை பார்த்த அந்த மக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? கதைகளிலும் சினிமாக்களிலும் கேட்க மற்றும் பார்க்கக் கூடிய மரணங்களை அதாவது வன்முறையை நேரில் பார்ப்பதற்கு அவர்களுக்கு அவ்வளவு ஆசை இருந்திருக்கிறது. இல்லாவிட்டால் திரண்டு ஓடி வந்திருக்குமா?
எனக்கு நேர் மூத்த இரு அண்ணாக்களான தவம் மற்றும் சாந்தன் ஆகியோர் ஐந்தாம் ஆண்டு வரைதான் ஊரில் படித்தனர். ஆறாம் ஆண்டிலிருந்து அவர்கள் ஒருவர் பின் ஒருவராக 'மேற்படிப்புக்காக' மன்னாருக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் புனித டிலாசால் மாணவர் விடுதியில் தங்கியபடி அதனுடன் இணைந்திருந்த புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் படித்தனர். விடுமுறைக்கு ஊருக்கு வந்து போவார்கள். ஆனால் என் முறை வந்தபோது அதில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது. அதைச் சொல்வதற்கு முன் என் ஐந்தாம் வகுப்பைப் பற்றி சொல்லவேண்டும்...

எல்லோருக்கும் ஐந்தாம் வகுப்பில் வரும் அந்த 'சோதனை' எனக்கும் வந்தது. 'ஸ்கொலசிப்' எனப்படும் புலமைப் பரிசில் பரிட்சை. எந்தப் புண்ணியவான் கண்டுபிடித்தானோ?
எங்கள் ஊர் மக்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பில் வெகு கவனமாய் இருந்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஒவ்வொரு தவணை முடிந்து விடுமுறை விடும் தினங்களில் ஊரில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பெற்றோர்கள் நிற்பார்கள். பாடசாலையிலிருந்து வரும் ஒவ்வொரு பிள்ளையினதும் 'ரிப்போட்டிலும்' பரீட்சை புள்ளிகள் மற்றும் வகுப்பில் அப்பிள்ளை எத்தனையாவது 'பிள்ளை' என்பவற்றை ஆராய்வார்கள். பாராட்டுவார்கள். திட்டுவார்கள். வீதியால் போகும் யாரோவெல்லாம் 'ரிப்போட்டை' வாங்கிப் பார்த்துவிட்டு திட்டிவிட்டு போவார்கள்.
என்ன காரணத்தாலோ என் அண்ணன்கள் அளவுக்கு எனக்கு படிப்பு ஏறவில்லை. அந்த ஸ்கொலசிப் பரீட்சை எழுதியது கூட எனக்கு ஞாபகம் இல்லை(அவ்வளவு அக்கறை!). ஆனால் நான் அதில் பெயிலானதும் எல்லோரும் என்னிடம் ஞானசீலனின் (அப்பா!) குடும்பத்தில் இப்படி ஒரு நிலையா என்று 'உச்' கொட்டியது நன்றாக ஞாபகம் இருக்கிறது.
நான் வழமையாக வகுப்பில் பத்திற்குள் வந்து விடுவேன். ஆனால் அது யாரிடமும் எடுபடாது. (நான் ஒரே ஒரு தடவை மூன்றாமாண்டில் முன்றாம் தவணையில் இரண்டாவது பிள்ளையாக வந்திருக்கிறேன். அதைத்தவிர

வாழ்க்கையில் முதல் மூன்றுக்குள் வந்ததேயில்லை!) என் அண்ணாக்கள் எப்போதும் முதலாம் பிள்ளையாக வரும்போது நான் நாலாம் பிள்ளை என்றால் எடுபடாதுதானே?
என் குடும்பத்திலேயே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்தாவதாகிய நான் மட்டுமே பெயிலானேன் (என் அருமை தங்கச்சி இந்த சாதனையையும் பின்பு முறியடித்தது வேறு விடயம்!). ஆனால் என் அப்பா ஓர் அரசாங்க உத்தியோகத்தராய் இருந்ததினால் புலமைப் பரிசில் பணம் எதுவும் கிடைப்பதில்லை. போய்த் தொலையட்டும்!
பொதுவாக சின்ன வயதில் ஆளாளுக்குள் பட்டப் பெயர் சொல்வது வழமை. ஆனால் எங்கள் ஊரில் அது தொன்று தொட்டு மாறாத 'பட்டப்' பாரம்பரியமாக இருந்தது. சின்னய்யா எங்கள் குடும்பத்தினர் ஒருவரைக் கூட விட்டு வைக்காமல் பட்டம் வைத்தார். அவற்றை சொன்னால் அடி விழும். அதனால் வேண்டாம்! எனக்கு அவர் வைத்தது 'வடந்து!'
என் பக்கத்து வீட்டு நண்பனுக்கு 'மண்ணெண்ய் புஸ்!' என்றார்கள். ஏன் என விளக்கம் கேட்டபோது அவன் தவறுதலாக மண்ணெண்ணை குடித்து விட்டு ஓடி வந்து தன் அக்காவிடம் 'மண்ணெண்ணை புஸ் மண்ணெண்ணைபுஸ்!' என்று உளறினானாம்!
ஒரு சமயம் எனக்கு ஒரு பட்டமும் இல்லை என்பதை அவதானித்த நண்பர்கள், வசந்தன் - 'வடை' என்று வைத்தார்கள். பட்டம் வைப்பதற்கும் நியாயம் வேண்டாமா? முதலெழுத்து பொருந்துவதற்காக எல்லாமா அப்படி வைப்பார்கள்?!
இந்த 'பட்டம் தெளிப்பது' அந்த வயதில் மற்றவர்களை உடனடியாக தாக்கும் இலகுவான ஆயுதமாக இருந்தது. வேறெந்த அவமானத்தையும் விட மிகப்பெரிய அவமானமாக இருந்தது! நமக்கு வைக்கப்பட்ட பட்டப் பெயரை நாமும் ஏற்றுக் கொண்டு விடுகிறோம். பின் யார் அதனை சொன்னாலும் நமக்கு கோபம் வந்துவிடுகிறது. 'நீ சொன்னால் சொல்லி விட்டு போ' என்று சொல்லிவிட முடிவதில்லை. என்ன இழவு உளவியல் இது?!

ஒரு நாள் சின்னய்யா சொன்ன வசனம், மனிதர்கள் சக மனிதர்களை புரிந்து கொள்வதில் விடும் தவறு பற்றி புரிந்துகொள்ள உதவியது!
பொதுவாகவே நான் ஒரு 'வெக்கறை' பிடித்தவன். அதனால் புதியவர்கள் அல்லது பலர் பேசும் இடத்தில் மௌனமாகவே இருப்பேன்.

ஒரு நாள் சின்னய்யாவும் உறவினர்களும் இருந்து பேசும்போது ஏதோ கதை சொல்லி சிரித்தார்கள். நானும் புன்னகைத்தேன். உடனே சின்னய்யா," இஞ்ச பார் வடந்திர சிரிப்ப...!" என்றார். உடனே என்னை எல்லோரும் பார்த்தார்கள். இதில் என்ன இருக்கிறது என்கிறீர்களா?

நாம் எல்லோருமே நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொருவரைப் பற்றியும் ஒரு கருத்து வைத்திருக்கிறோம். இவர் இப்படிப்பட்டவர்;இந்த இந்த குணங்களை கொண்டவர்; பயந்தவர்; வீரமானவர்; இளிச்சவாயன், உம்மணாம்மூஞ்சி.... இன்னும் பலப்பல...

ஆனால் அது உங்கள் உங்கள் பார்வையில் தான் அப்படி . அந்த நபர் வேறு வேறு நபர்களிடம் வேறு வேறு தருணங்களில் வேறு வேறு இடங்களில் நீங்கள் அவரிடம் அறிந்திராத குணாம்சங்களை கொண்ட மனிதராக வாழ்ந்து கொண்டிருக்கலாம். அது உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

என்னை அதிகமானோர் கணித்திருப்பது... நான் ஒரு அப்பாவி. கூச்ச சுபாவி. அவர்களின் அந்த எண்ணத்தை உடைக்கும் வகையில் நான் செயற்படும் போது வினோதமாக பார்க்கிறார்கள். சில நேரங்களில் அதனை நம்ப இயலாமல் தங்கள் நம்பிக்கையை மாற்ற இயலாமல் எதிர்வினை ஆற்றி தங்கள் நம்பும் அதே குணங்களை கொண்டவனாக நான் இருக்குமாறு மறைமுகமாக வற்புறுத்துகிறார்கள். இதனை என் வாழ்நாள் முழுவதும் எதிர்கொள்கிறேன்.

அதில் முதலாவது அனுபவமாகவே சின்னய்யா சொன்னதை பார்க்கிறேன். நீ அப்பாவி. அப்பாவியாகவே இரு. இந்த சூழலில் நீ சிரிக்கக் கூடாது. ஒன்றுமே புரியாதவனாக வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது அதன் மறைமுக அர்த்தம். நான் சொல்வது சற்றுப் புரிந்து கொள்ள கடினமாக இருந்தால் இப்போது விட்டு விடுங்கள். இதனை புரிய வைக்கக் கூடிய என் அனுபவங்கள் பல பின்னால் உங்களுக்காக காத்திருக்கின்றன!

இந்த வேளை யுத்தம் பற்றிய எனது ஆதி ஞாபகங்கள்.

"ஆமிக்கும் இயக்கத்துக்கும் சண்டையாம்!"

"இத்தனை பேர் செத்திட்டாங்களாம். இத்தனை பேர் காயமாம்"

எனக்கு நினைவு அதிகமாக கேட்ட செய்திகள் இவை.

ஒருநாள் ஒருவன் “ஆமிக்காறன் வாறனாம்!” என்று வீதியால் கத்தியபடி ஓடினான். எல்லோரும் பரபரப்பாகி அவன் சும்மா பயமுறுத்த சொன்னானாம் என்று தெரிந்து எல்லோரும் அவனைத் திட்டிய ஞாபகம்.

அப்போது இந்திய இராணுவம் இலங்கையில் ‘அமைதிப்படை’ என்ற பேருடன் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது! அவர்களை பற்றி பல கதைகள் உலாவின. அவற்றுள் இரண்டு .

ஒன்று...

அவர்கள் முதன்முறையாக யாழ் சென்றபோது மக்களின் வீடு மற்றும் டேப் றெக்கோடர் ரேடியோ டிவி போன்ற வசதிகளை பார்த்து விட்டு ‘நன்றாகத்தானே இருக்கிறார்கள். பிறகு ஏன் தனிநாடு கேட்கிறார்கள்?’ என்று கேட்டார்களாம்.

இரண்டாவது...

“இந்திய இராணுவத்தில் சீக்கிய இராணுவப் பிரிவு ஒண்டு தனியாக இருக்குதாம். அவங்க எப்பயும் ஒரு கத்தி வைச்சிருப்பாங்களாம். அதனை எப்பயாவது உறையிலிருந்து வெளியே எடுத்தால் இரத்தம் பார்க்காமல் உள்ளே வைக்க மாட்டாங்களாம்!”

“அப்படி எதிரிகள் யாரும் கிடைக்கேல எண்டால்?”

“தங்கட கையையாவது வெட்டி இரத்தத்தை பாத்த்திட்டுத்தான் உள்ள வைப்பாங்களாம்!”

நான் ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்ததும் ‘குடும்பப் பாரம்பரியப்படி’ என்னை மட்டுமே மன்னாருக்கு அனுப்பாமல் என் குடும்பமே அங்கு ‘இடம்பெயரத்’ தீர்மானித்தது. என் அப்பா மாந்தையில் ஒரு விவசாயப் போதனாசிரியராக வேலை செய்தார். மன்னாரில் அவருக்கு ஓர் அரச விடுதி கிடைத்தது. எனவே அவர் மன்னாரிலேயே நிரந்தரமாக தங்கத் தீர்மானித்தார்.
எனக்கு நினைவு தெரிந்து முதன்முதலாக வீடு மாறியது அப்போதுதான். ஆனால் நான் ஊரைவிட்டுப் போகிறோம் என்று கவலைப்பட்டதாய் ஞாபகம் இல்லை. கவலைப்பட்டிருந்தால் நிச்சயம் ஞாபகம் இருந்திருக்கும்!
அந்த விடுதி ‘அரச சடங்குகள்’ முடித்து எங்களுக்கு கிடைக்கும் வரை தற்காலிகமாக ஒரு மாதம் உப்புக்குளத்தில் எங்களூரிலிருந்து ஏற்கனவே ‘இடம்பெயர்ந்து’ அங்கு வீடு கட்டியிருந்த புஸ்பமக்கா வீட்டில் தங்கினோம். அங்குதான் முதன்முதலாக பல் துலக்குவதற்கு பற்பொடியைத் தவிர பற்பசை மற்றும் தூரிகை ஆகியவற்றையும் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்தேன்!
என் மன்னார் வாழ்க்கையை ஆரம்பிக்க முன் மன்னாரை பற்றிச் சொல்லவேண்டும். மன்னார் மிக பழமையான நகரம். அதன் பழங்கால வரலாறு, அரசர்களின் சாதனைகள் மற்றும் சறுக்கல்கள், பாரம்பரியம், புவியியல் அமைவிடம் ஆகிவற்றைப் பற்றி சொல்லப் போவதில்லை. வேண்டுமென்றால் நேரே போங்கள் விக்கிபீடியா.கொம். ஒன்றே ஒன்று சொல்லலாம். வெயிலுக்கு பேர் போன இடம். ஆனால் மன்னார் எனக்குப் பிடித்தமான நகரம். நான் பிறந்த ஊரின் நகரம் என்பதால் அல்ல. அது ஒரு நடுத்தர நகரம். அதில் போக்குவரத்து நெரிசல் அதிகமில்லை. அளவான வாகனங்கள். பொது வைத்தியசாலையில் ஜனங்கள் நிரம்பி வழிவதில்லை. அளவான நோயாளிகள். அளவான வைத்தியர்கள்(!) தேவைக்கேற்ற அல்லது சற்றே அதிகமான பாடசாலைகள். பல்லின மக்கள். குறைவான காணி விலைகள்.

அரிதாக நடக்கும் சமய மோதல்கள் என அமைதியாக வாழ்வதற்கு உகந்த இடம்.
உப்புக்குளத்தில் ஓரளவு வசதியான மூன்று அறைகள், விறாந்தை, சமையலறை கொண்ட அளவான வீடு. ஆனால் அட்டாச் பாத்ரூம் என்று தற்போது ஸ்டைலாக அழைக்கப்படும் முறையை முதன்முதலில் பார்த்தேன்... என்னடா இது கக்கூசை வீட்டுக்குள் கட்டி வைச்சிருக்காங்க...அதுவும் கிச்சினுக்கால் பக்கத்தில...என்று அசௌகரியப்பட்டேன். போன புதிதில் போகவே வெட்கம்.

வீட்டின் முன் வாசலைத் திறந்தால் ஒரு குளம் (ஊரின் பெயர் உப்புக்குளம் என்றால் இப்படியா?!). அருகில் சித்தி விநாயகர் கோயில் மற்றும் பாடசாலை. அங்கிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் நான் படிக்கப் போகும் பாடசாலை. புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி. முதல் நாள் பாடசாலைக்கு அங்கேயும் அப்பாதான் என்னை அழைத்துச் சென்றார்.

நான் படித்த பாடசாலைகளிலேயே மிகப் பெரியது அதுதான். நூற்று ஐம்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. இலங்கையின் புகழ் பெற்ற பாடசாலைகளில் அதுவும் ஒன்று. அங்கு படித்தவர்களுக்கு மற்றப் பாடசாலைகளில் படித்தவர்களைவிட கூடுதல் மரியாதை இருந்தது உண்மை. நான் சேரும்போது யூட் மாஸ்டர் அதிபராக இருந்தார். அவர் ஒரு அறையில் அமர்ந்து கொண்டு ஒவ்வொரு பெற்றோராக உள்ளே

அழைத்து 'நேர்முகம்' கண்டுகொண்டிருந்தார். அங்கு பேசியவை ஞாபகமில்லை. என் அண்ணாக்கள் அங்கே ஏற்கனவே படித்ததாலும் அதுவும் நன்றாவே படித்ததாலும் நானும் நன்றாகவே படிப்பேன் என்று நம்பி என்னை சேர்த்திருக்க வேண்டும். பாவம்!

ஆறாம் ஆண்டு வகுப்பில் முதன்முதலாக அறிமுகமே இல்லாத மாணவர்களுடன் அமர்ந்தேன். ஒரு வகுப்பில் ஏபிசிடி என நான்கு பிரிவுகள் இருக்குமா என ஆச்சரியமாய் இருந்தது. பாடங்களையும் இன்ன பிற நடைமுறைச் சொற்களையும் ஆங்கிலத்தில் பாவிப்பதை கேட்கையில் வேறு ஒரு உலகிற்கு வந்த உணர்வு. அதிகமாக வெள்ளை உடுப்பு பிரதர்களின் கற்பித்தலில் என் இரண்டாம்நிலை கல்வி இனிதே ஆரம்பித்தது... மன்னாரில் நாங்கள் இருந்த வீட்டுக்கு பக்கத்து வீட்டில் ஒரு குடும்பம் இருந்தது. அப்பா, அம்மா, மகன், மகள் என அளவான குடும்பம். அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து போவார்கள். ஆனால் நாங்கள் ஒருநாள் கூட அவர்கள் வீட்டிற்கு சென்றதில்லை.

விடத்தல்தீவில் இருக்கும்போதே அம்மா எங்களை பிற வீடுகளுக்கு செல்ல விடமாட்டார்.

"ஆற்ற வீட்டையும் போய் அவங்களுக்கு கரைச்சல் குடுக்கக் கூடாது. அவங்க வீட்டில சாப்பிடக் கூடாது." என்ற அம்மாவின் குரல் இன்றும் எனக்கு கேட்கிறது. சுற்றியிருந்த குடும்பங்களின் அத்தனை பிள்ளைகளும் எங்கள் வீட்டிற்கு உரிமையாய் வந்து போவார்கள்.
ஆனால் நாங்கள் போனதேயில்லை. அதிலும் ஆம்ஸ்ராங் அண்ணா (*1969* இல் பிறந்தவராம்!) நேரடியாக எங்கள் வீட்டு குசினிக்குள்ளேயே சென்று சாப்பிட்டுப் போகும் அளவுக்கு அவரது நெருக்கம் இருக்கும்.

இதில் மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதை ஏற்கலாம். ஆனால் இதனால் எங்களின் சமூகமயமாக்கல் வெகுவாக பாதிக்கப்பட்டதை எங்கள் பெற்றோர் உணரவில்லை. கிட்டத்தட்ட எல்லா வெளிவேலைகளையும் அம்மாவே செய்துவிடுவார். பக்கத்துக் கடைக்குப் போதல், அல்லது பக்கத்து வீட்டிற்கு அப்பம் கொண்டு போய்க் கொடுத்தல்
போன்ற ஒரு சில வேலைகளையே நான் செய்வேன். இதனால் ஊரில் '
ஞானசீலன்ர மக்கள் எண்டால் அவ்வளவு அருமையான மக்கள். யாருடைய கரைச்சலுக்கும் போகாதுகள்' என்ற நல்ல பெயர் நிலவியது. நல்ல பெயர் வாங்கியவர்கள் அதனால் எவ்வளவு
கஸ்ரப்படுவார்கள் என்று அவர்களைக் கேட்டால்தான் தெரியும்!

ஒரு தந்திரம் தெரியாது. வீட்டில் விசேட வைபவங்கள் இடம்பெறாததால் விருந்தினர்களை எப்படி வரவேற்று உபசரிப்பது, எப்படி பேசுவது, பழகுவது போன்ற அடிப்படை சமூகமயமாக்கல் தகமைகளை இழந்தேன். நல்ல பிள்ளையாக இருக்க மற்றவர்களை நேரடியாக எதிர்க்கும் வீரத்தை இழந்தேன். இது என் பரம்பரை அலகினாலும் வந்திருக்கலாம். என் அப்பா மிகவும் சாதுவானவர்.

ஒரு தடவை என்னை விட ஓரிரு வயது குறைந்த சிறுவனொருவன் விளையாட்டுத்
தகராறினால் நான் எதிர்த்துப் பேச என் அருகே வந்து என் கைப் பெரு விரலை கையின் பின்புறமாக அழுத்திவிட்டான். இரண்டு நாளைக்குப் பிறகு அந்த வலி போய்விட்டாலும் அவனை ஏன் நான் திருப்பி அடிக்கவில்லை; நான் ஒரு
கோழையா என்ற வேதனை கடுமையாக இருந்தது. இப்போதும் அது சில நேரங்களில் வலிக்கும்.

அந்நேரத்தில் மன்னார் பொது விளையாட்டரங்கில் ஓர் இசை விழா இடம்பெற்றது. மிகவும் கோலாகலமாக சனநெரிசலுடன் நடந்தது. அது விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி. வழியெல்லாம் இயக்க உறுப்பினர்கள் ஆயுதத்துடன் காவல் நின்றார்கள். 'தேனிசை செல்லப்பா' என்ற பிரபல இயக்கப் பாடகர் அங்கு பாடினார். அவரைப் புகழ்ந்து பேசியவர்கள் அவரது பெயரை வைத்து வார்த்தை விளையாடினார்கள். செல் வருகிறது அப்பா என்றும் இங்கிருந்து கெதியாகச் செல்லப்பா என்றும் பொருள் என்றார்கள். அதுதான் நான் முதலில் பார்த்த இயக்கம்சார் விழா என நினைக்கிறேன்.

பிறகு ஒரு மழை நேரம் மறக்க முடியாதது. அன்று மிகவும் கடுமையாக மழை பெய்தது. ஒரே நாளிலேயே வீட்டின் முன்னால் இருந்த குளம் நிரம்பிவிட்டது. மழை விட்டதும் நானும் தங்கச்சியும் அங்கு போய் பேப்பரில் கப்பல் விட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். திடீரென குளத்தின் மறுகரை வழியே ஆமிக்காரர்கள் ஆயுதங்களுடன் ஓடி வருவதைக் கண்டோம். ஒரு கணம் மூச்சு நின்றுவிட்டது.

அவர்கள் எங்களை சுடுவதற்காக ஓடிவருவதைப் போல இருந்தது. இருவரும் விழுந்தடித்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினோம்.
எங்களைத் துரத்திக் கொண்டு வீட்டுக்குள் வருவார்கள் என சினிமாத்தனமாக எண்ணினேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

ஆனால் இலங்கையில்
என் இளமைப் பருவம் முழுவதும் எந்த நிமிடமும் எந்த அசம்பாவிதமும் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புடன்தான் கழிந்தது என்றால் அது மிகையல்ல.

பின்பு இராணுவத்திற்கும் இயக்கத்திற்கும் சண்டை மூண்டது. நாங்கள் மன்னார் போய் மூன்று மாதங்களுக்குள்ளாகவே அங்கு தொடர்ந்து இருக்க முடியாமல் போய்விட்டது. மன்னார் தீவிலிருந்த மக்கள் இலங்கைத் தீவின் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயரத் தீர்மானித்தார்கள்.
அதற்காக மன்னார்த் தீவின் முனைக் கடற்கரையில் உள்ள பள்ளிமுனையில் நாங்கள் கூட்டம் கூட்டமாக காத்திருந்தோம். இருந்த படகுகளில் மீனவர்கள் மக்களை ஏற்றி இறக்கினார்கள்.
எங்கள் குடும்பமும் பிரயாணித்தது. அது ஒரு பத்து கிலோமீட்டர் இருக்கலாம். ஒரு கட்டத்தில் படகு பயணிக்க முடியாத அளவு
குறைந்த கடல் மட்டம் வந்ததும் இறங்கி கரை வரை நடந்தோம். அது மாதோட்டம் எனப் புகழ் பெற்ற மாந்தை எனும் ஊர். நாங்களும் இன்னொரு குடும்பமும் ஒரு மரத்தின் கீழ் சென்று இளைப்பாறினோம்.

சற்று நேரத்தின் பின் அந்த ஊரைச் சேர்ந்த ஒருவர் வந்து “வாங்க” என்று அழைத்தார். அவர் எங்களுடன் இருந்த யாரோ ஒருவருக்கு தெரிந்தவர் என நினைத்து போனோம். ஆனால் அழைத்தவரின் வீட்டில் வந்த அகதிகள் அனைவருக்கும் சாப்பாடுகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த வீட்டுக்காரர் அவ்வளவு பணக்காரர் இல்லை. மத்தியதர வர்க்கம்தான். இருந்தாலும் அவர்களது இரக்கம் , உபசரிக்கும் பண்பு ஆச்சரியப்பட வைத்தது.

நாங்கள் மறுபடியும் எங்கள் ஊரைச் சென்றடைந்தோம். அங்கும் வெவ்வேறு
ஊர்களிலிருந்து இடம்பெயந்து வந்த மக்கள் ஊர் மக்கள் எல்லோரது வீடுகளிலும் தங்கி இருந்தார்கள். அப்படி ஒரு சமூகச் சூழல் அமைவது அரிது. எனக்கும் புதிது. ஒரு வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் கலந்து வசித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

அந்த நேரத்தில் நான் ‘புத்திசாலி’ என்று நானே கர்வப்பட்டுக் கொண்ட சில சம்பங்கள் ஞாபம் வருகின்றன. படித்துவிட்டு சிரிக்காதீர்கள். அப்போது நான் சிறுவன் என்பதை மறக்காதீர்கள்.

ஒரு தடவை சிறுவர்களாகிய நாங்கள் வீட்டில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு நாளும் சாப்பாட்டில் மரக்கறி இருக்குமோ இல்லையோ கடற்கரை கிராமம் என்பதால்
மீன் இருக்கும் (மீனின் வால் துண்டுப் பகுதிக்கு போட்டியும் இருக்கும்). ஆனால் சிலருக்கு மீன் பிடிக்காது. சிறுவர்கள் மீன் சாப்பிடாமல் இருந்தால் அம்மாக்கள் திட்டுவார்கள். மற்ற பிள்ளைகள் பயந்து சாப்பிட்டு விடுவார்கள். நான் மீனின் ஒரு பக்கத்தை சாப்பிட்டுவிட்டு சாப்பிடாத பகுதியை மற்றவர்களுக்கு தெரியுமாறு வைத்துக் கொள்வேன். பின் அவர்களிடம் “ பார்த்தீங்களா.நீங்கள் எல்லோரும் சாப்பிடு விட்டீங்க, நான் சாப்பிடேல...நீங்க சரியான
பயந்தாங்கொள்ளிகள்.!” என்பேன். உடனே அவர்கள் அம்மாக்களிடம் முறையிட அவர்கள்
வருவதற்குள் மீனை பிரட்டி போட்டுவிடுவேன். அதில் மீன் சதை இல்லாததால் அம்மாக்கள் திட்டாமல் போய்விடுவார்கள்.

இன்னொன்று எங்களின் கண்ணாமூச்சி விளையாட்டு. அவ்விளையாட்டில் நான் மட்டும் பிடிபட மாட்டேன். ஏனென்றால் நான் ஒளிந்து கொள்ளும் இடம்
வீட்டுக்கு வெளியே தனியாக இருந்த பாத்ரூம். அதுவும் கதவை திறந்தே வைத்திருப்பேன். அதனால் கண்டுபிடிப்பாளர் கதவை யாரும் திறந்து வைத்துக் கொண்டே ஒளிந்திருக்க மாட்டார்கள் என எண்ணி எட்டிப் பார்க்காமலே போய் விடுவார்கள். ஒரு தடவை கூட பிடிபடாமல் அலுத்துப் போய் நானே போய் ரகசியத்தை உடைத்து புத்திசாலித்தனத்தை பறைசாற்றினேன்.

இன்னொரு புத்திசாலித்தனம் தெனாலிராமன் வகையை சேர்ந்தது. எனக்கு பெட் காசு கிடைக்கவில்லை. நாங்கள் ஒருநாள் பேசிக் கொண்டிருக்கையில் பக்கத்து வீட்டு சுதாகரன் “எங்கட அப்பா ஒருநாளைக்கு பத்து கிலோ மீன் பிடிப்பார்” என்றார்.

“உங்கட அப்பாவால் அது முடியாது!” என்றேன்.

“ஏன்? சில நாட்களில் பதினைந்து கிலோகூட கொண்டு வருவார்”

“முடியாது. உங்க அப்பாவால் பத்து கிலோ மீன் பிடிக்கவே முடியாது” என்றேன் அறுதியும் இறுதியுமாக.

பெட் கட்டப்பட்டது. அடுத்த நாள் அவனது அப்பா மீன் கொண்டு வரும்போது கடற்கரைக்கு வரச் சொன்னார்.

“ஏன் நான் வரவேண்டும்? இப்போதே நிரூபிக்கிறேன். நாளைக்கு நீ உங்கட அப்பா கொண்டு வரும் மீனை சரியான தராசில் அளந்து பார். அது நிச்சயமாக பத்து கிலோவுக்கு ஒரு அம்பது கிராம் கூட அல்லது குறையத்தான் இருக்கும். மிகச் சரியாக பத்து கிலோ இருக்கவே இருக்காது...!”

எனக்கு பெட் காசு கிடைக்கவில்லை. அடிதான் கிடைத்தது...

சில மாதங்கள் சென்றதும் மக்களில் பலர் இந்தியாவுக்கு போவதைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள். இதற்கு முன்பும் நிறையப் பேர் வேறு கலவர நேரங்களில் போயிருக்கிறார்கள். எனவே இம்முறையும் நிறையப்பேர் தலைமன்னார் கடலால் இந்தியாவுக்கு சென்றார்கள். எங்கள் வீடுகளிலும் இந்தப் பேச்சு அடிபட ஆரம்பித்தது.
பெரியண்ணாவுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிடைத்திருந்ததனால் சற்றுத் தயக்கம் நிலவியது. இன்னும் இந்தியாவுக்கு சென்றால் படிப்பு குழம்பிவிடும் என்ற இன்னொரு குழப்பமும் காணப்பட்டது. இருந்தாலும் உயிர் பயத்திற்கு முன்னால் எல்லாம் தோற்றுப் போய் தமிழ் நாட்டை தஞ்சமடைவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.
தவமண்ணன் தன் நண்பர் ஒருவர் இந்தியாவுக்கு குடும்பத்துடன் செல்ல அவர்களுடன் இணைந்து அவரும் சென்றுவிட்டார். மீதமாக இருந்தது அம்மா, அப்பா, மூன்று அண்ணாமார், தங்கச்சி மற்றும் நான். ஏழு பேரும் செல்வதற்கு ஒருநாள் குறிக்கப்பட்டது.
சிறுவர்களான எங்களுக்கெல்லாம் ஒரே குஷி. படங்களில் பார்த்த இந்தியாவை நேரில் பார்க்கப் போகிறோம் என்பதே த்ரில்லாக இருந்தது. பயணம் ஆரம்பிக்க முதல்நாள் முழுவதும் “நாளைக்கு இந்தியா...! நாளைக்கு இந்தியா...!”என்று ஒருவருக்கொருவர் சந்தோசமாக சொல்லிக் கொண்டு திரிந்தோம். அந்த நாளும் விடிந்தது.
எங்கள் ஊரிலிருந்து பொருட்களைத் தயார் பண்ணிக் கொண்டு புறப்பட்டுச் சென்றோம். அன்று மாலையே மன்னர்தீவின் நடுப்பகுதியில் கடற்கரையோரமாக அமைந்திருக்கும் எருக்கலம்பிட்டியை சென்றடைந்தோம். எருக்கலம்பிட்டி முஸ்லிம் மக்கள் வாழும் மிகப் பெரிய கிராமம் அல்லது சிறு நகரம். அங்கே ஒருநாள் தங்கிவிட்டு அடுத்தநாள் இரவு நாங்கள் தலைமன்னார் கடற்கரைக்கு பிரயாணப்பட்டு சென்றோம்.
இரவு ஒன்பது மணியிருக்கலாம்.
தலைமன்னாரிலிருந்து ஒரு படகில் இந்தியாவை நோக்கி எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத பிரயாணம் குளிர்காற்றுடன் கூடிய த்ரில்லுடன் ஆரம்பித்தது. எங்கள் படகில் மூன்று அல்லது நான்கு குடும்பங்கள் இருந்தன. குழந்தைகளும் பெரியவர்களுமாக பதினைந்து பேர் அளவில் இருந்தோம்.
அவ்வப்போது பெரியவர்கள் இந்த இரவு நேர விசா பெறாத பிரயாணத்தைப் பற்றி பதட்டமாக பேசியது என்னை ஒன்றும் பயமுறுத்தவில்லை. இப்படிப் போன சில படகுகளுக்கு ஏற்பட்ட கதிகளைப் பற்றி பேசினார்கள். படகு கவிழ்ந்து பத்துப் பேர் செத்துப் போனது, இரு நாட்டு கடற்படைகளின் துவக்குச் சூடுகள், இரவில் திசை புரியாமல் வேறெங்கோ சென்றுவிட்ட படகுகள் என கதைகள் விரிந்தன.

சற்று நேரத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக தலைமன்னார் கடற்கரை காணாமற் போனது. எல்லாத் திசையையும் எல்லா இடத்தையும் கருமை கலந்த கடலும் வானமும் நிரப்பிக் கொண்டன. அன்று ஒரு தேய்ந்த நிலவு இருந்திருக்க வேண்டும். ஆனாலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியவில்லை. என்னைச் சுற்றிலும் பல இருள் உருவங்களே இருந்தன.
படகோட்டி பல எச்சரிக்கைகள் கொடுத்தவாறே வந்தான்.
“சிகரெட் பத்திராதிங்க. சின்ன வெளிச்சம் கூட கடல்ல எவ்வளவு தூரம் இருந்து பார்த்தாலும் தெரியும். நேவி பார்த்தால் அவ்வளவுதான்!” என்றான்.
மணித்தியாலங்களில் நீண்ட அப்பிரயாணத்தில் தூரத்தில் ஒரு நேவிக் கப்பலைக் கண்டது உண்மைதான். கடல் தண்ணி சில நேரங்களில் உள்ளே வந்து நனைக்க, அம்மா ஒரு டின்னில் கொண்டு வந்த ‘முட்டை மாவினை’ இடைக்கிடையில் மென்று அரைத்தபடி பிரயாணித்தோம்.

இதற்குமுன் இடம்பெயர்ந்த அனுபவம் இருக்கிறது. விடத்தல் தீவில் இருக்கும்போது சில மைல்கள் தூரத்திலுள்ள பெரியமடு, கள்ளியடி போன்ற கிராமங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்திருக்கிறோம்..
அப்போது எனக்கு இடம்பெயர்வு என்பது பிடிக்கும்...! ஏனெனில் அப்போதுதான் ஒவ்வொரு ஒற்றுமையாய் ஒன்று கூடி வேலை செய்வதை பார்க்க முடியும்... யார் யார் என்று பாராமல் எல்லோரும் எல்லோருக்கும் உதவி செய்வார்கள். அத்துடன் பாடசாலை வேறு லீவுதானே...!

பெரிய மடுவிற்கு அதற்கு முன் பீற்றர் பாதருடன் பீடப்பணியாளர் சிறுவர்களும் சேர்ந்து போய் சில விசேட பூசைகள் நடத்தியிருக்கிறோம். இந்த முறை இடம் பெயர்ந்து சென்றபோது கிட்டத்தட்ட ஒரு மாதம் தங்கினோம். அங்கு ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு வீட்டில் தங்கின. நாங்கள் தங்கியிருந்த வீடு பெரியது. மாம்பழம் விளாம்பழம் மற்றும் நாவற்பழம் போன்ற காட்டுப் பழங்கள் தாராளமாகவும் முக்கியமாக இலவசமாகவும் கிடைத்தன...

ஒரு நாள் வீட்டின் பின்னால் இருந்த மாமரத்திற்கு நானும் அண்ணாக்களும் கல்லெறிந்து பழங்களை வீழ்த்தி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். திடீரென எனக்கு அந்த மரத்தில் ஏற வேண்டும் போல இருந்தது. அண்ணாக்களை கெஞ்சினேன். முதலில் மறுத்தவர்கள் பின் தொல்லை தாங்காமல் ஏற்றி விட்டார்கள். அப்போது தான் பார்த்தேன். நான் இருந்த கிளைக்கு மேலே ஒரு குரங்கு ஒய்யாரமாய் அமர்ந்து இருந்தது. என்னைப் பார்த்து ஈ என்றது. எனக்கு வயிற்றுக்குள் சிலீரென்றது. பெரியமடு பகுதியில் குரங்குகள் மிக அதிகம்தான். அண்ணாக்கள் சிரித்தார்கள். “சொல்ல சொல்ல கேட்காமல் ஏறினாய் தானே...! அங்கேயே இரு. நாங்கள் போகிறோம்...!” என்றபடியே போய்விட்டார்கள். உண்மையாகவே விட்டுப் போய்விட்டார்கள். இப்போது குரங்கு இன்னும் அகலமாய் இளித்தது. தரையைப் பார்த்தேன். சுமார் பத்தடி உயரம். திடீரென அந்த குரங்கு மறு கிளைக்கு பாய்ந்தது. அது எங்கே என்னைத்தான் தாக்க வருகிறதோ என்று பயத்தினால் வந்த தைரியத்தினால் கீழே குதித்து விட்டேன்..!
ஆபத்து வேளைகளில் உடல் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக மேலதிக பலத்தையும் தைரியத்தையும் உண்டாக்கிக் கொள்ளும் என்று அனுபவப்பட்ட நாள்.

அதெல்லாம் ஐந்து, பத்து ஆகக் கூடுதலாக ஒரு மாதம் என்ற அளவில் ஊரை விட்டு விலகி வாழ்ந்ததனால் அதனை ‘இடம்பெயர்வு’ என்று சொல்லலாம். ஆனால் தற்போது தான் ‘அகதி’ வாழ்க்கை ஆரம்பித்திருக்கிறது. இந்த இடம்பெயர்ந்தோர், அகதி எனும் இந்த இரு சொற்களுக்கும் பின்பு
போராளிகள் வேறு வேறு அர்த்தங்கள் கொடுத்தார்கள்.

8. எனது ஊர் விடத்தல்தீவும் எனது மருத்துவ பயணமும் - ஞானசீலன் குணசீலன்

எனது ஊர் விடத்தல்தீவின் வரலாறு, சிறப்புகள், வளங்கள், சாதனைகள், இழப்புகள், கலாச்சாரம், மதநம்பிக்கை, போனறவை மட்டுமின்றி குறைபாடுகள் உட்பட சகல பிரிவுகளிலும் ஆய்வு செய்து அதை வரலாற்று பதிவாக உருவாக்கும் செயற்திட்டமான விடத்தல் தீவு பன்நாட்டு மாநாட்டிற்காக எனது ஊர் விடத்தல் தீவும் எனது மருத்துவமும் என்ற எனது மனதில் நிற்கின்ற உணர்வுகள் மற்றும் சுகாதார விடயங்களை இங்கு நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

குணப்படுத்த முடியாத அல்லது மருத்துவ சேவைகளை வழங்க சவால்களை எதிர்நோக்கும் பகுதிகளில் பணிபுரிதல் - விடத்தல் தீவு கிராமம்

அறிமுகம்

எனது மருத்துவ தொழிலின் பெரும்பகுதியான காலத்தை மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக கிராம அல்லது பின்தங்கிய பிரதேசத்திலேயே கழித்திருக்கின்றேன். இதில் விசேடமாக எனது ஊரும், பள்ளமடுவும் அடங்குகின்றன. இவை இலங்கையின் வட பிராந்தியத்தின் புவியியல் சார்ந்த இடங்கள் மட்டுமல்ல. நீண்ட கால தவிர்க்க முடியாத வரலாற்றை கொண்டவை. குறிப்பாக முப்பது வருடத்திற்கு மேற்பட்ட உள்நாட்டு யுத்தம், பாரிய இடம்பெயர்வுகள், பாரிய உயிரிழப்புகள், பாரிய பொருட் சேதங்கள், அங்கவீனங்கள், உளவியல் தாக்கங்கள், போன்ற பல்வேறு விடயங்களை தாண்டி வந்த பிரதேசங்களாகும்.

எனது மருத்துவ நிலையம் வெறும் மருத்துவ உபகரணங்களையும், ஊசிகளையும், மருந்துகளையும் மட்டும் கொண்ட ஒரு நிலையம் அல்ல. மாறாக எனது ஊர் மக்களின் உடல் நோய்கள், மன நோய்கள், துன்பங்கள், அன்பான உறவு போன்ற பல விடயங்களை என்னுடன் இணைத்த ஒரு நிலையம்.

பல ஆண்டுகளாக ஒரு மருத்துவராகவும், பொது சுகாதார மருத்துவராகவும், சுகாதார அமைச்சராகவும் மற்றும் எனது தாயார் லில்லி அவர்களுடைய பெயர் கொண்ட தனிப்பட்ட மருத்துவ நிலையத்திலும் நான் பணியாற்றி இருக்கின்றேன்.

எனது பணிக்காலத்தில் முன்னேற்ற கரமான நவீன நோயறிதல் வசதிகள் இல்லாமை, மருத்துவ பொருட்களின் தட்டுப்பாடு, உணவு தட்டுப்பாடு, போசணை குறைபாடு, சுகாதாரம் மற்றும் மருத்துவ பொது அறிவு போதாமை, உடல் நலத்திற்கு தீங்கான பழக்க வழக்கங்கள், உணவு பழக்க வழக்க மாற்றங்கள், வாழ்க்கை முறை மாற்றங்கள், கலாச்சார கட்டுப்பாடுகள், சில மதக்கட்டுப்பாடுகள், நீண்ட காலப் போர், இடம்பெயர்வு போன்ற பல்வேறு விடயங்கள் எமது ஊர் மக்களின் உடல், உள ஆரோக்கியத்தில் தாக்கம் செலுத்தி இருந்தன. தற்போதும் தாக்கம் செலுத்தி வருகின்றன.

மக்கள் வெறும் மருந்து மாத்திரைகளுக்காக மட்டும் என்னிடம் வரவில்லை. என்னிடம் இருந்து அவர்கள் மன ஆறுதல், மன உறுதி, நம்பிக்கை, மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் போன்ற பல விடயங்களை பெற்றுக்கொள்ள வந்தார்கள்.

இங்கே எனது மருத்துவ பயணத்தை பற்றி நான் சிந்திக்கும் போது இந்த கட்டுரை ஒரு வரலாற்று சான்றாக மாறலாம்.

மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட விடத்தல் தீவு மற்றும் பள்ளமடு பிரதேச மக்கள் சமூகங்களை பொறுத்தவரை அவர்களின் சூழலியல், தொழில் வகைகள், சமூக கலாச்சார, பொருளாதார, மதங்கள் தொடர்பாக வடிவமைக்கப்பட்ட தனித்துவமான மருத்துவ சுகாதார சவால்களை கொண்டிருக்கின்றன.

இப் பகுதி மக்களின் தொழில்கள் பெரும்பாலும் உடல் ரீதியான உழைப்பில் தங்கியுள்ளன. அதாவது பெரும்பாலானோரின் தொழில் மீன் பிடி மற்றும் விவசாயமாக உள்ளது.

பொதுவான உடல் நலப் பிரச்சனைகள்

01. தொற்றா நோய்கள். இதற்கு உதாரணமாக நீரிழிவு, உயர் குருதியமுக்கம், ஆஸ்துமா, புற்று நோய்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.
02. தசை, எலும்பு மற்றும் மூட்டுகள் தொடர்பான பிரச்சனைகள்
03. போசாக்கு குறைபாட்டு பிரச்சனைகள்
04. உளவியல் பிரச்சனைகள்
05. தொற்று நோய்கள்

என்பவற்றை பொதுவாக நாம் எடுத்து கொள்ளலாம். மேற்கூறிய உடல் நலப் பிரச்சனைகள் எனது ஊர் சமூகத்தில் தொடர்ந்து அதிகரித்து செல்கின்றது. எனது ஊரில் மட்டுமல்ல உலக அளவிலும் இதே பிரச்சனை தான்.

பொதுவாக உணவு பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், வரையறுக்கப்பட்ட உணவு பன்முகத்தன்மை, பொருளாதார பிரச்சனைகள், நோய்களை தடுப்பதற்கான முன்கூட்டிய அணுகல் இன்மை, தனிப்பட்ட சுகாதாரம் பேணப்படாமை, தொற்று நோய்கள் தொடர்பில் அலட்சியம், விழிப்புணர்வு குறைவு, நவீன தொழில் நுட்பத்தால் வளி, நீர், உணவு, சூழல் மாசடைதல் பருவ கால மாற்றங்கள் நகர் மற்றும் கிராமப்புறங்கள் அமுக்காதல், வடிகாலமைப்பு குறைபாடுகள், நீண்ட கால மோதல்கள், உயிர் இழப்புக்கள், ஊனமடைதல், இடம்பெயர்வுகள், சொத்து இழப்புகள் போன்ற பல விடயங்கள் மேற்கூறிய உடல் நலப் பிரச்சனைகளுக்கு காரணமாகின்றன.

இங்கே ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகின்றேன். விடத்தல் தீவு பள்ளமடு பிரதேச வைத்தியசாலையானது எனது சிறு வயது காலத்தில் கிராமிய வைத்தியசாலை என்ற பெயரில் இயங்கியது. இப்போதும் நானும் எனது குடும்பத்தினரும் இங்கு சிகிச்சை பெற்று கொண்டது என் நினைவில் உள்ளது. அப்பொழுது அங்கு பல்கலைகழக பட்டம் பெற்ற மருத்துவர்கள் பணியாற்றவில்லை பதிலாக பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் (RMP) பணியாற்றினார்கள். அந்த காலத்தில் கூட நோயாளிகள் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அத்துடன் இங்கு கர்பிணி தாய்மார்களின் பிரசவங்கள் கூட நடை பெற்றன. எனது கடைசி தம்பியும், தங்கச்சியும் இங்கு தான் பிறந்தார்கள்.பின்பு இவ் வைத்தியசாலை அடிப்படை மருத்துவ சேவை (கவனிப்பு) அலகு என மாறியது. பின்பு தற்போது அது பிரதேச வைத்தியசாலை விடத்தல் தீவு என மாறி இருக்கின்றது.

ஆரம்பத்தில் இருந்த கிராமிய வைத்தியசாலை விடத்தல் தீவு இல் இருந்து தற்போதைய பிரதேச வைத்தியசாலை விடத்தல் தீவு எனும் காலப்பகுதி வரை இனி கவனத்தில் கொண்டால் இங்கு சிகிச்சைக்காக சென்ற எமது மக்களின் விகிதாசாரம் குறைந்து கொண்டே வந்திருக்கின்றது. பல்வேறுபட்ட காரணங்கள் இதற்கு காரணமாகின்றன. உதாரணமாக

* மக்களின் போக்குவரத்தில் மாற்றம் ஏற்பட்டமை, பொது போக்குவரத்து, தனியார்போக்குவரத்து, தனிப்பட்ட போக்குவரத்து வசதிகள் அதிகரித்தமை.
* மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையுடன் ஒப்பிடும் போது மிக குறைந்த மருத்துவ சிகிச்சை வசதிகளை கொண்டிருந்தமை.
* பெரும்பாலானோர் மன்னார் பெரிய வைத்தியசாலையை நாடியமை மற்றும் அங்கு சிறந்த மருத்துவ கவனிப்பு கிடைக்கும் என எதிர்பார்த்தமை.

தற்போதைய காலகட்டத்தில் பெரும்பாலான நோயாளர்கள் விடத்தல் தீவு வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சை அல்லது மேலதிக பரிசோதனைகளுக்காக மன்னார் பொது வைத்திய மாற்றப்படுவதால் மக்கள் மனதில் தாம் நேரடியாகவே மன்னார் வைத்தியசாலைக்கு சென்றால் பாதுகாப்பானது எனும் சிந்தனை வளர்ந்துள்ளமை.

என்பவற்றை நான் பிரதான காரணங்களாக உணர்கின்றேன்.

எவ்வாறு இவற்றை சரி செய்யலாம்?

இது தொடர்பில் விரிவாக இங்கு நான் விளக்க விரும்பவில்லை. காரணம் இது சாதாரண விடயம் அல்ல என்றாலும்
அடிப்படையில் முக்கியமாகும்.
* எமது விடத்தல் தீவு வைத்தியசாலை போன்ற கிராமப்புற வைத்தியசாலையில் காணப்படும் அடிப்படை குறைபாடுகள் மேம்படுத்தப்பட்டு அதன் சிகிச்சை அளிக்கும் செயற்திறன் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கு சுகாதார திணைக்களத்தினது பங்களிப்பு மிகவும் முக்கியமானது.
* இவ் வைத்தியசாலையில் காணப்படும் திருப்திகரமான மருத்துவ சுகாதார சேவைகள் தொடர்பில் எம் மக்களுக்கு தெளிவு படுத்தப்படல் வேண்டும்.
ஆனால் மேற்கூறிய இரண்டு விடயங்களும் இன்னும் பெரிய சவாலுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

நான் கண்டறிந்த அனுபவ உண்மைகள்

விடத்தல் தீவு, பள்ளமடுவில் உள்ள எனது தனிப்பட்ட மருத்துவ நிலையத்திற்கு ஒவ்வொரு நாளும்நான் செல்லும் போது ஒவ்வொருநாளும் ஒரு சவாலான நாளாகவே கருதினேன். ஏனென்றால் மிக குறைந்த நோயறிதல் வசதிகளுடனும், மருத்துவ வசதிகளுடனும் எனது மருத்துவ அறிவுக்கும் இடையிலான சிக்கலான அனுபவங்களை எதிர்நோக்கினேன்.

எனது ஊர் மக்கள் எனது மருத்துவநிலையத்திற்கு தமது உடல் உள பிரச்சனை தொடர்பில் வரும் போது அவர்களின் வாய் மூல தகவல், அவர்களுடன் கூட வருவோரின் தகவல், நோயாளி மீது நான் மேற்கொள்ளும் உடல் ரீதியான மருத்துவ பரிசோதனை போன்றவற்றை வைத்தே அவர்களின் நோயை கண்டறிந்து சிகிச்சைஅளித்தேன் அல்லது சிகிச்சைகாக ஆலோசனை வழங்கி வழிகாட்டினேன்.

இங்கே ஒரு விடயம் என் மனதில் பளிச்சிடுகிறது. நோய்களை அறிவதற்கான கருவிகள் இரசாயண பரிசோதனைகள் என்பவற்றின் பற்றாக்குறை ஒரு வகையில் எனது நோய் அறியும் திறமையை மேம்படுத்தியுள்ளது. நோயாளிகளின் வாய் மூல தகவல்களும், உடல் பரிசோதனை முடிவுகளும் மட்டுமே ஆய்வுகூட பரிசோதனை முடிவுகள் மற்றும் தொழில்நுட்ப பரிசோதனை முடிவுகள் இன்றி நோய்களை இனம் கண்டு கொள்ள என்னை வழிப்படுத்தின.

இங்கே நோயாளியின் கதையை கவனமாக கேட்பதும் அவர்கள் உடலில் கவனமாக மேற்கொள்ளும் உடல் பரிசோதனையும் மிகவும் முக்கியமானது. ஆனால் இங்கு ஒரு அபாயம் உள்ளது.

சில வேளையில் எனது சிகிச்சை போதுமானதாக இல்லாமல் இருக்கவோ அல்லது தேவைக்கு அதிகமான சிகிச்சையாக இருக்கவோ அல்லது தகுந்த மேலதிக மருத்துவ ஆலோசணை பெறுவதை தவிர்ப்பதாகவோ அமைய வாய்புண்டு.

இங்கே விடத்தல் தீவின் ஒரு ஊர் மகனாகவும் மருத்துவராகவும் எனது மக்களின் மருத்துவம், சுகாதாரம், உளவியல் பிரச்சனை தொடர்பில் எனது மருத்துவ அறிவு அனுபவம் கொண்டு என்னால் வழங்கக்கூடிய அதிகூடிய சேவையை நான் வழங்கியுள்ளேன் என்ற திருப்தி எனக்குள்ளது.

இங்கு இன்னுமொரு விடயத்தை குறிப்பிட விரும்புகின்றேன். நோய்களை கண்டறிதல், சிகிச்சை வழங்கல், மேலதிக மருத்துவ தேவைக்கு ஆலோசணை வழங்கல் போன்றவை மட்டும் ஒரு மருத்துவனின் கடமை அல்ல. மிகவும் உணர்வுபூர்வமான இன்னுமொரு கடமையுண்டு. அதாவது ஒரு நோயாளியின் உடல் நிலை தொடர்பிலும் அவரின் உயிர் வாழும் காலம் தொடர்பிலும் கணிப்பு கூறல். இது மிகவும் மனக்கடினமானது. பல்வேறு சந்தர்ப்பங்களில் எனது ஊரில் இருந்து எனக்கு அழைப்பு வரும். தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்கள,; மிகவும் வயது முதிர்ந்து படுக்கையில் இயாமல் உள்ளவர்கள் அல்லது வெள;வேறு மருத்துவ அல்லது இயற்கை காரணங்களின் நிமித்தம் மரணத்தை எந் நேரமும் எதிர்கொள்ள காத்திருப்போரின் வீட்டில் இருந்து இவ்வாறான அழைப்பு வரும். இவ் அழைப்பு பெரும்பாலும் முக்கியமாக உடனடியாக செய்ய கூடிய மருத்துவ உதவிக்காகவும் இன்னுமொன்று இவ்வாறான நோயாளியின் வாழ்கை முடிவு அல்லது மரண காலம் தொடர்பில் அறிவதற்காகவும் இருக்கும்.

ஒவ்வொரு முறையும் நோயாளியின் உறவினர் கண்களில் நோயாளியின் மரணம் எப்போது நடக்கும் என்ற பிரதான கேள்வி வெளி தெரிவதை நான் உணர்ந்துள்ளேன்.
மருத்துவதுறையில் எல்லா மருத்துவர்களும் எல்லாத் துறையிலும் திறமை பெற்றுவிடுவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விடயத்தில் விசேட திறமைகள் அமைவதுண்டு.

நான் எனது ஊரில் வீடுகளில் இயலாமல் படுக்கையில் உள்ள நோயாளர்களை பார்வையிடும் போது அவர்களின் உடல் நிலை அவர்களது உயிர் வாழும் காலம் தொடர்பில் எனக்கு தெளிவூட்டும். இவ்வாறான நோயாளர்கள் தொடர்ந்தும் நோயின் துன்பத்தால் அல்லல்படுவது நான் தனிப்பட்ட ரீதியில் விரும்புவதில்லை. இதனால் அவர்கள் துன்பமின்றி இறப்பது நலம் என்று என்னுள்ளே எண்ணிக்கொள்வேன். ஆனால் இறப்பை என்னால் தீர்மானிக்க முடியாது அது மருத்துவத்திற்கு அப்பாற்பட்ட சக்தியில் தங்கியுள்ளது. ஆனாலும் எனக்கு மனதில் ஒருவரின் இறுதி முடிவு தொடர்பில் காலக்கெடு தீர்மாணிக்கும் சக்தி எனது ஊர் மக்களாலேயே பயிற்றுவிக்கப்பட்டது.
ஊரில் இன்னும் என்னைப்பற்றி ஒரு அபிப்பிராயம் உள்ளது. ஆதாவது “குணம் டொக்டர் வந்து பார்த்து சொன்னார் என்றால் நேரம் தப்பாது” அது என்னவோ தெரியவில்லை ஒருவரின் இறப்பு தொடர்பில் எனது கணிப்பும் பெரும்பாலும் பொய்த்ததில்லை. இதற்காக பெருமைப்படுவதா? கவலைப்படுவதா? என எனக்கு விளங்கவில்லை. ஆனாலும் இம் மாதிரியான எனது கணிப்பு எனது ஊர் குடும்பங்களினதும் அவர்களது இறுதித்தருவாயில் உள்ள நோயாளிகளினதும் பல்வேறு கஷ்டங்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

இது ஒரு கசப்பான ஆனால் நிதர்சனமான உண்மை.

“கடவுளுக்கு நன்றி”

எமது விடத்தல் தீவு ஊர் மக்களின் நோய்கள் தொடர்பாக அவர்கள் பாவிக்கும் பேச்சு மொழி.

இலங்கை வட பகுதி, கிழக்கு பகுதி மக்கள் தமிழ் பேசும் மக்கள் என்றாலும் ஒவ்வொரு பகுதியை சேர்ந்த மக்களுக்கும் பேச்சு மொழியில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதற்கு விடத்தல் தீவும் விதிவிலக்கானது அல்ல.

எனது ஊர் மக்கள் தமது உடல் உபாதைகள் தொடர்பில் தனிவிதமான சில மொழி பிரயோகத்தை பாவிக்கின்றனர். ஓர் ஊர் மகனாக இவற்றை புரிந்துகொள்வது எனக்கு எளிதானதாக இருந்தது. உதாரணமாக

* நாரி கொதிக்குது
* உடம்பு நெருப்பா கொதிக்குது
* கண் எரியுது
* கால் விறைக்குது

போன்ற பல மொழி பிரயோகங்கள் உள்ளன.

விடத்தல் தீவு பிரதேச வைத்தியசாலையில் தினமும் சராசரியாக வெளி நோயாளர் பகுதியில் 32 நோயாளர் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் ஒருவரை பார்வையிடுவதற்கு வைத்தியர் ஒரு சில நிமிடங்களையே செலவிடுகின்றனர். ஆனால் தனியார் மருத்துவ நிலையங்களில் சற்று கூடுதலாக நேரம் எடுக்க வேண்டியிருக்கும். இது அவசியமானது மட்டும் அல்ல நோயாளிகளின் எதிர்பார்ப்பும் ஆகம்.

எங்கள் ஊரில் பல நோயாளர்கள் மருத்துவ ஆலோசனைகளும் ஒரு சிகிச்சை முறை தான் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. சில சந்தர்ப்பங்களில் மருத்துவ ஆலோசனை மட்டும் போதுமானதாக இருந்தாலும் பெரும்பாலும் நோயாளர்களால் ஒரு சில மாத்திரைகள் என்னிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மருந்து இல்லை என்றால் வைத்தியம் இல்லை என்று அர்த்தமல்ல என்பதை அவர்களுக்கு கற்பிப்பதும் ஒரு வகை முன்னேற்றமான செயற்பாடு ஆகும். பல சமயங்களில் நோயாளிகளுடன் ஆன உரையாடல் உணர்ச்சி பூர்வமானதாக அமையும். சில நோயாளிகள் தங்களின் நோய் தொடர்பான விடயங்களுடன் தங்களின் தனிப்பட்ட பிரச்சனைகள் அல்லது சோகங்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவார்கள். இவ்வாறு பகிர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். ஒரு மருத்துவராக என்னால் இதை தவிர்க்க முடியாமல் இருந்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் மருத்துவராக இருப்பதை மறந்துவிட்டு செவிமடுப்பவராகவும், ஆறுதல் அளிப்பவராகவும், ஆலோசனை வழங்குபவராகவும் மாறிவிடுகின்றேன்.

பல சந்தர்ப்பங்களில் எனது மருத்துவ அறிவை நோயாளர்களின் மேற்கூறிய உணர்வு பூர்வ விடயங்களுடன் சமப்படுத்தி கடமை புரிய வேண்டி இருந்தது.

“மக்கள் மாத்திரைகளுக்காக மட்டும் என்னிடம் வரவில்லை மாறாக தம் உணர்வுகள் என்னால் கேட்கப்படுவதற்காகவும் வந்தார்கள்”.

மட்டப்படுத்தப்பட்ட மருந்து வகைகள், குறைவான நோயறிதல் வசதிகளை கொண்ட எனது மருத்துவ நிலையத்தில் நோயாளிகள் திருப்தியுடனும், நம்பிக்கையுடனும், ஒரு வித நிவாரணத்துடன் வெளியே செல்வதை உறுதி செய்ய வேண்டி இருந்தது.

பல சந்தர்ப்பங்களில் பெரும்பாலான நோயாளர்கள் தங்கள் உடல் உபாதைகள் சில மணித்தியாலங்களிலோ அல்லது உடனடியாகவோ அல்லது சில நாட்களுக்குள்ளோ இல்லாது போக வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இது அவர்களின் நோய் வகைகளை பொறுத்தது என்பதை நான் சரியாக புரிய வைக்க வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் என் சிகிச்சை மீது அவர்கள் சந்தேகம் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

இன்னுமொரு முக்கிய விடயம் யாதெனில் சிகிச்சைக்கான கட்டணம் பெற்றுக் கொள்ளல். சில வேளைகளில் மருந்துகளின் விலைகள், பரிசோதனைக்கான செலவுகள் போனறவை உயர்வாக இருக்கும் போது மொத்த கட்டணம் உயர வாய்ப்புள்ளது. இது எனக்கு தர்ம சங்கடமான நிலையை தோற்றுவிக்கும். கட்டணம் தொடர்பாக எனது மக்கள் என்னைப்பற்றி தவறாக எண்ணக்கூடாது என்பதற்காக விடயங்களை தெளிவாக விவரிக்க வேண்டியுள்ளது.

மருந்து வகைகளை நோயாளர் எதிர்பார்ப்பதில் கூட வேறுபாடுகள் உள்ளன. சிலர் குறைந்த அளவிலான குறைந்த வகையான மருந்துகளுடன் திருப்தி அடைவதில்லை. அதிக அளவில் எதிர்பார்ப்பார்கள். சிலர் இதற்கு எதிர்மாறான எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். இதுவும் எனக்கு ஒரு சவாலாக இருந்தது. சரியான விளக்கம் கொடுக்க கஷ்ரப்பட வேண்டி இருந்தது.

* ஒழுங்காக சிகிச்சை முறை தொடராமை
  இதுவும் ஏனைய கிராம மக்களை போன்று எனது கிராமத்திற்கு உரிய பிரச்சனை தான்.
* மருந்து வகைகளை ஒழுங்காக எடுத்துகொள்ளாமை.
* தேவையான மருத்துவ சோதனைகளுக்கு ஒழுங்காக சமூகம் தராமை
* கிளினிக்குகளுக்கு ஒழுங்காக சமூகம் தராமை
* குறிப்பிட்ட காலத்திற்கு மருந்துவகைகளை பாவித்த பின்னர் தமது உடல் நிலை சீராக இருப்பதாக உணர்ந்து மருந்து எடுப்பதை நிறுத்தி விடுதல்.
* உரிய மேலதிக பரிசோதனைகள் அல்லது மேலதிக சிகிச்சைகள் தேவைப்படும் போது அவ் ஆலோசணைகளை பின்பற்றாமை.

போன்றபலவிடயங்களைகுறிப்பிடலாம். இவற்றில்மேலதிகபரிசோதனைகள்அல்லதுமேலதிகசிகிச்சைகள் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கியும் அதை பொருட்படுத்தாமல் அலட்சியமாக இருத்தல் என்பது நான் இங்கு சற்று ஆழமாக தெரிவிக்க வேண்டியதொன்று. விடத்தல் தீவு மக்களை பொறுத்தவரையிலும் இது ஒரு கவனிக்கதக்க குறைபாடு ஆகும். பல அனுபவங்களில் எனது ஊரிலேயே மூன்று இளம் நோயாளிகளிடம் தற்செயலாக அவர்களுக்கு புற்று நோய்க்குரிய அறிகுறிகளை நான் அவதானித்து உடனடியாக அது தொடர்பான சில முக்கிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறத்தினேன்இ ஆனால் அவர்கள் என் அறிவுறுத்தலுக்கு அவர்கள் நகைச்சுவையாக "சும்மா இருங்கள் டொக்டர் சாவு எப்பவும் வரும், நாங்கள் பயப்படவில்லை" என்று கூறினார்கள். எந்தவித மேலதிக நடவடிக்கைகளுக்கும் செல்லவில்லை.

ஆனால் மிக குறுகிய காலத்திலேயே புற்று நோயின் தாக்கம் அதிகரித்து குணமாக்க முடியாத நிலைக்கு சென்று அவர்கள் மரணத்தை தழுவி கொண்டார்கள். உண்மையில் ஆரம்ப காலத்திலேயே அவர்கள் வேண்டிய சிகிச்சைக்கு சென்றிருந்தால் அவர்கள் உயிர் பிழைக்கும் வாய்புண்டு. இது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.
மேலும் இன்னுமொரு பொதுவான விடயத்தையும் நான் கண்ணுற்றேன். அதாவது ஆங்கில மருத்துவம் (மேற்கத்தேய மருத்துவம்) ஆயுர்வெத அல்லது பாரம்பரிய மருத்துவம் ஆகிய மருத்துவங்கள் காணப்படுகின்றன. ஆனால் வௌ;வேறான நோய்களில் பல ஆங்கில மருத்துவத்தாலும் வேறு பல ஆயுர்வேத மருத்துவத்தாலும் குணப்படுத்த முடியம். ஆனால்சரியான மருத்துவ முறையை தெரிவு செய்யாமல் இரண்டையும் தவறான முறையில் பாவித்தல் அல்லது இரண்டில் ஒன்றை முற்றாக புறக்கணித்தல் போன்ற செயற்பாடுகள் உயிர் ஆபத்தை விளைவிக்ககூடியவை. இவ் விடயத்திலும் விடத்தல் தீவு பின்னடைவான நிலையில் இருந்ததை அவதானித்தேன்.

எனது ஊர் மக்களை பொறுத்தவரையில் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக செல்வதற்கு தயங்கும் நிலை காணப்படுகின்றது. மன்னார் வைத்தியசாலையில் நடைபெற்ற சில சம்பவங்கள் இதற்கு காரணமாக இருக்கலாம். இங்கு இவர்கள் தாம் தவறான சிகிச்சைக்கு உள்ளாவோம் அல்லது மருத்துவ சிகிச்சையில் இருந்து புறக்கணிக்கப்படுவோம் என்று கூற கேள்விப்பட்டிருக்கின்றேன். இதற்கு ஒரு படி மேலாக மன்னார் வைத்தியசாலைக்கு சென்றால் சாவு தான் என்று கூறுபவர்களையும் கண்டிருக்கின்றேன். இங்கு இந் நிலை மாற வேண்டுமாயின் மன்னார் வைத்தியசாலையின் சேவை மேம்படுத்தப்பட்டு ஒழுங்கான நிர்வாகத்திறனுடன் இயக்கப்பட வேண்டும். அத்துடன் எம் மக்களுக்கு மருத்துவ சேவை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்ப்படுத்தப்பட வேண்டும்.

இனி மற்றுமொரு விடயத்திற்கு செல்வோம்

விடத்தல் தீவு கிராமமும் அதை சூழ உள்ள கிராமமும் விவசாய மற்றும் கடல் தொழில் சார்ந்தவையாகும். பெரும்பாலான சமயங்களில் இத் தொழில் சார் விபத்துக்கள் அல்லது நோய்கள் அல்லது காயங்களுடன் எனது மருத்துவ நிலையத்திற்கு பலர் வருவார்கள். உதாரணமாக விடத்தல் தீவில் இருந்து கடல் உயிரினங்கள் அல்லது நஞ்சுகளால் தாக்கபபட்டவர்கள் சிகிச்சைக்காக வருவார்கள். கெழுறு மீன், திருக்கை மீன், சுங்கன் மீன் பொன்ற மிகுந்த வலியை தரக்கூடிய முட்களை கொண்ட மீன்களின் தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் இதற்குள் அடங்கும். மற்றுமொறு பொதுவான விடயம் “சுணை அடித்தல்” என்று சொல்வார்கள். இது ஒரு வகை ஒவ்வாமை ஏற்படுத்தக்கூடிய நஞ்சு ஆகும்.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் நோயாளர்கள் மிகுந்த வலியுடனும், சுவாசிப்பதற்கு சிரமத்துடனும் காணப்படுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்களது வலியை குறுகிய நேரத்தில் குறைப்பதும், உடல் நிலை மேலும் சிக்கலாகாமல் தடுப்பதும் எனக்கு சவாலாக இருக்கும். ஆனால் இவற்றில் நான் சாதித்து இருக்கின்றேன்.

மேற்கூறிய விடயங்களுக்கு சிகிச்சை அளிப்பதில் நான் எனது ஊரில் பிரபலம் என்று சொல்லி கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

அடுத்ததாக இன்றைய முக்கிய சமூக பிரச்சினையான விடயத்துக்கு வருவோம். ஆம் மதுப்பழக்கம், புகையிலை மற்றும் புகைத்தல், போதைப்பொருள் பாவனை எனபவற்றுக்கு வருகின்றேன். மேற்கூறிய விடயங்களுக்கு எமது ஊரும் விதிவலக்கல்ல. தற்போது இது பெரும் பூதாகரமான பிரச்சனையாக எமது ஊரில் தலையெடுத்துள்ளது. பெரும்பாலும் இளைஞர்கள் இப்பழக்கங்களினால் கட்டுண்டு கிடக்கின்றார்கள். இவற்றை கட்டப்பாட்டுக்குள் அல்லது ஒழிப்பது இலகுவான விடயம் அல்ல. சுகாதார திணைக்களம், சட்டம் ஒழுங்கு தொடர்பான திணைக்களம், சமூக அமைப்புகள் மற்றும் மத அமைப்புகள் போன்றவை ஒன்று சேர்ந்து இதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

இறுதியாக இக் கட்டுரையானது ஒரு மருத்துவ அறிவுரை அல்லது சுகாதார கட்டுரையாக நான் எழுதவில்லை. எனது ஊருடன் எனக்கு ஏற்பட்ட மருத்துவ ரீதியான அனுபவங்களுடன் எனது மனதில் தோன்றிய கருத்துக்களையும் சேர்த்துள்ளேன்.

விடத்தல் தீவு மக்களின் புவி சார்ந்த சமூக பொருளாதாரம் சார்ந்த, கலாச்சாரம் சார்ந்த, மத நம்பிக்கை சார்ந்த மற்றும் வாழ்க்கை யதார்த்தங்களை மதிக்கும் அல்லது இணைந்து பயணிக்கும் ஒரு கிராமப்புற சுகாதார அமைப்பை நான் கனவு காண்கின்றேன். என் வாழ்நாளில் இந்த கனவு மெய்ப்பதை நான் காணாமல் போகலாம். ஆனால் இதை நான் ஒரு பதிவாக வரலாற்றில் எழுதுகின்றேன். நான் பார்த்தேன், நான் வாழ்ந்தேன், நான் பழகினேன், நான் சிகிச்சை செய்தேன். நான் அக்கறை காட்டுகின்றேன்.

ஒட்டுமொத்தத்தில் கிராமபுற மக்களை நினைவில் கொண்டுள்ள ஒரு அரசாங்கமும், கிராம மக்களுடன் இணைந்து பயணித்து சேவையாற்றும் ஒரு சுகாதார கட்டமைப்பும் எதிர்கால தேவையாக உள்ளது இறுதியாக இக் கட்டுரை ஏதேனும் ஒரு நல்ல நோக்கத்திற்கு பங்களிப்பு செய்யுமாயின் நான் மிகுந்த மன நிறைவு அடைவேன்.மன்னாருக்காக, விடத்தல் தீவிற்காக, மருத்துவத்திற்காக அர்த்தமுள்ள எதிர்கால மாற்றத்திற்காக செயற்படும் அனைவருக்கும் சமர்ப்பணம்.

மாபெரும் வரலாற்று நிகழ்வான “விடத்தல் தீவு பன்னாட்டு மாநாடு” எனும் நிகழ்ச்சி நிரலில் நானும் எனது கட்டுரையினூடாக ஒரு பங்காளி ஆகியதை இட்டு பெருமிதம் அடைகின்றேன்.இச் சந்தர்ப்பத்தினை வழங்கிய எனது சகோதரர் பேராசிரியர் ஞானசீலன் ஜெயசீலன் அவர்களுக்கும் மாநாட்டு ஒழுங்கமைப்பு குழுவிற்கும் எனது நன்றிகள். முக்கியமாக வரலாற்றில் முதலாவது வடக்கு மாகாணசபையில் நான் சுகாதார அமைச்சராக பதிவேற்றம் பெற்றமைக்கு அடிப்படை உழைப்பை எனக்கு தந்த விடத்தல் தீவு என் சொந்தங்களுக்கு எனது சிரம் தாழ்த்திய நன்றிகளை தெரிவித்து விடை பெறுபவன்.

உங்களில் ஒருவன் விடத்தலூரான் “மருத்துவர் ஞானசீலன் குணசீலன்”.

9. விடத்தல் தீவும் உணவுப்பழக்கங்களும் - தவசீலன் ஞானசீலன்

விடத்தல் தீவு. இலங்கையின் மன்னார் மாவட்டத்தின் மேற்கு கரையோர மீனவ கிராமங்களில் ஒன்று. மீனவ கிராமம் என அடையாளப்படுத்தப்பட்டாலும் கணிசமான அளவு குடும்பங்கள் விவசாயம் மற்றும் பிறதொழில்களிலும் ஈடுபட்டு வந்த, மும்மதத்தவரும் இணைந்து வாழ்ந்த ஒரு கிராமம். பொதுவாகவே மீனவக்கிராமங்களில் வகை வகையான கடலுணவுகள் பிடிக்கப்படுகின்ற அன்றே சமைக்கப்பட்டு சுவைக்கப்படும். விடத்தல் தீவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. வீட்டுக்கு வீடு விசேடமான சுவைகளில் பல விதமாக சமைத்து பரிமாறுவார்கள். மின்சாரமோ, குளிரூட்டிகளோ இல்லாத காலங்கள் அவை. சமைக்கப்படும் உணவு வகைகளை பட்டியலிட முயன்றால் அது நீண்டு கொண்டே செல்வது மட்டுமல்லாது உங்களுடைய பசியையும் கிளறி விடும் என்பதால் அதனை விட்டு விடுவோம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் விடத்தல் தீவு கிராமிய நூலகத்தின் மறுபுறத்தில் மாடு ‘அடிப்பதாக ‘ கூறுவார்கள். அந்த இடம் பின்னர் ஊரைத்தாண்டி உள்ள தரவைக்கு மாற்றப்பட்டதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. கிழமையில் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இறைச்சிக்கறி உண்பதை ஊரவர்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். ஊரிலுள்ள அனைத்து குடும்பங்களும் இந்த வழக்கத்தை கொண்டிருந்தனர் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. அந்த நாட்களில் இறைச்சிக்கறி என்பது ஒரு அரிதான, ஆடம்பரமான உணவு வகையாகவே இருந்தது.

இவ்வாறு கணிசமான அளவு கடலுணவுகள், அதை அடுத்து மரக்கறிகள் மற்றும் அவ்வப்போது இறைச்சிக்கறி என வாழ்ந்த 2000ம் ஆண்டுக்கு முந்தைய தலைமுறையினர் பலரும் இன்றும் ஆரோக்கியமான மூப்படைதலுடன் எழுபது, எண்பது, தொண்ணூறு வயதுகளையும் தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. உணவுப்பழக்கம் மட்டுமல்லாது உடலுழைப்பு மற்றும் அதிக தேவைகள் அற்ற எளிமையான வாழ்க்கை முறையும் இவர்களுடைய ஆரோக்கியத்திற்கு காரணமாக இருக்கலாம்.

90களில் இலங்கை போன்ற நாடுகளில் பிரபலமாக தொடங்கிய பிராய்லர் கோழி வளர்ப்பு முழு இலங்கையின் உணவுப்பழக்கத்தை தலை கீழாக புரட்டிப்போட்டது என்று சொல்ல முடியும். இதற்கு விடத்தல் தீவும் விதிவிலக்கு அல்ல. கோழி இறைச்சி மட்டுமல்லாது ஏனைய அனைத்து வகை இறைச்சிகளுமே இன்று செயற்கையான பல வழிமுறைகளைப்பயன்படுத்தி இயற்கைக்கு மாறான அளவில் அதீத வளர்ச்சி அடைகின்ற , லட்சக்கணக்கில் கூட்டமாக அடைத்து வளர்க்கப்படுகின்ற பாவப்பட்ட சாதுவான விலங்குகளைக்கொடூரமாக கொன்றே முழு உலகுக்கும் விநியோகம் செய்யப்படுகின்றது. இன்று விடத்தல் தீவு மக்களுக்கு மட்டுமல்லாமல் முழு உலகிற்கும் கோழி இறைச்சி என்பது சாதாரண உணவாகி விட்டது. அப்பாவி மக்களுக்கு உண்மைகளை மறைத்து அவர்களுக்கு எந்த விதமான வாழ்க்கை முறையையும் அது எவ்வளவு கொடூரங்களைத்தாங்கியதாக இருந்தாலும் அல்லது விழுமியங்கள் அற்றதாக இருந்தாலும் அவர்களை அவ்வாழ்க்கை முறைக்கு பழக்கப்படுத்தி விட முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இன்றைய காலகட்டத்தில் விடத்தல் தீவு மக்களில் பல்வேறு தொழில் புரிபவர்கள் அனைவரினதும் உடல் உழைப்புக்கான தேவை குறைந்துள்ளது. முன்பு கடற்றொழில் செய்தோர் துடுப்பு வலித்து கடலுக்கு சென்று மீன் பிடித்தனர். இன்று பெரும்பாலானோர் எரிபொருளில் இயங்கும் என்ஜின் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்துகின்றனர். முன்னைய காலங்களில் ஆண்களும் பெண்களும் குடி தண்ணீருக்காக பள்ளமடுக்கிணறு வரை நடந்து சென்று தண்ணீரை சுமந்து வந்தனர். அவ்வாறே குளிப்பதற்காக பள்ளமடுக்குளம் வரையிலும் நடக்க வேண்டி இருந்தது. இன்று நீர் விநியோகம் அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்படுகின்றது. அத்தோடு மட்டுமல்லாது மக்கள் தங்கள் அன்றாட வீட்டுப்பணிகளைச்செய்வதற்கு முன்பு போல் உடலுழைப்பை பயன்படுத்த தேவையற்ற வகையில் பல்வேறு வகையான இயந்திர சாதனங்களைப்பயன்படுத்தத் தொடங்கியுள்ள்ளனர். அத்தோடு இந்த மாற்றத்துக்கு சமாந்திரமாக மற்றொரு முக்கிய மாற்றமும் நடந்துள்ளது. அதாவது முன்பை விட இறைச்சி வகைகளின் நுகர்வு (விசேடமாக பொரிக்கப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள்) பெருமளவில் அதிகரித்துள்ளது. குறைந்த உடலுழைப்பும்அதிகரித்தஅளவிலானஇறைச்சிநுகர்வும்இருமடங்குதாக்கத்தைமக்களின்ஆரோக்கியத்தில் ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இத்தாக்கங்கள் உடனடியாக தெரியாவிட்டாலும் சில தலைமுறைகள் கடந்து ஒரு பாரிய பொது சுகாதார பிரச்சனையாக உருவெடுக்கலாம்.

இனி இந்த இறைச்சி சம்பந்தமான சில விடயங்களை எடுத்து நோக்குவோம். மனிதனுடைய பரிணாம வளர்ச்சியின் ஒரு படிநிலையில் அவன் விலங்குகளை உணவாக எடுத்துக்கொள்ள ஆரம்பித்தான். ஆனால் பரிணாமம் என்பது எப்போதும் மாற்றங்களை உள்வாங்கி தேவை அற்றவைகளை விட்டு விடுவது என்பது தான். ஒரு கட்டத்தில் உள்ள வழக்கம் என்பது முடிவிலியாய் எப்போதுமே பரிணாமத்தில் தொடருவதில்லை. எனது பார்வையில் மனிதன் இறைச்சி உண்ணக்கூடிய தன்மையை பரிணாம ரீதியில், உயிரியல் ரீதியில், உடற்றொழிலியல் ரீதியில், உளவியல் ரீதியில் பொருந்தாத ஒரு தன்மையை அடைந்து கொண்டிருக்கும் ஒரு

நிலையில் உள்ளான். அதனால் தான் யாருமே இறைச்சிக்காக விலங்குகள் கொல்லப்படுவதை நேரடியாக பார்க்க விரும்புவதில்லை. இன்று இறைச்சி உண்ணும் பழக்கமானது ஒரு 'சூழலினால் பழக்கப்படுத்தப்பட்ட ' ஆனால் அத்தியாவசியமற்ற ஒரு உணவுப்பழக்கமாகவே தொடர்ந்து கொண்டுள்ளது.

மனிதன் தனது சிக்கலான பெருமூளை வளர்ச்சியினால் இன்று மற்ற விலங்குகளை விட கூடுதலான அளவு உயர்நிலை சிந்தனை கொண்ட ஒரு விலங்காக மாறிநிற்கின்றான். இந்த மாற்றத்துடன் சேர்ந்து பிறந்தது தான் உணவுக்காக விலங்குகளைக்கொடூரமாக கொல்ல வேண்டி இருப்பதனால் ஏற்படுகின்ற குற்ற உணர்ச்சி ஆகும். இதைதவிர்ப்பதற்காகவே விலங்குகளைக்கொல்லும் பொது அவற்றை கடவுளுக்கு பலியிடுவதாக அல்லது எதாவது ஒரு சமயச்சடங்குடன் தொடர்புபடுத்தி அந்தக்கொலையை செய்வதற்கான குற்ற உணர்ச்சியை கடவுளுக்கு அல்லது சமயத்திற்கு மடை மாற்றி விடுகின்றனர். இதனை உலகம் முழுவதும் உள்ள மதச்சடங்குகள் அல்லது கலாச்சாரங்கள் அனைத்திலும் அவதானிக்க முடியும். ஏனென்றால் இந்த குற்ற உணர்ச்சி என்பது மனித இனத்திற்கே பொதுவானது. இறைச்சி உண்ண வேண்டும் என்றால் அவரவர் தங்கள் இறைச்சிக்கான விலங்கினை அவரவரே தான் கொன்று உண்ண வேண்டும் என்று ஒரு சட்டம் வருவதாக கற்பனை செய்து கொள்வோம். எத்தனை பேர் இறைச்சி தொடர்ந்து உண்ணக்கூடியவர்களாக இருப்பார்கள்?
விலங்குகளைக் கொடூரமாக கொல்லும் இந்தக் குற்ற உணர்ச்சிக்கு எதிரான போராட்டமும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. ஏனெனில் மனிதன் உயர்ந்த சிந்தனைத்திறன் கொண்டவன் அல்லவா? அதனால் தான் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புலால் உண்ணாமை என்ற ஒரு தனி அத்தியாயத்தையே திருக்குறளில் எழுதினார். அது மட்டும் அல்லாது சில மதங்களும் (உதாரணமாக சைவ சமயம்) அவற்றின் உட்பிரிவுகளும் சைவ உணவை வலியுறுத்துவனவாக உருவாயின.

இங்கு கிறிஸ்தவ மதத்தையும் இறைச்சி உண்பது தொடர்பான நடைமுறையையும் சற்று மீளாய்வு செய்வது நலம். கிறிஸ்தவ மதம் என்றாலே தாராளமாக இறைச்சி உண்பதற்கு அனுமதி உண்டு என்பது போன்ற ஒரு தோற்றம் உண்டு. அதற்கு ஒரு முக்கிய காரணம் இம்மதம் எப்போதும் மேற்குலக நாடுகளுடன் தொடர்புடையதான ஒரு தோற்றம் உண்டு. ஏனெனில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பியக்கண்டங்களில் வசித்து வருவதாலும் அவர்களுடைய அன்றாட உணவு முறையில் இறைச்சி இடம் பெறுவது தற்போதைய நடைமுறையாகவும் உள்ளது.
ஆனால் பைபிளில் பழைய ஏற்பாட்டிலே மரக்கறி தான் இறைச்சிவகையை விட சிறந்த உணவு தானியேல் அரசனுடைய கதையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அண்மையில் *christospiracy* எனும் ஆவணப்படம் அமெரிக்காவில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் வெளியிடப்பட்டது. இந்த ஆவணப்படம் இயேசு எந்த காரணங்களுக்காக உண்மையில் கொல்லப்பட்டார் என விரிவாக ஆராய்கின்றது. இயேசு நல்லவற்றை போதித்தார், பல நன்மைகளை செய்தார், நோயாளிகளைக்குணப்படுத்தினார் என்றால் மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு அன்றைய ஆட்சியாளரின் கோபத்துக்கு ஏன் ஆளானார் எனும் கேள்வி எழுகின்றது. பொதுவாக இயேசு அந்நாட்களில் இருந்த மதச்சட்டங்களையும் சடங்குகளையும் எதிர்த்து போராடினார் என்பது தெளிவாக தெரிகின்றது. அத்தோடு அன்றைய ஆட்சியாளர்கள் மதத்தையும் மதகுருக்களையும் சார்ந்தே ஆட்சி நடத்தினர் என்பதும் தெளிவு.

கடற்கரைக் காற்றின் மென்மையான கரங்களில் அமைந்திருக்கும் விடத்தல்தீவு வெறும் ஒரு கிராமம் மட்டுமல்ல - அது நம்பிக்கையின் உயிருள்ள சரணாலயம், அங்கு பக்தி அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. தென்னை மரங்களின் மீது அமைதியான நிழலைப் பதிக்கும் உயரமான மணி கோபுரம் முதல் பிள்ளையாரின் சிக்கலான கோபுரங்கள் வரை. தங்க அந்தி வேளையில் ஜொலிக்கும் சைவக் கோயில், விடத்தல்தீவின் மதக் கட்டிடக்கலை அதன் அடையாளத்தின் ஆன்மீக முதுகெலும்பாக அமைகிறது. இந்தக் கட்டமைப்புகள் வழிபாட்டுத் தலங்களை விட மேலானவை - அவை ஒரு சமூகத்தின் ஆன்மா; நினைவின் காலத்தால் அழியாத அடையாளங்கள்.

ஒவ்வொரு கட்டிடமும் ஒரு கதையைப் பேசுகிறது: சூரிய ஒளியில் நனைந்த முன் முற்றம்; புனிதமான சமச்சீர் கொண்ட செயிண்ட் ஜேம்ஸ் தேவாலயம், சீருடையில் இருந்த குழந்தைகள் ஒரு காலத்தில் ஓதிய ஜெபமாலைகளின் கிசுகிசுப்புகளை இன்னும் சேகரிக்கிறது. மரியாள் தேவாலயத்தின் துடிப்பான நீலம் தூபத்தின் நறுமணத்தையும், பண்டிகை நாட்களில் பாடப்படும் தமிழ் பாடல்களின் எதிரொலியையும் தூண்டுகிறது. இப்போது மஞ்சள் ஒளி அமைதியால் மூடப்பட்டிருக்கும் பிள்ளையார் கோயில், எண்ணற்ற சடங்கு படிகளின் அடையாளங்களையும், மென்மையான, வானிலையால் பாதிக்கப்பட்ட கைகளால் வரையப்பட்ட கோலத்தின் தாளத்தையும் கொண்டுள்ளது. அடக்கமான ஆனால் கண்ணியமான கிராம மசூதி, ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது - காலை மூடுபனியை மெதுவாகக் கிழித்து, பிரார்த்தனை செய்ய வேண்டிய ஒவ்வொருவரையும் கூட எழுப்புகிறது.

கிராமப் பாதைகளில் - வெறுங்காலுடன், விரிந்த கண்களுடன், பருவகால சடங்குகளால் சூழப்பட்ட - தங்கள் வளர்ச்சிப் பருவத்தைக் கழித்தவர்களுக்கு, இந்த இடங்கள் உணர்ச்சி ரீதியாக காந்தமாகவே இருக்கின்றன. தொலைதூர நகரங்கள் அல்லது வெளிநாடுகளில் குடியேறிய பெரியவர்கள், பெருநாள் காலை நேரங்களில் மசூதியின் சிவப்புப் படிகள், லூர்து அன்னை மரியின் ஊர்வல வண்டிகள்; விடியற்காலையில் கோயில் சுவர்களில் சுமந்து செல்லப்படும் சைவ மந்திரங்களின் மென்மையான முணுமுணுப்பு போன்றவற்றுக்குத் தங்கள் இதயங்கள் அடிக்கடி அலைந்து திரிவதைக் காண்கிறார்கள். இந்த இடங்கள் அவர்களின் வாழ்க்கையின் பின்னணிகள் மட்டுமல்ல - அவை அவர்களின் ஆன்மீக திசைகாட்டி, உணர்ச்சிப்பூர்வமான தங்குமிடம்; சமூக இதயத் துடிப்பு.

வீடு திரும்பும்போது, இந்தக் கட்டமைப்புகள் இன்னும் நின்றுகொண்டே, மணிகள் ஒலித்துக் கொண்டே அல்லது மாலை வானத்தின் கீழ் ஒளிர்வதைக் கண்டால், ஒரு கண நேரச் சரிவை உணர வேண்டும். ஒரு சிறிய மூச்சுக்கு, தேவாலயத்திற்கு வெளியே உள்ள ஆலமரத்தின் கீழ் நிற்கும் பெரியவர், ஒரு காலத்தில் அதே மணியை அடித்து, பிரார்த்தனை மண்டபத்தைச் சுற்றி டிராகன்ஃபிளைகளைத் துரத்திச் சென்ற அல்லது வெள்ளிக்கிழமை மசூதி தொழுகையின் போது தங்கள் பாட்டியின் கையைப் பற்றிக் கொண்ட குழந்தையும் கூட. கோயில் கற்பூரத்தின் வாசனை, தேவாலயக் கூரையின் மேல் பனை ஓலைகளின் சலசலப்பு, தொலைதூர அஸான் மந்திரம் - இவை கிராமத்தின் கிசுகிசுப்பு முறை: நீங்கள் உண்மையில் ஒருபோதும் வெளியேறவில்லை. நீங்கள் இப்போதுதான் வளர்ந்தீர்கள்.

விடத்தல்தீவில், நம்பிக்கை ஒருபோதும் அருவமாக இருந்ததில்லை - அது தொட்டுணரக்கூடியதாகவும், கேட்கக்கூடியதாகவும், மணம் வீசுவதாகவும் இருந்தது. அது பகிரப்பட்ட சடங்குகள் மற்றும் சமூகக் கூட்டங்களில், பிரசங்கங்கள் பாடல்களின் பழக்கமான இசையில், அனைவருக்கும் ஆன்மீக நங்கூரத்தை வழங்கும் பல மத சகவாழ்வில் வாழ்ந்தது. இந்த இடங்கள் வெறும் கட்டமைப்புகள் அல்ல - அவை

குழந்தைப் பருவத்தின் அடுக்கு வாசல்களாகும், அங்கு புனிதமானது எளியவர்களைச் சந்தித்தது, மேலும் நினைவகம் இன்னும் பயபக்தியில் மண்டியிடுகிறது.

"அர்னால்டின் கல்லோடை, எங்கள் உப்பு திசைகாட்டி"
விடத்தல்தீவின் கடல் பாதை மற்றும் தொலைதூர பெரியவர்களாக வளர்ந்த குழந்தைகளுக்கான ஒரு கவிதை.
கடலின் உப்பு மூச்சு பாடத் தொடங்கும் இடத்தில்,
அர்னால்டின் கல்லோடை மறக்கப்பட்ட இறக்கையைப் போல நீண்டுள்ளது. கடக்க ஒரு கல்லோடை அல்ல, ஆனால் வழிநடத்த ஒரு ஓடை - கடலின் நடுவில், கண்ணியமாக நிற்கும் கல் தூண்கள்.
கணுக்கால் ஆழமான கரைகள் முதல் கடலின் தொண்டை வரை,
அது நம் முன்னோர்களுக்கு எங்கு மிதக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தது. ஒவ்வொரு குறைந்த அலையுடனும், ஒவ்வொரு நிலவொளி பெருக்குடனும்,
அது இன்னும் நம்மால் சொல்ல முடியாத கதைகளை கிசுகிசுத்தது.
கடல் எங்களை பயமுறுத்தவில்லை, அது வைத்திருந்த ஆழமும் எங்களை பயமுறுத்தவில்லை,
நண்டுகள் மெதுவாக ஊர்ந்து செல்லும் பாறைகளின் குழந்தைகள் நாங்கள். நாங்கள் அலைகளுடன் ஓடினோம், படகு ஓட்டுபவர்களின் துடுப்புகளைத் துரத்தினோம்,
கரைகளை வரைபடமாக்கும்போது நட்சத்திரங்களைக் கற்றுக்கொண்டோம்.
அந்தச் சிறிய கலங்கரை விளக்கம் - கண்ணாடி மற்றும் கருணையின் கிரீடம் -
ஒரு கிராமத்தின் அரவணைப்பைப் போல பாதையை ஒளிரச் செய்தது. விடியற்காலையின் சுருதியிலோ அல்லது மீனவர்களின் அந்தி சாயும் நேரத்திலோ,
அது உமி உலகில் நம்பிக்கையைப் போல எரிந்தது.
அர்னால்டின் ஓடை - எங்கள் கிராமத்தின் முதுகெலும்பு,
வலைகள் போடப்பட்டு எதிர்காலங்கள் பின்னிப் பிணைந்திருந்த இடம். இப்போதும் கூட, தொலைதூர நாடுகளிலும், உடைகளிலும், திரைகளிலும்,
பிரார்த்தனை நடைமுறைகளைப் போல அதன் தூண்களை நாம் கனவு காண்கிறோம்.

நாங்கள் வேலைகளுக்காக, நகரங்களுக்காக, புகழுக்காகப் புறப்பட்டோம்,
ஆனால் கண்ணாடி கோபுரங்களில் யாரும் எங்கள் பெயரை அழைப்பதில்லை. விடத்தல்தீவின் விளிம்பில் கடல் செய்வது போல,
குழந்தைப் பருவம் இடிந்து விழும் விளிம்பில் காத்திருக்கிறது.
ஓ, என்னைத் திரும்ப அழைத்துச் செல்லுங்கள் - கடந்த காலத்தை மீண்டும் எழுத அல்ல,
ஆனால் அலைகள் வேகமாக எழும் இடத்தில் நிற்க. சதுப்புநில ஒளியில் சூரியன் விழுவதைப் பார்க்கவும்,
வரவிருக்கும் இரவை மீண்டும் உணரவும்.
அர்னால்டின் ஓடை நிற்கும் இடத்தில், தைரியமாகவும் தனியாகவும்,
நான் அறியப்பட்ட இடத்திற்குத் திரும்புவதற்கான வழியைக் காண்கிறேன். ஒரு கல் பாதை, ஒரு திசைகாட்டி -
என் ஆன்மாவை அதன் பழமையான வீட்டிற்கு வழிநடத்துகிறது.

அர்னால்டின் ஓடை கடலின் அரவணைப்பும்: நினைவுக்கும் ஆழமான நீருக்கும் இடையிலான ஒரு படகுப் பாதை.
கடல் எப்போதும் ரகசியங்களை வைத்திருக்கிறது, விடத்தல்தீவில், அந்த ரகசியங்கள் அலைகளிலிருந்து அமைதியான கம்பீரத்துடன் எழுகின்றன - ஆர்னால்டின் கல்லோடை என்று அழைக்கப்படும் வானிலையால் பாதிக்கப்பட்ட கல்லோடை வழியாக. ஆழமற்ற நீரில் தைரியமாக நீண்டு, பின்னர் ஆழமான அடிவானத்தில் மறைந்து போகும் இந்தக் கல் தூண்களின் வரிசை, ஒருபோதும் பாதையை கொண்டு செல்ல நோக்கப்படவில்லை. இது ஒரு ஆன்மாவில் ஒரு ஓடை - படகுகளுக்கான பாதை, பாதுகாப்பான பாதைக்கான பிரார்த்தனை மற்றும் ஒரு காலத்தில் இந்த கடற்கரையை வீடு என்று அழைத்தவர்களுக்கு உப்பு மற்றும் நினைவின் திசைகாட்டி.

இந்த அமைப்பு எளிமையானதாகத் தோன்றலாம்: கடந்த காலத்தின் காவலாளிகளைப் போல, கடலில் இருந்து வெளிவரும் பாசி முத்தமிட்ட தூண்களின் வரிசைகள். ஆனால் விடத்தல்தீவு மக்களுக்கு - குறிப்பாக விடியற்காலையில் தங்கள் தந்தையர் மரப் படகுகளில் ஏறுவதைப் பார்த்து வெறுங்காலுடன் குழந்தைப் பருவத்தைக் கழித்தவர்களுக்கு - அர்னால்டின் பாலம் வாழ்ந்த வரலாற்றின் ஒரு நினைவுச்சின்னமாகும். இது கடற்கரையின் அமைதியான, உப்பு நிறைந்த ஆழமற்ற பகுதிகளுக்கும் அப்பால் உள்ள இந்தியப் பெருங்கடலின் அடக்கப்படாத துடிப்புக்கும் இடையிலான நுழைவாயிலைக் குறிக்கிறது. கரு நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட கல் தூண்கள் மீனவர்களுக்கு பாதுகாப்பான பாதையை மட்டும் குறிக்கவில்லை; கடலின் தாளங்களுடன் ஆழமாக பிணைக்கப்பட்ட மக்களின் உணர்ச்சி நிலப்பரப்பை அவை கோடிட்டுக் காட்டுகின்றன.

தண்ணீரில் இருந்து ஒரு பாதுகாவலரைப் போல எழுந்து நிற்கும் மினி கலங்கரை விளக்கம் - அளவில் தாழ்மையானது, ஆனால் அர்த்தத்தில் நினைவுச்சின்னமானது. ஒரு தனி கான்கிரீட் தூணின் மேல் ஒரு கண்ணாடிப் பெட்டியில், கன்னி மேரியின் சிலை தண்ணீரின் மேல் நித்தியமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. காலை சூரியனுக்கு எதிராகவோ அல்லது அந்தி வேளையில் மறைவதற்கு எதிராகவோ அமைக்கப்பட்ட இந்த தனி கலங்கரை விளக்கம், ஒரு வழிகாட்டியை விட அதிகம் - இது பாதுகாப்பின் சின்னம், தங்கள் வாழ்க்கையை அலைகளுக்கு ஒப்படைத்த தலைமுறைகள் மீது ஒரு தாய்வழி கண்.

படகுகளின் ஓரங்களில் ஒரு காலத்தில் ஒட்டிக்கொண்டிருந்த குழந்தைகளுக்கும், கடைசித் தூணுக்கு அருகில் நீந்தத் துணிந்த இளம் சிறுவர்களுக்கும், விரிந்த கண்களுடனும் காற்றில் பறக்கும் கூந்தலுடனும் கரையில் காத்திருந்த சிறுமிகளுக்கும், இந்தக் கடல் கட்டமைப்புகள் அவர்களின் முழு உலகத்திற்கும் பின்னணியாக இருந்தன. இப்போது, வெளிநாட்டு நகரங்கள், பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் பரபரப்பான நகரங்களில் சிதறிக்கிடக்கும் பெரியவர்களாக, அவர்கள் அந்தக் கடற்கரையைத் தங்களுக்குள் சுமந்து செல்கிறார்கள்.
விடத்தல்தீவை விட்டு வெளியேறியவர்களின் இதயங்களில் வளரும் ஒரு சிறப்பு வகையான ஏக்கம் - உப்பு கலந்த வலி - உள்ளது. அது போக்குவரத்து நெரிசல்கள் மற்றும் போர்டு அறைகளில், மின்னஞ்சல்களுக்கு இடையில் மௌனமாக, மற்றும் அலைகள் மற்றும் படகுகளின் சத்தத்தால் நிரப்பப்பட்ட கனவுகளில் அமைதியாக வெளிப்படுகிறது. அவர்களின் இதயங்களில், அர்னால்டின் ஓடை ஒரு செயல்பாட்டு அமைப்பு மட்டுமல்ல - அது அவர்களின் தோற்றத்திற்கான ஒரு பாதை, அவர்களின் வயதுவந்தவர்களை குழந்தைப் பருவத்தின் அச்சமின்மை மற்றும் அதிசயத்துடன் இணைக்கும் ஒரு புலப்படும் நூல்.

அதன் கரையில் நின்றுகொண்டு, பாறையில் மெதுவாக அலை மோதுவதைப் பார்க்கும்போது, பள்ளிச் சிறுவர்கள் ஒருவருக்கொருவர் நீந்திச் செல்லத் துணிந்து சிரிப்பதையோ, கடலில் இறங்குவதற்கு முன் பிரார்த்தனை செய்யும் தந்தையர்களின் மனமார்ந்த முணுமுணுப்பையோ கேட்க முடியும். அரிப்பு மற்றும் காலத்திற்கு எதிராகத் தாங்கும் இந்த கட்டமைப்புகள், படகுகளை மட்டுமல்ல, நம்பிக்கை, நினைவகம் மற்றும் வீடு திரும்புதல் ஆகியவற்றின் சுமைகளையும் சுமந்து செல்கின்றன.

அர்னால்டின் ஓடை அதன் அடக்கமான கலங்கரை விளக்கமும் விடத்தல்தீவுக்கு கடலின் அமைதியான காணிக்கையாகும் - எதிர்காலம் தெரியாத, ஆனால் கடல் பரிச்சயமான ஒரு காலத்தை நினைவூட்டுகிறது. ஒரு குறுகிய வருகைக்காக கூட திரும்பி வருபவர்களுக்கு, இந்த கட்டமைப்புகள் நீர் வழியாக ஒரு பாதையை மட்டும் குறிக்கவில்லை. அவை திரும்பும் வழியைக் குறிக்கின்றன - ஒரு காலத்தில் அழகாக எளிமையான வாழ்க்கையின் சொந்தமானது, குழந்தைப் பருவம் மற்றும் உப்பு நீர் வேர்களுக்கு.

14. இன ஐக்கியத்துக்கு வலுச் சேர்த்த களங்கள் - முகம்மது அப்துல் காதர் அமீன்

மன்னார் மாவட்டத்தின் வடக்கே 15 வது மைல் கல்லில் விடத்தல்தீவுக் கிராமம் அமைந்துள்ளது. இலக்கியம் வளர்ப்பதிலும் அறிவியல், ஆன்மீகத்துறைகளிலும், வர்த்தகம், விவசாயம், மீன்பிடி என்பவற்றிலும் இறைவனின் கொடையாய் அமைந்த எழில் பாடும் ஓர் அழகிய கிராமம். இங்கு கிராமத்தின் மேற்குப் பிரதேசத்தில் கிறிஸ்தவர்களும், கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம்களும், இந்துக்கள் கிராமத்தின் மத்தியிலும் வாழ்ந்தனர். மேற்கே மீன்கள் நிறைந்த கடலும், கிழக்கே உள்ள காட்டில் சுண்டி இழுக்கும் இயற்கை அழகும், வளமும், மத்தியில் வளம் கொழிக்கும் நெல் வயல்களும் காணப்பட்டன. இங்குதான் மூவின மக்களும் மதத்தால் வேறுபட்ட போதிலும் மனத்தால் ஒன்றுபட்டு உன்னத சமூகமாக வாழ்ந்தனர்.

பண்டமாற்று
கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் கடற்றொழிலிலும் முஸ்லிம் மற்றும் இந்துக்களில் அநேகர் விவசாயத்திலும் ஈடுபட்டனர். மூன்று சமூகத்தவர்களிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் வியாபாரத் துறைகளிலும் பிரகாசித்தனர். கடல்,வயல், மேட்டு நிலங்கள், கால் நடைகள், காடுகள் போன்றவற்றில் இருந்து போதுமான வளம் காணப்பட்டதால் மக்கள் நலமாகவும் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தனர். தங்களுக்கு தேவையானது போக மேலதிகமாகக் காணப்படும் பொருட்களை அவற்றின் பெறுமதிக்கேற்றாற் போல் பண்டமாற்று செய்து கொண்டனர். கிறிஸ்தவர்கள் மீன், கருவாடு, இறால், கணவாய் போன்றவற்றை கொடுத்து முஸ்லிம்களிடம் அரிசி, பால், தயிர், மோர், நெய், தேன், முருங்கைக்காய் போன்றனவற்றை பகரமாகக் பரிமாறிக் கொண்டனர். இவ்வாறே, இந்துக்களும் கிறிஸ்தவர்களுடனும் முஸ்லிம்களுடனும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். முச்சமயத்தினரும் பண்டமாற்று செயற்பாட்டால் ஒரே வகையான போசாக்கு நிறைந்த உணவையே உண்டு மனத்தால் ஒன்றுபட்டு உரமிக்க, திறன்மிக்க, நோயற்ற சமூகமாக அன்று வாழ்ந்தனர்.

விவசாயம்

முழு உலகிற்கும் உணவளிக்கும் தொழில்களில் பிரதான தொழிலாக விவசாயமே விடத்தல்தீவு மக்களின் பிரதான தொழிலாகும். இன மத பேதமின்றி மூவினத்தவர்களும் பெருமிதத்துடன் இத்தொழிலை செய்து வந்தனர். எமது ஊரைப் பொறுத்தவரையில், விவசாய நிலங்கள் ஐக்கியம் விளையும் நிலங்களாகவும் விளங்குகின்றன. முற்காலத்தில் அக்கம் பக்கத்திலுள்ள விவசாயிகள் சிலர் ஒன்றுசேர்ந்து ஒவ்வொருவருடைய செய்கைகளையும் மேற்கொள்வது, அறுவடை செய்வது போன்ற வேலைகளை ஒற்றுமையாக சுழற்சி முறையில் செய்து இலாபமீட்டினர். இந்த முறையை “பரத்தை” முறை என அழைப்பர். விவசாயம் ஒரு தனி நபரால் செய்து முடிக்க முடியாத தொழிலாகும். ஒருவரில் ஒருவர் தங்கி இருப்பது தவிர்க்க முடியாததாகும். காணி உரிமையாளும், குத்தகைக்காரர்களும் வேறு இனத்தவர் என்ற வேறுபாடுகளின்றி சமத்துவம் நிலவும் இடமாக விவசாய நிலங்கள் விளங்குகின்றன. பயிர் செய்கைகையை பாதிக்கும் நோய்கள், கால்நடைகள், மற்றும் காட்டு விலங்குகள் போன்றவற்றின் தலையீட்டினைக் கட்டப்படுத்தமுடியாத சிறுபோக செய்கையின்போது, ஒருவருடைய விவசாய நிலத்தில் பல விவசாயிகள் ஒன்றாக பயிரச்செய்கை மேற்கொண்டு ஒற்றுமைக்கு உதாரணமாய் விளங்கினர். எமது ஊரில் இனங்களுக்கு இடையிலான நல்லுறவு மலர்ந்தது. அதற்கு விவசாயமும் வழி வகுத்தது என்றே கூறவேண்டும்.

கடற்றொழில்

விடத்தல்தீவு மக்களின் தொழிற்றுறைகளில் கடற்றொழிலும் பிரதானமானதொன்றாகக் காணப்பட்டது. அனேகமாக கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களில்; சிலரும் இத்தொழிலை செய்துவந்தனர். அதிகாலை நான்கு மணியளவில் ஆலய மணி ஓசைக்கும் பள்ளிவாசலில் அடிக்கப்படும் “நகரா” என்ற மேளச்சத்தத்திற்கும் துயிலெழும்புவதற்கு விடத்தல்தீவு மீனவர்கள் பழகிக் கொண்டனர். மீன்பிடித்தலில் பல முறைகள் காணப்பட்டன. கண்டிவலை, கொட்டுவலை, படுப்பு வலை, பறிக்கூடு, தூண்டில், மணலை வலை, சிறையா வலை, களங்கட்டி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இயந்திரப்படகுகள், காற்றின் விசையில் செல்வதற்கான பாய்மரப் படகுகள், வைரமான கம்புகளை ஊன்றி வலித்துச் செல்லும் வள்ளங்கள், தோணிகள் என்பன மீன்பிடிக் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

கடலுக்குச் சென்ற மீனவர்கள் கரை திரும்புவதற்காக, இன்றுள்ளவாறான நவீன வசதிகள் அப்போதிருக்கவில்லை. அன்றிருந்த மீனவர்கள் பலமிக்கவர்களாக மட்டுமல்லாது மதிநுட்மிக்கவர்களாகவும் காணப்பட்டனர். ஊரை மையமாகக் கொண்ட வெள்ளி, நட்சத்திரம், விடத்தல்தீவை எல்லையாகக் கொண்ட கன்னாக் காடுகளை மையமாகக் கொண்டும் கரை திரும்பினர். பின்னரான காலங்களில் கோவில் கோபுரம், கொடிமரம், ஒளிரும் இலாம்புகள் உயரமான மரங்களில் கட்டித் தொங்கவிட்டு கரை திரும்ப வழி காட்டப்பட்டது.

முஸ்லிம்களில் சிலர் கடலட்டை, சங்கு குளித்தல். சார் அடைத்ததல், களங்கட்டி, வளைச்சல் வலை, தள்ளு வலை, இழுப்பு வலை போன்ற கடற் தொழில்களைச் செய்து வந்தனர். இவர்கள் கொண்டுவரும் மீன்கள் முதலானவற்றை மீன் வாடிகளில் குவிப்போர், பெட்டிகளில் அடைப்போர், பதனிடுவோர், மற்றும் அவற்றை பிற ஊர்களுக்கு விற்பதற்காக வாகனங்களிலும் சைககிள்களிலும் ஏற்றிச் செல்வோர், உணவுக்காக மீன்களை வாங்க வருவோர் என பல தரப்பினரின் ஒன்றிணைவு இத்துறைமுகத்தை விழாக் கோலமாக்குவர். மூன்று மதத்தினரும் ஒன்றுகூடும் துறையாகவும், ஐக்கியத்தை வலுப்படுத்தும் கடலோரமாவும் விடத்தல்தீவுத் துறைமுகம் விளங்கியது.

இணக்க சபைகள் சட்டம்

கிராம மட்டங்களில் ஏற்படும் தகராறுகள், முறுகல்கள், மற்றும் அபிப்பிராயப் பேதங்களை தீர்த்து வைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே இணக்க சபைகள். தொழில்ரீதியாக, நம்பிக்கை நிமித்தம், வருமானப் பங்கீடுகள் அல்லது உரித்துடமை ரீதியாக ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சமூகங்களுக் கிடையில் ஏற்படச் சாத்தியமான கசப்புகளை தீர்த்து மக்களின் அமைதியான வாழ்வுக்கு வழியேற்படுத்தும் நோக்குகளே இந்த சபைகளின் பிரதான பணிகளாகும். இந்த உயரிய நோக்குடன் இந்த இணக்க சபைகளை நாட்டின் முதலாவது பெண் பிரதமரும் உலகின் முதலாவது பெண் பிரதமருமான முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் அறிமுகம் செய்தது. அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு *1972* ஜூன் *12* இல் வெளியிடப்பட்ட விஷேட வர்த்தமானியில் இந்த இணக்க சபைகள் அறிமுகஞ் செய்யப்பட்டன. இவ்வாறான சபைகளின் அவசியத்தை உணந்தவர்கள் தத்தமது கிராமங்களிலும் இந்த சபைகளை அமைக்கத் தலைப்பட்டனர். இதற்கிணங்க மன்னார், பெருங்களிப்பற்று கிராமப் பகுதிகளை உள்ளடக்கி *1976.06.25* ஆம் திகதி இணக்க சபை அமைக்கப்பட்டது. இந்தச் சபையில் இக்கிராமங்களில் உள்ள மூவினத்தவர்களையும் உள்ளடக்கி பின்வருவோர் பிரதிநிதிகளாக உள்வாங்கப்பட்டிருந்தனர்.

1. விடத்தல்தீவு, 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த காதர் சாஹிபு மீரா முஹைதீன் அவர்கள்.(தலைவர்)
2. பெரியமடு, மடுக்கோவிலைச் சேர்ந்த அல்லாப்பிச்சை நைனா முஹம்மது அவர்கள்.
3. பெரியமடு, மடுக்கோவிலைச் சேர்ந்த காதர் சாஹிபு சுல்தான் முஹைதீன் அவர்கள்.
4. பெரியமடு, மடுக்கோவிலைச் சேர்ந்த மீரா சாஹிபு முஹம்மது அப்துல் காதர் அவர்கள்.
5. விடத்தல்தீவு, சவரிகுளத்தைச் சேர்ந்த சவரிமுத்து சீமாம்பிள்ளை அவர்கள்.

6. விடத்தல்தீவு, கோவிக்குளத்தைச் சேர்ந்த வீரபாகு முத்துக்குமாரு அவர்கள்.
7. விடத்தல்தீவு, ஆத்திமோட்டையைச் சேர்ந்த நாகமுத்து தாமோதரம்பிள்ளை அவர்கள்.
8. விடத்தல்தீவு, 5 ம் வட்டாரத்தைச் சேர்ந்த அவுரத் மகேசு அவர்கள்.
9. விடத்தல்தீவு, 5 ம் வட்டாரத்தைச் சேர்ந்த அவுரத் அடெக்கலம் அவர்கள்.
10. விடத்தல்தீவு, 6 ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் நீக்கிலாப்பிள்ளை அவர்கள்.
11. விடத்தல்தீவு, 6 ம் வட்டாரத்தைச் சேர்ந்த தொம்பிரால் தோமியஸ் அவர்கள்.
12. விடத்தல்தீவு, 6 ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயாத்துரை சோமசுந்தரம் அவர்கள்.
13. விடத்தல்தீவு, 7 ம் வட்டாரத்தைச் சேர்ந்த வரப்பிரகாசம் சிவக்கீன் அவர்கள்.
14. விடத்தல்தீவு, 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த மீரா சாயிபு முகம்மது காசிம் அலி அவர்கள்.
15. விடத்தல்தீவு, 7 ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவக்கீன் சூசைப்பிள்ளை அவர்கள்.
16. விடத்தல்தீவு, 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்துல் காதர் முகம்மது மஹ்றூப் அ வர்கள்.
17. விடத்தல்தீவு, 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த வரிச முகம்மது காசிம் அவர்கள்.
18. விடத்தல்தீவு, 9 ம் வட்டாரத்தைச் சேர்ந்த முகைதீன் கண்டு முகம்மது மீரா சாஹிபு அவர்கள்.
19. விடத்தல்தீவு, 9 ம் வட்டாரத்தைச் சேர்ந்த நைனா முகம்மது மீரா சாயிபு அவர்கள்.
20. விடத்தல்தீவு, 9 ம் வட்டாரத்தைச் சேர்ந்த பிச்சை சுலைமான் லெப்பை அவர்கள்.
21. விடத்தல்தீவு, 10 ம் வட்டாரத்தைச் சேர்ந்த முகம்மது லெப்பை முகம்மது செரீப் அவர்கள்.
22. விடத்தல்தீவு, 10 ம் வட்டாரத்தைச் சேர்ந்த முகம்மது லெப்பை இஸ்மாயில் அவர்கள்.
23. விடத்தல்தீவு, 11 ம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்துல் காதர் முகம்மது முகைதீன் அவர்கள்.

வைத்தியம்

மனிதனின் பிறப்பு தொடங்கி இறப்பு வரை வைத்திய தேவைகள் மனித வாழ்க்கையுடன் ஒன்றித்தே வந்துள்ளன. அதிலிருந்து எம்மை பிரிக்க முடியாது. விடத்தல்தீவு வரலாற்றுக் காலம் தொட்டு வைத்திய,சுதேச வைத்திய முறைகள் விடத்தல்தீவில் இருந்தே வந்துள்ளன. அக்காலத்தில் விடத்தல்தீவில் பெருமளவு வெற்றுக் காணிகள் இருந்தபோதும் முன்னர் யாழ்ப்பாணம் - மன்னாருக்கான பிரதான பாதையிலும், கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த கிராமத்தின் மையப்புள்ளியான இடத்தில் வைத்தியசாலை அமைந்ததால் இக்காணியே வைத்தியசாலைக்கு மிகப் பொருத்தமானதென உணரப்பட்டு வைத்தியசாலை 1910 களில் கட்டப்பட்டது. விடத்தல்தீவிற்கு அண்மித்த கிராம மக்களும் விடத்தல்தீவு சமூகத்தினரும் எவ்வித சிரமமுமின்றி மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

இங்குள்ள மூவின மக்களின் இன ஐக்கியத்தால் கவரப்பட்ட திரு. நடராஜா, திரு. சிவப்பிரகாசம், திரு. இளையதம்பி, திரு. சுசுப்ரமணியம், திரு. முத்துக்குமார், திரு. சின்னத்தம்பி, திரு. பரராஜசிங்கம், திரு. பாலாஜி, திரு. அரியசிங்கம் போன்ற வைத்தியர்கள்; அர்ப்பணிப்புடனும், அக்கறையூடனும் அளப்பரிய சேவையாற்றியதை இவ்வூர் மக்கள் நன்றியுடன் நினைவுகூர்கின்றனர். இங்கு மருத்துவக் கலவையாளரான விடத்தல்தீவைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையாவும் பின்னர் அவரது சகோதரரான வல்லிபுரம் சின்னையாவும் பணியாற்றினர். சின்னையா ஓடலி என எல்லோராலும் அழைக்கப்பட்டு, மக்கள் மத்தியில் இவர் பிரபல்யம் பெற்றிருந்தார். இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் 20 வருடங்களின் பின்னர் வார்ட்டு வசதிகளுடன் கூடிய கிராமிய வைத்தியசாலை ஒன்று பள்ளமடுவில் 1930 ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மகப்பேற்றுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த இந்த வைத்தியசாலை, பிற்காலத்தில் ஏனைய மருத்துவ சேவைகளையும் வழங்கத் தொடங்கியது. இந்நிலையில், விடத்தல்தீவில் மிக நீண்ட காலமாக மருத்துவ நிலையம் இயங்கியதும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரைச் சேர்ந்த திருவாளர்களான அரசரட்ணம்,முகம்மது கௌது, முகம்மது அலி ஆகியோர் இக்காலத்தில் இங்கு பணியாற்றினர்.

சுதேச வைத்திய முறையிலும் நம் கிராமத்தவர் அதிகம் நாட்டம் செலுத்தினர் மூவினத்தையம் சேர்ந்த மக்களிடம் சுதேச வைத்தியர்கள் காணப்பட்டனர். இதனைக் குலத் தொழிலாகவும் செய்து வந்தனர். சிலர் இலவசமாகவும் செய்தனர். சிலர் தகப்பன் அதனைத் தொடர்ந்து பிள்ளைகள் என பரம்பரையாகவும் செய்தனர். எந்த வேளைகளிலும் நோயாளிகள் சென்றாலும் அவர்களை இன் முகம் காட்டி வரவேற்று சிகிச்சை அளித்தார்கள்.

மனுவேல் முடியப்பர், குளத்தார் பரியாரி (இவரது தாயார் முஹிதீன் உம்மாவூம் இத்துறை மருத்துவத்திற்கு பேர் போனவர்), முகம்மது பரியாரி (இவருக்குப் பின்னர் இவரது மகனான மீராசாகிபு இந்த வைத்திய முறையைத் தொடர்ந்து பேணினார்), மு.பி.மு. அப்துல் காதர், வரிசை முகம்மது (மு.பி.மு. அப்துல் காதரின் கண் வைத்திய முறையை இவர் தொடர்ந்து மேற்கொண்டார், இவரின் பின்னர் இவரின் பிள்ளைகளான வி.எம். காசிம், வி.எம்.எம். மீரான் முகைதீன் இவரின் வைத்திய முறையைத் தொடர்ந்தனர்) , திருமதி செய்யது முகம்மது உசன் உம்மா (இவருக்குப் பின்னர் இவரது மகளான மஹ்மூதா ஐதுரூஸ் மரைக்கார் இந்த வைத்தியத்தை தொடர்ந்து முன்னெடுத்தார்) , அடைக்கலப் பரியாரி (அடைக்கல நாதன்), பண்முக வைத்தியர் பாஸ்கரதாஸ் பத்தர், கப்பலார் அபூபக்கர் (இவருக்கு பின்னரான காலங்களில் மகன் அ. தாசின் இந்த மருத்துவ முறைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தார்) மொஹிதீன் உம்மா, மதார் சாகிப் குப்பை பிச்சை (இவருக்குப்பின்னர் மகள் நாகூரும்மா குப்பை பிச்சை தொடர்ந்து முன்னெடுத்தார்);.

இவர்கள் பெரும்பாலும் மூலிகைகள், மரப்பட்டைகள் கொண்டு வைத்தியம் செய்தனர். இம்முறை ஆயர்வேத வைத்தியம் அல்லது நாட்டு வைத்தியம் அல்லது கை வைத்தியம் என்று அழைக்கப்பட்டது. ஒற்றைத் தலைவலிக்கு நெற்றியில் மூலிகையை ஒட்டுதல், உண்ணாக்கு வளர்தலுக்கு உச்சி பிடித்து இழுத்தல், மூலிகையால் தயாரிக்கப்பட்ட உரை மருந்து குளிசைகள், மூலிகைக் கலவைகளைக் கட்டுதல், படுவெண்ணெய், சூரணத் தூள் அல்லது சுவாத சூரணம் தயாரித்தல். என்பவற்றில் கைதேர்ந்த கலையாக இருந்தனர். பல நோயாளர்களை குணப்படுத்தி மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தனர்.

பிள்ளைபேற்று: மருத்துவம்

கிராமியக்கால வைத்தியத்தில் இன்றளவும் ஆச்சரியப்படும் முறை இது. வீடுகளுக்கு வரும் பிள்ளையாச்சிகள், கர்ப்பினித் தாய்மார்களின் பிரசவ நேரத்தில் பணியாற்றி வேதனை போக்குவர். வெற்றியாச்சி, ராசம்மா பெத்தா, ஞானம்மா பெத்தா மற்றும் மாடத்தா பெத்தா எனப் பலர் வீடுகளுக்கு வந்து பணியாற்றினர். இந்த மருத்துவத்தில், செய்யது முகம்மது உசன் உம்மா மற்றும் மரியம் சமத்,ஹமீதும்மா நாகூர்ப்பிச்சை, (சிவத்த வாப்புவின் மனைவி) ஆகியோரும் தேர்ச்சியுடன் திகழ்ந்தனர். இதே வேளை விடத்தல்தீவைச் சேர்ந்த மருத்துவ மாது பிலோமினா ஜோசப் (அரியம்) *1962* ஆம் ஆண்டில் பள்ளமடு வைத்தியசாலையில் பணி புரிந்துள்ளார். இன , மத பேதம் பாராது கர்ப்பினித் தாய்மார்களின் வீடுகளுக்குத் தேடிச் சென்று , மகப்பேற்று நிகழ்வுகளில் பெரும் பங்காற்றியுள்ளார். இப்போதும் இவர் தாய்மார்களின் மத்தியில் பேசப்படுகின்றார்.

பள்ளமடுக்குளம்

விடத்தல்தீவில் மக்களின் இன ஐக்கியத்திற்கு இலக்கணமாய் திகழ்ந்த பள்ளமடுக்குளம், விடத்தல்தீவில் இருந்து ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இக்குளத்தைச் சூழ மருத மரங்களும் இத்திய ஆல் போன்ற மரங்களும் குளத்து நீரை எப்போதும் குளிர்ச்சிமிக்கதாய் வைத்திருந்ததுடன் இதமான காற்றையும் தந்தன. இன, மத பேதமின்றி அனைத்து மக்களும் நீராடி மகிழ்ந்தனர்.

உழைத்து வரும் உழவரும் களைத்து வரும் மீனவரும் குளக்கட்டில் அமர்ந்து நாட்டு நடப்பும் வீட்டு நிகழ்வும் பேசி எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வர். இன ஐக்கியம் இங்கே மலர்ச்சி பெற்றது. அனைவரையும் ஆசுவாசப்படுத்தும் அற்புத நீர்த் தேக்கமாய் இக்குளம் திகழ்ந்தது.

பள்ளமடுக்குளத்தைச்; சூழவும் அமைந்திருந்த இயற்கையின் படைப்புக்கள் விடத்தல்தீவுமக்களின் வாழ்வை இக்குளத்தில் இருந்து பிரிக்க முடியாமலாக்கியிருந்தது. எனினும், இந்தப் பள்ளமடுக்குளத்தின் இதம், சுகம் சுவாரஸ்யமானவையே. இதனால், பள்ளமடுக்குளத்தின் பயணத்தில் எதிர் கொள்பவை இம்மக்களுக்கு ஒரு பொருட்டாக இருப்பதும் இல்லை. இக்குளத்தைச் சுற்றி ஆங்காங்கே அடர்த்தியாக உயர்ந்து நிற்கும் பன்மரங்கள், குளத்துக்கு குடை பிடித்தாற்போல் நிற்கும் மதுரை மரங்கள் மற்றும் குளக்கரைகளிலே பளிச்சிடும் வெண் கற்கள் எல்லாம் கலை உணர்ச்சியோடு மக்களின் கவலை மற்றும் களைப்புக்களைப் போக்கின. குளக்கட்டுக்கருகே ஆங்காங்கு நின்றிருந்த ஆவாரம் மரங்களில் துவைத்த துணிகள் உலரவைக்கப்பட்டன. பெண்கள் சிலர், இம்மரத்தின் பூவையும் இலையையும் அரைத்து தலையில் பூசிவிட்டு குளிப்பதுமுண்டு. மருத்துவ நோக்கம் இதில் மறைந்திருந்ததும் இக்குளத்தின் புதுமையே.

மதுரை மரத்திலேறி கீழே குளத்துக்குள் குதிக்கும் பிள்ளைகளின் குதூகலம், வெண்கற்களில் துணிகளைத் துவைக்க தருணம் தேடும் சந்தர்ப்பங்கள் மற்றும் பன் செடிகளின் மறைவிலே ஆடைகளை மாற்றுவதற்கேற்ற வசதி என்பவை இக்குளத்தின் பயன்பாட்டை விருப்புறச் செய்தது. இது தவிர பெரியகுளம், மின்னி நிறைஞ்சான், உடையான் கேணி, சாடிமோட்டை, கோவாலிகட்டு,அட்டைத்தீவுக் குளம் ஆகியவையும் மக்கள் நீராடும் குளங்களே. ஊரில் அமைந்துள்ள பள்ளிவாசல் குளமும் மக்களின் நீர்ப்பயன்பாட்டிற்கு பெரிதும் உதவியது.

குடி நீர்க்கிணறு

இதனால்தான், விடத்தல்தீவிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள பள்ளமடுப் பிரதேசத்திலிருந்த கிணறுகளிலிருந்தும் நீர் கொண்டுவரவேண்டிய தேவைப்பாடு எழுந்தது. எமது பிரதேச மூவினப் பெண்கள் குடத்தில் நீரை நிரப்பி, தலையில் சுமந்தவாறு இரு கைகளையும் தொங்கவிட்டவாறு பொடி நடையாகவும் சக தோழிகளுடன் நாட்டு நடப்பும் வீட்டு நிகழ்வும் பேசி எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வர். இன ஐக்கியம் இங்கே மலர்ச்சி பெற்றது. ஆண்கள் பெண்களும் சைக்கிள்களில்(துவிச்சக்கரவண்டி) இரு பக்கங்களிலும் நீர் நிரப்பப்பட்ட குடங்கள் மற்றும் கலன்களிலும் ஒற்றை மாட்டு வண்டிகளில் நீர் நிரப்பப்பட்ட பெரல்களிலும் லேன் மாஸ்டர் களிலும் (சிறிய உழவு இயந்திரம்) குடி நீர் கொண்டுவரப்பட்டது. நீரை கொண்டுவரும் வழியில், மே மாதம் இறுதியில் ஆரம்பித்து செப்டம்பர் மாத நடுப்பகுதிவரை வீசும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று, (சோளக காற்று) சிலரைத் திண்டாடச் செய்யும். சைக்கிளோடு ஆளையும் தூக்கும் அளவுக்கு காற்றின் வேகம் கனப்பதும் உண்டு. வீதி ஓரங்களில் கிடக்கும் மணல்கள், முகத்திலடிக்கும் வேகத்திலும் காற்று வீசுவதுண்டு. வெயிலின் வெப்பம், நடையை வேகப்படுத்தும்,சைக்கிளை வேகமாக மிதிக்கவும் தூண்டும். இயற்கையோடு கட்டமைந்த இம்மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட சில சிரமங்கள், ஒரு வகையில் தேகாரோக்கியத்துக்கு உறுதுணையாகவே அமைந்தன. அனைவருக்கும் தாகம் தணிக்கும் அற்புத கிணறாய் இக்கிணறு பயன்பட்டது.

பாடசாலை

இக்கிராமத்தின் றௌமன் கத்தோலிக்க பாடசாலையும் அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலயமும் இரு கண்களுக்கு ஒப்பானது. பிள்ளைகளை சமூகத்தில் சிறந்த குடிமக்களாக மாற்றுவது மாத்திரம் போதுமானதன்று. பல்வேறு வடிவங்களிலும், படிநிலைகளிலும் சமூகம் மாற்றமடைதல் வேண்டும்,நவீன மயப்படுதல் வேண்டும், விழுமியங்களைப் பேணுவதில் உண்மை ஈடுபாடு கொண்டதாகவும் விளங்க வேண்டும். இதற்கு சில வகையான ஆளுமைமிக்க தலைவர்கரை;களையும் உருவாக்க வேண்டும். இவர்களை நேரடியா பல்கலைக் கழகங்களோ, உயர்கல்வி வாண்மை நிறுவனங்களோ உருவாக்கிவிட முடியாது. இத்தகைய தலைவர்களாக மாறுவதற்கான அடிப்படை ஆளுமையையும் பண்புகளையும் விருத்தி செய்யும் பொறுப்பும் தகைமையும் பாடசாலைகளுக்கே உண்டு எதிர்காலத்திலும் அவற்றிடமே இது காணப்படும். இன்று சமூக முன்னேற்றத்திற்குதவும் வலுமிக்க மற்றும் விழுமியங்கள் கொண்டவர்கள் இவ்விரு பாடசாலைகளிலும் இருந்துதான் உருவானார்கள்.

கிறிஸ்தவ, இந்து,முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த கிராமத்தின் மையப்புள்ளியான இடத்தில், இந்தப் பாடசாலைகள் அமைந்ததால் , சகல சமூகங்களின் பிள்ளைகளும் விடத்தல்தீவு அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் றௌமன் கத்தோலிக்க பாடசாலையிலும் கற்க முடிந்தது. பிரதான பாதை என்பதால் , இங்கு கற்பித்த வெளியூர் ஆசிரியர்கள் கல்வி கற்ற மாணவர்கள் இலகுவாக பயணிக்கவும் வசதி ஏற்பட்டது. பொருத்தமான இடமொன்றை பாடசாலையின் அமைவிடமாக இவ்வூர் மக்கள் தெரிவு செய்ததிலிருந்து அவர்கள் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவத்தை உய்த்தறிய முடிகின்றது.
ஒரு காலத்தில் "பெருங்களிப்பற்று" என சிறப்புப் பெற்றிருந்த இந்த விடத்தல்தீவு அயற் கிராமங்களின் முக்கிய வர்த்தக மையமாக திகழ்ந்தது. இதனால் அக்கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வர ஆரம்பித்தனர். பின்னர் கிறிஸ்தவ மாணவர்களும் இங்கு சேரத் தொடங்கினர். இதன் ஆரம்பத்திலிருந்து இன்று வரைக்கும் புரிந்துணர்வும் ஐக்கியமுமே எடுத்துக்ககாட்டாக விளங்குகின்றன.

இந்து , கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழ்ந்த விடத்தல்தீவில் , மாணவர்களின் பழக்க வழக்கங்களும் பல வகையில் சமூகங்களின் ஒருமைப்பாட்டிற்கு உதவின மட்டுமல்லாது இவை பாடசாலைகளிலும் பிரதிபலித்தன. முஸ்லிம் மாணவர்களைக் அதிகமாகக் கொண்டிருந்த அலிகாரில்,பெரும்பாலும் முஸ்லிம் அல்லாதவர்களே ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் ஆரம்ப காலங்களில் பணியாற்றினர். பாரபட்சமின்றிய இவர்களது கல்விச் சேவைகள் ,அலிகாரில் ஒற்றுமைக் களம் உருவாக அடித்தளமிட்டது எனலாம். காலப் போக்கில், முஸ்லிம் ஆசிரியர்களை அதிகம் இப்பாடசாலை உள்வாங்கவும் அடிகோலியது. இவர்களும் மதங்களின் பார்வையில் மாணவர்களைப் பிரிக்காது ஒரே குடும்பத்துப் பிள்ளைகளாக எல்லோரையும் மதித்தே கல்வி புகட்டினர்.
உம்மு ஹபீபாவும் தவமணி கிறிஸ்ரியும் ஒரே வகுப்பறையில் வெளிப்படுத்திய நட்புக்கள் , நல்லதொரு கல்விக் கட்டமைப்புக்கு வித்திடச் செய்தன. பாடசாலைகள் மற்றும் வெளி இடங்களில் நடந்த கலை விழாக்களில் இம்மாணவர்கள் ஒன்றிணைந்து நடித்த பாத்திரங்கள் பலரையும் பிரமிக்கச் செய்தன. மதங்களைக் கடந்த பார்வையிலான கருத்துக்களும் அறவழிகளை வலியுறுத்தும் நிகழ்வுகளும் இன நல்லுறவுக்கு அத்திவாரமிட்டன.

பட்டிமன்றங்கள்,மாணவர்மன்றங்கள்என்பனஒற்றுமை உணர்வுகளைப்பிரதிபலித்ததுடன்,விடத்தல்தீவில் நிலவிய சமூகங்களின் சகவாசங்களையும் வெளிப்படுத்தின. இவ்வாறான ஒற்றுமைக்குள்ளும் அவரவர் சமய, சமூக நம்பிக்கைகளில் பிரத்தியேகம் பாதுகாக்கப்பட்டது. சரஸ்வதிப் பூஜை ,பொங்கல் விழா, ஒளி விழா மீலாத் விழாக்களில் இந்தப் பிரத்தியேகங்கள் தென்பட்டன. அதாவது,அவரவர் நம்பிக்கைகளில் அசையாத பிடிப்புடன் இருந்த இம்மக்களிடம்,முரண்பாடுகள் இல்லதிருந்தமை விஷேட அம்சமாகும்.

பாடசாலையின் அயலவர்கள் பெரும்பான்மையோர் இந்துக்களாக காணப்பட்டனர். இவர்கள் பாடசாலையோடு அந்நியோன்ய உறவு வைத்திருந்தனர். அருங்கோடை காலத்தில் நீர் நிலைகள் வற்றுவதனால் நீர் தட்டுப்பாடு பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெரும் சங்கடத்திற்குள்ளாக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இடைவேளை நேரங்களிலும் ஆசிரியர் ஓய்வு நேரங்களிலும், திரு சிவகுரு குடும்பத்தினரின் வீடு பாடசாலைக்கு மிக அருகாமையில் இருப்பதால், குடி நீருக்காகவும் கழிப்பறைகளுக்கு செல்வதற்கும் உதவியதுடன் இவர்கள் இசைக் குடும்பத்தினராகவும் காணப்பட்டதால் நடன, நாடக,இசை பயிற்சிகளுக்கும் ஒத்திகைகளுக்கும் இவ்வீட்டிற்கே செல்வதுண்டு. எந்த வேளைகளிலும் முகஞ்சுழிக்காது இன்முகத்துடன் வரவேற்கும் சுபாவம், பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்தமை பலர் நெஞ்சங்களில் நீங்கா நினைவாக இன்றும் நிலைத்து நிற்கிறது.
மாணவர்கள் மத்தியிலிருந்த சமாதான சகவாழ்வு, அவரவர் கலாசார மற்றும் மத பெறுமானங்களை மதித்து நடக்கும் மிகப் பெரிய ஐக்கியத்தைக் கட்டி வளர்தெடுத்தது. இது, எல்லோருக்கும் பொதுவானதொரு கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்கும் கோட்பாட்டை பாடசாலையில் கட்டி எழுப்பக்கூடியதாகவும் இருந்தது. இந்நிலை உருவாக அலிகாரின் பயிற்சி மற்றும் ஆசிரியர்களின் நெறிப்படுத்தல்கள் உதவின எனலாம்.

விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர்களான ஆர். திருச்செல்வம், எஸ் சந்தியாப்பிள்ளை ஆகியோர் உதவி ஆசிரியர்களாக அலிகாரில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இவ்வாறே ஜனாப் வீ.எம். அமீன்,ஜனாப் எம்.ஏ. காலித்,ஜனாபா பாத்தும்மா காதர், ஆகியோர் உதவி ஆசிரியர்களாக றெளமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பணிக்கமர்த்தப்பட்டனர். போர்க்கால சூழலில் பாடசாலைக்கு யாழ்ப்பாணத்து ஆசிரியர்களின் வரவு மிகவும் குறைவாகக் காணப்பட்டபோது 1987, 1988, 1989, 1990 காலப்பகுதிகளில் ஜனாப் எம்.ஏ.சி. அமீன் ஆசிரியரால் கணித பாடம் கற்பிக்கப்பட்டது. பல மாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றனர்.

அலிகாரின் காலைக் கூட்டம் வாரம் ஒரு நாளில் அவரவர் சமயப் பிரகாரமும் ஏனைய நாட்களில் பொதுவாகவும் நடந்தது. மதிய உணவாக சோறு வழங்கப்பட்ட ஆரம்ப காலங்களில், சைவ மற்றும் அசைவ உணவுகள் என வெவ்வேறாக வழங்கப்பட்டிருந்தன. பிரத்தியேகங்கள் பேணப்பட்டமைக்கு சிறந்த உதாரணமாக உள்ளது.

தொடக்க காலத்திலிருந்து தொண்ணூறு வரை அலிகாரை, பலர் நாடி வருவதற்கு இங்கிருந்த சமூகங்களின் சமநிலைப்போக்கு காரணியானது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் அயற் கிராமங்களான கோவிற்குளம், கள்ளியடி, புதுக்குளம், சவரிகுளம், ஆத்திமோட்டை, இலுப்பைக்கடவை, கட்டாடிவயல், பாப்பாமோட்டை,பொன்னாவெளி, சின்னப் பண்டிவிரிச்சான், தச்சனாமருதமடு, பாலம்பிட்டி,வட்டக்கண்டல் சொர்ணபுரி, மினுக்கன்,விளாங்குளி, பெரியமடு, நெடுவரம்பு, இசங்கன்குளம்,ஆண்டான்குளம் மற்றும் நாச்சிக்குடா, புதுவெளி போன்ற கிராமங்களிலிருந்தும் இக்கலாசாலையில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்கள் கற்றனர்.

விளையாட்டு

களைப்பைப் போக்கி, உற்சாகத்தை ஊட்டும் திறன் இதற்கு உள்ளதால், ஆரம்பகாலந் தொட்டே மனித வாழ்வில் விளையாட்டுக்களும் பிரிக்கமுடியாத ஒரு வழக்காக வளரத் தொடங்கியது. விட்டுக்கொடுக்கும் சகோதரத்துவம், பரஸ்பரம், இன்னும் வெற்றி தோல்விகளை சகித்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை விளையாட்டுக்கள் வழங்குகின்றன. சமமாக மதிக்கும் சகலரையும் ஒன்றிணைக்கும் பாலமாகவும் விளையாட்டு விளங்குகின்றது. சகல துறைகளிலும் பெயர்பெற்றிருந்த விடத்தல்தீவுக்கிராமம் விளையாட்டுத்துறையிலும்தனது அடையாளத்தைப் பதித்திருந்தது. இங்கிருந்த இயற்கைச்சூழல்விளையாடி மகிழ்வதற்கு உதவின. விளையாடுதல் களைப்புத்தீரக் குளித்தல் என்ற இணைதலுடன்,இக்கிராமத்து விளையாட்டுக்கள் இருந்தன.,

தொடக்க காலங்களில் கிளித்தட்டு , தட்டுக்கோடு, கும்மி மற்றும் இன்னோரன்ன சுதேச விளையாட்டுக்களில் ஈடுபட்ட விடத்தல்தீவு மக்கள் உதைபந்து, கைப்பந்து, கரப்பந்து ஆகியவற்றில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். உதைபந்து, கரப்பந்து ஆகியவற்றில் குழுக்குழுவாக ஈடுபட்டவர்கள் பின்னர் விடத்தல்தீவில் வாழ்ந்த சமூகங்களுக்கிடையிலும் விளையாடத் தொடங்கி பரஸ்பர உறவையும் புரிந்துணர்வையும் வளர்த்துக்கொண்டனர்.

1965 ம் ஆண்டளவிலே விடத்தல்தீவில் கிரிக்கெட் வாடை வீசலாயிற்று. பிரபுக்களின் விளையாட்டு அல்லது கனவான்களின் விளையாட்டு எனப்பேசப்பட்ட கிரிக்கெட், விடத்தல்தீவு கிராமிய வாழ்க்கையில் பழக்கப்பட்ட மாணவர்கள்,இளைஞர்களிடத்தில் ஊடுருவத் தொடங்கியது.

1969, 1970 களில் விடத்தல்தீவில் அப்பலோ – 11 என்னும் விளையாட்டுக் கழகம் உதயமனது, அப்பலோ – 11 கழகத்தின் வீரர்களான மீரான் முகைதீன் சாஜகான், அப்துல் மஜீத் முகம்மது முஹ்ஸின், துரையப்பா அந்தோணிப்பிள்ளை (மின்னி, முகம்மது இஸ்மாயில் றவூப் நிஸ்தார், முகம்மது சுல்தான் முகம்மது மதீன், முகம்மது கௌது அப்துல் வாஹிது, இஸ்மாயில் மீரான் மொஹிதீன், சுல்தான் அப்துல் காதர் முகம்மது சாலிஹ், சோமசுந்தரம் பாலேந்திரா, முகம்மது அலி சாகுல் ஹமீது, சாகுல் கமீது சகாப்தீன், முகம்மது கௌது காலித். இங்கு முஸ்லிம், கிறிஸ்தவ, இந்து விளையாட்டு வீரர்கள் விளையாடி இருப்பது ஐக்கியத்திற்கு சான்று பகர்க்கிறது.

இன்ப துன்ப நிகழ்வுகள்

இறைவனின் படைப்பான மனிதர்களின் பிறப்பில் இருந்து இறப்பு வரைக்கும் இன்பதுன்பங்கள் மாறி மாறி வருவதுண்டு இதனை மனித வாழ்க்கையில் இருந்து பிரிக்கமுடியாது. விடத்தல்தீவில் தேவையான அளவு வாழ்க்கை வளம் காணப்பட்டதால் மக்கள் நலமாகவும் தேகாரோக்கியத்துடனும் வாழ்ந்தனர். மொழியால் ஒன்றிணைந்து ஒற்றுமைக்கும் இன ஒருமைப்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த பெருமை கொண்டவர்கள். இன்ப துன்பச் சடங்குகளில் எல்லா மதத்தவர்களும் பங்குபற்றுவர். சொந்தச் சமயக் கோட்பாடுகளுக்கு அமைந்து, ஒழுக்கசீலத்தை உயிரெனப் போற்றிய இச்சமூகத்தில் களவொழுக்க நிகழ்வுகள் மிக அரிதாகவே இருந்தன. இது மட்டுமல்ல கலப்புத் திருமணங்கள்கூட கடினமான மனநிலையுடனே நோக்கப்பட்டன.

இவ்வூரில் இருந்த மத வழிபாட்டுத் தலங்களின் போக்குகளும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு வழிகாட்டின. புனித அடைக்கல மாதா தேவாலயம் மற்றும் புனித யாகப்பர் தேவாலயம் இன்னும், மொகிதீன்ட ஜூம்ஆப் பள்ளிவாசல், தைக்காப் பள்ளிவாசல் மேலும், பிள்ளையார் கோவில் போன்றன இறை வழியில் மக்களுக்கு அற வழி காட்டின. 1990 ஒக்டோபர் மாத இறுதியில் விடத்தல்தீவு முஸ்லிம் மக்கள் பூர்வீக நிலத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பு கேட்டு கதிகலங்கினர். கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் மக்கள். இந்த உத்தரவை மீள் பரிசீலனை செய்யுமாறு கிறிஸ்தவ, இந்து மதத் தலைமைகள் கோரிக்கை விடுத்தன. பிள்ளையார் கோவில்,புனித யாகப்பர் ஆலயம்,புனித அடைக்கல மாதா கோவில் ஆகியவற்றின் நிர்வாகங்களும் ஆலையக் குருக்கள், பாதிரிமார்கள் ஆகியோரும் புலிகளின் தலைமைகளுடன் பரிந்து பேசி, விடத்தல்தீவுமுஸ்லிம்களின் வெளியேற்றத்தை தடுக்க உச்சளவு முயன்றனர். முயற்சிகள் எதுவும் பயனற்றுப்போக ஈற்றில் கையிலே கிடைத்ததை எடுத்துக்கொண்டு வெளியேற ஆயத்தமான செய்தியைக் கேள்வியுற்ற கிறிஸ்தவ,ஆலய குருவும், கிறிஸ்தவ இந்து மத மக்களும் மொகிதீன் ஜூம்ஆப் பள்ளிவாசலில் ஒன்று கூடினர். விடத்தல்தீவில் வாழ்ந்த இந்து, கிறிஸ்தவ மக்கள் முஸ்லிம் மக்கள் மீது வைத்திருந்த எல்லையற்ற பரிவு மற்றும் புரிந்துணர்வைக் கண்டு கொள்வதற்கான சந்தர்ப்பமாக இத்துயரச் சம்பவம் அமைந்தது.

ஆலய குரு, மொகிதீன் ஜூம்ஆப் பள்ளிவாசலில் ஏறி கண்களில் இருந்து கண்ணீர்மல்க இரங்கல் உரை ஆற்றியபோது, முஸ்லிம் மக்களை அரவணைத்து இந்து, கிறிஸ்தவ மக்கள் ஆரத்தழுவினர். அழுது புலம்பினர். தங்களது இயலாமையை நொந்து கொண்டனர். இத்தருணத்தில் விடத்தல்தீவு சோகக் களமாகவே காட்சி அளித்தது. இரண்டறக் கலந்த இந்து, கிறிஸ்தவ உறவுகளுக்கு கண்ணீரும் கம்பலையுமாக விடை கொடுத்து வெளியேறிய முஸ்லிம் மக்களுக்கு, உள்ளதைக் கொண்டாவது திருப்திப்திப்படும் உயர்ந்த உள்ளத்தோடு கிறிஸ்தவ,இந்து சமூகங்கள் வெளியேறிச் செல்லும் முஸ்லிம்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தனர். சிலர் தமது சொந்த லொறிகளையும் ஏனைய வாகனங்களிலும் ஏற்றியும்; சென்றனர். விடத்தல்தீவின் விளை நிலமானது மக்களை எவ்வாறு பின்னிப் பிணைத்திருக்கிறது என்பதை கண்டு கொள்ளும் துயரச் களமாகவே இது அமைந்திருந்தது. மன்னார் மாவட்டத்தின் விடத்தல்தீவு இன ஐக்கியத்தின் விளை நிலமாக விளங்கியமை நமது மண்ணின் விஷேட அம்சமாகும்.

15. விடத்தல்தீவில் ஆயுர் வேத மருத்துவம் - திரு. நீல் ஆம்ஸ்ட்ரோங்

விடத்தல்தீவுக் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக பலர் ஆயுர் வேத மருத்துவத்தில் ஈடுபட்டு வந்ததற்கான சான்றுகள் வாய் வழிக் கதைகள் மூலம் ஊர்ஜிதப் படுதப்பட்டுள்ளது. இதன்படி மறைந்த சுலியார் அடைக்கலம், மறைந்த அடைக்கலம் அமிர்தநாதன் ஆகிய இருவரும் அவர்களது மூதாதையரும் எமது கிராமத்தில் இந்த ஆயுர் வேத வைத்தியத் தொழிலில் பரம்பரையாக ஈடுபட்டு வந்துள்ளனர். அதேவேளை மனுவல்பிள்ளை முடியப்பர் மற்றும் ஆரோக்கியம் (தச்சன் யேசுராஜா வின் தகப்பன்) ஆகியோரும், எமது கிராமத்தில் சில குறிப்பிட்ட பாரம்பரிய முறைகளிலான கைவத்தியங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என அறியப்படுகின்றது. மேலும் எமது இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலும், இத் தொழிலில் பலர் ஈடுபட்டு வந்ததற்கான சான்றுகள், அவர்களது அண்மைக்கால புத்தகப் பதிவுகள் வாயிலாக அறிய முடிகிறது.
எமது சுற்றுவட்டாரக் கிராமங்களில் நாட்டு வைத்தியர்கள் இருந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கவில்லை. இதனால் எமது அயல் கிராம மக்களும் எமது கிராமத்தில் இருந்தே, இச் சேவையை பெற்று வந்தனர். எமது ஆயுர் வேத வைத்தியர்களும் அயல் கிராமங்களுக்கு அடிக்கடி சென்றும், இந்த பாரம்பரிய மருத்துவ முறைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். அதேவேளை எமது இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர்களும் எமது வைத்தியர்களிடமிருந்து குறிப்பாக; அடைக்கலம் பரிகாரியார் மற்றும் அமிர்தநாதன் பரிகாரியார் ஆகியவர்களிடமிருந்து, இந்த வைத்திய சேவையை பெற்று வந்தனர்.
எமது கிராமத்தில் மருத்துவ வசதிகள் குறைவான காலத்திலிருந்து, எமது மருந்தகம் (பழய வாசகசாலைக்கு முன் இருந்த டிஸ்பென்சறி), பள்ளமடு வைத்தியசாலை மற்றும் மன்னார் ஆதார வைத்திய சாலை போன்ற மருத்துவ வசதிகள் வந்த பின்னும் கூட, எம் மக்களும் , அயல் கிராம மக்களும் இப் பாரம்பரிய மருத்துவ முறைகளில் கூடுதலான நம்பிக்கை கொண்டு, எமது கிராம வைத்தியர்களிடமிருந்து மருந்துகளைப் பெற்று நோய்களைக் குணப்படுத்தி வந்தனர்.

ஆயுர் வேத மருத்துவர்கள்

எமது கிராமத்தில், ஆயுர் வேத மருத்துவர்களான சுலியார் (அமிர்நாதன் பரிகாரியாரின் பேரன்) அவரது மகன் சுலியார் அடைக்கலம் (அமிர்தநாதனின் தகப்பன்) மற்றும் அடைக்கலம் அமிர்தநாதான் (அருமைநாயகம் பரிகாரியார்) போன்றவர்கள் பரம்பரை பரம்பரையாக ஆயுர் வேத வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். அதேவேளை சலமோன் (வெள்ளைச்சிலுவை என்று அழைகக்கப்படும் சிலுவைராசாவின் பேரன்) மற்றும் இவருடைய மகன் விக்ரோறியான் (சிலுவைராசாவின் தகப்பன்) இவர்கள் இருவரும் இக் கிராமிய வைத்திய முறைகளைக் கையாண்டு வந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. இந்த வகையில்

சுலியார் அவர்களும், சலமோன் அவர்களும் சமகாலத்தில் வாழ்ந்து இச்சேவையை வழங்கி வந்துள்ளனர். இதேபோன்று இவர்களது வாரிசுகளான அடைக்கலம் பரிகாரியாரும், விக்ரோறியானும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் பாரம்பரிய மருத்துவ முறைகளை பயிற்சி செய்திருந்தனர் என்பது தெரிய வருகிறது. அதேபோன்று பரிகாரியார் அமிர்தநாதனும், முடியப்பர் மற்றும் ஆரோக்கியம் ஆகியோர் ஒரே காலப்பகுதியில் வாழ்ந்து சேவையாற்றியுள்ளனர். இருந்த போதிலும் சுலியார் பரிகாரியாரும் அவரது பிள்ளைகளுமே இவ் ஆயர் வேத மருத்துவத்தை பல தலைமுறைகளாக பரம்பரை தொழிலாக செய்து வந்திருந்தனர்.

நோய்களும் மருந்துகளும்
எமது ஆயுர் வேத மருத்துவர்களான அடைக்கலம் மற்றும் அமிர்தநாதன் ஆகியோர் பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்து மாத்திரைகள் கொடுத்து வந்தனர். குறிப்பாக வயிறு சார்ந்த வருத்தங்களான வயிற்றுக்குத்து, வயிற்றுவலி மற்றும் வயிற்றுக் குழப்பம் போன்ற நோய்களுக்கும், கண்டல் காயங்கள், வீக்கங்கள், தசை மற்றும் எலும்பு நோக்கள் போன்றவற்றிற்கான நோவெண்ணைகள், குழந்தைள் இல்லாதோருக்கு கருத்தரிப்பை ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் மற்றும் லேகியங்கள், அத்துடன் மகப்பேறில் ஏற்படும் சிக்கல்கள் சம்பந்தமான சிகிச்சைகள், வாதம், வலிப்பு போன்றவற்றை குணப்படுத்தும் மருந்துகள், மற்றும் குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு பத்திய வைத்தியம் போன்ற பல்வேறு வைத்திய முறைகளையும் மருந்துகளையும் வழங்கி வந்தனர்.
மேலும் சுலியார் அடைக்கலம் தனது வைத்தியத்தில் ஆயுர் வேத முறையில் ஓமத்திரவம் (ஓமத் திரவம் என்பது, ஓமம் என்ற மூலிகையிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு மருந்து. இது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வயிறு சம்பந்தமான உபாதைகளைத் தீர்க்கப் பயன்படுகிறது) தயாரித்து அதை போத்தல்களில் அடைத்து அவரது மகளின் பெயரான "ஞானசோதி ஓமத்திரவம்" என்ற வியாபாரப் பெயரில் கடைகளுக்கும், வீட்டிலும் வைத்து விற்பனை செய்திருந்தார். இதற்காக அவர் அரசாங்கத்தின் அனுமதியையும் பெற்றிருந்தார்.
மறுபுறத்தில் வைத்தியரான முடியப்பர் மூலிகை மருந்துகளை தயாரித்து சில நோய்களுக்கு மருந்து கொடுத்து வந்தார். இவர் தனது நாட்டு மருத்துவம் சம்பந்தமான மருத்துவ குறிப்புக்களை வேலனையில் உள்ள இவரது மூதாதையரிடம் இருந்து கற்று அறிந்து கொண்டதாக அவரது குடும்ப உறவினர்கள் உறுதிப்படுத்தினர் . இவர் எமது ஊரைப் பிறப்பிடமாக கொண்டிருந்த போதிலும், தான் வசித்து வந்த பெரியமடுவிலேயே தனது வைத்திய சேவையை மேற்கொண்டார், விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட இவர், நாட்டு மருத்துவத்தை ஒரு பகுதி நேர வேலையாகவே மேற்கொண்டார்.

ஏனைய மருத்துவ சேவைகள்
எமது கிராமத்தில் ஆயுர் வேத வைத்தியத்தில் ஈடுபட்வர்களைத் தவிர வேறு சில அத்தியாவசியமான மருத்துவ சேவைகளை வழங்கி வந்தவர்களும் இருந்தனர். இவர்களுள் முக்கியமாக மகப்பேற்று மருத்துவிச்சிகளான செபஸ்ரி விசிறித்தம்மா, அவரது மகளான மனுவல்பிள்ளை சவிரியம்மா மற்றும் அரியத்து அக்கா ஆகியோர் இந்த மகத்தான பணியை எமது ஊரில் நீண்டகாலமாக செய்து வந்தனர். இதில் அரியத்து அக்கா எமது முஸ்லீம் பகுதிகளுக்கும் சென்று இச் சேவையை ஆற்றி வந்ததாக கூறப்படுகிறது. மருத்துவ வசதிகள் குறைவான அக்காலத்தில் இவர்களது சேவை ஒரு மிகப்பெரிய தொண்டாக விளங்கியது. இதே போன்று எமது கிராமத்தைச் சேர்ந்த ஆனாட்சி அவர்கள் உடல் நோவுகள் மற்றும் உட்காயங்களுக்கு பத்துப் போடும் (பாலப்பத்து) வைத்திய சேவையை ஆற்றி வந்தார். அவருடைய மறைவின் பின்னர் அவரது மகளான திருமதி திரேசம்மா செபமாலை, தனது தாயிடம் இருத்து இச் சிகிச்சை முறையை கற்று, எமது கிராமத்தில் இப்பணியை மேற்கொண்டு வந்துள்ளார்.

மேலும் எமது கிராமத்தில் கலால் பிறந்தவர்கள் சுளுக்கு எடுக்கும் வைத்தியம் செய்வது ஒரு நம்மிக்கையாக இருந்து வந்துள்ளது. அந்த வகையில் மறைந்த யாகப்பு தார்சில்லம்மா மற்றும் திரு. மிக்கேல் சின்னப்பர் ஆகிய இருவரும் உடம்பில் ஏற்பட்ட நரம்புச் சுளுக்கு பிடிப்புகளுக்கு வைத்தியம் பார்ப்பதில் பேர்பெற்றிருந்தனர். மேலும் எமது கிராமத்தில் மறைந்த ஏனோக்கு மனுவேல்பிள்ளை அவர்களும் அவரின் மறைவின் பின் அவரின் மகனான மனுவேல்பிள்ளை சாள்ஸ் யோசேப் அவர்களும் தொண்டையில் சிக்கிய மீன் முள்ளை கொக்கின் சொண்டைக் கொண்டு வருடி அதைக் குணமாக்கும் ஒரு மருத்துவ முறையை மக்களுக்கு ஒரு சேவையாக செய்து வந்துள்ளன்.

எமது கிராமத்தில் வசித்து வந்த பத்தரப்பா என்று அழக்கப்படும் இசக்கியேல்முத்து பாஸ்கரதாஸ் அவர்கள் பாம்புக்கடி மற்றும் விஷ ஜந்துக்கள் கடியினால் ஏற்படக்கூடிய ஆபத்தான் விஷங்கள் உடலில் பரவாமல் அவற்றை அகற்றக்கூடிய மற்றும் அவற்றின் தாக்கத்தை குறைகக்கூடிய மருத்துவ முறைகளை அறிந்த ஒருவராகக் காணப்பட்டார். இவரின் மகத்தான சேவையும் எமது கிராமத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

விடத்தல்தீவின் வியக்கத்தகு மருத்துவ முறைகள்
(விடத்தல்தீவு அலிகார் - பழைய மாணவர் வெளியீடு)
மருத்துவம் என்பது மனித வாழ்வின் அடிப்படை அங்கமாகும். தொன்மங்களோடு தொடரும் இந்தச் சமூகப் பயணத்தில், எம் விடத்தல்தீவிலும் மருத்துவ முறைகள் காலத்தால் பரிசோதிக்கப்பட்டு, வாழ்க்கையோடு பழகி வந்தன. பண்டைய ஆயுர்வேதக் கைவைத்திய முறைகள் முதல் ஆங்கில மருத்துவத்தின் வருகை வரை, விடத்தல்தீவு ஒரு சிறப்பான மருத்துவப் பாரம்பரியத்தைக் கடத்தி வந்திருக்கிறது.

இவ்வுரையில், விடத்தல்தீவில் நிலவிய வியக்கத்தக்க வைத்திய முறைகள், பழங்கால மூலிகை வைத்தியம், சமூக நலன் சார்ந்த மருத்துவச் சேவைகள், பொது மக்கள் நம்பிக்கையைப் பெற்ற நாட்டு வைத்தியர்கள் பற்றிய வரலாறும், அவர்களின் அசாதாரண மருத்துவத் திறன்கள் பற்றிய குறிப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்த ஆவணமானது விடத்தல்தீவின் பழமையான மருத்துவ பாரம்பரியத்தையும், இந்நூற்றாண்டில் அவர்கள் சமூகத்தில் ஆற்றிய பங்களிப்புகளையும் நிலைநிறுத்தும் ஒரு சிறப்பான தடங்கலாக திகழ்கிறது.
வைத்திய தேவைகள் மனித வாழ்விலிருந்து பிரிக்கமுடியாதவை. கால வளர்ச்சிக்கு நிகராக மருத்துவங்களும் வளர்ந்து வருவதே வரலாறு. இந்த அடிப்படையில் விடத்தல்தீவின் வரலாற்றுக் காலந்தொட்டு மருத்துவ முறைகள் இருந்துள்ளன. ஊரின் பஸாரிலிருந்து (பஸ்தரிப்பு நிலையம்) வடக்கே செல்லும் பாதையில் கடற்கரைக்குத் திரும்பும் வடக்கு மூலையில் ஆஸ்பத்திரி அமைந்திருந்தது. யாழ்-மன்னார் பிரதான வீதியாக அப்போது இப்பாதை பயன்பட்டிருந்தது. இந்த பாதையில் ஆலமரமொன்றுக்கு அருகில் *1910*ஆம் ஆண்டு காலப்பகுதியில், இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூவினத்தவர்களுக்கும் பொதுவான பகுதியில்தான், இந்த வைத்தியசாலை தொடங்கப்பட்டிருக்கிறது.

இங்கு மருந்துக் கலவையாளராக ஆரம்பத்தில் விடத்தல்தீவைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையாவும் அதன் பின்னர் அவரது சகோதரரான வல்லிபுரம் சின்னையாவும் பணியாற்றினர். "ஓடலி சின்னையா" என எல்லோராலும் அழைக்கப்பட்டு, மக்கள் மத்தியில் இவர் பிரபல்யம் பெற்றிருந்தார். ஆயுர்வேத பரம்பரையைச் சார்ந்த இவர்கள் நோயாளர்களைப் பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்தினர்.
இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் இருபது வருடங்களின் பின்னர் வார்டு வசதிகளுடன் கூடிய கிராமிய வைத்தியசாலை ஒன்று பள்ளமடுவில் *1930*ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மகப்பேறுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த இந்த வைத்தியசாலை, பிற்காலத்தில் ஏனைய மருத்துவ சேவைகளையும் வழங்கத் தொடங்கியது. இந்நிலையில், விடத்தல்தீவிலும் மிக நீண்ட காலமாக மருத்துவ நிலையம் இயங்கியதும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரைச் சேர்ந்த திருவாளர்களான அரசரட்ணம், முஹம்மது கௌது, முஹம்மது அலி ஆகியோர் இக்காலத்தில் இங்கு பணியாற்றினர். இதன் தொடர்ச்சியாக ஊரைச் சேர்ந்த பலரும் இந்த வைத்தியசாலையில் பணியாற்றத் தொடங்கினர்.

விடத்தல்தீவில் ஆங்கில மருத்துவ முறையிலான வைத்தியசாலை காணப்பட்டிருந்த போதும், சுதேச வைத்தியத்திலும் மக்கள் நாட்டம் கொண்டிருந்தனர்.

சுதேச வைத்திய முறைகள்
பெரும்பாலும் மூலிகைகள், மரப்பட்டைகள் கொண்டு வைத்தியம் செய்யப்பட்ட இம்முறை ஆயுர்வேத வைத்தியம் அல்லது நாட்டு வைத்தியம் அல்லது கைவைத்தியம் என்று அழைக்கப்பட்டது.

முஹம்மது பரியாரி
சகல வியாதிகளையும் மூலிகை வைத்தியங்கள் மூலம் குணப்படுத்தி வந்தார். இவருக்குப் பின்னர் இவரது மகனான மீராசாஹிபு இந்த வைத்திய முறையைத் தொடர்ந்து பேணிப் பணியாற்றினார். இவரிடம் கைநாடி, பிடித்து வைத்தியம் செய்யும் மிகச்சிறந்த தேர்ச்சியும் இருந்தது.

பரியாரி குளத்தார்
சிறார்களுக்கு வைத்தியம் செய்யும் துறையில் கை தேர்ந்தவர். இவரது தாயாரான முஹிதீன் உம்மாவும் இத்துறை மருத்துவத்துக்கு பேர்போனவர். இதனால், இவர்களது குலத் தொழிலாகவும் இது நோக்கப்பட்டது.

மு.பி.மு. அப்துல் காதர்
கண்ணில் வளரும் சவ்வு, கண் சிவத்தல் போன்றவற்றுக்கு சிகிச்சையளித்தவர். சொட்டு மருந்தும், கண்ணுக்கு வெளியே புறவளையம் பூசியும் இவ்வைத்தியம் செய்யப்பட்டது.

உ. வருசை முஹம்மது
மு.பி.மு. அப்துல்காதரின் கண் வைத்திய முறையை இவரும் தொடர்ந்து மேற்கொண்டார். ஒற்றைத் தலைவலிக்கு *(Migraine)* நெற்றியில் மூலிகையை ஒட்டி வைத்தியமும் செய்தார். இவரின் பின்னர் இவரது பிள்ளைகளான வி.எம். காசிம், வி.எம்.எம். மீரான் மொஹிதீன் ஆகியோர் ஒற்றைத் தலைவலிக்கு மூலிகை ஒட்டினர். இந்த முறை வெற்றிகரமான தீர்வைத் தந்தது.

திருமதி செய்யது முஹம்மது உசன் உம்மா
குழந்தைகளின் வயிற்றோட்டம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி என்பவற்றுக்கு சிறந்த முறையிலான மரபு வைத்தியங்களை இவர் செய்தார். உண்ணாக்கு வளர்தலுக்கு உச்சி பிடித்து இழுத்தல் போன்ற வைத்தியங்களும் இவருக்குக் கை தேர்ந்த கலையாக இருந்தன. மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட உரை மருந்து எனும் குளிசைகள், இந்த வைத்திய முறையில் பயன்படலாயின. இவருக்குப் பின்னர் இவரது மகளான மஹ்மூதா ஐதுரூஸ் மரைக்கார் இந்த வைத்தியத்தை தொடர்ந்து முன்னெடுத்தார்.

அடைக்கலப் பரியாரி (அடைக்கலநாதன்)
பல்வேறு வியாதிகளுக்கு சூரணம் தயாரித்து நோய்களையும், நோயாளர்களையும் குணப்படுத்தி மக்களின் அபிமானத்தைப் பெற்றார்.

பாஸ்கரதாஸ் பத்தர்
பன்முகத் திறமையுள்ள இவர், சிறந்த ஆயுர்வேத வைத்தியர். பாம்புக்கடி, பூச்சிக்கடி, பல்வலி, மூட்டு வலி என்பவற்றுக்கும் கை தேர்ந்த வைத்தியர்.
எலும்பு முறிவு, நெரிவு - கப்பலார் அபூபக்கர்
மூலிகைக் கலவைகளைக் கட்டி மருத்துவம் செய்தவர். இவருக்குப் பின்னர் மகன் அ.தாசின் இந்த மருத்துவ முறையைத் தொடர்ந்து முன்னெடுத்தார்.

மொஹிதீன் உம்மா
ஆறாத மற்றும் மாறாத கட்டிகள், சொறிகள், சிரங்கு மற்றும் கிரந்தி என்பவற்றுக்கு படுவெண்ணெய் என்னும் மருந்து மூலம் வைத்தியம் பார்த்தவர்.

மதார்சாஹிப் குப்பைப் பிச்சை
சூரணத்துள் அல்லது சுவாத சூரணம் தயாரித்தவர். இந்த வைத்தியத்தை இவருக்குப் பின்னர் மகள் நாகூரும்மா குப்பைப் பிச்சை தொடர்ந்து முன்னெடுத்தார்.
பிள்ளைப்பேற்று மருத்துவம்
அரச வைத்தியசாலையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். தாய்மார்களின் வீடுகளுக்குத் தேடிச் சென்று, மருத்துவ அறிவுரை வழங்கிய இவர், 1962ஆம் ஆண்டில் பள்ளமடு வைத்தியசாலையில் பணிபுரிந்துள்ளார்.
இதேவேளை விடத்தல்தீவைச் சேர்ந்த மருத்துவ மாது பிலோமினா ஜோசப், நாகூர் பிச்சை(சிவத்த வாப்புவின் மனைவி) ஆகியோரும் தேர்ச்சியுடன் திகழ்ந்தனர். மருத்துவத்தில் செய்யது முஹம்மது உசன் உம்மா, மறியம் சமத், ஹமீதும்மா மாடத்தா பெத்தா எனப் பல பெத்தாக்கள் வீடுகளுக்குச் சென்று பணியாற்றினர்.
கண்டுபிடிப்புகள்
விடத்தல்தீவு கிராமத்தில், ஆயுர்வேத மற்றும் நாட்டு வைத்திய மரபுகள் நீண்ட காலமாக நிலைத்திருந்துள்ளன. இதற்கான ஆதாரங்கள் பெரும்பாலும் வாய்மொழிக் கதைமொழிகள், குடும்ப மரபுகள் மற்றும் சமுதாய நினைவாற்றலின் மூலம் சான்றுபெற்றுள்ளன. முக்கியமான கண்டுபிடிப்புகள் பின்வருமாறு:

1. ஆயுர்வேத மரபுகளின் பரம்பரைத் தொடர்ச்சி

விடத்தல்தீவில் சுலியார், அடைக்கலம், அமிர்தநாதன் ஆகியோர் தலைமுறைகளாக ஆயுர்வேத வைத்தியத்தைக் கடைப்பிடித்து வந்தனர். இவர்களின் வைத்தியமுறை, குறிப்பாக வயிற்று நோய்கள், தசை, எலும்பு வலி, மகப்பேறு சிக்கல்கள் போன்றவற்றுக்கு மருந்துகள் வழங்கியதை உள்ளடக்கியது.

2. மூலிகை வைத்திய முறைகள்

பொதுவாக மூலிகைகள் மற்றும் இயற்கை மூலப்பொருட்கள் அடிப்படையிலான சிகிச்சைகள் வழங்கப்பட்டன. சுலியார் அடைக்கலம் ‘ஞானசோதி ஓமத்திரவம்’ என்ற பெயரில் ஓமத்தினைத் தயாரித்து, அரசு அனுமதியுடன் விற்பனை செய்தார்.

3. சமுதாயச் சேவைகளாக வழங்கிய வைத்தியத்துறை

விடத்தல்தீவின் வைத்தியர்கள் அயல் கிராம மக்களுக்கும் சேவையளித்தனர். பஸாரியில் ஆரம்பிக்கப்பட்ட டிஸ்பென்ஸரி, பின்னர் பள்ளமடு மற்றும் மன்னார் ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சி வரலாற்றுடன் இணைந்து நிகழ்ந்தது.

4. மகப்பேறு மற்றும் குழந்தைப் பராமரிப்பு

மகப்பேற்றிற்கும், குழந்தை பராமரிப்பிற்கும் விசிறித்தம்மா, சவிரியம்மா, அரியத்து அக்கா ஆகிய பெண்கள் முன்னணி வகித்தனர். குறிப்பாக முஸ்லிம் மக்களிடமும் இச் சேவை பரவலாக இருந்தது.

5. விஷச்சிகிச்சை மற்றும் சுளுக்கு சிகிச்சை

பாம்புக்கடி மற்றும் விஷ ஜந்துக்கள் கடி சிகிச்சையில் பாஸ்கரதாஸ் நிபுணத்துவம் பெற்றிருந்தார். உடல் நரம்புச் சுளுக்குப் பிடிப்பு சிகிச்சையில் யாகப்பு தார்சில்லம்மா மற்றும் மிக்கேல் சின்னப்பர் ஆகியோர் தலைசிறந்தவர்கள்.

6. பண்டைய மருத்துவ முறைபடியான மீன் முள் அகற்றல்

ஏனோக்கு மனுவேல்பிள்ளை மற்றும் அவரது வாரிசு மனுவேல்பிள்ளை சாள்ஸ் யோசேப் தொண்டைக் குரலிலுள்ள மீன் முள்ளை அகற்றும் மரபுப் வைத்திய முறையில் சிறந்த சேவையாற்றினர்.

7. இஸ்லாமிய சமூகத்தின் பங்கு

இஸ்லாமிய சமூகத்தினரும், விடத்தல்தீவின் பாரம்பரிய வைத்தியர்களிடம் இருந்து மருத்துவ சேவைகளை பெற்று வந்தனர்.

8. பாரம்பரிய மருந்துப் பொருள்கள் மற்றும் சிறப்பு வைத்தியங்கள்

வயிறு நோய்கள், வாத நோய்கள், மகப்பேறு சிக்கல்கள் ஆகியவற்றிற்கான நாட்டு மருந்துகள், சிறப்பு வகை வினைமுறைகளுடன் வழங்கப்பட்டன.

முடிவுரை
விடத்தல்தீவு கிராமம், அதன் தொன்மமும் மரபும் பிணைந்த ஒரு சிறப்பு மருத்துவ பாரம்பரியத்தை வடிவமைத்துள்ளது. மூலிகை சிகிச்சை மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் ஆழமான பணி, பல தலைமுறைகள் கடந்து சமூகத்தின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்துள்ளது. எளிய வாழ்வியல் சூழலிலும், குறைந்த வசதிகளிலும், எமது மருத்துவ முன்வோர்கள் மக்கள் நலனை முன்னிறுத்தி வழங்கிய சேவை, இன்றும் காலத்தால் மதிக்கத்தக்கதாக அமைந்திருக்கிறது.
அத்துடன், விடத்தல்தீவின் வைத்தியர்கள் மட்டுமல்லாமல், பெண்கள், இஸ்லாமிய சமூகத்தினரும் இவ்வாரிசை மரபை முன்னெடுத்து மக்களின் நலன் சார்ந்த பல்வேறு நோய்களுக்கு சிறப்பான தீர்வுகளை வழங்கியுள்ளனர். இதனால், மருத்துவம் என்பதைக் காலப்போக்கில் ஒரு சமூகச் சேவையாக ஏற்றுக் கொண்ட இக்கிராமம், நாட்டு மரபுகளின் ஓர் முக்கியமான தாங்கியாகவும், பாரம்பரியத்தின் உயிர்மொழியாகவும் திகழ்கிறது.
இந்நூல், விடத்தல்தீவின் பழமையான மருத்துவ மரபுகளைப் பாதுகாக்கவும், அந்த மரபின் சமூகப் பங்களிப்பை மீண்டும் நினைவூட்டவும் ஒரு முக்கியமான ஆவணமாகும். நவீன மருத்துவத்தின் வளர்ச்சியினால் மறைக்கப்பட்டு வரும் இத்தகைய பாரம்பரிய அறிவைக் கடைப்பிடித்து, எதிர்கால சந்ததிகளுக்குப் பரப்புவதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

16. இசை பாடும் விடத்தல்லூர் - திரு. நீல் ஆம்ஸ்ட்ரோங்

மன்னார் மாவட்டத்தில் இயல், இசை நாடகம், ஆகிய முத்தமிழ் கலைகளில் பெயர் பெற்ற கலைஞர்களைக் கொண்ட கிராமம் விடத்தல் தீவு என்றால் அது மிகையாகாது. நாடகம், நாட்டுக்கூத்து, பாடல் மற்றும் இசைக் கருவிகளை மீட்டும் திறன் படைத்த பல கலைஞர்கள் எமது கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து அது பல தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு இன்றுவரை சிறப்பாக நிலைத்து நிற்கிறது. குறிப்பாக இசைக் கருவிகளை வாசிப்பதிலும், பாடல்களைப் பாடுவதிலும், நாம் சிறந்து விளங்கி வருகிறோம். மன்னார் மாவட்டத்தில் இசை சம்பந்தமான போட்டிகளில் எமது கிராமமே முதலிடத்தில் இருந்து வந்துள்ளதுள்ளதை அண்மைக்கால நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன எடுத்திக்காட்டாக சென்ற வருடம் நடந்த கரோல் பாடல் போட்டி.

எமது கிராமத்தில் இசைக் கருவிகளை மீட்டும் இசைப் பயணம் மறைந்த திரு. சலமோன் சீமான்பிள்ளை *(1903)* அவர்களின் ஆர்மோணிய இசையில் இருந்து ஆரம்பிக்கிறது . இவரே எமது ஊரில் பல ஆர்மோனிய இசைக் கலைஞர்களுக்கு குருவாக இருந்து கற்றுக் கொடுத்த ஆசான் ஆவார். இவருக்கு முன் எவரும் இசைக் கருவிகளை வாசித்ததாக எதுவித ஆதாரமும் கிடைத்திருக்க வில்லை.சீமான்பிள்ளை அவர்களின் மறைவிற்குப் பின்னர், அவரிடம் இருந்து அக் கலையினைப் பயின்றவரான அவரின் பெறாமகன் மறைந்த விக்ரோறியான் சிலுவைராசா *(1924)* மற்றும் எமது கிராமத்தைச் சேர்ந்த மறைந்த திரு. இளயதம்பி பொன்னுத்துரை ஆகிய இருவரும் எமது கிராமத்தில் ஆர்மோணிய இசைக் கருவியில் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதில் சிலுவைராசா அவர்கள் புல்லாங்குழல், மேள வாத்தியம் ஆகிய இசைக்கருவிகளையும் வாசிக்கும் திறமை பெற்றிருந்த ஒரு சிறந்த இசைக் கலைஞர் ஆவார். கிராமத்தில் நடைபெறுகின்ற கலைநிகழ்சிகளான நாட்டுக்கூத்து, நாடகங்கள், வில்லுப்பாட்டு மற்றும் குடும்ப விழாக்களில், சீமன்பிள்ளை, பொன்னுத்துரை மற்றும் சிலுவைராசா ஆகியோரின் ஆர்மோணிய இசையின் பங்களிப்பு பின்னணி இசையில் அமைந்து அந் நிகழ்வினை சிறப்பித்திருக்கும். இவர்கள் ஆரம்ப காலத்தில் எமது ஆலயங்களிலும் ஆர்மோணியம் வாசித்து வந்திருந்தனர்.

எமது ஊரில் ஆர்மோணிய வீணை இசையில் சிறந்து விளங்கிய கவிஞர்கள் வரிசையில் அந்தோனிப்பிள்ளை மேரியன்னா மற்றும் அந்தோனிப்பிள்ளை எலிசபேத் ஆகிய இருவரும் இடம் பெறுகின்றனர். இவர்கள் இருவரும் சீமான்பிள்ளை அவர்களிடமிருந்தே ஆர்மோணியத்தை பயின்றிருந்தனர். சீமான்பிள்ளை அவர்களின் பேத்திகளான இவர்கள் எமது கோயில் பாடல் குழுவில் வீணை வாசித்து, எமது வழிபாடுகளை சிறப்பித்திருந்தமை, நாம் அனைவரும் அறிந்ததே. சீமான்பிள்ளை அவர்களின் பேரன், மறைந்த அந்தோனிப்பிள்ளை றிற்றியூஸ் அவர்களும் அவரிடம் இருந்து இவ் இசையைப் பயின்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைத் தொடர்ந்து திரு. மரியாம்பிள்ளை மரியசெல்வம் மற்றும் திரு. மரியாம்பிள்ளை மரிய தயாளன் ஆகிய இருவரும் Organ (Keyboard) வாசிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களும்இ இவர்களின் உறவினரான திருமதி யூப்பிரசியா *(Organ) Keyboard* அவர்களும் எமது பாடல் குழுவில் Piano/Organ (Keyboard) வாசித்து சிறப்பித்திருந்தனர்.. இதில் மரிய செல்வம் Keyboard வாசிப்பதில் மிகவும் விஷேட திறமை பெற்றிருந்தார். எமது கிராமத்தில் முதல் முதலில் Keyboard ஐ வாசித்து அறிமுகப்படுத்தியதும் இவரே, அத்துடன் இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் இசைக் குழுவிலும்,கிறிஸ்தவ மாணவர் chapel இலும் Keyboard வாசித்து சிறப்பித்துருந்தார். மேலும் இவர், கிற்றார் இசைக்கருவியையும் ஒரளவு வாசிக்க கற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் மரியசெல்வமும்,

யூப்பிரசியவும் மேரியன்னாவிடம் இருந்தும், மரிய தயாளன், தனது சகோதரன் மரியசெல்வத்திடம் இருந்தும் இக் கலையை கற்றறிந்ததாக தெரிய வருகிறது, இவ்வாறு சீமான்பிள்ளை அவர்களிடம் இருந்து இந்த கலை அவரது சந்ததியூடாக பலருக்கும் கடத்தப்பட்டது.

மேலும் எமது கிராமத்தின் இசைக் கலைஞர்களின் வரிசையில், மறைந்த திரு. யக்கோ இராயப்பு, யக்கோ மிக்கேல் (1921) மற்றும் திரு. மனுவல் பிள்ளை முடியப்பர் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் ஆர்மோணிய இசை வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்களில் மிக்கேல் அவர்கள் எமது மாதா கோயிலில் வீணை வாசித்து வந்திருந்தார் எனத் தெரிய வந்துள்ளது.. அதேவேளை இவரது மகளான திருமதி பேர்னாட் ஆனந்தநாயகம் அமலோற்பவியும் எமது கோயிலில் வீணை வாசித்து வந்தவராவார். தொடர்ந்தும்,இவர்களின் மகனான திரு. பேர்னாட் ஆனந்தநாயகம் பெனில் அவர்கள், மன்னாரிலும் எமது ஜோசப் வாஸ் நகர் ஆலயத்திலும், நீண்டகாலமாக Keyboard வாசித்து வழிபாடுகளை சிறப்பித்து வந்ததுடன், மற்றவர்களுக்கும் அதை கற்பித்து வந்துள்ளார். இவர் piano, Keyboard மற்றும் கிற்றார் இசைக்கருவிகளை முறைப்படி கற்றவர் (The university of aesthetic Jaffna Northern Province) என்பது குறிப்பிடத்தக்கது.

Keyboard கலைஞர்கள்

மேற்கூறப்பட்ட Keyboard கலைஞர்களைத் தவிர எமது கிராமத்தில் Keyboard வாசிப்பதில் தேர்ச்சி பெற்றுஇ எமது கோயில் ஆராதனைகளில் வாசித்து வரும் வளர்ந்து வரும் இளம் இசைக் கலைஞர்களாக செல்வன் சதானந்தன் ஆகாஷ், செல்வன். ஜீவானந்தன் செல்ரன் றோச், செல்வி. ஸ்ரனிஸ்லஸ் ஸ்ராலினி செல்வி. டில்சிகா றொயிற்றன்இ செல்வி. அக்ஷனா அருள்ராஜன், செல்வன். றொனிடிமல் சாறுக் ஆகியோர் இருந்து வருகின்றனர். எதிர்காலத்தில் எமது ஊரின் சமய கலாச்சார நிகழ்வுகளில் இவர்களின் பங்களிப்பு இன்னும் அதிகமான அனுபவத்துடன் அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மறைமாவட்ட இசைப்பணியில் பங்கேற்பு

எமது கிராமத்தில் ஆர்மோணிய வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற மற்றொருவராக திரு. சந்தியாப்பிள்ளை அருளானந்தம் அவர்கள் காணப்படுகிறார். மன்னார் மாவட்டத்தின் மறை ஆசிரியராக பயிற்சி பெற்ற இவர் இந்தியாவில் இக் கலையை விஷேடமாக பயின்றிருந்தார். கத்தோலிக்க பாடல்களை பாடுவதிலும் பயிற்றுவிப்பதிலும் சிறந்து விளங்கிய இவர், மன்னார் மாவவட்டத்தின் பல பங்குகளில் (விடத்தல் தீவு உட்பட), பாடகர் குழுவில் ஆசிரியராக பணியாற்றியிருந்தார். மாவட்டத்தின் பல குருமட மாணவர்களும்,பங்குமக்களில் பெருபாலானவர்களும் இவரிடமிருந்தே வீணை வாசிக்க கற்றுக் கொண்டனர். எமது கிராமத்தைச் சேர்ந்த ஆன் சித்திரா தேவதாசன் மற்றும் யாகப்பு அமலோற்பவி, திருமதி. அமலோற்பவி (மிக்கேல்) பேர்னாட் ஆனந்தநாயகம். மற்றும் திருமதி கரோலின் செல்வராசா ஆகியவர்கள் திரு. அருளானந்தம் அவர்களிடமிருந்தே வீணையை கற்றுக் கொண்டனர். இவர்கள் எமது கோயில் பாடல் குழுவில் நீண்ட நாட்களாக வீணை வாசித்து வந்துள்ளனர். இவர்களில் சித்திரா அவர்கள் இன்றும் இச் சேவையை ஆற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் திரு. அருளானந்தம் அவர்கள்,மன்னார் கலை பண்பாட்டுப் பேரவையின், மன் கலைச் சுரபி (2022) விருதையும், புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவலகள் அமைச்சுத் திணக்களத்தின், கலாபூஷணம் (2023) விருதையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடதக்கது.

மறைமாவட்ட இசைப் பணியில் அருட்பணியாளர்கள்

எமது கிராமத்தின் இசை பயணத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கியமான நபர்களில் ஒருவராக அருட்பணி அருளப்பு றஜனிகாந்த் அவர்கள் விளங்குகிறார். இவர் Organ (keyboard) Guitar , தபேலா, புல்லாங்குழல் என பல இசைக் கருவிகளை மீட்டும் திறன் கொண்டவர். இவர் குருமட மாணவனாக இருந்தபோதே இவ் இசைக் கருவிகளை கற்றுத் தேர்ந்தார், எடுத்துக்காட்டாக இவர் குருமடத்தில் இருந்தபொழுதுதபேலாவை, திரு. மனுவல்பிள்ளைஇராயசிங்கம்; சங்கீதபூசணம்(மிருதங்கம்),அவர்களிடம் இருந்து கற்றிருந்தார். இனிமையான குரல்வளம் கொண்ட இவர் சிறந்த ஒரு பாடகன் என்பதுடன், பலரின் இசையில் பாடல்களைப் பாடியும், பல பாடல்களுக்கு சொந்தமாக இசையமைத்தும் பாடியுள்ளார். அந்த அளவுக்கு இயல்பாகவே இசை ஞானம் கொண்டவர். இவரது குரலும் இசையும் மடுத்திருத்தலத்திலும் ,மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலும் பக்தியுடன் ஒலித்ததை நாம் அனைவரும் கேட்டு அனுபவித்திருக்கிறோம். விடத்தல்தீவின் மைந்தனாக மன்னார் மாவட்டத்தில், அதிலும் குறிப்பகாக கத்தோலிக்க திருச்சபையில் இசையால் மக்களை பக்தி கொள்ளவைத்த, அருட்பணி அருளப்பு றஜனிகாந்த் அவர்கள் எமக்கும், எம் மறை மாவட்டத்திற்கும் கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம் ஆகும்.
இந்த வரிசையில் மடுத்திருத்தலத்தில் தனது சிம்மக்குரலால் “புகழ்வாய் ஜெருசலேம் உன் ஆண்டவரை” என்ற பாடலை வருடா வருடம் பாடிவரும் அருட்பணி செபமாலை ஸ் ரீபன் ராஜா அடிகளாரும் எம் மண்ணின் மைந்தனே.
அதேபோல, எமது ஊரின் அருட்பணியாளர்களான சீமான்பிள்ளை அலிஸ்ரன் மற்றும் யேசுநேசன் ஜெல்த்சின் சார்லஸ் ஆகிய இருவரும் Organ keyboard வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களாவர். இவர்கள்

மறைமாவட்டத்திலும் குறிப்பாக அருட்பணி ஜெல்த்சின் சார்லஸ் அவர்கள் மடுத்திருப்பதியிலும்,வழிபாடுகளில் இதை வாசித்து வருகின்றார்.

டொல்கி/ *Dholak*, மிருதங்கம், தபேலா
ஆர்மோணிய இசைக்கு இணையாக, பக்க வாத்தியமாக அமைந்த மிக முக்கியமான இசைக்கருயில் ஒன்றாக, எமது கிராமத்தில் மேள வாத்தியம் காணப்பட்டது. டொல்கி/ **Dholak**, மிருதங்கம், தபேலா என பலவித வடிவங்களிலும், இசையிலும் அமைந்த இக் கருவிகளை வாசித்து வந்த பலர், எமது கிராமத்தில் அன்று தொட்டு இன்று வரை இருந்து வருகின்றனர். இவர்களில் மிக முக்கியமானவர்களாக மறைந்த திரு செபஸ்ரி அந்தோனிப்பிள்ளை, மறைந்த அந்தோனிப்பிள்ளை கீர்த்திசீலன், அந்தோனிப்பிள்ளை பரமநாதன், மறைந்த திரு. கிரித்தோ யக்கோப்பிள்ளை, மற்றும் மறைந்த திரு. யக்கோப்பிள்ளை அற்புத ஸ் ரீபன் (மணி) மறைந்த திரு. கபிரியேல் அந்தோனிப்பிள்ளை, மறைந்த திரு. கபிரியேல் தாவீது (மங்களம் அண்ணணின் தகப்பன்) திரு. பேதுருப்பிள்ளை பிரான்ஸிஸ், திரு. பூபாலசிங்கம், திரு. சவிரியப்பு யாகப்பு ,திரு. சவிரியப்பு அருள்சீலன் மற்றும் ஜேம்ஸ் சுதாகரன் ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்களில் அந்தோனிப்பிள்ளை, கீர்த்திசீலன் , ஸ் ரீபன், யாகப்பு மற்றும் ஜேம்ஸ் சுதாகரன் போன்றவரகள் எமது கோயில் பாடல் குழாமில் மேளம் வாசித்து வழிபாடுகளில் சிறப்பித்திருந்தனர்.
அதேவேளை இவர்கள் எமது சீமான்பிள்ளை பொன்னுத்துரை, சிலுவைராசா ஆகியோருடன் இணைந்து நாட்டுக்கூத்து, நாடகம், விலுப்பாட்டு, ஊரில் நடைபெறும் சினிமாப் பாடல் கச்சேரிகள், பாடசாலை கலைநிகழ்ச்சிகள் மற்றும் கரோல் நிகழ்ச்சிகளிலும் வாசித்து, கிராமத்தின் இசைத் துறையில் பங்களித்து சிறப்பித்திருந்தனர் . அதேபோல் எமிலியானுஸ்பிள்ளை டெலிஸ்ரன் நிசாந், பரணபாஸ் லஸ்ரன்,மரியாம்பிள்ளை மதுரநாயகம் ஆகியோர் தபேலா வாசிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்து ஊரில் பல இசை நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்புத்திருந்தனர் இவர்களில் மதுரநாயகம் திரு பூபாலசிங்கத்திடம் இருந்தும் டெலிஸ்ரனும் லஸ்ரனும் நாவாந்துறையை சேர்ந்த மனுவல்பிள்ளை இராயசிங்கம்.. சங்கீத பூசணம்(மிருதங்கம்) அவர்களிடம் இருந்தும் இத் தபேலாக கலையை கற்றுக்கொண்டனர். மேலும் திரு டெலிஸ்ரன் அவர்கள் எமது ஜோசப் வாஸ் நகர் ஆலயத்திலும் தபேலா வாசித்து வருகின்றார்.

கிற்றார்/ வயலின்
கிற்றார் இசையும், வயலின் இசையும் எமது ஊரைப் பொறுத்தமட்டில் பெரிதாக பாவனயில் இல்லாத இசைக் கருவிகளாகும். ஆரம்ப காலத்தில் இவற்றை கற்றுக்கொடுப்பதற்கான ஆசிரியர்கள் இல்லாததே,இதற்கான முக்கிய காரணமாகும். ஆனால் அண்மை காலங்களில் எமது கிராமத்தைச் சேர்ந்த செல்வி மரிய ஜெனிஸ்ரின் ஞானமணி; கர்நாடக சங்கீத வயலின் இசைக் கலைஞர் பல்கலைக்கழக பட்டதாரி((*B.F.A*) அவர்கள்,எமது ஜோசப் வாஸ் நகரிலும், மன்னார் நகரிலும் வயலின் வகுப்புகளை நடத்தி, இவ் இசைக் கருவியை எமது பிரதேசத்தில் அறிமுகப்படுத்தி வருகிரார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழக (மட்டக்கிளப்பு) நுண்கலைமானி (வயலின் சிறப்பு) பட்டதாரி ஆவார். இது எமது கிராமத்துக்கு மட்டுமல்லமல் மன்னார் மாவட்டத்தின் இசைத்துறையில், குறிப்பாக வயலின் இசையில் முக்கியமான மனிதவளமாக கருதப்பட வேண்டிய ஒரு விடையமாகும்.

எமது கிராமத்தில் கிற்றார் இசையை அறிமுகப் படுத்தியதில் முன்னோடியாக இருந்தவர் திரு. ராஜநாயகம் டொன் மிகேல் சிறில் (பாலு) ஆவார். இளம் பராயத்திலிருந்தே கிற்றார் இசையில் கைதேர்ந்தவரக திகழ்ந்த இவர், எமது கிராமத்தில் வசித்து வந்த காலங்களில் பாலு இசைக்குழு என்ற பெயரில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி, அதில் கிற்றார் இசைத்து வந்தார். எமது கிராமத்தை சேர்ந்த பல இளம் பாடகர்கள் இவரது இசைக்குழுவில் இணைந்து **1985/ 86** களில் பாடல்களைப் பாடியிருந்தார்கள். இவர் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தார். மேலும் எமது கிராமத்தில் கோயில் இசைக் குழுவிலும் இணைந்து, சிறிதுகாலம் கிற்றார் **(Electric guitar**) வாசித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் கிற்றார் இசையால் கவரப்பட்ட பலர், எமது கிராமத்தில் கிற்றார் கற்பதில் ஆர்வம் காட்டியிருத்தனர். அந்த வரிசையில் எமது கிராமத்தில் திரு. பெனடிற் பெனற், திரு. அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங், திரு. மரிய செல்வம், திரு. ஜேம்ஸ் பத்மநாதன் சதீஸ் குமார், திரு பர்ணபாஸ் பெனற் லெஸ்லி, திரு.யுவானிஸ் கமல்றாஜ் (இவர் மன்னாரில் கிற்றார் வகுப்புகளை சில காலம் நடத்தி வந்தார்). ஆகியோர் இக் கிற்றார் இசையை வாசிப்பவர்களாக காணப்பட்டனர்.

கரோக்கே (*Karaoke*)கடல் இசைக் குழு
கடந்த சில தசாப்தங்களாக எமது ஊர் மக்கள் கரோக்கே (*Karaoke*) பாடல்களை பாடுவதை ஒரு போக்காக கொண்டுள்ளனர். பல திறமையான பாடகர்களைக் கொண்ட எமது கிராமத்தில், இந்த கரோக்கே பாடல் தொழில்நுட்ப வசதியானது. பல இளம் கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த, நல்லதொரு மேடையாக விளங்குகின்றது. அந்த வகையில் எமது ஜோசப் வாஸ் நகரத்தில் திரு. செல்வம் சவேரிதாஸ் அவர்களினால் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் கடலலை இசைக் குழு , எமது கலைஞர்களுக்கு கரோக்கே பாடல் தொழில்நுட்ப வசதிகளையும், மற்றும் பாடல் இசையமைப்பு சம்பந்தமான தொழில்நுட்ப உதவிகளையும் அண்மைக் காலங்களில் வழங்கிவருவது மிகவும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

இசைத் துறையில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள்

எமது கிராமத்தில் இளம் கலைஞர்கள் இசையில் ஈடுபாடு காட்டி, பல தரப்பட்ட இசைக் கருவிகளை கற்றுவருவது அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகிறது. உதாரணமாக Piano, Organ, Keyboard, மிருதங்கம், வயலின், *Guitar* ,வயலின் போன்ற பல்வேறு இசைக் கருவிகளை கற்பதில் எமது இளம் தலைமுறையினர் ஆர்வம் காட்டிவருவது, இசை சார்ந்த விடையங்களில் எமது ஆர்வத்தையும் எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றமடைவதற்கான சாத்தியப்பாடுகளையும் உணர்த்தி நிற்கிறது. இந்த வரிசையில் எமது கிராமத்தில் இசைக் கருவிகளை கற்றுவருபவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு

மிருதங்கம்

- செபமாலை பிறீமன் ராசா புறோமியன் றெக்ஷோன்- மிருதங்கம் தரம் 3 ஆசிரியர் – திரு. மனுவல்பிள்ளை இராயசிங்கம்.. சங்கீத பூசணம்(மிருதங்நம்
- மரியசேவியர் டிலிஸ்றோ ஜீசஸ் - மிருதங்கம் தரம் 1 ஆசிரியர் திரு. மனுவல்பிள்ளை இராயசிங்கம்.. சங்கீத பூசணம்(மிருதங்நம்
- ஜஸ்டின் ஜனிஸ்ரன்

வயலின்

- செல்வி ஆன்ஸ் லாயா மரியசேவியர் - வயலின் தரம் 2 ஆசிரியர் செல்வி மரிய ஜெனிஸ்ரின் ஞானமணி (நுண்கலைமானி பட்டதாரி வயலின்)
- செல்வி .அக்ஷயா ஜோண் கில்மன்- ஆசிரியர் செல்வி மரிய ஜெனிஸ்ரின் ஞானமணி (நுண்கலைமானி பட்டதாரி வயலின்)

Piano, Organ, Keyboard/Organ:

- செல்வி. ஷெரினா ஏஞ்சலின் மரியசெல்வம் – *Piano* (5ம் பிரிவு) ஆசிரியர் - அபியேல் றிகேஷா கிறகொறி ல்சிகா,
- செல்வி.நயோமி மரியசெல்வம் – Piano (6ம் பிரிவு) ஆசிரியர் - அபியேல் றிகேஷா கிறகொறி ல்சிகா,
- செல்வன் ஷெரோனி மரியசெல்வம் - Piano (ஆரம்பப் பிரிவு) ஆசிரியர் - அபியேல் றிகேஷா கிறகொறி ல்சிகா,
- செல்வன் கமல்றாஜ் எதிரியன்,
- செல்வி. அஸ்மிகா கமல்றாஜ்,

எமது கிராமத்தின் இசைத்துறை பட்டதாரிகள்

Vocals (வயலின்)

- றெமி குரூஸ் டெலோஷா பேர்ளின்: யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (BFA)
- பிறேம்குமார் பெலா சிகானுஜா: யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (BFA)
- அனியூட்டன் டெனிஸ்ரா வேயினி: சுவாமி விபுலானந்தா கிழக்குப் பல்கலைக்கழகம் (BFA)
- றேபியா நிலுக்சன் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (BFA)
- றென்சி பேர்டினனற் றெறன்சியா பேளின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (BFA Undergraduate)
- **Vocals** (மிருதங்கம்)
- றெமி குரூஸ் டெலோஷா பேர்ளின்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (BFA) நுண்கலை இளங்கலை

“இசை பயில்வோம் இசையமைப்போம், இசை பாடுவோம் தொடர்ந்து முன்னேறுவோம், ஒரே சமூகமாய் மகிழ்ந்திருப்போம்”

17. மறைந்த ஆசிரியைப் திரு. சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்களின் நினைவாக

1917ம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி, விடத்தல்தீவு கிராமத்தில், இவர் குடும்பத்தின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவருடன் ஆறு பேர் சகோதர சகோதரியார். மூவர் ஆசிரியர். விடத்தலூர் வித்தாப்பு என்ற ஊர் பற்றிய வரலாற்றை எழுதியவர்

சாந்தியாப்பிள்ளை அவர்கள் அந்தப் பகுதியில் பிறந்தவர்களுள், முழுமையான கல்வியறிவு பெற்று, ஆசிரியர் பணியில் கடமையாற்றியவர் என்று சொல்லப்படக்கூடிய மிகச்சிலருள் ஒருவராகக் கருதப்படுகிறார். கல்விக்காக அவர் நாடோடியாகப் பயணித்துப் பல்வேறு கிராமப்பள்ளிகளில் மட்டுமல்லாமல், பல கத்தோலிக்கப் பாடசாலைகளிலும் கடமையாற்றியுள்ளார்.

அவருடைய ஆசிரியப்பணி ஆழமான அர்ப்பணிப்போடும், நேர்மையோடும் நிறைந்தது. அவரது வழிகாட்டலின் கீழ், பல மாணவர்கள் கல்வியைப் பெற்றனர். தமிழ்ப்பற்றும், மொழி மீது கொண்ட தீவிர அக்கறையும், மாணவர்களை நேர்த்தியான பாதையில் வழிநடத்தும் அவரது பாணியும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் அபாயமுள்ள காலகட்டத்தில், அவர் அந்த மொழியை மாணவர்களுக்குள் ஊட்ட முயன்றது பாராட்டத்தக்கதாகும்.

அவரது வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்வொன்றாக, பிராந்திய அரசியல் சூழ்நிலைகளால் அவர் தாயகத்தைவிட்டு மன்னார் நகருக்கு குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் தனது பணி விடயத்தில் எந்த ஒய்வும் எடுத்ததில்லை. அங்கும் தன்னலம் பாராமலே ஆசிரியப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். பலரை வழிநடத்தி வாழ்வில் உயர்ந்த இடத்திற்கு கொண்டுசென்றார்.

அவரது பணிக்காக மட்டுமல்ல, அவர் வாழ்ந்த விதத்திற்கும் மக்கள் மத்தியில் இன்றுவரை மரியாதை கொடுக்கப்படுகின்றது. அவர் விட்டுச் சென்ற கல்விச் சுவடுகள் தெளிவாகத் தெரிகின்றன.

தமிழ் மொழி, இலக்கியம், ஆன்மிக ஒழுக்கம் ஆகியவற்றை மாணவர்களின் மனங்களில் உறுதியாக ஊட்டியவர். மிகவும் எளிமையான வாழ்க்கை, ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் பக்தியுடன் தன்னை ஒதுக்கி வைத்த வாழ்வு வாழ்ந்தவர். இறந்த நாள்வரை சமூகத்தின் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்தவராவார்.
1996ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் திகதி, இவர் இயற்கை எய்தினார். அவரின் உழைப்பும், தொண்டும், மாணவர்களால் எப்போதும் நினைவுகூரப்படும்.

திரு. எஸ். சந்தியாப்பிள்ளை அவர்கள் எழுதிய “விடத்தலூர் வித்தாப்பு” நூலின் அறிமுகம்
சிலுவைராசா பொனிபஸ்

திரு. எஸ். சந்தியாப்பிள்ளை அவர்கள் எழுதிய விடத்தலூர் வித்தாப்பு என்பது இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள கடலோர கிராமமான விடத்தல்தீவின் பூர்வீக ஆசானும், கலாச்சார வரலாற்றாசிரியருமான திரு. எஸ். சந்தியாப்பிள்ளையின் கவிதை வரலாற்றுப் பதிவு ஒன்றாகும்.
1996 ஆம் ஆண்டு முதன்முதலில் வெளியிடப்பட்ட இந்த நூல், விடத்தல்தீவின் மக்களின் கூட்டு நினைவுகளை, வாழ்ந்த அனுபவங்களை, மற்றும் ஆன்மீக மரபுகளைக் கொண்டு உரை மற்றும் கவிதை கலந்த எளிய, சுவையான தமிழில் அழகாக பதிவு செய்கிறது.

விடத்தலூர் வித்தாப்பு நூலில் ஆசிரியர், தனது பிறந்த ஊரைப் பற்றிய ஆழமான நேசத்தோடு பதிவு செய்கிறார்—அதில் தேவாலயங்கள், கோயில்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்கள், பண்டைய விவசாய வாழ்க்கை, சடங்குகள், பாரம்பரியக் கதைகள், வர்த்தக வழக்கங்கள், மற்றும் சமூக மாற்றங்களைக் கூறுகிறார். வாய்மொழி மரபுகள், மூத்தோர் சாட்சியங்கள் மற்றும் ஆசிரியரின் சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்த நூல் நம்பிக்கை, நன்றியுணர்வு, இயற்கை, கல்வி, மற்றும் சமூக மீள்தன்மை ஆகிய கருப்பொருள்களைத் தழுவி அமைந்துள்ளது.

இந்த படைப்பு, இயேசு மற்றும் மரியாளை மகிழ்வுடன் பாடும் பக்திப் பாடல்களுடன் துவங்குகிறது. இதனால் கிராமம் ஒரு சாதாரண இடமல்ல, ஒரு புனிதமான கலாசார அடையாளமாகவும் வாசகருக்கு உருவாகிறது.
இந்த நூல், உள்ளூர் தலைவர்கள் மற்றும் கல்வியாளர்களின் ஆதரவுடன் சுயமாக வெளியிடப்பட்டதாகும்.
இன்றைய தினத்திலும், விடத்தலூர் வித்தாப்பு என்பது ஒரு தனித்துவமிக்க மற்றும் இதயத்துடிப்பான இலக்கிய ஆவணமாக, வரலாற்றின் விளிம்பில் உள்ள சிறியதொரு சமூகத்தின் அடையாளத்தையும் குரலையும் அழிக்காமல் பாதுகாக்கிறது.

அசல் தமிழ் நூல், கிராமத்தின் நம்பிக்கை, நன்றியுணர்வு மற்றும் ஆன்மீக பாரம்பரியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஆழ்ந்த பக்தியுடனும் கவித்துவத்துடனும் தொடங்குகிறது. இது, இயேசுவுக்கும் மரியாளுக்கும் உரித்த மதிப்பூண்மையை வெளிப்படுத்தும் பக்திப் பாடல்களால் ஆரம்பமாகி, தெய்வீக பாதுகாப்பு, வழிகாட்டல் மற்றும் ஆசீர்வாதங்களை வேண்டுகிறது. இந்தப் பாடல்கள் இரட்சிப்பு, ஒளி மற்றும் தெய்வீகத்தையும் மனிதர்களையும் இணைக்கும் ஆன்மீக உறவைக் குறிக்கும் உருவகங்களால் நிரம்பியவை.
இந்த மதத்தோன்றல்கள் பின், உரை அறிமுகப் பகுதிகளும் பாராட்டுச் செய்திகளும் உள்ள தொகுப்பாக மாறுகிறது. ஆசிரியர் திரு. எஸ். சந்தியாப்பிள்ளை, கிராம மூத்தோர் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் தங்கள் எண்ணங்களைப் பகிர்கின்றனர். கிராமத்தின் சொல்லப்படாத சமூக, வரலாற்று மற்றும் ஆன்மீக கதைகளைக் நேர்த்தியானதும் கவித்துவத்துடனும் பதிவு செய்யும் நோக்கத்துடன், இந்த நூலை உருவாக்கிய உள்ளார்ந்த தூண்டுதலை சந்தியாப்பிள்ளை விளக்குகிறார். ‘ விடத்தல்தீவு’ என்ற பெயர், ஒரு மரத்தின் பெயரை அல்ல; மாறாக, நாயாறு நதியின் பெருக்கெடுப்பைப் போன்ற இயற்கை பேரழிவுகளிலிருந்து மீண்ட “தனியாகப்பட்ட” அல்லது “விட்டுச்சென்ற” தீவு என்பதைக் குறிக்கும் வகையில் தோன்றியிருக்கலாம் என்பதையும் அவர் எடுத்துரைக்கிறார்.

யக்கோப்பிள்ளை மற்றும் தி டோபியாஸ் போன்ற மூத்த கிராமத் தலைவர்கள், ஓய்வு பெற்ற அதிபர் பி. பெனடிக்ட் ஆகியோர் இந்த நூலின் வரலாற்று துல்லியத்தையும், கலாச்சார நேர்மையையும் வலியுறுத்தி, அவசியமான பாராட்டுக்களையும் ஆதாரங்களையும் வழங்குகிறார்கள். விடத்தல்தீவின் கூட்டு நினைவையும், அடையாளத்தையும் எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் முக்கிய முயற்சியாக இந்த நூலை அவர்கள் முன்னிறுத்துகிறார்கள்.

தொடரும் பகுதிகளில், நூலின் வரலாற்றுப் பின்னணி தெளிவாகத் திறக்கப்படுகிறது. விதத்தல்தீவின் முந்தைய கால வாழ்க்கையைப் பற்றிய கவிதை நினைவுகளும் நிகழ்வுகளும் இந்தப் பகுதிகளில் விரிவாக சித்தரிக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் இந்த கிராமம் செழிப்பான நிலம், பாயும் ஆறுகள், வலுவான சமூகக் கோட்பாடுகள் மற்றும் தெய்வீக பாதுகாப்புடன் மலர்ந்ததைக் கூறுகிறது. இயற்கையோடும், கடவுளோடும் இணைந்த வாழ்வை, அதன் மக்கள் மேற்கொண்டனர். அவர்கள் வர்த்தகம், விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபட்ட தங்கள் மூதாதையர்களின் வாழ்வியலையும் இங்கு நூல் வெளிப்படுத்துகிறது.

இந்தக் கவிதை மயமான குரல், குழந்தைப் பருவத்தின் அப்பாவித்தன்மை, மூத்தோரின் ஞானம், நிலத்தின் மீள்தன்மை, மற்றும் விடத்தல்தீவின் மண் மற்றும் நீரில் பதிந்துள்ள கலாசார நினைவுகளைக் குறித்து ஆழமாக ஆராய்கிறது. இந்நூலில், முந்தைய பாரம்பரிய மகிமைக்கும், இன்றைய இடர்ப்பாடுகளுக்கும் இடையே ஒரு தடுமாற்றம் தெளிவாக உணரப்படுகின்றது—இது உடல் ரீதியாக (ஆறுகள் மற்றும் கடலால் நிலம் இழக்கப்பட்டமை) மற்றும் ஆன்மீக ரீதியாக (போர் மற்றும் இயற்கை பேரழிவுகளால் ஏற்பட்ட இடப்பெயர்ச்சியும் அதிர்ச்சியும்) என்பதை நுட்பமாக பதிவு செய்கிறது.

இது, விடத்தல்தீவு மக்கள் கல்வி விருப்பங்கள், கோயில்களின் தாக்கம் மற்றும் கதைச் சொல்லும் கலையின் சமூக பங்கு போன்றவற்றைத் தொடுகின்றது. இதில், விடத்தல்தீவு என்பது வெறும் புவியியல் இடமல்ல, மாறாக, அது ஒரு ஆன்மீக மற்றும் கலாச்சார அடையாளம் மிக்க சரணாலயமாக அமைந்திருப்பதைக் காட்டும் ஒருங்கிணைந்த மற்றும் வளமான படம் உருவாகிறது.

இந்த நூல், இயற்கை சமநிலை மற்றும் பாரம்பரிய சடங்குகளின் செழுமையான காட்சிப்படுத்தல்களுடன் துவங்குகிறது. கிளிகள், கொக்குகள் மற்றும் கொக்குத் தலைமையிலான பறவைகள் வண்ணமயமான கூட்டங்களாக ஆறுகள் மற்றும் பசுமை தோப்புகளோடு இயற்கை ஒத்திசைவில் காணப்படுகின்றன. நீர்நிலைகள் மீன்களாலும் மலர்களாலும் நிரம்பியவையாக சித்தரிக்கப்படுகின்றன; மேலும், பெண்கள் உட்பட கிராமவாசிகள் ஒழுங்காகவும் அழகாகவும் நீர் சேகரிப்பு மற்றும் சமயச் சடங்குகளில் ஈடுபடுவதை நூல் வெளிப்படுத்துகிறது.

பின்னர் இந்தக் கதை சமூக ஒற்றுமை மற்றும் மீள்தன்மையின் பிரதிபலிப்பாக நகர்கிறது. சாதி அல்லது பின்னணிக்கேற்ப எந்த வேறுபாடும் இல்லாமல், மக்கள் ஒன்றாகக் குளித்து, மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டு, ஆன்மீக நடைமுறைகளில் ஈடுபடுகிறார்கள். குழந்தைகள் மகிழ்ந்து விளையாடுகிறார்கள், பெரியவர்கள் அறிவுரைகள் வழங்குகிறார்கள், மற்றும் இயற்கையும் மனித நடவடிக்கைகளும் சரியான இசைவோடு கலந்திருப்பதை இந்நூல் நெகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறது. இதனால், விடத்தல்தீவின் நில வடிவம் அதன் சூழலியல் அமைப்பால் மட்டுமல்ல, மக்களின் மதிப்புகள் மற்றும் ஒழுக்கச்சார்ந்த பழக்கங்களாலும் வடிவமைக்கப்படுவதாக அறிகிறோம்.

இசை மற்றும் நாடகக் கலைகள் இந்நூலில் உயர்ந்த முறையில் போற்றப்படுகின்றன. பாரம்பரிய இசைக்கருவிகள், மதப்பாடல்கள், மற்றும் குழந்தைகளின் குரல்களில் புனித ஒலி காற்றை நிரப்பிய காலங்களை கிராம மூத்தோர் நினைவுகூருகிறார்கள். நாடகங்கள், கவிதைப் பேச்சுக்கள் மற்றும் சமூக நடன நிகழ்வுகள் போன்றவை கிராமத்தின் செழிப்பான கலாச்சார வாழ்க்கையின் அடையாளங்களாக அமைந்தன என்பதையும் நூல் எடுத்துக்காட்டுகிறது.

தொடர்ந்து, நூல் விடத்தல்தீவின் சங்குச் சந்தை மற்றும் வியாபார நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்கிறது. மக்கள் பிற கடற்கரை இடங்களுக்கு சென்று சங்குகள் சேகரித்து, அவற்றை சம்பத்துரை போன்ற சந்தைகளில் விற்றனர். இந்த வர்த்தகம், சமூகத்தின் தொழில்முனைவோர் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது, மேலும் அவர்கள் பிராந்திய மற்றும் சர்வதேச வர்த்தக வலையமைப்புகளுடன் இருந்த தொடர்புகளையும் சுட்டிக்காட்டுகிறது.

பின்வரும் பகுதியில் கவனம் விவசாய வளம் மற்றும் நீர் வளத்தை நோக்கி திரும்புகிறது. சிவப்பு அரிசி விளைந்த வயல்கள் மற்றும் சிவப்பு கண்கள் கொண்ட மீன்கள் நிறைந்த குளங்கள், நிலத்தின் செழிப்பையும் விளக்குகின்றன. நீதிமிக்க ஆட்சி கீழ், கலை, இயற்கை மற்றும் பொருளாதாரம் ஒருங்கிணைந்த முறையில் வளமடைந்திருந்தது. இந்தச் செல்வம் பொருட்களில் மட்டும் இல்லை – நீதிமனம், பணிவும்,

தாராளமனப்பான்மையும் இதில் அடங்கியிருக்கின்றன. இவைதாம் விடத்தல்தீவு மக்களை வரையறுக்கும் முக்கியமான பண்புகள் என நூல் வலியுறுத்துகிறது.

கோயில்கள் மற்றும் மதநடைமுறைகளின் பங்கு

வடத்தல்தீவுக்குரிய இந்த கதையின் மையப் புள்ளிகளில் ஒன்று கோயில்கள் மற்றும் மதநடைமுறைகள் ஆகும். தீவில் கட்டப்பட்ட கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாமல், அவை தொண்டு நடவடிக்கைகள், கல்வி பணிகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடலுக்கான இடங்களாகவும் விளங்கின. இங்கு நடத்தப்பட்ட சடங்குகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், பிச்சைக்காரர்களுக்கும் மரியாதையுடன் உணவு வழங்கப்பட்டதாகவும் விவரிக்கப்படுகிறது. துறவிகள் மற்றும் தெய்வீக அருளைப் புகழ்ந்த பாடல்கள், அன்றாட வாழ்வின் இயல்பான அங்கமாகவே இருந்து வந்தன.

வரலாற்றுப் புகழ்பெற்ற வெள்ள சம்பவம்

நூலில் குறிப்பிடப்படும் ஒரு முக்கிய நிகழ்வாக, ஒரு பெரும் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக ஒரு தேவாலயத்தின் தரை உயர்த்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செயல்பாடு பயபக்தியுடனும் சமூக தொலைநோக்கோடும் மேற்கொள்ளப்பட்டது. இது தெய்வீக பாதுகாப்பை நினைவூட்டும் ஒரு அடையாளமாகவும், நோக்கம் மிக்க சமூகத் திட்டமிடலின் சான்றாகவும் விளங்குகிறது.

கிராம நலத்துக்காக செய்தவர்களின் சேவைகள்

இந்த பகுதி, கிராம நலத்துக்காக உழைத்தவர்கள் மீது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டாடுகிறது. தடைபட்ட கால்வாய்களை சுத்தப்படுத்தியதுடன், தொலைதூர இடங்களில் இருந்து தண்ணீரை மக்கள் உபயோகிக்க வைக்கும் வகையில் கொண்டுவந்த ஒருவரது செயல்கள், மனித உருவில் தெய்வீக இரக்கத்தின் வெளிப்பாடாக கவிதைநயத்துடன் சித்தரிக்கப்படுகின்றன.

பாரம்பரிய கிராமப்புற விளையாட்டுகள்

இந்தப் பகுதியில் பாரம்பரிய விளையாட்டுகள் பற்றிய விரிவான மற்றும் மகிழ்ச்சிகரமான சித்தரிப்பு வழங்கப்படுகிறது. நூற்பு விளையாட்டுகள், இழுவைப் போர்கள், தேங்காய் உடைக்கும் போட்டிகள், போலி ரத சவாரிகள் என பல்வேறு உடல் இயக்க அடிப்படையிலான விளையாட்டுகளில் சிறுவர்கள் ஈடுபட்டனர். இந்த உள்ளூர் பண்பாட்டிலும், மண்ணிலும் வேரூன்றிய விளையாட்டுகள், கிராமத்தின் விளையாட்டு போக்கையும், குழந்தைகளின் படைப்பாற்றலையும் பிரதிபலிக்கின்றன.

புத்தகத்தின் இறுதி: மரபும் மாற்றமும்

புத்தகத்தின் இறுதி பகுதி, உள்ளூர் மரபுகள், அன்றாட வாழ்வியல், மத பன்முகத்தன்மை மற்றும் சமூக மாற்றங்களை ஆழமாக ஆராய்கிறது. இது, நீர் பற்றாக்குறைக்கு தீர்வு காண முயற்சி செய்த சமூக நலத்துணைவர்கள் குறித்து குறிப்பிடும் விதமாக தொடங்குகிறது. குறிப்பாக, வறண்ட காலங்களில் சன்னாரிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்த நலதாரர்கள், பயபக்தி நிறைந்த கவிதைமிகு சுருக்கங்களில் நினைவுகூரப்படுகிறார்கள். அவர்கள், கடின காலங்களில் சமூகத்தை காப்பாற்றிய தெய்வீகத் தூதர்களாகவே சித்தரிக்கப்படுகிறார்கள்.

அதற்குப் பின், பாரம்பரிய கிராமப்புற விளையாட்டுகளை மகிழ்வுடன் நினைவுகூரும் பகுதிகள் இடம் பெறுகின்றன. இங்கு, ஊஞ்சல் போட்டிகள், தேர் விளையாட்டுகள், கயிறு இழுத்தல் மற்றும் கண்மூடிய டேக் போன்ற பல்வேறு சிறுவர் விளையாட்டுகள் சித்தரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் சேர்ந்து விளையாடும் இவ்விளையாட்டுகள், அன்றாட வாழ்வின் வேடிக்கையையும், கலாச்சாரக் கற்றலையும் ஊக்குவிக்கின்றன.

மதச் சக வாழ்வும் சமூகத் தலைமைத்துவமும்

பின்னர் கதை இஸ்லாமிய சமூகத்தின் பங்களிப்புகளைக் நோக்கி நகர்கிறது. சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்ட சுல்தான் மற்றும் பலர் பாராட்டப்படுகின்றனர். இவர்கள் மசூதிகளை கட்டி, விடத்தல்தீவில் இஸ்லாமிய மதச் செம்மையையும் கலாச்சார விழுமியங்களையும் காத்து வளர்த்தவர்கள் என நினைவுகூரப்படுகின்றனர். இவர்களின் தாராள மனப்பான்மை, கூட்டுப் பிரார்த்தனையின் நடைமுறைகள், மற்றும் கல்வியை மேம்படுத்திய முயற்சிகள் ஆகியவை கிராமத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்திய முக்கிய ஆதாரங்களாக பாரப்படுகிறது.
மசூதிகள் மற்றும் பள்ளிகள் கட்டப்பட்ட விதம் தொடர்பான ஒரு முக்கியமான பகுதியும் இதில் இடம் பெற்றுள்ளது. இதில் மணற்பரப்புகளில் இருந்து கற்கள் மற்றும் கட்டடப் பொருட்களை ஒழுங்காகச் சேகரித்தல், மேலும் மாணவர்களுக்கு ஒழுக்கத்தை வழிநடத்தி கற்பித்த மதிக்கத்தக்க ஆசிரியர் முகம்மது காசிம் அலீம் என்பவரை பதவிக்கு நியமித்தல் ஆகியவையும் விவரிக்கப்படுகின்றன.

கிறிஸ்தவ செல்வாக்கும் தொண்டுப் பணிகளும்

கிறிஸ்தவ மதகுருமார்களின் வரலாற்று வருகை குறிப்பிடத்தக்கதாகக் கூறப்படுகிறது. அவர்கள் சமூக செழிப்பு, கல்வி மற்றும் ஆதரவை உறுதிப்படுத்தினர். பல உள்ளூர் மக்கள் இந்த உதவிகளை எதிர்வினையில்லாமல் ஏற்றுக் கொண்டனர், மேலும் இந்த மிஷனரிகள் சமூகத்தில் எந்த கலாச்சாரப் பாதிப்பும் ஏற்படாமல் அமைதியாக விலகினர்.

இக்கதை, ரோமன் கத்தோலிக்க மதத்தின் தாக்கத்தையும், மத விழாக்கள், தேவாலயக் கட்டிடக்கலை, மற்றும் புனித வின்செென்ட் டி பால் பின்பற்றிய சமூகப் பணிகளையும் ஒளிவுமறையாமல் பதிவு செய்கிறது. அவர்கள், தேவாலயங்களை நிர்மாணித்தல், குழந்தைகளுக்கு கல்வி வழங்கல், மற்றும் நெறிமுறைமிக்க வாழ்வை ஊக்குவித்தல் போன்ற செயல்களுக்காக பெருமைப்படுத்தப்படுகின்றனர்.
பிள்ளையார் கோயிலின் ஆரம்பம் முதல் முடிவு வரை கட்டுமானத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் அவர் விவரிக்கிறார்.

கல்வி மற்றும் ஒழுக்கம் குறித்த பிரதிபலிப்புகள்
கல்வியின் முக்கியத்துவம் இக்கதையில் மீண்டும் தீவிரமாக வெளிப்படுகிறது—முதலில் அது கவிதை உருவகங்களின் மூலம், பின்னர் மரக்கிளைகளின் கீழ் செயல்பட்ட பழைய பள்ளிகளின் நினைவுகளினூடாக, அதற்குப் பிறகு தன்னிலை பெற்ற கல்வி அமைப்புகள் மற்றும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களின் சேவைகள் மூலம் விரிவடைகிறது. இந்த நூல், பல தலைமை ஆசிரியர்களின் பணியையும், அவர்கள் வழங்கிய தார்மீக வழிகாட்டலையும், குறிப்பாக அதிர்ச்சியும் மாற்றங்களும் நிரம்பிய காலங்களில் எழுத்தறிவும் ஒழுக்கமும் வளரச் செய்த பங்களிப்புகளையும், நன்றியோடு சுட்டிக்காட்டுகிறது.

விடியற்காலங்களில் விளக்குகளை ஏற்றி வைத்த ஒரு பக்தியுள்ள பெண்ணின் செயல்கள் பற்றிய நினைவு, மனதை நெகிழவைக்கும் ஒரு சித்தரிப்பாக இடம்பெறுகிறது. வறுமையும் இடம்பெயர்ச்சியும் நிலவியதுப் போதிலும், கல்வி மற்றும் ஒழுக்க வளர்ச்சிக்கான சமூகத்தின் அர்ப்பணிப்பும் உறுதியும் இவ்விதம் புதிய தலைமுறைக்கு முன்மாதிரியாகவும் சாட்சியாகவும் முன்வைக்கப்படுகிறது.

கலாச்சார மற்றும் ஆன்மீக அடையாளம்
விடத்தல்தீவுப் பொதுமக்களின் இலக்கிய மற்றும் தத்துவப் பிரதிபலிப்புகள், தேன், ஆறு, முத்து மற்றும் சங்கு போன்ற புனித உருவகங்களுக்குள் கவிதைமயமாக காட்சியளிக்கப்படுகின்றன. இச்சொல்லாக்கங்களின் வழியாக, அவர்கள் வாழ்வின் ஆன்மீக பரிமாணம் மட்டுமல்ல, கலாச்சார ஆழமும் திறம்பட எடுத்துரைக்கப்படுகிறது.

நூலாசிரியர் தீவின் மக்கள் அடையாளத்தைக் குறித்துப் இறுதியாக ஆழமாக சிந்திக்கிறார். அவர்கள், மீள்தன்மை மிக்கவர்களாகவும், சிந்தனையுள்ளவர்களாகவும், ஆன்மீக உணர்வில் ஆழ்ந்தவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். விநாயகர் வழிபாடு, பக்திப் பாடல்களைப் பாடுவது, அல்லது நிலவொளி வீசும் இரவுகளில் உணவை பகிர்ந்து கொள்வது போன்ற செயல்கள்— வாழ்க்கையை பகிர்ந்து கொள்வதின் தத்துவம் மற்றும் ஆன்மீக ஒற்றுமையின் உன்னதம்.

மூடும் தொனி
இந்த நூல், ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் நினைவுகூரல் ஆகிய மூன்றையும் ஒரே நேரத்தில் மையப்படுத்தும் புனித அழைப்புடன் முடிவடைகிறது. ஆசிரியர், விடத்தல்தீவின் பாரம்பரியத்தை நேசிக்கவும், அதன் சுற்றுச்சூழல் வளங்களைப் பாதுகாக்கவும், அதன் இனப்பெருமை மற்றும் கலாச்சார மரபுகளை உறுதியாக கடைப்பிடிக்கவும், மேலும் இன, மத எல்லைகளைத் தாண்டி இரக்கத்துடனும் இசைவுடனும் வாழ்ந்திடவும், தற்போதைய தலைமுறை மற்றும் எதிர்கால சந்ததியினருக்குச் சிந்திக்கத்தக்க அழைப்பொன்று விடுகிறார்.

50 வருடங்களை கடந்த கிராமத்தின் அடையாளம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம்

விடத்தல்தீவு வரலாற்றில் ஐக்கிய விளையாட்டு கழகத்தை உருவாக்கிய ஸ்தாபகர் முன்னாள் பங்குத்தந்தை அமரர் அருட்பணி ரெஜிஸ் இராயநாயகம் அடிகளார்.

1975 ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் நிர்வாகத்தின் முதலாவது தலைவராக யா.ஞானசீலன் அவர்களின் தலைமையிலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிப்பவனி வந்தது என்றால் அது மிகையாகாது.

மாந்தை பெருநிலப்பரப்பில் அதிகளவு இளைஞர் யுவதிகளை கொண்டு A B C என ஒரே கழகத்தில் அணிகளை கொண்டு, விளையாட்டு நிகழ்வுகளில் குறிப்பாக உதைபந்தாட்டத்திலும் வலைப்பந்தாட்டத்திலும் பல வெற்றிகளை பெற்ற எமது ஐக்கிய விளையாட்டு கழகம்.

எமது பாரம்பரியங்களை ,கிராம கலாச்சாரங்களை ,கிராம ஒற்றுமையை வலுப்பெற செய்ய முன்வருவோம். 50 வருடங்கள் கடந்தும் ,சல சலப்புகளுக்கு அஞ்சாமல் வெற்றிப்பவனி வரும் கிராமம் சார் ஒரேயொரு கழகம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஏனெனில் அதன் ஆரம்பம், ஆரம்பித்தவர், அதன் நோக்கம் என்பவையே முக்கிய காரணிகளாக சான்று பகர்கின்றன.

விடத்தல்தீவு அன்னையர் கழகம்.

விடத்தல்தீவில் உள்ள பல்வேறுபட்ட அரச அரசசார்பற்ற அமைப்புகள், சங்கங்களை போன்று ஊரிலுள்ள அன்னையர்களை அங்கத்தவர்களாக கொண்டதுதான் இந்த விடத்தல்தீவு அன்னையர் கழகம்.

கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பானது உத்தியோகபூர்வமாக பதியப்படாததும் நிர்வாக அலகுகளை கொண்டிராததுமான ஒரு அமைப்பாக இயங்கிவருவதுடன் இவ் அமைப்பின் ஊடாக பல்வேறுபட்ட பணிகள் சேவைகள் ஆற்றுப்படுகிறது .

அந்த வகையில் வீடுகளிலும், வைத்தியசாலைகளிலும் உள்ள நோயளர்களை தரிசித்தல், ஊரில் பொது இடங்களில் குறிப்பாக எமது பள்ளமடு குளம் மற்றும் விடத்தல்தீவு வைத்தியசாலை உட்பட பல பகுதிகளில் சிரமதான பணிகளை மேற்கொள்ளுதல், இறப்பு நிகழ்ந்த வீடுகளில் தேவைப்படும் அவசிய தேவைகளுக்காக உதவுதல் ,போன்ற பணிகளை தாமாகவே முன்வந்து ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அலிகார் பாடசாலை அபிவிருத்தி சங்கம் - கு.முஜம்மில்

இப்பாடசாலையானது பழமை வாய்ந்த பாடசாலையாகும். இது 1905 களில் உருவாக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 களில் முஸ்லிம்கள் இடப்பெயர்வை சந்தித்தனர். இந்த இடப்பெயர்வு வடிவமானது தென்னிலங்கையை நோக்கிய குடிப் பெயர்வாக மாற்றமடைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக 2012.01.30 வரை பாடசாலை மூடப்பட்டு காணப்பட்டது.

காடுகள் முளைத்து தளபாடங்கள் இல்லாமல் கட்டடங்கள் இடிபாடுடைய சூழ்நிலை காணப்பட்டது. 1990ற்கு முற்பட்ட காலத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கமொன்று கால சூழ்நிலைக்கேற்றவாறு அமைக்கப்பட்டு இயங்கி வந்த நிலை காணப்பட்டது. ஒரு பாடசாலையை இயக்குவதென்றால் SDS சங்கமானது பிரதான வகிபாகத்தை கொண்ட போக்கு காணப்படுகிறது. அந்த அடிப்படையில் 2012.01.30 இல் இவ்வூரைப் பிறப்பிடமாக கொண்டவரும் இப்பாடசாலையின் பழைய மாணவருமாகிய K. முஜம்மில் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்று பாடசாலையை வழிநடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதன் விளைவாக அலிகாரை மீள் அலிகாராக உருவாக்க வேண்டிய ஒரு மகத்தான பணி தேவையும் உணரப்பட்டது. யுத்த முடிவுக்குப் பின்னர் மீள் குடியேறிச் சென்ற மக்களின் நிலைமையை கருத்தில் கொண்டு மாணவர்களை சேர்க்கும் பணி ஆரம்பமானது. அந்த ஆரம்பத்துடன் 2012.01.30 இல் பாடசாலையை மீள இயக்க வைத்ததுடன் SDS சங்கம் ஒன்றும் உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த அடிப்படையில் பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும், நலன்விரும்பிகளையும் ஒன்றுசேர்த்து பிற்காலத்தில் அமைக்கப்பட்ட தகரக் கொட்டகைக்குள் கூட்டத்தை கூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு அதிபர் K. முஜம்மில் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தில் செயலாளராக ஒருவரை தெரிவு செய்யுமாறு கேட்டதற்கிணங்க பெற்றோர் சார்பாக M.B. பினுஸ்கான் அவர்கள் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். பொருளாளராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் K. முடியப்பு அவர்கள் செயற்பட்டார். பழைய மாணவர் சார்பாக கிராம சேவகராக கடமையாற்றிய A. பினுஸ்கான் அவர்களுடன் சங்க உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆக, இடப்பெயர்விற்கு பின்னர் முதல் முறையாக இப்பாடசாலையில் பாடசாலைச் சங்கம் அரம்பிக்கப்பட்டது. சங்கத் தெரிவுகளுக்கு பின்னர் அதிபர் அவர்களால் பாடசாலை தேவையை கருத்தில் கொண்டு எதிர்காலத் திட்டங்களும் நோக்கங்களும் கலந்துரையாடப்பட்டன. காடழித்தல் பிரதான நோக்கமாக கருதப்பட்டது. பாடசாலையின் எல்லைப்புறத்தை அடையாளம் இடுவதுடன் சுற்று வேலி அமைக்கவும் முடிவு எடுக்கப்பட்டது. உரிய அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கட்டிடம் ஒன்று அவசரமாக பெறப்பட பேண்டியது பற்றி கலந்துரையாடப்பட்டது. சிதைவடைந்து கிடக்கின்ற கட்டிடங்களை துப்பரவு செய்வதுடன் மாணவர் ஆசிரியர் நலன் கருதி அத்தியாவசிய தேவைகளான தண்ணீர், மின்சாரம், மலசலகூடம் போன்றவற்றை பூர்த்தி செய்வதற்கும் கலந்தாலோனைகள் மேற்கொற்பட்பட்டன. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அப்போதய அமைச்சராக இருந்த அல்ஹாஜ் றிசாட் பதியுதீன் அவர்களிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டதுடன் தொலைபேசி உரையாடலை அமைச்சருடன் மேற்கொண்டபோது குறிப்பிட்ட வேலைகளை தரமாக செய்து தருவதாக வாக்களித்தார்.

அது போலவே சில வேலைகளை அமைச்சரால் செய்து தரவும் முடிந்தது. அத்துடன் கற்றல் உபகரணங்கள், அலுவலகப் பொருட்கள், நூலகப் பொருட்கள், நீர்த்தாங்கி ஒன்று ஆகியவற்றை
பெறுதல், சிறுவர் பூங்கா அமைத்தல் தொடர்பாகவும் ஆலோசனை கருத்துப் பரிமாறலாக கலந்தாலோசிக்கப்பட்டது. இவ்வாறாக ஆரம்ப சங்கத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு சங்கத்தின் காலங்கள் முடிகின்ற பொழுது புதிய சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டன. இச்சங்கத்தின் பெயராக SDECS என புதிய பெயர் கொண்டு சங்கங்கள் உருப்பெற்றன. அச்சங்கங்களினால் கூட்டங்கள் கூட்டப்பட்டு பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கருத்துப் பரிமாறல் மேற் கொள்ளப்பட்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இப்பாடசாலைக்கு மேற்கொற்றாய் பட்டன. அத்தோடு புதிய தற்போது நடைமுறையிலுள்ள சங்கமானது 19.04.2024ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.

இச்சங்க உறுப்பினர்களாக K. முஜம்மில், அதிபர், தலைவராகவும் திருமதி A. சிபானா செயலாளராகவும் பொருளாளராக திருமதி A.சுதி ஆசிரியர் அவர்களும் சங்க உறுப்பினர்களாக திருமதி M.கொன்செய்ரா, ஆசிரியர் திருமதி F.F.M.சர்மில், ஆசிரியர் L. மதுத் இஸ்லாமிய பாட வளவாளர் வலயப் பிரதிநிதியாகவும் சங்க உறுப்பினர்களாக திருமதி ட. பஸ்மி, ம. றமீஸ்தீன், L.றினாஸ் ஆகியோர்களும் தற்போது உள்ளனர்.

பாடசாலையின் முதுகெலும்பாக உள்ள இவர்கள் பாடசாலையின் வளர்ச்சி போக்கிற்காக தங்களது பங்களிப்புகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். கூட்டங்கள் கூட்டப்படுகின்ற போது கூட்டறிக்கைகள் வாசிக்கப்பட்டு கூட்டத் தீர்மானங்களை ஆவணப்படுத்தி வைக்கப்பதுடன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த இவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் வரவேற்கத்தக்க விடயமாகக் கருதலாம். எனவே இவ்வாறாக இப்பாடசாலை SDS சங்கம் செயல்படுவதை காண முடிகின்றது.

விடத்தல் தீவும் விடத்தல் தீவு புதிய அபிவிருத்தி அமைப்பும் - யோ.கியோமர் பயஸ்

விடத்தல் தீவின் மண்வாசனை மறவாத மக்கள் பலர் புலம்பெயர் தேசங்களில் பரந்து வாழ்கின்றனர். இவர்களுள் சிலர் தாம் வசித்துவரும் நாடுகளிலுள்ள நம் உறவுகளின் நன்மை தீமைகள் பற்றி அறிந்து கொள்ளவும் சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ளவவும் வேண்டுமென்ற நோக்கில் 2019ம் ஆண்டில் ஒரு whats app குழுமத்தினை ஆரம்பித்திருந்தனர்.

இவ் குழுமத்தினூடாக பரஸ்பர உறவவுகளை தொடர்ந்துவந்த வேளை லண்டனில் வசித்துவரும் திரு. அரசரெட்டினம் நக்கீரன் என்பவருடைய எண்ணத்தில் இக்குழுமம் மூலம் நமது பிறந்த மண்ணாகிய விடத்தல்தீவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று விருப்பம் உருவானது இதனை தனது நண்பன் திரு. சோமசுந்தரம் இராசேந்திரா என்பவருடன் பகிர்ந்து கொண்டார். இவர்களிடையே பரிமாறப்பட்ட விடத்தல் தீவின் அபிவிருத்தி தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வலுவடைந்து whats app குழு நண்பர்களுடன் கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் விடத்தல்தீவு நண்பர்கள் குழு உருவாக்கப்பட்டு பலம் பெற்றது.

எனவே எமது கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் இவ் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் விடத்தல்தீவு கிராமத்தில் தற்போது வசித்து வரும் மக்களும் இணைந்து கொள்ளவேண்டும். அவ்வாறு இணைந்து கொள்ளும் போதுதான் வேலைத்திட்டங்களை நேர்த்தியாக செய்ய முடியும் என்பதனை ஏற்றுக்கொண்ட புலம்பெயர் நண்பர்கள் விடத்தல்தீவிலுள்ள (உள்நாட்டில் வசிக்கும்) மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த ஆரம்பித்தனர்.2021ம் ஆண்டு பங்குனி மாதத்தில் திரு. சோ. இராசேந்திரா என்னுடன் (யோ.கியோமர் பயஸ்) *Whats app* மூலம் தொடர்பை ஏற்படுத்தி எமது கிராமத்தைச் சேர்ந்த கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு பணியாற்றக்கூடிய நபர்களை இணைத்து குழு ஒன்றினை உருவாக்கும்படி கூறினார் இதனடிப்படையில் 2021.04.19 அன்று விடத்தல்தீவில் உள்ள எனது வீட்டில் அங்குரார்ப்பணக்கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் அமைப்பின் பிரதான மற்றும் ஏனைய நோக்கங்கள் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் குழுமத்தை உள்நாட்டில் வழிநடத்திச் செல்வதற்கான நிர்வாக அமைப்பு தெரிவு செய்யப்பட்டது.

1. தலைவராக. அருட் சகோ. சூ. ஸ்ரனிஸ்லஸ் அவர்களும்
2. செயலாளராக திரு. யோ. கியோமர் பயஸ் (அதிபர்) அவர்களும்
3. பொருளாளராக திரு. வை. சுராங்கன் (MSO) அவர்களும்
4. உப தலைவராக திரு. அ. டேவிற் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக
1. திரு. சா. அருட்பிரகாசம்
2. திரு. அ. றெஜிஸ் ராசநாயகம்
3. திரு. க. துரைராஜா
4. திரு. வி. சுதாகர்
5. திருமதி. பா. கனகசோதி (SPM) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

குழு ஆலோசகர்களாக
1. அருட்பணி. எ. டெனி கலிஸ்ரஸ்
2. அருட் சகோ. அ. மனோரஞ்சிதன்
3. அருட் சகோ. சி. ஞான சேகரன்

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து குழுவுக்கான பெயர் சூட்டுதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நீண்ட கருத்துப் பரிமாற்றங்களின் பின் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பு (VNDO) என்னும் பெயர் பரிந்துரைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொரோனா

இதனைத்தொடர்ந்து VINDO தனது பணிகளைத் தொடர்ந்தாற்றியது. இப்பணிகளில் விடத்தல்தீவின் நுழைவாயில் பிரதான வளைவு ஒன்றினை அமைப்பதே முக்கியத்துவமும் முதன்மையும் கொண்டதாய் ஆராயப்பட்டு வந்தது. ஆயினும் 2019 தொடங்கி பல வருடங்கள் நீடித்த கொரோனா (Covid 19) தாக்குதலுக்கு உள்ளாகி வறுமை நிலையை சந்தித்த மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டதனால் முதலாவது வேலைத்திட்டமாக. விடத்தல் தீவூ, சன்னார், பெரியமடு, மன்னார் ஜோசவாஸ் நகர் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் வசித்து வந்த விடத்தல்தீவு உறவுகளுக்கு உலருணவுப் பொருட்களை விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பு வழங்கி உதவியது.

வெள்ளப்பெருக்கு

அதனைத் தொடர்ந்து புயல் மற்றும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட விடத்தல்தீவு ஜோசப்வாஸ் நகர் மற்றும் புத்தளம் வாழ் உறவுகளுக்கு உணவு சமைத்து வழங்கும் பணிகளில் புதிய அபிவிருத்தி அமைப்பு பணிபுரிந்தது.

கல்வி

மேலும் 2022, 2023ம் ஆண்டுகளில் விடத்தல்தீவவு மாணவர்களின் கல்வி நலன் கருதி மாலை நேர மேலதிக வகுப்புகளை ஒழுங்கமைத்து தரம் 05, தரம் 10, 11 மற்றும் தரம் 12, 13 ஆகிய வகுப்புகளுக்கு ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான ஊதியத்தினை வழங்கி கல்வி வளர்ச்சிக்கு உதவியது. இதேபோன்று ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த காலையுணவு இடைநிறுத்தப்பட்டதனால் குறிப்பிட்ட 6மாத காலத்திற்கு அம்மாணவர்களுக்கான காலை இடையுணவை வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் போசாக்கு விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டது. இக்கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடன் VNDO வின் தலைவர் அருட் சகோ. எ. ஸ்ரனிஸ்லஸ் அவர்களின் தலைமையில் 15 மீளாய்வுக் கூட்டங்களும் நடத்தப்பட்டு ஆலோசனைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் பெற்றோர்களுக்கான 05 விழிப்புணர்வுக் கூட்டங்களும் இடம்பெற்றது.

விளையாட்டு

விடத்தல்தீவின் உதைபந்துக் கலையை எதிர்காலத்திலும் தொடர்ந்து எழுச்சி பெறச் செய்யும் நோக்குடன் 12 வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகளை இணைத்து VIFA Academy என்னும் பெயரில் பயிற்சி மையம் ஒன்று உருவாக்கப்பட்டு உதைபந்தாட்டப்பயிற்சிகளும் சினேகபூர்வ போட்டிகளும் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி மாணவர்களுக்கு உதவியாக திரு. இ. எட்வின் அமல்ராஜ் அவர்களினால் ஒரு தொகுதிகாலணிகளும் உதைபந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டது. சமைத்த உணவுகளை வழங்கும் பணிகளின் போது ஏற்பட்ட அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வாலிபன் ஒருவருக்கு விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினூடாக திரு. சோ. இராசேந்திரா என்பவர் ரூபா 25000/- அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மருத்துவர் எம். மதுரநாயகம் கால்பந்தாட்ட அகாடமி நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

சுகாதாரப்பணி

நோயாளர்களின் நலன் கருதி பள்ளமடு வைத்தியசாலைக்கு மருத்துவப் பொருட்களை பலதடவை இலவசமாக வழங்கியதுடன் மருத்துவ உபகரணங்களும் குடிநீர் வடிகட்டியும் (Water Filler) என்பனவும் VNDO வினால் இலவசமாக வழங்கப்பட்டது.

கிராம ஒருங்கினைப்பு

கிராமத்தில் காணப்பட்ட இரண்டு கழகங்களுக்கிடையிலான முரண்பாடு காரணமாக கிராமத்திற்குள் ஏற்பட்டிருந்த பிளவுகளை தீர்க்கும் நோக்குடன் கலந்துரையாடல்கள் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

கிராமத்தினை அழகுபடுத்தும்பணி

விடத்தலிதீவு பள்ளமடு பிரதான வீதியின் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்பட்ட அடர்ந்த கருவேல மரங்களை அகற்றி வீதியின் இருமருங்குகளையும் சீர் செய்ய எண்ணியதுடன் JCB இயந்திரம் மூலம் காடு அழிக்கப்பட்டது. மேலும் வீதியின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் 100 நடப்பட்டு பராமரிக்கப்பட்டது. இவ்வேலைகளை விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பு முழுவதுமாக பொறுப்பேற்று செய்து முடித்தது. நிதிவழங்கலும் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினதே. இவ்வேலைத்திட்டத்தில் மக்கள், கழகங்கள், சங்கங்கள் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் சிரமதான அடிப்படையில் சுமார் 15 தடவைகள் பணியாற்றினார்கள்.

விடத்தல்தீவை அடையாளப்படுத்தும் பிரமாண்டமான வரவேற்பு வளைவு

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினது பணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்திற்கும் மகுடம் சூட்டும் வகையில் அர்ப்பணிப்புக்களின் சிகரமாக உருவாக்கப்பட்டதே விடத்தல்தீவின் பிரதான நுழைவாயில். இப்பிரதான நுழைவாயிலை அமைக்கவேண்டும் என்னும் எண்ணத்தை வெளிப்படுத்தி அதற்கான முதலாவது நிதிப்பங்களிப்பை வழங்கியவர் திரு.இராமலிங்கம் சண்முகலிங்கம் (சக்தி) அவர்களாகும். இது 2020ம் ஆண்டில் இவரால் முன்வைப்பு செய்யப்பட்டு நிதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான இரண்டாவது நிதிப் பங்களிப்பு திரு. அரசரெட்டினம் நக்கீரனும் மூன்றாவது நிதிப் பங்களிப்பினை திரு. அரசரெட்டினம் தீபன் அவர்களும் நான்காவது பங்களிப்பினை திரு. சோமசுந்தரம் இராசேந்திரா அவர்களும் வழங்கினார்கள்.தொடர்ந்து பல விடத்தல்தீவு உறவுகள் நிதிப்பங்களிப்பினை வழங்கினர்.இதற்கு அமைய இவ்வளைவினை அமைப்பதற்கு ஆரம்பத்தில் 800,000/= ரூபாவினுள் செய்து முடிக்க தீர்மானிக்கப்பட்ட போதிலும் covid 19, வெள்ளப்பெருக்கு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பன அதன் செலவை அதிகரிக்க காரணமாய் அமைந்தது. இதனால் இவ்வளைவினை செய்து முடிக்க ரூபா முப்பத்து இரண்டு இலட்சங்கள் (SLR) விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினால் செலவிடப்பட்டது.இவ்பிரமாண்டமான வளைவிற்கான படவரைபினை இலவசமாக வரைந்து கொடுத்ததுடன் கட்டுமானப்பணிகளை அடிக்கல் நாட்டிய நாள்முதல் இறுதிவேலை முடியும்வரை எவ்வித

கொடுப்பனவுகளையும் பெறாது மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்கிய பெருமை எமது மண்ணின் மைந்தன் பொறியியலாளர் விமலேஸ்வரன் சூசைப்பிள்ளை ஆவார் என நாம் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ் அழகுறு கட்டுமானப்பணியினை நேர்த்தியாக செய்து முடித்தவர் ஒப்பந்த தாரரும் மேசனுமாகிய எமது கிராமத்தைச் சேர்ந்த திரு. அன்ரன் மரியதாஸ் ஜெயதாஸ் ஆவார். இப்பணிகளுக்கு உதவி மேற்பார்வையாளராக எமது கிராமத்தின் சிவில் பொறியியலாளர் திரு. சித்திக் சிபான் அவர்கள் கடமைபுரிந்தார்.

பார்ப்போர் அனைவரினதும் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட வனப்புமிகு பிரதான வளைவானது மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் புலன்பெயர் தேசங்களிலிருந்தும் உள்நாட்டு பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் எமது தாய் மண்ணில் வசித்துவரும் மக்கள் ஆகிய விடத்தலூர் உறவுகளாக இணைந்து மிகுந்த கோலாகலத்துடன் இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு தைத்திங்கள் 15ம் நாள் விடத்தல்தீவு அபிவிருத்தி அமைப்பின் தலைவர் அருட் சகோ. சு. ஸ்ரனிஸ்லஸ் அவர்களின் தலைமையில் பிரதம விருந்தினர் பொறியியலாளர் திரு. சூ. விமலேஸ்வரன் அவர்களால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு மதகுருக்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடத்தல்தீவின் புலம்பெயர் உறவுகள், இலங்கை வாழ் விடத்தலூர் உறவுகள் (ஜோசப்வாஸ் நகர், புத்தளம், மன்னார்) அரச, அரச சார்பற்ற அதிகாரிகள் அயலூர் பிரதிநிதிகள் என சுமார் எழுநூறிற்கு மேற்பட்டோர் பங்கெடுத்து சிறப்பித்தனர். விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் அபிவிருத்திச் செயற்பாடுகளை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தி கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கென ஆலோசனைக் குழுவொன்று பரிந்துரைக்கப்பட்டு மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது அதன் உறுப்பினர்களாக

1. திரு. சோ. இராசேந்திரா
2. திரு. அ. நக்கீரன்
3. திருமதி. வி. சுதாமதி
4. திரு. சோ. கனகேந்திரா
5. திருமதி. ஜெ. ஜனகராணி
6. திரு. இ. ஏட்வின் அமல்ராஜ்
7. திரு. யே. நோபேட் நிர்மலதாஸ்
8. திரு.எம். எம். மஸாரிக்
9. திரு. சு. தவக்குமார்
10. திரு. யோ. கியோமர் பயஸ்
11. அருட் சகோ. சு. ஸ்ரனிஸ்லஸ்
12. திரு. ம. மதுரநாயகம்
13. திரு. வை. சாரங்கன்
14. திரு. ஏ. எவ். பாயிஸ்

இவ் பிரதான நுழைவாயில் வளைவு வேலைகளின் போது பள்ளமடு – விடத்தல் தீவு பிரதான வீதிக்கு வடக்கு மாகாணத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதன் முதலாக கார்பெட் வீதி அமைக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்டது.

நிதி

மேற்படி விடத்தல் தீவு புதியஅபிவிருத்தி அமைப்பினால் 2023ம் ஆண்டு வரை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை ரூபாவில் சுமார் ஆறு மில்லியன் (600,000/-) செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதியினை எமது விடத்தல் மண்ணின் மைந்தர்களாக பிறந்து புலம் பெயர் தேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் அதிகளவு பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அதேவேளை எமது கிராமத்தைச் சேர்ந்த உள்நாட்டு மக்களும் தம்மாலான உதவிகளை வழங்கியுள்ளனர். சிறப்பாக வெளிநாட்டிலுள்ள உறவுகளிடம் நிதி சேகரிக்கும் பணியில்.

திரு. சோ. இராசேந்திரா
திரு. அ. நக்கீரன்
திருமதி. வி. சுதாமதி
திரு. சோ. கனகேந்திரா
திருமதி. ஜெ. ஜனகராணி
திரு. இ. ஏட்வின் அமல்ராஜ்
திரு. யே. நோபேட் நிர்மலதாஸ்
திரு.எம். எம். மஸாரிக்
திரு. சு. தவக்குமார் ஆகியோர் முன்னின்று உழைத்தனர். கல்விக்கான நிதியில் பெருமளவை அருட் சகோ. சு. ஸ்ரனிஸ்லஸ் (தலைவர்) சேகரித்தமையும் குறிப்பிடத்தக்கது. இறுதியாக மூன்று வருடங்களின்பின் 2024 வைகாசி மாதம் 12ம் திகதி புதிய நிர்வாகத்திடம் விடத்தல் தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டது.

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் அமைப்புமுறைச் சாசனம்

1. பெயர்: விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பு
2. முகவரி: விடத்தல்தீவு
3. செயற்பாட்டு பிரதேசம்: விடத்தல்தீவு வடக்கு (ஆ/நி11), விடத்தல்தீவு கிழக்கு (ஆ/நி13), விடத்தல்தீவு மேற்கு (ஆ/நி10), விடத்தல்தீவு மத்திய (ஆ/நி12) எனும் நான்கு கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய நிலப்பரப்பு

4. நோக்கங்கள்:
4.1. விடத்தல்தீவின் மக்களின் நலன்களை மேம்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்
4.2. விடத்தல்தீவின் பூர்வீகம் அல்லது குடிமூலம் கொண்ட குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு கல்வி, விளையாட்டு, சுகாதாரம், கலை மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான ஆதரவு வழங்குதல்
4.3. விடத்தல்தீவில் அல்லது அதன் சார்பில் பிற பகுதிகளில் நடைபெறும் மதச்சார்பற்ற, அரசியல் சார்பற்ற பொது நிகழ்வுகளுக்கு உதவல்
4.4. கிராம அபிவிருத்திக்கான சேவைகளை வழங்குதல்

5. அமைப்பின் கட்டமைப்பு:
- தலைவர் ஒருவர் பொதுக்கூட்டத்தில் பொதுச்சபையின் பெரும்பான்மையால் தெரிவுசெய்யப்பட வேண்டும்.
- பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள், தொடர்ச்சியாக இரு தவணிக்குமேல் பதவி வகிக்க முடியாது.
- தலைவர் பதவி காலத்துக்குள் வெற்றிடமாயின், உபதலைவர் இடைக்காலத் தலைவராக செயற்படுவார். மூன்று மாதங்களுக்குள் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் ஆகியோர் பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்பட வேண்டும்.

6. நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:
- தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர்
- மேலும், ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவில் குறைந்தது 2 பேர் என மொத்தமாக 10 பேர்
- மொத்தமாக 15 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இருப்பர்
-

7. சிறப்பு குழு உறுப்பினர்கள்:
- சிறப்புக் குழு ஒன்றை அமைப்பது கட்டாயம்
- இந்த குழுவினர் விடத்தல்தீவு நண்பர்கள் குழுமத்திலிருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும்
- இவர்கள் ஆலோசனைகள் முக்கியமானவை

8. நிரந்தர உறுப்பினர் தகுதி:
- விடத்தல்தீவு (வடக்கு, கிழக்கு, மேற்கு, மத்திய) கிராம சேவகர் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் குறைந்தது 5 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும் அல்லது
- பிறப்பிடமாக விடத்தல்தீவை கொண்டிருக்க வேண்டும்

9. பொதுஅங்கத்தவர் தகுதி:
- மேலுள்ள பிரிவுகளில் பூர்வீகம், வசிப்பிடம் அல்லது பிறப்பிடம் விடத்தல்தீவாக இருக்க வேண்டும்

10. உறுப்புரிமை இழப்புக் காரணங்கள்:
10.1. உறுப்பினரின் மரணம்
10.2. தன்னிச்சையான விலகல்
10.3. சங்க நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள் மேற்கொண்டு, விசாரணையுடன் பொதுசபையில் தீர்மானமிடப்பட்டால்
10.4. தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் பங்கேற்காமை

11. நிதியாண்டு:
ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

12. நிதி மூலங்கள்:
12.1. வருடாந்த உறுப்பினர் சந்தா
12.2. உள்ளக நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகள்
12.3. வெளிநாட்டு நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகள்

13. நிதி நிர்வாகம்:
13.1. நிதிகள் அரச அங்கீகாரம் பெற்ற வங்கியில் சங்கத்தின் பெயரில் வைப்பாக இருக்க வேண்டும்
13.2. கணக்குகள் ஆண்டுதோறும் ஒரு கணக்காயலரால் சோதிக்கப்பட வேண்டும்
13.3. பணம் பெறும் செயல்கள் தலைவர் மற்றும் பொருளாளரின் கையொப்பத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும்
13.4. ரூ.300,000/- வரை உள்ள தொகைகளை நிர்வாகச் சபை தீர்மானத்தின் அடிப்படையில் பெற முடியும்
13.5. ரூ.300,000/- கடந்து போனால் சிறப்புக் குழுவின் அனுமதி கட்டாயம்
13.6. நிதி நிர்வாகக் குழு கூட்டங்கள் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடைபெற வேண்டும்
13.7. நிர்வாக உறுப்பினர்களுக்கான போக்குவரத்து மற்றும் உணவுச் செலவுகள் வழங்கப்படமாட்டாது
14. கூட்டங்கள் மற்றும் தீர்மானங்கள்:
14.1. ஆண்டுதோறும் குறைந்தது ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட வேண்டும்
14.2. கூட்டத்திற்கு ஒரு மாத முன்னே அறிவிப்பு வழங்கப்பட வேண்டும்
14.3. தை மாதம் 31ஆம் தேதிக்கு முன்னர் பொதுக்கூட்டம் நடத்தப்பட வேண்டும்
14.4. நிர்வாக உறுப்பினர்களில் 2/3 பேரின் வேண்டுகோளின் பேரில் விசேட பொதுக்கூட்டம் நடத்தலாம்
14.5. தீர்மானங்களுக்காக, கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் 2/3 பங்கு வாக்களிக்க வேண்டும்

விடத்தல்தீவு மீனவர் சங்கம் – திரு பொன்ராசா றொபேட் பாலசிங்கம்

(ராஜன், தலைவர்)

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடத்தல்தீவில் மீனவர் சங்கம் இயங்கியதாக அறிய முடிகிறது. அக்காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் மூன்று சங்கங்கள் மாத்திரமே இயங்கியதாகவும், 1.முசலி 2. மன்னார் 3. விடத்தல்தீவு. இந்த விடத்தல்தீவு மீனவர் சங்கமானது பாப்பாமோட்டை முதல் வெள்ளாங்குளம் வரையான மீனவர்களுக்குத் தலைமைச் சங்கமாக இருந்ததாகவும் தெற்குப் பகுதியில் மிக முக்கியமான அமைப்பாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அக்கரையோரப் பகுதி மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் — கடலட்டை மற்றும் கடலுணவுப் பொருட்களை விடத்தல்தீவு சங்கத்தில் விற்று, தங்களுக்கு தேவையான வலை உபகரணங்களை இங்கிருந்து பெற்றுச் சென்றதாக அறிய முடிகிறது.
மேலும் இச்சங்கங்களை வடக்கு மீனவ சமாசம் (யாழ்ப்பாணம்) வழிநடத்தியதாகவும் அறியமுடிகிறது. (தகவல்: வடமாகாண கூ.ச.தலைவர்)

இக்காலப்பகுதியின் பின் சங்கத்தினை வழிநடத்தியவர்களாக திரு. அ. லூக்காஸ் (சம்மாட்டி), திரு. அ. அந்திரேஸ் (சம்மாட்டி), திரு. அடைக்கலம் (சம்மாட்டி), திரு. நீக்கிலாப்பிள்ளை (சம்மாட்டி), திரு பொன்குமார் (சம்மாட்டி) ஆகியோர் ஆவார்கள்.
இக்காலப்பகுதிகளில் கடலில் மேற்கொள்ளப்பட்ட தொழில்கள் வத்துக் களங்கட்டி திருக்கை வலை மற்றும் விற்பனைச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

1ம் பொருள் – வலைகள்
திடு வலை, மணல் வலை, போன்ற தொழில்கள் அக்காலப் பகுதியில் முதன்மையான மீன்வள தொழில்களாக காணப்பட்டன. அக்காலத்தில் இயந்திரங்கள் இல்லாதபடியால், பாய்வளல்கள் மட்டுமே பயன்பட்டதாக அறிய முடிகிறது.அக்காலப்பகுதியில் தானி உமாமை சுற்றி கல் அணை கடலுக்குள் நுழையாமலே கட்டப்பட்டதாக அறிய முடிகிறது. (1958–1987 க்குள்).
இக்காலப் பகுதியில் தான் அருகிலுள்ள சணல் எனும் இடத்தில் சல் தடை கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. மன்னாரில் இருந்த அர்னால்ட் என்று அழைக்கப்படும் ஒருவர் இதற்குத் தலைவர் அல்லது முன்னோடியாக இருந்ததாகவும் அறிய முடிகிறது.

1965–1970 காலப் பகுதியில் சங்க நிர்வாகம் மாற்றமடைந்து, திரு ஞானமணி அண்ணர் தலைமையில் திரு அ. லூக்காஸ் (சம்மாட்டி), திரு தேவசகாயம் (சம்மாட்டி), திரு நீக்கிலாப்பிள்ளை (சம்மாட்டி), திரு. ஆ மரியாம்பிள்ளை (சம்மாட்டி) போன்றோர் உறுப்பினர்களாக இருந்த நிர்வாகக் குழுவின் கீழ் இது ஒரு சிறந்த அமைப்பாக இயங்கியது.
இக்காலப்பகுதியில் இன்று இருணேர்படாசல் என்ற இடத்தில் இருக்கும் காப்பர் பந்து பொலிசு நிலையம் இருந்த இடம் சிரமமான பணி மூலம் சிறிய பாசன நிலமாக ஆழப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
1970 முதல் 1980 வரையிலான காலப்பகுதியில் தொழில் மாற்றமடைந்தது. இக்காலத்தில், இயந்திரப் படகுகள், வெளியிணைப்பு இயந்திர வள்ளங்கள்தொழிலுக்கு செல்லத் துவங்கின; வெள்ளாங்குளம் போன்ற இடங்களில் இருந்து மக்கள், கட்டுப்பாட்டு விதிகளின்றி மீன்பிடி முயற்சிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், “நண்டு வலை” எனப்படும் புதிய தொழில்நுட்ப வலை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் வழிச்சல் வலை, கண்டி வலை ஆகியவையும் காணப்பட்டன்
இக்காலத்தில் சங்கம் பதியப்படாமலே இயங்கி வந்துள்ளது.

1965 முதல் 1970 காலப்பகுதியில், ஞானமணி அண்ணல், லூக்கேசர், நீக்கியாப்பிள்ளை, தேவசகாயம் போன்ற சம்மாட்டிமார் இச்சங்கத்தை நடத்தி சென்றதாகவும் நாவற்கரைத்தீவில் இச்சங்கம் செயல்பட்டதாகவும், 1975 காலப்பகுதியில் யாக்கோப்பு சம்மாட்டி தலைமையின் கீழ் இச்சங்கம் இயங்கியதாகவும் கூறப்படுகிறது. அக்காலப் பகுதியில், தற்போது இருக்கும் காபர் பகுதியில் அவருடைய படகையும் மற்றும் சங்கத்திற்கு சொந்தமான படகுகளையும் கட்டுவதற்காக, மண்வெட்டி மூலம், ஆட்களை சிரமதான முறையில் சேர்த்துக்கொண்டு கட்டியதாக அறியப்படுகிறது.
(தகவல்: நியூலெவல் ஆட்டர் ஞானமணி அண்ணர்)
1975 முதல் 1980 வரை, இச்சங்கம் செல்வராசா சம்மாட்டி,, திரு நாயக் கோன், திரு. சான் போன்றோரின் தலைமையில், கிராமிய மீனவர் சங்கமாக இயங்கியது. (தகவல்: கிராமிய மீனவர் அமைப்பிற்கான வங்கி புத்தகம்)

1980 பின்னர், சங்கமானது திரு. செல்வராசா சம்மாட்டி தலைமையில், மீனவ கிராமிய அமைப்பாக பதியப்பட்டது. இவர்களின் சங்கம் சிறிது காலமே இயங்கி, 1981ம் ஆண்டில் மீண்டும் நிர்வாகம் மாற்றி அமைக்கப்பட்டது. அந்த நிர்வாகம் அட்டை ஏற்றுமதி சங்கத்திற்கு மானியமாக வழங்கப்பட்ட நான்கு படகுகள் மூலம் கிடைத்த வருமானத்தில், வலை வியாபாரம் மற்றும் மீன் ஏலம் மூலமாக வருமானம் ஈட்டியதாகவும், இவை சங்க உறுப்பினர்களுக்கு இலகு கடன் முறையில் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
ஆனால், இதுவரை காலமும் சங்கத்திற்கென்று ஒரு நிரந்தர கட்டிடம் இல்லாதபடியால், சங்கமானது பொதுக்கட்டிடங்களிலேயே கூட்டங்களை நடத்தி வந்தது என்பது அறியத்தக்கது.
இந்நிர்வாகத்தில் முகாமையாளராக திரு சி. அண்ணல், தலைவராக திரு. சி.அன்ரன், தலைவராக திரு. யுவானிஸ் அவர்களும் ஆகியோர் இருந்தனர்.
இச்சங்கத்தில் அட்டை பெற்றவர்கள் நிரந்தர உறுப்பினர்களாகவும் இருந்ததாகவும், இச்சங்கம் கூட்டுறவுத்துறைக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்பின் நிர்வாகம் மாற்றமடைந்து திரு அல்போன்ஸ் மாஸ்டர் தலைவராகவும், திரு அ. யோசப் முகாமையாளராகவும் திரு. அன்ரன் செயலாளராகவும் இருந்தனர். அந்நேரத்தில், அட்டை ஏற்றுமதி கருவாடு மீன் கொள்முதல் நடவடிக்கைகளில் சங்கம் ஈடுபட்டிருந்ததாக அறியப்படுகிறது.
1983 யூலை கலவரம் காரணமாக, சூழ்நிலை மிக மோசமாக மாறியதால், சங்கத்தினரால் சரியான முறையில் செயற்பட முடியவில்லை.
1985–1986 காலப்பகுதியில், மீண்டும் சங்கம் புனரமைக்கப்பட்டு, திரு. இசக்கியேல் தலைமையில், திரு சு. அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ், திரு முத்திராசா ஆகியோர் கணக்காளராகவும், வாரிய உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

பின்னர், அச்சங்கமானது 1989ம் ஆண்டு மேற்கு மீனவர் கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டது. பெருங்களிப்பற்று மாந்தை மேற்கு பிராந்தியத்தில் பதியப்பட்ட முதல் சங்கமாக விடத்தல்தீவு சங்கமே இருந்தது. அப்போது 120 அங்கத்தவர்களுடன் இச்சங்கம் பதியப்பட்டது.

அந்த நேரத்தில், IRO அலுவலர்கள் மற்றும் வெளிநாட்டு உதவியாளர்களுடன் இச்சங்கம் இணைந்து செயல்பட்டது.
1991இல் நிர்வாகம் மாற்றப்பட்டது. புதிய நிர்வாகத்தில் திரு. யா. ஞானசீலன் தலைவராகவும் திரு. றொபேட் பாலசிங்கம் செயலாளராகவும் திரு நெவிலஸ் முகாமையாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அக்காலப்பகுதியில், அச்சங்கமானது தொழிலாளர்களிடம் இருந்து 1 சி.மீனிற்றுக்கு 1 ரூபாய் இறை வீதம் அறவிட்டு, அவ்வருமானத்தை அனுசரிப்பு முறையில் கடனாக வழங்கி, ஆயுள் காப்பீடு, வலை உபகரணங்கள், விற்பனை போன்ற சேவைகளை முன்னெடுத்துச் சென்றது.
அதன்பின், 1994ஆம் ஆண்டு நிர்வாகம் மாறியபோது, அந்நிருவாகத்தில் திரு பொ. யேசுராசா தலைவராகவும் திரு. கூ.பீற்றர் செயலாளராகவும் திரு இ. கோட்வின் முகாமையாளராகவும் இருந்தனர்.
இவர்கள், முன்னர் இருந்த சங்கத்தின் நடைமுறைகளையே பின்பற்றி சங்கச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.
1994ல் ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக, அச்சங்கமானது சில காலம் இயங்க முடியாமல் இருந்தது.

2010 மீள்குடியேற்றத்தின் பின்னர், இச்சங்கம் சீராக இயக்கப்படவில்லை. அதிகாரப்பூர்வ பதிவுகளும் சரியாக பராமரிக்கப்படவில்லை.

2017இல், புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டபோது,

- திரு டிலீப்குமார் தலைவர்,
- திரு எ. எடிசன் செயலாளர்,
- திரு அ. அருள்நேசன் பொருளாளராகப் பொறுப்பேற்றனர்.

இக்காலப்பகுதியில் 79 உறுப்பினர்கள் இச்சங்கத்தில் இருந்தனர். அதன்பின் சங்க வளர்ச்சிக்காக ஓர் அங்கத்தவரிடமிருந்து ரூ.100 நன்கொடையாகப் பெற்றுத் திரும்பப் பெறும் முறையில் பயன்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் மீள்குடியேற்ற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. ஏற்கனவே இருந்த பழைய காபர் புனரமைக்கப்பட்டது. அத்துடன் அருநோன்டா சணலும் புனரமைக்கப்பட்டது.
அதன்பின் 2019இல், புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டபோது,
திரு.செ.சத்தியதீபன் தலைவராகவும்

- திரு.யான்சன் பொருளாளராகவும்,
- திரு எ. எடிசன் செயலாளராகவும் பொறுப்பேற்றனர்.

அதனைத் தொடர்ந்து, 2021இல், திரு.சி.சுரேஸ் தலைவராகவும்

- திரு அலன் நிர்மல், பொருளாளராகவும் திரு S. சத்தியதீபன் செயலாளராகவும் புதிய நிர்வாகம் பதவியேற்றது.

அந்த நேரத்தில், 200க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இச்சங்கத்தில் இருந்தனர்.
இவர்கள் காலப்பகுதியில், மண்ணெண்ணை விற்பனை மூலமாகவும், கம்பு வியாபாரம் மூலமாகவும் வந்த ஊருமானத்தில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றன.
2023 ஆம் ஆண்டில், புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.
தற்போது,

- திரு ரொபெட் பாலசிங்கம் தலைவராகவும்
- திரு. ப. சுலைக்சன் செயலாளராகவும்
- திரு. வ.நிரோஜன் பொருளாளராகவும் செயலாற்றுகின்றனர்.

சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது 300 உறுப்பினர்கள் இச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜோசவாஸ் மீனவர் சங்கத்தின் வரலாறு - செபமாலை யூட் றோசர்

விடத்தல்தீவில்புதியமீனவர்சங்கத்தின்நிர்வாகம்தெரிவு செய்யப்பட்டது.அதன்நிர்வாகமானதுதலைவரான ஞானசீவன் என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வந்தது. அந்த வேளையில் விடத்தல்தீவின் பங்கு தந்தையான செபமாலை அடிகளாருடன் ஒரு கலந்துரையாடலானது விடத்தல்தீவு பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டது.அந்த கலந்துரையாடலின் அடிப்படையில் விடத்தல்தீவில் வசிக்கும் மக்கள் அந்த சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்கலாம் என்றும். ஏற்கனவே காணப்பட்ட இரண்டு சங்கங்களில் அங்கத்தவர்கள் இந்த புதிய சங்கத்தில் அங்கம்வகிக்க முடியாது என்றும் தீர்மானம் செய்யப்பட்டது. மேலும் பங்குத் தெரிவு நடைபெறுவது சிறந்தது என்றும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியான 'யோசப் வாஸ் நகர மீனவ கூட்டுறவு சங்கம்' ஒன்றை அமைப்பதற்காக கடற்றொழில் உதவிப் பணிப்பாளராக காணப்பட்ட திரு மிராண்டா அவர்களை நாடியபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தார். இதனை அடுத்து மன்னார் மாவட்ட கூட்டுறவு சங்கத்தின் உதவியாளராக பணியாற்றிய எமது கிராமத்தைச் சேர்ந்த திரு மங்களதாஸ் அவர்களிடம் சென்று நிர்வாகத்தினை பதிவுசெய்வதற்கு முயற்சித்த போது அவரும் பதிவு செய்வதற்கு தனது மறுப்பினை தெரிவித்திருந்தார்.
அதன்பின்னர் அங்கு இருந்த இராணுவ அதிகாரியிடம் விடத்தல்தீவில் யோசப் வாஸ் நகர மீனவ கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டபோது அவர் கூட்டுறவு உதவியாளரை அழைத்து கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்ட பின்பும் கூட அவர் சங்கத்தின் பதிவினை மேற்கொள்வதற்கு மறுத்தார். இதனைத் தொடர்ந்து உப்புகுளம் மீனவ சங்கத்துடன் எமக்கு ஏற்பட்ட பல முரண்பாடுகள் என்பன உச்ச நிலையை எட்டியதன் காரணமாக 2010.06.24 ஆம் திகதி மன்னார் மாவட்ட செயலகத்தில் பல அதிகாரிகள் முன்னிலையில் மீனவ கூட்டுறவு சங்கம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.விடத்தல்தீவில் இருந்து இடப்பெயர்ந்த போது விடத்தல்தீவு மேற்கு மீனவ கட்டுமான சங்கத் தலைவராக காணப்பட்ட திரு P. பேசுராதா அவர்கள் தலைமையின் கீழ் நிர்வாகமானது செயற்பட்டு வந்தது. இந்த நிர்வாகமானது பேசாலை நலன்புரி நிலையத்திலும் சில காலம் செயல்பட்டு வந்தது.

அந்நிலையில் பள்ளிமுனை துறையின் ஊடாகவே இம் மக்கள் தொழில் புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டில் புதிய நிர்வாகமானது தெரிவு செய்யப்பட்டது. அதில் திரு S. அயன் அவர்கள் தலைவராகவும், திரு S. அந்தோனி பிள்ளை அவர்கள் செயலாளராகவும் பொறுப்பேற்று செயலாற்றினர். 2000 ஆம் ஆண்டு பள்ளிமுனை துறையின் ஊடாக எமது மீனவர்கள் தொழில் செய்வதற்கு ஆர்வம் இல்லாத நிலையிலிருந்ததால் பள்ளிமுனையிலிந்து கொண்டுவரும் மீன்களை ஏற்பதற்கு தயங்கினர். இதன் காரணமாக மன்னார் நகரத்தின் இராணுவ அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் எமது நிர்வாக அங்கத்தினர்கள் இராணுவ அதிகாரியினால் அழைக்கப்பட்டு பள்ளிமுனை துறையில் இருந்து தொழில்கள் செய்வதை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் மன்னார் பாலப்பகுதியில் எமது மீனவர்களுக்கு தனியார் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.
இதன் விளைவாக மன்னார் பாலப்பகுதியில் உள்ள பனங்கட்டிக்கொட்டு மீனவர்கள் பயன்படுத்தும் பகுதியில் எமது மீனவர்களும் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தனர்.

தொடர்ச்சியாக 2001ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் புதிய நிர்வாகத் தேர்வில் லதிரு S. நோயல் அவர்கள் தலைவராகவும், திரு S. அத்தியகாந்தன் அவர்கள் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வேளைகளில் பாலப்பகுதியில் தொழிலில் ஈடுபடும்போது கடற்படையினர் சில நேரங்களில் தாமதமாக கடலுக்கு செல்வதற்கு அனுமதித்ததனாலும், எமது மீனவர்களும், அதிகமான எண்ணிக்கையில் காணப்பட்ட பனங்கட்டிகொட்டு மீனவ தொழிலாளர்கள் காலையில் 8.30 மணிக்கு தொழிலுக்கு செல்ல வேண்டியது அவசியமாகக் கருதப்பட்டது .இதனால் கொந்தம்பிட்டி பகுதியில் சில கிராம வியாபாரிகளான மெலிரேஸ் (பைப்), இஸ்மாயில், காப்பேற்றாள் ஆகியோர் வழிகாட்டியதாகக் கூறி சில சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்தவர்களால் வரிகள் விதிக்கப்பட்டதையும், வாடிக்கையாளர்களால் செலுத்தப்பட்ட வரிகளைச் சிக்கலாக மாற்றியதன் காரணமாக முறையான தீர்வுகள் தேவைப்பட்ட நிலையில்2003ஆம் ஆண்டு புதியதொரு நிர்வாகமானது தெரிவுசெய்யப்பட்டது. இதில் திருS. யேசுரேன் அவர்கள் தலைவராகவும், திரு யா. ஞானசீலன் அவர்கள் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதன்பின் நாட்டில் நிலவிய மோதல்நிலைகள் காரணமாக விடத்தல்தீவு மக்கள் இடம்பெயர்ந்து சென்றதன் பின்னர் விடத்தல்தீவு மேற்கு மீனவக் கட்டுமான சங்கமானது விடத்தல்தீவில் இயங்க வேண்டும் என விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவின் பொறுப்பாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது. இதனடிப்படையில் 2005ஆம் ஆண்டு விடத்தல்தீவில் வசிப்பவர்களில் இருந்து யோசப்பாய்நகர் பகுதியில் வசிப்பவர்களால் மேற்கு மீனவ கூட்டுறவு சங்க அங்கத்தவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
அதனடிப்படையில் தலைவராக விடத்தல்தீவில் வசித்த திரு S. கிறிஸ்தோப்பர் அவர்களும் , செயலாளராக திரு பூ. யூத்திராஉன்,அவர்களும் மற்றும் யோசப்பாய்நகர் பகுதியில் இருத்து உபதலைவராக திரு இ.எமன் யோசப் அவர்கள் , உபசெயலாளராக திரு S. பூற்றோகர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச் செயலாளருடன் ஆலோசனைகளை மேற்கொண்டு மேற்கு பகுதியில் நிரந்தர மீன்வள இறங்குமிடம் ஒன்றுக்காக எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 10.08.2005 அன்று பிரதேச செயலாளருக்கு அதிகாரப்பூர்வமாக கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டது. அதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையின் வடக்கே மற்றும் காட்டுப்பன்றிவாசலின் மேற்கே உள்ள கடற்பகுதியினை யோசப்பாய்நகரில் உள்ள மீனவர்கள் இறங்குமிடமாக பயன்படுத்துவதற்கான முன்மொழிவானது மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 22.08.2005 அன்று தற்காலிகமாக இறங்குமிடத்மிற்கான அனுமதியானது வழங்கப்பட்ட குறிக்கும் பூரண அனுமதி பத்திரமானது எங்கள் நிர்வாகத்திற்கு D/KK/103 எனும் கடித்தலைப்பின் இலக்கத்தில் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 25.08.2005 அன்று அந்த பிரதேசத்தில் இறங்குமிடம் அமைப்பதற்கான நில ஆய்வானது மாவட்ட பணிப்பாளர் திரு ஓனியன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவருடன் மன்னார் பிராந்திய கடற்றொழில் பரிசோதகரான திரு S. பவானி அவர்களும் இணைந்தனர்.
இந்த ஆய்வின் அடிப்படையில் அதற்கான வரைபடமானது 25.08.2005 அன்று பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆரம்பகட்ட சேவைகளுக்காக தேவையான இடத்தை சமாளிப்பதற்காக J.C.P. இயந்திரம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக பெருந்தொகையான செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்நிலையிலே 30.08.2005 அன்று பிரதேச செயலாளரால் அந்த திட்டத்தினை தற்காலிகமாக நிறுத்துமாறு எமக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் கடற்றொழில் உதவிப் பணிப்பாளருடன் மேற்கொண்ட கலந்தாலோசனையின் படி கொந்தைப்பிட்டி பிரதேசமானது இலங்கை மீன்பிடித் துறைமுகத்தின் கூட்டுத் தாபனங்களின் பகுதியாக காணப்படுவதனால் அப்பகுதியிலுள்ள கரையைப் பயன்படுத்த அனுமதி வழங்க முடியாது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரினால் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க அதிபரிடம் இவ் விடயம் தொடர்பாக முன்வைத்தபோது இப்பிரச்சனையை தீர்ப்பதற்காக மேற்கு பகுதியில் இடமளிப்பதற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் 14.03.2006 அன்று கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார். அதனடிப்படையில் சிலோன் மீன்வள துறைமுகங்களின் கட்டுமானத்திற்காகவும், மேற்கு பகுதியில் மீன்வளக் கலங்கரை நங்கூரம் அமைப்பதற்காகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.இதன் காரணமாக இலங்கை மீன்வள கட்டுமானத் திணைக்களத் தலைவர் 20.06.2006 அன்று கொந்தைப்பிட்டி கரையோரத்தில் தற்காலிகமாக மீன்பிடி கலங்கரை நங்கூரம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கினார். இதனடிப்படையில் பிரதேச செயலகத்தின் ஊடாக வரைபடம் பெறுவதற்கான அனுமதி கோரப்பட்டது. அதன் பேரில் வவுனியா நில அளவைத் திணைக்களத்தினால் 16.10.2006 அன்று வரைபடமானது எமக்குக் கையளிக்கப்பட்டது. இந்த வரைபடத்தின் அடிப்படையில் கொந்தைப்பிட்டி பகுதியில் உள்ள நிலப்பரப்பானது எமக்குத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை எல்லைப்படுத்துவதற்காக நில அளவையாளர் மற்றும் பிரதேச செயலகத்தின் காணிக்கிளை அதிகாரிகள் செயல்படத் தொடங்கியபோது, உப்புக்குளம் மீனவ சங்கத்தினால் அதனைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் புதிய நிர்வாகமானது தெரிவுசெய்யப்பட்டது. இதில் திரு A. ஏபிரகாம் அவர்கள் தலைவராகவும், யோசப்பாய் நகரைச் சேர்ந்த திரு தெ. பிரேம்குமார் மற்றும் திரு நஸ்ரின் ஆகியோர் உபதலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருந்தபோதும் உப்புக்குளம் மீனவ சங்கத்துடனும் எமது ஊரிலுள்ள மீனவர்களுடனும் ஏற்பட்ட முரண்பாடுகள் தீவிரமாகவே காணப்பட்ட அதே வேளையில் நாட்டில் மோதல் நிலையானது தீவிரமாகி இராணுவக் கட்டுப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியதன் காரணமாகவும் தொழிலில் ஈடுபடுவது சில நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. தொழில்களானது கடற்றொழில் திணைக்களத்தின் ஆலோசனைக்கு ஏற்பவே முன்னெடுக்கப்பட்டன.

மேலும் 2009ம் ஆண்டு மோதல்நிலையானது முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் மன்னார் நகரத்து இராணுவ அதிகாரி யோசப்பாய் நகருக்கு வருகைதந்து அங்குள்ள மீனவர்களிடமிருந்து குறைகள் மற்றும் எதிர்வினைகளை கேட்டறிந்தார். அதன் அடிப்படையில் உப்புக்குளம் மீனவ சங்கத்தால் எமக்கு வழங்கப்பட்ட அனுமதிகளை இனிமேல் வழங்கக்கூடாது என்றும், எமக்கும் உப்புக்குளம் சங்கத்திற்கும் இது தொடர்பாக அதிகாரப்பூர்வமான பணிப்புரை வழங்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து விடத்தல்தீவு மக்கள் முகாமுக்கு திரும்பியபோது முன்னர் காணப்பட்டது போல கலப்பு நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் என யோசப்பாய்நகர் சிவமீனவ நிர்வாகிகள் மற்றும் பங்குத் தந்தை யூட்ரமஸ் அடிகளார் தலைமையில் அதிகாரிகளை சந்திப்பதற்கு சென்றோம்.

காட்சிப்படுத்தப்பட்ட நிலம் மன்முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 08.03.2019 அன்று இவ்வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது மன்னார் மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் பாப்பமோட்டை பிரதேச செயலாளர் ஆகியோர் இந்நியாயத் தீர்வில் திருப்தி இல்லை என பலவிதமான காரணங்களை முன்வைத்தனர்.அதனை தொடர்ந்து 04.11.2019 அன்று கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1 கி.மீ மற்றும் 700 மீட்டர் ஆகிய இடங்கள் உறுதி செய்யப்பட்டு இவை 5 வருடங்கள் மட்டுமே பயன்படுத்துவதற்கு நகர மேன்மை மீன்பிடியில் ஈடுபடலாம் எனும் ஆர்.வே. ஆணையின் கீழ் அனுமதியானது வழங்கப்பட்டது.

அதன் பின் 2019ம் ஆண்டின் புதிய நிர்வாகத்தில் திரு. S. யூட்ரோசர் அவர்கள் தலைவராகவும், திரு. S. கொலஸ்ரீன் அவர்கள் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். இந்த நிர்வாகமானது AR வழக்கின் தீர்ப்பினை மாற்றியமைத்ததாகக் கருதி HC/MN/REV/02/2020(EB) எனும் மேல் முறையீட்டினை மேற்கொண்டது. அதன் பிரகாரம் அப்பகுதி எங்களுக்கே சொந்தம் என எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.இதனையடுத்து கோத்தப்பிட்டி பகுதியில் இலங்கை மீன்பிடி துறைமுகங்களின் கூட்டுத்தாபனத்துடன் சொந்தமான காணியை குத்தகைக்கு பெறும் நோக்கில் அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டதுடன், மீனவர் சங்கம் புதிதாக அமைக்கப்படுவதற்காக, இலங்கை மீன்பிடி துறைமுகங்களின் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் அமைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
15.01.2020 அன்று யோசப்புவாயிற்றார் மீளவை கூட்டுறவு நிலையம் MN 355 இல் பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவிலக்கம் ஆகும். இதன் தலைவராக திரு. S. யூட்ரோசர் மற்றும் செயலாளராக திரு. S. கொலஸ்ரீன், பொருளாளராக திரு. A. பாஸ்கரதாஸ் நியமிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக கொந்தம்பிட்டி வாடியின் வழக்கானது 33604 என்ற வழக்கு எண்ணில் தொடர்ச்சியாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் திரு. அத்தோனிப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், திரு. கொலஸ்ரீன் அவர்கள் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாகத்தின் செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டு பி. கிங்ஸ்லி அவர்கள் தலைவராகவும், செ. அமலராஜ் அவர்கள் செயலாளராகவும் காணப்பட்ட காலப்பகுதியில் பாப்பாமோட்டை மேற்குப் பகுதிகளில் எமது

மீனவர்களுக்கு 1990 ஆம் ஆண்டு கடல் தொழில் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் வழங்கப்பட்ட இடம் தொடர்பாக 200 குடும்பங்களுக்கான சுமார் 5 ஆயிரம் சதி வலைகள் கடற் கரையில் இருந்து அகப்பட்ட வேளையில் 18 மீனவர்களால் சட்டவிரோதமாக அப்பகுதியின் கடல் எல்லைக்குள் தொழிலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு AR 169 என்ற வழக்கு எண்ணின் மூலம் நீதிமன்றத்தில் வழக்கு பதியப்பட்டது.

இவ்வழக்கில் எமது சார்பில் திரு. அன்ரன் புலிநாயகம் அவர்கள் சட்டத்தரணியாகவும், இதனுடன் தொடர்புடைய 55 நபர்கள் சார்பாக ஜெனரல் யோகா ஆகியோர் சட்டவாதங்களாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வாதிட்டனர். மாவட்ட நீதவான் நீதிபதியால் “எந்த பகுதியிலிருந்து அவர்கள் அகப்பட்டார்களோ அந்த பகுதியைச் சேர்ந்த மீனவர்களிடம் மீண்டும் அந்த இடத்தை ஒப்படைக்க வேண்டும்” எனவும், இது இரு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சனை என்பதன் அடிப்படையில் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் கடல் தொழில் திணைக்களம் ஆகியவற்றுடன் முறையாகச் சந்தித்து நீதி மற்றும் நியாயத்திற்கேற்ப தீர்வு காண வேண்டும் எனவும் கூறப்பட்டது. இதன் அடிப்படையில் அரசாங்க அதிபரின் தலைமையில் 2018.06.15 அன்று பல தரப்புகளுடன் ஆலோசிக்கப்பட்டது. பல திசைகளிலிருந்து வடக்குப் பக்கம் வரை ஒரு நீண்ட பகுதியில் மோதல் ஏற்படும் என்பதால் ஒரு வழிவகை திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 11.7 கி.மீ. அளவிலான பகுதி ‘களப்பு பகுதி’ எனவும், அதன் ஒரு கி.மீ. பகுதி (சீலாக்கம்) எனவும் தீர்மானிக்கப்பட்டது.
இந்த திட்டத்தின் பிரகாரம் அந்த ஒரு கி.மீ. பகுதியானது பாப்பாமோட்டை மீனவர்களுக்கும், அதன் 700 மீட்டர் யோசப்புவாயிற்றார் மீனவர்களுக்கும் வழங்கப்பட்டது.

எமது சங்கதின் பிரதிநிதிகளால் இது மறுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் எமது சங்கத்தின் உபசெயலாளர் திரு S. பத்மநாதராஜா அவர்களால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் மணியன்துறையில் காணப்பட்ட எமது மீனவருக்குச் சொந்தமான வாடிகள் என்பன உப்புக்குளம் பகுதியில் வசிப்பவர்கள் சிலரால் இடையூறு செய்யபட்டு தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக அன்று மாலை மணியன்துறையின் வாடி உரிமையாளர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது. இம்முறைப்பாட்டின் பின்னர் 16.07.2021 அன்று மன்னார் நீதிமன்றத்தில் வழக்காக முன்வைக்கப்பட்டது. எமது சார்பாக இனாமிப்பு அவர்கள் சட்டத்தரணியாகவும்,திரு S. புவிநாயகம் அவர்கள் வழக்கை மேற்கொண்டார்.அன்றாடம் தொழிலில் ஈடுபடும் நிலவரம் தொடர்பாக பல சட்டவாதங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில் மாவட்ட நீதவான் ஒருவரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அதிகாரிகளின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், கொந்தப்பிட்டி பகுதியின் ஊடாக பொலிஸ் பாதுகாப்புடன் மீன்பிடித்தலில் ஈடுபடலாம் என்றும் உறுதிப்படுத்தினார். அதனைத்தொடர்ந்து 18.07.2021 அன்று அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் அந்த சந்திப்பின் உறுப்பினர்களான திரு S. அந்தோனிப்பிள்ளை, பன்னிப்பாஸ், ஆற்றோமல் எட்வின் மற்றும் இன்சில் ஆகியோர் கலந்து கொண்டு மன்னார் பலிகாவைப் பகுதிக்கு சென்று விளக்கம் கோரியதாக உப்புக்குளம் சார்பாக சிலர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. அதில் 21 நாட்களுக்குள் எமது மீனவர்களுக்குச் சொந்தமான ஒரு பரிந்துரைக்கப்பட்ட பகுதியை வழங்கும் வகையில் அரசாங்க அதிபருக்கு நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் மன்னார் உப்புக்குளம் பகுதியில் தீர்மானத்தை வழங்கியது.
அந்த தீர்ப்புக்கு எதிராக எமது சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிகாரிகள் அவசரமாக கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தனர். அதில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவரிடம் சென்று, பாலமுனை பகுதியில் தற்காலிகமாக மீன்பிடித்தலில் ஈடுபடுவதற்கு அனுமதியானது கோரப்பட்டது. ஆனால் ஆயர் அவர்கள் கொந்தம்பிட்டி வழியாக செல்லும் தீர்வை மட்டுமே நீதிமன்ற கட்டளை எனக் கூறி இதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனைத்து பிரச்சனைகளையும் முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஒரு குழு செயற்பட்டது. இக்குழுவில் பங்குத் தந்தை அருட்தணிநேரு அடிகளார், செ. யூட், வெ. தயானந்தன், இ. செல்வரெங்கராஜ் மற்றும் சி. நீசன் ஆகியோர் காணப்பட்டனர்.21 நாட்களுக்குள் பொருத்தமான தீர்வை வழங்குவது தொடர்பில் மன்னார் செயலகத்தில் அனைத்து மீனவர் சங்கங்களையும் அழைத்து கலந்துரையாடப்பட்டது. அதன் பின்னர் அனைத்து சங்கங்களும் தமது பகுதிகளில் எங்களை தொழில் செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனக் கூறினர்.

இதனைத்தொடர்ந்து பிரதேச செயலாளர் மூன்று இடங்களை முன்மொழிந்தார்:
1. தவயமல்லார் பழைய பாலம் – பொதுத்துவம் உள்ள பகுதி
2. தன்மாவடி இராணுவ முகாமுக்கும் திருக்கேதீஸ்வரத்திற்கு இடையிலான கீழிக்கரைசான் பகுதி
3. நாயாத்துவெளி – நாயாறு ஊடாக செல்லும் பகுதி
இம்மூன்று பகுதிகளில் ஒன்றை உடனடியாக ஏற்குமாறு பணிக்கப்பட்டது. ஆனால் இம்மூன்று பகுதிகளும்

தொழில்முறை அடிப்படையில் பொருத்தமற்றவை என எமது சங்கத்தினர் தெரிவித்தனர்.

இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுஸ்தாபனத்தின் கடன் குத்தகை அடிப்படையில் 2021.02.14 அன்று 141 நபர்களுக்கான வாடிகள் துறையாகப் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு இவை வருடாவருடம் புதுப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும், மாதம் ரூ.12,990 செலுத்தப்படுதல் வேண்டும் எனவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது.மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு 29.11.2021 அன்று தொடர்ச்சியாக அப்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி கட்டணமாக எமக்கு வழங்கப்பட்டு, அவ்வழக்கானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதே போன்று 06.09.2022 அன்று கொந்தம்பிட்டி வாடிகள் உடைய வழக்கு எண் 33604இன் குற்றவாளிகளால் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் குற்றவாளி ஒருவருக்குத் தண்டனையாக அரச செலவாக ரூ.1,500 ரூபா மற்றும் சாதாரண இழப்பீடாக வாடி உரிமையாளருக்கு ரூ.350,000 ரூபா வழங்கப்பட்டு இவ்வழக்கும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.2024.04.09 அன்று புதிய நிர்வாகத்தின் தெரிவில் திரு T. பிரேம்நாத் அவர்கள் தலைவராகவும், திரு T. பிரேம்குமார் அவர்களை செயலாளராகவும் கொண்ட புதிய மீனவ சங்கமானது தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது இது நடைமுறையில் உள்ளது.

விடத்தல்தீவில் புதிய நீர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக ஞானசீவன் தலைமையில் நிர்வாகம் செயல்பட்டு வந்தது. அதற்கிடையில், விடத்தல்தீவு பங்கு தந்தையான செபமாலை அடிகளாருடன் ஒரு சந்திப்பு விடத்தல்தீவு பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டது.

அந்த சந்திப்பின் அடிப்படையில், விடத்தல்தீவில் உள்ள மக்கள் அந்த சங்க உறுப்பினர்களாக இருக்கலாம் என்றும், ஏற்கனவே இருந்த இரண்டு சங்கங்களின் உறுப்பினர்கள் புதிய சங்கத்தில் இடம்பெற முடியாது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், பங்குத் தெரிவு நடைபெறுவது நல்லதென்றும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியான 'யோசப் வாஸ் நகர மீனவ கூட்டுறவு சங்கம்' ஒன்றை அமைப்பதற்காக கடற்றொழில் உதவிப் பணிப்பாளராக இருந்த திரு மிராண்டா அவர்களை அணுகிய போது, அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தார். இதையடுத்து, மன்னார் மாவட்ட கூட்டுறவு உதவியாளராக இருந்த எமது கிராமத்தைச் சேர்ந்த திரு மங்களதாஸ் அவர்களிடம் சென்று பதிவு செய்ய முயற்சித்தபோது, அவரும் பதிவு செய்ய முடியாது என்று மறுத்தார்.

அதனடிப்படையில், அங்கு மிருந்த இராணுவ அதிகாரியிடம் விடத்தல்தீவில் யோசப் வாஸ் நகர மீனவ கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டபோது, அதிகாரி கூட்டுறவு உதவியாளரை அழைத்தபோது கூட அந்த தருணத்தில் அவர் பதிவை மேற்கொள்ள மறுத்தார்.
இதனைத் தொடர்ந்து, உப்புகுளம் மீனவ சங்கத்துடனான எமக்கு ஏற்பட்ட பல முரண்பாடுகள் உச்ச நிலையை எட்டியதன் காரணமாக, 2010.06.24 ஆம் திகதி மன்னார் மாவட்ட செயலகத்தில் பல அதிகாரிகள் முன்னிலையில் மீனவ கூட்டுறவு சங்கம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.
விடத்தல்தீவில் இருந்து இடப்பெயர்ந்த போது, விடத்தல்தீவு மேற்கு மீனவ கட்டுமான சங்கத் தலைவராக திரு P. பேசுராதா தலைமையிலான நிர்வாகம் இயங்கி வந்தது. இந்த நிர்வாகம் பேசாலை நலன்புரி நிலையத்திலும் சில காலம் செயல்பட்டு வந்தது.

அந்நிலையில், பள்ளிமுனை துறையின் ஊடாகவே இலங்கையர் மக்கள் தொழில் புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர், 2000 ஆம் ஆண்டில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதில் திரு S. அயன் தலைவராகவும், திரு S. அந்தோனி பிள்ளை செயலாளராகவும் பொறுப்பேற்று செயலாற்றினர்.
2000 ஆம் ஆண்டு, பள்ளிமுனை துறை ஊடாக எமது கணவர்கள் தொழில் செய்வதில் விருப்பம் இல்லாத நிலையிலிருந்ததால், பள்ளிமுனை மீனை ஏற்கத் தயங்கினர். இதனால், மன்னார் நகர ராணுவ அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், எமது நிர்வாகம் ராணுவ அதிகாரியால் அழைக்கப்பட்டு, பள்ளிமுனை துறையில் இருந்து தொழில்கள் செய்வதை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது. அதன் பின், மன்னார் பாலப்பகுதியில் எமது மீனவர்களுக்கு தனியார் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இதன் விளைவாக, மன்னார் பாலப்பகுதியில் உள்ள பனங்கட்டிக் கொட்டுமீனவர்கள் பயன்படுத்தும் பகுதியில் எமது மீனவர்களும் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தனர்.
2001ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில், புதிய நிர்வாகத் தேர்தலில் திரு S. நோயல் தலைவராகவும், திரு S. அத்தியகாந்தன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அவ்வேளையில், பாலப்பகுதியில் தொழிலில் ஈடுபடுவதில் கடற்படையினர் சில நேரங்களில் தாமதமாக கடலில் அனுப்பியதாலும், எமது மீனவர்களும் பனங்கட்டி கொட்டுமீனவர்களும் அதிகமான எண்ணிக்கையில் இருந்ததாலும், தொழிலாளர்கள் காலையில் 8.30 மணிக்கு தொழில் செல்வது அவசியமாகி இருந்தது.

இதனால், கொந்தைப்பிட்டி பகுதியில் சில கிராம வியாபாரிகள், மெலிரேஸ் (பைப்), இஸ்மாயில், காப்பேற்றாள் ஆகியோர் வழிகாட்டியதாகக் கூறி சில சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்தவர்களால் வரிகள் விதிக்கப்பட்டதையும், வாடிக்கையாளர்களால் செலுத்தப்பட்ட வரிகளைச் சிக்கலாக மாற்றியதையும் அடுத்து, முறையான தீர்வுகள் தேவைப்பட்ட நிலையில், *2003*ஆம் ஆண்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது. இதில், திரு *S.* யேசுரேன் தலைவராகவும், திரு யா. ஞானசீலன் செயலாளராகவும் பொறுப்பேற்றனர்.

பொறுப்பேற்று நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன்பின் நாட்டில் போர்நிலை காரணமாக, விடத்தல்தீவு மக்கள் இடம்பெயர்ந்ததனால், விடத்தல்தீவு மேற்கு மீனவக் கட்டுமான சங்கம் விடத்தல்தீவில் இயங்க வேண்டும் என விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவின் பொறுப்பாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது. இதனடிப்படையில், *2005*ஆம் ஆண்டு விடத்தல்தீவில் இருப்பவர்களில் இருந்து யோசப்பாய்நகர் பகுதியில் வசிக்கும் நபர்கள் மேற்கு மீனவ கூட்டுறவு சங்க நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதன்படி, தலைவராக விடத்தல்தீவில் வசித்த திரு *S.* கிறிஸ்தோப்பர், செயலாளராக திரு பூ. யூத்திராஉன், யோசப்பாய்நகர் பகுதியில் உபதலைவராக திரு இ.எமன் யோசப், உபசெயலாளராக திரு *S.* பூற்றோகர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, மன்னார் மாவட்டச் செயலாளருடன் ஆலோசனை மேற்கொண்டு, மேற்கு நிரந்தர மீன்வள இறங்குமிடம் ஒன்றுக்காக எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, *10.08.2005* அன்று பிரதேச செயலாளருக்கு அதிகாரப்பூர்வமாக கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டது. அதில், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் வடக்கே மற்றும் காட்டுப்பன்றிவாசலின் மேற்கே உள்ள கடற்பகுதியை யோசப்பாய்நகரில் உள்ள மீனவர்கள் இறங்குமிடமாக பயன்படுத்துவதற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது.

22.08.2005 அன்று, தற்காலிக இறங்குமிட அனுமதி வழங்கப்பட்டதைக் குறிக்கும் பூரண அனுமதி எங்கள் அமைப்பிற்கு *D/KK/103* எனும் கடித இலக்கத்தில் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, *25.08.2005* அன்று அந்த பிரதேசத்தில் இறங்குமிடம் அமைப்பதற்கான நில ஆய்வு மாவட்ட பணிப்பாளர் திரு ஓனியன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவருடன் மன்னார் பிராந்திய கடற்றொழில் பரிசோதகர் திரு *S.* பவானி அவர்களும் இணைந்தனர்.

இந்த ஆய்வின் அடிப்படையில், அதற்கான வரைபடம் *25.08.2005* அன்று பிரதேச செயலாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆரம்ப கட்ட சேவைகளுக்காக தேவையான இடத்தை சமாளிப்பதற்காக *J.C.P.* இயந்திரம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக பெருந்தொகையான செலவுகள் நடைபெற்றன. இந்நிலையிலே, *30.08.2005* அன்று, பிரதேச செயலாளரால் அந்த திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு எமக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர், கடற்றொழில் உதவிப் பணிப்பாளருடன் மேற்கொண்ட கலந்தாய்வில், கொந்தைப்பிட்டி பிரதேசம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத் தாபனங்கள் பகுதியாக இருப்பதாலேயே அப்பகுதியிலுள்ள கரையைப் பயன்படுத்த அனுமதி வழங்க முடியாது என மன்னார் மாவட்ட அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது.

அதிபரிடம் இவ்வயத்தை முன்வைத்தபோது, இப்பிரச்சனையை தீர்ப்பதற்காக மேற்கு பகுதியில் இடமளிக்க வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் *14.03.2006* அன்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். இதனடிப்படையில், சிலோன் மீன்வள துறைமுகங்களின் கட்டுமானத்திற்காகவும், மேற்கு பகுதியில் மீன்வளக் கலங்கரை நங்கூரம் அமைப்பதற்காகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்காக, இலங்கை மீன்வள கட்டுமானத் திணைக்களத் தலைவர் *20.06.2006* அன்று கொந்தைப்பிட்டி கரையோரத்தில் தற்காலிகமாக மீன்பிடி கலங்கரை நங்கூரம் அமைக்க அனுமதி வழங்கினார். இதனடிப்படையில், பிரதேச செயலகத்தின் ஊடாக வரைபடம் பெறுவதற்கான அனுமதி கோரப்பட்டது. அதன் பேரில், இலங்கை நில அளவைத் திணைக்கள வவுனியா அலுவலகத்திலிருந்து *16.10.2006* அன்று வரைபடம் எமக்குக் கையளிக்கப்பட்டது.

இந்த வரைபடத்தின் அடிப்படையில், கொந்தைப்பிட்டி பகுதியில் உள்ள நிலப்பரப்பை எமக்குத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை எல்லைப்படுத்துவதற்காக, பிரதேச செயலகத்திலிருந்து வந்த நில அளவையாளர் மற்றும் காணிக்குழு அதிகாரிகள் செயல்படத் தொடங்கியபோது, உப்புக்குளம் மீனவ சங்கத்தினால் அதனைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2006ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது. இதில் திரு A. ஏபிரகாம் தலைவராகவும், யோசப்பாய்நகரைச் சேர்ந்த திரு தெ. பிரேம்குமார் மற்றும் திரு நஸ்ரின் ஆகியோர் உபதலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இருப்பினும், உப்புக்குளம் மீனவ சங்கத்துடனும் எமதூரிலுள்ள மீனவர்களுடனும் ஏற்பட்ட முரண்பாடுகள் தீவிரமாகவே இருந்தன. அதே வேளையில், நாட்டில் போர் நிலை மோசமாகி இராணுவக் கட்டுப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியதால், தொழிலில் ஈடுபடுவது சில நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. தொழில்கள் கடற்றொழில் திணைக்களத்தின் ஆலோசனைக்கு ஏற்பவே முன்னெடுக்கப்பட்டன.
பின்னர், 2009ம் ஆண்டு போர் முடிவடைந்ததும், மன்னார் நகர இராணுவ அதிகாரி யோசப்பாய் நகருக்கு வந்தும், அங்குள்ள மீனவர்களிடமிருந்து குறைகள் மற்றும் எதிர்வினைகளை கேட்டறிந்தார். அதன் அடிப்படையில், உப்புக்குளம் மீனவ சங்கத்தால் எமக்கு வழங்கப்பட்ட அனுமதிகளை இனிமேல் வழங்கக்கூடாது என்றும், எமக்கும் உப்புக்குளம் சங்கத்திற்கும் இது தொடர்பாக அதிகாரப்பூர்வ பணிப்புரை வழங்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து, விடத்தல்தீவு மக்கள் முகாமுக்கு திரும்பியபோது, முன்னர் இருந்ததைப் போல கலப்பு நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் என யோசப்பாய்நகர் சிலமீனவ நிர்வாகிகள் மற்றும் பங்குத் தந்தை யூட்ரமஸ் அடிகளார் தலைமையில் அதிகாரிகளை சந்திக்கச் சென்றோம்.

காட்சிப்படுத்தப்பட்ட நிலம் மன்முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 08.03.2019 அன்று இவ்வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது மன்னார் மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் பாப்பமோட்டை பிரதேச செயலாளர் ஆகியோர் இந்நியாயத் தீர்வில் திருப்தி இல்லை என பலவிதமான காரணங்களை முன்வைத்தனர்.அதனை தொடர்ந்து 04.11.2019 அன்று கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1 கி.மீ மற்றும் 700 மீட்டர் ஆகிய இடங்கள் உறுதி செய்யப்பட்டு இவை 5 வருடங்கள் மட்டுமே பயன்படுத்துவதற்கு நகர மேன்மை மீன்பிடியில் ஈடுபடலாம் எனும் ஆர்.வே. ஆணையின் கீழ் அனுமதியானது வழங்கப்பட்டது.

அதன் பின் 2019ம் ஆண்டின் புதிய நிர்வாகத்தில் திரு. ஞ. யூட்ரோசர் அவர்கள் தலைவராகவும்இ திரு. ஞ. கொலஸ்ரீன் அவர்கள் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். இந்த நிர்வாகமானது யூசு வழக்கின் தீர்ப்பினை மாற்றியமைத்ததாகக் கருதி HC/MN/REV/02/2020(EB) எனும் மேல் முறையீட்டினை மேற்கொண்டது. அதன் பிரகாரம் அப்பகுதி எங்களுக்கே சொந்தம் என எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.இதனையடுத்து கோத்தப்பிட்டி பகுதியில் இலங்கை மீன்பிடி துறைமுகங்களின் கூட்டுத்தாபனத்துடன் சொந்தமான காணியை குத்தகைக்கு பெறும் நோக்கில் அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டதுடன்இ மீனவர் சங்கம் புதிதாக அமைக்கப்படுவதற்காகஇ இலங்கை மீன்பிடி துறைமுகங்களின் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் அமைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
15.01.2020 அன்று யோசப்புவாயிற்றார் மீளவை கூட்டுறவு நிலையம் ஆN 355 இல் பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவிலக்கம் ஆகும். இதன் தலைவராக திரு. ஞ. யூட்ரோசர் மற்றும் செயலாளராக திரு. ஞ. கொலஸ்ரீன்இ பொருளாளராக திரு. யூ. பாஸ்கரதாஸ் நியமிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக கொந்தம்பிட்டி வாடியின் வழக்கானது 33604 என்ற வழக்கு எண்ணில் தொடர்ச்சியாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் திரு. அத்தோனிப்பிள்ளை அவர்கள் தலைவராகவும்இ திரு. கொலஸ்ரீன் அவர்கள் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாகத்தின் செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டு பி. கிங்ஸ்லி அவர்கள் தலைவராகவும், செ. அமலராஜ் அவர்கள் செயலாளராகவும் காணப்பட்ட காலப்பகுதியில் பாப்பாமோட்டை மேற்குப் பகுதிகளில் எமது மீனவர்களுக்கு 1990 ஆம் ஆண்டு கடல் தொழில் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் வழங்கப்பட்ட இடம் தொடர்பாக 200 குடும்பங்களுக்கான சுமார் 5 ஆயிரம் சதி வளைகள் கடற் கரையில் இருந்து அகப்பட்ட வேளையில் 18 மீனவர்களால் சட்டவிரோதமாக அப்பகுதியின் கடல் எல்லைக்குள் தொழிலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு AR 169 என்ற வழக்கு எண்ணின் மூலம் நீதிமன்றத்தில் வழக்கு பதியப்பட்டது.

இவ்வழக்கில் எமது சார்பில் திரு. அன்ரன் புலிநாயகம் அவர்கள் சட்டத்தரணியாகவும், இதனுடன் தொடர்புடைய 55 நபர்கள் சார்பாக ஜெனரல் யோகா ஆகியோர் சட்டவாதங்களாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வாதிட்டனர். மாவட்ட நீதவான் நீதிபதியால் “எந்த பகுதியிலிருந்து அவர்கள் அகப்பட்டார்களோ அந்த பகுதியைச் சேர்ந்த மீனவர்களிடம் மீண்டும் அந்த இடத்தை ஒப்படைக்க வேண்டும்” எனவும்இ இது இரு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சனை என்பதன் அடிப்படையில் மாவட்ட செயலாளர்இ பிரதேச செயலாளர் மற்றும் கடல் தொழில் திணைக்களம் ஆகியவற்றுடன் முறையாகச் சந்தித்து நீதி மற்றும் நியாயத்திற்கேற்ப தீர்வு காண வேண்டும் எனவும் கூறப்பட்டது.இதன் அடிப்படையில் அரசாங்க அதிபரின் தலைமையில் 2018.06.15 அன்று பல தரப்புகளுடன் ஆலோசிக்கப்பட்டது. பல திசைகளிலிருந்து வடக்குப் பக்கம் வரை ஒரு நீண்ட பகுதியில் மோதல் ஏற்படும் என்பதால் ஒரு வழிவகை திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 11.7 கி.மீ. அளவிலான பகுதி ‘களப்பு பகுதி’ எனவும்இ அதன் ஒரு கி.மீ. பகுதி (சீலாக்கம்) எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் பிரகாரம் அந்த ஒரு கி.மீ. பகுதியானது பாப்பாமோட்டை மீனவர்களுக்கும் அதன் 700 மீட்டர் யோசப்புவாயிற்றார் மீனவர்களுக்கும் வழங்கப்பட்டது.

எமது சங்கதின் பிரதிநிதிகளால் இது மறுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் எமது சங்கத்தின் உபசெயலாளர் திரு ளு. பத்மநாதராஜா அவர்களால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் மணியன்துறையில் காணப்பட்ட எமது மீனவருக்குச் சொந்தமான வாடிகள் என்பன உப்புக்குளம் பகுதியில் வசிப்பவர்கள் சிலரால் இடையூறு செய்யபட்டு தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.இதன் தொடர்ச்சியாக அன்று மாலை மணியன்துறையின் வாடி உரிமையாளர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது. இம்முறைப்பாட்டின் பின்னர் 16.07.2021 அன்று மன்னார் நீதிமன்றத்தில் வழக்காக முன்வைக்கப்பட்டது. எமது சார்பாக இனாமிப்பு அவர்கள் சட்டத்தரணியாகவும், திரு S. புவிநாயகம் அவர்கள் வழக்கை மேற்கொண்டார். அன்றாடம் தொழிலில் ஈடுபடும் நிலவரம் தொடர்பாக பல சட்டவாதங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில் மாவட்ட நீதவான் ஒருவரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அதிகாரிகளின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும்இ கொந்தப்பிட்டி பகுதியின் ஊடாக பொலிஸ் பாதுகாப்புடன் மீன்பிடித்தலில் ஈடுபடலாம் என்றும் உறுதிப்படுத்தினார். அதனைத்தொடர்ந்து 18.07.2021 அன்று அரசாங்க அதிபர்இ பிரதேச செயலாளர் மற்றும் அந்த சந்திப்பின் உறுப்பினர்களான திரு ளு. அந்தோனிப்பிள்ளைஇ பன்னிப்பாஸ்இ ஆற்றோமல் எட்வின் மற்றும் இன்சில் ஆகியோர் கலந்து கொண்டு மன்னார் பலிகாவைப் பகுதிக்கு சென்று விளக்கம் கோரியதாக உப்புக்குளம் சார்பாக சிலர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.அதில் 21 நாட்களுக்குள் எமது மீனவர்களுக்குச் சொந்தமான ஒரு பரிந்துரைக்கப்பட்ட பகுதியை வழங்கும் வகையில் அரசாங்க அதிபருக்கு நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் மன்னார் உப்புக்குளம் பகுதியில் தீர்மானத்தை வழங்கியது.
அந்த தீர்ப்புக்கு எதிராக எமது சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிகாரிகள் அவசரமாக கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தனர். அதில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவரிடம் சென்றுஇ பாலமுனை பகுதியில் தற்காலிகமாக மீன்பிடித்தலில் ஈடுபடுவதற்கு அனுமதியானது கோரப்பட்டது. ஆனால் ஆயர் அவர்கள் கொந்தம்பிட்டி வழியாக செல்லும் தீர்வை மட்டுமே நீதிமன்ற கட்டளை எனக் கூறி இதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனைத்து பிரச்சனைகளையும் முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஒரு குழு செயற்பட்டது. இக்குழுவில் பங்குத் தந்தை அருட்தணிநேரு அடிகளார்இ செ. யூட், வெ. தயானந்தன்இ இ. செல்வரெங்கராஜ் மற்றும் சி. நீசன் ஆகியோர் காணப்பட்டனர்.21 நாட்களுக்குள் பொருத்தமான தீர்வை வழங்குவது தொடர்பில் மன்னார் செயலகத்தில் அனைத்து மீனவர் சங்கங்களையும் அழைத்து கலந்துரையாடப்பட்டது. அதன் பின்னர் அனைத்து சங்கங்களும் தமது பகுதிகளில் எங்களை தொழில் செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனக் கூறினர்.

இதனைத்தொடர்ந்து பிரதேச செயலாளர் மூன்று இடங்களை முன்மொழிந்தார்:
1. தவயமல்லார் பழைய பாலம் – பொதுத்துவம் உள்ள பகுதி
2. தன்மாவடி இராணுவ முகாமுக்கும் திருக்கேதீஸ்வரத்திற்கு இடையிலான கீழிக்கரைசான் பகுதி
3. நாயாத்துவெளி – நாயாறு ஊடாக செல்லும் பகுதி
இம்மூன்று பகுதிகளில் ஒன்றை உடனடியாக ஏற்குமாறு பணிக்கப்பட்டது. ஆனால் இம்மூன்று பகுதிகளும் தொழில்முறை அடிப்படையில் பொருத்தமற்றவை என எமது சங்கத்தினர் தெரிவித்தனர்.

இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுஸ்தாபனத்தின் கடன் குத்தகை அடிப்படையில் 2021.02.14 அன்று 141 நபர்களுக்கான வாடிகள் துறையாகப் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு இவை வருடாவருடம் புதுப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும்இ மாதம் ரூ.12இ990 செலுத்தப்படுதல் வேண்டும் எனவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது.மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு 29.11.2021 அன்று தொடர்ச்சியாக அப்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி கட்டணமாக எமக்கு வழங்கப்பட்டுஇ அவ்வழக்கானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதே போன்று 06.09.2022 அன்று கொந்தம்பிட்டி வாடிகள் உடைய வழக்கு எண் 33604இன் குற்றவாளிகளால் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் குற்றவாளி ஒருவருக்குத் தண்டனையாக அரச செலவாக ரூ.1இ500 ரூபா மற்றும் சாதாரண இழப்பீடாக வாடி உரிமையாளருக்கு ரூ.350இ000 ரூபா வழங்கப்பட்டு இவ்வழக்கும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.2024.04.09 அன்று புதிய நிர்வாகத்தின் தெரிவில் திரு வூ. பிரேம்நாத் அவர்கள் தலைவராகவும்இ திரு வூ. பிரேம்குமார் அவர்களை செயலாளராகவும் கொண்ட புதிய மீனவ சங்கமானது தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது இது நடைமுறையில் உள்ளது.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் - மன்/தூய ஜோசப்வாஸ் ம.வி

1900ம் ஆண்டுகளில் பாடசாலை ஆரம்பித்து நடாத்தப்பட்ட வேளைகளிலும் எமது நாட்டின் யூத்த காலத்தை அடுத்து அதற்கான அறிக்கைகள் எதையூம் எம்மால் திரட்ட முடியவில்லை. ஆனாலும் 2011ம் ஆண்டில் இருந்து எமக்கு அறிக்கைகளை பெறக்கூடியதாக அமைந்தது.

2011ம் ஆண்டில் பாடசாலையின் முதல்வராக திரு.ஆ.கிறிஸ்ரியான் அவர்கள் பணியாற்றினார். அவரே பாடசாலை அபிவிருத்தி சங்க தலைவராகவும் இருந்தார் ஆசிரியர்கள் சார்பாக திரு.S.எட்மன் ஜேக்குமார், திருமதி.S.ஆன் றௌஜ் சுஜி மற்றும் திருமதி.நிக்சன் ராஜா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக திரு.ள S.சர்வானந்தன் பொருளாளராக …… உறுப்பினராக திரு.யூ.டேவிற், திரு.அற்புதசீலன் அனைவரும் நிர்வாகத்தினை நடாத்தினர்.

பின்னர் 2013ம் ஆண்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதிலே தலைவராக பாடசாலையின் முதல்வர் அவர்களும் (திரு.ஆ.கிறிஸ்ரியான்) செயலாளராக திரு.பொ.சிவேந்திரன், பொருளாளராக கு.அன்ரன் சேவியர்இ நிர்வாக உறுப்பினர்களாக திரு.அற்புதசீலன், திருமதி.ரா.இமாக்குளேற், திரு.யேசுராசா அனுசா தேவி தெரிவு செய்யப்பட்டு நிர்வாகத்தினை நடாத்தினர்.

பின்னர் 2016ம் ஆண்டிற்கான நிர்வாக தெரிவில் பாடசாலையின் முதல்வர் அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் (திரு.ஆ.கிறிஸ்ரியான்), செயலாளராக வி.சுதாகர், ஆசிரியர் சார்பாக பொருளாளராக P.ஊ.கஸ்ரோ அவர்களும் நிர்வாக உறுப்பினர்களாக திருமதி.ஆ.யூ.கமல்ராஜ், திருமதி.S .விஜேந்திரன்,S. யூ.ஜஸ்ரின், S.நசீர் கணக்காய்வாளராக ஆசிரியர் சார்பாக திரு.அ.அருந்தவநாதன், பெற்றௌர் சார்பாக திரு. கிறீஸ்து மேனன் என்பவர் தெரிவு செய்யப்பட்டனர்.

2022ம் ஆண்டு புதிய நிர்வாகம் தெரிவூ செய்யப்பட்டது. பாடசாலையின் முதல்வர் திரு.து.கியோமர் பயஸ் அவர்கள் தலைவராகவும். பொருளாளராக ஆசிரியர் திருமதி.ஜெயமலர் அவர்களும் ஆசிரியர் குழுவாக திரு.சதன் லெம்பேட், திருமதி.கமல் ராஜ், செல்வி.சாந்தலூசியா, செல்வி.கோலீடா மேயர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக திரு.P.சிவேந்திரன் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாக உறுப்பினராக திருமதி.P.மேரி கிறிஷ்ரீன், திருமதி.நிலோஜினி, M.எடிசன், பழைய மாணவர் சார்பாக திருமதி. சு.நிஷாந்தினி என்பவர் தெரிவு செய்யப்பட்டனர்.

2024ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் தெரிவூசெய்யப்பட்டது. பாடசாலையின் முதல்வர் அவர்கள் தலைவராகவும் (திரு.j.கியோமர் பயஸ்), பொருளாளராக ஆசிரியர் திருமதி.அஸ்வினி தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக உறுப்பினராக பெற்றௌர் சார்பில் திரு.எமில்யூட், திருமதி.N. கொன்சலா, திருமதி.N.மெலானி தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர்கள் சார்பில் திரு.S.N.எமில்ரன், திருமதி.மசூதா, செல்வி.ராதிகா, திரு.எட்மன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்கள். பழைய மாணவர்கள் சார்பில் திருமதி. நிமல்டா கொன்சி, செல்வன்.சுலைக்ஷன் என்பவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது இந் நிர்வாகமே இயங்கி வருகின்றது.

அலிகார் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் - கு.முஜம்மில்

1990 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலத்தில், 1905ம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வரலாறு காணப்படுகிறது. அந்தக் காலத்தில் கல்வி பயிலும் மாணவர்களால் “பழைய மாணவர் சங்கம்” என்ற பெயரில் காலத்திற்கேற்ப பழைய மாணவர் சங்கங்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு அதிபரின் தலைமையின் கீழ் இதனை நடைமுறைப்படுத்தி வந்தனர். இது 90களில் முடிவுக்கு வந்தது. அக்கால பழைய மாணவர்களால் இப்பாடசாலைக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.
மூன்றாம் மற்றும் நான்காம் தரம் வரையிலான மாணவர்கள் அதிகமாக காணப்பட்டனர். முஸ்லிம் பெற்றோர்கள் அதிகமாக காணப்பட்டதால் ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டனர். இந்து, கிறிஸ்தவ மாணவர்களும் கற்றதோடு அவர்களின் பெற்றோர்களும் சங்கங்களில் காணப்பட்டனர். பழைய மாணவர்கள் பாடசாலைக்காக பௌதீக வசதிகளை வழங்கினர்.

- காணி விஸ்தீரணங்கள்
- சுற்றுலாவிற்கு தேவையான வசதிகள்.
- விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு
- திறமையான பழைய மாணவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகள்

விளையாட்டுக்களிலும் மாணவர்கள் சாதித்து வந்தனர்.; பாடசாலை சார்ந்த விளையாட்டு போட்டிகளிலும் ஊர் சார்ந்த விளையாட்டுகளிலும் பொது வேலைகளிலும் சங்கங்கள், அமைப்புகள் மேற்கொண்டு உருவாக்கப்பட்டன.

பாடசாலையில் மட்டுமன்றி ஊர்களிலும் சிரமதான நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாதைகள் சீரமைக்கப்பட்டன, பாலர் பாடசாலை விருத்தி செய்யப்பட்டு, நூலக விருத்தி தொடர்பாகவும் அரச அலுவலகங்களுக்கும் இச்சங்கங்களினால் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டது.
இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம்களின் இடப்பெயர்வானது, ஊர்களை மட்டுமன்றி பாடசாலையையும் மூட வேண்டிய நிலைக்கு கொண்டு சென்றது.
யுத்த காலம் முடிந்த பின்னர் 2012-01-30 ஆம் திகதி, அதிபர் K. முஜம்மில் அவர்களின் தலைமையில் பாடசாலை மீண்டும் உருவாக்கப்பட்டது. அப்போதைய காலத்தில் பழைய மாணவர்களான:

- A. ஜனுஸ் கான்
- S.H. சனூஸ்
- K. நிஹால்
- A. ஜயுப்கான்
- A. R. சுகைல்
- A. பாயிஸ்
- M. B. பாரூக்
- S. M. ஆரிப்
- A. R. நவுர்கனி
- M. B. மினூஸ்கான்
- L. மிரஸ்
- M. ஹசீப்
- F. குழந்தம்மா

ஆகியோரின் உதவியால், இப்பாடசாலையில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப கட்டமாக தகரக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு, பாடசாலை தோற்றம் பெற்றது.
இக்காலத்தில் பாடசாலையின் முன்பக்க பகுதி துப்புரவு செய்யப்பட்டு, காடுகள் வெட்டப்பட்டன.
இடிந்த நிலைகளில் காணப்பட்ட கட்டிடங்களும் கற்களும் அகற்றப்பட்டன. தற்போதைய இரு பிரதான மண்டபம் உடைந்த நிலையில் காணப்பட்டபோதிலும், முன்பக்கத்தில் காணப்பட்ட பாடசாலையின் இலச்சினை A. றுஸ்கான் அவர்களால் மை பூசப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.
இவ்வாறான கால ஓட்டத்தில் மேலும் சில வெளிநாட்டிலும் மற்றும் உள்நாட்டிலும் வாழ்கின்ற மாணவர்களின் கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. குறிப்பாக கனடாவில் வாழ்கின்ற M.மசாரிக் அவர்களால் ஆரம்பத்தில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
அதிபர் கலீம் அவர்களின் முயற்சியால் குழாய் நீர் பெற்றுத் தரப்பட்டது. சோமசுந்தரம் ராஜேந்திரா மற்றும் அதிபர் M.A.C. அமீன் அவர்களும் வருகைதந்து பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்தாலோசித்த வரலாறும் உண்டு.
அப்போதைய பிரதேசசபை உறுப்பினராக இருந்த M.K.M. ஆதிர் அவர்களும் சில பங்களிப்புகள் செய்துள்ளார்.
இவ்வாறாக பல கட்டங்களாக முன்னேறிய நிலையில், உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்வோர் சமுக வலைத்தளங்களின் மூலம் திருமதி சுதாமதி தலைமையில் கீழ் ஒருங்கிணையத் தொடங்கினர்.
இதன் விளைவாக, இப்பாடசாலைக்கு கற்றல் திரைக்கான வகுப்பறை நிர்மாணிக்கப்பட்டது.
அத்துடன், இவர்களினால் இரு கட்டங்களாக சிரமதான செயல்பாடுகள் நடைபெற்றன. . இதில் வெளிநாடுகளில் மற்றும் உள்நாட்டில் வாழும் பழைய மாணவர்களும் உள்ளூர் மக்களும் பங்கேற்றிருந்தனர்.
இந்த தொடர்பாடலின் தொடராகவே புத்தகப்பைகள், காலணிகள், அச்சுப் பிரதி, மின்விசிறி, முதலுதவிப் பெட்டி, வகுப்பறை மறைக்கும் தட்டி போன்றவை வழங்கப்பட்டன. இப்பாடசாலையின் முன்பக்கமாக வாழ்ந்த சிவகுரு ஜனகம் அக்கா இதில் பங்களித்தார்.
கலைவிழாக்காட்சிக்கான உதவிகளும் அவரால் மேற்கொள்ளப்பட்டன. சோமசுந்தரம் நாகேந்திரா ஐயா அவர்கள் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்ததுடன் இம்மாணவர் நலனுக்காக 2022 ஆம் ஆண்டிலிருந்து பசுப்பால் வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியிருந்தார். .
இதற்கு கனடாவில் வாழும் அமீர் வியாஸ் அவர்களின் பங்களிப்பும் மகத்தானது. இதனுடன், இவர்களால் தரம் 5 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளும் நடத்தப்பட்டன.
அத்துடன் கீழ்க்காணும் பழைய மாணவர்களும் பங்களித்துள்ளனர்:

- S. பாயிஸ்
- A. Y. சாஹிர்
- R. அன்பஸ்
- I. சப்ரி
- S. கனகேந்திரன்
- S. றஹீம்
- S. காலித்
- S.றகுமான்
- I. அனிஸ்
- N.சரஜின்

அகியோருடன் தற்போது இவ்வூரில் வாழும் சிலரும் உதவி செய்துள்ளனர். அவர்களின் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், அவர்கள் பழைய மாணவர்களாக இருந்தது உறுதி.
இவர்களால் பழைய மாணவர் சங்கம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

விடத்தல்தீவு மத்திய மாதர் அபிவிருத்தி சங்கம் - ஜனாப் கு.முஜம்மில்

விடத்தல்தீவு மத்திய மாதர் அபிவிருத்தி சங்கமானது 1990ம் ஆண்டு நீண்டகால இடப்பெயர்வுக்குப் பின்னர் மீள்குடியேற்றத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டது.
1990ம் ஆண்டுக்கு முன் உருவாக்கப்பட்ட மாதர் சங்கமானது தொடர்ச்சியாக செயற்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு புதியதாக ஒரு மாதர் சங்கத்தினை உருவாக்குதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் நாங்கள் இந்த மாதர் சங்கத்தை உருவாக்கினோம்.

28/01/2018ம் திகதி அன்று ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு 36 மாதர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
அந்தக் கூட்டத்தில் சங்கத்தின் நோக்கம், செயற்பாடு,அபிவிருத்தி , பாதுகாப்பு, வாழ்வாதார திட்டங்கள், காலநிலை மாற்றம், சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன் முதல் நிகழ்வாக மாதர் சங்கமானது உருவாக்கப்பட்டதுடன் அதற்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. அந்த வகையில்
- தலைவி: P. பஸ்மா
- உப தலைவர்: K. ஆசியா உம்மா
- செயலாளர்: N. F. நஸ்றீன்
- உப செயலாளர்: N. பரீனா
- பொருளாளர்: R. பர்சானா

மேலும் 5 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்தக் கூட்டத்தின் வழிகாட்டியாக மாந்தை பிரதேச சபை உறுப்பினர் K. சன்ஹர், N. பாறூக், M.K.M. ஆதீர், K.முகம்மில் ஆகியோர் காணப்பட்டனர். பாலர் பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டு இக் கூட்டத்தை வழிநடத்தினார்கள்.
அதன்பின் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வேதனங்கள் தொடர்பான விவாதம் நடைபெற்றது.
அதனைத் தொடர்ந்து ஒரு நபருக்கு ரூ.100 என்ற அடிப்படையில் 36 உறுப்பினர்களும் தங்களது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி கொண்டனர்.

மதிப்பீட்டு நேர்காணல் கருத்துக்கள்:
- பெண்களின் முன்னேற்றம்.
- மாதர் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுதல்.
- சமய சிந்தனைகள் மற்றும் கல்வியின் முக்கியத்துவம்.
- பாடசாலைகள் மற்றும் பள்ளிவாசல்கள் சீரமைக்கப்படுதல்.
- சுற்றாடல் பாதுகாப்பு.

அபிவிருத்தி நடவடிக்கைகள் :
- சீரற்ற மின்சார வசதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- மக்கள் நோய்வாய்ப்படும் போது மன்னார் அல்லது யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை உருவாகிறது. எனவே பள்ளமடு வைத்தியசாலை ஒரு சிகிச்சை நிலையமாக மாற்றப்பட வேண்டும்.
- இடர்பாடுகள் காலத்தில் தொடர்பு கொள்வதற்கென
076 90910633 என்ற தொலைபேசி இலக்கம் மக்கள் பாவனைக்காக பயன்பாட்டில் காணப்பட்டது.

இனப்பாகுபாடு பற்றிய கூற்று:
எமது கிராமத்தில் மண்ணெண்ணை இல்லை. மாடுகள் காலங்காலமாக பாதிக்கப்பட்டுள்ளன. கடலில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக மீன்களுக்குத் தேவையான வண்டல்கள், பாறைகள், மரங்கள் மற்றும் குறிஞ்சி வகை மூலிகைகள் அழிந்துபோயுள்ளன.

நடைபாதைகளை செப்பனிடும் பணியில் 2018.

எமது சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள்:
1. 31/08/2018:
பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்களின் அனுசரணையில் எங்கள் சங்கத்தின் ஊடாக வீதி செப்பனிடும் பணியில் எமது மாதர் சங்கமும் முன்னின்று செயற்பட்டது.
அலிகார் பாலர் பாடசாலை வரை இந்த வேலைத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

2. 24/12/2018:
பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்கள்
எங்கள் மாதர் சங்கத்தினூடாக முன்நின்று
மைய வீதிக்கு தேவையான பணி விபரங்களை கொடுத்து அது
வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

3. 09/01/2019:
அன்று பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அவர்களின் ஒதுக்கீட்டினை
எங்கள் சங்கத்தினூடாக பெற்றுக்கொண்டு கிரவல் வீதிகள் அமைக்கப்பட்டன.

4. 24/05/2024:
பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் அவர்களின் ஒதுக்கீட்டினை
எங்கள் சங்கத்தினூடாக பெற்றுக்கொண்டு K. ஜகைஸ் என்பவரோடு இணைந்து
தார் வீதியானது வெற்றிகரமாக அமைக்கப்பட்டது.

5. 15/10/2024:
மக்தூம் வீதி புனரமைப்பு பணிக்காக
பிரதேச செயலகத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியை
எங்கள் சங்கத்தின் ஊடாக சலமோன் என்பவரோடு இணைந்து
மக்தூம் 3வது வீதியானது புனரமைக்கப்பட்டது.

மத்திய மாதர் அபிவிருத்தி சங்கத்தின் மூலம் மேற்கொண்ட முக்கிய திட்டங்கள்:
• அலிகார் பொது கட்டிடம் (பாலர் பாடசாலை)
• சுற்றுச்சுழலில் பசுமைத் தொட்டி அமைத்தல்
• மழைக்காலத்தில் தேக்கத்திற்கான உள்ளக வீதி அமைத்தல்.

மேலும் மாணவர்கள் நலனுக்கான கல்வி மற்றும் சுகாதாரம் என்பனவற்றின் வளர்ச்சி இச்சங்கத்தின் இலக்குகளாகும்.
ஊரில் உள்ள காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் இச்சங்கத்தின் நோக்கமாகும்.

தற்போது உள்ள நோக்கங்கள்:
கிராமத்தின் வாழ்வாதார நிலையானது மேம்பட வேண்டும்.
வெள்ளநீர் காரணமாக ஏற்படும் சேதங்களின் நிலைமையினை தவிர்ப்பதற்காக அணைக் கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

தற்போதைய நிர்வாகம்:
• செயலாளர்: R. சிகரா
• உப செயலாளர்: N. றக்கானா
• தலைவி: N. சித்தி றசிதா
• உப தலைவி: P. பஸ்மா
• பொருளாளர்: R. பர்சானா

நிர்வாக உறுப்பினர்கள் (8 பேர்):
1. N. முனபரா
2. T. றசானா
3. A. சிபானா
4. F. சறூரா
5. S. றூபியா உம்மா
6. K. அயிஷா உம்மா
7. S.பைறூசா
8. A. றிப்கா

தகவல்:
மத்திய மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்
தலைவி: N. சித்தி றசிதா
இடம்: விடத்தல்தீவு, 11 ஆம் வட்டாரம்.

விடத்தல்தீவு நண்பர்கள் குழுவும் புதிய அபிவிருத்தி அமைப்பும் - சுதாமதி விஸ்வலிங்கம்

விடத்தல்தீவு நண்பர்கள் குழு 12 ம் திகதி மார்கழி மாதம் 2019 ம் ஆண்டு திரு இராசேந்திரா சோமசுந்தரம், திரு நக்கீரன் அரசரெத்தினம் என்னும் இருவரினால் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் வசிக்கும் இரு விடத்தல்தீவு புலம் பெயர் நண்பர்கள்.

அதிகமான அளவு விடத்தில்தீவு சைவ புலம்பெயர் மக்கள் ஐக்கிய ராஜ்யத்தில் வசிக்கின்ற படியினால், நூற்றுக்கணக்கான நண்பர்களை இந்த குழுமத்தில் இணைத்து கொண்டனர். அதில் திருமதி சுதாமதி விஸ்வலிங்கம் ஆகிய நானும் ஒருவர். பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, நோர்வே, ஆஸ்திரேலியா இப்படி பல நாடுகளிலும் வசிக்கும் எமது ஊர் உறவுகளை ஒருவர் மூலம் ஒருவரை அறிமுகம் செய்து இன்னும் 50/60 ற்கு மேற்பட்ட புலம் பெயர் விடத்தல்தீவு நண்பர்களையும் மேலதிகமாக இணைத்து கொண்டனர். இக்குழுமம் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாக நண்பர்களுக்கு இடையிலான நன்மை தீமை சுக துக்கங்களை பகிர்ந்த வண்ணம் இருந்தது.

இந்த காலப்பகுதியில் திரு சக்தி இராமலிங்கம் என்பவரால் ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டது. அதுதான் விடத்தல்தீவு நுழைவாயில் வளைவு பற்றியது. விடத்தல்தீவு புலம்பெயர் மக்களின் ஒரே அபிலாசையாக முதல் முதலில் விடத்தல்தீவுக்கு செய்ய வேண்டிய பாரிய திட்டமாக, விடத்தல்தீவு - பள்ளமடு வீதியில் நுழைவாயில் வரவேற்பு வளைவு ஒன்று பிரம்மாண்டமாக அமைக்க வேண்டும் என்ற குறிக்கோள். இதற்காக புலம்பெயர் மக்களிடம் 2021 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் நிதி சேகரிக்கும் பணியில் குழுமம் ஆர்வம் கொண்டு, நிதி சேகரிக்க ஆரம்பித்தார்கள். இந்த வளைவு பற்றிய விபரமான பதிவு தொடர்ச்சியாக கீழே தரப்படும்.

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பு உருவாக்கப்பட்ட விதம்

விடத்தல்தீவு நண்பர்கள் குழுமம் 2021 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அளவில் எமது விடத்தல்தீவு கிராமத்திற்கு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு மேம்படுத்தும் நோக்குடன், திரு இராசேந்திராவும், திரு நக்கீரனும் விடத்தல்தீவு மக்களிலிருந்து தங்களுக்கு தெரிந்தவர்களை தொடர்பு கொண்டு, தங்களது குறிக்கோளை எடுத்து கூறினார்கள். அதற்கு இணங்க திரு கியோமர் பயஸ் என்பவருடன் தொடர்பை ஏற்படுத்தி, ஊரில் ஒரு அபிவிருத்தி குழுமத்தை உருவாக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அவரும் அதற்கு இணங்க தன்னுடன் இணைந்து பணியாற்றக்கூடிய சிலரை தெரிவு செய்து, சித்திரை மாதம் 19 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு அன்று, முதல் அங்குராப்பண கூட்டத்தை விடத்தல்தீவில் திரு கியோமர் பயஸ் அவர்களின் வீட்டில் ஒழுங்கு செய்து நடாத்தினார்.

இக்கூட்டத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்படுவதன் நோக்கங்கள் பேசப்பட்டது அதில், அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.
1) தலைவராக அருட் சகோ.ஸ்ரனிஸ்லஸ்
2) செயலாளராக திரு கியோமர் பயஸ்
3) பொருளாளராக திரு வை சாரங்கன்
4) உபதலைவராக திரு அ டேவிட்
ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக
1) திரு சா அருட்பிரகாசம்
2) திரு அ ரோகித் இராசநாயகம்
3) திரு க துரைராஜா
4) திரு வி சுதாகர்
5) திருமதி பா கனககோதி
ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

குழும ஆலோசகர்களாக
1) அருட் பணி. எ டெனி கலிஸ்ரஸ்
2) அருட் சகோ. அ மனோரஞ்சிதன்
3) அருட் சகோ. சி ஞானசேகரன்
ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் ஆலோசனைக்குழு உருவாக்கப்பட்ட விதமும் நோக்கமும்

இந்தகாலப்பகுதியில்விடத்தல்தீவுநண்பர்கள்குழுவில்பலவிடத்தல்தீவுநண்பர்களும்இணைக்கப்பட்டனர்.

அப்போது ஊரில் உருவாக்கப்பட்ட, விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பை வழி நடாத்த ஒரு நல்ல ஆலோசனைக்குழு அத்தியாவசியம் என்பதனை உணர்ந்த குழுமத்தின் முக்கிய உறுப்பினர்கள், சேர்ந்து பனிரெண்டு அங்கத்தவர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் ஆனி மாதம் 28 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசனைக்குழு அங்கத்தவர்கள் விவரம்

1) திரு இராசேந்திரா சோமசுந்தரம்
2) திரு நக்கீரன் அரசரெத்தினம்
3) திரு மசாரிக் மஹ்ரூப்
4) திருமதி சுதாமதி விஸ்வலிங்கம்
5) திருமதி ஜெனகராணி சிவகுரு
6) திரு கனகேந்திரா சோமசுந்தரம்
7) திரு இ எட்வின் அமல்ராஜ்
8) திரு யே நோபெட் நிர்மலன்
9) திரு ஜெயதீபன் நடராஜா
10) திரு தவக்குமார் சுப்பிரமணியம்
11) திரு பாயிஸ் சமது
12) Dr ம மதுரநாயகம்

இக்குழுவானது ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்று கிழமைகளில் சூம் லிங் மூலம் எல்லா நாடுகளிலும் வசிக்கும் அங்கத்தவர்களின் நேர வசதிகளுக்கேற்ப நேரத்தை ஒழுங்கு செய்து, உள்ளூரில் தெரிவு செய்யப்பட்ட புதிய அபிவிருத்தி அமைப்பின் பிரதான அங்கத்தவர்களையும் இணைத்து (பிறதர் ஸ்ரனிஸ்லஸ், திரு கியோமர் பயஸ் & திரு வை சாரங்கன்) கலந்துரையாடி முடிவுகளை எடுப்போம். இறுதி முடிவு ஆலோசனைக்குழுவின் முடிவே நடைமுறைப்படுத்தப்படும். இதற்குரிய நிதி சேகரிப்புகளை ஆலோசனைக்குழுவே 95% சேகரித்தார்கள். ஒரு சிறிய தொகையே உள்ளூர் மக்களிடம் இருந்து பெறப்பட்டது.

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினால் செய்யப்பட்ட நிவாரணங்கள்

புலம்பெயர் நாடுகளின் அங்கத்தவர்களை கொண்ட ஆலோசனைக் குழுவும், உள்ளூரில் தெரியப்பட்ட விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி குழுவும், சேர்ந்து தமது முதல் பணியாக, நிவாரணங்களை கொடுக்க முடிவு எடுத்தது.

கொரோனா நிவாரணம்
2020 - 2021 காலப்பகுதியில் உலகளாவிய ரீதியாக, கோவிட் 19 என்னும் உயிர் கொள்ளும் வைரஸ் பரவிக் கொண்டிருந்தது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல், வேலைகளுக்கோ பாடசாலைகளுக்கோ போக முடியாமல் இருந்த காலம்.
அந்த காலகட்டத்தில், எமது ஊர் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உலர் உணவு பொதிகை வழங்க தீர்மானித்தோம்.
இதற்காக ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள் புலம்பெயர் மக்களிடம், உள்ளூர் மக்களிடமும் நிதி உதவி கோரி, அதனை பெற்று விடத்தல் தீவு மக்களுக்கும், அதனை சுற்றியுள்ள அயல் கிராமங்களான சன்னார், ஈச்சளவக்கை, பெரிய மாடு, ஜோசப்வாஸ் நகர், புத்தளம் ஆகிய இடங்களுக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 3,000 ரூபாய் பெறுமதியான பொதிகளை வழங்கி அவர்களுக்கு ஆறுதல் அளித்தோம். கிட்டத்தட்ட 8 லட்சம் ரூபாய் பெருமதியான உணவு பொதிகள் வழங்கப்பட்டது. சில புகைப்பட பிரதிகளை இணைக்க முடிந்தால் நினைத்து விடுகிறேன். இவ் உணவுப் பொருட்கள் 2021 ஆம் ஆண்டு ஆடி மாதம் 30, 31 ஆம் திகதிகளில் வழங்கினோம்.
இந்த வேலைகளில் பிறதர் ஸ்ரனிஸ்லஸ், கியோமர் பயஸ், சாரங்கன், சுதாகர் ஆகியோருடன், இன்னும் சில தொண்டர்கள் இந்த சமூக சேவையில் இணைந்து செயற்பட்டனர்.

வெள்ள நிவாரணம்
இதன் பின்னர் 2021 கார்த்திகை மாதம் விடத்தில் தீவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, கோயில்களில் தஞ்சம் அடைந்திருந்தனர். சுமார் 400 - 600 பேர்கள் வரை விடத்தில்தீவில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் குழந்தைகளுடனும், வயோதிபர்களுடனும், இடம்பெயர்ந்து இருந்தமைக்கும் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினால் உதவிகளை வழங்கினோம். விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைக்க உணவுப் பொருட்களை விநியோகிக்க முன் வந்தோம். இதற்கு பல புலம்பெயர் மக்கள் தாமாகவே முன்வந்து நிதி உதவிகளை வழங்கினார்கள். உள்ளூர் மக்களில்

சிலரும் எமது அமைப்பின் ஊடாக உதவிகளை வழங்கினார்கள். இந்த இக்கட்டான நிலையில் ஜோசப்வாஸ் நகர் மக்களுக்கும், புத்தளம் வாழ் விடத்தல்தீவு மக்களுக்கும் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட ஏழு லட்சம் ரூபாய் பெருமதியான உதவிகள் வழங்கப்பட்டது.
ஆலோசனைக்குழுவின் அடுத்த கட்ட திட்டமிடல்

இதே காலப்பகுதியில் எமது ஆலோசனை குழு கூட்டத்தில் அதில் இருக்கும் அங்கத்தவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர்களாக ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பிரித்து அதை செயற்படவும் செய்தோம். அதில்
1) நிர்வாகம் - திரு இராசேந்திரா, திரு நக்கீரன்
2) கல்வி - திருமதி சுதாமதி, திரு அமல்ராஜ்
3) விளையாட்டு - Dr மருதநாயகம், திரு ஜெயதீபன்
4) சுற்றுச்சூழல் - திரு மசாரிக், திருமதி ஜெனகராணி, திரு நிர்மலன்
5) சுகாதாரம் - திரு பாயிஸ், திரு தவகுமார்
6) வளைவு - திரு கனகேந்திரா, திரு இராசேந்திரா.

விளையாட்டு
இதன் அடிப்படையில் விளையாட்டு துறையில் Dr மதுர நாயகம் 13 வயதுக்குட்பட்ட (ஜோசப்வாஸ் மகா வித்தியாலய மாணவர்கள்) மாணவர்களை வைத்து கால் பந்தாட்ட பயிற்சி கூடம் ஒன்று அமைக்க போவதாக உறுதியளித்து, அதை நடைமுறைப்படுத்தினார். 2021 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் தேதி இதை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்தார். இதற்கு விடத்தல்தீவு கால் பந்தாட்ட கழகம் (VIFA) என்று பெயரும் சூட்டினார். அதற்கு திரு ஜெயதீபனும் ஒத்தாசையாக இருந்தார். அதற்குரிய பல செலவுகளை Dr மதுரநாயகம் தானே பொறுப்பேற்று பயிற்சி அளித்து வருகின்றார். எங்களது அமைப்பு அவர்களுக்கு, 2021 கார்த்திகை மாதம் தொடக்கம் 2022 ஆனி மாதம் வரைக்கும் 8 மாதங்களுக்கு அதன் பயிற்றுவிப்பாளருக்கு மாதம் 15,000 ரூபாய் வீதம் 120,000 ரூபாய் செலவு செய்துள்ளது. இந்த VIFA அணி மிகவும் பிரபலமான அணியாக (அகில இலங்கை ரீதியில்) அவர்களை ஊக்குவித்து, வார்த்தெடுப்பதாக Dr. மதுரநாயகம் உறுதியளித்துள்ளார். அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக. “அவர்கள் எமது மண்ணின் மாணிக்கங்கள்”

கல்வி
கல்வித்துறையில் விடத்தல் தீவில் இருக்கும் இரண்டு பாடசாலை மாணவர்களையும் நல்ல ஊக்கம் கொடுத்து அதாவது ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார் படுத்தல், G.C.E. O/L மாணவர்களுக்கு அத்தியாவசியமான பாடங்களுக்கு 10 & 11 ஆம் வகுப்புகளுக்கு மாலை நேர மேலதிக வகுப்புகளை ஒழுங்குபடுத்தி, அதற்குரிய கட்டணங்களை வழங்குதல், அத்துடன் G.C.E A/L மாணவர்களுக்கு அவர்களின் பரீட்சைக்கு முன்னதாக கடந்த வருடங்களின் வினாத்தாள்களை செய்து பார்த்தல் (past paper classes) போன்ற செயல் அமர்வு வகுப்புகளையும் ஒழுங்கு செய்து, அதற்குரிய கட்டணங்களை வழங்குதல் போன்றவற்றை செயல்படுத்தினோம்.

2021 கார்த்திகை மாதம் தொடக்கம் 2023 சித்திரை மாதம் வரைக்கும், 18 மாதங்களாக மாலை நேர மேலதிக வகுப்புகளுக்கும், பரீட்சைக்கு முன்னான செயல் அமர்வுகளுக்கும் அண்ணளவாக சுமார் ஏழு லட்சம் வரை செலவிட்டுள்ளோம். இதில் முதல் வருடம் 2021 ல் ஐந்தாம் ஆண்டு scholarship வகுப்புகளுக்கு திரு எட்வின் அமல்ராஜ் தனது சொந்த செலவில் அவற்றை பொறுப்பேற்று செய்தார். கல்வி சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் திருமதி சுதாமதியும், திரு எடவின் அமல்ராஜும் கண்காணித்து வந்தனர். அத்துடன் பிறதர் ஸ்ரனிஸ்லஸ் அவர்களும் கல்வி நடவெடிக்கைகளில் மிகவும் ஈடுபாடு காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரே கல்விற்காக கணிசமான தொகை நிதியையும் திரட்டி தந்து உதவினார்.
எமது அமைப்பினால் பாடசாலைக்குரிய போட்டோ கொப்பி இயந்திரத்தை இரண்டு தடவைகள் (31,500 + 17,500) 49,000 ரூபாய் செலவில் திருத்தம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது. இன்னும் ஒன்று குறிப்பிட வேண்டிய விடயம், பாடசாலைக்கு ஒரு போட்டோ கொப்பி இயந்திரத்தை அன்பளிப்பாகவும் திரு எட்வின் அமல்ராஜ் கொடுத்துள்ளார்.

அதே நேரம் பாடசாலை வலைப்பந்தாட்ட மாணவிகளை மாகாண ரீதியான போட்டிக்கு கொண்டு போவதற்கான போக்குவரத்து செலவினத்தை எமது அமைப்பின் மூலம் திரு நாகேந்திரா சோமசுந்தரம் தொகை 30,000 வழங்கி உதவினார்.

அத்துடன் பாடசாலைகளுக்கு விளையாட்டு போட்டிகள் நேரம் பயன்படுத்த என கூடாரம் அமைப்பதற்கு வேண்டிய உபகரணங்களை லண்டனில் இருந்து வாங்கி அமைப்பு சார்பில் திரு இராசேந்திரா சோமசுந்தரம் பொதியில் அனுப்பி வைத்தார். அதன் செலவுத்தொகை 250,000 ரூபாய் முடிந்தது. (முதலுதவிப்பெட்டிகள் உட்பட)

விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பானது, விடத்தல்தீவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுத்தது. இதன் அடிப்படையில் அரசின் பொருளாதார நெருக்கடி நேரத்தில், பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கொடுக்கப்படும் காலை உணவு நிறுத்தப்பட்டு இருந்தது. அந்த சமயம் நமது அமைப்பின் மூலம் கனடாவில் வசிக்கும் திரு நாகேந்திரா சோமசுந்தரம் என்பவரால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆறுமாதங்களுக்கு காலை உணவாக தானிய வகைகள் சத்துணவாக வழங்கினோம் என்பது குறிப்பிடத்தக்கது.

விடத்தல்தீவு பள்ளமடு சந்தியில் ஒரு பிரமாண்டமான வரவேற்பு வளைவு

எமது அமைப்பினால் செய்யப்பட்ட பெரிய செயல் திட்டம் இது. 2020ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு, புலம்பெயர் மக்களிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தையும் சேகரித்து சேமித்து வைத்திருந்து, பின்பு கோவிற் தொற்று நோய் தீவிரம் அடைந்துள்ள வேளையில், எமது இலங்கை நாடும் பொருளாதார ரீதியாக மிகவும் முட்டுக்கட்டை நிலைப்பாட்டில் இருந்த சமயம் அனைத்து பொருட்களும் விலைவாசி உயர்ந்து காணப்பட்டது. அதனால் கட்டிடப் பொருட்களின் விலையும் நான்கு மடங்காக உயர்ந்து இருந்தது. அதனால் ஒன்டரை இரண்டு வருட கால தாமதங்களின் பின், புலம் பெயர் ஆலோசனைக்குழு முடிவெடுத்தது எமது அமைப்பின் முதல் கனவை நனவாக்குவது என்று.

அதற்கு அமைய எமது மண்ணின் மைந்தன் பொறியியளாலர் திரு சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் அவர்களின் உதவியை நாடி, அதற்குரிய விளக்கத்தினை திரு இராசேந்திரா, திரு கனகேந்திரா ஆகியோர் அவருடன் தொடர்பு கொண்டு எங்களது ஊரில் முகப்பு வளைவு குறிப்பிட்ட சில விசேஷ அம்சங்களை கொண்டு
அடங்கியதாக இருக்க வேண்டும் என்பதனை அவருக்கு வலியுறுத்தினர். இந்த வரவேற்பு வளைவு படத்தை வரைவது உடன் இல்லாமல், கட்டிட வேலைகள் ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை எதுவித கட்டணமும் இன்றி வேலைகளை மேற்பார்வை செய்து அதற்குரிய ஆலோசனைகளையும் வழங்கி வந்தார் திரு சூசைப்பிள்ளை விமலேஸ்வரன்.
அதேசமயம் அவரே கட்டிட ஒப்பந்ததார்ரையும் ஒழுங்கு செய்து உதவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.
இந்தப் பிரம்மாண்டமான வரவேற்பு வளைவு சிறப்புத் தன்மை வாய்ந்தது. இன மத மொழி பேதமில்லாத, ஊர் மக்களின் தொழில் சார்ந்த, கலாச்சார பண்பாட்டு, கல்வி விளையாட்டு என்பவற்றை பறைசாற்றும் ஒரு புதிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.வேறு எந்த ஊரிலும் இல்லாத சிறப்புமிக்க வளைவு, பார்க்கும் அனைவரையும் பிரமிக்க வைக்கும் அழகுரு கொண்ட அமைப்பு பெற்றது.

இதை கட்டிய கட்டட ஒப்பந்ததார்ரும் கட்டடகார்ரும் ஆகிய திரு அன்டன் மரியதாஸ் ஜெயதாஸ் அவர்கள் இந்த பிரமாண்டமான வரவேற்பு வளைவு வேலைகளை மிகவும் நேர்த்தியாகவும் நுணுக்கமான முறையிலும் செய்து முடித்து தந்துள்ளார் என்பதனை பெருமையுடன் கூறுகின்றோம்.

வரவேற்பு வளைவு..................

எந்த கட்டணமும் இன்றி கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்து உதவி புரிந்த
எமது ஊரைச் சேர்ந்த பொறியியலாளர் திரு சித்தீக் சிபான் அவர்களுக்கும் நன்றிகள் பாராட்டுக்கள் பற்பல.

இந்த வரவேற்பு வளைவு கட்டிட வேலைகளுக்கு இடையில் பல தரப்பட்ட சரீர உதவிகளை சமூக சேவகனாக, ஊர் தொண்டராக வின்சென்றி சுதாகர் விடத்தல்தீவு மகனாக நிறைய உதவிகளை ஊர் மக்கள் சார்பில் பணியாற்றினார். அவருக்கும் நன்றிகளும் பாராட்டுகளும் பற்பல.

வளைவிற்குரிய நிதிப்பங்களிப்பினை முக்கியமாக ஆலோசனை குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் கொடுத்தும், புலம் பெயர் ஊர் மக்களிடமும் நிறைய முயற்சிகள் எடுத்து பெற்றுக்கொண்டனர். அத்துடன் ஊர் மக்களிடம் இருந்து ஒரு சிறிய தொகையையாவது, அவர்களின் பங்களிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, ஆலோசனைக்குழு உறுப்பினரான திருமதி சுதாமதி விஸ்வலிங்கம் ஒரு அதிர்ஷ்ட லாபச்சீட்டு முறையை ஒழுங்குபடுத்தி, அதிலும் ஒரு லட்சத்து 32 ஆயிரம் பெற்றுக்கொண்டார்.
விடத்தல்தீவில் இருந்து புலம்பெயர்ந்த புத்தளம் மற்றும் கொழும்பு பகுதிகளில் வாழும் இஸ்லாமிய நண்பர்களும் இரண்டு தொடக்கம் மூன்று லட்சங்கள் (2 - 3) வரையில் நிதியுதவி செய்தார்கள்.

வரவேற்பு வளைவு கட்டிட நிர்மானிப்பு வேலைகளுக்கு முப்பத்திரெண்டு (32) லட்சங்களும் அதன் திறப்பு விழாவிற்கு மூன்று (3) லட்சங்களையும் விடத்தல்தீவு புதிய அமைப்பின் ஆலோசனை குழுவே முக்கிய பொறுப்பை ஏற்றுக் கொண்டது. உள்ளூரில் ஒரு சிறிய தொகையே சேகரிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு வளைவு கட்டுமான பணியின் அடிக்கல் நாட்டு விழா 18ஆம் தேதி பங்குனி மாதம் 2022ஆம் ஆண்டு சிறப்பான முறையில் திரு இராசேந்திரா சோமசுந்தரம் அவர்களின் தலைமையில், திரு சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் அவர்களின் முன்னிலையில் அத்துடன் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரினதும் பங்கேற்புடனும் நல்ல முறையில் நடைபெற்றது.

வரவேற்பு வளைவு..................

சில மாதங்களின் பின் ஆவணி மாதம் 29 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டு முழுமையான கட்ட கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் நேர்த்தியான முறையிலும், நுணுக்கமான வேலைப்பாடுகளுடனும், வளைவு கட்டிடம் மிகவும் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு, அது இனிதே நிறைவு பெற்றது. 14ஆம் தேதி தை மாதம் 2020 ஆம் ஆண்டு முழு வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டது.

இந்த வரவேற்பு கட்டிட வேலைகளின் போது, அது ஒரு நல்லதொரு வடிவமைப்பு பெற வேண்டுமென்பதில் திரு ராசேந்திரா, திரு கனகேந்திரா, திரு மசாரிக், திருமதி சுதாமதி ஆகியோர் மிகுந்த அக்கறை கொண்டு, கட்டிடகாரனுடனும், பொறியியலாளர் விமலேஸ்வரனுடனும்அடிக்கடி தொடர்பு கொண்டு இதை செய்து முடித்தோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.தை மாதம் 15 ஆம் திகதி 2023 ஆம் ஆண்டு மிகவும் கோலாகலமாக 500 தொடக்கம் 600 பேர்கள் அடங்கிய ஒரு பாரிய சிறப்பு நிகழ்வாக வளைவு திறப்பு விழா நிகழ்வு Band வாத்திய இசையுடன் பல பெரியார்கள் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வம் அடைக்கலநாதன் சில பொலிஸ் மாஅதிபர்கள், பல மத தலைவர்கள், ஊர் பெரியவர்கள், வைத்தியசாலை வைத்திய அதிகாரி இப்படி பல சிறப்பு மிக்கவர்களுடனும், , எமது விடத்தல்தீவு புதிய விருத்தி அமைப்பின் தலைவர் பிறதர் ஸ்ரனிஸலஸ், செயலாளர் கியோமர் பயஸ், பொருளாளர் சாரங்கன் இன்னும் பல குழும உறுப்பினர்களுடனும், முக்கியமாக புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்களான திரு இராசேந்திரா சோமசுந்தரம், திரு கனகேந்திரா சோமசுந்தரம், திருமதி சுதாமதி விஸ்வலிங்கம், ஜெனகராணி சிவகுரு ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை பெருமைக்குரியது. திரு சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் அவர்களினால் இந்த வளைவு ரிப்பன் வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

வளைவின் இரு மருங்கிலும் ஞாபகர்த்த அடிக்கற்களும் அமைக்கப்பட்டு, அலோசனைக்குழு உறுப்பினர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்த விழாவிற்கு வருகை தந்து கலந்து கொண்ட மக்களுக்கு சில கலை நிகழ்வுகளையும், உரைகளையும் தொடர்ந்து குளிர்பானம் சிற்றுண்டிகளும் வழங்கி இந்த விழாவை சிறந்த முறையில் நடாத்தி முடித்தோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம். பல ஊடகவியலாளர் எமது இந்த விழாவை பதிவு செய்தார்கள். அவர்களின் தொலைக்காட்சிகள் ஊடாக காட்சிப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. சிறப்புமிக்க ஒரு செய்தி இந்த வரவேற்பு வளைவு எங்கள் ஊர் மக்களின் வாழ்நாள் கால ஞாபக சின்னமாக விளங்குவது யாவரும் அறிந்ததே!!!

சுற்றுச்சூழல்

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் விடத்தல்தீவு பள்ளமடு விதி இருமருங்கிலும் ஜேவிசி இயந்திரம் மூலம் கருவேலை மரங்களையும் ஏனைய தேவையற்ற சில மரங்களையும் அகற்றி சுத்தம் செய்து, 100 புங்கை மரங்களை 20 அடிக்கு ஒன்றாக நாட்டி, சுற்றி வேலி அடைத்து, தண்ணீர் ஊற்றி (ஒருவரை கூலி கொடுத்து வைத்து) பராமரித்து ஊரை அழகு படுத்தினோம். ஓரளவு வளர்ந்த பின், சுற்றுவேலி அகற்றப்பட்டது. தண்ணீர் ஊற்றுவது நிறுத்தப்பட்டது. அந்த மரங்களை நாட்டுவதற்கு ஊரில் இருக்கும் கழகங்களும், சில ஊர் மக்களும், ஊர் நலன் விரும்பிகளும் தவணை முறையில் உதவி செய்தார்கள். கருவேல மரங்களை அகற்றும் பணிக்கு திரு இராசேந்திராவின் மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்றன. இதேபோல் 2024 மீண்டும் 50 புங்கை மரங்கள் சில இடங்களில் பிரதிக்கன்றுகளாகவும்வேறு புதிய இடங்களிலும் நிதி கொடுத்து நாட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. இந்த மரங்களை பராமரிப்பதில் ஒரே நலம் விரும்பியாக திரு. வி. சுதாகர் செயல்பட்டார்.

மருத்துவமும் சுகாதாரமும்

விடத்தல்தீவு வைத்தியசாலைக்கு மருத்துவ உதவியாக புதிய அபிவிருத்தி அமைப்பானது நாட்டின் பொருளாதார நெருக்கடி நேரத்தில், அவர்களுக்கு பற்றாக்குறையான மருந்து பொருட்களையும் இரத்த அழுத்தம் சோதிக்கும் கருவிகளையும் சில rechargeable bulbs ம் இப்படி இன்னும் பல தரப்பட்ட, அவர்களுக்கு பற்றாக்குறையாக இருந்த ரத்தம் சோதிக்கும் கருவியும் அதற்குரிய strips (600) ம், விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் ஊடாக, அதில் அங்கம் வகிக்கும் சிலர்... (திருமதி சுதாமதி விஸ்வலிங்கம் அவர்கள் 3 இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் கருவிகளையும், திரு மசாரிக் மஹ்ரூப் 3 rechargeable bulbs ம், திரு எட்வின் அமல்ராஜ் இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் கருவிகள் 2, ஒரு oximeter) போன்ற பொருட்களை

கொடுத்து உதவினோம். இவை யாவும் இரண்டு லட்சங்களுக்கு மேல் பெறுமதி வாய்ந்தவை. இதில் எமது அமைப்பினால் 55,000 ரூபாய் செலவழிக்கப்பட்டது. அன்பளிப்பாக சில மருந்து பொருட்களை Dr ம மதுரநாயகம் தனது செலவில் வைத்தியசாலைக்கு அனுப்பியிருந்தார்.

விடத்தல்தீவு வைத்தியசாலைக்கு 2022-ல் எமது புதிய அபிவிருத்தி அமைப்பினால் ஒரு குடிநீர் வடிகட்டி கருவி ஒன்று பொருத்தப்பட்டு கொடுக்கப்பட்டது. இதற்கான செலவு 65,000 ரூபாய். 2022 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பொருத்தப்பட்டு கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய இதற்கான முழு முயற்சியும் திரு மசாரிக் மஹ்ரூப் அவர்களையே சாரும். அவருக்கு உதவியாக திரு ஷாகிர் அன்சாரியும் செயல்பட்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் 2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஆயுள்வேத வைத்திய சாலைக்கும் அதே மாதிரி 65,000 ரூபாய் செலவில் குடிநீர் வடிகட்டி கருவி பொருத்தப்பட்டு கையளிக்கப்பட்டது. இதையும் மசாரிக்கும், ஷாகிரும் சேர்ந்தே உதவினார்கள்.

விடத்தல்தீவு மக்களுக்கு செய்யப்பட்ட காருண்ய செயல்பாட்டு உதவிகள்

ஒரு இளைஞனின் அகால மரணத்தின் போது அந்தத் தாய்க்கு ஆதரவளிக்கும் வகையில் 25,000 ரூபாய் உதவித்தொகையாக வழங்கினோம்.

அதன் பின் ஊரில் முன்னைய காலத்தில் சமூக சேவை செய்த கோணாமலை என்பவரின் குடும்பத்திற்கு அவரின் இறப்பின் போது, அதை அவருக்கு நன்றியுடன் மரியாதை செலுத்தும் முகமாக அவரது குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கினர் இந்த புதிய விருத்தி அமைப்பு இப்படியான கருணையான செயற்பாடுகளையும் செய்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதைவிட வெள்ள அனர்த்தத்தின் போது சமூக சேவையில் ஈடுபட்ட ஒரு வாலிபனுக்கு உடம்பில் சூடு சாப்பாடு ஊற்றியதனால், அவருக்கு சில காலம் வேலைக்கு போக முடியாத நேரத்தில் அவருக்கு நிதி உதவியாக 25,000 ரூபாய் அமைப்பினூடாக திரு இராசேந்திரா சோமசுந்தரம் அவர்களும், திருமதி சுதாமதி விஸ்வலிங்கம் அவர்களும் சேர்ந்து அந்த நிதிப்பங்களிப்பை வழங்கினார்கள்.

1) மருத்துவ உதவியாக ஒரு சிறு நீரக மாற்று செய்த இளம் யுவதி ஒருவருக்கு மருத்துவச் செலவிற்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் (120,000) ரூபாய் காருண்ணியத்துடன் அளிக்கப்பட்டது. இதற்கு ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள் மட்டுமே நிதியுதவி செய்தார்கள். அவர்களின் நிதி உதவியுடன் அந்த உதவி வழங்கப்பட்டது

மருத்துவமும் சுகாதாரமும்….

2) இதேபோல் இன்னும் ஒரு பத்து வயது சிறுவன் புற்றுநோய்வாய்ப்பட்டு இருந்தபோது, அவரின் இளம்தாய் கணவனில்லாத பெண்மணிக்கு ஆறு மாதங்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் பின்பு மூன்று மாதங்களுக்கு பத்தாயிரம் ரூபாயும் வைத்தியசாலையில் இருக்கும்போது அவர்களுக்கு உதவி தொகையாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் (150,000) ரூபாய் ஆலோசனை குழு
அங்கத்தவர்களின் நிதிப் பங்களிப்பில் மட்டுமே அதையும் காருண்ணியத்துடன்செய்து முடித்தோம்.

பள்ளமடுக்குளம்

எங்களுடைய பாரம்பரிய புராதன கதைகள் பல சொல்லும் பள்ளமடுக்குளத்திற்குஅருகில் இருந்த காடுகளை ஜேவிசி மெஷின் உதவியுடன் எமது அமைப்பினால் 2 லட்சம் முதல் 3 லட்சம் ரூபாய் செலவில் சுத்தம் செய்யப்பட்டது. 2023 ஆவணி மாதம் இதற்கு எமது விடத்தல்தீவு மண்ணின் மைந்தன் பிரான்சில் வசிக்கும் திரு ரவீந்திரா சோமசுந்தரம் முழுமையாக தனது பங்களிப்பை வழங்கி முற்றுமுழுதாக பள்ளமடு குளத்தை சுற்றி வர சுத்தப்படுத்தும் செயல்பாட்டில் தனது முழுப்பங்களிப்பை வழங்கினார்.
அவருக்கு உதவியாக ஆலோசனை குழு உறுப்பினரான திரு கனகேந்திரா சோமசுந்தரம் அவர்களும் அதில் தனது பங்களிப்பை வழங்கி உதவினார்.

பள்ளமடு நல்ல தண்ணீர் கிணறு

அதற்கு அடுத்த கட்ட வேலையாக பள்ளமடுக்கிணறு புணருத்தாரணம்.
பல ஆண்டு காலத்திற்கு முன் நமது ஊர் மக்கள் குடிதண்ணீர் அள்ளிய பாரம்பரிய கிணறு முழுமையாக சுத்தம் செய்யப்பட்டது. அது மிகவும் பாழடைந்த நிலையில் காணப்பட்டதாலும், பதிவாகவும் இருந்தபடியாலும் அது ஒரு ஆபத்தான நிலையில் இருந்தது . தண்ணீரை சுத்திகரித்து, கிணறு புதிதாக பூச்சு

பூசி, வெளிக்கட்டிடத்தை புதுசாக கட்டி, கலர் பூச்சு பூசி புனருத்தாரணம் செய்யப்பட்டது. அதற்கு இரண்டு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் செலவானது.

பெண்கள் உடைமாற்றகம் அமைத்தல்

ஆலோசனை குழுமத்தினால் இதற்கு அடுத்ததாக செய்யப்பட்ட வேலை 2024 தை மாதத்தில் பள்ளமடு குளத்தின் பெண்கள் கரை பகுதியில் ஒரு கட்டிடம்,
ஒரே நேரத்தில் 2-4 நபர்கள் உடை மாற்ற கூடிய ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டு, அதற்குஅருகில் அமைந்துள்ள நீர் வடிகால்பகுதி ஒன்றும் திருத்தி அமைக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. அதற்கு நிதியுதவி கனடாவைச் சேர்ந்த திரு நாகேந்திரா சோமசுந்தரம் அவர்கள் ஒரு லட்சம் வழங்கினார். அதற்கு செலவாக 150,000 முடிந்தது. ஆலோசனைக்குழு 50,000 ரூபாய் வழங்கியது. எமது அமைப்பின் தற்காலிகமும் அதன் எதிர்காலமும்
விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பானது ஒரு நல்ல குறிக்கோள் உடன் ஆரம்பிக்கப்பட்டு, அதற்குரிய பல செயல்பாடுகளை ஊரில் நடைமுறைப்படுத்தி வந்தது பற்றி இங்கு மேலே குறிப்பிட்டுள்ளோம்.

தற்போதும் விடத்தல்தீவு வைத்தியசாலைக்கு வேலி அடைக்கும் பணியில், 5 - 6 லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகளுக்கு மூன்று லட்சம் ரூபாய் நிதியுதவியை அவுஸ்ரெலியாவில் வசிக்கும் சதீஸ்குமார் தனது நண்பர்களுடன் இணைந்து வழங்கியமை குறிப்பிட தக்கது. அதற்குரிய வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட உள்ளூர் மக்களின் தெரிவாகிய விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பானது April 2021 தொடக்கம் April 2023 வரைக்கும் தனது இரண்டு வருட கால சேவையுடன் தனது செயற்பாடுகளை முடித்துக்கொண்டது. அதன்பின் ஒரு வருட காலமாக புலம்பெயர் ஆலோசனைக்குழு அங்கத்தவர்கள் தனிச்சியாக தாங்களாகவே பல வேலத்திட்டங்களை செய்து முடித்தனர். உதாரணமாக:-பள்ளமடு குளம் சுத்திகரிப்பு, பள்ளமடு கிணறு புனரத்தாரணம், பெண்கள் உடை மாற்றகம் அமைத்தல், மருத்துவ நிதியுதவிகள் போன்றவை…இன்னும் சில….

அதன் பின் கடந்த வருடம் 2024 ஆம் ஆண்டு மே மாதம் புதிய தெரிவு இடம் பெற்று புதிய நிர்வாகம் தெரியப்பட்டது.
அதில்

1) தலைவர் வின்சென்றி சுதாகர் அவர்கள்
2) செயலாளர் திருமதி மெற்றில்டா அவர்கள்
3) பொருளாளர் திரு எடிசன் அவர்கள்

இன்னும் பல உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர். புதிய குழுவினருடன் ஒரு சில சூம் சந்திப்பு மூலம் சில கலந்துரையாளர்கள் இடம் பெற்றன.

இவ்வமைப்பானது கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் அண்ணளவாக 850,000 லட்சம் ரூபாய்கள் ஊர் அபிவிருத்திக்காக செலவிட்டுள்ளது குறிப்பிடதக்கது.
இனிவரும் காலங்களில் உள்ளூர் மக்களும், புலம்பெயர் மக்களும் முழுமையான ஆதரவு கொடுத்தால் எங்களது சமூகசேவை இனிதே நல்ல முறையில் தொடரும்….வாருங்கள் எங்களது ஊரை முன்னேற்றுவோம். நீங்கள் கை தாருங்கள் நாங்களும் கை கொடுப்போம்

1999 இடப்பெயர்வும் - ஐக்கிய விளையாட்டுக்கழகமும் - ஜேம்ஸ். சுதாகரன்,ஜகார்த்தா,இந்தோனேசியா.

உள்நாட்டு யுத்தம் காரணமாக 1999ம் ஆண்டு இடம்பெயர்ந்த நாம் பேசாலை நலன்புரி நிலையத்தில் வாழ்ந்த காலப்பகுதி.

போரின்தாக்கத்தாலும், சொந்த இடத்தை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந்த நிலையில் மனவுளர்ச்சியாலும் மனோநிலை, பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த எமக்கு அடிக்கடி இராணுவ சுற்றுவளைப்புகள் , கெடுபுடிகளால் முடக்கப்பட்டிருந்த நிலையில் தொழில்துறை இல்லாமல் அதிகநேரம் 10:10 அளவுடைய நிரை கொட்டில்களுக்குள் வசித்த எமக்கு மாலைநேர விளையாட்டே சற்று மனதுக்கு ஆறுதலை தந்திருந்தது என்றால் அது மிகையாகாது.

நலன்புரி நிலைய ஆலமர முன் பற்றியதாக கிடந்த தவரை பற்றைகளை துப்பரவு செய்து அதில் பின்னேரத்தில் விளையாட்டில் ஈடுபட்டோம், அதே நேரம் ஏற்கனவே அங்கே அமையப்பெற்ற கரப்பந்தாட்ட மைதானத்தில் வெவ்வேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களோடு எம்மவர்கள் இணைந்து கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அந்த நாட்களில் ஊரில் நாம் கொண்டிருந்த எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை தொடர்ந்து இயக்கும் முகமாக பழைய உறுப்பினர்கள், விளையாட்டில் ஆர்வமுடையோர், நலன்விரும்பிகள் என ஒன்றிணைந்து ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகத்தை தெரிவுசெய்து அந்த நிர்வாகத்தில் செயலாளராக முன்மொழியப்பட்டேன். அந்நாட்களில் கழகம் சார்பாக பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகளில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக பெயருடன் பங்குபற்றியிருந்தோம்.

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அப்போதைய தலைவரும் றிஸிபன் எலைக்றோனிக் விற்பனை நிலைய உரிமையாளருமான அமரர் அன்ரன் ஆல்வாப்பிள்ளை அவர்களது தலமைத்துவத்தின் கீழ் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தில் முதன்முதலாக பதிவுசெய்தேன்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழக பொதுக்கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தி , நிர்வாக கூட்டத்தை மாதத்தில் ஒரு தடவை நடாத்தி மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி அவர்களுக்கும் ,மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கும் அறிக்கைகளை சமர்பித்து சீரான முறையில் நிர்வாகத்தை பேணும் விளையாட்டு கழகம் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்ற நன்மதிப்பையும், பாராட்டையும் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தால் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாம் பேசாலை நலன்புரி நிலையத்தில் இருந்த காலப்பகுதியில் மாவட்ட விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய திரு.ஜேம்ஸ் அவர்கள் உதைபந்து உட்பட சில விளையாட்டு உபகரணங்களை எமக்கு வழங்கி பல்வேறுபட்ட உதவிகளை ஆற்றியிருந்தார்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் 2001ம் ஆண்டு பேசாலை நலன்புரி நிலைய அருகாமையில் அமைந்துள்ள பேசாலையை சேர்ந்த முன்னாள் அயன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் அமரர் றெக்ஸ் குலாஸ் அவர்களுக்கு சொந்தமான காணியை அவரது அனுமதியோடு துப்பரவு செய்து மேதினத்தை முன்னிட்டு மீனவர் கூட்டுறவு சங்க அனுசரனையுடன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடாத்தியிருந்தோம் ,அந்த விளையாட்டு நிகழ்வு மிகவும் கோலகலமாக எமது ஊரவர்கள் மன்னாரில் இருந்து வருகைதந்திருந்த சிறப்பான நிகழ்வாக அமைந்திருந்தது.

இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை வெற்றிநாயகி ஆலய வளாகத்திலும் பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலயத்திலும், பேசாலை பெண்கள் பாடசாலையிலும் கல்வியை தொடர்ந்த எம் மாணவர்களுக்காக நலன்புரி நிலையத்தில் எமக்கென தனியாக எமது ஜோசப்வாஸ் மகாவித்தியாலய பாடசாலையை அமைத்து விளையாட்டு போட்டியை மிகவும் சிறப்பாக நடாத்தியவர்களுள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகமும் முக்கியமானதாகும்.

உதைபந்தாட்டத்திற்கு பேசாலை நலன்புரி நிலைய காணி மணல் பாங்கான இடமாக இருந்ததால் சில நேரம் பத்திமா மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாட பேசாலை விளையாட்டு கழக நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தோம், அதன் பின்னர் முருகன் கோவில் பகுதி நண்பர்கள் சிலரின் ஆதரவுடன் முருகன் கோவில் முடிவு எல்லையில் அமைந்திருந்த புல்தரையான இடத்திற்கு சுமார் 1Km தூரம் வரை சென்று அந்த இடத்தில் ஒவ்வொருநாளும் விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்டிருந்தோம்.

அங்காங்கே நடைபெற்ற கிரிக்கட் போட்டிகளுக்கும், உதைபந்தாட்ட போட்டிகளுக்கும் தலைமன்னார் பகுதிகளுக்கு சென்றிருந்தோம், இன்னும் விளையாட்டு பயிற்சிகளே இல்லாது, பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமல் பள்ளிமுனை மைதானத்தில் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிவரை சென்று இறுதியாட்டத்தில் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக்கழக அணியுடன் தோல்வியுற்றோம்.

மன்னார் நகர பகுதியில் மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட பல போட்டிகளில் பங்குபற்றி பல அணிகளுடனான போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தாலும் சம்பியனாக வெற்றிபெற முடியாமல் சம்பியன் கனவு எமக்கு எட்டாக்கனியாகவே இருந்தது . அந்தகாலப்பகுதியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் அ.எட்வேட், பொ.தயாந்தன், அ.றெஜி ராஜநாயகம், வ.தேவானந்தன், செ.ரென்சிபேர்டினன்ற், செ.எட்வேட்ஜோரச், கி.றவிசங்கர், கி.செல்வராஜ், யே.கமல்றாஜ், சூ.எட்வின் கமல்ராஜ், சி.மரியசேவியர் ,எ.மெலிட்டஸ், வி.பெல்ஸ்ரன், ம.ராஜநாயகம், றூ.றொயிற்றன், செ.எட்வின் கெனடி , புத்தளத்திலிருந்து விளையாட வரும் கீப்பர் போன்ற எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் உதைபந்தாட்ட வீரர்களுடன் நாம் எமது கழகத்திற்காக விளையாடியிருந்தோம்.
மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன முன்னாள் தலைவர் அமரர் அன்ரன் ஆல்வாப்பிள்ளை அவர்கள் எமது கழகத்திற்காக விளையாட்டு உபகரணங்களை வழங்கி பல உதவிகளை நல்கியிருந்தார்.

நலன்புரி நிலையத்தில் ஐக்கிய விளையாட்டுக்கழக செயலாளராக இருந்த காலப்பகுதியில் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் பதிவுசெய்ததுடன் ,இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன அடையாள அட்டையை எமது கழக உறுப்பினர்களுக்கு வழங்க எனக்கு பெரிதும் உதவியவர் எமது முன்னாள் மன்னார் உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் அமரர் அன்ரன் ஆல்வாப்பிள்ளை அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பேசாலை நலன்புரி நிலையத்தில் வசித்த காலப்பகுதியில் எமக்கான விளையாட்டு சீருடை பெறுவதில் அக்காலப்பகுதியில் எமது கழகம் இருந்த பொருளாதார நிலையில் மிகவும் இக்கட்டான நிலை காணப்பட்டது. அந் நேரத்தில் பாக்கிஸ்தானில் தனது கற்கைக்காக சென்றிருந்த எமது மண்ணின் மைந்தன் அருட்சகோதர் மனோ றஞ்சிதன் அவர்கள் மூலமாக அங்கிருந்து நீலம் வெள்ளை நிறத்திலான எமது கழகத்திற்காக சீருடைகளை பெற்றிருந்தோம்.

இடப்பெயர்வால் அனைத்தையும் ஊரில் விட்டுவிட்டு நலன்புரி நிலையத்தில் இருந்த நாட்களில் விளையாடுவதற்கு பாதணிகள் இல்லாதிருந்த வேளையில் எமது மண்ணின் மைந்தனும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களினால் ஒரு தொகுதி பாதணிகள் எமக்கு வழங்கப்பட்டதுடன் அவற்றை மானிய விலை அடிப்படையில் எமது கழக வீரர்களுக்கு எமது நிர்வாகம் வழங்கியிருந்தது.

அதே காலப்பகுதியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் விளையாட்டு வீரன் ஒருவனுடைய என்பு மச்சை சத்திரசிகிற்சைக்காக எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக எமது மக்களிடமிருந்து ரூபா *50000/=* நிதியினை திரட்டி அவ் வீரனுடைய மருத்துவ சிகிற்சைக்காக வழங்கியிருந்தோம்.

நாட்கள் கடந்தன யுத்தம் சுமார் ஒரு வருடத்தின் பின் சற்று ஓய்ந்திருந்து மக்களது அன்றாட நடைமுறைகள் வழமைக்கு திரும்பவே ஊரைவிட்டு இடம்பெயர்ந்து தேவன்பிட்டியில் வாழ்ந்த எமது மக்கள் ஊருக்கு திரும்பியிருந்தார்கள். ஊரில் உள்ள ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஊரில் இருந்த நிர்வாகத்திற்கு உதவியாக இடம்பெயர்ந்த நிலையில் இருந்த நாம் ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகத்தில் ஒரு அங்கமாக செயற்படத்தொடங்கினோம்.

வன்னி பெருநிலப்பரப்பில் மண்ணின் மைந்தர்கள் நினைவு கிண்ணம் , மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு நிகழ்வுகள், முத்துக்கள் மூன்று நினைவு கிண்ணம் ,மண்ணின் மாவீரர்கள் நினைவு கிண்ணம் ,குமரன், ஞாபகர்த்த நினைவு கிண்ணம் ,கீப்பிங் ஸ்ரார் நினைவு கிண்ணம் , முழங்காவில் ,வலைப்பாடு போன்ற அதிகளவு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடைபெற்ற காலத்தில் மன்னாரில் இருந்து சென்று விளையாடியதும் மறக்க முடியாது.

அந்த வகையில் ப.எட்வேட் றாஜா, அமரர் றொ.றொபின்சன், அமரர் சூ.ஜோண்றாஜ், சூ.சர்வானந்தன் (குட்டி) றொ.நிரஞ்சன். ம.பரமானந்தன். வ.தேவானந்தன். செ.ரென்சி. ஸ்ரனிஸ்லஸ் (டெலாஸ்), செ.எட்வின் கெனடி, செ.போல்றாஜ், பொ.தயானந்தன் (வசந்தன்), அ.றெஜீஸ் ராயநாயகம், றூ.றொஜிற்றன், செ.எட்வேட் ஜோர்ச், யே.கமல்றாஜ், வி.பெல்ஸ்ரன், சி.மரியசேவியர், எ.மெலிட்டஸ் போன்றோருடன் இணைந்து அதிகளவு போட்டிகளில் விளையாடியிருந்தோம்.

கடல் பாஸ் கெடுபிடிகள் நிறைந்திருந்த காலம் பூட்ஸ், கடலால கொண்டு போகமுடியாத காலங்களில் கூட தோணியில போய் நாட்கணக்கில் நின்று விளையாடி வென்றுவந்த காலங்கள் அதுவும் மன்னார் பாலத்தடி துறையாலும் வங்காலப்பாட்டு துறை ஊடாகவும் போட்டில் போய் நேவி கிட்ட வந்த நேரம் பூட்ஸ கடலுக்குள் போட்டு அவங்க போனபிறகு திரும்ப எடுத்து கொண்டுபோய் விளையாடிய அனுபவங்களை எளிதில் மறந்துவிட முடியாது.

ஊர் துறையில் எங்களை கண்டவுடன் எங்களுக்கு இருந்த வரவேற்பு இருக்கே அப்பப்பா சொல்லிமீளாது. தேவானந்தன் ,ரென்சி, கமல், பெலிஸ்ரன, றொஜிற்றன், டினேஸ் கிருபாகரன், ஸ்ரனிஸ்லஸ் , போன்றோருடன் அடிக்கடி ஊருக்கு கடலால போய் விளையாடி வந்தோம். பாஸ் எடுப்பதில் இருந்து மூன்று நேர சாப்பாடு நேரம் தப்பாமலும், காலம பயிற்சிக்கு தேத்தண்ணி கிரவுண்டுக்க வருவதிலிருந்து எங்களுக்கு கிடைத்த வரவேற்பு வாழ்க்கையில் மறுக்கமுடியாத நினைவுகள்.

தேவன்பிட்டியில், மூன்றாம்பிட்டியில்,காத்தாங்குளம் ,ஆண்டான்குள மைதானங்களில் நடக்கும் *AGA* டிவிசன் போட்டிகளுக்கு சென்றதும், முழங்காவில், பள்ளிக்குடா, வலைப்பாடு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளுக்கு சென்றதும், வட்டக்கண்டலில் நடைபெற்ற லீக் உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கேற்றதும், குமரன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்று போட்டிகளுக்கு காத்தாங்குள மைதானத்தில் விளையாடியதும், முத்துக்கள் மூன்று வெற்றிக்கண்ண உதைபந்தாட்ட போட்டி, பாலம்பிட்டி,

தட்சனாமருதமடு மண்ணின் மைந்தர்கள் நினைவு கிண்ண போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய நினைவுகளும், வெற்றிக்கொண்டாட்டத்திற்கு மாடறுத்து அருள்மாரி மண்டபத்தில் ஊரே கூடி சாப்பிட்டு மகிழ்ந்திருந்த காலங்கள் என்றும் பசுமையான நினைவுகள்.

நண்பனும் முன்னாள் ஐக்கிய விளையாட்டுக்கழக கோல் காப்பாளருமான ஜோண்றாஜ் அவர்களது இறப்பின் முதலாவது ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடாத்த தீர்மானித்து விடத்தல்தீவு அருள்மாரி மண்டபத்தில் முன்னாள் தலைவர் ஸ்ரனி (மதி) உபதலைவர் அமரர் ஜோண் சகாயராசா அவர்களுடன் நானும் மன்னாரிலிருந்து கலந்துரையாடலுக்காக சென்ற செல்வின், எட்வின், ஆகியோருடன் கலந்துரையாடி எமது கழகத்தால் அமரர் நண்பன் ஜோண்றாஜ் நினைவாக நடாத்தப்போகும் உதைபந்தாட்ட சுற்றோப்போட்டிக்கு நண்பன் ஜோண்றாஜ் நினைவாக "கீப்பிங் ஸ்ரார் " (*KEEPING STAR TROPHY*) வெற்றிக் கிண்ணம் என்று பெயர்சூட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நண்பன் அமரர் ஜோண்றாஜ் அவர்களது சகோதரி அசுந்தா மேரி அவர்களின் நிதிப்பங்களிப்பினூடாகவும் ஊரில் திரட்டிய நிதிப்பங்களிப்பினூடாகவும் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன அனுசரனையுடன் அதன் தலைவர் அமரர் அன்ரன் ஆல்வாப்பிள்ளை அவர்களது நெறிப்படுத்தலின் கீழ் மன்னார் மாவட்ட நடுவர் சங்க நடுவர்களின் பங்களிப்புடன் *2004* ம் ஆண்டு புரட்டாதி மாதம் *5*ம் ,*6*ம் ,*7*ம் *8*ம் திகதிகளில் எமது பாடசாலை மைதானத்தில் எமது கழகத்தால் *KEEPING STAR* வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது பரிசாக *10000/=* ரொக்கபணமும் ,பதக்கங்களும் வெற்றிக்கிண்ணமும் , இரண்டாவது அணிக்கு *5000/=* ரொக்கப்பணமும், பதக்கங்களும், கிண்ணமும் வழங்கப்பட்டது. இவ் போட்டிக்கு எமது மண்ணின் மைந்தன் அமரர் மெரிட்டஸ் (பாப்பு) அவர்கள் கோல் கம்பங்களை எமக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

மேற்படி போட்டியில் வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள சுமார் *35* க்கும் மேற்பட்ட கழகங்களை பங்குபற்றியதில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி இறுதிப்போட்டியில் காத்தாங்குளம் சென் ஜோசப் அணியை *3:0* என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றியிட்டி முதலாவது *KEEPING STAR TROPHY* யை சுவீகரித்துக்கொண்டமை வரலாற்றில் மறக்க முடியாததாகும். இவ் இறுதி போட்டிக்கு எமது மண்ணின் மைந்தனும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கல நாதன் அவர்கள் விருந்தினராக பங்கேற்றிருந்தார்.

இவ் கீப்பிங் ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் இரண்டாவது தடவையாகவும் எமது முன்னாள் கோல்காப்பாளர் அமரர் ஜோண்றாஜ் நினைவின் இரண்டாவது ஆண்டை முன்னிட்டு எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாந்தை மேற்கு பிரதேச கழகங்களுக்கிடையே முன்னாள் தளபதி ஜாண் அவர்களது தலைமையில் வீரப்பிரசவ ஐக்கிய விளையாட்டுக்கழக வெற்றிக்கிண்ணத்திற்காக வட்டக்கண்டல் மைதானத்தில் நடாத்தப்பட்ட லீக் போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் இறுதிபோட்டியில் ஆண்டான்குளம் சென் தோமஸ் அணிக்கு எதிராக *6* கோல்களை பெற்று வெற்றியீட்டிய வரலாறும் மறப்பதற்கல்ல.

பாலம்பிட்டி, தட்சனா மருதமடு மண்ணின் மைந்தர்கள் நினைவு கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் சம்பியனாக வெற்றிவாகை சூடியதும் முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற பசுமையான நினைவுகளும் உண்டு.

காத்தான்குள மைதானத்தில் நடைபெறும் அமரர் குமரன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ,*AGA* டிவிசன் உதைபந்தாட்ட போட்டிகளுக்காக மன்னாரில் இருந்து வந்து விளையாடி வெற்றிவாகை சூடியதும், பலத்த எதிர்பார்ப்புடன் சென்ற வலைப்பாடு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடுவரின் தவறான தீர்ப்பால் அரையிறுதி போட்டியில் தோல்வியுற்றமையும் மறக்கமுடியாததாகும்.
விளையாட்டுக்காக ஊருக்கு வரும் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டுக்கு பஞ்சம் இருக்காது எம்மை ஒருரூபாய் கூட செலவு செய்ய விடமாட்டார்கள் எமக்கு பாஸ் எடுப்பதில் இருந்து காத்தாங்குளம் பொயின்ரில் இருந்தும் ,கடலால வருபவர்களுக்காக ஊர் கடற்கரையில் இருந்தும் விளையாட்டு நடக்கும் இடங்களுக்கு எம்மை ஏற்றிச்செல்ல ஊரவர்களது மோட்டர் சைக்கிள்கள் வரிசையாக காத்து நிற்கும் .

ஊரில் அந்த காலப்பகுதியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் அமரர் சகாயன், ஸ்ரனி (மதி) நிலா கடலுணவு வாணிபம் லக்ஸ்மன் (*LNKG*) இவர்களது பங்களிப்பும் இவர்களால் நாம் பெற்ற உதவிகளும் மன்னாரில் இருந்து விளையாட வரும் எமக்கு வாழ்நாளில் மறக்கமுடியாததாக இருக்கிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை நலன்புரி நிலையத்தில் இருந்த நேரத்திலும் ,ஜோசப்வாஸ் நகரில் இருந்தும் ஊருக்காக விளையாட வேண்டும் என்ற அவாவினால் பல நாட்கணக்காக வெவ்வேறு

இடங்களுக்கு சென்று பல இக்கட்டான நெருக்கடியான சூழ்நிலைகளில் கூட எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காக விளையாடி வெண்று வந்தோம்.

ஜோசப்வாஸ் நகரில் தனியாக கழகம் ஆரம்பிக்க சில ஏற்பாடுகள் நடைபெற்ற வேளையில் அமரர் சூ.இம்மனுவேல், ஸ்ரனி (மதி) நே.லக்ஸ்மன், அமரர் ஜோண் சகாயராஜா போன்ற நிர்வாக உறுப்பினர்கள் ஜோசப்வாஸ் நகருக்கு வருகைதந்து ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் ,மற்றும் ஊர் மக்களோடு நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் தொடர்ந்தும் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக விளையாடுவது என்ற தீர்மானத்தின் பிரகாரம் நடைபெற்ற போட்டிகளில் விளையாடிவந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் எமது இளைஞர்,யுவதிகளின் தேவை கருதி எமது ஜோசப்வாஸ் நகரில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஜோசப்வாஸ் நகர் என்ற பெயருடன் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்த சந்தர்ப்பத்திலும் செயலாளராக பதவிவகுத்திருந்து மேதின விளையாட்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடாத்தியிருந்தோம்.

மேலும் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக மன்னார் சாந்திபுர விளையாட்டு மைத்தானத்தில் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் பனம்கட்டுகொட்டு அணியுடனான போட்டி ஊர் சார்பாக நான் விளையாடிய எனது இறுதி உதைபந்தாட்ட போட்டியாக அமைந்தது.

இவ்வாறு அனைத்தையும் மறந்து எமக்காக எமது ஊருக்காக என்று விளையாட வன்னி எங்கும் அலைஞ்சு திரிஞ்சது என்றும் எமது மனதில் பசுமையே.....

மூத்தோர் சங்க வரலாறு - ஜோசப் வாஸ் நகர்

கடல் அலை தாலாட்டக் கடல் அன்னை கடல் வளங்கள் அள்ளி வழங்க, கடல் காற்று இதமான தண்வீசஇ கிரே. தேவாலயங்களில் மூவேளை செப் மணி ஒலிக்க, திருப்பலிகள், ஆராதனைகள், மக்கள் கிரே. ஆலயத் திருவிழாக்கள் இறைபற்றுடன் மக்கள் நிறைவாக இறைபு, புகழ்பாட புனித அன்னை, புனித யாகப்பர் ஆசிவழங்கி எம் கிராமத்தை காக்க, எம் கிராமம் வாழ்ந்த இந்து, முஸ்லீம் சகோதரர்களுடன் அன்போடு மகிழ்வூடன் பங்குபற்றி எம் விடத்தல் மண்ணில் வாழ்ந்து, எம் முன்னோர் விசுவாச வாழ்வில் செழித்து, கல்வி, கலை, கலாசாரத்துடன் விசுவாச வாழ்வூ வாழ்ந்து, பின் சந்ததியினருக்கு யாம் அளிக்கும் எம் இவைகள் தாம் என சிந்திக்கும் இவ்வேளையிலே போரின் தாக்கம் அதிகரிக்கஇ குண்டு வீச்சுகளும்இ வான் ஊர்தியின் குண்டுகளும் எம் கிராமத்தை அகலக் கொண்ட வேளையிலே இறைவனின் சன்னிதியில் இரு ஆலயங்களிலும் தஞ்சமடைந்துஇ மக்கள் செயலை அறியாது பரதவிக்க, திடீரென எம் கிராமத்தை விட்டு அனைவரும் வெளியேறும்படி செய்ய, போரின் உச்சக்கட்டத்தில் கண்ணீரோடும்,அச்சத்தோடும், பதறிப் பதறிஇ தெய்வத்தின் பாதம் பற்றிப் பிடித்தவர்களாக எம் பூர்வீக கிராமமாம் விடத்தல் தீவில் இருந்து கடல் வழியாக *29.6.1999* அன்று மன்னார் தீவை நோக்கி வெளியேறினோம்.

தொடர்ந்து*30.6.1999*ல்பேசாலை முகாமில்தங்கியிருந்தோம்.அச்செய்திகேட்டுஅமரர்அதிவணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆயர் ஆண்டகை அவர்கள் எம்மை அணுகி, விடத்தல் தீவூ மக்களின் விசுவாசம் குன்றா வண்ணமாய் எழுந்து ஒளி வீச தாங்கள் விரும்புவதாக எம் மக்களுக்கு உறுதியளித்து தோட்டவெளியில் தமக்கு சொந்தமான காணி உண்டு. அங்கு சென்று குடியிருங்கள் என்று எம் மக்களுக்கு ஆசி வழங்கி, அங்கு சிறுகுடிசை அமைக்க செய்து சிற்றாலயம் அமைத்து இறைவழிபாடுகள் நடைபெற வழிவகுத்து, புதிதாக அமைந்த கிராமத்திற்கு “ ஜோசப் வாஸ் நகர்” என்று பெயரிட்டு எம் மக்கள் மகிழ்ச்சியூடன் வாழ, ஆசி அளித்து, எம் மக்களை தம் கண் *100*மூ அன்பில் வைத்து அடிக்கடி எம் மக்களை துன்ப துயரம் அணுகாமல் காத்து நின்றார்.

அவ்வேளையில் ஆயர் தந்தை அவர்கள் தம் தலைமையில் *60* வயதுடையவர்களை மூத்தோர் சங்கத்தில் இணைவிக்கும்படி வண. குரு முதல்வர் விக்ரசோசை அவர்களை எம் மத்தியில் அனுப்பினார். அவர் மூலமாக *2005*இல் எம் கிராமத்தில் முதன்முதலாக மூத்தோர் சங்கம் தோன்றிற்று. ஆயர் தந்தை மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை எம் சங்கத்திற்குப் “ ஜோசேவாஸ்” என்று நாமம் சூட்டினார்.

ஜோசப் வாஸ் நகர் சிற்றாலயத்தில் முதன்முதலாக திரு.ஞா. தேவதாஸ் அவர்கள் தலைவராக, அவர்கள் தலைவி பதவியை ஏற்று கூட்டம் *2005*ல் முதல் தடவையாக ஆரம்பமானது. பின்னர் திரு. அ. இசக்கியேல் – திரு. ஞானமணி ஆகியோர் தலைவராகவும், திரு. ம யக்கோவா செயல்வாளராகவும், திருமதி. மேரி மக்ரலின் பொருளாளராகவும் சங்கக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எம் சங்கம் சமூக சேவைச் குடும்ப பணிமன்றத்தில் பதிவூ செய்யப்பட்டு குடும்பப் பணிமன்ற ஆணையாளர் தலைமையில் கண்காணிக்கப்பட்டு நடக்கிறது.

பின்னர்இ மூத்தோர் சங்கம் நடத்த சொந்தமான இடம் தேவை எனத் திரு. அ. இசக்கியேல் தலைவர் அவர்கள் பங்குத்தந்தை வண. இரா. இராயநாயகம் அடிகளாரின் பணிக்காலத்தில் பங்குத்தந்தையின் ஆசிவழியும் மீன்பிடி சேவை ஊழியர் நலன்புரிபவர்களும் பங்குமக்கள் சங்க உறுப்பினர்கள் தலைவர் திரு. அ. இசக்கியேல் அவர்கள் பணி உறுதியுடனும் உடல் உழைப்புடனும்இ பங்குத்தந்தை வண. இராயநாயகம் அடிகளாரின்இ உறுப்பினர்கள் பங்களிப்பும் அனைவரின் உதவியுடனும்இ தலைவரின் விடாமுயற்சியாலும் புதிதாகக் கட்டிடம் அமைக்கப்பட்டு *1.10.22* அன்று வண. இராயநாயகம் அடிகளார் ஆசிவழி அளித்துஇ மூத்தோர் சங்க கட்டிடம் திறக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்துஇ மூத்தோர் சங்க நிர்வாகம் சக உறுப்பினர்கள் யாவரும் அதையிட்டு மகிழ்ந்தோம். ச் சங்கக் கூட்டம் மாதம் ஒருமுறை நடைபெறுகிறது. பங்குத்தந்தையர்கள் எம் சங்கத்திற்கு வருகை தந்து எமக்கு உடல் மற்றும் உள்ள ஆலோசனைகள் தந்துஇ “மூத்தோர் இரண்டாம் மழலைகள்” என எமக்கு மகிழ்வு+ட்டிச் செல்வர்.

எம் சங்கம் ஆயர் தந்தையின் கண்காணிப்பில் இருப்பதால்இ கிறிஸ்துமஸ் ஒளி விழாஇ மூத்தோர் விழாதியானம் போன்ற நிகழ்வுகளில் எம் சங்க உறுப்பினர்கள் அனைவரும் அவ்வவ் வேளைகளில் அழைப்பு விடுக்கப்படுவார்கள். மேலும்இ எம் சங்கம் ஒளிவிழாஇ மூத்தோர் விழாஇ பங்குத்தந்தை இடமாற்றம் ஆகிய தருணங்களில் விழா ஏற்பாடு செய்து மகிழ்கின்றௌம்.

எம் சங்க உறுப்பினர் இல்லத்தில் வழியாரும் இறந்தபின் அப்பணி இல்லத்தில் இறுதிக் கிரியைகளிலும் எம் சங்க உறுப்பினர்கள் செயலில் இருக்கின்றனர். எம் சங்க உறுப்பினர்கள் ஒருவர் மரணம் அடைந்த பின் மரண நிதியினால் ஒரு மரண நிதியம் எம் சங்க உறுப்பினருக்கு வழங்கப்படும். இதை உருவாக்கிய அமரர் மேதகு ஆயர் தந்தை இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களுக்கு வண. அடிகள் குரு முதல்வர் விக்ரசோசை அவர்களுக்கும் குடும்பப் பணிமன்றத்தின் எங்கள் மூத்தோர் சங்க இயக்குநர் குருக்களுக்கும் எங்கள் அங்கம் மேற்பார்வையாளர்களுக்கும் எங்கள் சங்கம் தமது துணிந்த நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

“கோணாமலை எனும் மனிதம் சாய்ந்தது”.

தன் ஆயுள் முழுதும் எங்கள் ஊருக்காக உழைத்த “கோணாமலை” ஐயா இறைவனடி சேர்ந்தார்.

பெயருக்கு ஏற்றால் போலவே பார்போரெல்லாம் அண்ணாந்து பாக்குமளவிற்கு ஆறடிக்கு மேல் உயர்ந்து வளர்ந்து கட்டுமஸ்தான முறுக்கேறிய அங்காங்கே நரம்புகள் முறுக்கேறி புடைத்த தோற்றம்.

சாறத்தை மடிச்சு சந்திக்கட்டு கட்டி, வாயில் வெத்திலை சப்பியவாறு, தோளில் துவாயும் சாற மடிப்பில் வெத்தில பாக்கு, சுண்ணாம்பு பைய சொரிகியும் காலுக்கு அவருக்கு அளவான செருப்பு தேடியும் கிடைக்காத செருப்பொன்றை கொழுவிக்கொண்டு செய்யும் தொழிலை மிக நேர்த்தியாக செய்து முடிக்கும் மனிதம் எமது கோணாமலை ஐயா.

கைய கட்டி கட்டின கைய கிழே விடாமல் ,எதுக்கும் முந்தியடிக்காமல் ஏதோ ஒரு ஓரத்தில் நிண்டு தனது தேவைகளை பூர்த்திசெய்ய யாரையும் மனநோக செய்யாதவர், தானுண்டு தன்ர வேலையுண்டு என்று சாதுவாக யாருக்கும் தீங்கு எண்ணாத உத்தமர்.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இன்றியமையாத அடிப்படை மனித தேவைக்குரிய பணியை கோணாமலை ஐயா அவர்கள் எமக்கும் எமது ஊருக்கும் ஆற்றியமைக்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் அதற்கு ஈடாகா. தன் பணி நாளில் எமக்காகவும் எமது ஊருக்காகவும் உழைத்த மனிதம் எமது வாழ்நாள் தெய்வம் எமது கோணாமலை ஐயா என்றால் அது மிகையாகாது.

ஊரில் எம்மவரது துப்பரவு பணிகளாக இருந்தாலும், ஏனைய வேலைகளாக இருந்தாலும், அலலது நெருக்கமான எமது காணி வேலிகளை அடைப்பதாக இருந்தாலும் அவற்றை நேர்த்தியாக செய்து முடிக்க எமக்கெல்லாம் பரிச்சாத்தமான பெயர் கோணாமலை ஐயா

ஊரில் வேறு சிலர் இவ் வேலைகளை செய்த போதிலும் நேரம் பிந்தாமல் கொடுக்கும் வேலையை சொன்ன நேரத்துக்கு வந்து செய்துமுடித்து வருவதற்கு அவருக்கு நிகர் எவருமிலர்.

குறிப்பாக சொல்லப்போனால் எனது அனுபவத்தில் பக்கத்து வீட்டு காரருக்கு பங்கம் விளைவிக்காத வகையில் ஒரு இஞ்சி அளவு கூட தப்பாத வகையில் நடு வேலிக்கட்டைகளை போடுவதில் மனுசன் நேர்மையாளன். சுத்துமதில் அத்திவார கிடங்கு, மலசல கூட குழிக்கிடங்கு, அச்சுப்பிசகாத கிடுகு அடைப்பு ,கம்பி வேலிக்கு முள்ளுக்கம்பி இழுத்து கொண்டி அடிக்கிற நேர்த்தி இருக்கே அப்பப்பா அவருக்கு நிகர் அவரேதான்.

பஞ்சிப்பட்டு வேலை செய்வது அவரது இயல்பிலில்லை, பார்ப்போரெல்லாம் “இந்த வேலி கோணாமலை அண்ணன் அடைச்சதுதானே “ எண்டு சொல்லுமளவுக்கு அவரது நேர்த்தியான வேலை அவருக்கு சான்றுபகரும்.

வளஞ்சு ,நெழிஞ்சு இருக்கும் வேலிக்கட்டைகள் கூட இவரது கை பட்டதும் நேராக நிமிர்ந்து சலியூட் அடிக்கும்,தான் வேலிக்கட்டைகள் போடும் போது அயல்வீட்டாரையும் கூப்பிட்டு அவர்கள் முன்னிலையிலே கிடங்கு கிண்டி கட்டை போடுவது இவரது நேர்த்தியான, நேர்மையான வேலைக்கு எப்பவுமே சான்றுகள்.

இப்படியாக கோணாமலை ஐயா தனது வாழும் நாட்களில் எமக்கும் எமது ஊருக்கும் செய்த பணிகள் ஏராளம். உங்கள் இறப்பு செய்தி கேட்டதும் ஐயா நீங்கள் எமக்கு செய்தவைகளை எண்ணி உங்கள் இரு கரங்களையும் இறுக பற்றி உங்கள் பாதத்தில் கண்ணீர் பூக்களை காணிக்கையாக அஞ்சலித்து உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் அமைதியில் இளைப்பாற பிராத்திக்கின்றோம்.

ஊருக்கு கொடுத்து உதவி செய்த சலமோன் அவர்கள்.

VAJ உரிமையாளர் அமரர் ய .சலமோன் அவர்கள்.

பொழுது விடிய காலம சந்தியோகுமையோர் கோயில்ல பூசைக்கு போகப்போற நேரம் ஒத்த கையில சாவிக்கொத்தும் கிப்ஸ் சாறத்த மற்ற கையால உயத்தி பிடிச்சுக்கொண்டு புள்கை சேட்ட 2 தெறி திறந்துவிட்டு புலிப்பல் சங்கிலி தெரிய முறுக்கு மீசையோட தனது வாடிக்கு ஒவ்வொரு நாளும் நடந்து போகும் ராஜநடை இன்றும் நினைவுக்கு வந்துபோவதுண்டு.

இரண்டு இஸ்சுஸ் லொறி , மூன்று கன்டர் , வண் ரூ பைவ் மோட்டசைக்கில் என காலடியில் வாகனங்கள் ,சொத்துக்கள் மற்றும் ஏராளமான பண புழக்கம் இருந்தும் எந்தவிதமான பந்தாவும் இல்லாமல் சாதாரணமாக தனது நண்பர்களுடன் பொழுதை கழித்து மகிழ்ந்த மனிதர்.

மேடைகளில் முதல் இருக்கையை விரும்பாதவர். தான் என்ற கர்வம் இவரிடம் அறவே இல்லை. ஆலய கட்டுமான பணிக்கும் ,ஆலயத்தின் ஏனைய தேவைகளுக்கும் ஆன்மீக தேவைகளுக்கும் முதன்முதலில் உதவிசெய்ய நீளும் கை இவருடையதே.ஊரின் அடிப்படை தேவைகளாக காணப்பட்ட கல்வி ,விளையாட்டு , கலை கலாச்சாரம் மற்றும் ஆன்மிகம் ஆகியவற்றில் இவரிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்டவை அதிகம்.

அந்த வகையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மண் நிரப்ப எமது ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு துணை நின்றார்.பாடசாலை விளையாட்டு போட்டி மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கு உதவியதுடன் பாடசாலை தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளத்தையும் வழங்கியிருந்தார்.எமது ஊரில் மேடையேறும் வரலாற்று நாடகங்கள் ,வாசாப்புக்கள் போன்ற கலை நிகழ்வுகளில் சக கலைஞனாக பங்கேற்பதுடன் அதற்காக ஏற்படும் செலவுகளின் ஒரு பகுதியை பல முறை இவர் கையேற்றுமிருக்கிறார்.

விளையாட்டை பொறுத்தமட்டில் எமது ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு அளப்பரிய உதவிகளை வழங்கி தீவிர ரசிகனாக வலம் வந்தவர். திரவுகுளம் நிரப்ப ,பாடசாலை விளையாட்டு மைதானம் நிரப்ப ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு துணை நின்றார்.நிதி உதவிகளை வழங்கி வாகன வசதிகளை செய்து தந்த உத்தமர் என்றால் அது மிகையாகாது.ஊரின் ஆன்மிக தேவைகளில் குறிப்பாக மறைபரப்பு நிகழ்வுகளுக்கு நிதியையும் மற்றும் தவக்கால தாக சாந்தி குளிர்பானங்களை தனது வாகனத்தில் வைத்து வழங்கும் உயரிய பண்பையும் கொண்டிருந்தார்.

இவரிடம் இருந்த பண பலத்திற்கும் மக்களின் செல்வாக்கிற்கும் , ஊரை பிரித்து பல கழகங்களை தோற்றுவித்து ,பிரிவுகளை உண்டுபண்ணியிருக்கலாம் ஆனால் சிறிதளவேனும் அந்த அற்ப புத்தி இவருக்கு அறவே இருந்ததில்லை.

இவருடைய காலத்தில் இப்ப இருக்கும் இன்டர்நெட் வசதி ,வட்சாப் ,முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களில் சிலர் செய்வதை போல் தம்மை பிரபல்யம் ஆக்கி பேட்டி குடுத்ததோ அல்லது நான் தான் இத்தனை காலமும் ஊருக்கு இதை செய்தேன் , அதை செய்தேன் என்றோ இவ்வளவு பணத்தை செலவழித்தேன் என்றோ பொது இடங்களில் சொல்லி திரியவே இல்லை.

அத்துடன் விடுதலை புலிகள் உங்கள் கடலுணவு வாணிபத்திற்கு ஒரு பெயர் சூட்டுங்கள் என பணித்த நேரம் அவருடைய நெருங்கிய நன்பர்களில் ஒருவர் புனித யாகப்பர் வாணிபம் என பெயர் வைக்க இவரை சொல்ல "இந்த பெயரை வைத்து ஊருக்குள் பிளவை ஏற்படுத்தவோ அல்லது ஏனைய ஊரவர்களின் நன்மதிப்பை இழக்க மாட்டேன் என்று அந்த பெயரை நிராகரித்து குழந்தை இயேசு கடலுணவு வாணிபம் என்று பெயரிட்ட சிந்தனையாளர்.

இன்னும் தனது கடற்றொழிலாளர்களின் ஒரு ரூபாயை கூட கணக்கில் வைத்துக் கொடுப்பதில் சிறந்த முதலாளி இவர்.இறுதியாக சாலமோன் என்ற றிசேவ் பேங் ஏ.ரி.ம் மிசினிலிருந்து எமது ஊர் பெற்றுக்கொண்ட பண உதவிக்கும் ஏனைய உதவிகளுக்கும் அளவே இல்லை.

எமது ஊரினதும் எமது ஐக்கிய விளையாட்டு கழகத்தினதும் வாழ் நாள் சாதனையாளன்
அமரர்.ய. சலமோன் அவர்கள்.

50 வருடங்களை கடந்த கிராமத்தின் அடையாளம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

விடத்தல்தீவு வரலாற்றில் ஐக்கிய விளையாட்டு கழகத்தை உருவாக்கிய ஸ்தாபகர் முன்னாள் பங்குத்தந்தை அமரர் அருட்பணி றெஜிஸ் இராயநாயகம் அடிகளார். 1975 ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் நிர்வாகத்தின் முதலாவது தலைவராக யா.ஞானசீலன் அவர்களின் தலைமையிலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிப்பவனி வந்தது என்றால் அது மிகையாகாது.

மாந்தை பெருநிலப்பரப்பில் அதிகளவு இளைஞர் யுவதிகளை கொண்டு A B C என ஒரே கழகத்தில் அணிகளை கொண்டு, விளையாட்டு நிகழ்வுகளில் குறிப்பாக உதைபந்தாட்டத்திலும் வலைப்பந்தாட்டத்திலும் பல வெற்றிகளை பெற்ற எமது ஐக்கிய விளையாட்டு கழகம் . எமது பாரம்பரியங்களை ,கிராம கலாச்சாரங்களை ,கிராம ஒற்றுமையை வலுப்பெற செய்ய முன்வருவோம்.

50 வருடங்கள் கடந்தும் ,சல சலப்புகளுக்கு அஞ்சாமல் வெற்றிப்பவனி வரும் கிராமம் சார் ஒரேயொரு கழகம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஏனெனில் அதன் ஆரம்பம், ஆரம்பித்தவர் ,அதன் நோக்கம் என்பவையே முக்கிய காரணிகளாக சான்று பகர்கின்றன.

அமரர் . செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் நினைவலைகளில். ....

நாம் வாழும் நாட்களில் எம்மோடு வாழ்ந்து மறைந்துபோனவர்களை, அவர்களுடைய செயற்பாடுகளை, அவர்கள் விட்டுச்சென்ற நினைவுகளை எளிதில் மறந்துவிட முடியாது. அந்தவகையில் தன்னுடைய வாழ்நாட்களில் பலரை தன்பால் ஈர்த்தவரும் பல நினைவலைகளை மீள்கொணரக்கூடியவகையில் வாழ்ந்து இறந்தபோனவர் தான் அமரர் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள்.

அமரர் செபஸ்சியாம்பிள்ளை அவர்கள் இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் பேரூந்து நடத்துனராக எமது கிராமம் உட்பட பல கிராமங்களில் சேவையாற்றி பலராலும் அறியப்பட்டவர். பேரூந்து நடத்துனராக பணிபுரிந்த நாட்களில் மற்றவர்களை மகிழ்வித்து , தனது பகிடி கதையாலும், நகைச்சுவையான செயலாலும் சிரிக்கவைப்பது இவரது இயல்பாக இருந்தது.

மூன்று ஆண் பிள்ளைகளையும், மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்று மனைவி பிள்ளைகளுடன் ஊரில் வாழ்ந்த காலத்தில் நாட்டு பிரச்சனை காரணமாக தனது இ.போ.ச.நடத்துனர் சேவையை இடைநிறுத்தி தனது வீட்டில் ஒரு சிறிய சைக்கில் திருத்தும் கடையையும், பழைய பேக்கரிக்கு பக்கத்தில் ஒரு கடையை சைக்கில் திருத்தும் கடையாகவும் கொண்டிருந்தார்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதை போல தான் செய்யும் தொழிலில் நேர்த்தியையும், தொழில் தர்மத்தையும் கொண்டிருந்தார். சுத்தியல், குறடு, ஆணி அலவாங்கு, இவை அணைத்தையும் பாடசாலை வேலி அடைக்க ,உடைஞ்ச கதிர மேச திருத்த, பள்ளிக்குட தோட்டத்துக்கு வேலி அடைக்க என இவர் கடையில் இருந்து நண்பன் றென்சி கொண்டுவருவது வழமையாக இருந்தது. அந்த காலத்தில் நான் கண்டு வியந்த சம்பவம் அவருடைய கையெழுத்து, மாட்டுத்தாள் உறை போட்டு மிகவும் அழகான கையெழுத்தில் நண்பன் றென்சியின் பெயர், பாடத்தின் பெயர், புத்தகத்தின் பெயர், என்பவை மிகவும் நேர்த்தியாக எழுதிக்கொடுத்து பள்ளிக்குடத்துக்கு அனுப்புவார்.

அந்தநேரம் பெச் ஒட்ட சொலுசன் இல்லாத தட்டுப்பாடான காலம் அடிக்கடி நாங்க விளையாடும் பந்து பெச்சாப்போகும், எங்கட பூட்ஸ் பிஞ்சு அடுத்தநாள் கொண்டு போனால் ஒருக்கா அண்ணாந்து பாத்துவிட்டு பந்துக்கு பெச் ஒட்டி தந்து பூட்ஸ் யும் தைச்சுத்தருவார் . IAS முத்தரை பொறிக்கப்பட்டதை போலவேதான் இவர் பாவிக்கும் பொருட்களில் SMF என்று எழுதப்பட்டிருக்கும். சருவ குடத்திலும் SMF ,சைக்கிலிலும் SMF, இப்படியாக இவர் வீட்டில் அனைத்திலும் SMF என்று எழுதப்பட்டிருக்கும்.

வெத்தில, பாக்கு , சுண்ணாம்பு பையுடன் காற்சட்டை அணிந்து, சாறத்தை கட்டி ,கண்ணில் கண்ணாடியை கொழுவிய வண்ணம் வெறும் மேலுடன் தன்னுடைய தொழிலை செய்யும் தொழில்பக்தி நிறைந்தவராகவே இவரை நான் பார்த்ததுண்டு.

தமது வீடாக இருந்தாலும் சரி,அவரது பிள்ளைகளின் வீடாக இருந்தாலும் சரி எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டு தன்னந்தனியாக செய்து முடித்திடுவார், வேலியடைப்பு, வீட்டு மேச்சல் மேற்பார்வை, கிடங்கு கிண்டுதல், கல்லரிதல், என அனைத்தையும் நேர்த்தியாக செய்துமுடிக்கும் தன்மைகொண்டவர்.
இவரிடமிருந்து கற்றுக்கொண்டது பல. கோவிலுக்கு சென்றால் என்ன ,என்ன அலுவலாக இருந்தாலும், எந்த கொண்டாட்டமாக இருந்தாலும், என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும் புருசனும் பொஞ்சாதி சகிதமாக வயது முதிர்ந்த போதும் இருவரும் சேர்ந்தே செல்வது இவரின் பண்புகளில் பின்பற்றக்கூடியவற்றில் முதன்மையானது, அவ்வளவு ஏன் ஒப்பாரி படிக்கக்கூட போவதென்றாலும் இருவரும் சேர்ந்தே இணைபிரியாத சோடிகளாக செல்லுவது கண்டு வியந்ததுண்டு.

இயல்பிலேயே கலைநயம் மிக்கவரான இவர் இனிமையான குரல் வளத்தை கொண்டு பாடும் ஆற்றலை கொண்டிருந்தார். ஊரில் அரங்கேறிய பாஸ், நாட்டுக்கூத்துகள், மேடை நாடகங்கள், கச்சேரிகளில் கலைஞனாக முக்கிய வேடங்களில் பங்கேற்றியவர். எமது காலத்தில் நாம் கண்டுகளித்த சந்தியோகுமையோர் நாட்டுக்கூத்து, தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து என்பன இவர் பங்கேற்று நடித்த நாடகங்களில் சிறப்புமிக்கவை. இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு நாட்களிலிலும், ஆலய திருவிழா நாட்களிலும், இறப்பு வீடுகளில் எம்மவர்களால் பாடப்படும் ஒப்பாரி, தாளிசை, கவி போன்றவற்றில் ரசித்து கேட்டு உணரும் குரலில் இவருடைய குரலுக்கு தனிச்சிறப்பு இருந்தது.

பாடப்படும் பாடலை உயர்த்தி பாடுவதிலும், பாட்டில் வரும் வசனங்களும், கருத்துக்களும் அனைவருக்கும் விளங்கும்படியாக அறுத்துறுத்து ,ஏற்றி இறக்கி பாடுவது இவரது மற்றுமொரு சிறப்பம்சம் .ஒப்பாரி பாடல்கள் அடங்கிய புத்தகங்களை வைத்து பேணி பாதுகாத்ததும், ஒப்பாரி பாடச்செல்லும் இடங்களில் அனைவருக்கும் பாடல் புத்தகங்களை கொடுத்து தனது முறை வந்ததும் புத்தகத்தை பார்க்காமலே அனைத்து பாடல்களிலும் தனது பாடல் வரிகளை பாடுவதும் இவரின் சிறப்பே .

வானுலா....என தொடங்கும் தாளிசை பாடல் எனக்கு இவர் பாடுவதில் மிகவும் பிடித்த பாடல் ,சந்தியோகுமையோர் கோவில் திருவிழா காலங்களில் இயேசுவின், பாடுகள் மரணம் உயிர்ப்பு காலங்களில் எங்கட வீட்டுப்படியில் இருந்து பாடலை கேட்டு வந்த அந்த நாட்களை மறக்கமுடியாது. வியாகுல பிரசங்கம் வாசிப்பதில் வல்லவர் இவர், தனக்கென்டு ஒரு ஸ்ரையிலில் வாசிப்பார், ஏற்றம், இறக்கம், கமா, முற்றுப்புள்ளி பாத்து அழகாக வாசிப்பார். இவர் உட்பட வாழும் நாட்களில் நாம் பின்பற்றத்தவறிய ,கௌரவிக்க மறந்த ,எம்மூர் கலைஞர்கள் ஏராளம்.

உழைப்பால் உயர்ந்து முதன்முதலில் மாடிவீடு கட்டி, பஸ் சேவையை செய்த வித்தகர்

திருவாளர் துரையப்பா அவர்கள். விளக்குகிறார் வைத்தியர் கிறிஸ்தோதொம் அவர்கள்.

எங்கள் ஐயா சத்தியசீலனின் தாரக மந்திரம் இதுதான் " தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து முந்தி இருக்க செயல்". வார்த்தைக்கு வார்த்தை இதுதான் சொல்வார். ஒவ்வொரு தந்தைக்கும் இதுதான் தாரக மத்திரம்.நம் ஊரில் பல சாதனையாளர்கள் தங்கள் கடின உழைப்பாலும் ,விடாமுயற்சியாலும் வெற்றிபெற்று நம் ஊருக்கு பெருமை சேர்த்தார்கள்.

அனேகமான இளம் தலைமுறையினருக்கு ஞாபகம் இருக்காது. திருவாளர் துரையப்பா, திருமதி கத்தறீனா அவர்கள் குடும்பத்தார்தான் அவர்கள். எங்கள் ஊரில் முதன்முதலாக ஒரு பேரூந்து கொம்பனி ஆரம்பித்து பெருமை சேர்த்தவர்கள். *Rita Bus company* அதன் அது. *Rita* என்பது அவருடைய மகள். அவரின் பெயரால்தான் ஆரம்பித்தார்கள். விடத்தல்தீவு, மன்னார், யாழ்பாண பிராந்தியங்களில் இவர் பேரூந்துகள்தான் ஓடின.

1945 லிருந்து *1958* வரை சேவை தொடர்ந்தது. *1958*ம் ஆண்டு பண்டாரநாயக பிரதமரானதும் பேருந்து கொம்பனிகளை தேசிய மயமாக்கி இவரின் பேரூந்துகளை அரசவசமாக்கிக்கொண்டார். அப்படித்தான்

CTB bus service ஆரம்பமானது. துரையப்பா அப்பாவுக்கு அரசாங்கம் எதுவித நஸ்ட ஈடும் கொடுக்கவில்லை.

துரையப்பா அவர்களின் தண்ணீர் லொறிகளில் மூலம்தான் பள்ளமடு கிணறுகளில் இருந்து தண்ணீர் நம் ஊருக்கு வழங்கப்பட்டது. இவர் ஒரு நெல் அரைக்கும் ஆலையையும் வைத்திருந்தார். எங்கள் வீட்டுக்கு அண்மையில் அந்த ஆலை இருந்தது. நம் ஊர் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் அது ஒரு வரப்பிரசாதகமாக இருந்தது.

இலுப்பகடவை, கள்ளியடி, கோவில்குளம், புதுக்குளம், ஆகிய விவசாயக் கிராமங்களில் இருந்து உளவு இயந்திரங்களில் நெல் மூட்டைகளை கொண்டு வந்து அதை அரிசியாக்கி கொண்டு செல்வார்கள். முதன் முதலாக இரட்டை #மாடி வீட்டை எங்கள் கடைத்தெருவில் கட்டியதும் அவர்தான். *1940* இல் கட்டப்பட்ட அந்த வீடு இன்றும் இருக்கிறது . அத்துடன் இன்னொரு பெரிய வீடும் எங்கள் கோவிலுக்கு அண்மையில் கட்டி சிறப்பாக வாழ்ந்தார்கள்.

Rita அவர்கள் அண்மையில் காலமாகி நம் ஊருல் அடக்கம் செய்யப்பட்டார். துரையப்பா அப்பாவின் மகளின் பிள்ளைகள், குஞ்சு, *Baba*, சின்ன *Baba* வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். மிக குறைந்த அடிப்படை வசதிகள் கொண்ட நம் மண்ணில் இருந்து இப்படியான சாதனையாளர்கள் இருந்தார்கள் என்பது மறக்கவோ மறுக்கவோ முடியாத ஒரு உண்மை. நாமும் உழைப்போம், உயர்வோம்"

தேசிய கலா விபூஷண விருது வென்றார் திரு. அ. அந்திரேஸ் அவர்கள்.

'வாழும் போதே வாழ்த்துவோம்' தேசிய ரீதியில் 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கும் கலாச்சாரத்தை மேம்படுத்த உழைத்தவர்களுக்குமான நான்காவது தேசிய கலா விபூஷணம் 'உலகத் தமிழர் விருது வழங்கும் விழா' 25/2/2023 அன்று மன்னார் பிரதேச செயலகப் பிரிவு பேசாலை சங்கவி பட மாளிகையில் இடம் பெற்றது. இதில் 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த உழைத்தவர்கள் 180 கலைத்துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் #சிற்ப #கலை மற்றும் நாடக கலை நிகழ்வுக்கான விருது எமது கிராமத்தின் திரு. அ.அந்திரேஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், பொன்னாடை போர்த்தப்பட்டு , நினைவு சின்னம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை சிறப்பான முறையில் கலையை முன்னெடுத்துச் செல்லும் நபர்களுக்கும் நடிகர்கள் மற்றும் பாடல் கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

சிற்பக்கலையிலும், இயல் இசை நாடக துறையிலும் சிறப்புற்ற அடைக்கலத்தாரின் வாரிசு

எமது விடத்தல்தீவின் கலைத்தாயின் புத்திரர்களாக தந்தை அடைக்கலத்தாரின் வழிவந்த தனயர்கள் வரிசையில் சிற்பக்கலையிலும், இயல், இசை, நாடக துறையிலும் சிறப்புற்றிருப்பவர்தான் அந்திரேஸ் அவர்கள்.தந்தை அடைக்கலத்தாரின் வழியில் தனது சிறுவயதில் இருந்தே சிற்பங்களை உருவாக்குவதிலும், நாடகங்களை எழுதி மேடையேற்றுவதிலும், பாடல்களை எழுதி இயற்றுவதிலும், சித்திரங்களை வரைவதிலும், ஒப்பனை கலைஞனாகவும், நாடகங்களுக்கான காட்சி அமைப்பு வகைகளையும் வரைவதிலும் கைதேர்ந்த பல்திறமை கொண்ட கலைஞன் தான் எமது அந்திரேஸ் அவர்கள்.

அந்திரேஸ் அவர்களது சிற்ப வேலைப்பாடுகளை நோக்குமிடத்து எமது விடத்தல்தீவில் உள்ள குருசுக்கோவிலில் அமைந்துள்ள ஆண்டவர் சிலுவையில் தொங்குவதை பிரதிபலித்த திருச்சுரூபத்தை சீமெந்தில் செய்திருந்ததுடன், தட்சனாமருதமடுவில் மரத்தில் செதுக்கிய சூரன் சிலையையும், எமது விடத்தல்தீவு முன்னாள் பங்குத்தந்தையாக பணியாற்ற அருட்பணி செல்வநாதன் பீரிஸ் அவர்களது வேண்டுகைக்கு அமைவாக மாதா திருச்சுருபம் ஒன்றை சீமெந்தில் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈச்சளவக்கையில்அமைந்துள்ளகோயிலில்அம்மன்சிலைஒன்றைசீமெந்தின்மூலம்உருவாக்கியிருந்ததுடன் பாலம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் பழமைவாய்ந்த திரையை வரைந்து கொடுத்ததுடன் முருங்கன், ஆத்திக்குளி, இசைமாலைத்தாழ்வு, மற்றும் மாவிலங்கேணி, ஆகிய பகுதிகளில் உடைந்து சேதமடைந்த சிற்பங்களை அவை முன்னர் இருந்ததை போலவே அச்சு அசலாக செய்துகொடுத்திருந்தார்.
உலகம் சுற்றும் வாலிபன் திரைப்படம் வெளியாக முன்பே அதன் கதை, வசனத்தை கொண்டு "உண்மைகள் உறங்குவதில்லை" என்ற பெயரிடப்பட்ட நாடகத்தை பெரியமடு முஸ்லிம் சகோதரர்களை கலைஞர்களாக

கொண்டு 1976ம் ஆண்டு மேடையேற்றிய பெருமை அந்திரேஸ் அவர்களையே சாரும்.
அந்திரேஸ் அவர்கள் புரட்சி நாடகங்களையும், கிறிஸ்து பிறப்பு பற்றிய நாடகங்களையும், கரோல் பாடல்களையும் ,புரட்சி பாடல்களையும், சரித்திர நாடகங்களான “குழந்தை இயேசு”, “ஏரோது மன்னன்” ,”சூழ்ச்சி” ,போன்றவற்றை எழுதி இயக்கியதுடன் “சூழ்ச்சியின் வீழ்ச்சி”நாடகத்தில் நாடக கலைஞனாக பாத்திரமேற்று நடித்து பலரதும் பாராட்டை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது ஊரில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள், நாட்டுக்கூத்துகள் வரிசையில் இயேசுவின் பாடுகள்,மரணம், உயிர்ப்பை பிரதிபலித்த பாஸ், காத்தவராயன் கூத்து ,மற்றும் தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து போன்றவற்றுக்கு ஒப்பனை கலைஞனாக செயற்பட்டதுடன், நாடகங்களுக்கு தேவையான காட்சி அமைப்புகளை வரைவதுடன், திரைச்சீலை காட்சி அமைப்பு வகைகளையும் ,குறிப்பாக பாலம்பிட்டியில் முத்துமாரி அம்மன் சிலை உருவத்தை ஏழு அரை (7 1/2) அடி உயரத்தில் வரைந்ததுடன் , மணி உடுப்புகளை உருவாக்கி, பிறிஸ்டல் போட் போன்ற உபகரணங்களை கொண்டு அரச கிரீடங்களையும், நாடகத்திற்கு தேவையான வர்ண பூச்சுகளையும் உருவாக்கியிருந்தார்.

அத்துடன் அந்திரேஸ் அவர்கள் பல்வேறுபட்ட விருதுகளையும் , பாராட்டுகளையும் பெற்றுள்ளார். அந்த வகையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் வழங்கிய கலைமதி விருதை 2021ம் ஆண்டு பெற்றுக்கொண்டதுடன், அத்துடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஊடாக வழங்கப்பட்ட கலைஞர் சுவிதம் விருதை 2019 ம் வருடத்திலும் பெற்றுக்கொண்டு கலைத்துறையில் சிறப்பாக பங்காற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் இம்மனுவேல் அன்னமலர் ஆசிரியர் (மலர் ரீச்சர்)

அந்தோனி அந்திரேசு - அருளப்பு அப்புலோனியா தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாக 1951 ஆனி மாதம் 22 ஆம் நாள் பிறந்தார்.

தனது பள்ளி படிப்பை மன்/விடத்தல் தீவு றோ.க.த.க. பாடசாலையில் 23-04-1956 இல் ஆரம்பித்து 1967-ல் க/பொ/த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தார்.
பின்னர் 1969 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22 ஆம் தேதி திருவாளர் சுவக்கீன் இம்மனுவேல் ஆசிரியரை திருமணம் செய்து கொண்டார்.

தொடர்ந்து தனது 20 ஆவது வயதில் ஆசிரியராக தனது பணியை மன்/ சின்னப் பண்டி விரிச்சான் அ.த.க. பாடசாலையில் ஆரம்பித்தார்.
1973 மற்றும் 1974 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதர சான்றிதழ் பத்திரத்தை பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து 1975 ஆம் ஆண்டு தொடக்கம் மன்/ விடத்தல் தீவு றோ.க.த.க.பாடசாலை, மன்/மறத்தி கன்னாட்டி அ.த.க.பாடசாலை மற்றும் மன்/ சிறுக்கண்டல் அ.த.க.பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்து, 1983 இல் மீண்டும் மன்/ விடத்தல் தீவு றோ.க.த.க.பாடசாலையில் ஆசிரியராக கடமை ஏற்று 1998 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

இக்காலத்தில் ஆரம்பக் கல்வியின் வகுதித் தலைவராக சிறப்புடன் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
தொடர்ந்து 15.06.1998 இல் மாவட்டத்தில் மன்னார் வலயக் கல்வி அலுவலகம் மட்டும் செயற்பட்ட காலப்பகுதியில், மன்னார் மாவட்டத்தின் கல்வி வலயத்தில் ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று 30.11.1998 வரை கடமை புரிந்தார்.

தொடர்ந்து மடு வலயக் கல்வி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் மடு வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்ப கல்வி பாட விசேட உதவிக் கல்விப் பணிப்பாளராக (பதில் கடமை) 01.12.1998 தொடக்கம் 31.12.2000 வரை சிறப்பாக பணி புரிந்தார். தொடர்ந்து இடப்பெயர்வு காரணமாக மன்/ விடத்தல் தீவு ஜோசவ் வாஸ் ம.வி பேசாலையில் இயங்கிய காலப்பகுதியில் 02.01.2001 இல் மீண்டும் ஆசிரியராக கடமையை பொறுப்பேற்று மன்/ விடத்தல் தீவு றோ.க.த.க.பாடசாலையில் 31.12.2002 வரை பணிபுரிந்தார். தொடர்ந்து பேசாலையிலிருந்து பாடசாலை தோட்ட வெளிக்கு இடம் மாறிய காலப் பகுதியான 01.01.2003 இல் இருந்து 14.02.2012 இல் ஓய்வு பெறும் வரை ஆசிரியராக 41 வருடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சிறப்பாக பணி புரிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமரர் இ.அன்னமலர் ஆசிரியை அவர்களது குடும்ப பின்னணி பற்றி நோக்கினால், சகோதரன் அலோசியஸ், அவர்களும் சகோதரி அமரர் அலிஸ்மேரி ஆகியோருடன் , பிள்ளைகள் எட்வின் அமல்றாஜ், கோட்வின் விமல் றாஜ். செல்வின் நிமல் றாஜ். அல்வின் கமல் றாஜ். யூட்வின் டிமல் றாஜ் . டிவ்னா பத்மலோஜினி. றொபினா கிறிசாந்தி ஆகிய ஏழு பிள்ளைகளையும் சமூகத்தில் உயர்ந்தவர்கள் ஆக உருவாக்க இவர் அனுபவித்த துன்பங்களுக்கு அளவே இல்லை என்றால் அது மிகையாகாது.

துணை நின்ற தாயாரும், கை கொடுத்த ஆசிரியத் தொழிலும் கூடவே உழைத்த தையல் இயந்திரமும் பிள்ளைகள் கரை சேரத் துணையாகியது. இருப்பினும், நீண்ட கால சுவாச மற்றும் ஈரல் நோய்களால் கடும் சுகவீனமுற்று, பிள்ளைகளினதும் பேரக் குழந்தைகளினதும் வெற்றிக் கனிகளை சுவைக்கும் இப்பருவத்தில் ஆண்டவர் அவரை அழைத்ததன் பேரில் தனது இவ்வுலக பணியில் இருந்து ஓய்வு பெற்று, 09.04.2025 இல் ஜோசப் வாஸ் நகர், தோட்ட வெளியில், அமைதியில் இளைப்பாறினார்".

பள்ளிக்குட நிர்வாகத்தில் ஆரம்ப பிரிவின் பகுதி தலைவராக இருந்து தனது கடமைகளை சிறப்பாக ஆற்றும் பண்பை அவர் கொண்டிருந்தார். விளையாட்டு போட்டிகளின் போது இல்லங்களுக்கு இவரை பொறுப்பாக போட மாட்டார்கள் விளையாட்டு *Committee* யில் இருந்து அனைத்து வேலைகளையும் குறிப்பாக பதிவுகளை ஒழுங்காக மேற்கொண்டு புள்ளிகள் வழங்குதல் ,சான்றிதழ்களை எழுதுதல் போன்றவற்றை சீராக நேர்த்தியாக செய்து முடிப்பார். பாடசாலையில் இடாப்பு பதிவுகளை மேற்கொள்வது இவரது தனிச்சிறப்பாகும். இடாப்பு பதிவுகளை பல வருடங்களாக தொடர்ச்சியாக சரியாக செய்துவந்தது மலர்ரீச்சர் என்றால் அது மிகையாகாது.

மடுவலயத்தில் ஆரம்ப கல்வி உதவி கல்வி பணிப்பாளராக பணியாற்றியிருந்தார். இயல்பிலேயே கதை புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை கொண்டிருந்த அவர் நிறைய கதைப்புத்தகங்களை வீட்டில் வாசித்து வாசிப்பு பழக்கத்தை தனது பிள்ளைகளுக்கு ஊட்டியிருந்தார். ஊரில் குடி தண்ணி பற்றாக்குறையாக பவுசரில் கொண்டு வந்து பைப்படியில் இருந்த வக்கில் நிரப்பி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பது மாதர் சங்க தலைவியாக இருந்த இவரது பணியாக இருந்தது. அதனை சரியான முறையில் செய்துமுடிப்பார். தையல் கலையில் பிரசித்திபெற்ற அவர்க்கு ஓய்வே இருக்காது பள்ளிக்குடம் முடிய மிசினில குந்தினா சாமம் செல்லும் தையல் முடிய. அந்த அளவிற்கு தையல் வேலைகளை இழுத்துப்போட்டு செய்து அதிலே சிறப்பு தேர்ச்சி பெற்றிருந்தார்.

பேசாலை நலன்புரி நிலையத்தில் இருந்து எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் பேசாலை வெற்றிநாயகி ஆலய வளவில் இயங்குவதற்கு உழைத்தவர்களுள் அவரும் ஒருவராவார். இடம்பெயர்ந்த நிலையிலும் எமது பாடசாலை இல்ல விளையாட்டு போட்டியை சிறப்பாக நடாத்தியதில் அவரின் பங்கு அளப்பெரியதாக இருந்தது.

முகாமில் எமக்கான பாடசாலை அமைத்து பிரதி அதிபராக எமது பாடசாலையை ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடாத்திய நிர்வாகத் திறமை அவரையே சாரும். பின்னர் ஜோசப்வாஸ் நகரில் மீளக்குடியேறிய அந்த ஆரம்ப நாட்களில் பாடசாலையை பொறுப்பெடுத்து சிறப்பாக நிர்வகித்திருந்தார்.

மடு வலயத்தில் குறிப்பாக இலுப்பை கடவை, ஆண்டான்குளம், கருங்கண்டல், வட்டக்கண்டல் மற்றும் பண்டிவிரிச்சான் போன்ற இடங்களில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளுக்கும் , தமிழ் தின போட்டி மற்றும் ஆங்கில தின போட்டிகளுக்கும் மாணவர்களை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு நிகழ்விற்கும் பொறுப்பாசிரியர்களாக எம்மோடு அழைத்து வந்திருந்த அந்த நாட்களை மறக்க முடியாது.

எமது பாடசாலை முன்னாள் அதிபர் திரு.விஸ்வராஜா அவர்கள் வன்னியில் இருந்து ஜோசப்வாஸ் நகருக்கு வந்து போவது சிரமமாக இருந்த நாட்களில் பாடசாலையின் அனைத்து பொறுப்புகளையும் தன்னந்தனியாக சிறப்பாக நிர்வகித்த பெருமை அவரையே சாரும் . சில காலமாக மன்னார் கல்வி வலயத்தில் ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகராக பதவிவகித்திருந்தார்.

தேவையில் உதவும் பண்பு அவரிடம் நிறையவே இருந்தது. ஊர் சாந்த பொதுவிடயங்களில் தனது தாராள மனதுடன் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியிருப்பது மறந்துவிட முடியாது.

அவர் தனது வாழ்நாளில் தனது பிள்ளைகளுக்காக அவர்களது சிறப்பான வாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்த, தன்னை உருக்கிய மெழுகாக வாழ்ந்து ,வெற்றிகளை அடைந்த இரும்பு பெண் என்பதில் ஐயமில்லை.

மனித நேயம் என்பதன் மறுவடிவம் இம்மானுவேல் மாஸ்ரர்

இம்மனுவேல் மாஸ்ரர் என்று எமது ஊரவர்களால் மட்டுமன்றி மன்னார் மாவட்டம் தாண்டி பல்வேறுபட்ட இடங்களில் வாழும் மக்களால் அறியப்படுகிற மக்களின் நன்மதிப்பை வென்ற ,விளையாட்டுத்துறையின் முன்னோடியானவர் . விடத்தல்தீவு 7ம் வட்டாரத்தில் சுவக்கின் செபமாலை (முத்தம்மா) தம்பதியினருக்கு மகனாக 11சகோதர சகோதரிகளுடன் பிறந்தார்.

அமரர் சு.இம்மனுவேல் அவர்கள் 1/9/1964 ம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றார். தனது முதல் நியமனத்தில் 1/9/1964ம் ஆண்டு தொடக்கம் 31/1/1966ம் ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் மன்னார் சின்னவலயன் கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக 2 வருடங்கள் பணியாற்றியிருந்தார். தொடர்ந்து 1/2/1966ம் ஆண்டு தொடக்கம் 25/1/1967ம் ஆண்டு வரையான 1வருட காலத்தில் மன்னார் வெள்ளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஆசிரியராக அங்கே சேவையாற்றியிருந்தார்.அதன் பின்னர் 26/1/1967ம் ஆண்டு தொடக்கம் 31/12/1968ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரிய பயிற்சி காலத்தில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் சு.இம்மனுவேல் அவர்கள் விளையாட்டுத்துறையில் பல்வேறுபட்ட சாதனைகளை நிலைநாட்டி முதன்மை வீரனாக வெற்றிக்கிண்ணங்களையும், கேடயங்களையும் தனதாக்கிக்கொண்டார்.

தொடர்ந்து1/1/1969ம்ஆண்டுதொடக்கம்31/12/1970ம்ஆண்டுவரையில்மன்னார்பெரியமுறிப்புஅரசினர்தமிழ் கலவன் பாடசாலையிலும் 1/1/1971ம் ஆண்டு தொடக்கம் 31/8/1971ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மன்னார் விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் பணியாற்றியதுடன் 1/9/1971ம் ஆண்டு தொடக்கம் 31/12/1972ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மன்னார் சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் பின்னர் மன்னார் மாவட்டத்தின் கன்னாட்டி சிறுக்கண்டல் மற்றும் தேவன்பிட்டி ஆகிய பாடசாலைகளிலும் தனது கடமையை சிறப்பாக ஆற்றி ஆசிரிய பணியில் இருந்து ஒய்வு பெற்றிருந்தார்.

ஆசிரியர் திரு சு. இம்மானுவேல் அவர்கள் விடத்தல்தீவின் உதைபந்தாட்ட வரலாற்றில் முக்கியமான இடத்தினை வகிக்கிறார். அவர் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெயவல்லுனர் விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாது, தனது அபாரத்திறமையின் மூலம் மன்னார், மாந்தை பிரதேசங்களில் விடத்தல்தீவுக்கு பெருமை தேடித்தந்தார். இவர்சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும், பயிற்றுவிப்பாளராகவும், நடுவராகவும் திகழ்ந்தார். ஐக்கிய விளையாட்டுக்கழக உருவாக்கத்தில் இவர் முக்கியமான பங்கை வகித்திருந்தார். அக்கலங்களில், எமது வீரர்களை உதைபந்தாட்டத்திலும் ஏனைய விளையாட்டுகளிலும் பயிற்றுவித்து, வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று போட்டிகளில் பங்கேற்க வைப்பதிலும், இவர் முக்கிய பங்காற்றியிந்தமை குறிப்பிடத்தக்கது.

“ON YOUR MARK” என விளையாட்டு போட்டிகளில் விடப்படும் கட்டளையின் கம்பீரமான குரலை கேட்டு கதிகலங்கி பயத்தால் நடுநடுங்கிப்போகும் வண்ணம் இம்மனுவேல் மாஸ்ரரின் நடவடிக்கைகள் அமைந்திருக்கும். வாயில் விசிலுடன் மைதான மூலை முடுக்குகளில் கண்ணும் கருத்துமாக இருப்பார். இவருக்கு தெரியாதே விளையாட்டு சட்ட நுணுக்கங்களே இல்லை எல்லா சட்டவிதிகளையும் அறிந்துவைத்திருர்தார் சு.இம்மனுவேல் மாஸ்ரர் அவர்கள். உள்ளூரில் நடைபெறுகின்ற அனைத்து விளையாட்டுப்போட்டிகளிலும் தலமை நடுவராக தனது பொறுப்பை செவ்வனே செய்துமுடிப்பார். எமது ஊர் தவிர்ந்த வன்னி பெருநிலப்பரப்பெங்கும் குறிப்பாக பாடசாலைகள் அனைத்திலும் இம்மனுவேல் மாஸ்ரின் நாமம் உச்சரிக்கப்படாத இடமே கிடையாது எனலாம் அந்த அளவிற்கு விளையாட்டிற்கு முன்னுதாரனமாக திகழ்ந்திருந்தார்.

ஜோசப்வாஸ் நகரில் இடம்பெயர்ந்த நிலையில் ஜோசப்வாஸ் நகரில் ஒரு கழகத்தை புதிதாக தொடங்கும் எண்ணம் . நிலவியதை அறிந்து விடத்தல்தீவில் இருந்து ஜோசப்வாஸ் நகருக்கு வந்து எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினர்களுடனும் மக்களுடனுமான கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார். விளையாட்டு போட்டிகளுக்காக ஊரில் இருந்து பிற இடங்களுக்கு வீரர்களை கொண்டு சென்று தனது தலமையின் கீழ் பல்வேறுபட்ட போட்டிகளில் பங்குபற்றியதுடன் வெற்றிவாகைகளை சுடவும் காரணகர்த்தாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.
பல அறிவுரைகளை சொல்லி ஆசிரியப்பணி பற்றி வழிகாட்டியவர், பற்பல திறமைகளுக்கு சொந்தக்காரர் அவர். விளையாட்டு ,ஒழுக்கம் ,கல்வி போன்றவற்றுக்கு முன்னோடியானவர். இளமையிலே சிறந்த

கல்வியாளனாகவும், விளையாட்டுக்களில் சிறந்த வீரனாகவும் திகழ்ந்ததுடன் உதவும் மனப்பாங்கு நிறைந்தவருமாவார்.

ஒருமுறை மைதானத்தில் பாடசாலை இல்ல விளையாட்டு போட்டி நடத்துவதற்கான மைதான ஓடு பாதை *(track)* அடிப்பதற்காக பலமுறை பல தேர்ச்சி பெற்றவர்கள் முயன்றும் அவர்களால் சரியான அளவில், சரியான முறையில் அதை செய்துமுடிக்க இயலவில்லை. கூப்பிடுங்கடா வாத்தியார என்டு சொல்லவும் வந்து இறங்கினார் மைதானத்தினுள், ஒரு சில வினாடிகளுக்குள் சரியான அளவில் மைதானத்தில் ஓடு பாதையை தயார்செய்து தந்தார் . இவ்வாறான பல நிகழ்வுகள் ,ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் ,எமக்கும் பல சேவைகளை உதவிகளை வழங்கியிருந்தார்.

சிறந்த மனிதாபிமானியும் சமூக செயற்பாட்டாளருமாகிய திரு. சுவைக்கின் இம்மானுவேல்
ஆசிரியரைப் பற்றிய அனுபவப்பகிர்வு - அன்ரன் லாஸ், டென்மார்க்.

எனது பெயர் திரு அன்ரன் லாஸ். நான் விடத்தல்தீவை பிறப்பிடமாகக் கொண்டவன். 1986 ஆம் ஆண்டிலிருந்து நான் டென்மார்க்கில் வசித்து வருகிறேன். நான் விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றவன். அத்தருணத்தில் தான் எனக்கும் இம்மானுவேல் ஆசிரியருக்கும் நெருக்கமான உறவு ஆரம்பித்தது. நான் ஏழாம் ஆண்டு கல்வி கற்கும் போது அவர் எனது கணித ஆசிரியராக இருந்தார்.

ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு வரைவிலக்கணமாகவே அவரை நான் பார்த்தேன். நிமிர்ந்த கம்பீரமான நடை அவரது தலை முடியின் அழகு, அவர் வேட்டியுடன் வெள்ளை சட்டையுடனும் வருகின்றபோது அனைவரின் கண்ணும் அவரையே பார்க்க தூண்டும் அளவிற்கு புன்சிரிப்புடன் தான் ஒவ்வொரு நாளும் பாடசாலையில் அவரை நான் பார்த்திருக்கிறேன். பாடசாலையில் சிறந்த ஆசிரியராக அவர் செயற்படாத தருணங்களே கிடையாது. ஆனால் பாடசாலைக்கு வெளியே அவர் தனது மாணவர்களுடன் மாணவன் என்று பழகுவதை தவிர்த்து தனது பிள்ளைகள் போலவே அவர்களை நடத்துவது என்னால் இன்றும் மறக்க முடியாத விடயம்.

திரு .இம்மானுவேல் ஆசிரியரிடம் நான் பார்த்து வியந்த பல விடயங்களை எனது அனுபவத்தில் இருந்து உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் ஆசைப்படுகிறேன். இந்த வரலாற்று நாயகனின் ஆசிரிய, சமூக, விளையாட்டு கலை கலாச்சாரம், மற்றும் ஏனைய சமூக சேவைகள், குறிப்பாக தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்று அதனால் அவர் செய்து வந்த சாணக்கியமான அரசியல் செயற்பாடுகள் சிறுவர்களாக இருந்த எங்களை மிகவும் தூண்டியது.

அவரால் தான் எமக்கு சமூகத்திலும் நல்ல பெயர் கிட்டியது, இதைவிட அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்ட தன்னம்பிக்கை என் வாழ்க்கையில் இன்றுவரை என்னை வழிநடத்தி செல்கிறது.

பாடசாலைக்கு அவர் ஆற்றிய சேவை.

அவருடைய ஆசிரியர் சேவை காலத்தில் மன்னாரில் பல இடங்களிலும் பணி செய்து. மிகவும் நல்ல ஒரு பெயரைப் பெற்று 1977 வது காலப்பகுதியில் அவர் எமது பாடசாலையான மன்/ விடத்தல் தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் ஒரு கணித ஆசிரியராக இருந்தாலும் எமது கிராமத்தின் மாணவர்களின் வளர்ச்சிக்காக தன்னை பல வழிகளில் அர்ப்பணித்தார்.

சிறப்பாக பாடசாலை நேரம் தவிர்ந்த மாலை வேலைகளில் அனைத்து வகுப்புகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை குன்றும் குழியுமாக இருந்த ஒரு சிறு இடத்துக்குள் தட்டு எறிதல், குண்டு எறிதல், ஓட்டப்போட்டி நீளம் பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய பல விளையாட்டுகளை மாணவர்களாகிய எமக்கு கற்றுக் கொடுத்தார்.

எமது வளர்ச்சியை பார்த்து ஒவ்வொரு நாளும் ரசித்த மனிதர்களில் எனது ஆசிரியரை மிஞ்ச ஆட்கள் இல்லை என்றே கூறுவேன். ஏனென்றால் அவரின் கைகளால் ஒவ்வொரு முறையும் செதுக்கப்படும் சிலைகளாக எங்களை மாற்றினார். எமது மாணவர்களின் விளையாட்டு துறை சார் வளர்ச்சியை ஊக்குவிக்கும் முகமாக எங்கள் பாடசாலைக்கு அருகில் இருந்த காணிகளில் குடியிருந்த மக்களிடம், பாடசாலையின் எதிர்கால தேவையும் சமூகத்தின் தேவைகளையும் வலியுறுத்தி மிகவும் அன்பான முறையில் பேரம் பேசி, பாடசாலை அருகில் பாடசாலைக்கு என ஒரு விளையாட்டு மைதானத்தை அவரே நின்று மேற்பார்வையிட்டு உருவாக்கிய பெரும் பங்கு எனது இமானுவேல் ஆசிரியரே சாரும்.

விளையாட்டு துறையில் எனது ஆசிரியரை மிஞ்சுமளவுக்கு மன்னார் மாவட்டத்தில் யாரும் இருக்கவில்லை. ஏன் நான் அதை கூறுகிறேன் என்றால் கீழ்மட்டம் தொடக்கம் கல்வி திணைக்களம் வரை அவருக்கு தெரியாத நபர்களே கிடையாது. அவர் மிகச்சிறந்த விளையாட்டு வீரன் என்பதனை ஒவ்வொரு முறையும் அவர்

எங்களை அடம்பன் மற்றும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற காலத்தில் அவர் எங்களை உழவு இயந்திரங்களில் ஏற்றிக்கொண்டு தானும் அதே உழவியந்திரத்தில் எங்களுடனே பயணித்து வந்ததும் அவர் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்பு அவரை சுற்றி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நாளும் பல நடுவர்கள் வேறு பாடசாலை ஆசிரியர்கள் ஒன்று கூடி அவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட விதங்கள் எம்மை இப்போது மெய்சிலிர்க்க வைக்கிறது.

விளையாட்டு துறையில் ஏதாவது வந்துவிட்டால் எனது ஆசிரியர் இம்மானுவேல் சொல்வதை மட்டும் தான் கடைசி முடிவாக ஏற்றுக் கொண்ட காலம் அது. எமது ஆசிரியரின் அளப்பெரிய அர்ப்பணிப்பினால் சென்று வந்த போட்டிகளில் எல்லாம் குறிப்பாக வலைப்பந்தாட்ட போட்டிகள் தொடக்கம் மற்றைய ஏனைய போட்டிகளில் எமது பாடசாலை பல சாதனைகளை குவித்தது. அவரின் காலம் தான் எமது பாடசாலை விளையாட்டு துறையில் கொடிகட்டி பறக்க ஆரம்பித்தது. வீறு கொண்ட நடையும் நிமிர்ந்த பார்வையும் அழகான தோற்றமும் கொண்ட எனது ஆசிரியன் தான் நான் பல தடவைகள் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் முதல் இடங்களை அள்ளிக் குவிக்க வித்திட்ட மகான். எனது மனதில் நாங்கள் அடைந்த மாபெரும் வெற்றியை நாங்கள் குவித்த வெற்றி கிண்ணங்களையும் கேடயங்களையும் பாடசாலையில் வைத்து எம்மை கௌரவித்து அழகு பார்த்த எனது ஆசிரியனை வர்ணிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை.

இது இவ்வாறு இருக்க தியூசியான் 400 மீற்றர் ஓட்டத்திலும், கில்லரி 800 மீற்றர் ஓட்டத்திலும் முதலிடங்களை குவித்தும் வந்தார்கள். இந்த வெற்றி கேடயங்களுடனும் கிண்ணங்களுடனும் விடத்தல்தீவை அடையும் வரை பெரும் திருவிழா கோலம் போலவே அக்காலங்கள் காட்சியளித்தன. எனது ஆசிரியரின் வருகைக்குப் பின்பு தான் நாங்கள் பல இடங்களுக்கு சென்று விளையாட்டு துறையில் எங்களை நிரூபித்து காட்ட சரியான சந்தர்ப்பங்களை உருவாக்கி தந்தார். விட்டில் பூச்சியாக இருந்த என்னை விமானம் ஆக்கியவன். நாங்கள் முதல் முறை சென்ற அந்த விளையாட்டுப் போட்டியிலேயே அவர் அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் சிறந்த ஆசான் என்பதற்கான மிகச் சிறந்த விருதினை வழங்கி பல ஆசிரியர்கள் புடைசூழ கௌரவித்தனர். அப்போது எல்லாம் மன்னாருக்கு செல்வது ஏதோ வெளிநாட்டுக்கு செல்வதைப் போல ஒரு உணர்வு, நாங்கள் அனுபவித்த அந்த சந்தோஷத்தினை எங்களால் வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அவை மிகவும் பசுமையான காலங்களே.

விடத்தல் தீவு மண்ணுக்கு அவர் ஆற்றிய சமூகப் பணி.

அக்காலத்தில் விடத்தல் தீவு தமிழ் மக்கள் குறிப்பாக கிறிஸ்தவர்கள் இரண்டு பகுதியாக வாழ்ந்தனர். ஒரு சாரார் புனித யாகப்பர் ஆலய பகுதிகளிலும் ஏனையோர் புனித அடைக்கல மாதா ஆலய பகுதிகளை அண்டி வாழ்ந்து வந்தனர். . தற்போது அந்த நிலை மாறி இருப்பது ஓரளவு சந்தோஷத்தையே கொடுக்கிறது.

ஆனாலும் இவ்விரு சாராரும் ஒன்றாக ஒற்றுமையாக சேர வேண்டும் என்பதற்காக புனிதர் யாகப்பர் பகுதியில் இருந்த எனது ஆசிரியரான இம்மானுவேல் அவர்களும் அவரால் ஊக்கப்படுத்தப்பட்ட மற்றொருவரும் மாதா கோயில் பக்கம் இருப்பவர்களை மாறி மாறி திருமணம் செய்து கொண்டால் இப்பிரச்சனைக்கு தீர்வாகலாம் என்று அதை செய்தவரும் எனது ஆசிரியர்தான் அதற்கு ஊக்குவித்தவரும் எனது ஆசிரியர் தான். இவற்றைத் தாண்டி கிராமத்தில் இரண்டு பிரிவாக விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களை ஒரு கழகமாக கட்டி எழுப்பி அவர்கள் பல வெற்றிகளை குவிப்பதற்கு ஆசை கொண்ட அன்றைய பங்கு குருவானவர் அருட்திரு. றெஜீஸ் ராஜநாயகம் அவர்களின் பரிந்துரையின் கீழும் இம்மானுவேல் ஆசிரியரின் முயற்சியாலும்,மற்றும் சிலரின் முயற்சியாலும் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டு கழகம் என்ற கழகத்தை உருவாக்கி அது பல வெற்றிகளை குவிப்பதற்கு வழிவகுத்தத்துடன் ஒரு வகையில் விடத்த தீவின் ஒற்றுமையையும் உலகுக்கு கூறக்கூடிய ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

இன்றும் அந்த ஐக்கிய விளையாட்டு கழகம் மாவட்ட மட்டங்களிலும் மாகாண மட்டங்களிலும் அதன் திறமைகளை வழிகாட்டி பெறுவது மிகவும் சந்தோஷம் அளிக்கின்றது. அன்று அவர்கள் போட்ட விதை என்ற ஆலமரமாக கிளை பரப்பி நிற்பது எமது மக்களின் ஒற்றுமையை உலகுக்கு பறைசாற்றுகிறது இதன் அச்சாணியாக செயல்பட்ட எனது ஆசிரியரே நான் மிகவும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

அரசியல் மற்றும் கலாச்சார பணிகள்.

ஆசிரியர் இம்மானுவேல் ஒரு சிறந்த தமிழ் பற்றாளன். ஒரு வகையில் எமது ஊரில் அவர் ஒரு மாற்றத்தை உருவாக்கும் விடிவெள்ளியாக திகழ்ந்தவர். ஏனென்றால், ஒடுக்கப்பட்ட தமிழினத்திற்கு ஒரு பூரண சுதந்திரம் நிச்சயம் வேண்டும் என உணர்ந்ததால் அவர் தமிழரசு கட்சியின் ஒரு உறுப்பினராகவும், மிகவும் அர்ப்பணிப்பு உள்ள ஒரு தொண்டனாகவும் தேர்தல் காலங்களில் அவரை நான் பார்த்திருக்கிறேன்.
அவரது தமிழ் பற்றினையும் அரசியல் ஈடுபாட்டினையும் கூறுகின்ற போது எனக்கு அவர் பற்றி ஒரு நல்ல ஞாபகம் எழுதுகின்றது. தமிழிலும் எமது சமூகத்திலும் நடக்கின்ற சமூக அநியாயங்களை அடக்குமுறைகளை

தோலுரித்துக் காட்டுவதற்காக அவர் பல நாடகங்களை மாணவர்களாகிய எங்களை உபயோகித்தும் அரங்கேற்றம் செய்து வந்தது இப்போதும் என் கண் முன்னே இருக்கின்றது. அதில் சில நாடகங்களில் நானும் நடித்துள்ளேன். என்னை பொறுத்தவரையில் ஒரு குயவன் கையில் மட்பாண்டம் போல எனது பாடசாலை பருவத்திலேயே மிகவும் அக்கறை எடுத்து என்னையும் என்னை போன்றோரையும் அழகாக வனைந்து இந்த சமூகத்துக்கு வழங்கிய பெருந்தொண்டினை ஆற்றிய மாமனிதர் அவர். எனது ஆசிரியரிடம் இருந்து நான் கற்றுக் கொண்ட பல விடயங்களை என்றும் என் வாழ்க்கையில் நான் கடைப்பிடித்து வருகிறேன். குறிப்பாக தன்னம்பிக்கை, திட்டமிடல், விடாமுயற்சி, மற்றும் மனம் உடைந்து போகாத உறுதியான நிலை என்பவற்றை கூறலாம்.

வர்மக்கலை.
ஆசிரியர் இம்மானுவேல் பல திறமைகளை தன்னகத்தே கொண்ட ஒரு பல்கலைக்கழகம்.அவரிடமிருந்து அசாத்தியமற்ற திறமைகளில் மிக முக்கியமான என்னைக் கவர்ந்த திறமை அவரிடமிருந்த வர்மக்கலை என்பதை கூறினால் ஆச்சரியமில்லை. அவர் அந்த கலையினை தனது சொந்த தேவைக்காக கற்றிருந்தார் தவிர மற்றவர்களுக்கு தீங்கு செய்வதற்காக அல்ல. ஆனாலும் அவர்களுக்கு எதிரிகள் அன்று யாருமே இருக்கவில்லை.

அவருக்கு அருகில் செல்லவும் பயப்படுவார்கள். நான் வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்காக மன்னாருக்கு சென்றேன். அப்போது தெருவில் சண்டை செய்து கொண்டிருந்த ஒரு ஒரு பையனை அழைத்து அவனது கழுத்து அருகில் கையை வைத்து ஏதோ செய்தார் அவன் கழுத்தை திருப்ப முடியாமல் அழுது கொண்டிருந்தார். அவன் அவரிடம் இனிமேல் நான் யாருடனும் சண்டை செய்ய மாட்டேன் நான் செய்த தவற்றை உணர்ந்து மன்னிப்பு கேட்கிறேன் என்று கூறியதன் பின்னர் தான் அவனுடைய கழுத்து பிடிப்பை மீண்டும் அவர் சரி செய்து விட்டார். இது போன்ற பல விடயங்களை அவர் செய்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சிறந்த மனித நேயம் கொண்டவர்.
ஆசிரியர்தொழில்செய்தகாலங்களிலும்அதன்பின்னரும்அவர்தனதுசமூகமனிதாபிமானசெயல்பாடுகளை கைவிடவில்லை. இதற்கு அவரால் பலன் அனுபவித்த மக்களும் அவர்களின் உறவினர்களும் தான் சாட்சி. இம்மானுவேல் ஆசிரியர் அவர்கள் தமிழ் சிங்கள ஆங்கிலம் போன்ற மொழி திறமைகளை தன்னகத்தே கொண்டவர். இவர் ஆசிரியர் தொழிலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அனுராதபுரம், கொழும்பு, கண்டி போன்றவைத்தியசாலைகளுக்குமொழிபிரச்சனைகாரணமாகவும்,பணபிரச்சனைமற்றும்துணைக்குயாரும் இல்லை என்ற நிலையிலும் தானே முன்வந்து எமது ஊரைச் சேர்ந்த பலரை அவர் வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்று அவர்களுடன் நின்று ஆற்றிய தொண்டு யாராலும் மறக்க முடியாதது.
பல பெரும் பெரும் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுடன் இருந்து அவர்களுடைய அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிய ஒரு மாபெரும் மனிதன் எனது ஆசிரியர். இதை பலர் தமது சொந்த வாய்களால் சொல்ல நான் காது கொடுத்து கேட்டிருக்கிறேன். என்றும் அவரின் சேவையை பாராட்டி பலர் நினைவுகளில் அவர் வாழ்ந்து வருகிறார் என்பதுதான் உண்மையான விடயம்.

மன்னார் அமுது - கல்வி, கலைத்துறையில் மிளிரும் அந்தோனிமுத்து அரியம் மாஸ்ரர்

விடத்தல்தீவு அடைக்கலம், லூர்த்தம்மா ஆகியோரின் மகனாக *1940* ம் ஆண்டு ஆவணி மாதம் *19*ம் திகதி பிறந்தார் அந்தோனிமுத்து மாஸ்ரர் அவர்கள்.

தனது ஆரம்ப கல்வியை *1945*ம் ஆண்டு காலப்பகுதியில் தொடங்கி விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் *SSC* வரை கற்றுத்தேர்ந்தார். அரியம் மாஸ்ரர் அவர்கள் தனது ஆசிரியர் முதல் நியமனத்தில் *1/10/1962* ம் ஆண்டு மன்னார் பெரியமுறிப்பு பாடசாலையில் நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரிய பயிற்சி காலத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நிறைவுசெய்து பெரியமுறிப்பு, விடத்தல்தீவு, தட்சனாமருதமடு, கற்கடந்தகுளம், ஆண்டான்குளம், பண்டிவிரிச்சான் மற்றும் தாழ்வுபாடு போன்ற பாடசாலைகளில் ஆசிரியராக சேவையாற்றியிருந்தார். தொடர்ந்து *1975*ம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் விடத்தல்தீவு ,பண்டிவிரிச்சான் மற்றும் தாழ்வுபாடு பாடசாலைகளில் பணியாற்றியிருந்தார்.

அதிபர் தரத்தில் *Gread 1* தரத்தை பெற்ற அரியம் மாஸ்ரர் அவர்கள் மடு கல்வி வலய ஆரம்ப பிரிவு *ADE* ஆக பதவிவகித்திருந்தார். கலைத்துறையில் இயற்கையாகவே அமைந்த ஆளுமையின் நிமித்தம் சிறந்த பன்முக

படைப்பாளியாகவும், நாடக நடிகரும், ஏழுத்தாளரும், பேச்சாளரும் மன்னார் கலைச்சுரபியும் கலைமாமணி விருது வென்றவருமானவருமாக 1 வயது தொடக்கம் 5 வயது வரையிலான சிறுவர்களுக்கான பாலருக்கான 50 கவிதை அடங்கிய புத்தகம் உட்பட கவிதைகள் ,கட்டுரைகள், நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, மற்றும் நாவல்கள் போன்றவற்றை கோட்ட மட்டத்திலும் ,மாவட்ட மட்டத்திலும், மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் கொண்டு சென்றிருந்து பல பாராட்டுகளையும், நினைவு சின்னங்களையும், பெற்றதுடன் அதியுயர் விருதான கலாபூசண விருதையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கற்கடந்தகளம் பாடசாலையில் கடமையாற்றிய நாட்களில் முருங்கன் பாடசாலைக்கு கல்வி கற்க போய்வந்த மாணவன் ஒருவன் பாடசாலைக்கு செல்வதை நிறுத்தியதை அறிந்து அந்த மாணவனை அழைத்து விசாரனை நடத்தியதில் அந்த மாணவன் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தை தெரிந்து அந்த மாணவனுக்கு பிரத்தியேகமாக பாடங்களை சொல்லிகொடுத்தது மட்டுமல்லாமல் அந்த மாணவனுக்கு ஆசிரியர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொடுத்து அவரின் கற்பித்தலின் பிற்பட்ட நாட்களில் அந்த மாணவன் பரீட்சையில் சித்தியடைந்தது மட்டுமன்றிகிராம சேவகராக தற்போது பதவிவகித்து உயர்நிலையில் உள்ளதும், கற்கடந்தகுளத்தில் ஆலய வளாகத்தில் அமைந்திருந்த பாடசாலையை வேறொரு இடத்தற்கு மாற்றி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்ததும் மறக்கமுடியாத அனுபவாக இருப்பதாக அரியம் மாஸ்ரர் அவர்கள் எடுத்திரைத்தார்.

மன்னார் மாவட்டத்தில் 28 முதியோர் சங்கங்களை கொண்டு இயங்கும் முதியோர் சங்க சம்மேளனத்தின் தலைவராக அரியம் மாஸ்ரர் அவர்கள் சுமார் 10 வருடங்களாக பதவிவகித்திருந்தார்.மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்க உறுப்பினராகவும் ,மன்னார் வாழ்வுதயம் நிறுவனத்தில் அருட்பணியாளர்களான எமில் அடிகளார் மற்றும் யேசுராஜா அடிகளார் அவர்களது காலத்தல் 5 வருடங்கள் செயலாளராக பதவிவகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட ரீதியில் நடைபெறும் தமிழ், இலக்கிய விழாக்களில் நடுவராகவும், தமிழ் மொழிசார்ந்த போட்டிகளில் முக்கிய நடுவராகவும் விருந்தினராகவும் அழைக்கப்பட்டு பங்குபற்றியுள்ளார். மேலும் அந்தகாலத்து சிறுவர்களோடு ஒப்பிடுகையில் இவ் சமகாலத்தில் வாழும் சிறுவர்கள் குழந்தைகள் மிகவும் புத்திசாலியான விவேகம் கூடிய பிள்ளைகளாக காணப்படுகிறார்கள் என்றும் இந்த காலத்து சிறுவர்களுக்கான வசதி வாய்ப்புகள் நிறைந்து காணப்படுகின்ற நிலையில் தொலைபேசி உபயோகம் அதிகரித்து அறிவை தேடி ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுவது அவசியம்.ஆனால் ஆக்கபூர்வமாக செயற்படுவதை தவிர்த்து தொலைபேசி பாவனையை குழந்தைகள் பயன்படுத்துவதால் பாரிய பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிடுகிறார்.

தமது பணிக்காலத்தில் வசதிவாய்ப்பு இல்லாத கற்க வசதிகள் அற்ற மாணவர்களுக்கான இலவச பிரத்தியேக வகுப்புகளை நடாத்தியதியதுடன் தமிழ் அறிவை போதித்ததில் அரியம் மாஸ்ரர் அவர்களது பங்கு அளப்பெரியது. படிக்க ஆர்வம் இருந்தும் வசதிவாய்புகள் அற்ற அந்த காலத்து மாணவர்கள் பாதையிலே கல்வியை இடைநிறுத்தி கடலுக்கும் வேறு தொழில்களுக்கும் சென்றதைசுட்டிக்காட்டிய அரியம் மாஸ்ரர் அவர்கள் இந்த கால மாணவர்கள் அதிகமானோர் ஆசிரியர்களுக்கு பயப்படாமல் நட்பாக ,நண்பர்களாக பழகிவருவதும் ,அதிகரித்துவரும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் அறிவை பெருக்கும் விடயங்களில் ஈடுபட்டு தன்னம்பிக்கை மிக்க வருங்கால தலைவர்களாக வாழவேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்திருந்தார்.

சிங்கம் அண்ணன் என நாங்க கூப்பிடும் இரட்ணசிங்கம்.

இரட்ணசிங்கம் அவர்கள் ஞானப்பிரகாசம், லூசியா ஆகியோரின் மகனாக 1/1/1925 ம் ஆண்டு விடத்தல்தீவில் பிறந்து நீக்கிலாப்பிள்ளை, ஜோசப் மாஸ்ரர், மாக்கிறற், டானியேல் (ஞானம்) மற்றும் பாக்கியம் ஆகிய சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவந்தார்.

சிங்கம் அண்ணன் அவர்கள் தமது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலும் கற்றார்.

எமது விடத்தல்தீவு கிராமத்தின் முதலாவது தபால் ஊழியராக சுமார் 1950ம் ஆண்டளவில் எமது கிராமத்தில் உள்ள தபாலகத்தில் நியமனம் பெற்று பணியாற்றியிருந்தார். எமது பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் தோறும் குறிப்பாக இலுப்பைக்கடவை, கள்ளியடி, பெரியமடு, கோவிற்குளம், புதுக்குளம், ஆத்திமோட்டை, கள்ளியடி, போன்ற கிராமங்களுக்கு

பேரூந்தில் பயணித்து (*Mail*) தபால் விநியோகத்தில் ஈடுபட்டிருந்ததுடன் மழை காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் போக்குவரத்துகள் தடைப்பட்டு ஸ்தம்பிதமடைந்த காலங்களில் கால் நடையாக சென்று தபால் விநியோக பணிகளை சிறப்பாக ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்நாட்களில் தொழில்நுட்ப வசதிகள் அற்று வெறும் கடித பரிமாற்றம் மட்டும் நடைமுறையில் இருந்த அக்காலகட்டத்தில் சிங்கம் அண்ணண் தனது சேவையை சிறப்பாக ஆற்றியிருந்ததுடன் எமது கிராம தபாலக அதிபராக எமது,கிராமத்தின் அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடமையாற்றியிருந்தார். ஆரம்ப காலத்தில் மழை ,வெள்ளம் என பார்க்காமல் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வசதி வாய்ப்புகள் அற்ற வேளையிலும் எமது ஊரில் நிறைவான சேவை செய்த சிங்கம் அண்ணண் அவர்கள் 1977ம் ஆண்டு தனது,தபால் ஊழியர் சேவையில் இருந்து ஒய்வுபெற்றார்.

எமது ஊர் அந்நாட்களில் பல்வேறுபட்ட வசதிகள் குறைந்து காணப்பட்ட இடமாகவும் குறிப்பாக குடிநீருக்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இருந்த பள்ளமடு கிணற்றில் இருந்தே குடிநீர் பெறவேண்டிய நிலைகாணப்பட்டிருந்தது. தபால் ஊழியரான சிங்கம் அண்ணன் அவர்கள் தனது ஒய்வுக்கு பிற்பாடு தனது சீபனோபாயமாக வெள்ளாமை செய்ததுடன் ஊரில் உள்ள குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு பள்ளமடு கிணற்றில் இருந்து குடிநீரை மக்களுக்கு வழங்கியும், விற்பனை செய்தும் இருந்தார்

ஊரில் ஏற்படும் அனைத்து நிகழ்வுகளுக்கு குறிப்பாக, ஊரில் நடைபெறும் திருமண வைபவங்களுக்கும் இறப்பு வீடுகளுக்கும் , ஊரவர்களின் தேவைகளுக்கு ஏற்றமாதிரியும் குடிநீரை வழங்கியும் விற்பனை செய்தும் வந்தார்.அதிகாலை 4 மணிக்கு துயிலெழும்பி மரத்தால் ஆன சில்லு பட்டா பூட்டப்பட்ட ஒத்த மாட்டு வண்டியில் பீப்பா (றம்) ஏற்றப்பட்டு பெரிய வாளி ஒண்டும் 2 ஆடி நீளம் உடைய *Hose pipe* ஒண்டும் கொழுவியபடி பள்ளமடு குளத்துக்குள் இருந்த நல்ல தண்ணி கிணற்றில் இருந்து குடிநீரை கொண்டு வந்து எமது மக்களுக்கு அவர்களுடைய தேவையிலும், கடைகளுக்கும் விற்பனை செய்வதை சிங்கம் அண்ணண் வழக்கமாக கொண்டிருந்தார்.

பள்ளமடுவில் இருந்து ஊருக்கு வரும் வழியில் எமது குளத்தில் முழுகிவிட்டு வீடுவரும் சிறுவர்கள், குழந்தைகளை வண்டிலில் ஏற்றிவருவதும், உடுப்பு கூடைகளை தலையில் சுமந்துவரும் தாய்மாரின் சுமைபோக்கி அந்த கூடைகளை தனது வண்டிலில் ஏற்றுக்கொண்டு வந்து கடத்தெருவு சந்தியில் இறக்கிவிட்டு செல்வதும் சிங்கமா அண்ணண் எமக்கு வழங்கிய சேவைகளாகும்.சிங்கம் அண்ணண் அவர்களுக்கு மாட்டு வண்டியை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் இருந்து எமது கிராமத்தின் நவரெட்ணம் ஐயா அவர்கள் வழங்கியிருந்தார். 1999ம் ஆண்டு இடப்பெயர்வு வரை சிங்கம் அண்ணண் தண்ணீர் வழங்கும் சேவையில் ஈடுபட்டதுடன் 2011ம் ஆண்டு மார்கழி மாதம் 28ம் திகதி இறைபதமடைந்தார். சிங்கம் அண்ணன் அவர்களுடன் இணைந்து அவரது பிள்ளைகளான சாள்ஸ் ஜோசப் (றாஜன்) ஜோகராஜன் ஜோசப் (ஜோகன்) இயேசுதாசன் ஜோசப் (றஞ்சன்) ஆகிய மூவரும் சில்லு பூட்டிய வண்டிலில் ஊரில் குடிநீர், விற்கு போன்றவற்றை ரயர் பூட்டப்பட்ட மாட்டு வண்டிலில் வழங்கி விற்பனை செய்துவந்தனர்.

விடத்தல்தீவு எம்.ஏ.அப்துல் மஜீத்

விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.ஏ.அப்துல் மஜீத் விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியவற்றின் பழைய மாணவர்) அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசியரான எம்.ஏ. அப்துல் மஜீத் பின்னர் அதிபர் தரத்துக்கு 1971 ஆம் ஆண்டு மன்னார் வேளாகுளம் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்திலும் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை மன்னார் சொர்ணபுரி அரசினர் வித்தியாலயத்திலும் அதிபராகக் கடமையாற்றினார்.

தொண்ணூறாம் ஆண்டில் இடம்பெ ற்ற புலப்பெயர்வுக்குப் பின்னர் இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக புத்தளம் பாத்திமா கல்லூரியில் நடத்தப்பட்ட மாலை நேரப் பாடசாலையின் அதிபராகவும் கடமையாற்றியவர்.விடத்தல்தீவு முஸ்லிம்களின் பண்பாடும் வரலாறும் என்ற நூலையும் எழுதி,எம்.ஏ.அப்துல் மஜீத் தமது அடையாளத்தை வேரூன்றச் செய்தவருமாவார்.இது தவிர மன்னார் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் ஆசிரியர் மற்றும் முதலாவது முஸ்லிம் தலைமை ஆசிரியரென்ற தனிப் பெருமை பெற்ற முஹம்மது அலி என்பவரின் புத்திரரே இந்த எம்.ஏ. அப்துல் மஜீத் என்பது குறிப்பிடத்தக்கது.

அருளப்பு ஜேம்ஸின் சமூகப் பங்களிப்பு

மன்னார் மாவட்டத்தில் எமது விடத்தல்தீவு கிராமம் கல்வி ,கலை கலாச்சாரம், ஆன்மீகம் ஆகிய துறைகளிலும் ,ஊரின் முன்னேற்றம் கருதி வாழ்ந்த மகத்தான மனிதநேயம் கொண்டு வாழ்ந்த மகான்களையும் தன்னகத்தே கொண்ட தனிச்சிறப்பு வாய்ந்த கிராமமாக திகழ்கின்றது .அந்த வகையில் விடத்தல்தீவு கிராமத்தின் அருமை பெருமைகளையும், ஊருக்காக வாழ்ந்து உழைத்தவர்களையும் சொல்லிமீளாது. தமது வாழ்நாளில் ஊருக்காகவும் அதன் அபிவிருத்திக்காகவும், வளர்ச்சிக்காகவும் தனிமனித ஆளுமைமிகுந்து செயல்வடிவம் கொடுத்தவர்களுள் சொந்த நலன் பாராது பொதுநலனுக்காக வாழ்ந்த எமது மண்ணின் அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் முயன்மையானவர் என்றால் அது மிகையாகாது.

அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ராசையா ,கனகம்மா என்று எம்மவர்களால் அறியப்படுகின்ற அருளப்பு மற்றும் மரியப்பிள்ளை ஆகியோருக்கு இரண்டாவது மகனாக 6 சகோதர சகோதரிகளுடன் பிறந்தார். தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்று பின்னர் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயத்தில் கல்வியை தொடர்ந்த அவர் SSC சித்தியடைந்தார்.

எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய விளையாட்டு மைதான காணி அருளப்பு ஜேம்ஸ் அவர்களுடைய முன்னோர் வழிவந்த பரம்பரை காணியாக அவர்களது பெற்றோர் ஆட்டுப்பட்டி வைத்து தமது சீவியத்தை போக்கிவந்த நாட்களில் எமது பாடசாலைக்கு மைதானம் தேவைப்பட்ட காரணத்தினால் அரசாங்கம் அதனை கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆட்டுப்பட்டி வைத்து தமது சீவனோபாயத்தை போக்கிவந்த அந்த நிலையிலும் அந்த காணியை எமது பாடசாலைக்காக வழங்க தமது பெற்றோரை வலியுறுத்தியதுடன்பாடசாலைவிளையாட்டுமைதானம்அமையஅந்தகாணியைவழங்ககாரணகர்த்தாவாக இருந்தவர் அருளப்பு ஜேம்ஸ் என்றால் அது மிகையாகாது.
“தொட்டதெல்லாம் துலங்கும்” என்று சொல்லும் வார்த்தை மெய்படும் அளவிற்கு திரு.அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ஊர் சார்பாக எடுக்கும் அனைத்து காரியங்களும் அவருக்கு கைகூடிவந்ததுடன் அவரால் மேற்கொள்ளப்பட்ட ஊர் சார்பான அபிவிருத்திகள் அனைத்தும் அவருக்கு வெற்றியாகவே அமையப்பெற்றது.

ஆளுமை, தற்துணிவு ,சாதிக்கும் திறன் அனைத்திற்கும் சொந்தக்காரரான அருளப்பு. ஜேம்ஸ் அவர்கள் எமது விடத்தல்தீவு கிராமத்தின் பல்வேறுபட்ட துறைகளில் அபிவிருத்திகளை ஏற்படுத்தியிருந்தார். ஊரில் படித்து வேலைகளுக்காக காத்திருந்தவர்களுக்கு அந்தந்த துறைகளுக்கான அமைச்சர்களை அமைச்சின் அதிகாரிகளை சந்தித்து அவர்களூடாக வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தார். அதாவது கிராம சேவகர், பொலிஸ் உத்தியோகம் என பல வேலைவாய்புகளை எம்மவருக்கு பெற்றுக்கொடுத்திருந்தார்.

விடத்தல்தீவு வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினராக பதவி வகித்த அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் எமது வைத்தியசாலையில் உள்ள ஆளனி பற்றாக்குறை மற்றும் ஏனைய குறைபாடுகளை உடனுக்குடன் மன்னார் மாவட்ட வைத்திய பணிப்பாளருக்கும் அதனோடு தொடர்புபட்ட அமைச்சுக்கும் தெரிவித்து விடத்தல்தீவு வைத்தியசாலையின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்திருந்தார்.

சன்னார் குளத்தில் இருந்து பெரியகுளம் ஊடாக எம்மவர்களது நெற்பயிர்செய்கை வயல் நிலங்களுக்கு தண்ணி திறந்துவிடப்படுவதில் இருந்த முரன்பாடுகளையும், சிக்கல்களையும் உரியமுறையில் கையாண்டு பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளை கையாண்டும் இருந்தார். மன்னாரில் இருந்து இரவு 10:30 மணிக்குபுறப்படும்இலங்கைபோக்குவரத்துசபையின்பேரூந்துஎமதுவிடத்தல்தீவுகிராமத்திற்குள்ளேவந்து திரும்பி போவதற்கான நடவடிக்கைகளில் அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பினராக பதிவி வகித்ததுடன் பாடசாலையின் ஆசிரிய பற்றாக்குறை மற்றும் ஏனைய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரும்பாடுபட்டிருந்தார்.

எமது துறையில் இருந்து வெளி கடலுக்கு படகுகள்,தோணிகள் சோளம், வாடை போன்ற அனைத்து பருவ காலங்களிலும் எவ்வேளையிலும் செல்லத்தக்க வகையில் இருக்கும் என்று சொல்லப்படுகின்ற கல்லோடையை வெட்டி அதனை ஆழப்படுத்த பெரிதும் ஈடுபாட்டுடன் உளைத்தவர்களுள் அருளப்பு ஜேம்ஸ் அவங்களும் ஒருவராக திகழ்ந்தார். இலங்கையில் எந்த பகுதியிலும் இல்லாத தமிழ்-முஸ்லிம் உறவுக்கு சிறப்பான உதாரணமாக திகழும் எமது விடத்தல்தீவு கிராமத்தில் முஸ்லிம், கிறிஸ்தவ மத ,இன ஒற்றுமையையும், நல்லுறவையும் கொண்டிருந்ததுடன் முஸ்லிம் மக்களுடன் நெருங்கிய உறவையும் தொடர்பையும் அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் பேணி வந்தார்

எமது ஊரில் அருளப்பு ஜேம்ஸ் அவர்களது தலையீடு எல்லா இடத்திலும் காணப்பட்ட காலம் அது. அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ஊரின் அனைத்து பிரச்சனைகளுக்கும் தேவைப்பட்ட, தீர்வு கொடுக்கக்கூடிய வழிவகைகளை கையாளத்தக்க ஒருவராக ஊரின் அனைவராலும் அடிக்கடி வேண்டப்பட்ட ஒருவராக இருந்திருந்தார். ஊரில் போக்குவரத்து பிரச்சனை,வைத்தியசாலை பிரச்சனை, பாடசாலை பிரச்சனை, மீனவர்

எதிர்நோக்கும் பிரச்சனை போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு அவ்வாறான பிரச்சனைகளை உரிய இடங்களுக்கு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் அவ்வாறான பிரச்சனைகளை தீர்த்துவைத்ததே அருளப்பு ஜேம்ஸ் அவர்களது சிறப்பியல்பாகும். இவ்வாறு விடத்தல்தீவின் அபிவிருத்தியின் முன்னோடியாக திகழ்ந்திருந்தார்.
கடற்றொழில் அமைச்சரை விடத்தல்தீவுக்கு வரவழைத்து கடற்றொழிலாளரின் பாரிய பிரச்சனை தீர்க்கப்பட்டது.

1981ம்/ 1982 ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் கடற்றொழில் அமைச்சராக பெஸ்ரஸ் பெரேரா அவர்கள் பதிவிவகித்த காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு கிராமத்தில் அயல் பிரதேசமான மூன்றாம் பிட்டி கிராமத்தில் யாழ்ப்பாண மாவட்ட பாசையூர் மற்றும் குருநகர் போன்ற பகுதிகளில் இருந்து வந்து தங்கியிருந்ததுடன் கடற்றொழிலில் சீசன் தொழில் செய்யவும் அதாவது அவர்களது சொந்த இடத்தில் கடற்றொழில் செய்து அங்கே அதன் சீசன் முடிவடைந்த நிலையில் கடற்றொழிலுக்கான சீரற்ற காலநிலை அங்கே தென்படும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்து எமது பகுதிகளில் மூன்றாம் பிட்டி, இலுப்பைக்கடவை,மற்றும் கத்தாளம்பிட்டி கிராமங்களை அண்டிய பகுதிகளில் தற்காலிகமாக குடியேறி பல மாதங்களாக தங்கியிருந்து தொழில்செய்யத்தொடங்கினார்கள்.

பெருமளவு மீனவர்கள் சீசனுக்கு வந்து மேற்படி கிராமங்களை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் எமது விடத்தல்தீவு கடற்றொழிலாளர்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் எமது கடல்வளத்தை சூறையாடி எடுத்துச்சென்ற நிலையில் எமது விடத்தல்தீவு மீனவர்களும், மூன்றாம்பிட்டி, இலுப்பைக்கடவை மற்றும் கத்தாளப்பிட்டி பகுதிகளை சொந்த இடமாக கொண்டு கடற்றொழில் செய்யும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த நிலையை அறிந்த அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களது முறைப்பாட்டை அந்த நாட்களில் கடற்றொழில் அமைச்சராக பதவிவகித்த கடற்றொழில் அமெச்சர் கௌரவ பெஸ்ரஸ் பெரேரா அவர்களிடம் மன்னாரில் இருந்து கொழும்பு சென்று அமைச்சரின் காரியாலயத்தில் நேரடியாக அமைச்சரை சந்தித்து எமது ஊரவர்கள் சார்பாக எமது ஊரவர்களின் இக்கட்டான சூழ்நிலையையும் ,எமது ஊரவர்கள் அடைந்த பாதிப்புகளையும், பாதிக்கப்பட்ட நிலையையும் எடுத்துச்சொன்னதுடன் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா அவர்கள் எமது நிலையை நேரில் வந்து அறிவதற்கான குறிக்கப்பட்ட அந்த நாள் திகதியையும் பெற்றுவந்தார்.

அதன் அடிப்படையில் கடற்றொழில் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா அவர்கள் எமது கிராமம் விடத்தல்தீவுக்கு தமது அமைச்சின் அதிகாரிகளோடு விஜயம் செய்து எமது விடத்தல்தீவில் இருந்து ஒரு படகு மூலமாக அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா மற்றும் அவரது அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவும் மூன்றாம்பிட்டி வரை சென்று எமது கடல்பகுதிகளையும், கடல் மற்றும் எமது பகுதியில் காணப்படும் கண்ணா வளங்களையும் பார்வையிட்டு மூன்றாம்பிட்டி கரையை அடைந்தனர். மூன்றாம்பிட்டியில் தங்கியிருந்து தொழில் செய்த பாசையூர் மற்றும் குருநகர் பகுதியை சேர்ந்த மீனவர்களோடு கலந்துரையாடி அவர்களோடு ஒரு பேச்சுவார்த்தையை நடாத்தி குறிக்கப்பட்ட ஒரு கால அவகாசத்தை அவர்களுக்கு வழங்கியதுடன் கொடுக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் மூன்றாம்பிட்டி பகுதியில் தொழில் செய்வதை நிறுத்தி சொந்த இடத்திற்கு செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டதுடன், மூன்றாம்பிட்டி கடல் வளம் எமது பகுதி மீனவர்களுக்கான கடல்வளம் என்றும் இந்த கடல் பரப்பையும், கடல் வளத்தையும் நீங்கள் பயன்படுத்தக்கூடாது என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஒரு தனியாளாக, தனி மனிதனாக செயல்பட்டு எமது கடல்வளத்தையும், எமது ஊர் மக்களின் தொழிலையும் பாதுகாப்பதற்காக பாரிய முயற்சியை திரு.அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் எடுத்து அதிலே வெற்றியடைந்தமையும் எமது ஊருக்கும் ஊரவர்களுக்கும் திரு. அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ஆற்றிய மகத்தான சேவையில் முக்கியமானவைகளில் ஒன்றாகும். இவ்வாறான கடற்றொழில் சம்மந்தமான , எமது மீனவர்கள் பிரச்சனை சம்மந்தமான பல பிரச்சனைகளை உரிய இடங்களுக்கு கொண்டு செல்வதுடன் அவற்றுக்கு தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்திருந்தார்.

தனது வாழ்நாளில் சமூகசேவைகளையும், ஊரின் அபிவிருத்திகளையும் சிரமேற் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வாழ்ந்த அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் *1980* களில் ஊரில் அனேக பதவிகளை வகித்திருந்தார் அந்த வகையில் விடத்தல்தீவு கிராமோதய சபை தலைவராக பதவிவகித்து பாரிய பங்காற்றியதுடன் மாந்தை மேற்கு கடற்றொழில் மீனவ கூட்டுறவு சங்க தலைவராகவும், விளையாட்டு

கழகங்களின் பிரதிநிதியாகவும், மாந்தை பிரிவு மீனவர் தலைவராகவும், விடத்தல்தீவு சனசமூக நிலைய உறுப்பினராகவும், இயக்குநர் சபை உறுப்பினராகவும், மாந்தை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராகவும் பதவிவகித்திருந்தார். கமக்கார அமைப்பிலும், விவசாய சங்கத்திலும் உபதலைவராக பதவிவகித்திருந்தார்.

பள்ளமடு சந்தியால ஊருக்குள்ள வந்த இலங்கை போக்குவரத்து சபை பேரூந்து.
அந்த காலப்பகுதியில் போக்குவரத்து சேவை ,வசதிகள் இப்ப மாதிரி அடிக்கடி இல்லாத காலம் சனம் *CTB* பஸ்ச மட்டும் நம்பி இருந்த காலம் நீண்ட நேர காத்திருப்புக்கு பிறகுதான் ஒன்டுரெண்டு பஸ் ஒடுற நேரமது. என்னதான் அவசர வேலையாக இருந்தாலும், வேலைகளுக்கு ஊரிலிருந்து வெளியே போவதாக இருந்தாலும் ,வருத்தம் எண்டு ஆஸ்பத்திரிக்கு அவசியம் போவதாக இருந்தாலும், பஸ்சுக்காக காத்திருந்து, அவதிப்பட்ட காலம். ஊருக்குள்ள பஸ் வராமல் சனம் தமது அன்றாட தேவைகளுக்காக பள்ளமடு சந்திக்கு நடந்து *A32* றோட்டில் சங்குப்பிட்டி ,மன்னார் போய் வாற பஸ்சுக்காக காத்திருந்து சன நெருசலில் முண்டியடித்து அல்லல்பட்டு தமது பயனங்களை தொடர்ந்த காலம். நமக்கென்ன பஸ் ஊருக்குள்ள வந்தா என்ன, வராட்டி என்ன எண்டு தத்தமது வேலையோடு இருந்தவர்கள் பலர். சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணம் போய் வாற பஸ்சுகள் பள்ளமடு சந்தியால ஊருக்குள்ள வந்தா எங்கட சனங்களுக்கு போக்குவரத்திற்கு பிரச்சனை இருக்காது என்டதால மன்னார் டிப்போக்கு ,கடிதம் எழுதி நேர போய் கடிதம் குடுத்து கதைச்சும் ஊருக்குள்ள பஸ் வந்தபாடில்ல. கச்சேரிக்கு போய் *GA* ,ட்ட முறையிட்டும் பள்ளமடு சந்தியால போற பஸ் ஊருக்குள்ள வராமலே போய்கொண்டிருந்தது.
வழமையாக காலம சங்குப்பிட்டிக்கு போக வந்த பஸ்ச ஊருக்குள்ள பஸ்ச விடுங்க சனம் நிறைய பேர் இருக்கு எண்டு சொல்லவும் "ஏலாது பஸ்ச உள்ள விட ஏலாது சந்தியில இறங்கி நடந்து போங்க என்டாராம் றைவர். " "அண்ண பஸ்ச எடுக்காதேங்க றோட்டுக்கு குறுக்கால ஒரு ஆள் பஸ்ச மறிச்சுக்கிடக்கு" எண்டு கொண்டைக்ற்றர் கத்தவும் அங்க பார்த்தால் அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் றோட்டுக்கு குறுக்கால பஸ்ச மறிச்சு கிடந்திருந்தாராம். எவ்வளவோ சொல்லிப்பாத்தும் எழும்பவேயில்லையாம் ஊருக்குள்ள பஸ்ச திருப்பு , திருப்பினாத்தான் நான் எழும்புவன் இல்லாட்டி பஸ்ச எனக்குமேல ஏத்திற்றுப்போ எண்டாராம் . அதன் பின்னர் மன்னார் பேரூந்து சாலை அதிகாரிகள் அந்த இடத்திற்கு வருகைதந்து வழங்கிய வாக்குறுதியை தொடர்ந்து அன்றைய தினம் முதல் *A32* சங்குப்பிட்டி மன்னார் றோட்டில போய் வாற இலங்கை போக்குவரத்து சபை பேரூந்துகள் ஊருக்குள்ள வந்து போனதாம்.

சிலவேளைகளில் *A32* பிரதான வீதியூடாக மன்னாரில் இருந்து சங்கப்பிட்டி நோக்கி பயணம் செய்யும் பேரூந்தில் ஜேம்ஸ் அவர்கள் விடத்தல்தீவுக்கென பயணசீட்டை புத்திசாலித்தனமாக பெற்றுக்கொண்டு பேரூந்துகள் எமது விடத்தல்தீவினுள் செல்லாது பள்ளமடு சந்தியூடாக சங்குப்பிட்டி நோக்கி பயணிப்பதை தடுத்துநிறுத்தி ஊரினுள்ளே இவரால் வந்துபோன சந்தர்ப்பங்களும் உண்டு. ஆளுமை, தற்துணிவு, சாதிக்கும் திறன் அனைத்துக்கும் சொந்தக்காரரான அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் ஊர் பிரச்சனைகள், ஊரின் தேவைகள், ஊரின் அபிவிருத்திகளை மனதில் கொண்டு அதனை தீர்த்துவைக்க மன்னார் மாவட்ட புனர்வாழ்வு ,புனர்நிர்மான அமைச்சோடும் அதன் அதிகாரிகளோடும் அதிக தொடர்பினை பேணிவந்ததுடன் அடிக்கடி அமைச்சின் காரியாலயத்திற்கு சென்று தேவைகளை, குறைபாடுகளை தெரிவித்து அவற்றை எமது ஊர் பெற்றுக்கொள்ளவும் வழிசெய்தார்.

அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் எமது விடத்தல்தீவு புனித அடைக்கலமாதா ஆலய நிர்வாகத்தில் உறுப்பினராக இருந்த காலத்தில் புனித அடைக்கலமாதா ஆலய திருவிழா திருப்பலியை முதன்முதலாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன அலைவரிசையில் ஒலிபரப்பு செய்த வரலாற்று நிகழ்விற்கு சொந்தக்காரராவார். அந்நாட்களில் சுயநலவாதிகளாக தானுண்டு தன்னுடைய வேலை ,குடும்பம் என்றிருந்தவர்களே அதிகமாக வாழ்ந்துவந்த காலம் ஊருக்காக பொதுநலனுக்காக ஊரின் தேவைகளை தீர்த்துக்கொள்ளுவதற்கான உரிய வழிகளை கையாண்டு அணுகவேண்டியவர்களை அணுகினார் அருளப்பு ஜேம்ஸ். மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள் அரச அதிகாரிகள் யாவரும் இவருக்கு அத்துப்படி எங்கு சென்று யாரை அணுகினால் ஊரின் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்குமோ அதனை திறம்பட ஆற்றுவது ஜேம்ஸ் அவர்களது சிறப்பியல்பாக காணப்பட்டது. அரச அதிகாரிகளுடனான தொடர்பும் அமைச்சினதும், அமைச்சர்களினதும் தொடர்பும் ஜேம்ஸ் அவர்களுக்கு கிட்டியிருந்த காலம்.
மாந்தை மேற்கு கூட்டுறவு சங்கத்தின் விடத்தல்தீவு கிளைக்கு தலைவராக ஜேம்ஸ் அவர்கள் பதவி வகித்த காலப்பகுதியில் மதரீதியான பாகுபாடுகள் தழைத்தோங்கி இருந்த காலப்பகுதியில் மதரீதியான செயல்பாடுகளை தனிமனிதனாக தகர்த்தெறிந்து கூட்டுறவு சங்கத்தில் எம்மவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்திருந்தார்.

எமது கடற்றொழிலாளரது நலன்கருதி எமது கடற்கரையில் பிரமாண்டமாக அமையப்பெற்ற வெளிச்சக்கூடு எமது கிராமத்தில் அமைந்ததில் அருளப்பு ஜேம்ஸ் அவர்களது பங்கு அளப்பெரியதாக இருந்தது. மீன்பிடி அமைச்சர் பெஸ்செற் பெரேரா, தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியர் ஆகியோர் விடத்தல்தீவில் கால்பதித்து எம் மக்களது பிரச்சனைகள் தீர்க்கப்படவும் அருளப்பு ஜேம்ஸ் அவர்களே காரணகர்த்தாவாக

இருந்தார். அதன் பின்னர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான அக்பர் மற்றும் றகீம் ஆகியோர் எமது விடத்தல்தீவிற்கு அருளப்பு ஜேம்ஸ் அவர்களது ஏற்பாட்டின் நிமித்தம் வருகைதந்திருந்தனர். அந்நாட்களில் கொழும்பு சென்று உரிய அமைச்சுகளோடும் ,திணைக்களங்களோடும் தொடர்பை ஏற்படுத்தியிருந்ததுடன் எமது மீனவர்களுக்கான துறை விஸ்தரிப்பை இலுப்பைக்கடவை வரைக்கும் கொண்டு சென்றிருந்தார். குறைந்த விலைக்கு என்ஜின் போட், பெரிய பிளாஸ்ரிக் போட்டுகளை எமது விடத்தல்தீவு சங்கத்திற்கும் ஊரவர்களின் சிலருக்கும் பெற்றுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விவசாய கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறைகளை கையாண்டு உரிய அதிகாரிகளினூடாக எமது ஊரவர்களுக்கு வழங்கியிருந்ததுடன் 1977ம் ஆண்டு காலப்பகுதிகளில் விடத்தல்தீவு ஊருக்குள்ளே பேரூந்துகள் பயணிக்கத்தக்கதான பல்வேறுபட்ட விடையங்களை கையாண்டு அதில் வெற்றியும் கண்டிருந்தார். எமது பாடசாலையின் ஆசிரிய வளம் மற்றும் ஏனைய பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்ததுடன் ஒரு தொலைபேசி அழைப்பனூடாகவே அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ளும் ஆற்றலையும் திறமையையும் அருளப்பு.ஜேம்ஸ் அவர்கள் கொண்டிருந்தார். அத்துடன் குறைந்த விலையில் எமது மீனவர்களுக்கான வெளியிணைப்பு இயந்திரத்தை பெற்றுக்கொடுத்ததும் இவரது செயற்பாடாகும். எமது விடத்தல்தீவு கல்லோடை புனரமைப்பு திட்டத்தில் எமது கிராமசேவையாளர் சவேரியான் அவர்களோடு இணைந்து செயற்பட்டமையும் அருளப்பு ஜேம்ஸ் அவர்களின் முக்கிய பங்காக காணப்படுகிறது. தனது ஊருக்காக பல்வேறுபட்ட சேவைகளை செய்த அருளப்பு ஜேம்ஸ் அவர்கள் 1984/12/8ம் திகதி எம்மைவிட்டு பிரிந்தார்.

வடமோடி இராகத்திற்கு பெருமைசேர்த்த விடத்தல்தீவு சங்கீத குழு

மன்னார் மாவட்டத்தில் பல அருமை பெருமைகளை கொண்டு கல்வி , கலை,விளையாட்டு போன்ற துறைகளில் தனிச்சிறப்புப்பெற்ற கிராமங்களில் எமது விடத்தல்தீவு கிராமம் முதன்மை வாய்ந்தது என்றால் அது மிகையாகாது.

“இசையால் வசமாகா இதயமேது” அந்த வகையில் இலங்கை கலை வரலாற்றில் வடமோடி இராகத்தில் அமைந்த கலை இலக்கிய வரலாற்றில் நாடகங்கள், நாட்டுக்கூத்துகள், வில்லுப்பாட்டு, தாளலயம், பாடல், இசை கருவிகள் மீட்டுதல், மற்றும் இசை துறையில் எமது ஊரும் ஊரவர்களும் கலஞர்களாக எல்லாவற்றிலும் சிறப்புப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது ஊரில் பிறப்பிலிருந்தே இயற்கை அன்னையால் வழங்கப்பட்டது என சொல்லத்தக்க வகையில் எமதுமண்ணின் பெருமை சாற்றும் கலைத்துறை சார்ந்த வித்தகர்கள் பலர் அவர்களின் கலைத்திறனில் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கேற்ப அவ்வவ்போது கலையையும் கலைத்திறனையும் வளர்த்துகொண்ட எமது முன்னோர்கள் கலைவளர்ச்சியில் என்றும் எமது முன்னோடிகளாக திகழ்கிறார்கள்.

அந்த வகையில் ஆர்மோனிய வித்தகர் சீமான்பிள்ளை அவர்களின் தலமையில் எமது விடத்தல்தீவில் இசையையும், கலையையும் மையப்படுத்திய குழுவாக எமது ஊரின் பல இசைத்துறை ஜாம்பவான்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி ஆகும்.

சுமார் 1960 களில் ஆர்மோனிய இசை கலைஞர் அமரர் சீமான்பிள்ளை அவர்களையும், புல்லாங்குழல் , மற்றும் ஆர்மோனிய இசைகலைஞ்ஞரான அமரர் சிலுவைராசா (வெள்ளச்சிலுவை) அவர்களையும், மிருதங்க வித்துவான் அமரர் செபஸ்ரி. அந்தோனிப்பிள்ளைஅவர்களையும், தேனமிர்த குரலோன் அமரர் மாசில்லாமணி அவர்களையும், தாள வித்தகர் பேதுருப்பிள்ளை அவர்களையும், ஆர்மோனிய இசை சக்கரவர்த்தி அமரர் பொன்னுத்துரை அவர்களையும், மிருதங்க இசை கலைஞன் அமரர் க.தாவீது அவர்களையும், மற்றும் அமரர் அந்தோனிப்பிள்ளை (அந்தோனி) அவர்களையும் உள்ளடக்கி விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி என்ற புகழ்பூத்த இசைக்குழுவாக பட்டிதொட்டியெங்கும் இசைமழை பொழிந்திருந்தமை விடத்தல்தீவு கலை வராலாற்றில் பொன்னெழுத்துகளால் பதியப்படவேண்டியவை.

இவ் விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி குழுவின் தனிச்சிறப்பு யாதெனில் ஒவ்வொருவருக்குமென தனித்தனியான வாத்திய இசை கருவிகளை மீட்டுவது மட்டுமல்லாது பாடல்களை பாடுவதிலும் இவர்கள் தேர்ச்சிபெற்ற தனிச்சிறப்பு வாய்ந்த கலைஞர்களாக அந்நாட்களில் பட்டையைகிளப்பியிருந்தார்கள் எனலாம். 1960 களுக்கு பிற்பாடு எமது விடத்தல்தீவு பழைய இறைச்சிக்கடை கட்டடத்தில் விடத்தல்தீவு

சங்கீத கோஸ்டி குழுவின்இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன அந்த கட்டடத்தில் ஒரு சிலருக்கு இசை கருவிகளை மீட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
எமது மாந்தை மேற்கு மற்றும் அடம்பன் பிரதேசங்களிலும், தட்சனாமருதமடு, பிரதேசங்களிலும் நிகழும் ஆலய திருவிழாக்கள் காலங்களிலும் எமது ஊரில் எமது ஆலய பெருநாள் காலங்களிலும் ,கலை நிகழ்வுகளிலும், நாடகங்கள், மற்றும் நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகளிலும் இசைமழையை பொழிந்து ரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்தியிருந்தனர்.

மக்கள் மனதில் பதிந்த நாடகக் கலைஞர்: அந்திரேஸ்

மிகச் சிறந்த நாடகக் கலைஞர். எங்கள் மண்ணில் பிறந்த கலையின் ஒரு ஒளிவிளக்கே. முன்னோடி நாட்களிலும் திருவிழா காலங்களிலும் அவருடைய குரல் எங்கும் ஒலிப்பதை நினைத்துப் பார்க்கும்போது, ஒட்டுமொத்த கிராமமே ஒரு நாடக மேடையாகவே தோன்றும். அவர் மேடையில் நிற்கும்போது, மக்கள் மனங்களில் எழும் உற்சாகம் சொல்லிக் கூறமுடியாதது.

ஒரு நாள் பிள்ளையார் கோவிலில் திருவிழா நடந்தது. எங்களும் சேர்ந்து சிறு நாடகக் குழுவாக அமைந்து பல வீடுகளுக்குச் சென்று இசை, நாடகம், மிஞ்சு ஆகியவற்றைக் காட்சிப்படுத்தினோம். அப்போது அந்திரேஸ் அவர்கள் ஒருவிதமான கலாசார எழுச்சியை தூண்டினார். கலை வழியே ஒரு சமூக ஆழமுள்ள உரையாடலை உருவாக்கினார்.

அந்த நிகழ்வுகளுக்குப் பிறகு, நாங்கள் சில நாடக உபகரணங்களை சேகரித்து, ஊருக்குள் ஒரு தெருநாடகத்தை மேடையிறுத்தினோம். அந்த நாடகத்தில்தான், அவரது தலைமையால் ஒரு சாதாரண நிகழ்வு, மக்கள் மனங்களில் நிலைக்கும் கலை நிகழ்வாக மாறியது. அவர் உருவாக்கிய காட்சி, அவரது குரல் ஒலிகள், அவை எல்லாம் கலையின் ஆழத்தையும், சமூகத்தின் உணர்வையும் ஒருங்கிணைத்து ஒலித்தன.

அவர் சிறப்பாக மட்டுமல்ல, பொதுவாகவும், பக்தி வழிப்பாட்டு மக்களிடையே மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்தார். கிராமங்களுக்குள் சென்றபோதெல்லாம், அவர் அனைவரிடமும் கலந்துவிழுந்து அவர்களின் மகிழ்ச்சியில் கலந்து கொண்டார். ஆணவம் இன்றி, அனைவருடன் பழகியவர்.

மருதமடு போன்ற பழங்குடி மக்கள் வாழும் இடங்களிலும், மின்சாரம் இல்லாத இருளிலும், கேரசின் விளக்கின் ஒளியில் கூட, அவர் கதைகளைச் சொன்னபோது, மக்கள் அசைந்தார்கள். அந்த இடங்களில் கூட கலை, கல்வி, சமூக விழிப்புணர்வு என்பவை அவரது வாய்மொழி வாயிலாக எடுத்துரைக்கப்பட்டன.

அந்த நேரங்களில், அவர் கலைவழியாகக் கொண்டுவந்த ஒன்று — அது சுத்தமான பொழுதுபோக்கு அல்ல, அது மக்களின் நினைவுகள், வரலாறு, நெஞ்சை உரைக்கும் உண்மைகள் ஆகியவற்றின் ஓர் பிரதிபலிப்பாக இருந்தது.

அது வெறும் நாடகமா? இல்ல, எதிர்ப்பும் அதிர்வும் கலந்த கலை!
அந்திரேஸ் ஒரு சாதாரண கலைஞர் அல்லர். அவர்தான் மறக்கப்பட்டவர்களின் வரலாற்றை எடுத்துரைத்த கலைஞர். அவர் நாடகங்கள் சமூக உணர்வையும், அரசியல் உணர்வையும் கொண்டிருந்தன. சாதியமைப்பு, ஏழ்மை, குடியேற்றம், போராட்டங்கள் போன்றவற்றைத் தைரியமாக பேசினார். மரபு, புராணம், புனைவுகள், கேலிச்சித்திரம், இலக்கணமற்ற வரிகள் — அனைத்தும் அவரது கதைகளில் ஒன்றிணைந்து ஓர் உணர்ச்சி புனலாகக் காட்சியளித்தன.
அவரது கதாபாத்திரங்கள் தொலைவிலிருந்தவர்களல்ல — நாமே. அவர்கள் நம் பேச்சிலும், நம் சிந்தனையிலும், நம் போராட்டத்திலும் வாழ்ந்தவர்கள். அவர் கலைக்காக வாழவில்லை — அவர் கலைவழியாக வாழ்ந்தார்.அரசு தடுக்க நினைத்தபோதும், அவர் ஒதுங்கவில்லை. ஒரு முறை பிச்சைக்கார வேடத்தில் கூட, மேடையை அடைந்தவர். மற்றொரு முறை பைத்தியக்காரனாக நடித்துத் தன்னை மீட்டார். அவரது கலை, ஒரு எதிர்ப்பும், ஒரு இறைபாசமும் ஆனது.

அவர் இறந்தபோது, அது போல ஒரு பெரிய முரசு சிதறிய உணர்வு. ஆனாலும், இன்று வரை, தெருநாடகங்கள், சத்தம் உள்ள கலைநிகழ்வுகள், பள்ளியரங்கங்கள் அனைத்திலும் அவர் உயிருடன் இருக்கிறார்.அந்திரேஸ் ஒரு கவி, நாடகாசிரியர், மேடை நடிகர் — ஒரே மனிதனில் மூன்று வடிவங்கள். தமிழ் மக்கள் வாழ்க்கையின் உணர்வுகளைக் கலைமயமாக ஆழ்ந்த முறையில் பதிவு செய்தார். அவர் வரலாறு பாடசாலைப் புத்தகங்களில் இல்லை — அது மக்களின் நெஞ்சிலும், தெருக்களின் அரங்கங்களிலும் வாழ்கிறது.
இவர்சிறந்த கலைஞர் இவர் புனைந்த நாட்டுக்கூத்து சூழ்ச்சியின் வீழ்ச்சி இதை காணும்போது இப்படித்தான் நாட்டுக்கூத்து இருக்குமென அறியலாம். பெரிய மேடையிட்டு அலங்கரித்து அழகான தோரணங்கள் இட்டு கீழ் அருகேயுள்ள தரையில் சாக்கு படங்கால் கம்பளமிட்டு அத்தனை பேரும் அமர்ந்து நாடகத்தைரசிப்பார்

பார்வையில் ஆச்சரியமான பல நிகழ்வுகள் ஆர்மோனியமும் மிருதங்கமும் கைத்தாளமும் மட்டுமே இசைக்கருவியாகி அழகு தமிழ் சொல்லெடுத்து அழகான பாடலும் அதற்குப் பிற்பாடு பாடுவதும் பாடகர் குழாமின் பக்கபலமும் ஒலிவாங்கி இல்லாமல் மந்தகாசமாய் தெரியும்.

வடலிப்பிட்டி புதுக்கட்டு நீர் போகும் வாய்க்கால் வழியில் உள்ள பெரும் வெளியில் “சூழ்ச்சியின் வீழ்ச்சி” எனும் நாடகம் புது மெருகோடு பிரமாண்ட மேடையில் பெருத்த பாடகர்களின் கூட்டணியில் அரங்கேறியது. நாடக பாணியில் நடை உடை பளபளக்கும் அங்கியும் அரிதாரம் பூசிய அழகு வதனங்களும் தலை கிரீடங்களும் பொடி நடையும் வீர நடையும் தெறிக்கும் வசனங்களுக்கும் இதற்கு உரியவர் யாரென விளைந்த போதுதான் அந்தோணி அந்தரேஸ் ஆவார். அமைதியும் அழகுமான அந்த மனிதருக்குள் இவ்வளவு பெரிய கலையாற்றலா? ரோமாபுரி அரச சபையே நேரில் காண வைத்த கற்பனை கதை.

அவரோடு கூட பிறந்தவர்கள் : மதலையினாள், பால்புறா, லூகாஸ் அந்திரேஸ், லூர்து, சிலுவை, ஆபிரகாம், ராணியம்மா அவர்களும் பங்காளிகள் தான். அந்திரேஸ் எழுதி வசனமாக்கி நாடகப் பாடலாக்கி அதற்குத் தகுந்த இசை ஆக்கி மேடையேற்ற எவ்வளவு கலை ஆற்றல் வேண்டும். அவரை நாம் போற்றுவோம் அவர் வாரிசுகள்: அலோசியஸ் ,அன்ன மலர், அலிஸ்

மேலைத்தேய நாடுகளில் தமிழர் கூத்து வடிவங்கள் மிக மிக பிரமாதமாக மேடைகளில் அரங்கேறும். அங்கெல்லாம் எமது ஊர் அந்தரேசைய்யா, அடைக்கலத்தார், கரடி அந்தோணியார், அரியம் வாத்தியார் ,வித்துவான் வித்தோரி செல்லன், போசி என்பவர்களின் கலையுணர்வும் உயர்ந்த குரல் வளமும் நினைவு வரும்.அதில் வரும் ஒரு பாடல்

தெருவிலே தோரணம் தூக்இங்கோ மன்னன் வரும் வீதி தனை வடிவாக்குங்கோ சித்திரமாய் பந்தல் ஏற்றுங்கோ, சேனை வீரரை நாமழைப்போமே சேனை வீரரை நாமழைப்போமே, சத்துருக்கள் போற்றும் பிரதாபன் ரோமச்சக்கரவர்த்தியின்அதிதூதன் வித்துக்கள் பந்துக்கு பாசரன், சேனை வீரரை நாமழைப்போமே சேனை வீரரை நாமழைப்போமே.

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை பேணிய மணி மாஸ்ரர்.

எமது விடத்தல்தீவு கல்விமானாக சமூகம் சார்ந்த கல்விசார் நடவடிக்கைகளில் எமது சமூகம் மேலோங்கி சிறப்புற்று வாழ தமது கல்விப்பணியை ஆசிரியராக ,அதிபராக ,கொத்தனி அதிபராக , வலயத்தின் உதவிகல்வி பணிப்பாளராக கடமையாற்றிய மகான்களில் எமது மணி மாஸ்ரர் அவர்களும் ஒருவர்.

சூசைப்பிள்ளை எனும் இயற்பெயரை கொண்டு மணி மாஸ்ரர் என பலராலும் அறியப்படுகிற மணிமாஸ்ரர் அவர்கள் எமது விடத்தல்தீவில் சுவக்கீன், செபமாலை (முத்தம்மா) ஆகியோருக்கு மூத்த மகனாக 1935ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் திகதி பிறந்தார்.

மணி மாஸ்ரர் அவர்கள் தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் தொடர்ந்து மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

கலாசாரப் பசுமை கொழிக்கும் கடற்கரை கிராமமான விடத்தல்தீவில் பிறந்த மணி மாஸ்ரர் என்று அழைக்கப்படும் திரு. சூசைப்பிள்ளை அவர்கள் கிறிஸ்ரின் சகுந்தலா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து ஜாக்குலின், கருணாகரன், லோகேஸ்வரன் மற்றும் விமலேஸ்வரன் ஆகிய நான்கு பிள்ளைகளை பெற்று கற்பித்தல் ஒரு தொழில் என்பதை தாண்டி தனது சேவைக்காலத்தில் சிறப்பான சேவையை வழங்கி இலங்கைத் தமிழ் கல்வியின் பொற்காலத்தின் பிரதிநிதியாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தின் மதிப்புமிக்க ஆசிரியராகப் தனது ஆசிரிய பணியின் முதல் நியமனத்தை பெற்று பணியாற்றத் தொடங்கிய மணி மாஸ்ரர் அவர்களது கல்வித்துறை சார்ந்த அடையாளமாக விளங்கிய இலங்கையின் ஒரு பழமையான இலங்கை வித்தியாப் பதிவு அடையாள ஆவணத்தில்” பதிவாகியுள்ளது.

திரு .சு.சூசைப்பிள்ளை மணி மாஸ்ரர் அவர்கள் தனது கல்வி துறை சார் கற்பித்தல் பணியில் முதல் நியமனத்தில் அம்பிட்டிய றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 1957ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி ஆசிரியராக சேவையை ஆரம்பித்திருந்தார்.

தொடர்ந்து தனது பணியை மன்னார் மாவட்டம் முழுவதும் குறிப்பாக மடு மற்றும் மன்னார் வலய பாடசாலைகளில் பணியாற்றியிருந்தார் தனது பணிக்காலத்தில் ஒழுக்கமிக்க கற்றலையும், சமூக முன்னேற்ற மனப்பாங்கான செயல்களையும் கொண்டிருந்ததுடன் கண்டிப்புடன் கூடிய வழிகாட்டியாகவும், வகுப்பறை கற்பித்தல் நடவடிக்கையில் அதிகாரமிக்க அரவணைப்புடன் அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கியிருந்தார் மணி மாஸ்ரர் அவர்கள்.

16/1/1957ம் ஆண்டு அம்பிட்டிய றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்ப நியமனத்தை பெற்று 30/6/1958ம் ஆண்டு வரை பணியாற்றியிருந்தார். தொடர்ந்து மன்னார் முசலி பகுதியில் முத்தரிப்புத்துறை பாடசாலையிலும் சூரியகட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், அதன் பின்னர் எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து ஆசிரியராக பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னரான காலப்பகுதியில் மன்னார் பேசாலை மகாவித்தியாலயத்திலும், மன்னார் கோவில்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும்,பாலைக்குழி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் சிறப்பான சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், மராத்தி கன்னாட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், மன்னார் தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், அடம்பன் மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராக கடமையாற்றியிருந்தார் மணி மாஸ்ரர் அவர்கள்.
அதன் பின்னரான காலப்பகுதியில் பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் மீண்டும் இரண்டாவது முறையாக எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும்,மன்னார் பரப்புக்கடந்தான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் மூன்றாவது தடவையாக எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் தமது ஆசிரிய பணியை சிறப்பாக ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் மன்னார் பெரிய கட்டைக்காடு பாடசாலையிலும் பணியாற்றியிருந்தார்.

சமூக நலன் சார்ந்த சேவையிலும் ,சமூக மேம்பாட்டிற்கும் உழைத்த மணி மாஸ்ரர் ஒரு சாதாரண ஆசிரியரைவிட மேன்மையானவராக மதிக்கப்படுகிறார். எமது கலாச்சார விழுமியங்களை கைக்கொண்டு ,ஒழுக்கத்தை கடமையோடும், கண்ணியத்தோடும் உயிராய் நடத்தும் நற்பண்புடையவர் மணி மாஸ்ரர் . எழுத்து, வாசிப்பு, கணிதம் கற்பிப்பதைத் தவிர, மாணவர்கள் தங்களது அடையாளம் மற்றும் மரபுகளை மதிக்கக் கற்றுக்கொள்ளுவதற்கு மணி மாஸ்ரர் அவர்களே காரணகர்த்தாவாவார்.

விடத்தல்தீவு கிராமத்தில் மணி மாஸ்ரர் தனது ஆசிரிய பணிவாழ்வில் கிராமத்தின் ஓர் அடையாளமாக மாறினார். பல மாணவர்கள் வெறுங்காலில் பாடசாலைக்கு வந்திருந்தும் அவரிடம் கல்வி கற்றுக்கொண்டு அவர் அன்று விதைத்த நம்பிக்கையுடனும் எதிர்கால கனவுகளுடனும் அவர்கள் தத்தமது இல்லம் திரும்பியதும் வரலாறாகும்.

மணி மாஸ்ரர் அவர்கள் எமது மன்னார் மாவட்டத்தில் அனேக பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி சிறப்பான சேவை செய்திருந்ததுடன் எமது பகுதியில் கொத்தனி அதிபராகவும், வலய கல்வி உதவி பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மணி மாஸ்ரர் தனது கற்பித்தல் மற்றும் கல்வி சார் பணிகளில் இருந்து ஓய்வு பெற்றபின்பும் அவர் சமூகத்துடனான உறவைத் தொடர்ந்து பேணி வருகின்றார். மணி மாஸ்ரர் திருக்குறள் மனன போட்டிகளை எமது மாவட்ட ரீதியில் முன்னெடுத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக தமிழ் வளர்ச்சியில் பெரிதும் உதவுவதுடன் எமது சமூகம்சார்ந்த கல்வி மேம்பாட்டுக்காக பலதரப்பட்ட கலந்துரையாடல்களிலும், ஆலோசனைகளிலும், விழாக்களிலும் அவரது பங்களிப்பு இருந்து வருகிறது.

கற்பித்தலில் சிறந்த ஆளுமையை மட்டுமல்ல, மதிப்பிற்குரிய நல்வாழ்வு பாரம்பரியத்தையும் பிரதிபலித்துக்கொண்ட மணி மாஸ்ரர் விடத்தல்தீவு புதிய சமூகம்சார்ந்த இளம் தலைமுறைகள் வளர்ச்சியின் பாதையில் பேசப்படும் தாரக மந்திரமாக, “சூசைப்பிள்ளை” மணி மாஸ்ரர் என்ற பெயர் இன்னும் பாடசாலை நிரல்களில் உச்சரிக்கப்பட்டுக்கொண்டிருப்பது சிறந்த உதாரணமாக காணப்படுகிறது

மணி மாஸ்ரர் எமது மன்னார் மாவட்டத்திற்கு ஆற்றிய கல்வி துறைசார் சேவைகளை பாராட்டி கல்வி வலயம் மற்றும் கல்விச்சமூகம் மணி மாஸ்ரர் அவர்களை கௌரவித்து பொன்னாடை போர்த்தி பாராட்டிய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிரந்தர மறைவாழ்வு பணியாளராக மரிய செல்வன் அவர்கள்.

விடத்தல்தீவு கிராமத்தில் இராயப்பு ,மரியம்மா ஆகியோருக்கு மகனாக 1947ம் ஆண்டு தை மாதம் 10 ம் திகதி பிறந்தார் . கிறிஸ்தம்மா, சந்தானம்மா, சிப்பீரியன், மற்றும் மரிய நாயகி ஆகியோர் இவரது உடன்பிறப்புகளாவார்கள். .

மரிய செல்வன் அவர்கள் 1974-05-15 அன்றைய தினம் சகாயராணி அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து டென்சில் நியோமி, பீலிக்ஸ் பேக்ஸ்மன் அருட்பணி பிராங் டஃவ் (IvDei) மற்றும் இருதயராஜ் ஆகிய பிள்ளைகளுடன் வ்ழ்ந்துவருகின்றார்.



மரியசெல்வன் அவர்கள் தமது 30 வது வயதில் இறைவார்த்தைப் பணியை ஆற்ற மறைவாழ்வுப் பணியாளராக, மரியாயின் சேனை ஊழியனாக, வின்னென்றிபோல் சபை அங்கத்தவராகவும், இச்சபைகளின் நிர்வாக உறுப்பினராகவும், ஆலயசபையின் பொருளாளராக 1990 ம் ஆண்டு தொடக்கம் 1995 ம் ஆண்டு வரை தன்னை அந்த பணிகளில் இணைத்து அதிலே பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்பணி றெஜீஸ் இராஜ நாயகம் அடிகாளர் எமது பூர்வீக கிராமமாகிய விடந்தல்தீவில் பங்கும் தந்தையாகப் பணியாற்றிய போது அக்காவத்தில் அருட்பணியாளர்களும், குருக்களும் மறைமாவட்டத்தில் பற்றாக்குறையாக இருந்தமையினால் எமது விடத்தல்தீவு பங்கின் துணைப் பங்குகளான பெரியமடு, கள்ளியடி, கத்தாளம்பிட்டி, இலுப்பைக்கடவை,தேவன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு பாதணிகளின்றி கால்நடையாகவும், துவிச்சக்கரவண்டியிலும் சென்று பூசைத்தியானங்கள், மறைக் கல்வி வகுப்புக்கள், வீட்டுத்தரிசிப்புகள், திருவருட்சாதன ஆயத்தங்கள், திருமண ஆயத்த வகப்புங்கள் என்பவற்றை அர்ப்பணத்தோடு நடாத்தியிருந்த பெருமைமரிய செல்வன் அவர்களையே சாரும். .
1977 ம் ஆண்டு எமது விடத்தல்தீவு பங்குத்தந்தை அருட்பணி றெஜீஸ் இராஜ நாயகம் அடிகளாரால் சங்கிஸ்தமாக நியமிக்கப்பட்டு. பூர்வீக கிராமமாகிய, விடத்தல்தீவிலும், இடப்பெயர்வின் போது தேவன் பிடியிலும், இடப் பெயர்வுக்குப் பின் பேசாலை நலன்புரி நிலையத்திலும். 2001ல் ஜோசப்வாஸ் நகரில் மீளக்குடியேறிய பின்னரும் ஆலய செயற்பாடுகளிலும், திருச்செபமாலை, வழிபாடுகள் நடாத்துதல் மரிதோர் இல்லங்களில் வழிபாடுகளை நடாத்துதல, அடக்கச் சடங்குகளை நிறைவேற்றுதல், போன்ற செயற்பாடுகளில் தியாக உள்ளர்துடன் பணியாற்றிவந்தது மரியசெல்வன் அவர்களது பணிவாழ்வின் சிறப்பாகும்.

பங்குத் தந்தையர்களின் அனுமதியுடன் வீட்டிற்கு முலைக்கல் வைத்தல், முற்கியவைபவங்களுக்கு கன்னிக்கால் வைத்தல், புதுமனைகளை ஆசீர்வதித்தல், போன்ற சடங்குகளை செவ்வனே செய்தார். எமது பங்கு வேதசாட்சிகளின் ஆலயத்தோடு இணைந்திருந்த காலப் பகுதியான 2007 ம் ஆண்டு தொடக்கம் 2008 ம் ஆண்டுகளில் அருட்பணியாளர்காரின் அனுமதியுடன் “திருப்புகழ் மாலையை சிற்றாலயத்தில் செபித்து மக்கள் இறைவனை புகழ வழிசெய்தார்.

1978 ம் ஆண்டு , 1998 ம் ஆண்டுகளில் திருப்பாடுகளின் காட்சியில் புனித பேதுருவாக பாத்திர மேற்றதோடு இன்றும் பல நாடகங்களிலும் பல கதாபாத்திரங்களை பொறுப்பேற்று மேடையேறி நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மரியசெல்வன் அவர்கள் 1991ம் ஆண்டு நிரந்தர மறைவாழ்வுப் பணியாளராக அருட்பணி A. பிலிப் IVDei அவர்களால் நியமிக்கப்பட்டார். மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் முழுநேரப்பணியாளராக, பல இயக்குநர்களின் கீழ் பணி புரிந்தார் இக்காலப் பகுதியில் மறைமாவட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அனைத்துப் பணிகளையும் மறைமாவட்ட எல்லைப்புற பங்குகளிலும், தேவையேற்பட்ட அனைத்துப் பங்குகளிலும் பலநாட்கள் தங்கியிருந்து பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1995 ம் ஆண்டு திருந்தந்தை 2ம் ஜோண்போல் அவர்கள் காலி முகத்திடலில் ஜோசப்ம்வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கும் நிகழ்வில் கலத்து கொண்ட போது மறைமாவட்டம் சார்பான காணிக்கையை திருப்பலியின் போது கொடுத்து அவரது மோதிரத்தை முத்தம் செய்து அவர் கைகளாலே திவ்விய நற்கருணை பெற்றுக் கொள்ளும் பாக்கியம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்நிகழ்வுகளை தமது வாழ்வின் ஆசீர்வாதத்தின் நாட்களாக எண்ணி மகிழ்ந்தார் மரியசெல்வன் அவர்கள். 2006ல் இந்தியாவிலுள்ள “டிவைன் தியான இல்லத்திற்கு விசேட தியானத்திற்காக மறைமாவட்டத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு அங்கு பல விசேட பயிற்சிகளையும் பெற்றும் கொண்டார்.

1977 ம் ஆண்டு தொடக்கம் -2023ம் ஆண்டு வரையான 46 வருட நீண்ட காலம் சங்கிருத்தமாகப் பணி புரித்து 2024 ம் ஆண்டிற்குப் பின்னர் சுகயீனம் காரணமாக அனைத்துப் பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மரியசெல்வன் அவர்கள் விடத்தல்தீவு கிராமத்தனதும் கிராம மக்களினதும் விசுவாச நமபிக்கை வாழ்வில் மறக்கமுடியாத பல்வேறுபட்ட முன்னோடிகளில் முன்னுதாரணமாகவும் முக்கியமானவராகவும் கருதப்படுவது சிறப்பாகும்.

பாராட்டை பெற்ற எமது கலைஞர் ஜோசப்.

விடத்தல்தீவு என்றவுடன் நினைவுக்கு வருவது எம்மவர்களது கல்வி ,விளையாட்டு மற்றும் கலைத்துறையில் எம்மவர்கள் கொண்ட ஆற்றல்மிகு திறமைகளுடனான மேம்பாடுகளுமே.

அந்த வகையில் கலைத்துறை சார் வித்தகர்களை நோக்குமிடத்து யாகப்பு, திரேசம்மா தம்பதிகளுக்கு மகனாக 1947 ம் ஆண்டு மார்கழி மாதம் 09ம் திகதியில் பிறந்து 3 தம்பிகளுடனும், 2 தங்கைகளுடனும் வாழ்ந்துவருபவர் தான் திரு. ஜோசப் அவர்கள்.

ஜோசப் அவர்கள் தனது ஆரம்ப கல்வியை எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 6 வரை கற்றுள்ளபோதும் இவர் கலைத்துறையில் செய்யும் நுட்பமான வேலைகளை பார்த்து வியந்து மலைத்துப்போனவர்களே அதிகம் அந்தளவுக்கு நுட்பமான பல கலைத்துறை சம்மந்தமான வேலைகளை ஆற்றிவருகிறார்.

தனது சிறுவயதில் தந்தையாருடன் கோபித்துக்கொண்டு சென் மேரீஸ் லொறியில் ஏறி நீர்கொழும்புக்கு சென்று அங்கே வாகனங்களை பழுதுபார்க்கும் நிலையத்தில் 4 மாதங்கள் வேலைசெய்திருந்தார். ஜோசப் அவர்களது நுட்பமான வேலையை பார்த்து எரிச்சலடைந்த உரிமையாளர் ஜோசப் அவர்களை வேலையில் இருந்து நீக்கிவிடவே தனது 20 வது வயதில் தனது தாய் மாமனான அமரர் திருஞானம் அவர்களது பரிந்துரையின் நிமித்தம் தள்ளாடி சந்தியில் அந்தநாட்களில் அமைந்திருந்த வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தில் ஒரு சிங்கள மொழி பேசும் உரிமையாளரின் வேலைகளை மிக நுட்பமாக செய்துவந்தார். ஆனால் அவரது வேலையிலும் அவரிலும் அதிதிருப்த்தியான அந்த உரிமையாளரிடமிருந்து விலகி மீண்டும் தனது மாமன் திருஞானம் அவர்களிடமிருந்து 5/=ரூபா பணத்தையும் ஒரு சிபார்சு கடிதத்தையும் பெற்றுக்கொண்டவராக யாழ்ப்பாணத்தில் இருந்த தேவராசா அவர்களது வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தில் 4 மாதங்கள் பல நுட்பங்களுடனான வேலையை செய்திருந்தார்.

அங்கு வேலைசெய்த பின்னர் மீண்டும் ஊருக்கு வந்து கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலத்தில் கண் பார்க்க கை செய்யும் என்பதற்கு ஒப்பாக இயற்கையில் தான் கண்ணால் கண்ட யாவற்றையும் மனதில் இருத்தி அவற்றை சித்திரமாக வரைவதிலும், உருவமாக உருவாக்குவதிலும் யாருடைய உதவியுமின்றி வலு நுட்பமாக செய்துமுடிக்கும் அசாத்திய திறமையை திரு.ஜோசப் அவர்கள் கொண்டிருப்பது சிறப்பு.

1971ம் ஆண்டு ஆடி மாதம் 16ம் திகதி அந்தோனியாப்பிள்ளை (தங்கப்பொன்) அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து ஜோர்ஜ் டிமன் வேட்ஸ், அன்ரனி பெனிற்றா, அன்ரனி றோசா, ஜோர்ஜ் ஸ்ராலின் வேட்ஸ், யூஜின் வேட்ஸ், மேரி சுபாசினி மற்றும் அன்ரனி அனுசா ஆகிய பிள்ளைகளை பெற்று வாழ்ந்து வரும் ஜோசப் அவர்கள் ஆலய வேலைகளிலும், சோடினை, அலங்கார வேலைகளிலும் ஈடுபட்டு ஒலி ,ஒளி அமைப்புகளை நேர்த்தியான முறையில் செய்து பல்வேறுபட்ட நுட்பங்கள் நிறைந்த காட்சி அமைப்புகளையும் உருவாக்கிவருகிறமை குறிப்பிடத்தக்கது.
இவ்வாறு பலதரப்பட்ட சோடினை வேலைகளுக்கும், நுட்பமான வேலைகளுக்கும் அழைக்கப்பட்டு தனது நுட்பமான வேலைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்ததார். எமது ஊரில் நடைபெறும் நாடகங்கள், நாட்டுக்கூத்துகள், பாடசாலை நிகழ்வுகள் என்பவற்றுக்கு ஒளி ,ஒலி வசதிகளை அந்தந்த நிகழ்வுகளுக்கு ஏற்றால் போல் வழங்குவதும் எமது ஆலயங்களின் திருவிழா காலங்களில் அதற்கான சோடினைகளை நுட்பமாக செய்துமுடிப்பதிலும் திரு.யாகப்பு. ஜோசப் அவர்கள் கைதேர்ந்தவர்.

அந்த வகையில் விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலய திருவிழாவிற்காக இரண்டு பிரமாண்ட மீன்கள் வளைந்திருக்கும் வகையில் அதனை உருவாக்கி மிகவும் அழகான முறையில் உயிருள்ள ஓவியமாக உருவாக்கியதுடன் நற்கருணை எழுந்தேற்றம் முதல்நாள் நற்கருணை திருவிழாவிலும் அடுத்தநாள் பெருநாள் புனித யாகப்பரின் திருச்சுருபத்தை இரு மீன்களின் இடையே வைக்கப்பட்டிருந்த அந்த தத்துரூப காட்சி இன்றும் எம்மிடையே பேசப்படுகிறது.

மன்னார் மறைமாவட்ட ஆலயங்களில் வேறெங்கும் இல்லாத பழமைவாய்ந்த எமது ஆலயங்களில் உள்ள இரண்டு கர்த்தர் சுரூபங்களில் ஒன்றான யாகப்பர் ஆலய கர்த்தர் சுரூபத்தில் காணப்பட்ட திருத்த வேலைகளை மிகவும் தத்துரூபமாக திருத்திமுடித்து அவற்றை கடந்த பெரியவெள்ளி தினத்தில் இயேசுவின் மரண திருக்காட்சியை காட்சிப்படுத்தியதுடன் அடைக்கலமாதா ஆலய கர்த்தர் சுரூபத்தில் அதன் கண் திறந்து மூடுவதை மிகவும் நுட்பமாக செய்துமுடித்துள்ளார் எமது ஜோசப் அவர்கள்.

எமது ஜோசப்வாஸ் நகர் நற்கருணை ஆண்டவர் ஆலயத்தில் கர்த்தர் திருச்சுரூபத்தை மிகவும் நுட்பமான முறையில் பயன்படுத்தி இயேசுவின் மரணத்தை காட்சிப்படுத்தியதும் எமது ஜோசப் அவர்களே.
இடம்பெயருவதற்கு முன்னர் எமது 5ம் வட்டாரத்தில் *VC* ,க்கு அருகாமையில் செம்மறி ஆடு சிலுவையை தாங்கிய வகையில் உருவத்தை உருவாக்கியிருந்ததுடன் *1999*ம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான இடம்பெயர்வின் பின்னர் பேசாலை நலன்புரி நிலையத்தில் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற மாதா வருகையை முன்னிட்டு அதனை வரவேற்கும் வண்ணம் அழகுற அமையப்பெற்ற பிரமாண்டமான இரு மீன்கள் வளைந்த சிகரத்தை உருவாக்கியதுடன் வானதூதர் மருதமடு மாதாவிற்கு மலர்தூவி வரவேற்பதை மிகவும் நுட்பமாக தயாரித்திருந்தமையும் மறப்பதற்கல்ல.

யாகப்பு .ஜோசப் அவர்களது உருவாக்கத்தில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வைகாசி மாதம் *1*ம் திகதி கடற்கரையில் *Boat* இல் பீடமானது தயாரிக்கப்பட்டு அதில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதும் ,எமது மண்ணின் மைந்தன் அருட்பணி ஸ்ரிபன் ராஜா அடிகளாரது குருப்பட்டத்தின் பின்னரான முதல் நன்றி திருப்பலி வரவேற்பின் போது *6* அடி உயரத்தை கொண்ட பெலிக்கான் பறவை தனது இதயத்தை கொத்தி தனது குஞ்சுகளுக்கு உணவளிப்பதை சித்தரிக்கும் வகையிலான பிரமாண்டமான அந்த காட்சியை உருவாக்கயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எமது ஆலயங்களின் பீடத்தின் அலங்கார சோடினைகளை செய்வதில் இருந்து எமது ஆலயங்களில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விற்கும் ஜோசப் அவர்கள் தனது கைவரிசையை காட்டியிருப்பார் அந்த வகையில் இயேசுவின் உயிர்ப்பு விழா திருப்பலியில் ஒருமுறை கல்லறை வாசல் திறக்க உயிர்த்தாண்டவர் புகை மண்டலத்தினுள் மறைந்த வண்ணமாக மெது மெதுவாக எழுந்தருளி வருவதை சித்தரிக்கும் காட்சி இறைமக்களின் விசுவாசவாழ்விற்கு உந்துதலாக இருந்துள்ளது. அதே போல் ஒருமுறை நற்கருணை வழிபாட்டில் நற்கருணை எழுந்தேற்றத்தின் போது நற்கருணையை சுற்றி பற்றியெரியும் நெருப்புப்போன்ற காட்சியை அமைத்திருந்தமையும் இன்றுவரை எமது மக்களிடையே பேசப்பட்டுவருகிறது.

அதுமட்டுமல்ல எமது ஊரில் நடைபெற்ற நாடகங்கள், நாட்டுக்கூத்துகள், இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பை பிரதிபலித்த திருக்காட்சி நாடகத்திலும் ஜோசப் அவர்கள் ஒலி, ஒளி அமைப்புகளை சிறப்பாக வழங்கியிருந்ததுடன், மேடை அலங்கார சோடினை வேலைகளையும், காட்சி அமைப்பு சீனறி வேலைகளையும் மிகவும் நுட்பமாக அமைத்திருந்தார். ஜோசப் அவர்களுடைய நுட்பமான வேலையில் சந்தியோகுமையோர் நாட்டுக்கூத்தில் குதிரையை செய்து அந்தரத்தில் பறக்கவிட்டு குதிரையின் மேல் இருந்து சந்தியோகுமையோர் வாளேந்தி போரிட்டதை பிரதிபலித்த காட்சியமைப்பை மிகச்சிறப்பான முறையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

அலங்கார சோடினை வேலைகளில் ஈடுபட்டிருந்தது மட்டுமல்ல நாடகம், நாட்டுக்கூத்துகளிலும் கலைஞனாக பாத்திரமேற்று நடித்துள்ளார் அந்த வகையில் சந்தியோகுமையோர் ,சூழ்ச்சியும் வீழ்ச்சியும், ஏது மாங்கல்யம், தேவசகாயம்பிள்ளை, தூக்கு தூக்கி,வீர பாண்டிய கட்டப்பொம்மன் ஆகிய நாடகங்களில் கலைஞனாக நடித்ததுடன் தங்கையா தாரமா என்ற நாடகத்தை எழுதி இயற்றியிருந்தார். அத்துடன் ஜோசப் அவர்கள் முஸ்லிம் வேடத்தில் பாத்திரமேற்று நடித்தது இன்றும் எமது மக்களிடையே பேசப்பட்ட பாத்திரமாக அமைந்திருந்தது.

வெள்ளறாலும் பொன்ராசாவும்.

மன்னாரில் கடல்வளம் பெருகி செழிப்புற்ற கிராமங்களில் எமது விடத்தல்தீவும் ஒன்று. அதன் வரலாற்றில் கடற்றொழிலை சார்ந்து அதனை சீபனோபாயமாக மேற்கொண்ட எம்மவர்களால் காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட தொழில்முறைகளையும் ,தொழில்நுட்பங்களையும் கைக்கொண்டு மேற்கொண்ட கடற்றொழிலில் ஒருசிலர் தாம் புரிந்த கடற்றொழிலில் இன்றுவரை ஊரவர்கள் மத்தியில் பேசப்படும்வகையில் தமது கடின உழைப்பாலும் ,நுட்பமான முறைகளை கைக்கொண்டதாலும் ஒப்பீட்டளவில் அதிகளவு கடல்வளங்களான மீன் மற்றும் இறால் போன்ற கடலுணவுகளை பிடித்து வாழ்க்கையில் உயர்வுபெற்று வந்த வரலாறுகளுக்கு சொந்தக்காரர்களாக காணப்படுகிறார்கள்.

அந்த வகையில் வில்லுக்கு விஜயன் என்பதைப்போல வெள்ளறாலுக்கு பொன்ராசா என்று சொல்லும் அளவிற்கு எமது விடத்தல்தீவு வரலாற்றில் எம்மவர்களிடையே வெள்ளறாலுக்கு பிரசித்திபெற்ற தொழிலாளியாக தோணி தோணியாக வெள்ளறால் பிடித்தவர் என்றால் அது மிகையல்ல.

பொன்ராசா அவர்கள் யக்கோப்பிள்ளை, முத்தம்மா அவர்களுக்கு மகனாக 8 சகோதர சகோதரிகளுடன் விடத்தல்தீவில் 1935ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதி பிறந்தார். அவரது 15/ 16 வயதில் தனது தந்தையுடன் கொட்டுவலை ,மணல வலை போன்றவற்றுக்கு சென்றுவந்ததுடன் முரலுக்கான வளிச்சல் வலை தொழிலில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். மரியபூரணி அவர்களை திருமணம் செய்து 10 பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரவு நேரங்களில் மணலை வலை தொழிலை செய்துகொண்டு விடிந்தவுடன் கண்டி வலைத்தொழில் செய்திருந்தார் .பொன்ராசா அவர்கள் ஆரம்ப கால கண்டி வலை தொழிலை எமது கடற்பரப்பில் காணப்படும் தாழைகளை கொண்ட பகுதிகளில் பாய்ந்து மீன் வகைகளை பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து எமது ஊரில் தங்கியிருந்த வயோதிபர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கவே அவர் மேல் ஏற்பட்ட கருணையை அடிப்படையாக கொண்டு அவரை தனது வீட்டில் கூட்டிவந்து உணவளித்து தன்னோடு தங்க ஏற்பாடுகளை செய்துகொடுத்திருந்தார் .அந்த வயோதிபரோடு அளவளாவிய நேரத்தில் பொன்ராசா அவர்கள் செய்யும் தொழிலை பற்றி கேட்டறிந்த அந்த முதியவர் தாளைகளுக்கிடையில் வலைபாய்ந்து மீன் பிடிப்பதற்கு பதிலாக கண்ணா அருகில் பாய்ந்து வெள்ளறால் பிடிக்கலாம் என்றதன் அடிப்படையில் வெள்ளறாலுக்காக அந்த வயோதிபர் கூறிய அறிவுரைகளின் படி அவர் சொன்ன நுட்பங்களை பயன்படுத்தி முதன்முதலாக கண்ணாவை அண்டிய பகுதிகளில் பொன்ராசா அவர்கள் வெள்ளறாலுக்கு வலைபாய்ந்த வரலாறுக்குரியவரானார்.
பொன்ராசா அவர்கள் தனக்கு உதவியாக எமது ஊரின் கனிபா காக்கா அவர்களையும், அந்த வயோதிபரையும் அழைத்துக்கொண்டு முதன் முதலாக எமது நாயாற்றுமுனையில் உள்ள கண்ணா அருகில் வைத்து வெள்ள இறாலுக்காக வலைபாய்ந்து நூற்றுக்கணக்கனா கிலோ வெள்ள இறாலை பிடித்திருந்தார் இவ்வாறு அந்த வயோதிபர் வழங்கிய அறிவுரைகளின் படியும், அவர் காட்டிய நுட்பங்களையும் கொண்டு அதிகளவு வெள்ள இறால் அந்நாட்களில் பிடிபட்டது இவ்வாறு சுமார் 6மாத காலமாக அந்த வயோதிபர் பொன்ராசா அவர்களோடு வெள்ள இறால் வலைப்பாச்சலில் உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பொன்ராசா அவர்களுக்கு தோணி கணக்கில் இறால் படுவதை கண்ட எமது மீனவர்கள் சிலர் அவர் பாய்ந்த இடத்திற்கு அருகிலும், அவருக்கு உள்ளாலும், மேற்காலையும் வைத்து வலை பாய்ந்திருந்தும் பொன்ராசா அவர்களுக்கு படும் இறால் தொகை குறைந்தபாடு இல்லை அந்தளவுக்கு வெள்ள இறால் பிடிப்பது சம்மந்தமாக அனைத்து நுட்பங்களையும் கொண்டு வலைபாய்வது பொன்ராசா அவர்களது தனிச்சிறப்பாகும்.

எமது துறை நேரிலும், கொம்புதீவு ஆறு, பூவரசு ஆறு போன்ற எமது பகுதிகளில் உள்ள அனைத்து ஆறுகளிலும் வருடா வருடம் இறால் வலை பாய்வது பொன்ராசா அவர்களது வாடிக்கையாக இருந்தது. அந்தந்த காலப்பகுதியின் காலநிலைக்கு ஏற்றால் போல் அந்தந்த நீர் ஓட்டத்திற்கு தக்கதாக மிகவும் நுட்பமான முறையில் வலைபாய்ந்து பார்போர் மலைத்துப்போகுமளவிற்கு வெள்ள இறால் பிடித்திருந்தார் பொன்ராசா அவர்கள்.

பொன்ராசா அவர்கள் இறாலுக்கு வலை பாய்ந்து பெருமளவிலான இறால் பிடிப்பதை கண்டு எமது ஊரவரான தாவீது அவரது பிள்ளைகள் மங்களம் ஆகியோர் வெள்ள இறாலுக்காக வலை பாய்ந்திருந்தனர். ஆனால் பொன்ராசா அவர்களுக்கு படும் இறாலுக்கு குறைவே இல்லாத வகையில் தோணி கணக்கில் பொன்ராசா அவர்களுக்கு இறால் பிடிபட்டது.

இறால் வலை பாய்ச்சலில் பல நுட்பங்களை கொண்டு பட்டி வலை முழுமையாகவும் வேலி வலைக்கும் பஞ்சிப்படாமல் மண்தள்ளுவதில் இருந்து ஒவ்வொரு பட்டி இழுவைக்கும் நுட்பமாக வலையின் தன்மையை அவதானிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தார். ஆரம்ப காலங்களில் ஒரு கிலோ இறாலை 15/=, 20/= வீதம் விற்று அதன் பின்னரான காலப்பகுதிகளில் 1975/ 1976 ம் ஆண்டு காலத்தில் ஒரு கிலோ இறால் 20/=, 25/= வீதம் விற்பனை செய்து அதன் பின்னரான காலப்பகுதிகளில் 1980ம் ஆண்டுகளில் ஒரு கிலோ இறால் 80/=, 100/= க்கு எமது VAJ உரிமையாளர் சலமோன் அவர்களுக்கு விற்பனை செய்திருந்தார்.

வெறும் மரக்கல் தாங்கல் இருந்த அந்த காலத்தில் சுமார் இரண்டு அல்லது மூன்று வலைகளை ஆற்றில் பாய்ந்து விடியப்புறம் 3 மணிக்கு நாயாத்து முனை வரைக்கும் சென்று இறால் பிடித்த அனுபவசாலி

பொன்ராசா அவர்கள்1983 களின் பிற்பாடு வெளியிணைப்பு இயந்திரத்தின் பாவனையில் எமது கடற்பரப்பில் அனைத்து ஆறுகளிலும் வலைபாய்ந்து 200 கிலோ ,300 கிலோ,500 கிலோ என தோணி மட்டத்திற்கு இறால் பிடித்த வரலாற்றுக்குரியவர் தான் பொன்ராசா அவர்கள்.

இவ்வாறு பொன்ராசாவாரும் வெள்ளறாலும் என்று சொல்லும் அளவிற்கு கண்ணா அருகிலும், ஆறுகளிலும் வலைபாய்ந்து வெள்ளறால் பிடித்த பொன்ராசா அவர்கள் 1991ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ம் திகதி இறைபதமடைந்தார்.

அபிலாசைக்க அப்பாற்பட்ட வாழ்க்கை: ஞானசீலன் நீக்கிலாப்பிள்ளை

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் தொழில்.

சவிரிப்பிள்ளை என எமது மக்களால் அறியப்படுகிற நீக்கிலாப்பிள்ளை. ஞானசீலன் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல்தீவு என்ற எமது கடலோர கிராமத்தில் தை மாதம் 2ம் திகதி 1939ம் ஆண்டு பிறந்தார். அவர் மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எதிர்காலப் பாதையாக விவசாயத் துறையால் அவர் ஆழமாக ஈர்க்கப்பட்டார். ஆரம்பகால வாழ்க்கை மற்றும் தொழில் இலங்கையின் விவசாய இதயத்தால் வடிவமைக்கப்பட்டார். தனிப்பட்ட லட்சியத்தை விட சேவை வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து விவசாயத்தில் ஒரு தொழிலைத் தொடர்ந்த அவர், விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் மன்னாரில் உள்ளூர் விவசாயிகளை ஆதரிப்பதற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்து, விவாசயத் திணைக்களத்தின் விவாசய போதனாசிரியராக ஆனார்.

ஞானசீலன் அவர்கள் குண்டகசாலை விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் விவசாயக் கல்விப் பாடநெறி மற்றும் தொழில்முறைப் பயிற்சியைப் பெற்றார். ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு என்னவென்றால், கிராமத்திற்கு அவர் முதன்முறையாகக் கொண்டு வந்த யமஹா ஃபீல்ட் பைக்கைப் பார்த்து முழு கிராமமும் மகிழ்ந்தது.

தனது பதவிக் காலம் முழுவதும், முருங்கன், ஹிங்குராகோடா, பரந்தன், விடத்தல்தீவு, இறுதியாக மன்னார் என பல பகுதிகளில் பணியாற்றினார். அவர் எங்கு சென்றாலும் அர்ப்பணிப்பின் தடயங்களை விட்டுச் சென்றார்.

அவரது குடும்பம் நிதி ரீதியாக சிரமப்பட்டாலும் - ஒரு சாதாரண அரசாங்க சம்பளத்தில் உயிர்வாழும் போதும் - ஞானசீலன் பொருள் சார்ந்த ஆசைகளால் அசைக்கப்படவில்லை.அவர் நல்ல தகுதி வாய்ந்தவராக இருந்தபோதிலும், பதவி உயர்வுகள் அல்லது தனிப்பட்ட ஆதாயங்கள் அவரைத் தூண்டவில்லை. மாறாக, அவர் தனது அழைப்புக்கு உண்மையாக இருந்தார்: விவசாயிகளுக்கு சேவை செய்தல் மற்றும் இடைவிடாமல் சுய கல்வியைத் தொடர்ந்தல். நிலம், மக்களின் சேவகர் அவரது வாழ்க்கை அவர் சேவை செய்த விவசாய சமூகங்களுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்திருந்தது.

விட்டத்தல்தீவில், அவர் வயல்களில் நன்கு அறியப்பட்ட நபராக இருந்தார், அனைத்து பின்னணியிலிருந்தும் விவசாயிகளுக்கு நேரடி ஆதரவை வழங்கினார். கிராமத்தில் முஸ்லிம் விவசாயிகளுடன் அவர் கொண்டிருந்த நெருங்கிய ஒத்துழைப்பு, பகிரப்பட்ட உழைப்பு மற்றும் அறிவு மூலம் ஒற்றுமையை வளர்ப்பதற்கான அவரது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியது. அவரது விவசாயக் கடமைகளுக்கு அப்பால், ஞானசீலனின் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாகப் பேசுவது அவரை உள்ளூர் மக்களுக்கு நம்பகமான மொழிபெயர்ப்பாளராகவும் கடிதம் எழுதுபவராகவும் மாற்றியது.

நிர்வாகத் தடைகளுடன் போராடிய பல கிராமவாசிகள், அறிக்கைகளை வரைவதாக இருந்தாலும் சரி அல்லது அதிகாரப்பூர்வ ஆவணங்களை மொழிபெயர்ப்பதாக இருந்தாலும் சரி, அதிகாரத்துவத்தை வழிநடத்த நம்பகமான வழிகாட்டியை அவரிடம் கண்டறிந்தனர். வாழ்நாள் முழுவதும் கற்றவர் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய ஞானசீலன் ஒரு உண்மையான பன்மொழிப் புலமை மற்றும் தன்னியக்கக் கல்வியாளர். அவரது நாட்கள் பயிர்களுக்கு மத்தியில் மட்டுமல்ல, புத்தகங்களுக்கிடையேயும் கழிந்தன.

கல்வி என்பது ஒரு கட்டம் அல்ல, ஆனால் ஒரு வாழ்க்கை முறை என்று அவர் நம்பினார் - அமைதியான ஒழுக்கத்துடன் அவர் கடைப்பிடித்த ஒரு நம்பிக்கை, கட்டளை மூலம் அல்ல, முன்மாதிரியாக தனது குழந்தைகளுக்குக் கடத்தினார். அவரது வீடு மீள்தன்மை மற்றும் கற்றல் இரட்டைத் தூண்களாக இருந்த

ஒன்றாகும். பொருளாதார நெருக்கடிகள் இருந்தபோதிலும், அவரும் அவரது மனைவி வேதநாயகம் கொண்சன்ரீனம்மாவும் (லில்லி) - குடும்பத்தின் வரையறுக்கப்பட்ட நிதியை திறமையாக நிர்வகித்த ஒரு இல்லத்தரசி - தங்கள் குழந்தைகள் அனைவரும் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்தனர். அவர்களின் மரபுப்படி இரண்டு மருத்துவர்கள், ஒரு பொறியாளர் மற்றும் கல்வியாளரான பேராசிரியர் ஜெயசீலன் ஞானசீலன் ஆகியோர் அடங்குவர்.

குடும்பம் மற்றும் மரபு

வேதநாயகம் கொண்சன்ரீனம்மா (லில்லி) அவர்களை மணந்த ஞானசீலன் (பி. மே 21, 1949, நாவந்துறை, யாழ்ப்பாணம்), பணிவு, சேவை மற்றும் விடாமுயற்சியை வலியுறுத்தும் ஒரு குடும்பத்தை உருவாக்கினார். அவர்களின் குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே படிக்கும் சவாலான காலங்களில் அவரது மனைவியின் உறுதியான ஆதரவு மிக முக்கியமானது. அவர்கள் ஒன்றாக, கடின உழைப்பு, கல்வி மற்றும் சமூக சேவை ஆகியவற்றின் மதிப்புகளை தொடர்ந்து நிலைநிறுத்தும் ஒரு குடும்பத்தை வளர்த்தனர். ஞானசீலன் நிக்கிலாப்பிள்ளையின் கதை தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, மற்றவர்களுக்கு சேவை செய்வதும் உறுதியான கற்றலும் தலைமுறைகள் முழுவதும் மாற்றத்தின் அலைகளை உருவாக்க முடியும் என்பதற்கான வாழும் சான்றாகும்.

இலட்சியத்தை விட நேர்மையைத் தேர்ந்தெடுத்து தனது சமூகத்தில் ஒரு அழியாத முத்திரையை பதித்த விதத்தல்தீவின் உண்மையான மகன். அவரது மூத்த மகன், பேராசிரியர் ஜெயசீலன் ஞானசீலன், தனது தந்தையின் ஆழ்ந்த செல்வாக்கைப் பற்றிப் பேசுகிறார்: “பெற்றோர் வளர்ப்பில் எங்கள் தந்தையின் அணுகுமுறை திணிப்புக்கு பதிலாக உத்வேகத்தை அளித்தது; அவர் முன்மாதிரியாக இருந்து, கல்வியின் மதிப்பையும் கற்றலில் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தையும் நிரூபித்தார்.” பங்குனி மாதம் 15,ம் திகதி 1996 ம் ஆண்டு அன்று, இலங்கையின் உள்நாட்டு மோதலின் கொந்தளிப்புக்கு மத்தியில், ஞானசீலன் மன்னாரில் காலமானார்.

போர்க்கால ஷெல் தாக்குதலின் மன அழுத்தமும், அவரது உயர் இரத்த அழுத்தமும் சேர்ந்து, அவரது அகால மரணத்திற்கு வழிவகுத்தது. அவரது மரணம் அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல, அவர் விடாமுயற்சியுடன் பணியாற்றிய சமூகத்திற்கும் ஒரு இழப்பாகும். ஞானசீலன் நிக்கிலாப்பிள்ளையின் வாழ்க்கை அர்ப்பணிப்பு, மீள்தன்மை மற்றும் கல்வியின் மாற்றும் சக்தியின் ஒரு கலங்கரை விளக்கமாக நிற்கிறது. அவரது மரபு அவரது குழந்தைகள் மற்றும் விவசாயத்தில் அவரது பணி மற்றும் கற்றலுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மூலம் அவர் தாக்கத்தை ஏற்படுத்திய எண்ணற்ற தனிநபர்களின் வாழ்க்கையிலும் தொடர்கிறது. அவர் நினைவுகளை விட அதிகமாக விட்டுச் சென்றார்; அமைதியான கண்ணியம், தன்னலமற்ற சேவை மற்றும் அங்கீகாரம் அல்லது வெகுமதியைக் கேட்காமல் மற்றவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மரபை அவர் விட்டுச் சென்றார்

இசைத்துறையில் கலாபூசண விருதைவென்ற சந்தியாப்பிள்ளை அருளானந்தம் மாஸ்ரர்

திரு.சந்தியாப்பிள்ளை அருளானந்தம் அவர்கள் விடத்தல்தீவில் திரு.திருமதி சந்தியாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோருக்கு மகனாக 1945 ம் அண்டு வைகாசி மாதம் 25 ம் திகதி திகதி பிறந்தார்.

சிறுவயதில் ஆலய திருப்பலிகள், செபமாலை சொல்லுதல், விளையாட்டுகள் ஆகியவற்றில் பயிற்சி பெற்று SSC சித்தியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றுத்தேந்தார். இந்தியா சென்று தமிழ்நாடு பூந்தமல்லியில் மறைக்கல்வியும், வேதாகம பயிற்சியும் பெற்றார்.

ஆனந்தம் மாஸ்ரர் அவர்கள் எமது கிராமத்தின் ஆயுள்வேத வைத்தியரான முடியப்பு அவர்களது மகள் செபமாலைகுமாரி அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து 2 ஆண் பிள்ளைகளையும், 2 பெண் பிள்ளைகளையும் பெற்று வாழ்ந்துவருகிறார்.

இசைத்துறையில் கொண்டிருந்த ஆர்வம் மிகுதியால் திருப்பாடல்களையும், சினிமாப்பாடல்களையும், சீங்கீதப்பாடல்களையும் செவிப்புலனாக கிரகித்து தானாகவே பாடல் பயிற்சி பெற்றார். இசைக்கருவிகளை கற்பித்தல் மூலமும் ,அவருக்கு கிடைத்த ஞானத்தின் மூலமும் தான் கற்றுக்கொண்டவற்றை தனது மாணவர்களுக்கும் கற்பித்து பல மாணவர்கள் இசைத்துறையில் வளர்ந்து,உருவாக காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.ஆனந்தம் மாஸ்ரரிடம் மாணவர்களாக இசைத்துறையில் கற்ற பலர் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும், இசை கச்சேரிகளிலும், ஆலய திருப்பலிகளிலும் இசை,ஜாம்பவான்களாக சிறப்பித்து வருகின்றார்கள். ஆர்மோனியம், வயலின்,மற்றும் ஓர்கன் இசை கருவிகளை மீட்கும் திறமையை கொண்டிருந்து இசை பயணத்தில் தொடர்ந்து பயணிப்பது ஆனந்தம் மாஸ்ரர் அவர்களது சிறப்பம்சமாகும்.

1975ம் ஆண்டுகளில் எமது விடத்தல்தீவு முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் தலைமையில் திருவிவிலிய போதனைகளை நாடகங்களாக மேடையேற்றியிருந்தார். 1976ம் ஆண்டு மன்னார் நானாட்டான் பங்கில் முன்னாள் ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் குருவாக பணி ஆற்றிய காலங்களில் பல நாடகங்களை படைத்து மேடையேற்றியிருந்தார். ஆண்டான்குளம், நானாட்டான், உயிலங்குளம், விடத்தல்தீவு, வவுனியா போன்ற பங்குகளில் உள்ள ஆலயங்களில் இசை கருவிகளை மீட்டு ,நாடகங்களை மேடையேற்றியதுடன் இசை ஆர்வத்தை தூண்டி பல மாணவர்களுக்கு கற்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இசை கருவிகளை மீட்டுவதில் தமிழ் சுரங்கள், ஆங்கில குறியீடுகளுடன் கூடிய குறிப்புகளை கையாளும் விதத்தை பயிற்றுவித்து, இசையை சுருதி, தாளம் என்பனவற்றை சரியாக பயன்படுத்தி பாடவும், மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தி இசை கலையானது அழிந்துபோகாவண்ணம் எமது சமூதயத்தில் வாழையடி வாழையாக பரவ வேண்டும் என்ற நோக்குடன் எல்லோரிடத்திலும் நட்புடனும், குறிப்பாக எல்லா மதத்தினரையும் மதிக்கும் சிறந்த குணவியல்புகளை கொண்டு “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்றதன் அடிப்படையில் விடத்தல்தீவின் வீணையாய், வீசிடும் காற்றில் இசையாய் உதித்து திருவிவிலியத்தை நாடகமாய் உரைத்து இன்றுவரை மாஸ்ரர் என எம்மவர்களால் அழைக்கப்படுகின்றார் அருளானந்தம் மாஸ்ரர் அவர்கள்.ஆனந்தம் மாஸ்ரர் அவர்கள் இசைத்துறையில் பல்வேறுபட்ட விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார். அந்த வகையில் மாந்தை மேற்கில் கலைமதி விருதினையும்,2016 ம் ஆண்டு வடமாகாண கௌரவ முதலமைச்சர் அவர்களால் இசைத்துறைக்காக முதலமைச்சர் விருதையும், மன்னாரில் மண்எழில் விருதையும் ,கொழும்பில் கௌரவ கலாச்சார அமைச்சரால் கலா பூசண விருதையும் பெற்றுள்ளமை சிறப்பாகும்.

ஓய்வு நிலை மறையாசிரியரும், கலா பூசண விருது வென்றவருமான ஆனந்தம் மாஸ்ரர் அவர்கள் தமிழ் இலக்கிய,பண்பாட்டு துறையிலும் மிளிரும் நட்சத்திரமாக கவிதைகளை எழுதி இணையத்தின் மூலமாக அவற்றை வெளியிடுவதுடன், நடைபெறும் கலை விழாக்களில் கவிதைகளை புனைந்து வாசித்து வருகின்றார். அவரது கவிதைகளில் கதைகள், பழமொழிகள், இறைவனை பற்றிய அன்பு சார்ந்த மொழிகள், காதல் சுவைகள், என்பன அதிகளவில் உள்ளடக்கப்பட்டதாக காணப்படும்.

எமது கிராமத்தின் நாடக ஒப்பாரி மற்றும் இசை கலைஞர்கள்

எமது கிராமத்தின் நாடக ஒப்பாரி மற்றும் இசை கலைஞர்களில் ஒருவரும் அமரத்துவமடைந்தவருமான மாசில்லாமணி மற்றும் அவரது துணைவியார் அக்னஸ் விடத்தல்தீவின் கலாச்சார கட்டமைப்பில் திரு. மாசில்லாமணியின் பெயர் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. நாடகம் மற்றும் இசையில் அவரது கலைத்திறன் மூலம், அவர் நமது மரபுகளின் ஆன்மாவைப் பதித்தது மட்டுமல்லாமல், பாதுகாத்து அனுப்பினார். அவரது மரபு வாழ்கிறது - அவரது நிகழ்ச்சியைப் பார்த்தவர்களின் நினைவுகளில் மட்டுமல்ல, கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கின்றது. விடத்தல்தீவு மீதான அன்பு அவரது சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை உறுதி செய்வதை அவரது சந்ததியினர் காண்பது மிகவும் நெகிழ்ச்சியூட்டுகிறது. அவரும் திருமதி. ஆக்னஸூம் அடுத்த தலைமுறையை தொடர்ந்து வடிவமைக்கின்றனர். இது கலாச்சாரம், நினைவகம் மற்றும் நீடித்த கிராமப் பெருமைக்கு ஒரு அஞ்சலி.

கற்பித்தலில் ஓய்வு பெறாதா ஆசான் பறுனாந்து பெனடிக்ற் மாஸ்ரர் அவர்கள்

பெனடிக்ற் மாஸ்ரர் என்று,எமது மக்களால் அறியப்படுகிற ஆசிரியர் பெனடிக்ற் அவர்கள் 1933ம் ஆண்டு பங்குனி மாதம் 05ம் திகதி பறுனாந்து மற்றும் மதலேனாள் ஆகியோருக்கு மகனாக யேசுதாசன், எலிசபேத், கிறேஸ் ஆகிய சகோதர சகோதரிகளுடன் விடத்தல்தீவில் பிறந்தார்.

தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை மன்னார் நல்லாயன் பாடசாலையிலும் (தற்போதைய புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி) கற்று 1954ம் ஆண்டுகளில் அவரது 21வது வயதில் ஆங்கில ஆசிரியராக மன்/விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நியமனம் பெற்று பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர் கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தமழ் மொழி ஆசிரிய பயிற்சியை 1955ம் ஆண்டு தொடக்கம் 1956ம் ஆண்டு வரை பயின்றார். ஆசிரிய கலாசாலை பயிற்சிக்கு பின்னர் மன்னார் முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 5 வருடங்கள் உதவி ஆசிரியராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1961ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி திரேசம்மா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்த பெனடிக்ற் மாஸ்ரர் அவர்கள் மரிய கொண்சி சாள்ஸ் ஜோசப் (ஆசிரியர்), பொனவெஞ்சர் டிலாசால் சபை அருட்சகோதரர், பெனற் (பொறியியலாளர்) ஆகிய பிள்ளைகளை ஈன்றெடுத்தார்.

தொடர்ந்து 1963 ம் ஆண்டு தொடக்கம் 1965ம் ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் மன்னார் பேசாலை மகாவித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும், 1966ம் ஆண்டில் இருந்து 1972ம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார் விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் 1973ம் ஆண்டு தொடக்கம் 1974ம் ஆண்டு வரை மன்னார் பாலைக்குளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் ,1975 களில் மன்னார் ஓலைத்தொடுவாய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் உதவி ஆசிரியராக சிறப்பான பணியாற்றியிருந்தார் பெனடிக்ற் மாஸ்ரர் அவர்கள்.

அதன் பின்னர் உதவி அதிபராக பதவி உயர்வு பெற்று 1976ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டு வரை மன்னார் விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சேவையாற்றியிருந்ததுடன் 1979ம் ஆண்டு மன்னார் பரப்புக்கடந்தான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அதிபராக பதவி உயர்வு பெற்று அங்கே பணியாற்றியிருந்தார். பின்னர் 1980 ம் ஆண்டு மன்னார் பேசாலை மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகி அங்கே ஆசிரியராக பணியாற்றியிருந்தார்.

தொடர்ந்து 1981 ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரை மன்னார் பள்ளிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்று அங்கே பணியாற்றியிருந்ததுடன், 1983ம் ஆண்டில் இருந்து 1984ம் ஆண்டு வரை மன்னார் துள்ளுகுடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன் பின்னரான காலப்பகுதியில் 1985ம் ஆண்டு தொடக்கம் 1987ம் ஆண்டு வரை மன்னார் எழுத்தூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராக கடமையாற்றியதுடன் 1988ம் ஆண்டில் 6 மாதங்கள் மன்னார் தாழ்வுபாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட்சாலையில் அதிபராக பணியாற்றியிருந்தார். தொடர்ந்து 1988ம் ஆண்டு தொடக்கம் 1993ம் ஆண்டு பங்குனி 05ம் திகதி வரை எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் பெனடிக்ற் மாஸ்ரர் அவர்கள் கடமையாற்றியிருந்தார்.

1994ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி வரை பகுதி நேர ஆங்கில ஆசிரியராக மடுவலயத்தில் அமைந்துள்ள எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியிருந்தார். தொடர்ந்து 1998ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி இறைபதமடைந்தார்.

பெனடிக்ற் மாஸ்ரர் அவர்கள் விடத்தல்தீவு சனசமூக நிலைய தலைவராகவும், எமது பங்கு புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் மன்றத்தின் போசகராகவும் 1977ம் ஆண்டு மற்றும் 1978ம் ஆண்டு காலப்பகுதியில் பதவிவகித்திருந்தார். மற்றும் எமது விடத்தல்தீவு ஆலய அருட்பணிப்பேரவையின் செயலாளராக கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

திரு. பெனடிக்ற் : பணிவும் புலமையும் சேவையையும் ஒட்டிய ஒளிவிளக்கே!

குழந்தைப் பருவத்திலிருந்தே மரியாதை, பணிவு, ஒழுக்கம் ஆகியவை அவரின் இயல்பான பண்புகளாகும். இவர் சந்தித்த அனைவரிடமும் ஈர்ப்பும் நம்பிக்கையும் ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டிருந்தார். இவை வளர்ந்தபோது, அவை தலைமைத்துவ திறனாகவும், இரக்க உணர்வாகவும், மனஅமைதியை ஒளிரச் செய்கின்ற மனவலிமையாகவும் பரிணமித்தன.

அவரது கல்விப் பயணம் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற புனித பட்ரிக் கல்லூரியில் தொடங்கியது. இக்கல்லூரியில் அவர் தனது அறிவாற்றலும், ஒழுக்கமும் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் விரும்பப்படுகிற மாணவராக விளங்கினார். பின்னர் மன்னார் மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க புனித சேவியர் ஆண்கள் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தார். இங்கும் அவர் கல்விச் செயல்பாடுகளில் மட்டும் அல்லாது சமூக சேவையிலும் தனித்துவத்தை காட்டினார்.

பின்னர், அவர் சிறுபிள்ளைகளின் கல்விக்கு அர்ப்பணித்துப் பல பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றினார் — விடத்தல்தீவு, எழுத்தூர் அடம்பன், சிலாபம், கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் அவரது சேவைகள் மாணவர் வாழ்வில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தின. குறிப்பாக கிளிநொச்சியில் உள்ள ஜோசப் வாஸ் கல்லூரியில் பணியாற்றியபோது, அவர் பள்ளியின் கல்வி மற்றும் ஒழுக்க ஒழுங்கு நிலைகளை உயர்த்தும் பணியில் அரும்பணி செய்தார்.

"பெனடிக்ட் மாஸ்டர்" என்பது ஒவ்வொரு விடத்தல்தீவு குடும்பத்தின் இதயங்களிலும் அன்பாகப் பதிந்த ஒரு பெயர். அவர் ஒரு ஆசிரியரை விட அதிகம்; அவர் ஒரு லேசான வாய்மொழி நையாண்டி கலைஞர், அவர் தீவிரமான பாடங்களைக் கூறும்போது கூட மக்களை சிரிக்க வைக்கக்கூடிய ஒருவர். அவரது தனித்துவமான பாணி - நகைச்சுவையில் மூடப்பட்ட ஒழுக்கம், புத்திசாலித்தனத்துடன் வழங்கப்பட்ட திருத்தம் - அவரை மறக்க முடியாததாக மாற்றியது. அவரது கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்ட கடுமையான தண்டனைகள் கூட கற்றலைப் போற்றத்தக்க நினைவாக மாற்றிய ஒரு வசீகரத்தை எவ்வாறு கொண்டிருந்தன என்பதை அவரது மாணவர்கள் அன்புடன் நினைவு கூர்கிறார்கள்.

கண்டிப்பான ஒழுக்கம், நேர்மையான ஆன்மா மற்றும் அன்பான வழிகாட்டியான பெனடிக்ட் மாஸ்டர், தனது ஞானத்தால் மட்டுமல்ல, மகிழ்ச்சியையும் நேர்மையையும் கலந்த அவரது ஆளுமையாலும் தலைமுறைகளை வடிவமைத்தார். இன்றும் கூட, யாராவது அவரது பெயரை உச்சரிக்கும்போது, அது அன்பான கதைகள் மற்றும் புன்னகைகளின் வெள்ளத்தைத் தூண்டுகிறது, இது அவரது மாணவர்கள் மற்றும் பரந்த சமூகத்தின் மீது அவர் ஏற்படுத்திய தாக்கத்திற்கு ஒரு உண்மையான சான்றாகும்.

தமிழும் ஆங்கிலமும் இரு மொழிகளிலும் அழுத்தமான அறிந்தும் ஆர்வத்துடனும் கற்பித்தவர். கல்வி என்பது தொழிலல்ல, அது ஒரு புனிதமான சேவையென நம்பியவர். பணிவு, நேர்மை, ஒழுக்கம், அடக்கம் ஆகியவை அவரது வாழ்வின் நெறிகளாக இருந்தன. பாராட்டுகள் வேண்டாமென நினைத்தவர்; ஆனால், அவர் விட்டுச் சென்ற நிழல்கள் கூட பாராட்டுக்குரியவை.

அவரது மாணவர்களில் நற்சிந்தனையும், சீரான மொழிப்பயிற்சியையும், கலாச்சாரப் பாரம்பரியத்தின் மதிப்பையும் வளர்த்தார். கல்வி என்பது மனித மனதையும் ஆன்மாவையும் உயர்த்தவேண்டிய ஒன்றெனும் கருத்தை அவர் மனப்பாடமாக மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.

ஓய்வு பெற்ற பின்னரிலும், சமூகத்தின் நினைவிலும் மாணவர்களின் நெஞ்சிலும் அவர் ஒரு அழிக்க முடியாத சின்னமாக இருந்தார். அவர் உரைகள் கொடுத்துப் பேசாதவர் — செயல் மூலமாய் பாடமளித்தவர். அமைதியான புரட்சியாளராக, ஒவ்வொரு மாணவனின் வாழ்க்கையையும் மெல்ல மெல்ல மாற்றியவர்.
அவர் விட்டுச்சென்ற தாக்கமும், நேர்மையும், சேவையும் இன்றுவரை காற்றிலும், கல்விக்கூடங்களிலும் வாழ்கின்றன. அவரது நினைவு, அவருடன் கற்றோரும் பணியாற்றியோரும் நெஞ்சளவில் கொண்டாடும் ஒரு கலசமாகவே உள்ளன.

அக்காலத்தில் எமது ஊரிலும் ,பாடசாலையிலும் , ஆசிரியர்கள் குறிப்பாக கணித பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த காலம், தேவையான ஆசிரிய வளம் வழங்கப்படமையால் ஊரிலும்,ஊருக்கு வெளியிலிருந்தும் ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியராக பணிசெய்தனர்.

வெள்ள சேட், வெள்ள வேட்டியும், சில வேளைகளில் புள்கை சேட்டை உள்ள விட்டு ரவுசர் அணிந்து கான்ரிலில் பன் *bag* கொழுவியபடி சாதாரணமாக சையிக்கிளில் சரியான நேரத்திற்கு பள்ளிக்குடம் வரும் அதிபர் எமது பெனடிக்ற் மாஸ்ரர்.

அலுப்பு பஞ்சி இல்லாதவர். கடும் சொற்களை அறவே கொண்டிராதவர், பள்ளிக்கூடம் முடிய வீடு வந்தவுடன் தொடங்கும் வகுப்பு சில வேளை விளையாட போக கூட விடாமல் நிறைய கற்பித்தார். பாடசாலையில் 10 ம்,11ம் ஆண்டு படிக்கும் மாணவர்களின் வகுப்புக்களுக்கு கூட்டி சென்று ஆங்கில மொழியில் அவர் கற்பித்த அனைத்திலும் கேள்வி கேட்டு சோதிக்க சொல்லி சவால்விட்டு பெருமைப்படுவார். பல காலமாக ஏறத்தாழ 2வருடங்கள் தனியாக ஆங்கில வகுப்பு எடுத்து ஒரு ரூபாய் கூட பெற்றுக்கொள்ளாத உத்தமர் அவர். தனது பிள்ளைகளை போல அரவணைத்து கற்றுத்தந்த உன்னத ஆசான்.

பாடசாலையில்..........
ஆம் என்றால் ஆம் இல்லை என்றால் இல்லை என்பது அவரிடமிருந்த பண்புகளில் ஒன்று. நேரம் தவறாதவர், கடமையில் கண்ணும் கருத்துமாய் இருந்து, பாடசாலை நிர்வாகத்தை திறம்பட ஆற்றியவர். ஆசிரிய வளங்களையும், பௌதீக வளங்களையும், மிக நேர்த்தியாக கையாண்டவர். இன்னும் சொல்ல போனால் பாடத்திட்டங்களோடு, இணைப்பாடவிதானங்களையும் ஒருங்கே சிறப்பாக கையாண்ட அதிபர் என்பது மிகையல்ல.பாடவேளையில் நிலத்திலும் ,ஆகாயத்திலும் எழுத்துக்களை எழுதிய பின்னரே நாம் கொப்பியில் ஏழுதுவோம். தொடு ,வளை ,மேல போ, கீழ வா என்டு *ABCD* எழுத பழக்கப்பட்டோம்.

பாடசாலை வேலி அடைக்கும் பொழுது கட்டைகளை பள்ளம் தோண்டி நட்டிவிட்டு, முள்ளுக்கம்பிகளை இழுத்து அடிச்சுமட்டைகளை வரியும் போது அங்கே வந்து ஒருக்கா கட்டையை கையால் தள்ளிப்பார்த்தபின் "தம்பி விழுமா ?" எனக்கேட்பார் இல்ல சேர் என்போம், உடனே "எப்ப விழும்?" என்று கேட்டு சிரிப்பை வர வைப்பார். பாடசாலை காலை ஒன்றுகூடல் சற்று அதிகமாக இருந்தாலும் சொல்ல வேண்டிய அனைத்தையும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உரியமுறையில் கொண்டுபோய் சேர்த்திடுவார். கொஞ்ச பயந்த சுபாவம் அந்நாட்களில் விமான தாக்குதல் ,விமான சத்தங்கள் பீதியை ஏற்படுத்தியதில் ஐயமில்லை.

பாடசாலை மாணவ உதைபந்தாட்ட அணி அதிரடி அணி என்ற பெயரில் வெற்றிகளை பெற்ற வேளை குறிப்பாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை வென்ற அந்த நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருடைய புகைப்படத்தையும் பாடசாலை விளம்பர பலகையில் இட்டு காலைக்கூடத்தில் அவர்கள் வெற்றியை கொண்டாடி மகிழ்ந்திருந்த நாட்களை மறக்க முடியாது.

அடிக்கடி விடுதலை புலிகளின் நிகழ்வுகளுக்காக பல்வேறு போட்டிகளுக்கும், நினைவு தினங்களுக்கும், ஏனைய நிகழ்வுகளுக்காகவும் சென்றுவருவது வழமை, அந்த காலப்பகுதியில் முழங்காவில் நிகழ்ச்சிக்காக சென்ற மாணவர்களுக்கு சாப்பிட்ட சாப்பாடு (பணிஸ்) ஒத்துவராமல் சாப்பிட்ட 10 ம் ஆண்டு மாணவிகள் ஒருவரை ஒருவரை பெயர் சொல்லி கூப்பிட்டு மயங்கி விழுந்த வேளை பெனடிற் மாஸ்ரர் பதறிப்பட்டு திகைப்புற்று அவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் அவர்கள் இயல்பு நிலைக்கு வரும் வரை பட்ட அங்கலாய்ப்பு சொல்லி மீளாது.

பாடசாலைக்கு பெயர் மாற்றி தூய ஜோசப்வாஸ் ம.வி. என பெயரிட்ட பெருமையும், மாணவ முதல்வர்களை உருவாக்கி வெள்ளியிலான மாணவ முதல்வர்களுக்கான சின்னங்களை பெற்று கொடுத்த பெருமையும் பெனடிற் மாஸ்ரரையே சாரும்.

அக்காலத்தில் அச்சடிக்கும் இயந்திரங்கள், போட்டோகொப்பி எடுக்கும் இயந்திரங்கள் இல்லாத நேரம். ஆங்கில பரீட்சைக்காக திணைக்களத்தில் இருந்து வழங்கப்படும் வினாத்தாள்களை வைத்துவிட்டு தான் எமக்கு படிப்பிச்ச பாடத்திற்குள் வினாக்களை முதல் நாளே எம் கைப்பட எழுத தந்து அடுத்தநாள் ஆங்கில பரீட்சையை நடாத்துவதும் நினைவில் உள்ளது. வயிற் சீற் தட்டுப்பாடான காலம் சித்திர சோதனை வேளையில் கீறிய சித்திர பேப்பருக்கு பின்புறம் மற்றுமொரு பேப்பரை வைத்து இணையுங்கள் அதனால் உங்கள் சித்திரம் அழகாகும் என நகுக்காக சொல்லுவார்.

எமது வகுப்பில் ஒருதடவை ஆங்கில பாடத்திற்கு வந்த பெனடிற் மாஸ்ரரிடம் றெமியும் ,கமில்ரனும் நடந்துகொண்டது சிரிப்பை அடக்கமுடியாததாக இருந்தது. ஆங்கில பாடத்தை கடத்துவதற்காக றெமி " சேர் வயிற் சீற் இருக்கு கொண்டரவா"? என்டு கேட்கவும் "எத்தின பேப்பர்? என்டு திரும்ப அவர் கேட்க "20 பேப்பர் என்டு றெமி சொல்ல படான்ரா எண்ட அவர் கமில்ரனிடம் "எத்தின பேப்பர்? என கேட்கவும் அவன் "50 சேர் என்டவுடன் இவன்தான்ரா நன்பன் என்டு சொல்லி ரெண்டுபேரையும் வயிற்சீற் எடுக்க வீட்ட விட்டிருந்த சம்பவமும் நினைவில் உள்ளது.

பெனடிற் மாஸ்ரருடைய காலத்தில் பாடவேளைக்கு ஆசிரியர்கள் நேரசூசிகைக்கு ஏற்ப அந்தந்த பாடங்களுக்கு செல்வதும், ஆசிரியர் இல்லாத வகுப்பை அவர் தனது ஆங்கில பாடமாக கையாள்வதும் சிறப்பே. கரடிப்போக்கு ,சிலாவத்துறை போன்ற இடங்களில் இருந்து பாடசாலைக்கு பற்றாக்குறையான தளபாடங்களும், பாடசாலை கட்டட உபகரணங்களும் பல கஸ்டங்களுக்கு மத்தியில் கொண்டுவந்து சேர்த்ததும் நினைவில் உள்ளது.

ஊரில். ....

பெனடிற் மாஸ்ரர் ஊரில் பல்வேறு நாடகங்களிலும் , குறிப்பாக இயேசுவின் திருப்பாடுகள் நாட்டுக்கூத்தில் முக்கிய வேடத்திலும் கதாபாத்திரம் ஏற்றிருந்தார். சனசமூக நிலைய நிர்வாக சபையில் இருந்தவர். ஆங்கிலத்தில் வரும் கடிதங்கள் வாசிக்கவும், படிவங்களை நிரப்பவும் ஊரவர்களால் நாடப்படும் ஒருவராக இருந்தார். 6 ம் வட்டாரத்தில் அமரர் குணநாயகம் அவர்களது வீட்டின் ஊடாக ஆரம்பித்து புதுக்கட்டு தபால்கந்தோர் வீதியை அடையும் வீதிக்கு புனித டிலாசால் வீதி என்டு பெயரிட்டு அதனை சம்பிரதா பூர்வமாக திறந்து அவ்வேளை டிலாசால் அருள்தா வரம் தா நிதமே என்ட பாடலை நாங்கள் பாடியதும் வரலாற்று நிகழ்வே. இவ்வாறு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் நினைவுகூரப்பட வேண்டியவர்களில் முதன்மையானவர் எமது பெனடிற் மாஸ்ரர்.

விடத்தலுரர் கலைத்தாய் தந்த சிற்ப கலைஞர் அடைக்கலம் .லூக்காஸ்.

விடத்தல்தீவின் அருமைபெருமைகளையும் அதற்கு காரணமானவர்களையும், கௌரவித்து பத்திரப்படுத்தி , ஆவணப்படுத்த தவறியவர்களில் எமது ஊரின் சிற்ப கலைஞனான அடைக்கலம் லூக்காஸ் அவர்களும் அவரது படைப்புகளுமாகும்.

அடைக்கலம் லூக்காஸ் என்ற இயற்பெயருடன் செல்லன் என்று எம்மவர்களால் அறியப்படுகின்ற சிற்ப கலைஞன் மன்னாரின் வளங்கள் பலநிறைந்து செழிப்புற்று விளங்கும் எமது விடத்தல்தீவில் 1947 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ம் திகதி திரேசம்மா மற்றும் பிலிப்பு அடைக்கலம் ஆகியோருக்கு இரண்டாவது பிள்ளையாக பிறந்தார்.

தந்தையார் அடைக்கலம் அவர்களிடம் சிறந்து விளங்கிய கலைநயமிக்க திறன்களை கலை ஆர்வத்துடன் ஏனைய உடன்பிறந்த சகோதரர்களை போலவே தானும் கற்று தனது இளம்பராயத்தில் இருந்தே பாடல் எழுதுதல்,பாடல்களை இயற்றுதல், செதுக்கு/கொத்து வேலைகளில் ஈடுபடுதல் ,பிரசங்கம் வாசித்தல், ஒப்பாரி பாடுதல், நாடகம் எழுதுதல் ,நாடக ஆற்றுகை செய்தல், சிற்ப வேலைப்பாடுகள் செய்தல்,சித்திரம் வரைதல் போன்ற கலைப்பணியை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செல்லன் அவர்கள் 1970ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி எமது கிராமத்தின் அந்தோனியாப்பிள்ளை அவர்களைதிருமணம்செய்து ஜெயாதேவி, அன்ரனி ஜெபநேசன், மேரி அமுதா, மேரி சின்னமலர், அன்புறாஜ், மேரி விஜயா ஆகிய 6 பிள்ளைகளை பெற்று மிகிழ்வுடன் வாழ்ந்து வந்த காலப்பகுதியில் நடைபெற்ற உள்நாட்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை நலன்புரி நிலையத்திலும் அதன்பின்னர் ஜோசப்வாஸ் நகரிலும் வாழ்ந்துவந்திருந்தார். திரு.திருமதி லூக்காஸ் அந்தோனியாப்பிள்ளை அவர்களது திருமணமானது எமது அடம்பன் புனித வியாகுலமாதா தேவாலயத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் தந்தை அடைக்கலம் மற்றும் சகோதரர்களுடன் கலைப்பயணத்தை ஆரம்பித்த செல்லன் அவர்கள் 1990 களில் குறிப்பாக 1994ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு வரை தனது தனித்துவமான கலைப்பயணத்தில் வள்ளி திருமணம், மீனாட்சி திருமணம் ,திருந்திய உள்ளம், மற்றும் காத்தவராயன் கூத்து போன்ற நாடகங்களை எழுதி ,அவற்றை இயக்கத்துடன் எமது மன்னார் மாவட்டத்தின் மாந்தை பிரதேசங்களான சாளம்பன் ,தேவன்பிட்டி, இலுப்பக்கடவை பெரியமடு ,மற்றும் தட்சனாமருதமடு போன்ற ஊர்களில் அவற்றை மேடையேற்றியதுடன் புதிய கலைஞர்களையும் உருவாக்கிய பெருமை செல்லன் எனப்படும் லூக்காஸ் அவர்களையே சாரும்.

தந்தை அடைக்கலத்தார் அவர்களை போலவே சிற்பங்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவரான செல்லன் அவர்கள் எமது தேவன்பிட்டியில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் உள்ள புனித சவேரியார் சிலையினை 1994ம் ஆண்டு காலப்பகுதியில் செதுக்கியிருந்தார். அந்த சவேரியார் சிலையானது செல்லன் அவர்களது கைவண்ணத்தில் மரத்தில் செதுக்கப்பட்டிருப்பது சிறப்பு.

எமது விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத்தில் மேல்கூரை முகப்பில் அமையப்பெற்ற புனித யாகப்பரின் சிலையை செதுக்கிய பெருமையும் எமது சிற்பி செல்லன் அவர்களையே சாரும்.

அத்துடன் மன்னார் நகர சபை வளாகத்தில் அமையப்பெற்றுள்ள திருவள்ளுவர் சிலையை தத்துரூபமாக வடிவமைத்து பலரது பாராட்டுகளையும் செல்லன் அவர்கள் பெற்றிருந்தார்.

அதன் பின்னரான காலப்பகுதியில் எமது மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றான மன்/சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கும் விதத்தில் ஆறுமுகநாவலர் சிலையொன்றை வடிவமைத்திருந்தார் செல்லன் அவர்கள்.

இடம்பெயர்ந்த பின்னரான காலப்பகுதியில் எமது ஜோசப்வாஸ் நகரில் மீளக்கடியமர்ந்த நிலையில் மரச்சேதுக்கல் வேலைப்பாடுகளில் ஈடுபட்டதுடன் ஜோசப்வாஸ் நகரில் உள்ள எமது வெ.தயானந்தன் அவர்களது இல்லத்தில் இயேசுவின் இராப்போசனம் நிகழ்வு இயேசுவின் அப்பம் பிட்கும் காட்சிகளை மிகவும் தத்துரூபமான முறையில் வேப்பம் பலகையில் மிகவும் அழகாக செதுக்கி கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தட்சனாமருதமடு கோவிலுக்கு மரத்தில் செதுக்கிய சூரன் சிலை அன்றும் அவ்வூரில் பேசும்பொருளாக இருப்பது செல்லன் அவர்களின் சிற்ப கலைக்கு கிடைத்த வெகுமதியாகும். மேலும் தெய்வமகன் திரைப்பட பாணியில் ஏது மாங்கல்யம் இரு துருவங்கள் மனோகரா கதையை வைத்து செல்லன் அவர்களால் மேடையேற்றப்பட்ட நாடகங்களாகும்.

பாடல்களை எழுதி இயற்றுவதில் புலமைவாய்ந்தவர் அதிலும் புரட்சி பாடல்களை எழுதுவது செல்லன் அவர்களது தனிச்சிறப்பாகும். தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்தில் கலைஞனாக பாத்திரமேற்று நடித்துள்ளார்.

கன்னாட்டி அடம்பனில் மரத்தால் மாதா திருச்சுரூபத்தையும், பள்ளிமுனையில் ஒரு சுரூபத்தையும், பரப்புக்கடந்தான் கர்த்தர் கோவிலில் ஒரு திருச்சுரூபத்தையும் செய்திருந்ததுடன், பேசாலை நலன்புரி நிலையத்தில் *1999/2000*ம் ஆண்டளவில் மடுமாதா வருகையின் போது பேசாலை பங்கு சமூகம்சார்ந்த பிரமாண்ட பரிசுத்த ஆவி வடிவிலான சிகரத்தை அமைத்திருந்தார்.



செல்லன் அவர்களது கலைத்துறை சேவைகளினை பாராட்டி பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்ட நிகழ்வு இடம்பெற்றிருந்தது. உள்நாட்டு யுத்தம் காரணமாக செல்லன் அவர்களது பல்வேறுபட்ட படைப்புக்கள் ,கலைசார் ஆக்கங்கள் யாவும் ஆவணப்படுத்தப்படாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

இறுதியாக எமது ஜோசப்வாஸ் நகரில் உள்ள அவரது இல்லத்தில் புனித அந்தோனியார் திருச்சுரூபத்தை செல்லன் அவர்கள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.ஏறத்தாழ *44* வருடங்களாக கலைத்துறையில் சேவையாற்றி சிற்பம்,இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய கலைஞன் செல்லன் என்று,அழைக்கப்படும் லூக்காஸ் அவர்கள் *24/7/2017* ம் ஆண்டு இறைபதமடைந்தார்.

விடத்தலூர் சிற்பக்கலையின் சிகரம் சிற்பி அடைக்கலம்.

சுமார் *40* வருடங்களுக்கு முன்னர் எனது சிறுபராயத்தில் எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய களஞ்சிய அறையில் யன்னல் வழியாக எட்டிப்பார்த்த போது சீமெந்தால் செய்யப்பட்டு பாதிவேலை முடிந்த கிறிஸ்து அரசர் திருவுருவச்சிலை ஒன்று கிடத்தியிருந்தது, யார் இதை செய்தது? என்ற கேள்விக்கு ,அது அடைக்கலத்தார் செய்தது என்று பதில் வந்தது.

வளங்கள் பல நிறைந்த எமது விடத்தலம் பதியினில் பல்வேறுபட்ட துறைகளில் சிறந்துவிளங்கும் எம்மவர்களில் சிற்ப கலைஞனாக சிகரம் தொடும் வகையில் பல்வேறுபட்ட கலைநயமிக்க சிற்பவேலைப்பாடுகளில் ஈடுபட்டவர்தான் அடைக்கலத்தார் என எம்மவர்களால் அறியப்படுகின்ற சிற்ப கலைஞன் அடைக்கலம் அவர்கள்.

பிலிப்பு ,ஆரோக்கியம் அவர்களுக்கு மகனாக பிறந்த அடைக்கலம் அவர்கள் லூர்த்து மேரி அவர்களை திருமணம் செய்து அந்தோனிமுத்து (அரியம் மாஸ்ரர்) மற்றும் செபமாலை (அன்னம்) ஆகிய இரண்டு பிள்ளைகளை பெற்றார். மனைவி லூர்த்துமேரி அவர்களது இறப்பிற்கு பின்னர் திரேசம்மா அவர்களை திருமணம் செய்து புஸ்பராணி (ராணி) ,லூக்காஸ் (செல்லன்), கீதபொன்கலன் (போசி) அந்திரேஸ், ஞானசீலி (மங்கை), யசிந்தா, ஜெயராணி, சகாயநாதன், சகாயநேசன், அருள்சீலன் மற்றும் அருள்சீலி ஆகிய பிள்ளைகளை பெற்றார்.

இயற்கையிலே கலைநயமிக்க கலைத்துறை சார்ந்த வேலைப்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அடைக்கலம் அவர்கள் கர்த்தர் சுரூபம், மாதா சுரூபம், உடக்குப்பாஸ் சிலைகள், இந்து சமய சிலைகள், சிங்க வாகனம் போன்ற சிலைகளை அச்சு அசலாக செய்துள்ளார்.

அடைக்கலத்தார் செய்த சிற்ப வேலைப்பாடுகள் யாழ்ப்பாணம் நவாலி,பள்ளிமுனை, விடத்தல்தீவு போன்ற இடங்களில் இன்றும் காணப்படுகிறது. உடக்கு பாஸ் சிலைகளை செய்து இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு காட்சிகளை சித்தரிக்கும் வகையிலும் உருவாக்கியிருந்தார். விடத்தல்தீவு அடைக்கலமாதா கோவில் கர்த்தர் சிலை, மற்றும் விடத்தல்தீவு சேமக்காலையில் சிலுவையில் இயேசு அறையுண்டிருப்பதை சித்தரிக்கும் வகையிலான சுரூபம் போன்ற பலதரப்பட்ட சிற்பவேலைகளை செய்துள்ளார்.

செதி வேலை என்று சொல்லப்படுகின்ற செதுக்கல் வேலைகளில் தனித்துவமான நுட்பங்களுடனான மரவேலைகளில் குறிப்பாக கதவு ,அலுமாரி, போன்றவற்றில் செதுக்கல் வேலைகளை செய்துள்ளார்.

குறிப்பாக பாலம்பிட்டியில் அம்மன் கோவில் சிங்க வாகனம், சாளம்பன் மாதா கோவிலில் மாதா சுரூபம், ஆகியவற்றை மரத்தில் செதுக்கியுள்ளார். அத்துடன் செம்பியன் பற்று தாழையடி பரித்தித்துறையில் அமைந்துள்ள பிலிப்பு நேரியார் திருச்சுரூபத்தை சீமெந்தில் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மன்னார் கற்கடந்தகுளம் புனித சூசையப்பர் சிலை மற்றும் விடத்தல்தீவு உட்பட பல கிராமங்களில் மரியாயின் சேனை *Ave Mariya*, பரிசுத்த ஆவி, அதனுடன் அமைந்த உலகம் ஆகியவற்றை தாங்கிய மரியாயின் சேனையின் சின்னத்தை ஈயத்தால் செய்திருந்தார். மற்றும் விடத்தல்தீவில் அமைந்துள்ள அடைக்கல மாதா ஆலயத்தின் முன் போட்டிக்கோவில் காணப்படும் தீபம் ஏந்திய கை மற்றும் அடைக்கலமாதா ஆலயத்தின் மணிக்கோபுர உச்சியில் அமைந்துள்ள மீன் என்பன அடைக்கலத்தாரின் கைவண்ணத்தில் அமைந்த சிற்பங்களாகும்.

சிற்பக்கலையில் மட்டுமன்றி அடைக்கலத்தார் நாடகங்கள், நாட்டுக்கூத்துகளை மேடையேற்றுவதில் கைதேர்ந்த கலைஞராக சூழ்சியின் வீழ்ச்சி நாட்டுகூத்து ,அடக்கலமாதா, எம்பரதோர், ஞானசௌந்தரி, இம்மானுவேல், மாந்தைச்சரித்திரம் ,கன்னன் ,பொன்னன் தீத்துயு, சாதியின் கொடுமை சமூகநாடகம் தேவசகாயம் நாட்டு கூத்து ,மட்டிமடையர் மற்றும் இசைவாதில் வென்ற கன்னி புராண நாடகம் ஆகியவற்றை இயக்கி மேடையேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவுட் போட் மோட்டரை அறிமுகப்படுத்திய சவிரிமுத்தர்

எமது விடத்தல்தீவின் வரலாற்றில் பல்வேறுபட்ட விதத்தில் தமது அளப்பெரிய சேவைகளினூடாக மனதில் இடம்பிடித்த வித்தகர்களில் சவிரிமுத்தர் என நம்மவர் எல்லோருக்கும் பரீட்சயமானவர் தான் எமது சவிரிமுத்து அவர்கள். இவர் 1930ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி பிறந்தார்.

1964 ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் எமது ஊரில் சணல் வலை புளக்கத்தில் இருந்து ஊரவர்கள் சணல் வலையை பயன்படுத்திவந்த காலத்தில் வெலிச்சோர் சவிரிமுத்து அவர்கள் நைலோன் வலையை எமது மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தி நைலோன் வலையின் பயன்பாட்டையும் அதன் உபயோகத்தால் மீன்பிடியில் உள்ள நன்மைகளையும் மக்களுக்கு எடுத்தியம்பியதுடன் மீனவர்கள் நைலோன் வலையை பயன்படுத்த அந்நாட்களில் காரணகர்த்தாவாக இருந்து அதனை அறிமுகப்படுத்தியுள்ளார்.

மேலும் சவிரிமுத்தர் அவர்கள் தான் எமது மன்னார் மாவட்டத்தில் முதன்முதலாக வெளி இணைப்பு இயந்திரத்தை(*OutBoatMotor*) அறிமுகப்படுத்தி அதனைபயன்படுத்தியதும் வரலாற்றில் மறக்கமுடியாததாகும். அதுமட்டுமல்ல எமது ஊரவர்களிட்யே தற்போதும் பேசப்பட்டுவரும் 1964ம் ஆண்டில் வீசிய கச்சான் காற்றின் வீரியத்தினாலும் புயலினாலும், வெள்ள அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட எம்மவர்களை கடல்வழியாக மன்னார் தீவிற்கு ஏற்றியிறக்கி படகுசேவை புரிந்தவரும் எமது சவிரிமுத்து அவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



சவிரிமுத்தர் அடிப்படையில் ஒரு அந்தோனியார் பத்தர் அந்தவகையிலே தான் தெளிவாற்றிலும், எமது விடத்தல்தீவிலும் புனித அந்தோனியார் சிற்றலயத்தை அமைத்தது மட்டுமல்லாமல் அதனை விளக்குவைத்து பராமரித்ததுடன் இன்றுவரை செவ்வாய்கிழமை தோறும் இவ் சிற்றாலயங்களை நாடி அந்தோனியார் பக்தர்களாக இறைமக்கள் வழிபடுவதற்கு ஆரம்ப காலங்களிலே சவிரிமுத்து அவர்கள் வழிசமைத்ததுடன் 2014ம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதி இறைபதமடைந்தார்.

அத்துடன் பொன்னாமோட்டை பகுதியில் அவருடைய 10 ஏக்கர் வெள்ளாமை காணியில் வெள்ளாமை செய்வதற்காக குளம் ஒன்றை தனிப்பட்ட ரீதியாக அமைத்து அதற்கு சவிரிமுத்தர் குளம் என பெயர் பெற்றிருப்பதும் சிறப்பம்சமாகும். தெளிவாற்று பகுதியில் அமைக்கப்பட்ட அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 2024ம் வருடத்தில் சுமார் 300 பேருக்கு அதிகமான பக்தர்கள் வருகைதந்திருந்த திருவிழாவிற்கான முன்னேற்பாடான போக்குவரத்து வசதிகளுடன் பாதைகள் புனரமைக்கப்பட்டு திருவிழா சிறப்பாக நாடத்தப்பட்டது.

மருத்துவப் பேராசிரியர் எஸ். எப். எல். அக்பர்

மருத்துவப் பேராசிரியர் எஸ். எப். எல். அக்பர் அவர்கள், மன்னார் மாவட்டத்தில் இருந்து வந்த முதல் மகப்பேறு நோயியல் விசேட வைத்திய நிபுணரும், முதல் மருத்துவப் பேராசிரியரும் ஆவார். 1990 ஆம் ஆண்டு விசேட வைத்திய நிபுணராக பதவியுயர்த்தப்பட்ட அவர், 2021 ஆம் ஆண்டு மருத்துவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். குழந்தைகள் மற்றும் மகப்பேறு வைத்தியத் துறையில் இலங்கையின் முஸ்லிம் சமூகத்தில் பேராசிரியராக உயர்ந்த முதல் நபராக அவர் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

விடத்தல்தீவு அலிகார், எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராக இருந்த இவர், பேராதெனிய பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி பயின்று, இறுதிப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றார். (Second Upper Class) எனும் தரத்தில், அகில இலங்கையில் 18ஆவது இடத்தை பெற்றதோடு, தமிழ்மொழியில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தனது கல்வியை தொடர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.
நாட்டின் முன்னணி வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணராகப் பணியாற்றிய டாக்டர் அக்பர், 100இற்கும் மேற்பட்ட விசேட வைத்திய நிபுணர்களுக்குப் பயிற்சி வழங்கியவர். இலங்கையின் பிரபலமான Castle Street Hospital for Women வைத்தியசாலையில், Chair Consultant ஆக, அதாவது 5 விசேட வைத்திய நிபுணர்களின் தலைமையாளர் பதவியிலும் இருந்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு மலேசியாவின் International Islamic University மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டு அங்கு பணியாற்றினார். அதன் பின்னர், International Medical University of Malaysia-இலும் கற்பித்துள்ளார். அக்காலப்பகுதியில் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்திலும் பயிற்சியாளராகவும் பரீட்சகராகவும் சேவை புரிந்துள்ளார். மேலும், பல அபிவிருத்தி பெற்ற நாடுகளுக்குக் கூட்டு அமர்வுகளுக்காக அழைக்கப்பட்டு, துறை சார்ந்த சொற்பொழிவுகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்ற அனுபவமிக்க நிபுணர் என சிறப்புற சுட்டிக்காட்டப்படுகிறார்.

சிறில் மாஸ்ரர்

சிறில் மாஸ்ரர் என அழைக்கப்படும் அமரர் இராஜநாயகம் சிறில் அவர்கள் 1934ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி அந்தோனிப்பிள்ளை மற்றும் லூசியா ஆகியோருக்கு மகனாக விடத்தல்தீவில் பிறந்தார். சிறில் மாஸ்ரருடைய தந்தை அமரர் அந்தோனிப்பிள்ளை அவர்கள் எமது கிராமத்தின் ஆரம்ப கால தபால் அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறில் மாஸ்ரர் அவர்கள் 1956ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று சேவையில் இணைந்தார்.தனது ஆரம்ப கால ஆசிரிய பணியை தலைமன்னார் மற்றும் அடம்பன் பாடசாலைகளில் நிறைவுசெய்து 1958ம் ஆண்டு தொடக்கம் 1960ம் ஆண்டு வரை எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கடமையாற்றியிருந்தார்.

அதன் பின்னர் 1961ம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரியர் கலாசாலைக்கு சென்று அங்கே பயின்றதுடன் 1963ம் ஆண்டில் இருந்து 1974ம் ஆண்டு காலப்பகுதி வரை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும், 1975ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டு வரை மன்னார் எருக்கலம் பிட்டி மத்திய மகா வித்தியாலயத்திலும் ஆசிரியப்பணியை சிறப்பாக ஆற்றியிருந்தார்.

தொடர்ந்து அதிபராக பதிவி உயர்வு பெற்று மன்னார் தாழ்வுபாடு பாடசாலையில் 1978ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரை சேவையாற்றிய சிறில் மாஸ்ரர் அவர்கள் மாற்றலாகி மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உப அதிபராக நியமனம் பெற்று 1983ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டு வரை கடமையாற்றியிருந்தார். அதனை தொடர்ந்து பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகி அங்கே 1985ம் ஆண்டு தொடக்கம் 1991ம் ஆண்டு வரை அதிபராக சிறப்பான பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னரான காலப்பகுதியில் மீண்டும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று அங்கே 1992ம் ஆண்டு தொடக்கம் 1993ம் ஆண்டு வரை கடமையாற்றி மன்னார் வலய கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று 1993ம் ஆண்டில் இருந்து 1994ம் ஆண்டு வரை மன்னார் மாவட்ட கல்வி சமூகத்திற்கு சிறப்பான பணியாற்றிய பெருமை சிறில் மாஸ்ரர் அவர்களையே சாரும்.

சிறில் மாஸ்ரர் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் கல்வி மற்றும் ஏனைய சமூகப்பணிகளை முன்னெடுத்து பல அமைப்புகளிலும், மன்றங்களிலும் பதவிவகித்துள்ளார். அந்த வகையில் மன்னார் மாவட்ட சாரணர் இயக்கத்தின் ஆணையாளராகவும் (District Commissioner of Scouts) சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரியாகவும், உதைபந்தாட்ட பொறுப்பாசிரியராகவும்,பாடசாலை மாணவர்கள் இராணுவ படையணி பொறுப்பு ஆசிரியராகவும் (School Army Cadet) கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப்பணியின் போது கல்வி பொதுத்தர சாதாரண தர மாணவர்களுக்கு அவர்களது முக்கிய பாடங்களுக்கான கணிதம், தமிழ் ஆகிய பாடங்களை கற்பித்ததுடன், வறிய மாணவர்களுக்கான இலவச வகுப்புகளை நடாத்தி மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய வழிவகுத்திருந்தார். அத்துடன் பகுதிநேர உதவி காவல்துறை அதிகாரியாக பதவிவகித்து மடு மற்றும் மன்னார் பிரதேசங்களில் கடமையாற்றியதுடன் உள்நாட்டு போர் காலங்களில் மன்னார் மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் பொறுப்பாளராக கடமையாற்றி மன்னார் நகருக்கும் பெருநிலப்பரப்பிற்குமான இணைப்பாளராக சிறந்த சேவையாற்றியிருந்தார் சிறில் மாஸ்ரர் அவர்கள்.

தனது ஆசிரிய பணியில் பின்னரான ஓய்வு காலத்தில் 1997ம் ஆண்டு தொடக்கம் அவரது இறப்பு வரைக்கும் எமது மன்னார் மகவட்டத்தில் வறுமைகோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் இலவசமாக மேலதிக வகுப்புகளை நடாத்திய பெருமைக்குரியவராக அமரர் சிறில் மாஸ்ரர் அவர்கள் காணப்பட்டார்.

அருட்சகோதரர் பறுநாந்து பெனடிக்ற் பொனவெஞ்சர் Fsc

மன்னார் மறைமாவட்டத்தில் இறை விசுவாசத்ததிலும் ,நம்பிக்கையிலும் சிறந்து விளங்கும் கிராமமான விடத்தல்தீவு கிராமத்தில் 1966/12/07 ம் திகதி முன்னாள் ஆசிரியராகவும்,அதிபராகவும் கடமையாறாறிய அமரர் பறுநாந்து பெனடிக்ற் மற்றும் நீக்கிலாப்பிள்ளை திரேசம்மா தம்பதிகளினின் இரண்டாவது பிள்ளையாக பிறந்தார்.

அருட்சகோதரர் அவர்களுக்கு மூத்த சகோதரி கொன்சி மற்றும் ஒரு இளைய சகோதரர் பெனற் என சகோதர சகோதரிகளுடன் குடும்பத்தில் மகிழ்வுடன் வாழ்ந்தார்.

அருட்சகோதரர் அவர்கள் தமது ஆரம்ப கல்வியை மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும், இடைநிலை கல்வியை மன்/விடத்தல்தீவு ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை மீண்டும் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் பயின்றார். க.பொ.த சாதாரண தர பரீட்சையை 1983ம் வருடத்திலும் ,க.பொ.த உயர்தர பரீட்சையை 1986ம் வருடத்திலும் தோற்றி சித்தியடைந்தார்.

அருட்சகோதரர் பொனவெஞ்சர் அவர்களது இறை அழைத்தலுக்கான உருவாக்க மற்றும் துறவற வாழ்விற்கான உருவாக்கத்திற்கு அருட்சகோதரர் ஜோசப் மைக்கல் அவர்கள் ஊக்கத்தை, வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1987 - 1988 வரை மன்னார் புனித டிலாசால் இல்லத்தில் உருவாக்கத்திற்காக ஒரு வருடத்தையும், முன் உருவாக்கத்திற்காக 1988 - 1989 வரை ஒரு வருடத்தை மோதரை டிலாசால் இல்லத்திலும், 1989 - 1990 வரை டிலாசால் இல்லம் முகத்துவாரம் கொழும்பிலும் தொடர்ச்சியாக நவசன்னியாசியாக (நொவிஷியேட்) ஹல்கஷேன ,ஹன்வெல்லா டிலாசால் இல்லத்திலும், 18/1/1990 - 12/5/ 1991 வரை பயின்றுகொண்டார்.

அதனை தொடர்ந்து தமது முதலாவது வாக்குத்தத்தை 1991/5/12 ம் திகதியிலும், இறுதி வாக்குத்தத்தை 1998/5/15 ம் திகதியிலும் நிறைவுசெய்த அருட்சகோதரர் அமரர் பொனவெஞ்சர் அவர்கள் தமது வெள்ளிவிழாவை 2016/5/15 ம் திகதி கொண்டாடியிருந்தமை குறிப்பிட்டத்தக்கது.

1987 ஆனி மாதம் தொடக்கம் ஐப்பசி மாதங்களில் LCES ,இல் அருட்சகோதரர் இம்மானுவேல் நிக்கோலஸ் அவர்களின் கீழ் சமூக அனுபவத்தை பெற்றிருந்தார்.

அதன் பின்னர் ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் கொட்டாஞ்சேனையில் உள்ள புனித .பெனடிக்ற் கல்லூரியில் அருட்சகோதரர் பெஞ்சாமின் குணதிலக மற்றும் அருட்சகோதரர் சாள்ஸ் ஆகியோரின் வழிநடத்துதலில் விடுதி உதவியாளராகவும், மற்றும் ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார்.

*1987*ம் வருடம் யாழ்ப்பாணத்தில் தனது கல்வியியல் பாடநெறியை நிறைவுசெய்தார். தொடர்ந்து *2009*ம் வருடத்தில் இந்தியாவில் டொண் பொஸ்கோ புதுப்பித்தல் மையத்தில் கல்வி, பயிற்சி மற்றும் ஆலோசனையியல் உயர்கல்வியை நிறைவுசெய்திருந்தார். தொடர்ந்து சில சமயங்களில் கார்த்திகை, மார்கழி மாதம் டியாகல *Boys' town* , றாகம விற்கு அருட்சகோதரர் கிளமன்ற் பெர்னாண்டோ, அருட்சகோதரர் சுசாந் நானயக்கார மற்றும் அருட்சகோதரர் ஜெறால்ட் பாலரத்தினம், ஆகியோருடன் *1994*ம் வருடத்தில் புனித பெனடிக்ற் கல்லூரியில் உதவி ஆசிரியராக சேவையை ஆரம்பித்தமை குறுப்பிடத்தக்கது.

1999- 2000 வரை புகுமடம், முகத்துவாரம் கொழும்பிலும், *2000 - 2001* வரை டிலாசால் இல்லம், முகத்துவாரம் கொழும்பிலும் *2001 - 2002* வரை புனித ஜோசப் கல்லூரி கிராண்பாஸ் ஆசிரியராகவும் ,*2003* முதல் *2018* வரை புனித பெனடிக்ற் கல்லூரி கொட்டாஞ்சேனை ஆரம்ப பாடசாலை அதிபராகவும், *2019* இல் இருந்து *2024/5/24* ம் திகதிவரை கந்தானை டி மசனட் கல்லூரியின் ஆசிரியராகவும் எமது அருட்சகோதரர் பொனவெஞ்சர் அவர்கள் கடமையாற்றியிருந்தார். இறைபணிக்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து, இறைபணியையும், ஆசிரிய பணியையையும் செவ்வனே ஆற்றி இனிமை நிறைந்த பசுமையானதும் ,அழகானதுமான வாழ்நாளில் நினைவில் கொள்ளத்தக்க அர்த்தத்தோடு வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எமது மண்ணின் மைந்தன் அருட்சகோதரர் பொனவெஞ்சர் அவர்களது ஆன்மா இறை சந்நிதியில் அமைதியின் இளைப்பாற்றி அடைவதாக.

மு. அப்துல் வாஹித் அவர்கள்

விடத்தல்தீவில் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்த மு. அப்துல் வாஹித் அவர்கள், தனது ஆரம்பக் கல்வியை விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயத்தில் பெற்றார். 8 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் தேர்வில் வெற்றி பெற்றதையடுத்து, நெல்லியடி மத்தியக் கல்லூரியில் க.பொ.த (உயர்தரம்) வரை கல்வியைத் தொடர்ந்தார்.

அவர் 6ஆம் வகுப்பில் பயின்றபோது தந்தையை இழந்ததால், உயர்தரப் பரீட்சையை முடித்ததும் உடனடியாக வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆசிரியர் அல்லாதவர்களை ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் சேர்க்கும் போட்டித் தேர்வை எழுதினார். அந்தத் தேர்வில் பெற்ற சிறந்த செயல்திறன் அடிப்படையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி கல்லூரியில் சேர்வதற்கு முன் குறைந்தது மூன்று மாதங்கள் ஆசிரியராக பணியாற்ற வேண்டிய முன்னிபந்தனையின் காரணமாக, அலிகார் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார்.

மூன்று மாதங்கள் பணியாற்றியபின், அவர் பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் கணிதப் பாடத்தில் இரு வருடப் பயிற்சிக்காக சேர்ந்தார். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர், மீண்டும் அலிகார் மகா வித்தியாலயத்திற்கு பணியமர்த்தப்பட்டார். அங்கு பணியாற்றும் காலத்தில் கணிதம் கற்பித்ததோடு விளையாட்டு நடவடிக்கைகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டார்.

ஏழு வருடங்கள் ஆசிரியராக பணியாற்றியதன் பின்னர், அவருடைய திறமையை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சினால் கணிதப் பாடத்துக்கான சேவை ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இவர் மன்னார் கல்வித் துறைக்கு இணைக்கப்பட்டு, அங்கு ஏழு ஆண்டுகள் பணியாற்றினார்.

அந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் பாடத்திட்ட மேம்பாட்டு மையத்துக்குத் தேவையானவர் என கருதப்பட்டதால், அவர் அங்கு கணிதத் துறைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் பாடத்திட்டங்களை உருவாக்குதல், பாடப்புத்தகங்களை எழுதுதல், மற்றும் கணித சேவை ஆலோசகர்களுக்கு பயிற்சி அளித்தல் உள்ளிட்ட முக்கிய பணிகளை செய்தார்.

அலிகார் வித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தில், க.பொ.த (சா/த) பரீட்சைக்கான வினாத்தாள் மதிப்பீட்டில் உதவி மதிப்பீட்டாளராகவும், பாடத்திட்ட மேம்பாட்டு மையத்தில் பணியாற்றிய காலத்தில், தலைமை மதிப்பெண் தேர்வாளராகவும், பின்னர் கட்டுப்பாட்டு தலைமை தேர்வாளராகவும் (தமிழ் ஊடகம்) நியமிக்கப்பட்டார்.

மன்னார் கல்வித் துறையின் வேண்டுகோளின் பேரில் பாடத்திட்ட மேம்பாட்டு மையத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பின், அலிகார் மகா வித்தியாலயத்தில் துணை முதல்வராக நியமிக்கப்பட்டார். அப்போது, தேசிய கல்வி நிறுவனத்தில் பணியாளர் ஆட்சேர்ப்புக்கான போட்டித் தேர்வை எழுதினார். தேர்வில் வெற்றி பெற்றதனால் பதினொன்று மாதங்களுக்குப் பின்னர் அலிகாரில் இருந்து விலக வேண்டியது ஏற்பட்டது.

தேசிய கல்வி நிறுவனத்தில் உதவி திட்ட அலுவலராகச் சேர்ந்த அவர், தொலைதூரக் கல்வித் துறைக்கு

நியமிக்கப்பட்டு, ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கான தொகுதிகளைத் தயாரித்தலும், பிராந்திய மையங்களை நிர்வகித்தலும் செய்தார். பின்னர், திட்ட அலுவலராக பதவி உயர்வு பெற்றவர் கணிதத் துறைக்கு மாற்றப்பட்டார். அதன்பின், தலைமை திட்ட அதிகாரியாகவும், அதன் பிறகு இயக்குநராகவும், திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு துறைக்கு நியமிக்கப்பட்டார்.

தேசிய கல்வி நிறுவனத்தில் பணியாற்றும் போது, அவர் தமது B.Ed மற்றும் M.Ed பட்டங்களைப் பெற்றார். 55 வயதில் அரசுப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற இவர், JICA குழுவில் தேசிய ஆலோசகராக இணைந்து, கல்வி அமைச்சில் ஐந்து ஆண்டுகள் சேவை புரிந்தார். JICA திட்டம் நிறைவடைந்த பின்னர், மெர்சி கல்வி நிறுவனத்தில் கல்வி ஆலோசகராக இணைந்து தனது சேவைகளைத் தொடர்ந்துள்ளார்.

83 வயது வரை சைக்கிள் திருத்திய கணபதி அப்புவும் சைக்கிள் கடையும்.

நெற்றியில் திருநீறும் குங்கும பொட்டும் இரு காதுகளிலும் பூவை வைத்து சாறத்தை மடிச்சு கட்டி மெலிந்த வெறும் தேகத்துடன் தனது நாளாந்த வருமானத்திற்காக வழி மீது விழிவைத்தவராக வாடிக்கையாளரை எதிர்பார்த்தவாறு தனது கடையில் மூலையில் இருக்கும் வாங்குப்பலகையில் தினந்தோறும் அமர்ந்திருந்து தனது வேலைகளை செய்யும் எமது கணபதி அப்புவின் ஞாபகங்கள் பல இன்றும் மனதைவிட்டு நீங்காத நினைவுகளாக தொடர்கிறது.

காற்று அடிக்க 25சதம், 50சதம், 1ரூபாய் என எழுதப்பட்ட வாசகங்களுடன், அலுமினிய சட்டி , பாதியாக வெட்டப்பட்ட பழைய தண்ணி கேன் இவற்றுள் தண்ணீர் நிரம்பிய நிலையில்,பழைய செருப்பை அடியில் வைத்து கட்டிய நிலையில் ரியூப்பால் சுமத்தப்பட்ட காத்தடிக்கும் பம் தொங்கவிடப்பட்ட நிலையிலும் சிறிய சொலுசன் ரின், ஒரு பெட்டியில் அஞ்சாறு சாவிகள், ஒரு கத்தரிக்கோல், பக்கத்தில் சைக்கிள் நிம்மில் கம்பிகளை பொருத்தி அவற்றை சாவியால் சரியான அளவில் பூட்டுவதற்காக அடியில் ஒரு கட்டையில் பொருத்தப்பட்ட நிலையில் இருக்கும் சைக்கிள் முன் போக் என காட்சியளித்த சைக்கிள் கடைதான் கணபதி அப்புவின் சைக்கிள் கடையாகும்.

1990 களில் எமது நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக பொருளாதார தடை விதிக்கப்பட்டு அன்றாட அத்தியாவசிய பொருட்களுக்கு எமது தாயகப்பகுதியில் தடாடுப்பாடுகள் நிலவிவந்த காலங்கள் இப்போது வீட்டுக்கொரு மோட்டர் சைக்கிள், கார் போன்ற வாகனங்கள் இருப்பதை போல் அத்தியாவசிய வாகனமாக துவிச்சக்கர வண்டி எனப்படும் சைக்கிள் ஒவ்வொரு வீட்டிலும் காணப்பட்ட காலம்.

சைக்கிள் வைத்திருப்பவர்கள் சமூகத்தில் டிமான்டுடன் பேசப்பட்ட காலம் அது. சைக்கிள் உதிரிப்பாகங்கள் குறிப்பாக ரயர், ரியூப் ,போள்ஸ், சொலுசன் போன்றவைகளை பெறுவது மிகவும் அரிதாக காணப்பட்ட காலத்தில் தான் தனது சைக்கிள் கடையை நடாத்தி அதிலே வரும் சிறிய வருமானத்தால் தனது சீவனோபாயத்தை போக்கிவந்தார் எமது கணபதி அப்பு அவர்கள்.

கணபதிப்பிள்ளை அவர்கள் 1917 ஆம் ஆண்டு எமது விடத்தல்தீவில் திரு.திருமதி கந்தையா அவர்களுக்கு மகனாக பிறந்தார்.

தனது ஆரம்ப கல்வியினை விடத்தல் தீவில் உள்ள பாடசாலையில் கல்வி கற்று தங்கம்மா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்த கணபதி அப்பு, விடத்தல் தீவில் வசித்து வந்த அந்த காலப்பகுதியில் 1955 ஆம் ஆண்டு விடத்தல் தீவில் தனது வாழ்வாதாரமாக சைக்கிள் திருத்தகத்தினை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கணபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினருக்கு தங்கராஜா (ஓய்வு பெற்ற வைத்தியசாலை சிற்றூழியர்) நவரட்ணராஜா(ஓய்வு பெற்ற பல்நோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளர்). துரைராஜா (ஓய்வு பெற்ற முதன்மை முகாமைத்துவ ஊழியர் தற்போது சமாதான நீதிவான்) விஜயலட்சுமி , சிறிஸ்கந்தராஜா, மற்றும் தவராஜா (ஓய்வுபெற்ற உப தபால் விநியோகஸ்தர்) ஆகிய பிள்ளைகள் உண்டு.

விவசாயத்துறையில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கணபதி அப்பு விவசாயத்தையும் செய்திருந்தார் அத்துடன் சைக்கிள் திருத்தகத்தை நடத்திவந்த கணபதி அப்புவின் சைக்கிள் திருத்தகத்திற்கு தமது சைக்கிள்களை திருத்துவதற்காக எமது விடத்தல்தீவு மக்கள் மட்டும் அல்லாமல் மாந்தை பெருநிலப்பரப்பில் உள்ள அயல் கிராமங்களில் இருந்த மக்களும் கணபதி அப்புவின் சைக்கிள் திருத்தகத்திற்கு அடிக்கடி வந்து செல்வார்கள். கணபதி அப்புவின் சைக்கிள் திருத்தகத்தை அவருடைய மருமகன் இன்று வரையும் அடம்பன் கிராமத்தில் நடத்திவருகிறமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார தடை நிலவி அத்தியாவசிய பொருட்களுக்கும் உதிரிப்பாகங்களுக்கும் தட்டுப்பாடுகள் காணப்பட்ட அந்நாட்களில் சைக்கிள் திருத்தகத்திற்கு தேவையான பொருட்களை மன்னார் , யாழ்ப்பாண நகரங்களில் இருந்து அதிக விலைக்கு பெற்று தனது சைக்கிள் திருத்தகத்திற்கு வருபவர்களுக்கான தேவையை நிறைவுசெய்து கொடுத்திருந்தார்.

மாறி மாறி நடைபெற்ற இடப்பெயர்வுகள், விமான தாக்குதல்கள் என வாழ்ந்த காலம் சைக்கிள் மட்டுமே போக்குவரத்து சாதனமாக மக்களிடையே புழக்கத்தில் இருந்த அந்த காலகட்டத்தில் பொருட்கள் மீதான தடை இருந்த அந்த தடையான காலத்தில் இருக்கும் வளங்களை பயன்படுத்தி சைக்கிள் திருத்தம் ,சைக்கிள் பெச் ஒட்டுதல், மேட்டார் சைக்கிள் பெச் ஒட்டுதல், உழவு இயந்திரம் பெச் ஒட்டுதல்,போன்ற வேலைகளை செய்துகொடுத்திருந்தார் அத்துடன் புதிதாக ரயர், ரியூப் பெறுவது மிகவும் கஷ்டமாக இருந்த காலத்தில் கிளிந்த ரயர்களை தைத்து இருக்கம் சொலுயேசனை பயன்படுத்தி தன்னை நாடி வருபவர்களுக்கு தன்னால் இயலுமான வகையில் உதவியவர் எமது கணபதி அப்பு அவர்கள்.

தொழில்நுட்ப வசதிகளும்,தொழில்நுட்ப சாதனங்களும் இல்லாத அந்த நாட்களிலும் தன்னிடம் இருந்த வளங்களை பயன்படுத்தி எமது பிரதேச மக்களின் அத்தியாவசிய போக்குவரத்து சாதனங்களை திருத்தி தேவைகளை தீர்த்துவைத்த எமது கணபதி அப்பு அவர்கள் தனது 83 வயதில் இறக்கும் வரை தனது சைக்கிள் திருத்தும் பணியை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆர்மோனிய சக்கரவர்த்தி சீமான்பிள்ளை



விடத்தல்தீவு இசைத்துறையில் முன்னோடியான ஆர்மோனிய சக்கரவர்த்தி சீமான்பிள்ளை அவர்கள் தனது பேரன் அமரர் ரிற்ரியுஸ் அவர்களுக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் ஆர்மோனிய இசையை கற்றுக்கொடுத்த அரிய புகைப்படம்.

பமிக்க நன்றிகள் புகைப்பட உதவி.
அந்தோனிப்பிள்ளை.மேரி அன்னா.

ஆர்மோனிய இசை சக்கரவர்த்தி பொன்னுத்துரை.

விடத்தல்தீவு பல்வேறுபட்ட இசை கருவிகளை மீட்டும் ஜாம்பவான்களின் வரிசையில் ஆர்மோனிய இசை கருவிகளை மீட்டும் ஒருவராக ஆர்மோனிய இசை சக்கரவர்த்தி என்ற பெயரெடுத்தவரே இளையதம்பி பொன்னுத்துரை ஆவார்.

பொன்னுத்துரை அவர்கள் 3 சகோதரர்கள் மற்றும் 3 சகோதரிகளோடு 1925ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் திகதி பிறந்தார். அன்னம்மா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து 6 ஆண் மற்றும் 3 பெண் பிள்ளைகளை பொன்னுத்துரை அன்னம்மா தம்பதியினர் பெற்றிருந்தனர்.

தனது இளம் வயதில் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் ஆர்மோனியம் இசைக்கருவியை மீட்ட கற்றுக்கொண்ட பொன்னுத்துரை அவர்கள் நாடகங்கள்,
நாட்டுக்கூத்துகள், மற்றும் ஊரில் நடைபெற்ற கலைநிகழ்வுகளுக்கு ஆர்மோனிய இசையை வழங்கியிருந்தார்.

குறிப்பாக அண்ணாவி அடைக்கலத்தார் நெறிப்படுத்த நாடகங்கள் சூழ்ச்சியின் வீழ்ச்சியும் என்ற நாடகம், சந்தியோகுமையோர் நாட்டுக்கூத்து, தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து ,ஏதுமாங்கல்யம், இரு துருவங்கள், தர்மம்பிரகாசம், திருமாங்கல்யம் ஆகிய நாடகங்கள் மற்றும் நாட்டுக்கூத்துகளுக்கு தமது ஆர்மோனிய இசையை வழங்கியிருந்தார்.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் சூசைதாசன் அவர்களால் விடத்தல்தீவில் நடைபெற நாடகத்தில் இசை வழங்கியதற்காக இசை சக்கரவர்த்தி என்ற பட்டம் பொன்னுத்துரை அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
பொன்னுத்துரை அவர்கள் விடத்தல்தீவில் மட்டுமல்லாது பல்வேறுபட்ட பிரதேசங்களில் நடைபெற்ற நாடகங்களுக்கு ,நாட்டுக்கூத்துகளுக்கு ஆர்மோனிய இசையை வழங்கியிருந்தார்.பாலம்பிட்டியில் நடைபெற்ற நல்லதங்காள், காத்தவராயன் கூத்து, இரணைதீவில் நடைபெற்ற ஞானசௌந்தரி, இலுப்பக்கடவையில் அந்தோனியார் நாடகம், வலைப்பாட்டில் நடைபெற்ற நாட்டுக்கூத்துகள்,

நாச்சிக்குடா,தட்சனாமருதமடு , மற்றும் கோவில்குளத்தில் நடைபெற்ற நாடகங்கள், ஞானஒளி, அருளாளர்,செபஸ்தியார், பொன்னும் செபமாலை போன்ற நாடகங்களுக்கும் ஆர்மோனிய இசையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு விடத்தல்தீவிலும் பல்வேறுபட்ட பகுதிகளிலும் ஆர்மோனிய இசை வழங்கிய பொன்னுத்துரை அவர்கள் 27/7/2007ம் ஆண்டில் இறைபதமடைந்த நாளில்

கலையார்வம் கொண்டதினால் பலகலைகள் நீர் பயின்றீர் ஆர்மோனியம் இசைக்க உமையசைக்க யாருமில்லை!
நிலையாக நீர் நின்று பலமேடை ஏறியுடன் பாங்குடனே பக்க வாத்தியத்தை இசைக்கையிலே சிலையாக மக்கள் மெய்மறந்து பார்த்திருக்கும் தெய்வீக இசையினையே இனி எப்போ நாம் காண்போம் என பொன்னுத்துரை அவர்களது இறப்பில் இரங்கல் தெரிவித்து எமது மண்ணின் முன்னாள் ஆசிரியர் மன்னார் அமுது அரியம் மாஸ்ரர் என அறியப்படும் அந்தோனிமுத்து அவர்கள் கவி வடித்தது குறிப்பிடத்தக்கது.

கலை நுட்பத்தோடு கறந்த பால் போல வெண்ணிறமான வெள்ளச்சிலுவையர்.

கலைப்பொக்கிஷமாக கலைநயங்கள் அத்தனையும் தன்னகத்தே கொண்டு விடத்தல்தீவின் கலைசார் வித்தகராக காணப்பட்டவர் தான் எம்மவர்களால் வெள்ளச்சிலுவையர் என அறியப்படுகிற விக்ரோரியான் சிலுவைராசா அவர்கள்.
சிலுவைராசா பிறந்த ஆண்டு மாதம் திகதி - 1924/ 11/20
சிலுவைராசா அவர்கள் விடத்தல்தீவில் திரு.திருமதி விக்ரோரியான் தம்பதிகளுக்கு மகனாக 1924ம் ஆண்டு மாதம் பிறந்தார். லூர்த்தம்மா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து 3 ஆண் பிள்ளைகள்,5 பெண் பிள்ளைகள் என எட்டு பிள்ளைகளுடன் சிறப்பான வாழ்வை வாழ்ந்திருந்தார்.

சிலுவைராசா பல்திறமை கொண்டகலைப்பொக்கிஷமாக விளங்கியவர், பல்வேறுபட்ட கலைநயங்களை கொண்டு அவற்றிலே சிறப்புத்தேர்ச்சியும் பெற்றிருந்தார். அந்த வகையில் இசைத்துறையை பொறுத்தமட்டில் புல்லாங்குழல் இசைத்தல், ஆர்மோனியம் வீணை இசையை வழங்குதல், மற்றும் மிருதங்கம் வாசித்தல் போன்ற பலதரப்பட்ட கலை அம்சங்களை ஒழுங்கமைத்த பெட்டகமாக விளங்கியருந்தமை குறிப்பிடத்தக்கது.

செய்யும் வேலைகளை கலைநுட்பத்துடன் செய்வதில் கைதேர்ந்ததவராக சிலை ,சிற்பம் மற்றும் உருவங்களை அச்சு அசலாக வடிவமைப்பதில் வல்லவராக திகழந்ததுடன்,சித்திரங்களையும்,ஓவியங்களையும் மிகவும் தத்துரூபமாக, துல்லியமாக அதிலும் உயிரோவியங்களாகவரைந்துள்ளமை சிலுவைராசா அவர்களது கலைநுட்பத்திற்கு எடுத்துக்காட்டானவைகளாகும்.

கட்டடங்களை கட்டுவதில் இருந்து தோணி வேலை செய்வது வரை வெள்ளச்சிலுவையருக்கு அத்துப்படி. சிற்பத்துறையை எடுத்துக்கொண்டால் பல்வேறுபட்ட சிற்பங்களை, உருவங்களை வடிவமைத்துள்ளார் நாடகங்கள், நாட்டுக்கூத்துகளுக்கான ஒப்பனைகளை, உருவங்களை உருவாக்கியதுடன் எமது ஊரில் சந்தியோகுமையோர் திருவுருவ சிலையை மிகவும் நேர்த்தியாக வடிவமைத்த பெருமைக்குரியவர்.

ஊரில் மேடையேறும் நாடகங்கள், ஆலய திருவிழாகாலங்களில் ,நாட்டுக்கூத்து மற்றும் கலைவிழா நிகழ்வுகளுக்காக ஆர்மோனிய இசையை சகபாடி பொன்னுத்துரை அவர்களுடன் இணைந்து வழங்குவதுடன் விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி என்ற பெயரில் சீமான்பிள்ளை அவர்களது தலமையில் ,பேதுறுப்பிள்ளை மற்றும் அந்தோனிப்பிள்ளை ஆகிய பக்கவாத்திய கலைஞர்களுடன் மாந்தை பிரதேசமெங்கும் பட்டயகிளப்பியிருந்தார்கள்.
சிலுவைராசா அவர்கள் எமது ஊரில் துணியில் வரைந்த சந்தியோகுமையோர் வெண்குதிரையில் வெற்றிக்கொடியோடு வலம்வருவதை பிரதிபலித்த ஓவியமானது இன்றுவரை பேசும்பொருளாக பேசப்பட்டு வருகிறது. நுட்பத்தை தனது ஒவ்வொரு உருவாக்கத்திலும் கையாளும் வெள்ளச்சிலுவையர் கொக்குப்பட்டம், வாலில்லா பட்டம்,போன்ற பல பட்டங்களை செய்துள்ளார். அத்தோடு எமது ஊரில் நாடகங்கள், நாடாடுக்கூத்துகளை பழக்கியதில் அதிலும் புனித சந்தியோகுமையோர் நாட்டுக்கூத்தை பழக்கி மேடையேற்றிய அண்ணாவியாக வெள்ளச்சிலுவை அவர்கள் எமது விடத்தலூர் வித்தகராக திகழ்ந்தார்.

காந்தகுரலோன் மாசிலாமணி

விடத்தல் மண்ணுக்கே உரித்தான கலை பண்பாட்டில் வியத்தகு முறையில் வைரமாய் ஜொலித்தவர் தான் எமது மாசில்லாமணி அவர்கள்.

1929 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ம் திகதியில் திரு.திருமதி பிறேஞ்சி ஆகியோருக்கு மகனாக சவேரியான், பவுலின், சிலுவை, தங்கராசம் மற்றும் திரேசம்மா ஆகியோரின் உடன்பிறப்பாக கொண்ட மாசில்லாமணி அவர்கள் அக்னஸ் அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து இனிதாக தமது பிள்ளைகள் ,பேரப்பிள்ளைகள், சகிதம் மகிழ்வாக வாழ்ந்துவந்தார். மாசில்லாமணி அவர்களிடம் காணப்பட்ட கலைநயங்கம் பலவாகும் அந்த வகையில் நாடகக் கலைஞராகவும், நாட்டுப்புறக் கலைஞராகவும், பேச்சாளரகவும், பிரசங்கக் கலைஞராகவும், கவி, மற்றும் ஒப்பாரி பாடகராகவும், மேடைப்பேச்சாளராகவும் மாசில்லாமணி அவர்கள் சிறந்துவிளங்கியமை குறிப்பிடத்தக்கது. எமது ஊரில் நடந்தேறிய நாடகங்கள், நாட்டுக்கூத்துகள் மற்றும் கலைநிகழ்வுகல் மாசில்லாமணி அவர்கள் தனிச்சிறப்புவாய்ந்த பல கலைநயங்களுக்கு உரித்தானவராக இருந்தார். குறிப்பாக நலலதங்காள் நாடகம், சூழ்ச்சியும் வீழ்ச்சியும், இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பின் திருக்காட்சி போன்ற நாட்டுக்கூத்து கலைஞனாக தனது நடிப்புத்திறமையையும் தனது காந்தக்குரலால் பாடல் பாடுவதும் மாசில்லாமணி அவர்களது சிறப்பம்சமாகும்.

கவி, தாளிசை, ஒப்பாரி போன்ற மண் வாசனை நிறைந்த கலைஞனாக வைரமாக ஜொலித்தவர் மாசில்லாமணி என்பது மறக்கமுடியாததாகும்.

உயிர்காக்கும் உன்னத பணிசெய்து நோயாளர் அவசர காவு வண்டியின் சாரதிகள்

மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்தில் அரச சுகாதார சாரதிகளாக உள்ளீர்க்கப்பட்டு ,மன்னார் மாவட்டத்தின் பல்வேறுபட்ட பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் எமது கிராமத்தின் மைந்தர்கள் சிறப்பான சேவை புரிந்துள்ளார்கள்.

அந்த வகையில் திரு. அ. றெஜீஸ் ராஜநாயகம், திரு.அ. றெனி சுரேந்திரன், திரு. றெ.கலிஸ்ரஸ், திரு.றூ. றொணில்டன், திரு.அ.அருள் ஜெயக்குமார், மற்றும் ஜனாப் அப்துல் சாமட் பௌசுல் றஹ்மான் ஆகிய எமது மண்ணின் மைந்தர்கள் நோயாளர்அவசர காவு வண்டி சாரதிகளாக மாவட்ட வைத்தியசாலை மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் குறிப்பாக எமது விடத்தல்தீவு பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் அவசர காவு வண்டியின் சாரதிகளாக தமது பணிகளை சிறப்பாக ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உதைபந்தை உயிராய் நேசித்து ஐம்பது வயதிலும் அசராத வசந்தன் அவர்கள்

தயானந்தன் என இயற்பெயரை கொண்ட வசந்தன் 1975ம் ஆண்டு சித்திரை மாதம் 14ம் திகதி திரு.திருமதி பொன்ராசா, மரியபூரணி அவர்களுக்கு மகனாக 4 சகோதரர்களுடனும் 5 சகோதரிகளுடனும் பிறந்து அவர்களை 7/7/2005 இல் திருமணம் செய்து பிள்ளைகள் ஐவருடன் தான் புரியும் தொழிலை மையாமாக கொண்டு மன்னார் மூன்றாம்பிட்டியில் சிறப்பாக வாழ்ந்துவருகிறார்.

வசந்தன் அவர்கள் தனது கல்வியை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கல்வி பொதுத்தர சாதாரண தரம் வரை கற்றார். பாடசாலையில் கல்வி கற்கும் நாட்களில் பாடசாலை உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்து முன்னனி வீரனாக பாடசாலை ரீதியான உதைபந்தாட்ட போட்டிகளில் எமது பிரதேசத்தில் வெற்றியீட்டியதுடன் 100m, 200m, நீளம்பாய்தல் மற்றும் உயரம்பாய்தல் போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பாடசாலை ரீதியாகவும், கொத்தனி ரீதியாகவும் பிரதேச மட்டத்திலும்,மாவட்ட மட்டத்திலும் முதலிடத்தை பெற்றிருந்தார்.

பின்னர் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் இணைந்து எமது பிரதேசத்தில் குறிப்பாக பண்டிவிரிச்சான் ,பாலம்பிட்டி, தட்சனாமருதமடு, காத்தான்குளம், வட்டக்கண்டல், முருங்கன், முழங்காவில், நாச்சிக்குடா, வலைப்பாடு, அடம்பன், பெரியமடு, ஆண்டான்குளம் மற்றும் எமது விடத்தல்தீவிலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக உதைபந்தாட்ட அணியில் இடம்பித்து பல வெற்றிக்கோப்பைகளை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

விக்ரர் நினைவு கிண்ணம், கீப்பிங்ஸ்ரார் நினைவு கிண்ணம், முத்துக்கள் மூன்று வெற்றிக்கிண்ணம், கரும்புலிகள் நினைவு கிண்ணம், வேணு நினைவு கிண்ணம், குமரன் ஞாபகார்த்த கிண்ணம், வீர பிரசவ கிண்ணம்,மண்ணின் மைந்தர்கள் நினைவு கிண்ணம் போன்ற கிண்ணங்களை எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்ட வசந்தனின் பங்கு அளப்பெரியதாக காணப்பட்டது.

எமது மடுமாந்தை பிரதேசத்தில் ஓட்ட நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றதுடன் , மடு மாந்தை பிரதேச உதைபந்தாட்ட அணியில் தெரிவு செய்யப்பட்டு தனது அயராத கடும் பயிற்சியால் மன்னார் மாவட்ட அணியில் உள்வாங்கப்பட்டான்.மன்னார் மாவட்ட அணி சார்பாக பல்வேறுபட்ட போட்டிகளில் பங்குபற்றியதுடன் தேசிய ரீதியாக நடைபெற்ற போட்டிகளுக்கு மன்னார் மாவட்ட அணி சார்பாக விளையாடியிருந்தான் வசந்தன். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சிறிது காலத்தில் மன்னார் நகரப்பகுதியில் அல்பதா விளையாட்டு கழகம் மற்றும் கிறீன் பீல்ட் கழகத்துடன் இணைந்து விளையாடியிருந்தான். பயிற்சியாளர்கள், பயிற்சிகள்,விளையாட்டு உபகரணங்கள், பந்துகள், காலணிகள் என்பன அற்றுக்காணப்பட்ட எமது பிரதேசத்தில் தனது கடுமையான தொடர் பயிற்சியால் தமிழீழ உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த பெருமை வசந்தனையே சாரும்.

வசந்தன் தற்போதைய காலப்பகுதியில் *Over 40* உதைபந்தாட்ட அணியில் கிறின் பீல்ட் கழகம் சார்பாக விளையாடிவருகின்றான். மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கொழும்பு போன்ற பிரதேசத்தில் *40* வயது உதைபந்தாட்ட மன்னார் மாவட்ட அணி சார்பாக தொடர்ந்தும் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. பாரிச வாத நோயால் பாதிக்கப்பட்டும், கடலில் தொழில் செய்யும் நேரம் முதலை கடித்தும் பாரிய தாக்கத்துக்குள்ளான வசந்தன் தனது உயிரினும் மேலான உதைபந்தாட்டத்தை தனது முயற்சியாலும் அயராத பயிற்சியாலும் தொடர்ந்து ஆடி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பந்துகள் தட்டுப்பாடான காலம், மிக்காசா, கோல்ட் கப் பந்துகள் ஒன்டிரன்டே காணக்கிடைக்கும், அதுவும் பள்ளிக்குட கிரவுண்டில அடிக்கடி பெச்சா போய் உட முள்ள வைச்சு காத்துப்பம்மையும் இரவல் வாங்கி இடைக்கிட காத்து அடிச்சு அடிச்சு விளையாடின காலம். புது பந்து வாங்க காசு இருந்தும் பந்து இல்லாத அந்த நாட்கள் பின்னேர பொழுது போக்கு விளையாட்டை மட்டுமே நம்பி நகர்ந்த அந்த நாட்களை எளிதில் மறக்கமுடியாது. பந்து வாங்க ஜெயபுரம், கிளிநொச்சி ,போற ஆக்களிடம் கொடுத்துவிட்டு காத்திருந்த எங்கட அந்த காலத்தில் விளையாட்டுக்காக கிரவுண்டிலேயே அதிக நேரத்த செலவு செய்தவன்.

ஆரம்பத்தில் பின்கள தடுப்பு வீரனாக களம்மிறங்கினாலும் உதைபந்தாட்டத்தின் மேல் அவனுக்கிருந்த ஆர்வமிகுதியால் தன்னைத்தானே நாளுக்கு நாள் தயார்படுத்தி பயிற்சிகளை மேற்கொண்டு எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்கள வீரனாக திகழ்ந்தவன். எத்தனையோ உட முள் வைத்தும் காத்து நிக்காத ஒரு பந்தை பின்னேரம் *3* மணிக்கு கிரவுண்டில கொண்டுவந்து தட்டத்தனியாக உதைபந்தாட்ட பயிற்சிகளை செய்து தன்னைத்தானே நாள்தோறும் வளர்த்துக்கொண்டவன் என்றால் அது மிகையாகாது .மைதான சுவட்டு நிகழ்ச்சி குறுந்தூர ஓட்டங்களில் காத்தாங்குள றமேஸ்க்கும் இவனுக்கும் அடிக்கடி முதலாம் இடத்தை பெறுவதில் போட்டி .

பாலம்பிட்டி, தட்சனாமருதமடு, பண்டிவிரிச்சான், முழங்காவில், வட்டக்கண்டல், காத்தாங்குளம், வலப்பாடு,விடத்தல்தீவு ,மைதானங்கள் இவன் பெருமை சொல்லும். வேகமான ஓட்டமும், பந்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திறனும் இவனிடம் அதிகமாக இருந்ததால் எமது கழகம் பல வெற்றிகளை பெற காரணமாக அமைந்தது. முன்னாள் மன்னார் மாவட்ட தளபதி ஜாண் அவர்களது ஏற்பாட்டில் வீரப்பிரசவம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வட்டக்கண்டலில் நடாத்திய லீக் முறையிலான போட்டி, மற்றும் முத்துக்கள் மூன்று வெற்றிக் கிண்ணம், கீப்பிங் ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் போன்ற போட்டிகளில் இவனது பங்கு அளப்பெரியது.

அவ்வளவு ஏன் *VAJ* ராண்ஸ்போர்ட் றைவராக இவன் மன்னார், முழங்காவில் வரை சென்று வருவதுண்டு ,அந்நாட்களில் இவன் றைவிங் சீற்றுக்கு பின்னால பூட்சும், பந்தும் கிடக்கும் வரும் வழியில் ஊருக்குள்ள

வந்து ஐசோட லொறிய சந்தியோகுமையோர் கோவில் பைப்படிக்கு கிட்ட நிப்பாட்டி கிரவுண்டில விளையாடிமுடிச்சுத்தான் முழங்காவில் போவான். அந்தளவு விளையாட்டில் அவனுக்கு அவா. ஆம் இலக்கம் 10 சீருடையை அணிந்து பயிற்றுவிப்பாளர், பயிற்சிகள் இல்லாது தனது அயராத கடுமையான சுய பயிற்சியால் எதிரணியை கலங்கடித்த எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் முன்கள வீரனான வசந்தன் என்றால் அது மிகையாகாது.

அந்தோனிப்பிள்ளை கீர்த்தி சீலன்

இவர் 1948.09.02 பிறந்தார். விடத்தில் மண்ணின் கலை கலாச்சார உறுதிப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்ட திரு கீர்த்தி சீலன் அவர்கள் தந்தையார் செபஸ்ரி அந்தோனிப்பிள்ளை விடத்தில் மண்ணின் இசைக்குழு ஒன்றிலிருந்து மிருதங்கம் வாசித்ததனை தொடர்ந்து தந்தையிடமிருந்து மிருதங்க கலையை கற்று மிருதங்கம் · தபிலா பொங்கஸ் ஆகியவற்றை திறம்பட வாசிக்க ஆரம்பித்தார். விடத்தில்தீவின் கோயில் திருவிழாக்கள் கரோல் நாட்டுக்கூத்து நாடகங்கள் என பல்வேறு கலை நிகழ்வுகளுக்கும் மிருதங்க வித்துவானாக இவரது சேவை அளப்பரியதே. விடத்தல்தீவில் திரு அந்தோனிமுத்து ஆசிரியரின் தலைமையின் கீழ் இயங்கிய முத்தமிழ் கலா மன்றத்தில் மன்றத்தின் செயலாளராக இருந்து செயல்பட்ட காலப்பகுதியிலே "தூக்கு தூக்கி" எனப்பட்ட சமூக நாடகத்தை மிகவும் சிறப்பாக நடித்திருந்தார். தூக்கிலிடப்பட்ட கதாபாத்திரமாக தன்னையே அர்ப்பணித்து ஒரு சிறந்த நாடக கலைஞர் தன்மையை வெளிப்படுத்தி இருந்தார்.

தொடர்ந்து புனித செபஸ்தியார் நாடக அரங்கேற்றத்தில் பிரதான கதாபாத்திரம் ஆகிய செபஸ்ரியாராக நடித்து பெருமை சேர்த்தார். மேலும் தொடர்ந்து அரங்கறிய ஞான சௌந்தரி நாடகத்திலே பெண்ணுக்குரிய கதாபாத்திரம் ஏற்று பிரதான கதாபாத்திரமாகிய ஞான சௌந்தரியாக நடித்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. தேவ சகாயம் பிள்ளை நாட்டுக்கூத்தில் இறுதியில் துன்பப்படுகின்ற தேவ சகாயம் பிள்ளை கதாபாத்திரத்தை ஏற்று மிகவும் தத்ரூபமாக நடித்துக் காட்டி இருந்தார். அக்காலத்திலே எம் பகுதிகளில் மிகவும் பிரபலமாக அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்த நாட்டுக் கூத்துக்களின் வரிசையில் ஆண்டாங்குளத்தில் நடைபெற்ற காத்தவராயன் நாட்டுக்கூத்திற்கு சிறப்பாக மிருதங்கம் வாசித்து எம் விடத்தல் மண்ணிற்கு பெருமை சேர்த்தார்.

அருட்பணி றெஜிஸ் ராஜநாயகம் அடிகளார் அவர்கள் விடத்தில் தீவில் பங்கு தந்தையாக பணியாற்றிய காலப் பகுதியிலே நாவந்துறை திரு பாலச்சந்திரன் அவர்களின் இயக்கத்தில் எம் பங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சியில் சிலுவை சுமந்து பாடுபட்டு மரணிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் கதாபாத்திரத்தை ஏற்று மிகவும் சிறப்பாக நடித்துக் காட்டி மக்களின் மனதை வென்ற நிலையில் 25 வருடங்களுக்குப் பிறகும் அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் விடத்தில் தீவில் பணியாற்றிய காலப் பகுதியிலே அருட்பணி மைக்கேல் சௌந்தரநாயகம் அவர்களின் நெறியாழ்கையில் மீண்டும் இடம்பெற்ற திருப்பாடுகளின் காட்சியிலே அதே சிலுவை சுமந்து பாடுபட்டு மரணித்த ஆண்டவர் கதாபாத்திரத்தை மீண்டும் ஏற்று எம் விடத்தல் மண்ணின் அட்டை தீவு என்கிற இடத்திற்கு அருட்பணியாளருடன் நாள் தோறும் சென்று மிகவும் கடின பயிற்சிகளை மேற்கொண்டு யேசு நாதருடைய கதாபாத்திரத்தை மிகவும் தத்ரூபமாக காண்போர் வியக்கும் வகையில் நடித்து முடித்தார்.

விடத்தல் மண்ணின் இரண்டு ஆலயங்களில் எல்லா நிகழ்வுகளுக்கும் மிருதங்கம் வாசித்து உதவியதுடன் அயல் பங்குகள் ஆகிய கோவில்குளம் பெரிய மடு ஆகிய இடங்களிலும் இவரது சேவை நிறைந்திருந்தது திருவிழா காலங்களில் கவி பாடுதல் தவக்காலங்களில் தாழிசை ஒப்பாரி பாடுதல் இறப்பு வீடுகளில் ஒப்பாரி பாடுதல் பெரிய வெள்ளி ஆசந்திக்குப் பின்னர் திருப்பாடுகளின் பிரார்த்தனை வாசித்தல் என பல்வேறு ஆற்றல்கள் திறமைகளை தன்னகத்தே கொண்டு எம் விடத்தில் மண்ணின் கலையை சுகவீன மடையும் வரையிலும் மணம் பரவச் செய்த திரு கீர்த்திசீலன் அவர்கள். அவர் 2018.10.06 இறந்தார்.

விடத்தல்தீவு சரித்திரத்தில் கலைவளர்த்த சவிரியப்பு

விடத்தலம்பதியில் கலை, கலாசார பண்பாடுகளை வளர்த்து சரித்திரத்தில் இடம்பிடித்த எமது மண்ணின் வித்தகர்களுள் சவிரியப்பு அவர்களும் நினைவில் நீங்கா இடத்தைப்பெற்றுள்ளார் என்றால் அது மிகையல்ல.

எமது,ஊரின் பிலிப்பு மற்றும் ஆரோக்கியம் தம்பதிகளுக்கு மகனாக 1925ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி விடத்தல்தீவில் பிறந்தார். சவிரியப்பு அவர்கள் தமது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றுக்கொண்டார்.

இளம்பராயத்தில் இருந்தே கலையிலும் கலைத்துறை சார்ந்த நடிப்பிலும் அதீத ஆர்வம் கொண்டிருந்த சவிரியப்பு அவர்கள் ஊரில் நடைபெற்ற திருவிழாக்காலங்களிலும் ,நாடக ,நாட்டுக்கூத்து கலைஞனாகவும் நடித்ததுடன் பல நாடகங்களை இயக்கி மேடையேற்றிய அண்ணாவியாகவும் சவிரியப்பு அவர்கள் எமது ஊரில் கலையை வளர்த்த பெருமைக்குரியவராக திகழ்ந்தார்.

சவிரியப்பு அவர்கள் தனது நடிப்பாற்றலின் வெளிப்பாடாக சூழ்ச்சியின் வீழ்ச்சி என்ற நாடகத்தில் நடித்து கலைத்துறையில் தனது பெயரை பதிவுசெய்திருந்தார். அதன் பின்னர் “அருள்சீலன்” என்ற நாட்டுக்கூத்திலும் தேவசகாயம்பிள்ளை என்ற நாட்டுக்கூத்திலும் கலைஞனாக பாத்திரமேற்று நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுவரையில் நாடகங்களிலும் ,நாட்டுக்கூத்துகளிலும் பல வேடங்கள் ஏற்று தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்த சவிரியப்பு அவர்கள் முதன்முதலாக ஞானசௌந்தரி நாடகத்தை எழுதி இயக்கி மேடையேற்றியிருந்தார். தொடர்ந்து திராட்சை தோட்டத்து உவமை, திருமண விருந்து போன்ற நாடகங்களை எழுதி அவற்றை மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

சவிரியப்பு அவர்கள் எமது ஊரில் நடைபெறும் தவக்கால வழிபாடுகள், திருப்பலிகள், ஆலய திருவிழாக்கள் மற்றும் இறப்பு வீடுகளிலும், கவி பாடுதல், ஒப்பாரி பாடுதல் மற்றும் வியாகுல பிரசங்கங்களை வாசித்துவந்திருந்தார். இவ்வாறு எமது மண்ணில் கலையை வளர்த்த சவிரியப்பு அவர்கள் *2011* ம் ஆண்டு கார்த்திகை மாதம் *05*ம் திகதி இறைபதமடைந்தார்.

அருட்பணி அமரர் எட்வின் அடிகளார் (*OMI*) அவர்களது நினைவுகளை சுமந்து........

அருட்பணி எட்வின் அடிகளார் அவர்கள் எமது விடத்தல்தீவு கிராமத்தின் திரு.திருமதி. தேவதாசன், தவமணி தம்பதிகளின் மகனாக *8* சகோதர சகோதரிகளோடு *17/8/1974* ம் ஆண்டு பிறந்தார்.

அமரர் எட்வின் அடிகளார் தனது ஆரம்ப கல்வியை எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்று அதன் பின்னர் தமது உயர் கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கற்றுத்தேர்ந்தார்.

அதன் பின்னர் தனது குருத்துவ உருவாக்கத்தை அம்பிட்டிய கன்டி தேசிய குருமடத்தில் நிறைவு செய்திருந்தார்.

எமது முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாரின் ஊக்கத்தாலும் ,தூண்டுதலாலும் இறைபணிக்காக அமல மரி தியாகிகள் சபையில் தம்மை அர்ப்பணித்த அமரர் எட்வின் அடிகளார் தமது குருத்துவ உருவாக்கத்தின் முதலாவது வாக்குத்தத்தை கடந்த *8/9/2000* ம் வருடத்தில் நிறைவு செய்தார்.

தொடர்ந்து தமது குருத்துவ பணியின் இறுதி வாக்குத்தத்தை *07/05/2007* ம் ஆண்டில் நிறைவு செய்ததுடன், *19/5/2007* ம் ஆண்டு திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்பட்டு அமலமரி தியாகிகள் சபையின் அருட்பணியாளாராக மன்னார் மறைமாவட்ட ஆயர் அமரர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் கடந்த *12/11/2007* ம் ஆண்டு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அருட்பொழிவு செய்யப்பட்டார்.

தமது முதல் நன்றி திருப்பலியை அமரர் எட்வின் அடிகளார் எமது கிராமத்தின் நற்கருணை ஆண்டவர் சிற்றாலயத்தில் கடந்த *13/11/2007* ம் ஆண்டு ஒப்புக்கொடுத்ததுடன் எமது கிராமத்தின் அருட்பணியாளர்கள் வரிசையில் அருட்பணி எட்வின் அடிகளார் அவர்கள் அமலமரி தியாகிகள் சபையின் முதலாவது அருட்பணியாளராவார். அருட்பணி அமரர் எட்வின் அடிகளார் அவர்கள் தமது இறைபணி வாழ்விலும், சமூக பணியிலும் தன் வாழ்நாளில் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது *7* வருட பணிவாழ்வில் அமரர் எட்வின் அடிகளார் எண்ணிலடங்காத பணிகளை பல்வேறுபட்ட சமூகங்களில் ஆற்றியுள்ளார் குறிப்பாக அமலமரி தியாகிகளின் அன்பகத்தின் இயக்குநராக கடந்த *2007* ம் வருடத்தில் பணியாற்றியதுடன் , அஞ்சலியகத்தின் இயக்குநராக *2008* ம் வருடத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.அதனைத்தொடர்ந்து அமர் அருட்பணி எட்வின் அடிகளார் அவர்கள் இயேசு சபையின் அகதிகள் பணி (*JRS*) இயக்குநராக கடந்த *2008* ம் வருடத்தில் இருந்து *2013* ம் வருடம் வரை சிறப்பாக பணியாற்றியிருந்தார்.பின்னர் *2013* ம் ஆண்டில் இருதயபுரம் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றி அதே வருடத்தில் சாம்பல் தீவு பங்குத்தந்தையாக பொறுப்பேற்று பல்வேறுபட்ட சமூக பணிகளையும்,

இறை பணியையும் ஒருங்கே சிறப்பாக ஆற்றியிருந்தார்.

அருட்பணி அமரர் எட்வின் அடிகளார் "எளியோருக்கு நற்செய்தி நவில " என்ற தமது விருதுவாக்கியத்தை தமது செயலில் பல்வேறுபட்ட சமூக பணிகளில் வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் ஏராளம் தமது அன்பால் அனைவரையும் தன்பக்கம் ஈர்த்தவராக எல்லோரிடத்திலும் இரக்கம் உடையவராக எப்போதுமே சிரித்த முகத்துடன் வலம்வந்தவர். எமது மக்களுக்கு எதிராக அரச பேரினவாதாத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரால் மேற்கொள்ளப்பட்ட அநீதிக்கு எதிரான போராட்டங்களில் மக்களோடு மக்களாக பாதிக்கப்பட்ட பல்வேறுபட்ட சமூக மக்களின் நீதியை நிலைநாட்ட தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டார். பணிவாழ்வில் பல்வேறுபட்ட அரும்பணிகளை ஏளை எளியோருக்கும், நீதியின் பால் துன்புறுவோருக்கும் ஆற்றிய எமது அருட்பணி அமரர் எட்வின் அடிகளார் உடல் நலக்குறைவால் கடந்த 18/8/2014 ம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

போர் சூழலில் தமது இன்னுயிரை ஈந்த ஆசிரிய பெருந்தகைகள்

அமரர் கி.றாஜக்கோண்
முன்னாள் அதிபர்
தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம்
விடத்தல்தீவு
கோட்ட கல்வி அதிகாரி
மடு வலயம்.

அமரர் சி. அமல நேசன்.
முன்னாள் ஆசிரியர்
தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம்
விடத்தல்தீவு.

அமரர் மரிய டெய்சி
முன்னாள் பிரதி அதிபர்
தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம்.
விடத்தல்தீவு.

அமரர் ம.மேரிக்கில்டா
முன்னாள் ஆசிரியர்
தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் விடத்தல்தீவு.

சட்ட முதுமாணி ஏ. எம். பாயிஸ்

சிறந்த சட்டத்தரணியான ஏ. எம். பாயிஸ் அவர்கள், விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயம், எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி, மற்றும் கண்டி திரினிடி கல்லூரி *(Trinity College)* ஆகிய கல்வி நிறுவனங்களில் தனது ஆரம்பக் கல்வியை பெற்றார். அதன் பின், கொழும்பு சட்டக் கல்லூரியில் கல்வி கற்று, சட்டத்தரணியாக தகுதிபெற்றார். தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில், சட்ட முதுமாணி (LL.M) பட்டம் பெற்றுள்ளார்.

சிவில் செயற்பாட்டாளராகத் திகழும் பாயிஸ் அவர்கள், அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் அடிப்படையில், தற்போதும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றி வருகிறார்.

மன்னாரில் நீண்ட காலமாக இயங்கி வரும் கிராம அபிவிருத்தி நிறுவனம் (RDF) என்பதின் ஆரம்பக் கால உறுப்பினராக உள்ளார். தற்போது அதன் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.
சிவில் அமைப்புகள் வழியாக முன்னெடுக்கப்படும் மீள் இணக்க நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான களப் பணிகளில் முன்னோடியாக செயற்படுபவர்.
பாரம்பரியம் வாய்ந்த ஒரு அரசியல் கட்சியின் வெளிவிவகார பணிப்பாளராகவும் பணியாற்றிய பின், அவர் அரசியலிலிருந்து விலகி, தற்போது நடுநிலை அணுகுமுறையில் செயற்படுகிறார்.
2012 முதல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், இலங்கை தொடர்பான அமர்வுகளில் தொடர்ந்து பங்கேற்று, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து துணிச்சலாகவும், வெளிப்படையாகவும் குரல் எழுப்பி வருகிறார்.

அத்துடன், ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை மாநாடுகளிலும், ஐரோப்பிய ஆணைக்குழுவிலும், இலங்கை தொடர்பான அமர்வுகளில் ஆலோசகராக பங்கேற்றுள்ளவர்.
சட்டத்துறையில், சிவில் வழக்குகள், மேல்நீதிமன்ற வழக்குகள், உச்சநீதிமன்ற வழக்குகள் என பல தளங்களில் திறமையை வெளிப்படுத்தும் தொழில்முறை அனுபவம் வாய்ந்தவராவார்.

கடலலை இசைக்குழுவின் இயக்குணர் சவேரிதாஸ்.

சவேரி எமது ஊரில் எமது அயலவர் லூத்தம்மா அக்கா மற்றும் செல்வம் அண்ணனுடைய மகன். சிறுவயதில் இருந்தே எனக்கு நன்கு அறிமுகமான எமது அயலில் வசித்தவர். எமது சிறுபராயத்தில் எமது வீட்டின் அருகில் இருந்த பத்திமாமாவின் காணியில் நாங்கள் *Football* விளையாடுவதையும், சில விளையாட்டு போட்டிகளையும் நடத்தியிருந்ததும் இன்னும் பசுமையான நினைவுகள்.

சவேரி தனது சிறுபராயத்தில் *Football* திறமையாக விளையாடும் தன்மையை கொண்டிருந்தார், ஒவ்வொரு நாளும் மாலை ஆனதும் அயலில் உள்ள எல்லா சிறுவர்களும் அந்த காணியில் *Football* விளையாடுவதை வழக்கமாக கொண்டிருந்தோம்.
#இடம்பெயர்ந்த பின்னர் பேசாலை முகாமில் எமது பாடசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் சவேரி உயர்தரம் கல்விகற்றுக்கொண்டிருந்தார். மாணவ மன்றங்கள், ஒளி விழா நிகழ்வுகள் ஆசிரிய தினம் மற்றும் தமிழ்த்தின போட்டி நிகழ்வுகளில் சவேரியின் பாடல் இன்றியமையாத ஒரு அங்கமாக இருந்துள்ளது மிகவும் இனிமையான குரல் வழத்துடன் பாடியிருந்தார்.

2017 ம் வருடம் எமது மகள் சுஜொக்ஸின் ஜகார்த்தாவில் நடைபெற்ற உலக அகதிகள் தினத்தில் பாடிய “கடவுள் உள்ளமே ஒர் கருணை இல்லமே” என தொடங்கும் பாடலுக்கான கரோக்கே லிங்கை தந்து உதவியிருந்தார்.

எமது ஊருக்கே உரித்தான கலையுணர்வு சவேரியிடம் கொஞ்சம் அதிகமாகவே காணப்பட்டது. இயல்பிலேயே பாடும் திறமையை கொண்டிருக்கும் சவேரி இசைத்துறையில் தனது அயராத முயற்சியால் எமது கிராம இசை கலைஞர்களையும் , பாடகர்களையும், ஒருங்கிணைத்து கடலலை இசை குழுஎன்ற பெயருடன் ஊரிலும் பல்வேறுபட்ட வெளி இடங்களிலும் இசை நிகழ்வுகளை நடாத்தி எமது ஊரின் கலை வளர்வதில் பெரிதும் பங்காற்றிவருகிறார் என்றால் அது மிகையாகாது.

பல கரோக்கே பாடல்களை பாடியிருக்கும் சவேரி தனது சொந்த இசையிலும் பல பாடல்களை பாடியிருப்பதும் , எமது பல இசை ஆர்வம் உள்ள கலைஞர்களுக்கு அவர்களது இசை பயணத்தில் அவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கியதுடன் அவர்களின் ஆரம்ப அடித்தள மேடைகளை உருவாக்கிய பெருமை சவேரியையே சாரும் .

தனது சொந்த செலவில் இருந்தும் ,தனது உறவினரிடமிருந்தும் ஒரு சில இசை உபகரணங்களை மட்டும் கொண்ட கடலலை இசை கலையகத்தை தனது வீட்டில் வைத்துப்பேணிவரும் சவேரியவர்களுக்கு இசை துறையில் வளர இன்னும் பல முக்கியமான இசை தொடர்பான இசைச்சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் தேவைப்படுகின்ற ஒன்றாகவே இன்னும் இருந்துவருகிறது. #கடந்த மாதத்தில் அமரத்துவம் அடைந்த அருட்சகோதரர் பெனவெஞ்சர் அவர்களுக்கான நினைவு பாடல், மற்றும் நாம் இடம்பெயர்ந்த 25 வது வருட நிறைவின் நினைவு பாடல் போன்ற பாடல்கள் மிகவும் சிறப்பான பாடல்களாக வெளிவருவதில் சவேரியின் பங்கு அளப்பெரிய மூலகாரணமாக இருக்கிறது.

தனது சொந்த வேலைப்பழுக்களின் மத்தியில் இரவு பகல் பாராது முகம்கோணாது ,ஒன்றல்ல ,இரண்டல்ல பல தடவைகள் நுட்பமாக ஒவ்வொன்றையும் சரி பிழை பார்த்து சிறப்பான இசைக்கோர்வையை வழங்கியதுடன் நான் நினைத்தவாறு பாடல் அமையவேண்டும் என்ற எனது எண்ணக்கருவிற்கு ஏற்றால் போலவே பாடலை சிறப்பாக வழங்கியிருந்தார்.

அதிலும் அருட்பணி றஜனிகாந் அடிகளார் புலம்பெயர்ந்த தேசத்தில் இருந்து வாட்ஸ் அப் அலைவரிசை மூலம் அழகாக பாடி அனுப்பிய பாடலை மிகவும் நேர்த்தியாகவும், தாளம் தப்பாமலும் இசையை கோர்த்து அழகான, இனிமையான பாடலாக வெளிவர உதவியுள்ளமை மறக்கமுடியாத சாதனையாகும்.

விடத்தல்தீவு சல்லியை சல்லிடை போட்டு துளாவிய கடலோடி மரியதாஸ்.

மோட்டர் மரியதாஸ் என எமது மக்களால் அறியப்படுகிற நீக்கிலாஸ் என்ற இயற்பெயரை கொண்ட மரியதாஸ் அவர்கள் 1956ம் ஆண்டு மாசி மாதம், 13ம் திகதி றெத்தினம் மற்றும் திரேசம்மா ஆகியோருக்கு மகனாக பிறந்து குடும்பத்தில் 3 வது பிள்ளையாக மரியதாஸ் அவர்களுக்கு 6 சகோதரர்களும், 5 சகோதரிகளுமாக 11 சகோதர ,சகோதரிகள் உண்டு.

தனது கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 4 வரை கற்ற மரியதாஸ் அவர்கள் அமரர் சூசைப்பிள்ளை (செல்லராசா சம்மாட்டி) அவர்களுடன் களம்கட்டி தொழிலையும் , அமரர் செல்வநாயகம் அவர்களுடன் முரல்வலை தொழிலையும் செய்துவந்தார். பின்னர் பட்டிவலை, விடுவலை, அட்டைகுளித்தல், தோணி தாங்கல் என்பவற்றை தொழிலாக பழகி அவற்றை செய்துவந்தார்.

தனது 20வது வயதில் எமது ஊரின் சிற்ப கலைஞன் அடைக்கலம் அவர்களது மகள் யசிந்தா அவர்களுடன் 1976ம் ஆண்டு திருமணபந்தத்தில் இணைந்து 5 ஆண் பிள்ளைகளையும், 3 பெண் பிள்ளைகளையும் பெற்றார். எமது ஊரின் அமரர் செபதேயு (றைவர் சின்னமணி) அவர்கள் வழங்கிய 6 முளம் உடைய பட்டிவலையின் உதவியுடன் கடற்றொழில் தனியாக ஈடுபட ஆரம்பித்தார்.

பின்னர் 1979 ம் 1980ம் ஆண்டுகளில் மரியதாஸ் அவர்கள் கள்ளியடி மணி அவர்களுடைய அறிமுகம் பெற்றவராக அவருடன் சேர்ந்து மன்னார் சௌத் பார் பகுதியில் உள்ள தென்கடலில் சுமார் 60 அடி ஆளப்பகுதியில் சிங்கி தொழிலுக்காக சென்று தலைமன்னார் கடல் எல்லை வரைக்கும் சென்று சிங்கி பிடிப்பதில் கடும் தீவிரமாக உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
தொடர்ந்து 1982ரம் ஆண்டுகளில் எமது விடத்தல்தீவு சல்லியில் 10 முளம் வலையையும் ,களத்தில் 8, 1/2 முளம் வலையையும் பாய்ந்து சீரான முறையில் கடற்றொழில் ஈடுபட்டு வந்த நேரத்தில் மரியதாஸ் அவர்களுடைய வீடு எரிந்து நாசமானது. வீடு முற்றாக எரிந்ததை அறிந்து எமது கிராமத்தின் கிராம சேவையாளர்களான திருமதி மேரி பிரான்சிஸ் அவர்களும், திரு.றொபேட் அவர்களும் ஜனசக்தி உதவி திட்டத்தின் ஊடாக வீடு கட்டுவதற்கான உதவிகளை வழங்கியிருந்தார்கள்.

உள்நாட்டு யுத்தத்தால் கள்ளியடி பகுதிக்கு இடம்பெயர்ந்த மரியதாஸ் அவர்களது வீடு 1985ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் எரிக்கப்பட்டது .இதன் காரணமாக மரியதாஸ் அவர்கள் தனது கடினமான உழைப்பையும், கடற்றொழில் வெறி கொண்டவராக அன்னம் தண்ணியை பொருட்படுத்தாமலும், சாப்பாட்டை ஒரு பொருட்டாக எண்ணாதவருமாக கடலில் முழுமையான நேரத்தை செலவிட்டவராக சங்கு தொழிலையும், அட்டை தொழிலையும் செய்து தனது கடின உழைப்பின் காரணமாக கல் வீடு ஒன்றைகட்டி அதற்கு ஓடு போட்டு தனது முயற்சியை தொடர்ந்திருந்தார்.

மரியதாஸ் அவர்களுடைய கல் வீட்டை அவரது மாமனாரும் சிற்ப கலைஞனுமான அடைக்கலம் அவர்கள் கட்டி கொடுத்திருந்தார். அந்நாட்களில் டேவிற் மாஸ்ரர் சுமார் 50 லோட் மண்ணை அரைவாசி காசு வாங்கி வழங்கியதுடன், சுசீலன் அவர்களும் உதவியிருந்தார்கள்.

கள்ளாறு, முனங்கு ,கொம்புதீவு போன்ற எமது கடல்பகுதிகளிலும் எமது விடத்தல்தீவு சல்லி கடல் பகுதிகளிலும் வலைபாய்ந்ததுடன், அட்டை, சங்கு தொழிலில் இந்தகாலத்தில் இருப்பது போன்ற வசதிகள் அற்று எந்தவிதமான பாதுகாப்பு வசதிகள் இல்லாத காலகட்டங்களில் சல்லியை சல்லிடை போட்டு நிமிசக்கணக்கில் கடலில் நீருக்கடியில் கடல் வித்தைகளை கைக்கொண்டிருந்தவர் மரியதாஸ் அவர்கள் என்றால் அது மிகையல்ல
மரியதாஸ் கடற்றொழிலில் மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையிலும் சிறந்தவராக காணப்பட்டார். தனது 7 வயதில் இருந்தே பாடசாலை அணியில் சிலுவை எலியாஸ் சக, கில்லறி, பயஸ் ஆகிய தோழர்களோடு இணைந்தும் 1973 களில் எமது ஊரில் றூபன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட Blue Diamond அணியிலும் சேர்ந்து விளையாடியிருந்தார்.அதன் பின்னர் சென் ஜேம்ஸ் அணியில் இணைந்த மரியதாஸ் அவர்கள் ஜோசப், அருள், அருமைதாஸ்,யேசுதாசன் ஆகியோருடன் இணைந்து உதைபந்து விளையாடிவந்தார்.

அதன் பின்னர் ஆசிரியர் இம்மனுவேல் அவர்களது கண்ணில் பட்ட மரியதாஸ் அவர்கள் இம்மனுவேல் மாஸ்ரர் அவர்களது பயிற்சியில் இணைந்து 100m ஓட்டத்தில் பிரகாசிக்க தொடங்கினார். அந்நாட்களில் தக்காப்பிட்டியில் நடைபெற்ற போட்டியொன்றில் மகேந்திரா, எலியாஸ், ஆகியோரை பின்தள்ளி முதலாவது இடத்தை மரியதாஸ் அவர்கள் பெற்றிருந்தார். முகமின், மைக்கின், பயஸ், எலியாஸ் என வீரர்கள் ஓட்டத்தில் முன்னிலை வகித்தகாலத்தில் அவர்களுடன் மரியதாஸ் அவர்களும் அடம்பன் பிரதேச மட்ட 100m ஓட்ட போட்டியில் முதலிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அஞ்சல் ஓட்ட போட்டிகளில் ஆரம்ப வீரர் எலியாஸ் அவர்களும் முடித்துவைப்பதில் மரியதாஸ் அவர்களும் அதிகளவு வெற்றிகளை சுவீகரித்திருந்தார்கள். ஊரில் நடைபெறும் தோணி தாங்கல் போட்டிகளிலும், மன்னாரில் நடைபெற்ற தோணி தாங்கல் போட்டியிலும், நீச்சல் போட்டிகளிலும் மரியதாஸ் அவர்கள் முதலாவது இடத்தை பலமுறை பெற்றிருந்ததுடன் கயிறு இழுக்கும் போட்டிகளில் முதலிடத்தையும், பாரம் தூக்கும் போட்டிகளில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் ஆரம்ப வீரர்களான ஞானசீலன், எலியாஸ், பயஸ், ஆகியோருடன் இணைந்து விளையாடிவந்தார். எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை பதிவு செய்வதற்காக எலியாஸ் அண்ணனுடன்அடம்பனுக்கு சென்று கழகத்தை பதிவுசெய்தார் மரியதாஸ் அவர்கள்.

1977ம் ஆண்டுகளில் அமரர் சலமோன் அவர்கள் தங்களது விளையாட்டு போட்டிகளுக்கு அதிக அளவிலான உதவிகளை செய்ததாகவும் ,எமது கழகத்திற்காக தாங்கள் தொழிலை விட்டு நிதி திரட்டியதாகவும் ,சன்னார் பகுதியில் இருந்து மண் இழுத்து எமது மைதானங்களை நிரப்பி பாடசாலை மாணவர்கள் விளையாடுவதற்கான வசதிவாய்ப்பை எலியாஸ், பயஸ், இசைக்கேயல், மற்றும் ஞானசீலன் ஆகிய நிர்வாக உறுப்பினர்களோடு இணைந்து ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் ஏற்படுத்தியதாகவும் மரியதாஸ் அவர்கள் தெரிவித்திருந்தார்.

இம்மனுவேல் மாஸ்ரர் வழங்கிய பயிற்சிகள் காரணமாக உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம்,கயிறு இழுத்தல், பாரம் தூக்குதல், நீளம் பாயுதல் ,தோணி தாங்கல் போட்டி,,100m, 200m, ஓட்ட நிகழ்ச்சிகளில் அடம்பன் பிரதேசத்தில் முதலிடத்தையும், மன்னார் மாவட்ட போட்டிகளிலும் முதலிடத்தை பெற்று மாகாண ரீதியாக நடைபெற்ற போட்டிகளுக்கு தெரிவாகியிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்டத்தில் பின்கள வீரரான மரியதாஸ் அவர்கள் எமது பகுதியில் நடைபெறும் கம்பு இழுத்தல் போட்டியில் முதலிடத்தையும், குண்டு போடுதல் நிகழ்ச்சியில் முதலிடத்தையும் பெற்று அடம்பன், நாச்சிக்குடா, யாழ்ப்பாணம், முருங்கன், வலைப்பாடு, மன்னார், நெடுங்கண்டல், தேவன்பிட்டி, காத்தாங்குளம், பெரியமடு, மாந்தை, ஆகிய பகுதிகளில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் A B அணிகளாக வெற்றியீட்டியதில் மரியதாஸ் அவர்களுடைய பங்கும் அதிகமாகும்.

1988/1989ம் ஆண்டுகளில் பேசாலைக்கு இடம்பெயர்ந்த மரியதாஸ் அவர்கள் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் தமிழ்நாடு இந்தியாவிற்கு புலம்பெயர்ந்திருந்தார்.

இந்தியா தமிழ்நாட்டில் மண்டப முகாமில் அகதிகளாக வாழ்ந்துவந்த காலப்பகுதியில் மரியதாஸ் அவர்களது தலமைத்துவத்தின் அடிப்படையிலும் ,மரியதாஸ் அவர்கள் விளையாட்டுத்துறையில் கொண்டிருந்த

திறமைகளின் அடிப்படையிலும், எல்லோரிடத்தில் அவர் கொண்டிருந்த மரியாதையின் நமித்தமும் அந்த முகாமில் உள்ள மக்களது விளையாட்டுக்கு பொறுப்பான தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். சுமார் 80 உறுப்பினர்களை கொண்ட அந்த குழுவில் எமது ஊரவர்களான பிறிமன், ஜோர்ச் ஆகியோர் உட்பட்ட வங்காலை மற்றும் பள்ளிமுனை வீரர்களை கொண்ட அணி அதன் தலைவர் மரியதாஸ் அவர்களின் தலமையில் பல விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியிருந்தது.

தனிமனித ஆளுமையும் விளையாட்டு திறனும் கொண்ட மரியதாஸ் அவர்கள் தமிழ்நாட்டின் பல கிராமங்களில் பல உள்ளூர் கழகங்களுக்கு பயிற்சிகளை வழங்கியிருந்தார். அத்துடன் வேதாளா மற்றும் கீழக்கரை பகுதிகளில் அட்டை மற்றும் சங்கு தொழிலில் ஈடுபட்ட மரியதாஸ் அவர்கள் 8,9 பாகம் ஆளமுடைய கடலில் அட்டை குளித்து முதன் முதலாக 300 அட்டை எடுத்து சக தொழிலாளர்களிடையே பேசப்படும் வகையில் தொழிலை சிறப்பான முறையில் செய்திருந்தார். கப்பல் ஓடும் கடல்பாதையின் அருகில் பழுதடைந்து நீரில் மூழ்கிய படகுகளை மீட்கும் பணிக்கு மரியதாஸ் அவர்கள் வேண்டப்பட்ட ஒருவராக இருந்து வருவதுடன் கடற்படை படகுகள், நங்கூரம் போன்றவற்றை ,சுத்தம் செய்து அவற்றை பழுது பார்க்கவென மரியதாஸ் அவர்கள் கடலுக்கு அடியில் சுமார் 4 நிமிசம் தன்னம்தனியாளாக போய் திருத்தும் பணிகளை செய்திருந்தார்.

ஆழ்கடலோடி முள்ளுச்சங்கு, சங்கு, அட்டை போன்றவற்றை மனத்தைரியத்துடன் கடலுக்கு அடியில் சென்று எடுத்துவருவதை தனது தொழிலாக கொண்ட மரியதாஸ் அவர்கள் தமது பிள்ளைகளை பல்வேறுபட்ட நெருக்கடிகள் மத்தியிலும், அசாதாரண சூழ்நிலைகளுக்குள்ளும், பலதரப்பட்ட பொருளாதார கஸ்டங்களுக்கு மத்தியிலும் கல்வியறிவை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுத்து அவர்களை படிக்க வைத்து மகள் ஒருவரை தமிழ்நாட்டில் தங்கம் வெல்ல காரணகர்த்தாவாக இருந்து சாதித்துள்ளார்.மன்னார் மாவட்ட வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் செயலாளராக எமது மண்ணின் மைந்தன் திரு.அ.லோறன்ஸ் அவர்கள்.

வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் திரு.அருளானந்தம். லோறன்ஸ்

திரு.லோறன்ஸ் அவர்கள் கடந்த 2012ம் வருடத்தில் இருந்து மன்னார் மாவட்ட வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் உறுப்பினராக செயல்படுவதுடன், மேற்படி சங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பறவைகள் சமாந்தமாக மன்னார் மாவட்டம் தழுவி மேற்கொள்ளப்படுகின்ற கள ஆய்வுகளுக்கும் ,பறவைகள் வாழும் இடங்களை அறிதல் மற்றும் பறவைகளை இனம்கண்டு கொள்ளுவதில் உதவியாளராக செயல்பட்டுவருதுடன் தொடர்ச்சியாக சங்கத்தில் இணைந்திருந்து அதன் செயலாளராக பதவி வகித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் திரு.லோறன்ஸ் அவர்கள் பறவைகள் தொடர்பான அதிகளவு புத்தகங்கள் மற்றும் தகவல்களை அதற்கான புகைப்படங்களுடன் சேகரித்து பேணி பாதுகாத்தும் வருகிறார்.

ஞாலத்தில் ஞாபகமான திரு. யா. ஞானசீலனின் சாதனை வரலாறு.



விடத்தல்தீவு 6ம் வட்டாரத்தில் யாகப்பு ,அன்னம்மா தம்பதிகளின் மகனாக 2/1/1948 ம் ஆண்டு பிறந்தார். தமது குடும்பத்தில் 3 சகோதரிகளையும் , 2 சகோதரர்களையும் கொண்டிருந்த இவர் 30 /09/1976 இல் அலிஸ் மேரிமலர் அவர்களை திருமணம் செய்து 4 பிள்ளைகளுடன் சிறப்பாக வாழ்ந்துவருகிறார். ஞானசீலன் அவர்களின் வரலாற்றில் அவரது இளமை காலம், கல்வி பராயம் என்பன வரலாறு சொல்லத்தக்க பல சாதனைகள் நிகழ்த்தப்பட்ட வரலாறுகளாகவே காணப்படுகிறது .

அந்தவகையில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1968 ம் வருடத்தில் தரம் 10 இல் நடைபெற்ற கொண்ட க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தார். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1965ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டுவரை கல்விகற்று, கல்வியிலும், விளையாட்டிலும் பற்பல சாதனைகளை நிலைநாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் 1967 ம் ஆண்டில் தரம் 9 இல் கல்விகற்கும் போதே உதைபந்தாட்ட அணியின் மாவட்ட கோல் காப்பாளராக இருந்துள்ளார். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் விளையாட்டு போட்டி நிகழ்ச்சிக்கு

பொறுப்பான மாணவ முதல்வராகவும், உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும், கோல் காப்பாளராகவும், விளையாட்டு மற்றும் தடகள போட்டிகளின் தலைவராகவும் 1967ம் ஆண்டு தொடக்கம் 1969ம் ஆண்டுவரை தலமைதாங்கி இருந்துள்ளமையும் மறக்கமுடியாததாகும். பாடசாலைகளுக்கிடையிலான தடகள, மெய்வல்லுனர் போட்டிகளுக்கு தலமை தாங்கிய இவர் கோல் ஊன்றி பாய்தல், 100m ஓட்டம், 200m ஓட்டம் ,நீளம் பாய்தல், முப்பாச்சல், 100m, 200m, 400m அஞ்சல் ஓட்டநிகழ்ச்சி மற்றும் மரதன் ஓட்டநிகழ்ச்சிகளில் முதலிடத்தை பெற்று புனித சவேரியார் கல்லூரியில் சாதனைபடைத்திருப்பது இவரின் மற்றுமொரு வரலாறாகும்.

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி கற்றநாட்களில் அப்போதைய பிரதமமந்திரி கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களை வரவேற்று கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்திற்கான அணிநடைக்கு 1967ம் வருடம் தலமைதாங்கியிருந்தார். புனித சவேரியார் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்கும் போதே மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கான கோல் காப்பாளராக திகழ்ந்துள்ளார். மேலும் கல்லூரியின் பீற்றர் இல்ல தலைவராகவும் தலமைதாங்கியதுடன் பீற்றர் இல்லத்திற்கான தடகள தலைவராகவும் தலமைதாங்கியதுடன் மன்னார் மாவட்டத்தில் கோல் ஊன்றி பாய்தல் நிகழ்ச்சியில் அறிமுகவீரனாக அதனை அறிமுகப்படுத்தியுள்ள பெருமையும் இவரையே சாரும்.

மன்னார் மாவட்டத்தில் 1966 தொடக்கம் 1968 வரையான காலப்பகுதியில் கோல் ஊன்றி பாய்தல், நீளம் பாய்தல் 100m ஓட்டம் ஆகிய போட்டிகளில் மாவட்ட சம்பியனாக வலம்வந்தவர், கழகங்களுக்கிடையிலான போட்டியில் புனித சவேரியார் கல்லூரி சம்பியனானதும் ,புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணிக்கான தலைவராகவும், மாவட்ட அணிக்கான தலைவராக தலமைதாங்கியதும் இவரது வரலாற்று சாதனைகளாகும். கல்வி பயிலும் கல்லூரி நாட்களில் பற்பல சாதனைகளை நிலைநாட்டிய ஞானசீலன் அவர்கள் சமூகத்தில் தொடர்ந்து பல்வேறுபட்ட வரலாறுகளை படைத்திருக்கிறார் என்பதும் மறப்பதற்கல்ல. 1975ம் வருடத்தில் இலங்கை பொலிஸ் சேவையில் தம்மை இணைத்துக்கொண்ட இவர் தமது ஆரம்ப பயிற்சியை அம்பாறை பொலிஸ் பயிற்சி பாசறையில் பெற்றுள்ளார். பின்னர் கன்டியில் நியமனம் பெற்று மன்னார் பொலிஸ் திணைக்களத்தில் 1977ம் வருடம் வரை பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியதும் ,மன்னார் பொலிஸ் உதைபந்தாட்ட அணியின் கோல்காப்பாளராக இருந்ததும் இவரது மற்றுமொரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.மாந்தை மேற்கு மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான உதைபந்தாட்ட போட்டி, கரப்பந்தாட்ட போட்டி மற்றும் மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிகளுக்கு 1978/1979ம் ஆண்டுகளில் நடுவராக கடமையாற்றியிருந்தார். 1978, 1979,மற்றும் 1980ம் வருடத்தில் கிளிநொச்சி மாவட்ட நடுவர் சங்கத்தில் பயிற்சி பெற்ற இவர் மாந்தை மேற்கு, முசலி, கிளிநொச்சி, முழங்காவில் வலைப்பாடு, போன்ற இடங்களில் நடைபெற்ற கரப்பந்தாட்ட மற்றும் உதைபந்தாட்ட போட்டிகளின் நடுவராக சிறப்பாக கடமையாற்றியதும் மறக்கமுடியாததாகும்.

தமிழீழ நடுவர் சங்கத்தில் அதன் ஆரம்ப நடுவர்களில் ஒருவராக வன்னிப்பெருநிலப்பரப்பு பகுதியில் கடமையாற்றியும் இருந்தார். எமது கிராமத்தின் ஐக்கிய விளையாட்டுக்கழகம் அருட்பணி றெஜீஸ் ராயநாயகம் அடிகளாரினால் ஸ்தாபிக்கப்பட்ட அக்காலப்பகுதியில் ஊரில் 6ம்,7ம் வட்டாரங்களில் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்த கழகமான பயநியர் கழகத்தில் இருந்து ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கு தலைவராக தலமைதாங்கிய பெருமையும் இவரையே சாரும். ஜெர்மனிய உதைபந்தாட்ட பயிற்சியாளர்களினால் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட இவர் 1980 தொடக்கம் 1982 வரையிலான காலப்பகுதியில் பயிற்சி அளித்துள்ள வரலாறும் மறந்துவிட முடியாததாகும். 1970 களின் பின்னர் ஞானசீலன் அவர்கள் எமது கிராமத்தின் எலியாஸ், செபமாலை, வரப்பிரகாசம்,பேரம்பலம், நாதன், மரியதாஸ், யேசுதாசன் ஆகிய எமது ஐக்கிய விளையாட்டுக்கழக ஆரம்ப கால A அணி வீரர்களுடன் மாந்தை மேற்கு பிரதேச சம்பியனாக வலம் வந்ததும் வரலாற்றில் இடம்பிடித்த நிகழ்வாக காணப்படுகிறது.

விளையாட்டில் மாவட்ட ரீதியில் சாதித்து பல்வேறுபட்ட போட்டிகளுக்கு நடுவராக சிறப்பாக கடமையாற்றிய ஞானசீலன் அவர்கள் இணக்க சபை உறுப்பினராகவும் ,புனித யாகப்பர் ஆலய செயலாளராகவும் 1986/1987ம் ஆண்டுகளில் இருந்துள்ளார். எமது விடத்தல்தீவு மேற்கு மீனவ கூட்டுறவு சங்க தலைவராகவும், சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினராகவும் இருந்துள்ள இவரது நிர்வாக காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு வாசிக சாலையின் 25வது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு 1986 இல் வெளியிடப்பட்டது. இடம்பெயர முன்னரும் ,இடம்பெயர்ந்த பிற்பாடும் எமது உள்ளூர் போட்டிகள், உள்ளூர் நிகழ்ச்சிகளுக்கு சிறப்பாக உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட, போட்டிகளுக்கு நடுவராக செயற்பட்டவர் எமது ஞானசீலன் அவர்கள், இன்றும் உள்ளூரில் பல போட்டிகளுக்கு நடுவராகவும், பல அமைப்புகளுக்கு ஆலோசகராகவும் ஞானசீலன் அவர்கள் திகழ்கிறார் என்றால் அதுமிகையாகாது.

பயஸ் ! பயஸ் ! என பலராலும் பரிட்சையமான புறுணோ பயஸ் அவர்கள்

பயஸ் என்று பலராலும் அறியப்படுகின்ற புறுணோ பயஸ் அவர்கள் ஜோண்சன், மரிகிரிதாள் தம்பதிகளுக்கு மகனாக 1962/09/30 ம் திகதி விடத்தல்தீவில் பிறந்தார். இவருக்கு 3 சகோதரர்களும் ,5 சகோதரிகளும் உள்ளனர். 1990/02/24ம் திகதி சிறீமதி அவர்களை திருமணம் செய்து 5 பிள்ளைகளுடன் 1999 இல் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் மன்னாரில் வசித்து வருகிறார்.

1978 களில் எமது முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் இணைந்து புறுணோ பயஸ் அவர்கள் 1984 ம் ஆண்டளவில் தமது 14 வது ,15 வது வயதில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக முதல் முதலாக விளையாடியுள்ளார்.

தமது பாடசாலை நாட்களில் உதைபந்தாட்டம் தவிர்ந்த ,100m, 200m, 400m, மற்றும் நீளம் பாய்தல் போன்ற போட்டிகளில்முதலிடங்களைபெற்றிருந்தார்.1982ம்ஆண்டுகாலப்பகுதியில்மாந்தை மேற்கு பிரதேசரீதியாக நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் புறுணோ பயஸ் அவர்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக நீளம் பாய்தல் போட்டி நிகழ்ச்சியில் 19.9m தூரம் நீளம் பாய்ந்து பிரதேச மட்டத்தில் முதலாவது இடத்தை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து மன்னார் மாவட்ட ரீதியாக நடைபெற்ற போட்டியிலும் 19.9m தூரம் நீளம் பாய்ந்து முதலிடத்தை பெற்றதுடன் தேசிய ரீதியில் மாத்தளையில் நடைபெற்ற போட்டியில் 4ம் இடத்தை பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. எமது கிராமத்தில் நடைபெற்ற மெடோன் கீதா உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இவரது முதலாவது போட்டியாக அமைந்தது அப்போட்டியில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் 2ம் இடத்தை பெற்றுக்கொண்டது. எமது ஐக்கிய விளையாட்டுக்கழக ஆரம்ப காலத்தில் எமது அணியில் சக வீரர்களான எலியாஸ், ஞானசீலன், இம்மனுவேல், வரப்பிரகாசம், பேரின்பலம், நாதன் ஆகிய வீரர்களுடன் தமது ஆரம்ப கால உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கேற்றியிருந்தார்.

1986 இல் இருந்து 1992 வரைக்கும் மாந்தை மேற்கு பிரதேசத்தில் பல்வேறுபட்ட போட்டிகளில் விளையாடி பலதடவைகள் சம்பியன் கிண்ணத்தை பெற்ற எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் இவரது பங்கு அளப்பரியது. அடம்பன், ஆண்டான்குளம், பண்டிவிரிச்சான், உயிலங்குளம், மாந்தை, வட்டக்கண்டல், பாலம்பிட்டி, முழங்காவில், உயிர்த்தராசன் குளம், நாவற்குளம், தட்சனாமருதமடு, வலைப்பாடு, இத்திக்கண்டல் போன்ற இடங்களில் விளையாடி சம்பியனாக தெரிவான எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் அதிக கோல்களை பெற்றுக்கொடுத்துள்ளார். மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) நடாத்திய முன்னாள் தலைவர் அமரர் சிறீசபாரத்தினம் நினைவுகிண்ண உதைபந்தாட்ட போட்டியில் மாவட்ட ரீதியில் 3வது இடத்தை பெற்ற எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதை பயஸ் அவர்கள் வென்றிருந்தார். மேலும் பல தடவைகள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A,Bஅணிகள் இறுதிப்போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்த நாட்களில் குறிப்பாக முழங்காவில் மைதானத்தில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு கிண்ண உதைபந்தாட்ட போட்டி ,வலைப்பாட்டில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகள் என்பன இவரது காலத்தில் மறக்கமுடியாத போட்டிகளாக இருந்தாக குறிப்பிடுகிறார். சொர்ணபுரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி முடிவுறும் தருவாயில் இவர் வழங்கிய பந்தை வெற்றி கோலாக மாற்றி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி இறுதி நிமிடத்தில் சம்பியனாக வெற்றிபெற்றது இவரது மறக்கமுடியாத அனுபவமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் பாலப்பெருமாள்கட்டு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 11 கோல்களை எமது அணி சார்பாக எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் பெற்றிருந்தது . அந்த போட்டியில் புறுணோ பயஸ் அவர்கள் எமது அணி சார்பாக 4 கோல்களை எமது அணிக்காக பெற்றிருந்தார். 1992ம் ஆண்டு இத்திக்கண்டல் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இவர் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக விளையாடிய கடைசி போட்டியாக அமைந்தது. சம்பியனாக தெரிவு செய்யப்பட்டிருந்த அன்றை போட்டியில் முழங்கால் உபாதை ஏற்பட்டு புறுணோ பயஸ் அவர்களது கடைசி போட்டியாக இத்திக்கண்டல் உதைபந்தாட்ட போட்டி அமைந்தது.பல்வேறுபட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது அணித் தலைவராகவும் செயற்பட்டு பல வெற்றிக்கிண்ணங்களை சுவீகரித்த ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் எலியாஸ், எட்வேட்ராஜா, சகாயராசா, கியோமர், இசுதோர், மரியதாஸ், போன்ற எமது முன்னாள் வீரர்கள் அதிகளவு போட்டிகளில், பல ஆண்டுகளாக தம்முடன் சக வீரர்களாக விளையாடி எமது ஊருக்கு பெருமை சேர்த்ததாக குறிப்பிடுகிறார்.
புறுணோ பயஸ் அவர்கள் 1993ம் வருடத்தில் இருந்து 1999ம் ஆண்டு வரையுமான காலப்பகுதியில் தமீழீழ நடுவர் சங்க நடுவராக எமது வன்னி பெருநிலப்பரப்பு எங்கும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் கழக தலைவராக கடமையாற்றியதுடன் பல்வேறுபட்ட சாதனைகளை நிலைநாட்டிய எமது பயஸ் அவர்கள் இன்றும் எமது கிராம விளையாட்டு போட்டிகளுக்கு நடுவராகவும், எமது விளையாட்டுக்கழக ஆலோசகர்களில் ஒருவராகவும் மைதானத்தில் காணப்படுவது சிறப்பம்சமாகும். தமது ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் தாம் ஊருக்காக, ஊர் வெற்றிக்காக ஒன்றிணைந்து பல வெற்றிக்கனிகளை சுவைத்தாகவும்,எமது இளம் சமூதயம் ஒற்றுமையாகவும், கீழ்ப்படிவுள்ளவர்களாகவும் வளர்ந்து விளையாட்டு உட்பட ஏனைய துறைகளில் மென்மேலும் வளர வேண்டும் என்பதே தமது விருப்பமும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தலையால் பந்தை இடித்து கோலாக மாற்றுவதில் சிறந்த கியோமர் பயஸ்.

விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் உதைபந்தாட்ட வீரன் திரு.ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்கள் 1965/12/18ம் திகதி திரு.திருமதி ஜோண்சன், மரிகிரிதாள் தம்பதிகளின் மகனாக விடத்தல்தீவில் பிறந்தார். 3 சகோதரர்கள் மற்றும் 5 சகோதரிகளுடன் குடும்பத்தில் 3வது ஆண் பிள்ளையான இவர் தனது கல்வியை தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்றுத்தேர்ந்தார்.

தனது பாடசாலை காலத்தில் இருந்தே உதைபந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட திரு.ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்கள் கிரிக்கட், கரப்பந்தாட்டம், உயரம்பாய்தல், நீளம் பாய்தல், 200m ஓட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றி மாந்தை வட்டார போட்டிகளில் சாதனை படைத்து மன்னார் மாவட்ட போட்டிகளில் பங்கேற்று உயரம்பாய்தலில் 3ம் இடத்தையும், நீளம் பாய்தலில் 2ம் இடத்தையும் , 200m ஓட்ட நிகழ்ச்சியில் 1ம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1983ம் ஆண்டு தனது க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சிபெற்று தனது உயர்கல்வியை தொடர மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு சென்றதுடன் 1983ம் ஆண்டில் இருந்து 1985ம் ஆண்டு வரை புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்து தனது திறமையை வெளிக்கொணர்ந்திருந்தார்.

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1984ம் ஆண்டு 1985 ம் ஆண்டுகளில் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் மற்றும் 200m ஓட்ட நிகழ்ச்சிகளில் மாவட்ட மட்டத்தில் 2வது இடங்களை பெற்றிருந்ததுடன் ,புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் Center half ஆக விளையாடி தனது திறமையால் அனைவரினதும் பாராட்டுகளை பெற்றிருந்தார். தனது உதைபந்தாட்ட வரலாற்றில் கல்லூரி நாட்களில் அருட்சகோதரர் மணி , அதிபர் கலாதரன் மற்றும் ஜோண் டிலாசால் போன்ற சக வீரர்களோடு உதைபந்தாட்ட போட்டிகளில் கல்லூரிக்காக பாடசாலை மற்றும் மாவட்ட ரீதியிலான போட்டிகளில் விளையாடியதை நினைவுபடுத்தியிருந்தார். மேலம் திரு.கியோமர் பயஸ் அவர்கள் தனது கல்லூரி காலத்தில் S,X,C மியூசிக் குழுவிலும், பாடகர் குழாமிலும், கல்லூரியன் சாரணர் அணியிலும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது கல்லூரி காலத்தில் இருந்தே எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணியில் சகோதரன் பயஸ் அவர்களோடு இணைந்து 1984ம் ஆண்டில் இருந்து 1996ம் ஆண்டு வரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் தனது தலையால் இடித்து பந்தை கோலாக மாற்றுவதில் வல்லவரான திரு.ஜோண்சன் கியோமர் பயஸ் அவர்கள் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கான தனது முதலாவது உதைபந்தாட்ட போட்டியை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சக வீரர்களான திரு.எலியாஸ், திரு.பயஸ், திரு.ஞானசீலன், திரு.மரியதாஸ், திரு. ஜெயராஜ் (ஏசண்டு) திரு.இசுதோர், திரு. ஜீவானந்தன், திரு.நித்தியானந்தன் மற்றும் அமரர் அருள்வாசகம் ஆகிய வீரர்களோடு களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது மாந்தை மேற்கு பிரதேசங்களான பெரியமடு ,பண்டிவிரிச்சான், மாந்தை,அடம்பன், ஆண்டான்குளம், இலுப்பக்கடவை ,தட்சனாமருதமடு, பாலம்பிட்டி, உட்பட முருங்கன், முழங்காவில், நாச்சிக்குடா, வலைப்பாடு, போன்ற இடங்களில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளுக்கு எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக இடது பக்க முன்கள வீரனாக தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.மேலும் திரு.ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்கள் உதைபந்தாட்ட அணியில் Center half, Center ,forward ஆகிய நிலைகளில் சிறப்பாக விளையாடும் ஒரு சிறந்த வீரனாக வலம்வந்த அந்த நாட்களை எளிதில் மறந்துவிட முடியாது. வட்டக்கண்டலில் நடைபெற்ற அணிக்கு 7பேர் கொண்ட ஒரு போட்டியில் 7 கோல்களை எமது அணிக்காக அடித்திருந்த நிலையில் எனி கோல் அடிப்பதில்லை என்று தலமை சொல்லிய சந்தர்ப்பத்தில் சாதாரணமாக அடித்த பந்து கோலாக மாறியதும். 1987ம் ஆண்டு முருங்கனில் நடைபெற்ற வங்காலைக்கு எதிரான உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் தலையால் இடித்து 1 கோலை பெற்று 1:0 என்ற கோல் அடிப்படையில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி முன்னிலை பெற்றிருந்த வேளையில் ஆட்ட நேரம் முடிந்தும் நடுவர் போட்டியை நிறுத்தாமல் எதிரணிக்கு 3 நிமிடங்கள் கூடுதலாக சந்தர்ப்பத்தை வழங்கி ஆட்டம் சமநிலையில் முடிவுற்று போட்டி கைவிடப்பட்டிருந்ததும்

அடம்பன் மைதானத்தில் அமரர் சகாயராசா அவர்கள் அடித்த மூலை உதையை தலையால் இடித்து வெற்றிக்கோலாக மாற்றியதும் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் கோல் காப்பாளர் திரு.இசுதோர் அவர்கள் அடிக்கப்பட்ட பந்தை பிடித்த நிலையில் மயங்கியிருந்த வேளையில் கையில் பந்தை நழுவ விடாமல் பிடித்தவாறே மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிகழ்வும். மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக ஏசண்டு அவர்கள் அடித்த பந்து கோல் போஸ்ற்றில் கட்டியிருந்த புது நெற்றை மின்னல் வேகத்தில் கிழித்துக்கொண்டு கோலாக மாறியிருந்தமையும் தனது மறக்கமுடியாத அனுபவங்களாக திரு.ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்கள் பகிர்ந்துகொண்டார்.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ தலைவர் அமரர் சிறி சபாரத்தினம் அவர்களது ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டியில் *1* கோலை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணிக்காக பெற்றுக்கடுத்ததுடன் சிறந்த ஆட்ட நாயகனுக்கான கிண்ணத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தனது மேலதிக கற்கை நெறிக்காக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நாட்களில் *1990*ம் ஆண்டு தொடக்கம் *1992* ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பாசையூர் மக்கள் படை உள்ளூர் உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்து தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் ஆசிரிய கலாசாலை காலங்களில் *1999*ம் ஆண்டில் இருந்து *2000*ம் ஆண்டு உதைப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றியுமிருந்துள்ளார். தாங்கள் விளையாடிய காலப்பகுதியில் தம்மோடு சேர்ந்து ஊருக்காக உயிரை கொடுத்து விளையாடிய பலரை நினைவுபடுத்திய திரு.கியோமர் பயஸ் அவர்கள் ,*A,B,C,D,E* என கழகத்தில் அணிகள் பிரிக்கப்பட்ட நிலையில் ஊருக்கு ஒரு கழகம் , ஊர் முழுவதும் ஒரு கழகத்திற்காகவே இருந்தது என்றும் தலைமை சொல்லுவதை கேட்டு அதன்படியே வாழ்ந்த வீரர்களையும் தாம் விளையாட சென்ற இடங்களில் எல்லாம் வெற்றிபெற்று வந்ததையும் நினைவுபடுத்தியிருந்தார்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணிக்காக முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி ஜெயசேகரம் அடிகளார் புலம்பெயர்ந்த தேசத்தில் இருந்து *15* பாதணிகளை முதல் முறையாக வழங்கியிருந்ததாகவும் *Patrick* வகையான அந்த பாதணியை *500/=* கழகத்திற்கு செலுத்தி பெற்று *1996*ம் ஆண்டு வரை விளையாடியதாகவும், தங்களது காலத்தில் அமரர் ய.சலமோன் அவர்கள் உதைபந்தாட்ட போட்டிகளுக்கான வாகன வசதிகளையும், சாப்பாடு போன்ற வசதிகளையும் செய்திருந்தமையையும் மறக்கமுடியாதாக குறிப்பிட்டிருந்தார். திரு.ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்கள் விடத்தல்தவு ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட வீரனாக இருந்த காலத்தில் கழக பொருளாளராகவும் ,விளையாட்டு குழு உறுப்பினராகவும், நிர்வாக சபை உறுப்பினராகவும் கடமையாற்றியிருந்தார். *1996*ம் ஆண்டு வலைப்பாடு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக *B* அணி இறுதி போட்டிக்கு தெரிவாகியிருந்த நிலையில் அரையிறுதி போட்டியில் ஜெயபுரம் அணிக்கெதிராக தலையால் இடித்து கோலை பெற்ற அந்த தருணத்தில் எதிரணி வீரரின் தாக்குதலால் முழங்கால் உபாதைக்கு உள்ளாகியதுடன் தனது உதைபந்தாட்டத்திலிருந்து ஓய்வுபெற்றிருந்தார். திரு.ஜோண்சன் கியோமர் பயஸ் அவர்கள் கடந்த *2021* ம் ஆண்டு மாசி மாதம் *21*ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட *40* வயது உதைபந்தாட்ட விடத்தல்தீவு *FC* அணிக்கான தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

விடத்தல்தீவின் மிருதங்க வித்துவானாக மாஜவித்த அந்தோனிப்பிள்ளை

அந்தகோயிலுக்குரியவர், இந்த கோயிலுக்குரியவர் என்றிருந்த நிலைமாற்றி நான் இரண்டு ஆலயங்களுக்கும் டோலக் வாசித்த பெருமைக்கு காரணமானவர் எமது அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள்.
நாங்கள் அப்பு என்று கூப்பிட்ட எங்கள் அம்மாவின் தந்தை அந்தோனிப்பிள்ளை அவர்கள் *1921*ம் ஆண்டு மாசி மாதம் *1*ம் திகதி திரு.திருமதி செபஸ்ரிக்கு மகனாக பிறந்த எங்கள் அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு, அந்தோனியாப்பிள்ளை என்ற ஒரேயொரு சகோதரி மட்டுமே இருந்தார். *12* பிள்ளைகளை பெற்று பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மருமக்கள் என தனது மனையாள் சிசிலியாவுடன் வாழ்ந்து வந்தார் எமது அப்பு.

அப்பு ஒரு மிருதங்க வித்துவான் விருதங்கம் வாசிப்பதை சரியாக முறையாக தமது சிறியதந்தையான அந்தோனி அவர்களிடம் நாவாந்துறையில் முறையாக கற்றுவர், தபேலா, டோக்கி, மிருதங்கம், டோலக் என ஏகப்பட்ட வாத்திய கருவிகள் அப்புவிடம் இருந்தன அவற்றுக்கு தனித்தனியாக உறை தைச்சு நேர்த்தியான முறையில் பேணிவந்தார்.

விடத்தல்தீவு சங்கீத கோஸ்டியின் மிருதங்க வித்துவானாக கூட்டாளிகளான

வெள்ளசிலுவையர், சீமான்பிள்ளையர், மாசில்லாமணியர், பேதுறுப்பிள்ளையர் போன்ற இசை ஜாம்பவான்களோடு ஒன்றினைந்து விடத்தல்தீவு சங்கீத கோஸ்டியாக ஊரில் வலம்வந்தவர்கள்.
ஊரில் நடைபெறும் கலை நிகழ்வுகள், ஆலய விழாக்கள், நாட்டுக்கூத்துகள், நாடகங்கள், போன்றவற்றுக்கு அப்பு மிருதங்கம் வாசிப்பதை வழக்கமாக கொண்டிருப்பார். அப்புவை போல முறையாக மிருதங்கம் வாசிக்க கற்காவிட்டாலும் அவரது பிள்ளைகளான அன்னதாஸ் மாமா, கீர்த்திமாமா இருவரும் கேள்விஞானத்தோடு மிருதங்கம் வாசிப்பார்கள்.
அப்புக்கு என்னை அதிகம் பிடித்திருந்தது அப்பு அடிக்கடி எமது வீட்டுக்கு வந்துபோவதுண்டு.அஞ்சாறு வெள்ள வேட்டி ,வெள்ள சேட்டு, துவாய், சாறம் அடங்கலாக ஒரு சொப்பின் பேக்கிலதான் அப்பு தன்ர உடுப்ப எங்கட வீட்ட வைத்திருப்பார். மிருதங்கம், தபேலா, டோலக், டோக்கி எல்லாம் எங்கட வீட்டதான் இருக்கும், ஒரு நாள் அப்பு வந்து தன்ர வெள்ள வேட்டிய எடுத்து எனக்கு கட்டிவிட்டு மிருதங்கம் எனக்கு பழக்க ரெடியானார், “ஐயா நேய் அவன சும்மா விடுன படிக்கிறவன குழப்பி விட்டிராதேன, இப்ப இதல்லாம் தேவையில்ல சும்மா விட்டிற்று கிடவுன”என்று அம்மா சொன்னதான் தாமதம் அம்மாவ ஒரு முறையலுடன் அப்பு மேளத்த கட்டி தூக்கி வைச்சிற்று, எனக்கு உடுத்தின வேட்டியையும் அவுட்டு எறிஞ்சிற்று கோவத்துடன் இப்ப உனக்கு தெரியாது இதுட அரும என்று அம்மாவுக்கு சொல்லி நடையக்கட்டுவார்.

ஞாயிற்றுக்கிழம பூசைக்கு மேளம் அடிக்கும் போது அவர் அருகில் போய் இருந்து அவர் மேளம் அடிப்பதை பார்த்துக்கொண்டிருப்பதே எனது வழமையாகும். அவ்வாறே நானும் முறையாக மிருதங்கம் கற்காமல் கேள்விஞானத்தோடு மாந்தை மேற்கு பிரதேசமெங்கிலும், மன்னாரில் படிக்க வந்தும் மேளமடிப்பதை கலையாக கொண்டிருந்தேன். பள்ளிக்குட ஒளிவிழா, மாணமர் மன்றம், ஞாயிற்றுக்கிழம பூச, கரோல், இயக்க நிகழ்ச்சிகள், இப்படியாக பல நிகழ்வுகளுக்கு ஊரில் நான் மேளம் அடிப்பதற்கும், மன்னாரில் படிக்கும் போது கொஸ்ரலில் நடக்கும் பூசைகளுக்கும், செபஸ்ரியார் கோவிலில்நடக்கும் கொலிச் சார்பான ஞாயிற்றுக்கிழம பூசைக்கும் நான் மேளம் அடிப்பதற்கும் அப்புவே காரணகர்த்தாவாக இருந்தார். *1980* களில் முதல் முதலாக ஊரில பள்ளிக்கூட ஒளிவிலாவுக்கு மேளம் அடிச்சு விருந்தினராக வந்திருந்த பள்ளமடு டொக்ரர் எனக்கு பரிசாக தந்த *50* ரூபாய்தான் நான் பெற்ற முதல் பரிசு. ஊரில் இரு ஆலயங்களுக்கும் அவ்வவ் ஆலயம் சார்ந்தவர்களே மேளம் அடிப்பதை பாரம்பரியமாக கொண்டிருந்த அந்த காலத்தில் பாடகர் குழாமில் இருந்ததனால் அந்த வழமையை போக்கி இரண்டு ஆலயங்களுக்கும் நானே மேளம் அடிக்க காரணம் எமது அப்பு தந்த கலையே. புரட்டாதி *8* அடைக்ல மாத கோவில் திருவிழா அதே நாள் சாளம்பனிலும் திருவிழா நானும் அப்புவோடு சாளம்பனுக்கு சென்று வருகை பாட்டிற்கும், மாதா பாட்டிற்கும் மேளம் அடித்த ஞாபகங்கள். ஊரில் அடைக்கல மாதா கோவில் நோவின காலத்தில் பாடப்படும் பிரியத தமகிமை. ...என்று தொடங்கும் பாடலுக்கு முதலில் கஸ்டப்பட்டாலும் அப்பு சொல்லி, சொல்லி தந்து அந்த பாட்டிற்கு முழுமையாக மேளம் அடிக்க பழகிக்கொண்டதுடன் ஒரு முறை தைப்பொங்கல் பூசை சந்தியோகுமையோர் கோயில்ல நடந்த நேரம் அப்பு தபேலா வாசிக்க நான் டோக்கி வாசித்த தரணங்கள் மறக்க முடியாயதவைகளாகும்.

பாடகர் குழாம் பாட்டு பிழையாக படித்தாலோ, தாளம் மாறினாலோ பூச நடக்கும் போதே அங்க வந்து பாடகர் குழாம ஒரு பார்வ பார்ப்பார் அப்பு.
ஒருமுறை வீட்ட எனக்கு தத்திம், தத்திம் தீம் தத்திம் தத்திம், தத்திம் என்று மேளம் வாசிக்க பழக்கி கொடுத்துக்கொண்டிருந்தார் அந்நேரம் பிள்ளையார் கோவில் றோட்டால போன வெள்ள சிலுவை அப்பு சைக்கில கொண்டு வந்து நிப்பாட்டி தொடங்கினார் பாட்டு மேளம் வாசிச்சு கை நொந்தே விட்டது பிள்ளையார் கோவிலுக்கு போறுவந்த பத்மா அக்காவும் அங்க வந்து சேர்ந்தார் பின்ன என்ன சொல்லவா வேணும் அனல் பறந்தது சங்கீத பாட்டு. நான் முறையாக மிருதங்கம் கற்காவிட்டாலும் தாளம் தப்பாமல் சுமாராக எல்லோராலும் விரும்பப்படும் அளவிற்கு கேள்விஞானத்தோடு மேளம் அடித்தேன் என்றால் காரணம் எமது அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் மட்டுமேயாகும். அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் ஊரில் ஆரம்பத்தில் சூழ்ச்சியின் வீழ்ச்சி ,தேவசகாயம்பிள்ளை, உட்பட பல்வேறுபட்ட நாடகங்களுக்கும், நாட்டுக்கூத்துகளுக்கும் மிருதங்கம் வாசித்திருந்தார். பேசாலை ,வங்காலை சாளம்பன், கன்னாட்டி, முருங்கன், யாழ்ப்பாணம், இரணைதீவு, பாப்பாமோட்டை, அடம்பன், மாநாயங்குளம், பரப்புக்கடந்தான், தட்சனாமருதமடு, பாலம்பிட்டி போன்ற பிரதேசங்களில் நிகழ்ந்த நாடகங்கள், நாட்டுக்கூத்துகளுக்கு அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் மிருதங்கம் வாசித்திருந்தார்.

இவ்வாறு மிருதங்க வித்துவானாக பல மேடைகளில் அரங்கம் அதிர வாசித்த வித்தகனாக காணப்பட்ட எமது அப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் *1999* ம்ஆண்டு இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை நலன்புரி நிலையத்தில் வாழ்ந்தபோது *10*ம் திகதி கார்த்திகை மாதம் *1999*ல் இறைபதமடைந்தார்.

சிறந்த கலைஞர்களை உருவாக்கும் சிந்துயன்

நம் வளர்ந்து வரும் ஓவிய கலைஞராக ஸ்டீபன் ரெட்ணராசா ,மரியக்கோன் செப்டா தம்பதியரின் புதல்வனான சிந்துயன் எனும் நவீன் காணப்படுகிறார். இவர் 1999 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 17 ஆம் தேதி விடத்தல் தீவில் பிறந்தார். தனது ஆரம்ப கல்வியை மன் தோட்ட வெளி அ.த.க பாடசாலையிலும்,உயர் கல்வியை எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலத்திலும் பயின்றார் சிறு வயது முதல் ஓவியம் மற்றும் ,கைவினைத் துறையில் ,உருவங்களை உருவாக்குதல் போன்றவற்றில் ஆர்வம் உடையவராக காணப்பட்டார்.

2016 o/l பரீட்சையின் பின் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியான ஓவியப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்ற போதே அவரின் திறமையானது பிறருக்கு புரிந்ததுதொடர்ச்சியாக படங்கள் ஆக்கங்கள் வர்ணங்கள் களிமண் சிலைகள் காகிதங்கள் என பல தேடல்களை கடந்து இப்போது சுவர் ஓவியங்கள் ,சுவர் சிற்பங்கள், சிற்பங்கள் போன்றவற்றை உருவாக்குவதில் தனது திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்

இவர் தன்னைப் பற்றி குறிப்பிடும் போது "இந்த தேடல் எல்லை இல்லாதது அளவுகளால் சொல்ல முடியாது அதாவது ஒரு இசையமைப்பாளர் கவிஞன் சிற்பி ஓவியன் இவர்களைப் போல இந்த தேடல் வரையறை செய்ய முடியாத ஒன்று நான் இருப்பினும் நான் ஒரு ஓவியன். படைப்பாளிகளின் பின்னணி என்னவாக இருக்கும் அவர்களைத் தேட வைத்தது எது எதை தேடி ஒரு படைப்பு உருவாகும் இப்படி பல கேள்விகள் எல்லோருக்கும் இருக்கலாம் எனக்கு இந்த பயணத்தில் எப்பவும் துணையாக இருந்தது அப்பா ,என்னை உருவாக்கியது இந்த சமூகம் குடும்பம் நண்பர்கள் உறவுகள் சூழல், சந்தர்ப்பங்கள் இவற்றோடு சேர்த்து நல்ல சில மனிதர்கள் அவர்களின் வழிகாட்டல். உலகம் வண்ணங்களால் ஆனது ஒளியே அதன் வரையறைகளை தீர்மானித்தது வெள்ளையாய் இருக்கும் பக்கங்கள் சபிக்கப்பட்டவை அவை நிறம் தீட்டப்பட்டே ஆக வேண்டும். நான் ஒரு ஓவியன்." என்று குறிப்பிட்டு இருந்தார்

சிற்பம்கள்

- மரிய மார்க்கிரெட்ரா சிற்பம்
- இரண்டு பறவைகள் – முப்பரிமாண ஓவியம்
- *Lady of Colours* – வண்ணங்களின் அன்னை
- பறவைகள் (அந்த 3 குருவிகள்)
- ஆழ்கடல் (*Meaning of Undersea*) – யாழ்ப்பாணத்தில் அமைந்த ஓவியம்
- வானதுாதர்கள் (*Mickel Veedda* இடத்தின் முன்பக்கம்)

ஓவியத்துறையில் புதிய நுட்பங்களை உள் நுழைத்து தனது ஆக்கங்களை உருவாக்குகின்ற திறனைபெற்றிருக்கின்ற இவர் ஈரச்சுதைமுறையில் சுவரொவியங்களை உருவாக்குகின்றார். காலத்திற்கு ஏற்றது போல காலநிலை காரணிகளால் பாதிப்படையாத *Enaml paint* மற்றும் சீமேந்து கலவை என்பவற்றை பாவித்து தனது சுவர ஓவியங்களை உருவாக்குகின்றார். முதலில் ஓவியங்களுக்கான அடிப்படை வடிவமைப்புகள் கம்பிகளாலும் இரும்பு நெட் ஆலும் உருவாக்கப்படுகிறது பின்பு அவை சீமைத்துக் கொண்டு உருவங்களாக மாற்றப்படுகிறது பின் அதன் சிறிய நுட்பமான வடிவமைப்புகள் செய்யப்பட்டு அதன் பின்னரே ஓவியம் தீட்டுதல் இடம் பெறுகிறது வரையப்படும் ஓவியங்கள் முப்பரிமான தன்மையிலும் காணப்படுகிறது



பல இடங்களில் தனது ஓவியங்களை வரைந்திருக்கிறார். அவற்றுள் மன்னாரில் அமைந்துள்ள நீயோ, மடுத்திருத்தலம், மன்னா செபஸ்தியார் ஆலயம்.தோட்ட வெளி அருட் சகோதரிகள் இல்லம்.யாழ்ப்பாண பிரதான வர்த்தக நிலையம், எனக் கூறிக் கொண்டே செல்லலாம்.

வன்னியின் அர்ப்பணிப்பான கல்வியாளர் திரு. பீற்றர் ராயப்பு

முழுப் பெயர்: திரு. பீற்றர் ராயப்பு, தந்தை: திரு. பீற்றர் , தாய்: திருமதி செபமாலை, பிறந்த நாள்: 02 மார்ச் 1928, இறந்த நாள்: 06 ஆகஸ்ட் 2012

வட இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு எளிமையும் பக்தியும் கொண்ட கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார் திரு. பீற்றர் ராயப்பு. ஆழமான கலாசார மரபுகளும், சமூக நலத்திற்கான உறுதியான நம்பிக்கையும் கொண்ட இப்பிராந்தியத்தின் வளர்ச்சியில், அவர் தனது வாழ்நாளைப் பணியமர்ந்து அர்ப்பணித்தார். சிறுவயதிலிருந்தே கூர்மையான அறிவுத் திறனும், உறுதியான ஒழுக்கநெறியும் கொண்டவர் என அவரை ஊரினரும் மாணவர்களும் நினைவுகூருகின்றனர்.

அவர் தனது கல்வி பயணத்தை விடத்தல்தீவு கத்தோலிக்க மிசனரி பாடசாலையில் ஆரம்பித்தார். இப்பள்ளி அவர் கல்விக்கு வித்திட்டதுடன், அவரது மதநம்பிக்கையும் ஒழுக்கத்தையும் ஆழமாக பதித்ததொரு நிலையாக அமைந்தது. தொடர்ந்து, கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் தனது தொழில்முறை பயிற்சியைப் பெற்றார். இக்கல்லூரி, காலந்தோறும் சிறந்த ஆசிரியர்களை உருவாக்கிய மரியாதைக்குரிய நிறுவனம் எனப் புகழ் பெற்றது.

பயிற்சிக்குப் பின், திரு. ராயப்பு வட மாகாணத்தின் பல பின்தங்கிய மற்றும் தொலைதூரப் பகுதிகளில், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வியளிக்கும் பணியில் ஈடுபட்டார். ஆசிரியராக அவர் பணியாற்றிய பாடசாலைகள் பின்வருமாறு:

- துள்ளுக்குடியிருப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- கட்டையடம்பன் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- மாவிலங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- பாப்பாமோட்டை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- தேவன்பிட்டி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- கருங்கண்டல் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- விடத்தல்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலப்பு பாடசாலை
- சேத்துக்குளம் அரசு தமிழ் கலப்பு பாடசாலை
- விடத்தல்தீவு அரசு தமிழ் கலப்பு பாடசாலை

இப்பள்ளிகளில் அவரது பணிக்காலம் கல்விக்கான மட்டுப்பட்ட வரம்புகளை மீறி, சமூக முழுவதற்கும் அர்ப்பணித்த சேவையாக இருந்தது. அவர் பல பாடசாலைகளில் கல்வியளித்ததோடு, சமூகத்தின் கலாசார தூணாகவும், மாணவர்களின் மனப்பாங்கை வடிவமைக்கும் ஒழுக்கப் பாசறையாகவும் இருந்தார்.

அவரது மென்மையான பேச்சும் நேர்த்தியான நடையும், நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பண்பும், தமிழ் மொழி, இலக்கியம், மற்றும் கத்தோலிக்க மதமும்கூட அவருடைய மனதார அன்புக்குரியவையாக இருந்தன. அதே நேரத்தில், மாணவர்களை ஆளுமைமிக்க, இரக்கமிக்க நபர்களாக வளர்த்தெடுத்ததில் அவர் காணாத சாதனை இல்லை.

அவரின் மாணவர்கள் பலரும் பின்னாளில் ஆசிரியர்கள், மதகுருக்கள், நிர்வாகிகள் மற்றும் சமூகத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். அவரது கற்றல்முறைகளும் மாணவர்கள் மீது வைத்த நம்பிக்கையும், அவரைப் பள்ளி அறைக்குள்ளேயே அல்லாது, வாழ்வுக்கூட உரியவொரு வழிகாட்டியாக நிலைப்படுத்தியது.

ஓய்வுக்குப் பிறகும், திரு. ராயப்பு தனது கிராமத் திருச்சபையும் சமூக வளர்ச்சிச் செயல்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு, தனது அறிவையும் அனுபவங்களையும் இனி வரும் தலைமுறைகளுடன் பகிர்ந்தார்.

2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி திரு. பீற்றர் ராயப்பு இறைவனடி சேர்ந்தார். விடத்தல்தீவு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கல்வி மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக அவர் விட்டுச் சென்ற பாரம்பரியம் இன்று வரை பெருமையுடன் பேசப்படுகிறது. ஒரு பள்ளிக்கூட குருவாகவும், கல்வியின் வலிமையில் நம்பிக்கை கொண்ட ஒரு கிராமிய அறிஞராகவும், அவர் தலைமுறைகளை நெகிழச் செய்த ஓர் தலைவராகவும் மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறார்.*"உறுதியான கற்பித்தலும், பணிவுடன் வழிநடத்தலும் - அதுவே திரு. ராயப்புவின் வாழ்வின் மொழியாக இருந்தது."*

மரிய கிறிஸ்ரின் என்ற முதலாவது அருட்சகோதரி மேரி கொஸ்கா

கதாதோலிக்க இறைவிசுவாசத்தில்தழைத்தோங்கிய பலநூறாண்டு பழமைவாய்ந்த எமது விடத்தலம் பதியில் இறை அழைத்தலுக்கு தன்னை முழுவதுமாக அர்பனித்து எமது மண்ணில் இருந்து முதலாவது துறவியாக தேர்ந்துகொள்ளப்பட்டவர் தான் மரிய கிறிஸ்ரின் என்ற இயற்பெயரை கொண்ட மேரி கொஸ்கா அவர்கள்.

மேரி கொஸ்கா அவர்கள் 1937ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ம் திகதி திரு.திருமதி சுவக்கீன் செபமாலை (முத்தம்மா) ஆகியுருக்கு மகளாக பிறந்து சூசைப்பிள்ளை, பத்திநாதன், இம்மனுவேல், பிரான்சிஸ்,

வரப்பிரகாசம், அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லொஸ், இமல்டா, மரியலில்லி, மரியகொறற்றி, மரியடேய்சி ஆகிய 10 சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவந்தார்.

அருட்சகோதரி மேரி கொஸ்கா அவர்கள் தமது ஆரம்ப கல்வியை எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார் பின்னர் யாழ்ப்பாணம், இளவாலையில் கல்வி கற்று பொதுத்தர சாதாரண தர பரீட்சையில் முதலாவது தரத்திலேயே சித்தியடைந்தார். யாழ்ப்பாண மறைமாவட்ட முன்னாள் ஆயர் அதிவந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை அவர்களினது அறிவுரையாலும் யாழ்/இளவாலை கன்னியர் மடத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களது இறை அழைத்தல் பற்றிய உந்துதலாலும் கன்னியர் மடத்தில் 1954ம் ஆண்டு தொடக்கம் 1956ம் ஆண்டு வரை யாழ்ப்பாண பண்டத்தரிப்பு மடத்தில் இணைந்து வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலையில் தனது ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்தபின்னர் 1960ம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது ஆசிரியபபணியை ஆரம்பித்தார். இளவாலை, பாஷையூர், யாழ்ப்பாணம், பறப்பாங்கண்டல், மன்னார் ஆகிய கன்னியர் மடங்களில் அருட்சகோதரி மேரி கொஸ்கா அவர்கள் பணியாற்றியிருந்தார். 1961ம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதியில் தனது இறை அழைத்தல் அர்பண வாழ்வில் நித்தியவாக்குத்தத்தத்தை யாழ்ப்பாணம் இளவாலையில் *Mother* விசிற்றேசன் அவர்களது முன்னிலையில் நிறைவு செய்தார்.

அருட்சகோதரி மேரி கொஸ்கா அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களிலும், பறப்பாங்கண்டல், வங்காலை, மற்றும், மன்னார் ஆகிய பல்வேறுபட்ட பகுதிகளிலும பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 1960ம் ஆண்டு தொடக்கம் 1964ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலும், பறப்பாங்கண்டல் பகுதியில் 1964ம் ஆண்டில் இருந்து1968ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலும், வங்காலையில் 1968ம் ஆண்டிலும், மன்னாரில் 1969ம் ஆண்டிலும், மீண்டும் யாழ்ப்பாணத்தில் 1970ம் ஆண்டில் இருந்து 1973ம் ஆண்டு வரைக்கும் சிறப்பான பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து 1973ம் ஆண்டு முதலாம் தர அதிபராக நியமனம் பெற்ற அருட்சகோதரி மேரி கொஸ்கா அவர்கள் 1995ம் ஆண்டுவரை அதிபராக பல்வேறுபட்ட பாடசாலைகளில் கடமையாற்றியிருந்தார் குறிப்பாக1973ம் ஆண்டில் இருந்து,1977ம் ஆண்டு,வரை பலாலியிலும், 1978ம் ஆண்டு தொடக்கம் 1984. ம் ஆண்டு வரை இரணைதீவு பாடசாலையிலும், 1985ம் ஆண்டில் இருந்து 1990ம் ஆண்டு வரை கிளிநொச்சி உருத்திர புர பாடசாலையிலும், 1990ம் ஆண்டில் இருந்து 1995ம் ஆண்டு வரை பாஷையூரிலும் அதிபராக சிறப்பான பணியாற்றியிருந்தார்.ஆசிரிய பணியின் பிற்பட்ட காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கல பகுதியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஜெயந்திபுர கிராமத்திலும், யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலும், மன்னார் மற்றும் இரணைமாதாநகர் போன்ற பல்வேறுபட்ட பங்குகளில் தமது பணியினை செவ்வனே ஆற்றிவந்திருந்தார். தனது 87 வது வயதை கடந்த அருட்சகோதரி மேரி கொஸ்கா அவர்கள் நானாட்டான் மடத்தில் வாழ்ந்துவரும் நிலையில் பங்கு பணிகள் பலவற்றை தொடர்கின்றார். குறிப்பாக மறைக்கல்வி கற்பித்தல், குடும்ப சந்திப்புகளை மேற்கொள்ளுதல், அருட்சாதன ஆய்த்தங்களில் ஈடுபடுதல், நோயாளருக்கு நற்கருணை வழங்குதல், பங்குகளில் இயங்கும் பக்தி சபைகளை ஊக்குவித்தல் மற்றும் வழிபாடுகளுக்கு உதவுதல் போன்ற ஆன்மீக பணிகளை ஆற்றிவருகின்றார்.

டினோசா *Mangrove Nursary* கண்டல் தாவரவளர்ப்பில் யோகேஸ்வரன்

விடத்தல்தீவு கிராமத்தின் சுற்றுச்சூழலை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு குறிப்பாக இயற்கை அனர்த்தங்களான கடல் நீர் உட்புகுதல் மழை வெள்ளம், புயல், சூறாவளி போன்றவற்றால் எமது விடத்தல்தீவு கிராமம் உட்பட பல்வேறுபட்ட கடல்சார் கரையோர கிராமங்களின் பாதுகாப்பு அரணாக காணப்படுவதும் இயற்கையாக கிடைத்ததுமான கண்டல் தாவரங்கள், மற்றும் கண்ணா காடுகள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை, கண்ணா மற்றும் கண்டல் தாவரங்கள் மீன் இனங்களின் இனப்பெருக்கத்திற்கும் ,அவற்றின் வளர்ச்சிக்கும் பாரிய பங்கை ஆற்றுவதும் குறிப்பிடத்தக்கதாகும் .

எமது மண்ணின் மைந்தன் அ.யோகேஸ்வரன் அவர்கள் கண்டல் தாவரங்களை பாதுகாத்தல் மற்றும் இயற்கை தாவரங்கள் மட்டில் அவர் கொண்டிருந்த பற்று ,ஆசையின் காரணமாக கண்டல் தாவர உற்பத்தியில் ஈடுபட்டுவருகிறார்.

யோகேஸ்வரன் அவர்கள் 2017ம் ஆண்டு காலப்பகுதியில் தென்பகுதியில் இருந்து வந்து எமது பள்ளமடு சந்திக்கு அருகாமையில் மின்னியெறிஞ்சான்

பாலத்தின் அருகில் ஒரு கட்டடத்தை அமைத்து அந்த பகுதியில் கண்டல் தாவரங்களை வளர்த்து ,மீண்டும் அதனை நடுகை செய்த நிறுவனமான சுதீசா எனப்பட்ட நிறுவனத்தில் பணியாளனாக வேலைசெய்துவந்தார். 2015ம் ஆண்டு தொடக்கப்பட்ட அந்த நிறுவனம் அதன் திட்டங்கள் 2017ம் ஆண்டளவில் முடிவுக்கு வந்திருந்தது. அதன் பிற்பாடு அ.யோகேஸ்வரன் அவர்கள் 2017 / 2018 ம் ஆண்டு காலப்பகுதியில் தனது வீட்டு வளவில் ஆரம்ப தோட்ட செய்கையாக சிறிய அளவில் சுமாராக 300- 400 வரையிலான கண்டல் தாவரங்களை வளர்த்து அதனை விற்பனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அ.யோகேஸ்வரன் தனது *Nursary* க்கு தனது மனைவி டினோசா அவர்களது நாமம் சூட்டி *Dinosha Nursary* என்ற பெயருடன் உரிமையாளராக அ.யோகேஸ்வரன் தனது கண்டல் தாவர வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார். 2019ம் ஆண்டு *VOVCOD* நிறுவனம் முதன் முதலாக யோகேஸ்வரனுடன் இணைந்து 20000 கண்டல் தாவரங்களை வடமாகாணத்தில் வேறெந்த பகுதிகளிலும் இல்லாத கண்டல் தாவர வளர்ப்பின் பிரகாரம் விடத்தல்தீவில் யோகேஸ்வரன் அவர்களின் *Nursary* இல் வளர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .இந்த கண்டல் தாவர வளர்ப்பு பற்றிய ஆலோசனை வளங்கும் வகையில் எமது கிராமத்தின் மேரிநாதன் எடிசன் அவர்கள் யோகேஸ்வரன் அவர்களுக்கு தொடர்பாளனாக 2019 / 2020 ம் ஆண்டுகளில் *Dinosha Nursary* யில் இணைந்தார்.

2016ம் ஆண்டு பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்தபின் 2017ம் ஆண்டு காலப்பகுதியில் வனவிலங்கு திணைக்களத்தில் பணியாற்றிய எடிசன் அவர்கள் 2019/2020ம் ஆண்டுகளில் கண்டல் தாவரங்களை யோகேஸ்வரன் அவர்கள் வளர்த்த கண்டல் தாவரங்களை எவ்வாறாக விற்பனை செய்யலாம், யாருக்கெல்லாம் விற்பனை செய்யலாம் என்பது பற்றிய போதிய விபரங்களை இணைப்பாளராக செயற்பட்டு *VOVCOD* நிறுவனத்திற்கு 20000 கண்டல் தாவரங்களை விற்பனை செய்து அதனால் கிடைக்கப்பெற்ற இலாபத்தினையும், வருமானத்தையும்,யோகேஸ்வரன் அவர்களுக்கு அறியப்படுத்தியதுடன் சூழலுக்கு தாவர வளர்ப்பினால் கிடைக்கும் நன்மைகள் பற்றிய தெளிவையும் எடிசன் அவர்கள் இந்த கண்டல் தாவர வளர்ப்பில் இணைந்து தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2021 ,2022,2023,2024 , மற்றும் 2025 ம் ஆண்டு வரை *VOVCOD* நிறுவனம் உட்பட வெறெந்த நிறுவனங்களோடும் நேரடி தொடர்புகளை பேணாதவர்களாக தாங்களாகவே *Mangrove Nursary* யினர் கண்டல் தாவரங்களை வளர்த்து அவற்றை விற்பனை செய்வது சம்மந்தமாகவும், நிறுவனங்களோடு தொடர்பை ஏற்படுத்தி அதிகளவு விற்பனை கோரிக்கைகளை பெறுவதற்காகவும் ,யோகேஸ்வரன் அவர்கள் தனது கண்டல் தாவர வளர்ப்பிற்கு ஒரு ஆலோசகராக எடிசன் அவர்களை நியமித்திருந்தார். அதன் அடிப்படையில் 2021ம் ஆண்டு 5000 கண்டல் தாவரங்களையும், 2022ம் ஆண்டு சுமார் 7000/ 8000 தாவரங்களையும், 2025ம் ஆண்டு சமகாலத்தில் 15000 தொடக்கம் 18000 கண்டல் தாவரங்களை வளர்த்து அவற்றுக்கான விற்பனை கோரல்களை பெற்று அவற்றை விற்பனை செய்து இலாபத்தை ஈட்டி வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் கண்டல் தாவர வளர்ப்பு மற்றும் விற்பனையில் அசுர வளர்ச்சியை அடைந்துள்ளார்கள்.

2017 ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்டல் வளர்ப்பு *Nursary* யில் வேறு ஒரு நிறுவனத்தின் மூலம் 2019 ம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அதிகளவான தாவர விற்பனை கோரல் மூலமாக பெற்ற பின்னரான காலப்பகுதியில் படிப்படியாக வளர்ந்து 2025 இவ் சமகாலத்தில் *Dinosha Nursary* தாமாகவே கண்டல் தாவர வளர்ப்பில் அதிகளவு ஈடுபாடுடன் உழைத்து அவற்றை விற்பனை செய்தும் அதனால் வருவாயை பெற்றுக்கொள்ளும் வகையில் வளர்ந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

யோகேஸ்வரன் அவர்களது சொந்த நிறுவனமான இந்த கண்டல் தாவர *Mangrove Nursary* தமது கண்டல் தாவர விற்பனையால் தமக்கு கிடைக்கும் இலாபத்தில் பல்வேறுபட்ட சமூக பணிகளை மேற்கொள்கின்றது, அந்த வகையில் வருமானத்தில் 10% இலாபத்தை சமூக சேவைகளுக்கு பயன்படுத்தி குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கான உதவி அதிலும் பாப்பாமோட்டை பாடசாலையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியும், நோயாளர்களுக்கு சிறிய அளவிலான நிதியுதவிகளை வழங்கியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கண்டல் தாவர வளர்ப்பு மற்றும் விற்பனையானது வருமானத்தை ஈட்டுவது மட்டுமல்லாமல் எமது சுற்றுப்புற சூழல் மட்டில் யோகேஸ்வரன் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் ,அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டையும் எடுத்தியம்பியுள்ளது .

எடிசன் அவர்கள் யோகேஸ்வரனுக்கு ஆலோசகராகவும், அறிவுறுத்தல்களை வழங்குபவராகவும் அவ்வேலைகளுக்கான சம்பளத்தை பெறும் உத்தியோகஸ்தராக காணப்படுகிறார். வேலைவாய்ப்பு ஆண்களுக்கு அதிகளவில் காணப்படுகிறது. பாப்பாமோட்டை, சன்னார், விடத்தல்தீவு போன்ற கிராமங்களில் சமகாலங்களில் இவ் *Nursary*, மூலமாக வேலைவாய்ப்பு சுமார் 15 பேருக்கு வழங்கப்படும் நிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

2023ம் ஆண்டு மற்றும் 2024ம் ஆண்டுகளில் அரசதிணைக்களங்கள் உதாரணமாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் சுமாராக 5000 கண்டல் தாவரங்களையும் ,MARR, WEEKEND, HDO ,HELLO, எனப்படும் Trust Mines நிறுவனம், மற்றும் அரச அரசசார்பற்ற திணைக்களங்கள் என்பன வடமாகாணத்தில் கண்டல் தாவரங்கள் தமக்கு தேவைப்படுமிடத்து யோகேஸ்வரன் அவர்களது Dinosha Nursary யில் மட்டுமே கொள்வனவு செய்யவேண்டிய நிலை தற்போதைய நிலையில் காணப்படுகிறது. கண்டல் தாவர வளர்ப்பில் ஊர்மக்களால் எவ்விதமான தடைகளோ, தடங்கல்களோ ஏற்படுவதில்லை என்பதுடன் மனித செயற்பாட்டால் எவ்விதமான இடையூறுகளும் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக இயற்கையாலும், இயற்கை அனர்த்தத்தாலுமே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மழை காலத்தில் கிழக்கில் இருந்தும் மின்னியெறிஞ்சான் ஆற்றில் இருந்தம் எமது ஊருக்குள் உட்புகும் மழை வெள்ளம், கடல்நீர் மூலமாக கண்டல் தாவர வளர்ப்பில் பாதிப்பு ஏற்படுத்தப்படுகிறது. மழை காலத்தில் கால்நடைகளின் தாக்கம் அதிகரித்து தாவர வளர்ப்பு நாசப்படுத்தப்பட்ட நிலையும் காணப்பட்டது.

எமது கண்டல் தாவர வளர்ப்பில் அதிகளவானவை எம்மிடம் இருந்து பெறப்பட்ட எம்மால் விற்பனை செய்யப்பட்ட கண்டல் தாவரங்களாக எமது மன்னார் பிரதான பாலத்தடியில் நடப்பட்டவையாக காணப்படுகிறது. சுமார் 7000/ 8000 கண்டல் தாவரங்கள் இவ் 2025ம் ஆண்டு சமகாலத்தில் எமது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு நடப்பட்டவையாகும். கள்ளியடி, இலுப்பைக்கடவை, பூநகரி வாடியடி பகுதி, கிளாளி, கௌதாரிமுனை,போன்ற பகுதிகளில் தாவரங்கள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தவிர வேறு நிறுவனங்களும் கண்டல் தாவரங்களை தாமாகவே Dinosha Nursary, யில் இருந்து கொள்வனவு செய்து அவற்றை நட்டியிருந்தார்கள். அத்துடன் இவ்வருடத்தில் திருகோணமலை ரோக்கியோ சீமெந் நிறுவனம் 5000 கண்டல் தாவரங்களை நடுவதற்கான பணத்தை நேரடியாக Dinosha Nursary க்கு வழங்கி அதனை Dinosha Nursary நிறுவனம் நட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த காலங்களில் நிறுவனங்கள் தாவரங்களை நிறுவனங்கள் அல்லது கம்பனிகள் கொள்வனவு செய்யும் சுமாராக 1000,தாவரங்கள், 2500,தாவரங்கள், 5000 தாவரங்கள் இவ்வாறு பாரியளவில் கொள்வனவு நடைபெற்றது. கண்டல் தாவர வளர்ப்பில் ஈடுபடும் யோகேஸ்வரன் மற்றும் அவரது குடும்பம் இயல்கையை நேசித்து பராமரித்து வளர்க்கும் எண்ணத்தில் விலைமதிக்கமுடியாதவர்களே

வரலாற்றில் வாழும் அகுஸ்தீன் யாக்கோப்பு அவர்கள்

விடத்தல்தீவு வரலாற்றில் பெயர் சொல்லப்படும் வகையில் ஊருக்காக ,பொது நலனுக்காக பல சமூகப்பணிகளை, சேவைகளை ஆற்றியவர்களுள் அமரர் அகுஸ்தீன் யாக்கோப்பு அவர்களும் முக்கிய பங்கைவகிக்கின்றார்.



அமரர் யாக்கோப்பு அவர்கள் 20 ம் திகதி ஆனி மாதம் 1929ம் ஆண்டு அல்லைப்பிட்டியில் பிறந்து சவேரியான் , சீமான், இசைக்கியேல், யுவானி,உலுவீஸ், ஞானசோதி, ஞானசீலி, ஞானமுத்து ஆகிய சகோதர சகோதரிகளுடன் உயிரிலும் மேலான வகையில் மதிப்பளிக்கும் கடற்றொழிலை தெய்வமாக மதித்தவராக உழைப்பால் உயர்ந்து விடத்தல்தீவில் சிறப்புற வாழ்ந்துவந்தார்.

எமது கிராமத்தின் விக்றோறியா தவமணி அவர்களை திருமணம் செய்து சுசீலன், சிலுவைரெட்ணம், ரெட்ணசீலி, மரியசீலி, அருட்சகோ ஜெயமலர், மரியகிறிஸ்ரின், அடைக்கலசீலி ,புகழ்சீலன் மற்றும் சற்குணசீலன் ஆகிய பிள்ளைகளுடன் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த காலங்கள் பல. தமது சீவனோபாயமாக சீர்மிகு விடத்தலூரில் கடற்றொழிலையும், விவசாயத்தையும் ஒருங்கே ஈடுபாடுடன் செய்தவராக தேர்ச்சி பெற்ற செல்வந்தராக வாழ்ந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. இயல்பிலேயே யாக்கோப்பு அவர்கள் ஒரு சமூக சேவையாளராதலால் எமது சமூதாயத்தில் பலதரப்பட்ட சமூக முன்னேற்ற பணிகளில் தம்மை ஈடுபடுத்தியிருந்தார். எமது ஊரில் சமாதான நீதவானாக பொறுப்பேற்றவர் என்ற வகையில் எமது கிராமத்தின் நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

400 வருடங்கள் பழமை வாய்ந்த எமது கத்தோலிக்க இறைவிசுவாசத்திற்கு வேரூன்ற காரணமாக அமையப்பெற்றுள்ள புனித சந்தியோகுமையோர் ஆலயத்தின் முன்னாள் தலைவராக தலமைதாங்கிய அமரர் யாக்கோப்பு அவர்கள் ஆலயம் சார்ந்த பல பணிகளை முன்னின்று நடத்தியதுடன் யாக்கோப்பு அவர்களுடைய காலத்தில் எமது சந்தியோகுமையோர் சிறிய ஆரம்ப கால ஆலயம் உடைக்கப்பட்டு புதிய பிரமாண்டமாக கட்டப்பட ஆலயத்தின் அத்திவாரம் இடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப காலத்தில் எமது ஊருக்குள்ள வரும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்துகள் எமது கடைத்தெரு சந்தியோடு திரும்பும் நிலையில் அவற்றை ஊருக்குள் வர வழிவகைகளை செய்து மக்களது இயல்புவாழ்க்கைக்கு உறுதுணையாக செயற்பட்டவர் அமரர் யாக்கோப்பு அவர்கள்.
கடற்றொழிலில் பிரபல மீன் வியாபாரியாக விளங்கிய யாக்கோப்பு அவர்கள் சங்கு ,அட்டை தொழிலையும் மேற்கொண்ட வராக மீன் சிப்பங்களை கொழும்புக்கு அனுப்பும் வியாபாரத்தில் ஈடுபட்டார். உள்ளூரில் சில பாடகர்களை,கலைஞர்களை கொண்டு கச்சேரிகளை வைத்து கலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். இவ்வாறு எமது ஊரின் மீது அக்கறையுடன் செயற்பட்டவராக ஊரின் பல்வேறுபட்ட தேவைகளிலும், ஊருக்கான அவசியத்திலும் தன்னாலான பல நன்மைகளை ஊர் அடைய காரணகர்த்தாவாக வாழ்ந்துவந்த யாக்கோப்பு அவர்கள் 29ம் திகதி வைகாசி மாதம் 1986ம் ஆண்டு இறைபதமடைந்தார்.

பள்ளமடு குளத்தில் சைக்கிள் ஓடிய அகவை நூறு கண்ட எமது சுயம்புச்செல்வர்.

கண்டுகொள்ளப்படாதவர் வரிசையில் கண்ணில் பட்ட பன்முகப்பட்ட திறமைகளின் பங்காளன் தன்னம்பிக்கையை மூலதனமாக கொண்டவர். ஆபரணத் தொழில் தொடங்கி ஆயுர்வேதம், அச்சுத்திறன் தச்சுத்திறன் தகட்டுத்திறன், அத்தனைக்கும் அடிமுடி கண்டவர், தண்ணீரில் சைக்கிள் ஒட்டிய சாகசம் செய்து தனது மனைவியைக் கூட ஏற்றி நிறைமாதப் பள்ளமடுக்குளத்தின் மேல் வலம் வந்தவர். எந்தவோர் இயந்திரமும் இயங்காத காலம் எண்ணி 60 வருடங்களுக்கு முன் நுண்ணிய பொறியியலாளர்களுக்கும் தண்ணி காட்டியவர்.



பாஸ்கரதாஸ் பத்தர் அவர்கள் எமது பள்ளமடுகுளத்தில் தண்ணீர் மேல் சைக்கிள் ஓடியசாதனை இன்றுவரை எமது மக்களால் பேசப்பட்டு வருவதுடன் 1982 ம் ஆண்டு காலப்பகுதியில் திருக்கேதீஸ்வர ஆலய வரலாற்றுப்பாக்கள் என்ற நூலை வெளியிட்டதுடன் கவிதைகள் புனைந்து, ஓவியங்களை வரையும் ஆற்றல்களை கொண்டிருந்த பத்தர் ஒரு விஷக்கடி வைத்தியர் என்பதில் பெருமையே.

பாகவதர் தியாகராஜரை வென்ற குரல், பட்டினத்தார் பாடல் படித்ததும், மனனமாகும். பாம்புக்கடி, பூச்சிக்கடி, பூரான்கடி, பத்தர் வீடு. பல்லுவலி, முள்ளுவலி, முழங்கால்வலி வழிகாட்டி பத்திரிகையில் கூட பக்கம் பக்கமாய் செய்தி வந்தது எத்திசையிலும் காசு பணம் வரவே இல்லை. பாரதிக்கு வந்த வறுமை, பாஸ்கரதாஸ் பத்தரையும் விடவில்லை. புற்று நோய் வந்து தொண்டையைப் புரட்டியது. சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன், அவர் தனியாகவே தலைநகர் சென்று சிகிச்சை பெற்றார், தன்னம்பிக்கை அவரை தலை காத்தது.

அன்புக்கும் அரவணைப்புக்கும் அவர் மனைவி அக்கம் பக்கம் குழந்தைகள் அவர் பராமரிப்பில் தூங்கி வழியாத பல தொட்டில்கள் அவர் திண்ணையில் பார்வையற்றவர், பார்க்கச் சகிக்காத நோயுற்றோர், தேர்ந்த தாதியாய் நாம் பார்த்த பத்தரம்மா மானுட தர்மம் பேணியவர். மகப்பேறு காணவில்லை மணமுடித்து அகவை இருபது கடந்தது மலடி என பெயர் சொல்ல மாயவனுக்கோ மனமில்லை மகப்பேறு சுகப்பேறானது. ஜீவகாருண்யம் ஜீவன் கண்டது. முன்பே ஜீவஜோதி பேர் கொண்ட தொழிலகம் பின்பு அப்பெயர் கொண்ட மகவுதனை ஈன்றெடுத்தார். இறைக் கொடையாய் கனகஜோதி என மறுமகவும் கண்டார்.

ஓமத்திராவகம் வடித்தார் ஒவ்வொரு கடைக்கும் கொடுத்தார். ஜீவஜோதி ஓமத்திராவகம் ஓடித் திரிந்தது காசுக்கு பத்தரப்பாவும் ஓடித் திரிந்தார். கால் காசு கையில் வராது வந்த காசை வடிவமைப்பார். பிறிதொரு இயந்திரமாய் தைக்காத இயந்திரம் தைக்கும், பாடாத வானொலி பாடும் ,வெட்டாத கத்தி வெட்டும் விழுந்த சுவர் எழும்பும், திட்டாத நாளில்லை. அவர் மனைவிக்கு தெரியாத வேலை என்று எதுவும் இல்லை.

கேதீச்சரம் பதியில் கையெழுத்துப் பிரதியாய் கவிதையின் நூல் வெளியிட்டார். கௌரி அம்பாளும் கூடவே ஆறு பேரும். பாஸ்கரதாஸ் பத்தர் அவர்கள் கலைஞர்களையும், மேடை பேச்சாளர்களையும் ஊக்கப்படுத்துவதில் வல்லவராக திகழ்ந்தார் .பலருக்கு வழிகாட்டியாக விளங்கி ஆசீரும் கொடுத்திருந்தார். ஈற்றில் இந்தியா தமிழ்நாடு ராமேஸ்வரம் பதியில் நீளதுயில் கொண்டார்.
பாஸ்கரதாஸ் பத்தர் அவர்கள் அகவை நூறு கடந்தும் பெருமை கொள் பிறப்பினராய் இன்னும் நினைவில் உள்ளதுடன் அவர் ஓர் சுயம்பு சித்தர் என்பதில் பெருமையே.

இலங்கை காவல்துறையில் பணியாற்றிய சிலுவைராசா பொனிப்பாஸ்

சென் ஜேம்ஸ் றோட் விடத்தல்தீவை முகவரியாக கொண்ட சிலுவைராசா பொனிப்பாஸ் அவர்கள் 1956 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 05 ம் திகதி விடத்தல்தீவில் பிறந்து 1982ம் ஆண்டு வரை வசித்து தற்போது -496/4 சன்சிட்டி கார்டன், ஹாலிவாலா, காலி என்ற இடத்தில் வாழ்ந்துவருகிறார்.

பொனிப்பாஸ் அவர்கள் தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்று 1973 ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தார். தனது உயர்கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கற்று பாடசாலை உதைபந்தாட்டம் மற்றும் தடகள அணியின் உறுப்பினராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1982 ஆம் ஆண்டு இலங்கை காவல் துறையில் இணைந்த பொனிப்பாஸ் அவர்கள் 20.04.1982 அன்று காவல் துறையின் உறுப்பினராகப் நியமனம் பெற்றவராக காவல்துறையில் பணியாற்றி . 05.10.2016 அன்று காவல் சார்ஜென்டாகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். தனது சிறவயதில் இருந்தே உதைபந்தாட்டத்தில் ஆர்வம் கொண்டிருந்த பொனிப்பாஸ் அவர்கள் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினராகவும் விளையாட்டு வீரனாகவும் 1980 ம் ஆண்டு வரை இருந்துள்ளார்.

காவல்துறையில் பணியாற்றிய காலப்பகுதிகளில் பொனிப்பாஸ் அவர்கள் காவல்துறை தலைமையகத்தின் மற்றும் டிவிஷனல் கால்பந்து அணியின் உறுப்பினராகவும் , விளையாட்டு வீராகவும், பயிற்றுவிப்பாளராகவும் மற்றும் முகாமையாளராகவும் 2016ம் ஆண்டு வரை பதவிவகித்திருந்தார் .

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் (FFSL) உதைபந்தாட்ட நடுவராக 1994 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பொனிப்பாஸ் அவர்கள் 2020 ம் ஆண்டு வரை நடுவராகப் பணியாற்றியதுடன் .1998 ம் வருடத்தில் FIFA கோகோ கோலா நடுவர்கள் மேம்பாட்டுப் பாடநெறியை வெற்றிகரமாக செய்துமுடித்திருந்தார். அத்துடன் நடுவர்களது பயிற்றுவிப்பாளர் பாடநெறியை 2007 ம் ஆண்டிலும் 2010 ம் ஆண்டிலும் வெற்றிகரமாக செய்சு முடித்திருந்தார் பொனிப்பாஸ் அவர்கள்.

அதன் பின்னர் AFC “C” உரிமப் பாடநெறியை 2000 ம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவுசெய்ததுடன், தென் மாகாணப் பாடசாலையில் றகர் விளையாட்டு இளங்கலை பயிற்றுவிப்பாளராக 1993 ம் ஆண்டு தொடக்கம் 1997 ம் ஆண்டு வரை நியமிக்கப்பட்ட பொனிப்பாஸ் அவர்கள் . 1993 ம் ஆண்டு தொடக்கம் 1995 ம் ஆண்டு வரை பிரதேச ரக்கர் அணிக்காக விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

பாக்கிற இடமெல்லாம் கண்ணில் புலப்படும் அரியத்தா..



அரியத்தா என்று நாமும் எமது ஊரவர்களும் அழைக்கும் பிரகாசி என்ற இயற்பெயரை கொண்டு திரு.திருமதி கபிரியேல், சலோமை ஆகியோருக்கு மகளாக 1917ம் ஆண்டு பங்குனி மாதம் 5ம் திகதி விடத்தல்தீவில் பிறந்தார் அரியத்தா.

மருத்துவமும், மருந்தும் பெருமளவில் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னரான எமது ஊரில் சுமார் 100க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஆஸ்பத்திரிக்கு செல்லாமல் வீட்டிலேயே தாய்மார்கள் சுகப்பிரசமாக பிரசவிக்க மகப்பேற்றுப்பணியை திறம்பட ஆற்றியபெருமைக்குரியவர் எமது அரியத்தா என்றால் அது மிகையல்ல.

எமது விடத்தல்தீவின் முதலாவது தாதியாகவும், மருத்துவிச்சியாகவும் அரச நியமனம் பெற்று தனது நியமனத்தின் முதலாவது பணியை K K S எனப்படும் யாழ்ப்பாண காங்கேசந்துறை வைத்தியசாலையில் சிறப்பாக ஆற்றியுள்ளார். தொடர்ந்து நெடுந்தீவிலும், மண்டைதீவிலும், தலைமன்னாரிலும், பேசாலையிலும் அதன் பின்னரான காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு ஆஸ்பத்திரியிலும் மருத்துவிச்சியாக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரியத்தா அவர்கள் மகப்பேற்று பணியுடன் ஊரில் சில நற்பணிகளையும் , உதவிகளையும், நன்கொடைகளையும் வழங்கியுள்ளார். குறிப்பாக எமது விடத்தல்தீவு புனித அடைக்கலமாத ஆலய மணிக்கூட்டு கோபுர கட்டுமான பணிக்காக நன்கொடைகளை வழங்கி ஆலயத்தின் மணியையும் பெற்றுக்கொடுத்திருந்தார்.

1935ம் ஆண்டு அந்தோனிப்பிள்ளை அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்த அரியத்தா அவர்களுக்கு சூசை ,தாவீது ,அந்தோனிப்பிள்ளை என 3 சகோதரர்கள் இருப்பதுடன் உத்தமசீலி, யெயசீலி, தியாகு, சிலுவைராசா,மற்றும் பொமிக்கா என 5 பிள்ளைகளை அரியத்தா பெற்றிருந்தார். விடத்தல்தீவில் தமது வேலை காலங்களில் இறப்பு வீடுகளுக்கு உதவி செய்வதைவழக்கமாக கொண்டிருந்ததுடன் எமது அயல் கிராம ங்களான கட்டாடிவயல், கள்ளியடி, கூராய், பெரிய மடு ஆகிய இடங்களுக்கு சென்று அங்கே இரவு ,பகல் பாராமல் தனது சேவைகளை ஆற்றிவந்தார்.
இவ்வாறு எமது ஊரில் தாய்,சேய் நலனில் அக்கறையுடன் அநேக சுகப்பிரசவ மகப்பேற்று சேவைகளையும், தொண்டுப்பணிகளையும் ஆற்றிய அரியத்தா எனப்படும் பிரகாசி அவர்கள் 21/8/2007ம் ஆண்டு இறைபதமடைந்தார்.

காவல்துறையில் சட்டம் ஒழுங்குகளை பேணிய எமது பாலு அவர்கள்

பாலு என்று எம்மவர்களாலும் சிறில் Sir என எட்டுத்திக்கெங்கும் அறியப்படட்டவரான டொண் மிகேல் சிறில் என்ற இயற்பெயருடன் 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் திகதி ராஜநாயகம் சிறில் (சிறில் மாஸ்ரர்) லூசியா ஆகியோரின் மகனாக பிறந்து 2 சகோதரர்கள் ,மற்றும் 2 சகோதரிகளுடன் வாழ்ந்தார்.

பாலு அவர்கள் தனது ஆரம்ப கல்வியை நல்லாயன் ஆரம்ப பாடசாலையிலும், உயர் கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றதுடன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் சாரணர் இயக்கத்தலும், பாடசாலை இராணுவ அணியிலும், பாடசாலையின் Advanture club என்ற பொருள்பட ஒரு அமைப்பிலும், அங்கம் வகித்து 800m ,400m மற்றும் முப்பாச்சல் போட்டி நிகழ்ச்சிகளில் பாடசாலை மற்றும் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1979/1980 களில் சங்கீத இசைக்குழுவில் இணைந்து பாடசாலையில் இசை கச்சேரியை நடாத்தியிருந்தார். இசைத்துறையில் ஈடுபாடுடைய பாலு அவர்கள் ,பாடசாலை Band இசை குழுவிலும் இணைந்திருந்ததுடன் புல்லாங்குழல் வாசித்தல்,கிற்றார் வாசித்தல் ஆகியவற்றில் சிறந்துவிளங்கியதோடு ,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான புல்லாங்குழல் வாசித்தல் போட்டியில் முதலிடத்தை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் பின்கள வீரராக பிரகாசித்த பாலு அவர்கள் 1982ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிங்கப்பூர் கப்பல் கம்பனியில் பணிபுரிந்தார். அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் 1985ம் ஆண்டில் இருந்து 1987 ம் ஆண்டு வரை தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார் பாலு அவர்கள்.

விடத்தல்தீவிலும், மன்னாரிலும் பாடகர் குழாமில் இணைந்திருந்த பாலு அவர்கள் திருப்பலி மற்றும் ஏனைய நிகழ்வுகளில் கிற்றார் இசைக்கருவியை இசைத்திருந்தமை மறப்பதற்கல்ல. அதன் பிற்பாடு 1988ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதி இலங்கை பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் பரிசோதகராக நியமனம் பெற்று ஹட்டனில் பணியாற்றினார். தொடர்ந்து வெள்ளவத்த, ஹட்டான, மாலியகொட , அம்பாறை, காலி, மன்னார், நீர்கொழும்பு, ஆகிய பகுதிகளில் பணியாற்றிய பாலு அவர்கள் பேசாலை பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு பெற்று பேசாலையில் பணியாற்றியதுடன் பொல்கலாவ, தலைமன்னார், ஆகிய பகுதிகளில் பொறுப்பதிகாரியாக சிறப்பான பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1988ம் ஆண்டு தொடக்கம் 1996ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு ஹட்டான பொலிஸ் பயிற்சி கல்லூரியில் சட்டம், ஒழுங்கு மற்றும் அணிவகுப்பு போன்றவற்றின் பயிற்சிகளை வழங்கும் பயிற்றுவிப்பாளராக ஒரு தமிழனாக பாலு அவர்கள் தனது திறமையை நிலைநாட்டியிருந்ததுடன், 1989ம் ஆண்டில் மிகச்சிறந்த பயிற்றுவிப்பாளர் என்ற விருதையும் பெற்றுக்கொண்டு பொலிஸ் திணைக்கள விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியிருந்தார் எமது பாலு அவர்கள்.பாலு அவர்கள் 1987ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி பவளமலர் அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து இரு பிள்ளைகளுடன் வாழ்ந்துவருகிறார். மும்மொழிகளிலும் புலமை பெற்று விளங்கும் பாலு அவர்கள் நாட்டில் நடைபெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதலால் பொல்கால பிரதேசத்தில் ஏற்பட்ட முஸ்லிம், சிங்கள முறுகல் நிலையை முடிவுக்கு கொண்டுவர அரும்பாடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போதைவஸ்து தடுப்பு பிரிவில் கூடுதலான அக்கறையுடன் தீவிரமாக செயற்பட்ட பாலு அவர்கள் போதைவஸ்து சம்மந்தமாக பொலிஸ் பொதுமக்கள் தொடர்பை பேணி சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சிகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தார். நாட்டில் அதிகரித்துவரும் கஞ்சா, ஹரோயின், மற்றும் ஐஸ் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய பாலு அவர்கள் பொலிஸ்மா அதிபரால் கௌரவிக்கப்பட்டு பாராட்டையும் பெற்றுள்ளார்.

நீர்கொழும்பு பகுதியில் பொலிஸ் திணைக்கள பணியாற்றிய காலப்பகுதிகளில் சுற்றிலா பயணிகளுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களை தீர்த்ததுடன் அவர்களுக்கெதிராக நடைபெறும் பெருமளவான குற்றச்செயல்களை தடுத்துநிறுத்தியுள்ளார்.இவ்வாறு காவல்துறையில் சிறப்பான பணியாற்றிய பாலு அவர்கள் ஆடு ,கோழி வளர்ப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்.

அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் , அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார்.

மன்னார் திருச்சபையின் முக்கிய கத்தோலிக்க திருமறையில் தழைத்தோங்கி இறைவிசுவாசத்தில் ஆழமான பற்றுக்கொண்ட கிராமங்களில் எமது விடத்தல்தீவு கிராமமும் அதன் மக்களும் உள்ளடக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

அதன் அடிப்படையில் எமது கிராமத்தினதும் மக்களினதும் கத்தோலிக்க விசுவாசத்தை தழைத்தோங்க செய்து, ஆன்மீக பணிகளையும், பொதுப்பணிகளையும் உரியமுறையில் செவ்வனே செய்து கத்தோலிக்கரான எமது மக்களை நேரிய வழியில் நல்வழிப்படுத்தியவர்கள், எமக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து எமது கிராமத்தில் பணி செய்த கத்தோலிக்க அருட்பணியாளர்களான பங்குத்தந்தையர்கள் என்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் எமது விடத்தல்தீவு கிராமத்தில் பல்வேறுபட்ட சமூதாய மற்றும் ஆன்மீக பணிகளை மேற்கொண்டு ஒரே சமூகமான எம்மத்தியில் இருந்த பிளவுபட்ட சிந்தனைகளை தகர்த்தெறிந்து ,விரோதங்களையும், மனக்கசப்புகளையும், பிரிவினைவாத செயல்பாடுகளையும் அகற்றி மனதளவிலும், உடலளவிலும் பிரிந்திருந்த எம்மவர்களை ஒற்றுமைப்படுத்தி ஐக்கிய ப்படுத்தி வாழவைத்த பங்குத்தந்தையர்களாக அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் அவர்களும், அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் அவர்களும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை சிறப்பானதாகும்.

அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார்.

1973ம் ஆண்டு குருத்துவ அருட்பொழிவு செய்யப்பட்டு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றிய அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் எமது விடத்தல்தீவு பங்கிற்கு பங்குத்தந்தையாக பணியாற்ற நியமனம் செய்யப்பட்டு எமது சமூகத்தில் நிலவிவந்த பிரிவினைவாத மனோநிலையை இளைஞர் யுவதிகளிடையே நீக்க அரும்பாடுபட்டு எம்மை ஐக்கியப்படுத்திய ஐக்கியத்தின் தந்தையாக காணப்பட்டார். ஒரே சமூகமாக இருந்தாலும் எமது ஊரில் அந்நாட்களில் வட்டாரங்களை மையப்படுத்தி எமக்குள்ளே காணப்பட்ட பிரிவினைவாதங்களால் தழைத்தோங்கிய விளையாட்டுக்கழகங்கள் இளைஞர் யுவதிகளிடையே காணப்பட்ட நிலையில் அவைகளை களைந்து ஒன்றுபட்ட ஊராக மக்களையும் இளைஞர், யுவதிகளையும் ஒன்றிணைத்து விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்ற நாமத்தை சூட்டி இரு கைகள் கைலாகு கொடுப்பதை கழகத்தின் சின்னமாக ஏற்படுத்திய பெருமை முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் அவர்களையே சாரும்.

அவ் ஆரம்ப நாட்களில் இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து விளையாட்டின் மூலம் பரஸ்பரத்தையும், அன்பையும், ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நேசிக்கும் பண்பையும் வளர்த்துக்கொள்ளும் நோக்குடன் மே தின விளையாட்டு நிகழ்வுகளை நடாத்தி அந்நாட்களில் இளைஞராக இருந்த திரு.கி.கில்லறி அவர்களையும், திருமதி மேரிராணி அவர்களையும் ஒலிம்பிக் *Tourch* ஏந்தியவாறு ஊரை வலம்வலர வைத்து எம்மை ஒன்றிணைத்தது இன்றும் எமது சமூகத்தினிடையே பேசும்பொருளாக காணப்படுகிறது.

அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார்.

எமது விடத்தல்தீவு பங்குத்தந்தையர்களாக இருந்து பணியாற்றிய ஆன்மீக அருட்பணியாளர்களுள் அருட்பணி வின்சன் பற்றிக் அ.ம.தி அடிகளார் விடத்தல்தீவு வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய வரலாற்று நாயகனாக மக்கள் மனதில் நீங்காத இடத்தை பிடித்தவர் என்றால் அது மிகையாகாது. தனது ஆரம்ப பணியாக குருக்களை குருத்துவ உருவாக்கத்திற்கு தயார்படுத்தல் பணியையும், விரிவுரையாளராக பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிவந்த எமது ஊரில் VP என அறியப்படுகிற அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் 1994ம் ஆண்டு ம காலப்பகுதியில் முதன்முதலாக ஒரு பங்கிற்கு அதாவது எமது விடத்தல்தீவு பங்குத்தந்தையாக பணி பொறுப்பேற்றார். அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் சிறந்த மனோதத்துவ நிபுணரும் கூட அதன் காரணமாக எமது ஊரில் ஆண்டாண்டு காலமாக, பரம்பரை பரம்பரையாக,வாழையடி வாழையாக புரையோடிப்போய் இருந்த எமது இரு ஆலயங்களை மையமாக வைத்து பிரிந்துநின்ற எம்மவர்களை இணைத்து எம்மையும் எமது ஆலயங்களின் நிர்வாகத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்த வரலாற்று நாயகன்.

அந்நாட்களில் வடகிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக எமது விடத்தல்தீவு பங்கில் அன்பியத்தை ஆரம்பித்து கத்தோலிக்க கோட்பாடுகளுக்கு ஏற்றால் போல் மக்களை திரு அவையில் பங்குபெற தூண்டியதுடன் மனமாற்றம் பெற்ற மக்களாக ஒருவருக்கொருவர் அன்பும் சினேகமும் உடையவர்களாக வாழ வழிசெய்து இறை விசுவாச பக்தியை அதிகரிக்கவும் வழிசெய்தார். அத்துடன் விடத்தல்தீவு புனித அடைக்கலமாத ஆலயத்திற்கு அருகாமையில் அருளூற்று அருள்மாரி மண்டபங்களை அமைத்து மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை இரவு பகல் பாராது மின்சார வசதிகள் இல்லாத அந்நாட்களில் பெற்றோல் மக்ஸ் வெளிச்சத்தில் ஆசிரியர்களின் உதவியுடன் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தார். நாம் அனைவரும் ஒரே சமூகமக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனையை மனதில் ஏற்படுத்தி அன்னிய நடமடிக்கைகளின் மூலம் எமது வட்டாரங்களில் உள்ள குடும்பங்களை அடிப்படையாக கொண்ட சிறு சிறு குழுக்களை உருவாக்கியிருந்தார்.குழுக்களுக்கிடையே தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கி ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை பின்பற்றி வாழவைத்து அன்பு ,பரிவு இரக்கம் போன்றவற்றை உணர வைத்து 2வருடங்களாக நிர்வாகத்தை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் புனித யாகப்பர் ஆலய நிர்வாக சபையையும் மக்களையும் ஒன்றுகூட்டி எமது ஊரில் நாம் ஒன்றுபடவேண்டிய தேவையையும் முன்னிலைப்படுத்தி விளக்கவுரையை வழங்கியவேளை இளைஞர்கள் சிலரினதும் ,பெரியவர்கள் சிலரினதும் கருத்துகள் முறுகல் நிலையை தோற்றுவித்தாலும் பெரும்பாலான மக்கள் நிர்வாகமும் ஊரும் ஒன்றாக அமையவேண்டும் என்று ஒருமித்து வலியுறுத்தியிருந்ததுடன் அவர்களது சம்மதத்தையும் பெற்று யாகப்பர் ஆலய நிர்வாகத்தை நீக்கியிருந்தார்.

மறை உண்மை தன்மை கொண்ட விடத்தல்தீவில் வாழும் போது மக்கள் ஒன்றாக வாழவேண்டும் என்ற சிந்தனையில் ஒற்றுமை மனப்பான்மையை வளர்த்து இரண்டு ஆலய நிர்வாகங்களையும் ஒன்றாக்கி விடத்தல்தீவு மேய்ப்பு பணி சபையை நிறுவினார். அந்நாட்களில் அடைக்கல மாதா ஆலயத்தை மக்களின் ஒத்துழைப்புடன் போர் கால சூழ்நிலையிலும் ஒரே சமூக மக்களாக இணைந்து கட்டிமுடித்து தனித்தனியாக சேகரிக்கப்பட்ட ஆலய ஸ்தாபரிப்பு நிதியை ஒன்றாக்கி ஆலய திறப்புவிழாவையும் திருவிழாவையும் சிறப்பாக நடாத்தியிருந்தார். தனி அன்பியத்தை ஆரம்பித்து மனங்களில் அன்புறவை நாளுக்கு நாள் வளர்த்த அந்நாட்களில் இரு நிர்வாகங்களாக பிரிந்து நின்ற எமது சமூதாய மக்களை ஒன்றிணைக்க முதலில் எமது அடைக்கல மாதா நிர்வாகத்தினரையும் ஆலயம் சார்ந்த மக்களையும் ஆலய மணி எழுப்பி புனித அடைக்கலமாதா ஆலயத்தில் வைத்து ஒன்றுசேர்ப்பதற்கான ஆரம்ப விளக்கவுரையை நிகழ்த்தி அவர்களிடமிருந்து சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு அடைக்கலமாதா ஆலய நிர்வாகத்தை நீக்கியிருந்தார். ஒளி இரவு ,ஒளி விழா காலங்களில் இளைஞர், சிறுவர்கள், பெரியவர்களிடத்திலே ஒற்றுமையையும், அன்பிய வாழ்வியலையும் தொடர்ந்து பேணும் வகையில் விளையாட்டு நிகழ்ச்சிகளையும், பாசறைகளையும் ஒழுங்குசெய்திருந்தார். ஒளி இரவு நிகழ்ச்சியில் அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் அறிமுகப்படுத்திய “ரொம்போலா” நிகழ்ச்சி இனறும் எம்மவர்களிடையே பேசும் பொருளாக கொள்ளத்தக்க வகையில் காணப்படுகிறது. மக்களின் ஆதரவுடனும்,ஒத்துழைப்புடனும் போர் காலத்தில் எமது ஊரின் ஊடாக நடைபெற்ற படகு சேவையின் நிமித்தம் பயணம் மேற்கொள்ள அங்கலாய்த்து வரும் மக்களுக்கான உணவுகள் பரிமாறப்பட்டமை இவரது காலத்திலேயாகும். இவ்வாறு ஒரே சமூகமாக எம்மையும் எமது மக்களையும் ஒன்றிணைக்க அரும்பாடுபட்டு அதிலே வெற்றியும் கண்ட எமது இரு முன்னாள் பங்குத்தந்தையர்களும் போற்றுதலுக்குரியவர்களே.

54 வருடங்களாக ஒப்பாரி பாடிவரும் கலைஞர். - செபஸ்தியாம்பிள்ளை ஐயா!

நான் 54 வருசமா பல பேரோட சாவில ஒப்பாரி பாடியிருக்கேன். இத்தன வருஷத்தில யாரும் என்னையும், இந்த கலையையும் பற்றி எழுதப்போறேன் என்டு வந்ததே இல்ல.....'' என்ற அவரது குரலில் பல்லாயிரம் துயரங்களும், எதிர்பார்ப்புக்களும் புதைந்திருந்தன.

மன்னார் மாவட்டத்தில், விடத்தல்தீவு எனும் கிராமத்தில் வஸ்தியாம்பிள்ளை, அடைக்கலம் தம்பதியினருக்கு மகனாக 1949ம் ஆண்டு, பங்குனி மாதம் 12ம் திகதி செபஸ்தியாம்பிள்ளை பிறந்தார். தற்போது 75 வயதாகின்ற இவர் இளமைப் பராயம் முதலே கத்தோலிக்க மரபு முறைப்படி ஒப்பாரிப்பாடல்களைப் பாடுவதிலும், கூத்துக்கள், நாடகங்களில் பாடுவதிலும் ஊரார் அனைவராலும் குறிப்பிட்டு பெயர் சொல்லக்கூடிய கலைஞர்களுள் முதன்மையானவர்.

- *தங்கள் குடும்ப பின்னணி பற்றி சுருக்கமாக கூறமுடியுமா?*

நடுத்தர குடும்பத்தில் பிறந்த நான், பிறப்பு முதலே விடத்தல்தீவு கிராமத்தில் தான் வாழ்ந்து வருகிறேன். எனது மனைவி பெயர் மேரி றெஜுனா திரேசா. எங்களுக்கு ஆறு பிள்ளைகள். அனைவரும் திருமணம் செய்துவிட்டனர். இப்போது நானும் எனது மனைவியும் மாத்திரமே இங்கு வசிக்கிறோம். நான் இன்றுவரையில் என் பிள்ளைகளையோ, உறவினரையோ உதவிக்கு எதிர்பார்த்ததில்லை. சைக்கிள் திருத்துதல், ஏனைய கூலி வேலைகளை செய்வதன் மூலம் வருமானத்தினை பெற்று நானும் எனது மனைவியும் வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கிறோம்.

- *ஒப்பாரிப்பாடல்களை பாட வேண்டும் எனும் ஆர்வம் தங்களுக்கு எவ்வாறு; ஏற்பட்டது?*

நான் இளமைப் பராயத்தில் இருந்த போது மரண வீடுகளில் ஒப்பாரி கலைஞர்கள் ஒப்பாரி பாடுவதைக் கேட்டு நானும் பாடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இது தொடர்பாக எனது தந்தைக்கு தெரிவித்த போது அவர் என்னை கல்வி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்படி கூறிவிட்டார். எனினும் என்னுள் ஏற்பட்டிருந்த அதீத ஆர்வம் காரணமாக எங்காவது மரண வீடுகளில் ஒப்பாரி பாடப்படும் போது வேலி மட்டைகளுக்கு அருகில் அமர்ந்திருந்து அவற்றை கவனமாக கேட்பதே எனது வேலையாகிப்போனது. இரவுகளில் கூட பெற்றோல்மெக்ஸ் விளக்குகளிற்கு அருகில் அமர்ந்து அவர்கள் பாடுவதையே கேட்டுக்கொண்டிருப்பேன். இவ்வாறே மூன்று நான்கு வருடங்களைக் கழித்திருப்பேன்.

தாங்கள் முதல் முதலாக ஒப்பாரி கலைஞராக ஒப்பாரி பாடலை பாடிய நாள் தங்களிற்கு நினைவிருக்கிறதா?
அதை எப்படி என்னால் மறக்க முடியும்?. மூன்று நான்கு வருட காத்திருப்பிற்கு பின்னர் 1969ம் ஆண்டு எனது மாமனார் ஒருவர் எனது இந்த ஆர்வத்தைக் கண்டு, பிரசவத்தின் போது இறந்து போன பெண்ணொருவரின் மரண வீட்டில் பல மூத்த கலைஞர்களோடு இணைந்து ஒப்பாரி பாட அழைத்துச் சென்றார். அதுமுதல் ஒப்பாரிப் பாடல்களை படிப்படியாக கற்றுக்கொண்டு தொடர்ந்து பாட ஆரம்பித்தேன்.

- *நீங்கள் எவ்வகையான ஒப்பாரிப் பாடல்களைப் பாடுகிறீர்கள்?*

எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் அதிகமானோர் கத்தோலிக்க சமயத்தினைப் பின்பற்றுகின்றனர். கத்தோலிக்க மதமானது எப்போதும் மரணத்தின் பின்னர் ஒரு வாழ்வு உள்ளது, இவ்வுலகில் செய்யும் பாவங்களிற்கு மறுவுலகில் தண்டனை கிடைக்கும் என்பதனை உறுதியாக நம்புகிறது. எனவே ஒருவர் இறந்துபோனால் அவரது வீட்டில் அவரது உடல் வைக்கப்பட்டது முதல், அடக்கம் செய்யப்படும் வரையில் யேசுவின் பாடுகளையும் மரணத்தினையும், யேசுவின் தாய் அவரோடு பயணித்த நாட்களையும் பாடலாக பாடி இறந்தவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்வோம். இறுதியில் அவர் அடக்கம் செய்ய எடுத்துச் செல்லப்படும் போது இறந்தவர் மண்ணுலகில் வாழ்ந்த நாட்களை நினைவுபடுத்தி பாடுவோம்.

- *ஒப்பாரிப்பாடல்களை பாடுவதற்கென்று தங்களை எவரேனும் வந்து அழைப்பார்களா?, அவ்வாறு பாடல்களைப் பாடுவதற்கு சம்பளம் வழங்குகின்றார்களா?*

சம்பளமா??? (சிரித்தபடியே). ஒப்பாரிப்பாடல்களை பாடுவதென்பது எமது உயிரோடு ஊறிப்போன கலை வடிவமாகும். இந்த உலகை விட்டு பிரிந்து போனவர்களது ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பாடுகின்றோமே தவிர எந்தவித பணத்தினையும் எதிர்பார்த்துப் பாடுவதில்லை. கிராமத்தில் ஒரு இறப்பு நேர்ந்ததாக ஆலயத்தில் அறிவித்தல் மணி ஒலிக்கப்பட்டதுமே நாம் ஒப்பாரி பாடுவதற்கு செல்ல தயாராகிவிடுவோம். சில சமயங்களில் இறந்தவரது உறவினரோ, நண்பர்களோ வந்து ஒப்பாரி பாடுவதற்காக எம்மை அழைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு

- *ஒப்பாரிப்பாடல்களை பாடும் போது தங்களது உடல், உள உணர்வுகள் எப்படியிருக்கும்?*

இறந்தவர் ஆணா. பெண்ணா, குழந்தையா, எமக்கு நன்கு தெரிந்தவரா இல்லையா என்பதற்கு அப்பால் குறித்த வீட்டில் ஒரு இழப்பு நேர்ந்திருக்கிறது. அவர்களது துயரத்தில் நாமும் முழுமையாக பங்கெடுப்போம். எமது பாடல்களை கேட்கும் போது அங்குள்ளவர்களும் மனதினுள் அடக்கிவைத்திருக்கும் துயரங்களை கண்ணீராக வெளிப்படுத்துவர்.

ஒப்பாரிப்பாடல்களை விடிய விடிய வெவ்வேறு இராகங்களில் பாடிக்கொண்டேயிருப்போம். இரவில் 9 மணிக்கு ஆரம்பித்து 12 மணியளவில் நிறுத்;தி மீண்டும் 1 மணிக்கு பாட ஆரம்பிப்போம். அப்படியே விடியும் வரை பாடுவோம். பெருங்குடலும் சிறுகுடலும் சிக்கிக்கொள்வதைப் போன்ற உணர்வு ஏற்படும். வயிறு சுருங்கிப்போகும். நா வறண்டு போகும்

- *ஒப்பாரிப்பாடல்களை பாடுவதில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகிறது?*

எமது கிராமத்தினை பொறுத்தவரையில் பெண்கள் ஒப்பாரிப்பாடல்களை பாடும் விகிதம் முற்றிலுமாக குறைவடைந்துள்ளது என்றே கூற வேண்டும். எமது அயற்கிராமங்களில் இன்னமும் பெண்கள் சிலர் ஒப்பாரிப்பாடல்களை பாடிவருகின்றனர். எனது இளமைக்காலத்தில் ஆண்களோடு இணைந்து பெண்களும் கண்விழித்து ஒப்பாரி பாடிய நாட்கள் இன்னமும் எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் தற்கால பெண்கள் ஒப்பாரி பாடுவதற்கு, ஏன்! அழுவதற்கே வெட்கப்படுகின்றனர்.

- *தாங்கள் ஒப்பாரிப் பாடல்களை பாட ஆரம்பித்த காலத்திற்கும் தற்காலத்திற்கும் எவ்வாறான வேறுபாடுகள் இருப்பதாக உணர்கிறீர்கள்?*

ஆரம்பகாலத்தில் ஒப்பாரி பாடல்களைப் பாட ஆரம்பித்தால் கூடியுள்ள அனைவரும் தங்கள் வேதனையை வெளிப்படுத்த ஓலமிட்டு அழுவார்கள்;. குறிப்பாக பெண்கள் மரண வீட்டிற்கு வரும் உறவுகளை அணைத்து அழுது புலம்பி தமது துயரை பகிர்ந்துகொள்வர். ஆனால் தற்காலத்தில் அவ்வாறில்லை. பெரும்பாலான மரண வீடுகளில் அழுகுரலே கேட்பதில்லை. பல நாட்களின் பின் அனைவரும் சந்தித்துக்கொள்ளக்கூடிய இடமாகவே மரணச்சடங்கினை கருதுகின்றனர். நாம் ஒரு புறம் ஒப்பாரியைப் பாட அவர்கள் அனைவரும் மறுபுறம் கூடியிருந்து வெட்டிக்கதை பேசும் காலமாகிப்போய்விட்டது. ஒரு சிலர் எங்கே இருக்கிறோம் என்பதையே மறந்து கைகொட்டி சிரித்து கதைபேசும் சந்தர்பங்களையும் சந்தித்திருக்கிறேன். இவற்றிற்கு அப்பால் இளைஞர்கள், கைகளில் தொலைபேசியுடன் ஒவ்வொரு மூலையிலும் நிற்கிறார்களே தவிர துயரத்தில் பங்கெடுக்கும் மரபே மாறிப்போய்விட்டது. இவற்றை நினைக்கையில் ஆத்திரமும், அளவற்ற துயரும் ஏற்படுகிறது.

- *சமூகத்தில் தங்களைப்போன்ற ஒப்பாரி கலைஞர்களுடைய நிலை எவ்வாறு இருக்கிறது?*

இறப்பு வீடுகளில் தேடப்படுபவர்களாகவும், ஏனைய சந்தர்ப்பங்களில் வேண்டாதவர்களாகவுமே என்னையொத்த கலைஞர்களின் நிலை காணப்படுகிறது. முன்னைய காலங்களில் கலைஞர்களை சுப காரியங்களிற்கும், மதம்சார்வைபவங்களிற்கும் விருந்தாளியாக அழைப்பதை பெருமையாககருதினர். ஆனால் தற்போது, நாங்கள் வராவிட்டால் விழா நடக்காமலா போய்விடும் என்ற அளவிற்கு ஆகிவிட்டது. 54 வருடமாக ஒப்பாரிப்பாடல்களை நேசித்து பாடும் என்னை அடையாளங்கண்டு கொள்ளவே உங்களைப்போன்ற இளைய தலைமுறையினருக்கு இத்தனை காலமாகியிருக்கிறதென்றால், இன்றும் அறியப்படாதவர்களாய் எத்தனை கலைஞர்கள் எங்கெங்கெல்லாம் இருப்பார்கள். அவர்களையெல்லாம் அடையாளங்கண்டு உரிய அங்கீகாரம் வழங்காவிட்டாலும் அவர்களிடமுள்ள தனித்துவமான கலைத்திறன்களை அழியவிடாது ஆவணப்படுத்தினாலே என்னையொத்த கலைஞர்கள் வெற்றியடைந்ததற்கு சமமாகும்.

- *இளைய சமுதாயத்தினர் இவ்வகையான ஒப்பாரிப்பாடல்களை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்களா?, அவர்களிற்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?*

தற்காலமானது எமது காலம் போல அல்ல. அப்போது வசதிகளும் வளங்களும் மிகக் குறைவாகவே இருந்தன. இருப்பினும் எம்மிடம் ஆர்வம் மிக அதிகமாக இருந்தது. ஆனால் இப்போதைய இளைய சமுதாயத்தினரிடம் இப்பாடல்களை கற்றுக.கொள்வதற்கான ஆர்வம் துளியளவும் இல்லையென்றே சொல்ல வேண்டும். எமது கிராமத்தில்கூட பல பேரை கவனித்திருக்கின்றேன். அவர்களிடம் அதீத குரல்வளம் காணப்படுகிறது. ஆனால் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஒப்பாரி பாடல்கள் என்றாலே பாடுவதற்கும் பழகுவதற்கும் வெட்கப்படும் இவர்கள் பெரிய வெள்ளிக்கிழமை என்றால் ஆலயத்தில் பாடுவதற்கு ஒரே நாளில் பாடல்களை கற்றுத்தருமாறும் கேட்பதுண்டு.

ஒப்பாரி பாடல்களை பாட ஆரம்பித்த நாள் முதலாக அது சார்ந்த புத்தகங்களை தேடி சேமித்து இன்றுவரை பாதுகாத்து வருகின்றேன். இதே ஆர்வத்தோடு கற்றுக்கொள்வதற்கு யாரேனும் தலைப்படுவார்களாயின் நிச்சயமாக அவர்களுக்கு கற்றுக்கொடுப்பேன். எமது காலம் முடிந்து போனாலும் இந்த பாடல்களும் அதன் நயமும், சுவையும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

நேர்காணல் : கிறிஜா அருள்பிரகாசம்

நன்மைத்தனங்களும், உதவிகளும் - நே.லக்ஸ்மன் , அமரர் சகாயராசா ,அமரர் சகாயன்

வருடங்கள் கடந்தாலும், காலங்கள் மாறினாலும் ஒருவர் செய்த நன்மைத்தனங்களும், உதவிகளும் ஆண்டாண்டு காலமாக நினைவில் கொள்ளப்படுபவைகளாகவே இருக்கும். அந்தவகையில் 1999ம் ஆண்டு நடைபெற்ற இடப்பெயர்வுக்கு பிற்பாடு விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் நிர்வாக ரீதியான அனைத்து செயற்பாடுகளிலும் ,விளையாட்டு நிகழ்வுகளின் வெற்றியிலும் ,கழக வீரர்களுடைய ஏனைய அனைத்து தேவைகளிலும் பெரிதும் உதவியாக இருந்தவர்களுள் முன்னாள் தலைவர் ஸ்ரனி/மதி (நிலா கடலுணவு வாணிபம்) முன்னாள் தலைவர் ,அமரர் டோ. சகாயராசா மற்றும் முன்னாள் ஐக்கிய விளையாட்டுக்கழக கோல் காப்பாளர் நே.லக்ஸ்மன் (LNKG) ஆகியோர் முக்கியமானவர்கள் என்றால் அது மிகையல்ல.

ஸ்ரனி/மதி (நிலா கடலுணவு வாணிம்) அவர்கள் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக தலைவராக 1999ம் ஆண்டு இடம்பெயர்விற்கு பின்னர் பல முறை நிர்வாகத்தையும் ,கழகத்தையும் நிர்வகித்து எமது கழகம் பல வெற்றிகளை பெற்றதில் இவருக்கும் நிறையபங்கு உண்டு

போர்க்கால சூழல் காலங்களில் ஊருக்கு வெளியே குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இருந்தும், மன்னாரில் இருந்தும் கடலால் விளையாட வந்த ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் மதி அவர்கள் பலதரப்பட்ட உதவிகளை செய்திருப்பது இன்றும் மறந்துவிட முடியாததாகும்.
அன்றைய நாட்களில் போக்குவரத்து என்பது சாதாரண நிலையில் அல்லாமல் பல இடர்களையும், அசௌகரியங்களையும் கொண்டிருந்தது, கடல் வழியாக வங்காலை பாடு ,பள்ளிமுனை மற்றும் மன்னார் பாலத்தடி சோதனை சாவடிகள் மூலமாக வன்னியில் நடக்கும் போட்டிகளுக்கு நாங்கள் வந்துசென்றோம்.

எமது துறையில் கொடுவாப்பள்ளத்தில் எம்மை கண்டவுடனே “நேர வாங்க பதிய தேவையில்ல சாப்பிட்டிற்று பதியலாம் எல்லாம் சொல்லியாற்று” என்ற சத்தம் மதி அண்ணணிடமிருந்து வரும். ஏனென்றால் துறையூடாக வரும் யாவரும் விடுதலை புலிகளின் புலனாய்வு துறையின் சந்திப்பிற்கு பின்னரே ஊருக்குள்ளே வர அனுமதிக்கப்படுவது வழமையாக இருந்தது.

மதி அண்ணணின் வாடி துறையில் தவநேசன் அண்ணணின் சாப்பாட்டு கடைக்கு அருகிலே இருந்தது கரையில் இறங்கியவுடன் எம்மை முதல் போய் சாப்பிடுங்கள் என்று வயிறார சாப்பிடவைத்து தனது மோட்டர் சைக்கிளையும் தந்து பள்ளமடு குளத்துக்கு முழுக போகசொல்லுவது வழமையாக இருந்தது.

முழுக்கு முடிந்த கையோடு அஞ்சாறு கறியோட தனது வீட்ட மத்தியான சாப்பாட்டை தந்து எம்மை உபசரித்த அந்த நாட்கள் இன்றும் பசுமையான நினைவாகவே இருந்து வருகிறது. அது மட்டுமல்ல மன்னாரில இருந்தும் ,பல்கலைக்கழகத்தில இருந்தும் *check* பொயின்ரால வாற பொடிகள ஏத்தி இறக்க தன்ர மோட்டர் சைக்கிள அனுப்புவதிலும் மதி அண்ணண் பின்நிற்பதில்லை. அத்துடன் அந்த நேரத்தில் விளையாட வந்த எமக்கான பாஸ் கட்டணங்களை வழங்கியிருந்தார்.

ஒவ்வொரு போட்டியும் முடிய கடைக்கு கூட்டிச்செல்லுவதும் இறுதிப்போட்டியில் வெற்றியின் பின்னர் மைதானத்தை சுற்றி வெற்றிக்களிப்பில் வலம்வருவதும் ரசிகர்கள் வியந்து பார்க்கும் வண்ணம் குளிர்பானங்களை வழங்கி எம்மை உற்சாகமூட்டி மகிழ்விப்பதும், ஊரில் அருள்மாரி மண்டபத்தில் வெற்றி சமயலுக்கு நிதியை கொடுப்பதும் மதி அண்ணனின் இயல்பாக இருந்தது.

இவ்வாறு எமது ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகத்தில் இருந்து பல்வேறுபட்ட வகையில் பல்வேறுபட்ட வீரர்களுக்கு பற்பல உதவிகளை செய்த முன்னாள் தலைவர் மதி அண்ணண் அவர்களை நன்றியுடன் நினைக்கின்றோம் அத்துடன் தமது பிள்ளைகள் நால்வரும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் உதைபந்தாட்ட அணிக்காக விளையாடவும் அவர்களை ஊக்குவித்திருப்பது பெருமையே.

அமரர் ஜோண் சகாயராசா..........

அமரர் ஜோண் சகாயாராஜா விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் தலைவராகவும், உபதலைவராகவும், நிர்வாகத்தில் பங்குபற்றியதுடன் விளையாட்டு வீரனாகவும் இருந்தவர். மன்னாரில் இருந்து விளையாட வந்த எமக்கு இவரால் செய்யப்பட்ட உதவிகள் கொஞ்சநஞ்சமில்ல. தமது வீட்டிற்கு வரவழைத்து மத்தியான மற்றும் இரவு சாப்பாடுகளை வழங்கிய பசுமையான நினைவுகள் மறக்கமுடியாதவைகளாகும். *“keeping star”* வெற்றிக்கிண்ண போட்டிக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் எம்மோடு சேர்ந்து செய்திருந்தார்.தமது மோட்டர் சைக்கிளை வழங்கி

விளையாட வரும் எம்மவர்களை *check* பொயின்ரில் இருந்து விளையாட்டு நடைபெறும் இடங்களுக்கு ஏற்றிச்செல்வதும், அவர்களை மீண்டும் கொண்டு வந்து இறக்கிவிடுவதும் இவரது வழமையான செயல்பாடாகவே இருந்தது. முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அமரர் சகாயன் அவர்களுடன் ஒரு போட்டியில் இணைந்து விளையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இரவு படுக்கைக்கு மடுக்கோவிலுக்கு சென்றுவருவதிலும், ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாக உறுப்பினராக இருந்த காலத்தில் ஆலயங்களுக்குள் வந்து போவதிலும் சகாயன் அண்ணன் பின்நிற்பதில்லை.

அமரர் சகாயன் அவர்களை பற்றிய சுவாரஸ்யமான நினைவு யாதெனில் நாம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காக விளையாடும் ஒவ்வொரு போட்டிகளிலும் மைதானத்திற்கு வந்து எம்மை உற்சாகப்படுத்துவார் அதிலும் குறிப்பாக எமது பிரதேசம் வெயில் வெட்கை அதிகமாக உள்ள பிரதேசமாகவும் காணப்படுவதால் விளையாட்டின் முதல் பாதி நிறைவுற்றதும் எம்மை வரிசையாக இருத்தி ஒவ்வொருவருடைய தலையிலும் தண்ணீரி ஊற்றி முகத்தை தனது கையால் கழுவி விடுவதை தனது வழக்கமாக கொண்டிருந்தார்.

விளையாட்டு அனல் பறக்கும் பிரதமநடுவரிடம் போய் உதவி நடுவர் முறையிடுவார் அந்த நேரத்தில் ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தல் வரும் "தயவு செய்து ஐக்கிய விளையாட்டுக்கழக ஆதரவாளர் நடுவரை தொந்தரவு செய்யவேண்டாம் " விசயம் என்னவென்றால் " *Sir* அவன் *off* க்கு போயிற்றான் *Off Sir* அவன் என்று உதவிநடுவருக்கு சகாயன் அண்ணன் கொடுக்கும் *Alert* அதாவது *Off* பிடிக்க சொல்லி நடுவரை *Alert* பண்ணிக்கொண்டே இருப்பாராம், இதனால் கடுப்பாகும் பக்க நடுவர் பிரதம நடுவரை விளையாட்டை நிறுத்தச்சொல்லி சொல்லும் அறிவித்தலே அதுவாக இருந்தது. சாகயன் அண்ணண் கொடுக்கும் இந்த *Alert* மைதானத்தில் அடிக்கடி நிகழும் இவற்றை நேரில் பார்த்தவன் நான்.

அமரர் சகாயன் அவர்கள் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சியிலும், அதன் வெற்றியிலும் பங்குதாரர் ஆக இருந்தவர் என்றால் அது மிகையாகாது.நே.லக்ஸ்மன் *(LNKG)* கடலுணவு வாணிப உரிமையாளராக லக்கு என்று எம்மவரால் அறியப்பட்டவர். எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் சிறந்த கோல்காப்பாளர்களுள் இவரும் ஒருவராக இருந்ததுடன் ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகத்திலும் இருந்து கடமையாற்றியிருந்தார்.

*1999*ம் ஆண்டு இடம்பெயர்வுக்கு பின்னர் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் எமக்கும் இவரது உதவிகள் அதிகளவில் கிடைக்கப்பெற்றன. தனது வாகனத்தை வழங்கி உதைபந்தாட்ட போட்டிகளுக்கு எமது கழகம் பங்குபற்றவும் ,தமது மோட்டார் சைக்கிளில் எமது வீர்களை முழங்காவில், பள்ளிக்குடா, காத்தாங்குளம் போன்ற மைதானங்களுக்கு ஏற்றிவந்த அந்த நாட்களும் மறப்பதற்கல்ல.

முன்னாள் தளபதி ஜாண் அவர்கள் தலைமையில் வீரப்பிரசவ ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்திய லீக் போட்டிக்கு லக்ஸ்மன் அவர்கள் வழங்கியிருந்த உதவிகள் அளப்பெரியது. முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட போட்டியில் திரு.லக்ஸ்மன் கோல்காப்பாளர்களாகவும் நான் இடது பக்க பின்கள தடுப்பு வீரனாகவும் விளையாடி மன்னார் அல்பதா அணியுடனான போட்டியில் வெற்றிபெற்றது இன்றும் பசுமையே.

இடம்பெயர்ந்த பின்னர் லக்ஸ்மன் அவர்கள் மூன்றாம்பிட்டியில் வசித்தாலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக போட்டிகளுக்கு ஆதரவும் உற்சாகமும் வழங்க பின்நிற்பதில்லை. தேவன்பிட்டியில் நடைபெறும் போட்டிகளுக்கு எம்மை தனது வீட்டில் தங்கவைத்து ,சாப்பாடுகளை வழங்கியதும், தனது வாகனத்தில் எம்மை ஏற்றிச்செல்லுவதும் மறந்துவிட முடியாதவைகளாகும்.
எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் கோல்காப்பாளர்களாக சிறப்பாக செயற்பட்டு இன்றுவரை எமது கழகத்தின் வளர்ச்சியில் ஆர்வமாக இருந்து லக்ஸ்மன் அவர்கள் உற்சாகமூட்டிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜோண்றாச் எனும் *KEEPING STAR* லொக்குட்டியின் நினைவுகளில்........

முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வடமாகாண உதைபந்தாட்டவிளையாட்டு ரசிகர்களின் அமோக வரவேற்பில் களைகட்டி திருவிழா கோலம்பூண்டு சிறந்த உதைபந்தாட்ட அணிகளின் பங்குபற்றுதலுடன் வெடிவிபத்தில் கொல்லப்பட்ட *3* பிள்ளைகளின் நினைவாக பண்டிவிரிச்சான் மண்ணில் நடாத்தப்பட்டு வரும் போட்டியாகும்

அந்த வருடம் மண்ணார் தீவில் இருந்தும் அல்பதா விளையாட்டுகழகம் உட்பட பல கழகங்கள் பங்குபற்றியிருந்தன, வங்காலை, முருங்கன் பிரதேச அணிகள்,

மாந்தை மேற்கு ,மடு பிரதேச அணிகள், முழங்காவில், நாச்சிக்குடா, வலைப்பாடு மற்றும் இரணமாதா நகர் அணிகள் போன்ற பலம்வாய்ந்த சிறந்த உதைபந்தாட்ட அணிகள் அந்த முத்துக்கள் மூன்று வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றிக்கிண்ணத்தை தமதாக்க தமது சிறப்பான விளையாட்டை தடம்பதித்திருந்தன. எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் மாந்தை மேற்கில் சிறந்த விளையாட்டு கழகமாக வலம்வந்த காலம் நண்பன் அமரர் ஜோண்றாஜ் எமது கழகத்தின் சிறந்த கோல்காப்பாளர்களாக பல பலம்வாய்ந்த அணிளின் முன்னனி வீரர்களின் ஒவ்வொரு கோல் பெறும் வாய்ப்புகளையும் தவிடுபொடியாக்கிக்கொண்டிருந்தான். விளையாட்டு நேரத்திலும் சரி பெனால்டி வேளையிலும் சரி ஜோண்றாச்சுக்கு கோல் அடிப்பது என்பது எதிரணிக்கு எட்டாக்கனியாகவே இருந்தது.

எமக்கான போட்டி அட்டவனை வரிசையில் இரணைமாதாநகர் வி.க, வங்காலை சென்.ஆன்ஸ் வி.க, முருங்கன் பொதுசன வி.க, மாந்தை சென்.லூட்ஸ் அரையிறுதியில் அல்பதா அணி போன்றவற்றை வென்று இறுதிப்போட்டி காத்தாங்குளம் சென். ஜோசப் அணியுடனான போட்டி ரசிகர்களின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்த போட்டியாக அமைந்தது. மன்னார் தீவில் பள்ளிமுனை, பனங்கட்டு கொட்டு அணிகளின் விளையாட்டை இரசிக்க கூடும் பார்வையாளர்கள், உதைபந்தாட்ட ரசிகர்களை போலவே எமது மாந்தை மேற்கு பிரதேச உதைபந்தாட்ட ரசிகர்களின் கண்ணுக்கு விருந்தாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் காத்தன்குளம் சென் ஜோசப் அணிக்குமிடையேயான போட்டி பெரும் எதிர்பார்ப்பு நிறைந்த போட்டியாக இருந்தது.

காத்தாங்குளம் றமேஸ் அந்த அணியில் ஜாம்பவானாக வலம்வந்த காலம் மின்னல் வேக ஓட்டமும் கோல் போடும் திறனும் அவனுக்கு அதிகம் அவனை மட்டும் கட்டுப்படுத்த நாம் அதீத யுத்திகளை கையாள நேரிட்டிருந்தோம். பண்டிவிரிச்சான் மைதானம் பார்வையாளர்களால் நிறைந்திருந்தது ரசிகர்களின் கரகோசத்துடனும், ஆராவாரத்துடனும் அந்த இறுதிப்போட்டி புழுதி கிளப்பி அனல் பறந்தது. றமேஸ் கோல் போட எத்தனித்த ஒவ்வொரு தடவையும் அவனுக்கு ஏமாற்றமே ஜோண்றாஜ் தனக்கே உரித்தான முறையில் றமேஸின் ஒவ்வொரு வாய்ப்பையும் தடுத்து நிதானமாக பந்தை பிடித்து நிலத்தில் போட்டு அடித்தான்.

இரு அணிகளினதும் அதிரடி ஆட்டம் சமநிலையில் முடியவே வெற்றி தோல்வியை தீர்மானிக் தண்ட உதை நடுவரால் வழங்கப்பட்டது.மம்மல் கருகின நேரம் ,அடர்ந்த மரங்கள் நிறைந்திருந்ததால் இருட்டுப்பட்ட நேரமாகி விட்டது சனத்திர ஆராவாரம் ஒய்தபாடில்ல நாங்கள் பெனால்டி அடிக்க தயாரானோம், கோல் போஸ்ற் தெரியேல என்ற குற்றச்சாட்டை எதிரணி முன்வைத்து அடுத்தநாள் *Rematch* வைக்க சந்தர்ப்பம் தேடியது. யாரும் எதிர்பாராத நேரத்தில் “*Sir* லைற் கட்டுங்க நான் *Ready*” எண்டு சொல்லி போஸ்ற்றுக்க போய் நிண்டான் நண்பன் ஜோண்றாச். உடனே இரண்டு பெரிய ரியூப் லைற் கொண்டுவந்து கட்டி பெனால்டி அடிக்க தயாரானது, ஜோண்றாச் கோல் கம்பத்தினுள் தயாராக நிற்க நடுவர் பந்தை எடுத்து றயல் பார்த்தார் ,ஜோண்ராஜ்ச் நடுவர் அடித்த பந்தை மிக லாபகரமாக பிடித்து கையில் வைத்து சுற்றவே பெனால்டி அடிக்கமாட்டோம் என்று எதிரணி மைதானத்தை விட்டு வெளியேறியது. மைதானத்தில் வீரர்களை ஒழுங்குபடுத்துவது, முக்கியமான இக்கட்டான நேரங்களில் நேரத்தை நுட்பமாக கடத்துவது போன்ற பல அலப்பறைகளை மைதானத்துக்குள் செய்துகாட்டிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

தவிர முழங்காவில் விநாயகர் மைதானத்தில் தமிழீழ அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது நண்பன் ஜோண்றாச் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியின் கோல்காப்பாளர்களாக சிறப்பாக செயற்பட்டு நடுவரின் தவறால் எமக்கு அநீதி இழைக்கப்பட்ட நாம் அந்த போட்டியில் இருந்து விலகியிருந்தோம் உதைபந்தாட்ட ரசிகரிகளினதும், பார்வையாளர்களினதும் முறைப்பாட்டுக்கு அமைவாக தமீழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் திரு.பாப்பா அவர்களினால் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் தமிழீழத்தின் சிறந்த அணியாகவும் அதில் எமது நண்பன் ஜோண்றாச் தமிழீழ சிறந்த கோல்காப்பாளர்களாக விருது பெற்று கௌரவிக்கப்பட்ட வரலாறும் பலருக்கு தெரிந்திருக்காது. இன்னும் எமது மாந்தை மேற்கு பிரதேச செயலக உதைபந்தாட்ட போட்டிகள்,கரப்பந்தாட்ட போட்டிகள், இரணை மாதா நகர் தொடக்கம் முருங்கன் வரை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக கோல்காப்பாளர்களாக தனது அதீத தறமையால் நண்பன் எமது அணியின் வெற்றிக்கு காரணகர்த்தாவாக இருந்திருக்கிறான்.

எமது மாந்தை மேற்கு பிரதேச உதைபந்தாட்ட அணி சார்பாக தெரிவு அணியில் இடம்பிடித்த நண்பன் ஜோண்ராச் மன்னார் மாவட்ட அணியில் பள்ளிமுனை லூசியா அணி சார்பாக நண்பன் அனஸ்ரின் கோல்காப்பாளர்களாக இருந்த அந்நாட்களில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சார்பாக கோல்காப்பாளர்களாக செயல்பட்டதும் மறக்கமுடியாததாகும். ஆண்டுகள் பல கடந்தாலும்,மறக்கமுடியாத பல சாதனைகளை, தனது திறமையால் இன்றுவரை நினைக்கபண்ணும் நண்பா ஜோண்றாச் உனது ஆன்மா இறைவனிடத்தில் அமைதியில் இளைப்பாறுவதாக.

மகத்தான சேவை செய்த எமது சவேரியான் GS.

எமது கிராமத்திற்கே உரித்தான வகையில் கடமை தவறா கண்ணியத்துடன் அரச கருமங்களை, பணிகளை சிறப்பாக ஆற்றியவர்களுள் மண்ணின் மைந்தன் திரு. அ.சவேரியான் GS அவர்களுக்கு சிறப்பான தனிமரியாதை உள்ளமை யாரும் மறுப்பதற்கல்ல.

திரு.அ.சவேரியான் GS அவர்கள் 1939 ம் ஆண்டு ஆவணி மாதம் 26 ம் திகதி விடத்தல்தீவில் அகுஸ்ரின், ஞானம் ஆகியோருக்கு மகனாக பிறந்தார் .தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்திலும் , உயர்கல்வியை மன் /புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார். பின்னர் 1962 ம் ஆண்டு ஆடி மாதம் 18 ம் திகதி அன்று எமது கிராமத்தின் அமல உற்பவம் அவர்களை திருமணம் செய்து பிரான்சிஸ்கா சேவியர், றோகினி சேவியர், அகஸ்ரின் சேவியர், தயாழினி சேவியர் மற்றும் தவறாஜ் சேவியர் என 6 பிள்ளைகள் ,பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்.

சவேரியான் GS அவர்கள் கிராம சேவகராக 1963 ம் ஆண்டு வைகாசி மாதம் 1ம் திகதி நியமனம் பெற்றிருந்தார். தனது நியமனத்தின் அடிப்படையில் தமது சேவையை மன்னார் மடு பிரதேசத்தில் பாலம்பிட்டி கிராமத்தில் சுமார் 10 வருடங்கள் சிறப்பான முறையில் ஆற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். தொடர்ந்து 1974ம் ஆண்டு காலப்பகுதியில் பாலம்பிட்டி கிராமத்தல் இருந்து மாற்றலாகி ய திரு.சவேரியான் GS அவர்கள் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள நெடுங்கண்டல் கிராம சேவையாளராக 1980ம் ஆண்டு வரை சேவையாற்றியிருந்தார்.

அதன்பிற்பாடு வெள்ளாங்குளம் பிரதேசத்தில் 6 வருடங்கள் சேவையாற்றி ஆட்காட்டிவெளி கிராமசேவகராக தனது கடமையை தொடர்ந்தார். பின்னர் 1996 இல் தனது சொந்த ஊரான எமது விடத்தல்தீவில் தனது சேவையை தொடர விரும்பிய திரு.அ.சவேரியான் GS அவர்கள் மாற்றலாகி எமது ஊருக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

1996ம் ஆண்டு காலப்பகுதி உள்நாட்டு போர் காரணமாக பாதைகள் பூட்டப்பட்டு எமது விடத்தல்தீவில் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை இயங்கிய காலப்பகுதியில் திரு. வரதீஸ்வரன் அவர்கள் AGA யாக பணியாற்றிய காலம் அந்த காலகட்டத்தில் விடத்தல்தீவு மன்னார் படகு சேவை மன்னார் கச்சேரி ஊடாக நடைபெற்ற நாட்களில் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தின் சுமார் 40 தொடக்கம் 50 வரையிலான உத்தியோகஸ்தர்களுக்கு பொறுப்பாக 1998ம் ஆண்டு வரை நியமிக்கப்பட்டிருந்தார்.

1998ம் ஆண்டு காலப்பகுதியில் தொடங்கி பலதரப்பட்ட கெடுபிடிகள், சிக்கல்களுக்கு மத்தியில் மன்னார் இராணுவத்தால் வழங்கப்பட்ட இராணுவ அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைக்கு பொறுப்பான AO உத்தியோகஸ்தராக மன்னார் மக்களுக்கு சிறப்பான பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. அந்த நாட்களில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா மன்னார் போக்குவரத்து நடைமுறையில் அனுமதி படிவங்களை நிரப்பி அனுமதி பெற்று பயணிக்கவேண்டிய சூழ்நிலை நிலவிய காலத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்துகளில் பல்வேறுபட்ட நெருக்கடிகளை சந்தித்து பயணிகளை ஏற்றி இறக்கும் பாரிய பொறுப்பை சிறப்பாக செய்துமுடித்திருந்தார்.

உள்நாட்டு போரால் நிர்க்கதியான நிலையில் இடம்பெயர்ந்த மக்களுடைய இடைத்தரகராக செயல்பட்ட செயல்வீரன் எமது அ.சவேரியான் GS என்றால் அது மிகையல்ல.

கிராம சேவையாளராக பல்வேறுபட்ட காலங்களில் ,பலதரப்பட்ட நிலைகளில் பல்வேறுபட்ட தரப்பினரிடையே சேவையை வழங்கியிருந்த வேளைகளில் அதற்கு கைமாறாக சன்மானங்களையோ , கையூட்டையோ சவேரியான் GS பெற்றதாகவோ அல்லது சேவைக்காலத்தில் மக்களிடத்தில் முரன்பட்டதாகவோ சரித்திரம் இல்லை, சேவையாளனாக அ.சவேரியான் GS அவர்கள் ஒய்வுபெற்றுள்ளமை விடத்தல்மண்ணுக்கும் எமக்கும் பெருமையே.

சவிரியம்மா (புஸ்பம்)

1926 அன்று செபஸ்தி விசிறித்தம்மா ஆகோயாருக்கு மகளாக பிறந்த சவிரியம்மா (புஸ்பம்)மிகுந்த அமைதியும் கடவுள் பக்தியும் கொண்டு பெற்றோர்களால் வளர்க்கப்பட்டார் இளமை காலத்திலே எல்லோரோடும் நன்று பழகி பாசம் காட்டி வந்தார் அவர் மக்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம் உள்ளபடியினால் தன் தாய் விசிறித்தம்மா செய்துவந்த பிள்ளை பெறுப்பேற்று சேவையை தானும் செய்ய ஆசைப்பட்டு எங்கு பிரசவம் பார்க்க அவர் அம்மா செல்வாரோ அங்கெல்லாம் அவரும் கூடவே செல்வார் அப்படி சென்று பிள்ளை பெறுவிக்கும் முறைகள் அனைத்தையும் கற்று படிக்காமலே வைத்தியர் ஆனார் பின்பு மனுவேல் பிள்ளை என்பவரை திருமணம் செய்தும் அவர் பிள்ளை பெறுவிக்கும் பணியை தொடர்ந்து செய்து வந்தார் அவர் கணவரும் அதற்கு முழு ஆதரவு வழங்கினார் எந்த நேரம் ஆனாலும் எந்த இருட்டு ஆனாலும் யார் வந்து கூப்பிட்டாலும் உடனே சென்றிடுவார் அந்த பிள்ளை நல்லபடியாக பிறகும் மட்டும் இருந்து பிள்ளையை பெறுவித்துவிட்டுத்தான் வீடு வருவார் விடத்தல் தீவு கள்ளியடி பெரியமடு என்று எல்லா இடங்களிலும் அவர் சேவை செய்திருக்கிறார் பல நூற்றுகணக்கான பிள்ளைகளை பெறுவித்து இருக்கிறார் பெறுவிக்கும்போது எந்த இழப்பும் நடந்ததில்லை கடவுளுக்கு நன்றி அவர் தன்னால் முடியும் வரைக்கும் அந்த பணியை செய்தார் அவர் பேரன் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் இப்போது இத்தனை நவீனம் வந்தும் சுகமாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டுb போகின்றது அன்று எந்த வசதியும் இல்லாமல் எல்லாம் சுகமாக பெறுவிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடதக்கது

மருத்துவ மாது பிலோமினா ஜோசப்

மருத்துவ மாது பிலோமினா ஜோசப் இவர் 1928ஆம் ஆண்டு பத்தாம் மாசம் எட்டாம் தேதி ஜோசப் தம்பதிகளின் மகளாக பிறந்தவர் விடத்தல்தீவு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் சாதாரண தரத்தில் சித்தியடைந்து பின் யாழில் பிள்ளை பேறு மருத்துவம் கற்று, அரசு மருத்துவ சாலையில் பிள்ளை பேறு மருத்துவ தாதியாக இருந்தவர்.

கிட்டத்தட்ட 1952 ஆம் ஆண்டளவில் பதவியேற்றார் ஆரம்ப பதவியை யாழ் வைத்திய நிலையங்களில், பணிபுரிந்தார் பின் 1962ஆம் ஆண்டு பள்ளமடு ஆதார வைத்திய நிலையத்தில் பணிபுரிந்தார். முன்னைய காலங்களில் பிள்ளைப் பேற்றுக்காக,தமது இல்லங்களிலேயே ஊரில் உள்ள மருத்துவ ஆச்சிகளே பிரசவம் பார்ப்பது வழக்கம். அரசு வைத்தியத்தை நாடுவதில்லை அறுவை பிரசவமும் நடைபெறுவதில்லை.

பிரசவ காலங்களில் கடைசி மாதங்களில் மருத்துவ ஆச்சிகள் வீட்டிலேயே வந்து பல விதமான சரக்குகள் வாங்கி காயவைத்து இடித்து துணியிலே அரித்து எடுப்பார்கள் கற்பம் தரித்து ஏழாம் மாதத்தில் ஒரு நல்ல நாளில் நாட் கடைச்சரக்கு என எல்லாவிதமான சரக்குகளையும் நாட்டு மருந்து கடையில் முழு சரக்கும் வாங்கி கொடுப்பார்கள் பின்னர் அவை வாங்க தேவை இல்லை. மருத்துவ ஆச்சிகள் வெற்றிஆச்சி, ராசம்மா பெத்தா ஞானம்மா பெத்தா மாடத்தா பெத்தா சொக்க ஆரோரோக்கிய,பெத்தா, எனப் பல பெத்தாக்கள்,

சுயநலம் கருதாது களைப்பு கருதாது பெற்ற தாயையும்விட மேலான கனிவும் கண்டிப்புமாக இரண்டு அல்லது மூன்று மாதங்கள் பிரசவ வீட்டிலேயே பணிவிடை செய்து அங்கேயே தங்கி தாயையும் குழந்தையும் பராமரிப்பார்கள்.எங்கள் வீடும் மாமி வீடும் (சின்னமாக்கா) நிரந்தரமாக அந்த அன்பான அரவணைப்போடு கூடிய பெத்தாக்கள் தான்,அம்மா அடிக்கடி ஊர்ச்,சீதேவிப் பெத்தாக்களை சொல்லிச் சொல்லி மகிழ்வார். அன்றைய தாய்மையின் அருமருந்து அவர்கள் பல மூலிகைச் செடிகளின் பெயர் சொல்லி காட்டில் பறித்துக் தெடுத்து வந்து இரவிரவாக பெரிய பானையில் அவித்து மறுநாட் காலையில் பிள்ளை பெற்றெடுத்தவருக்கு சுடச்சுட குளிக்க வார்த்து மஞ்சள் தடவி ஏற்கனவே தயாராக இருந்த உணவை மறைவாக வைத்து பரிமாறுவார்கள்.

அவர்கள் தான் எங்கள் பாட்டிமார், அவர்கள் மனம் போல இவர்களும் தாராளமாக அள்ளி கொடுப்பார்கள் கோடி புடவையும் அரிசி நெல் உளுந்து தேன் என்பன அளிப்பதை கண்டுள்ளேன் வெற்றி ஆச்சியின் பின் அவர் மகள் புஷ்பமம்மாவும் மருத்துவச்சியாக பணி புரிந்தார். பள்ளமடு ஆதார வைத்தியசாலையில் 1936 ஆம் ஆண்டளவில் முதல் முதல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது நடராச முத்துபிள்ளை தம்பதிகளுக்கு (பெரியமடு) அப்பிள்ளைக்கு என் பாட்டனார் முத்துராசா என பெயரிட்டு வைத்தியசாலையில் பெரும் பரிசு கொடுத்ததார்.

அவர் பின்னர் முத்துராசா விதானையார் ஆக பதவியில் இருந்தார் பிலோமினா யோசப் பிளஸம் அன்ரி என அழைக்கப்பட்டார் அழகான தோற்றமும் நீண்ட தலை முடியும் இனிமையான குரலும் கொண்ட புனித அந்தோனியார் பக்தை. இவர்கலை உலகிலும் கால்பதித்தார் அன்றைய திரைப்படமான கடமையின் எல்லை தோட்டக்காரி என திரைப்படங்களில் நடிகையாக நடித்தார் ஊருக்குள்ளும் கற்பிணி பெண்களை தேடிச் சென்று மருத்துவ அறிவுரைகளை வழங்குவார் அரச வைத்தியசாலைகளில் பிரசவிக்க அறிவுரைகள் கூறுவார் பின்னர் பள்ளமடு ஆஸ்பத்திரி பிள்ளை பேற்றுக்கான இடமாக இருந்தது பிரசவம் மட்டுமல்ல தாதியாகவும் பணி செய்வார் எனது கடைசி தங்கையை அவரே பிரசவித்து இந்துமதி எனப் பெயரிட்ட வரும் அவரே,
அப்போது சிறு பராயத்தவளான, என்னிடம் தான் எழுதிய கதைகளை வாசிக்க தருவார் அறநெறியும் ஆன்மிகமும்,கருவாக இருக்கும். பின்னர் அவர் தீப்பொறி பத்திரிகையின் ஆசிரியர் அந்தனிசில் என்பவரைத் திருமணம் செய்தார் சொற்ப கால வாழ்க்கையில் விவாகரத்து பெற்றார். தன் மூத்த சகோதரியின் மறைவுக்குப்பின் அவர் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பில் இருந்தார் பிள்ளைகள் இல்லாததால் கடைசி காலத்தில் கொழும்புத்துறை முதியோர் இல்லத்திலும் மன்னார் பட்டி தோட்ட முதியோர் இல்லத்திலும் அந்தோனியார் புகழ் பாடிய வண்ணம் அவரடி, சேர்ந்தார்.

ஆளுமை நிறைந்த ஆசிரியர், அதிபர் அமரர் கி.றாஜகோண் அவர்கள்

அமரர் கி.றாஜகோண் அவர்கள் 1960ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதி திரு.திருமதி கிறிஸ்ரியான் தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்று கல்வி பொதுத்தர சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து தனது உயர் கல்வியை 1981ம் ஆண்டு யாழ்ப்பாணம் சுண்ணாகத்தில் நிறைவுசெய்தார்.

கல்வி பொதுத்தர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற அமரர் கி.றாஜகோண் அவர்கள் கண்டி பிரதேனியா பல்கலைக்கழகத்தில் 1982ம் ஆண்டு தொடக்கம் 1986ம் ஆண்டு காலப்பகுதிவரை கற்று பட்டதாரியாக பட்டம் பெற்றிருந்தார்.

பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டதாரியாக பட்டம் பெற்று எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று சமூகக்கல்வி, சித்திரம்,மற்றும் புவியியல் பாடங்களை சிறப்பாக கற்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது முன்னாள் அதிபர் அமரர் பெனடிக்ற் மாஸ்ரர் எமது பாடசாலை அதிபராக இருந்த காலப்பகுதியில் எமது பாடசாலையின் அப்போதைய வழக்கத்தில் இருந்த றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரை மாற்றி தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் விடத்தல்தீவு என்ற நாமம் எமது பாடசாலைக்கு சூட்ட அரும்பாடுபட்டிருந்தார்.

மடு கல்வி வலயத்தில் முதன் முதலாக ஆண்கள்,பெண்கள் சாரணியத்தை எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் உருவாக்கிய பெருமை அமரர் கி.றாஜகோண் அவர்களையே சாரும். தொடர்ந்து மடு வலயத்தில் எமது பாடசாலையில் மாணவ முதல்வர்களை உருவாக்கி பாடசாலை நிர்வாகத்தை விஸ்திரப்படுத்தியதுடன் எமது பாடசாலையில், Band வாத்திய குழுவை ஆரம்பித்து மடு வலய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக செயற்பட்டிருந்தார்.

இவ்வளவு பெரிய படிப்பு படிச்சும் தாய், தகப்பனுக்கு சொல்லு கேட்ட புள்ளையா, பதுமயா நடந்தார் எங்கட றோட்டால தோள்ள குடத்த வைச்சு விடியவும் ,மம்மல் கருகின நேரத்திலும் தண்ணி அள்ளிக்கொண்டு போவார்.

தானுண்டு தன்ர வேலயுண்டு என்டு படிச்ச படிப்புக்கு பந்தா இல்லாதவர். எல்லோரையும் மதிக்கும் பண்புநிறைந்தவர். பாடசாலையில் நிர்வாகத்தை திறம்பட நடாத்திய அதிபர் றாஜகோண் Sir என்டால் அது மிகையாகாது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகுந்த நன்மதிப்பை பெற்றிருந்தார் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான மாணவ மாணவிகளை மரியாதையாக நடாத்துவதில் அவருக்கு நிகர் எவருமிலர். இவர் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் யாவும் மரியாதையான சொற்பதங்களாகவே இருக்கும் சுடு சொற்கள் இவர் வாயிலிருந்து வரா. கடும் சொற்களை கொண்டு கடினமான வார்த்தைகளை உபயோகிக்கவே மாட்டார்.

எமது பாடசாலையில்கல்வியோடு, ஒழுக்கம், கட்டுப்பாடுகளைவளர்த்து இணைப்பாடவிதானங்களைசரிவர கைக்கொண்டு பாடசாலை விழாக்களை சிறப்பாக நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில்

சீருடையை மாணவர்கள் அணிவதில் குறிப்பாக பாதணி அணிந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருவதை நடைமுறைப்படுத்தியிருந்தார். மாணவ முதல்வர்களுக்கான சின்னத்தை வெள்ளியில் தயாரித்து சூட்டியதில் அதிபர் றாஜகோண் அவர்களது பங்கு அளப்பெரியதாகும்.

பாடசாலை ரீதியான விளையாட்டு போட்டிகள், வலய மட்ட போட்டிகள், மாகாண மற்றும் மாவட்ட மட்ட போட்டிகளுக்கு முன்னுரிமை வழங்கி மாணவர்களை தயார்ப்படுத்தி மடுவலயத்தில் எமது பாடசாலை பல சாதனைகளை நிலைநாட்ட சிறந்த நிர்வாக ஆளுமையை கொண்டிருந்தமை அவரிடமிருந்த சிறப்பியல்பாகும்.

பாடசாலை நிர்வாகத்திற்கும், பழைய மாணவர்கள், பெற்றோருக்கு இடையில் நல்லுறவை பேணியதுடன் பாடசாலையின் அபிவிருத்தியில் ஆதீத பங்காற்றியிருந்தார்.

*1997*ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்து ,பின்னர் மன் /ஆண்டான்குளம் பாடசாலையின் அதிபராக மாற்றலாகி அங்கு பணியாற்றியிருந்தார். தொடர்ந்து *1999*ம் ஆண்டு காலப்பகுதியில் மடு கல்வி வலய சமூகக்கல்வி உதவி கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மடு வலயத்தில் உதவி கல்வி பணிப்பாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் *MED* டிப்ளோமா பட்டம் பெற்று தனது நிலையை மென்மேலும் வளர்த்துக்கொண்டவர் எமது அதிபர் அமரர் கி.றாஜகோண் அவர்களாவார்.*2003* ம் ஆண்டு தொடக்கம் *2007*ம் ஆண்டு வரை மடு வலய கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றியதுடன் எமது மடு ,மாந்தை பிரதேசத்தில் கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திகளை பெறுவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மடு கல்வி வலயத்தின் ஊடாக மேற்கொண்டிருந்தார்.

*2007*ம் ஆண்டு மாசி மாதம் *28*ம் திகதி இலுப்பைக்கடவையில் நாட்டுக்கூத்து ஒன்றை அரங்கேற்றியிருந்தார். விளாத்திகுளம் கீரிசுட்டான் பாடசாலையில் எமது கிராமத்தின் ஆசிரியர் அமரர் சி. அமலநேசன் அவர்கள் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் விளையாட்டு போட்டிக்கு அதிதியாக பங்கேற்கும் வகையில் பயணித்திக்கொண்டிருக்கும் சமயத்தில் ஆள ஊடுருவும் படையணியின் கிளைமோர் குண்டு தாக்குதலுக்கு இலக்காகி அகாலமரணமடைந்தார்.

சிறந்த கல்விமானாக,உயரிய பண்பாளனாக நிலை உயரும் போது பணிவுகொண்டு எமது பாடசாலையையும் ,கிராமத்தையம் மேம்படுத்த பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட எமது அதிபர் அமரர் கி.றாஜகோண் அவர்களது இழப்பு எமக்கும் எமது சமூகத்திற்கும் ஈடுசெய்யமுடியாத, மீள்நிரப்பப்படாத பேரிழப்பாகும்.

றொயிற்றன்

விடத்தல்தீவை சொந்த இடமாக கொண்டு இடம்பெயர்ந்த நிலையில் எமது ஜோசப்வாஸ் நகரில் வசிக்கும் றூபன் மற்றும் விஜயா அவர்களின் தலை பிள்ளயாக *1* தங்கச்சி ,*3* தம்பிகளுடன். சந்தோசமாக வாழ்ந்துவந்தவன்.

ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்திலும் தனது இடைநிலை மற்றும் உயர்கல்வியை மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் புனித டிலாசால் விடுதிச்சாலையில் தங்கியிருந்து கற்றுத்தேர்ந்தான். பாடசாலை நாட்களில் கல்வியோடு மட்டுமல்லாமல் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் விளையாட்டுகளில் சிறந்த வீரனாக வலம்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மாணவ பருவத்தில் சக மாணவ நண்பர்களிடத்தில் அதிக நட்பு உறவை பேணிய றொயிற்றனுக்கு அதிகளவு நட்புவட்டாரங்கள் இருந்தது. எல்லோரிடமும் சகஜமாக பழகி நட்பை பேணி வந்திருந்தான்.

தனது வாழ்க்கை துணையாக தான் காதலித்த சாந்தினி அவர்களை கரம்பற்றி தாழ்புபாடு கிராமத்தின் மருமகனாக எல்லோரும் நேசிக்கும் அளவிற்கு அவனது புகுந்த வீட்டில் எமது ஊரின் பெருமை பேசப்படும் வகையில் தனது வாழ்க்கையை வாழ்ந்தவன். குறிப்பாக எமது கிராமத்தில் இருந்து பிற இடங்களில் மணமுடித்தவர்களுள் றொயிற்றனின் வாழ்வு தனிச்சிறப்புவாய்ந்தது எனலாம். எமது ஊரின் அருமை பேருமைகளை பேசும் பொருளாக கொள்ளத்தக்க வகையில்தனது சொந்த உழைப்பில் பல நற்பணிகளையும், உதவிகளையும் செய்துகொண்டிருந்தான். தாழ்புபாடு இளைஞர் மத்தியிலும், விளையாட்டு கழகத்திலும், இன்னும் தாழ்புபாடு சமூக மக்களின் பலரின் அன்புக்கும் பாசத்திற்கும் உரியவனாக வாழ்ந்திருந்தான். தனது அயராத கடும் முயற்சி மற்றும் நேர்மையான உழைப்பினாலும் சமூகத்தில் உயர்ந்து கொடுத்து உதவி வாழ்ந்து வந்தவன் எமது றொயிற்றன்.

தமிழ் தேசியம் சம்மந்தமாக கதைப்பான். தமிழ்தேசியத்தில் அதீத பற்றுகொண்ட அவனது நடவடிக்கைகள் அதற்கு சான்றாக இருக்கும். றொயிற்றன் முதன் முதலாக ஆண்டாங்குள மைதானத்தில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்ட அணி சார்பாக தனது 15 வயதில் விளையாட எங்களோடு அணியில் இடம்பிடித்து தனது துடிப்பான, வேகமான ஓர்மமான விளையாட்டை வெளிப்படுத்தியிருந்தான்.

பண்டிவிரிச்சான் முத்துக்கள் மூன்று வெற்றிக்கிண்ணம் , குமரன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி காத்தாங்குளம், வீர பிரசவ வெற்றிக்கிண்ணம் வட்டக்கண்டல் வலைப்பாடு ,AGA டிவிசன் போட்டிகள் போன்ற ஏகப்பட்ட போட்டிகளில் எம்மோடு ஐக்கிய விளையாட்டுக்கழக A அணியில் இடம்பிடித்திருந்தான். அவனக்கிருந்த ஊர் பற்றும் ஓர்மமும் விளையாட்டில் அவனை உயரத்திற்கு இட்டுச்சென்றது என்றால் அது மிகையாகாது.

சமூகப்பணிகளைதன்சிரமேல்கொண்டுஅவற்றைநேர்த்தியாகசெய்யும்வல்லமைஅவனிடத்தில்நிறையவே இருந்தது. எதற்கும் அவன் பின்னிப்பதில்லை. ஊரில் அனைத்து விடயங்களிலும் அவனது பங்களிப்பு இருந்தே தீரும். ஆலயம், ஆன்மீகம், பாடசாலை, விளையாட்டு ஊரின் அசாதாரண சூழ்நிலைகளில் உதவும் பண்பு ,மற்றும் விளையாட்டு கழகத்தினதும், விளையாட்டு வீரர்களினதும் வளர்ச்சியில் அவனது பங்கு அளப்பெரியதாக இருந்தது. எமது கழகம் சார்பாக அனைத்து போட்டிகளுக்கும் சென்று உற்சாகமூட்டுவது அவனது இயல்பாய் இருந்தது

ஊரில் அவன் கொண்டிருந்த பற்று அக்கறையின் நிமித்தம் கடந்த பிரதேச சபை தேர்தலில் வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்து ஊர் மக்களின் ஆதரவை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எமது சமூகம் சார்ந்த மாணவர்களது பிரதிநிதியாக மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளராக முன்மொழிவு செய்யப்பட்டு பாடசாலையின் கல்வி ,ஒழுக்கம் மற்றும் விளையாட்டு வளர்ச்சியில் செயல்வீரனாக செயல்பட்டுக்கொண்டிருந்தான். இறுதியாக கடந்த 9/2/2025 ம் திகதியில் மாவட்ட ரீதியில் நடைபெற்ற சதுரங்க போட்டி சம்மந்தமாக 13/2/2025 அன்றும் கூட என்னோடு கதைச்சிருந்தான். அந்த போட்டியில் வெற்றியீட்டி மாகாண மட்டத்திற்கு தெரிவான எமது ஊர் பிள்ளைகள் சம்மந்தமாக தகவலை முகநூலில் பதிவிட சொல்லி தகவல் தந்திருந்தான்.

அவன்ர மரண செய்தி கேட்ட அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. சாவை ஏற்றுக்கொள்ள மனசு மறுக்கிறது. அஞ்சாறு பேர் சேர்ந்து கூட அடிக்க பயப்படும் உருவம் தான் அவன். அவனுக்கா இந்த சாவு .

விடத்தல்தீவு சங்கீத குழு தலைவராக சீமாம்பிள்ளை அவர்கள்



1903 ம் ஆண்டு பங்குனி மாதம் 3ம் திகதி திரு.திருமதி சலமோன் அவர்களுக்கு கடைசி மகனாக 2 சகோதரர் மற்றும் 1 சகோதரிகளுடன் எமது விடத்தல்தீவில் பிறந்தார் சீமாம்பிள்ளை அவர்கள். தமது இளம்வயதில் இசைத்துறையில் கொண்டிருந்த அதீத ஆர்வத்தின் காரணமாக ஆர்மோனிய இசையை கற்று எமது ஊர் சார்பான விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி என்ற நாமத்தில் இசைக்குழுவொன்றை உருவாக்கி பல இசை கச்சேரிகளை நடத்திவந்தார்.

இசைக்குழுவினதும், இசை வளர்ச்சியை கருத்தில் கொண்டு இசை விடுதி ஒன்றை உருவாக்கியதுடன், பல்வேறுபட்ட கச்சேரிகளை நடத்தி பல பாடல்களை பாடி, இசை கருவிகளான ஆர்மோனியம்,புல்லாங்குழல், மிருதங்கம்,கைத்தாளம் மற்றும் ஏனைய இசை சாதனங்களை இந்தியாவில் இருந்து பெற்று அவற்றை சிறப்பாக பயன்படுத்தி இசை கருவிகளை மீட்டி கச்சேரிகளை மெருகூட்டியிருந்தார்.

சீமாம்பிள்ளை அவர்களின் இசைத்துறையானது 1940 ம் ஆண்டில் மாந்தை ,மற்றும் அடம்பன் ஆகிய பிரதேசங்களில் இசைக்கச்சேரிகளை நடத்தி அரங்கேற்றம் செய்யப்பட்டதுடன் நாளடைவில் விடத்தல்தீவு சங்கீத கோஸ்டியின் தலைவராக அரசாங்கத்தின் அனுமதி பெற்று தமது கச்சேரிகளை நடத்திவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சீமாம்பிள்ளை அவர்கள் பழமைவாய்ந்த பாடல்களில் ஒன்றான “கற்பக வல்லியுன் பொற்பதங்கள் பிடித்தேன்” எனும் இராக மெட்டில் புனித மரியன்னைக்கு “அற்புத அன்னையுன் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா” என்ற பாடலை இயற்றி மருதமடு அன்னைக்கு சமர்ப்பணம் செய்திருந்தார். அத்துடன் தமது பேரனின் வியாதி காரணமாக எமது விடத்தல்தீவு புனித அடைக்கலமாதாவுக்கென பாடல் ஒன்றை இயற்றி “சோதனை மேல் சோதனை போதுமம்மா தாயே, வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது நெஞ்சம்” என அமையும் பாடல் வரிகளை எழுதி வரம்கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு விடத்தல்தீவில் இசை வளரவும், இசையை எமது மண்ணும், மக்களும் தமது வாழ்விலும், ஒவ்வொரு தருணங்களிலும் கொண்டு வாழவும் விடத்தல்தீவு சங்கீத கோஸ்டி மூலமாகவும் தனது தனிப்பட்ட இசை அனுபவங்களூடாகவும் இசைத்துறையில் அன்னை மரியாளின் மேல் அதீத பக்தி, விசுவாசத்தை கொண்டிருந்தவராக தமது இசை ஞானத்தை தனது வழித்தோன்றல்களுக்கும், ஊரவர்களுக்கும் பயிற்றுவித்த சீமாம்பிள்ளை அவர்கள் தனது முதுமை காரணமாக 1988ம் ஆண்டு பங்குனி மாதம் 29ம் திகதி இறைபதமடைந்தார்.

பிரான்ஸ் தேசத்தில் பிரகாசிக்கும் கன்னிமலர்.

மன்னார் விடத்தல்தீவு றோமன்/ கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபர் அமரர் இராயப்பு, அதிபர் அமரர் பெனடிற் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றிய காலப்பகுதியில் ஆசிரியர்களாக, ஆசிரியர் அமீன், ஆசிரியை பொலீன் மற்றும் ஆசிரியை அல்வீனஸ் ஆகியோர் கற்பித்த நாட்களில் பாடசாலையின் கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதானங்களில் எமது பாடசாலை சிறப்பாக செயற்பட்டிருந்தது.

அந்த காலகட்டத்தில் எமது பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணித் தலைவியாக இருந்து அணியின் வெறாறிக்கு பல வழிகளில் முன்னுதாரணமாக திகழ்ந்தவர் என்றால் அது செபமாலை .கன்னிமலர் என்பது மிகையாகாது. அந்த காலகட்டத்தில் கன்னிமலர் தலமையில் எமது வலைப்பந்தாட்ட அணியில் மரியசீலி செபரட்ணம் ,உருசிலா தொபியாஸ், மேரிராணி சவேரியான் ,அமலோற்பவி மிக்கேல் ,மேரியன்னா அந்தோனிப்பிள்ளை, ஆகத்வரோணிக்கா செபஸ்தியாம்பிள்ளை ஆகிய வீராங்கனைகளை கொண்டு எமது அடம்பன் பிரதேச வட்டாரத்தில் சிறந்த ஒரு அணியாகத் திகழ்ந்து பல வெற்றிகளை ஈட்டியிருந்தனர்.

எமது பாடசாலை ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுனர் திறனாய்வு போட்டிகளில் எமது கிராமத்தின் செபமாலை கன்னிமலர் அவர்கள் தனதுபதினொருவயது பிரிவில் இருந்து ஒவ்வொரு வயது பிரிவிலும் அனைத்து தடகள போட்டிகளிலும் சிறந்த வீராங்கனையாக வலம்வந்து முதன்மை வீராங்கனையாக சாதனை படைத்திருந்தார். அந்த வகையில் 100 m ஓட்டம், 200 m ஓட்டம் உயரம்பாய்தல் போன்ற விளையாட்டுக்களில் முதலிடம் பெற்று சம்பியனாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கன்னி மலர் அவர்கள் எமது மாந்தை மேற்கு மற்றும் அடம்பன் வட்டாரத்திலும் மன்னார் மாவட்ட ரீதியிலும் தொடர் சம்பியனாகத் திகழ்ந்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் அஞ்சலோட்டம் ,நீளம்பாய்தல் நிகழ்ச்சிகளிலும் பாடசாலை வலைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்த சிறப்பான ஆட்டத்தை அந்நாட்களில் வெளிப்படுத்தி விளையாட்டுத்துறையில் சாதனை நிலைநாட்டியிருந்தார். எமது விடத்தல்தீவு முன்னாள் பங்குத்தந்தையும், எமது ஐக்கிய விளையாட்டுக்கழக ஸ்தாபகருமான அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் அவர்களால் எமது கிராமத்தில் ஐக்கியவிளையாட்டுக் கழகம் ஆரமாபிக்கப்பட்ட அந்நாட்களில் கழகத்தின் தலமை பதிவியில் அங்கம் வகித்து தலைவராக கழகத்தை சிறந்த முறையில் நிர்வகித்திருந்தார். அருட்பணி றெஜீஸ் ராஜநாயகம் அடிகளாரை தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி ஜெயசேகர் அடிகளாரினால் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் வழிநடத்தப்பட்டது.

பின்னர் தனது உயர் கல்வியை கன்னிமலர் அவர்கள் மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் தொடர்ந்தார். அந் நாட்களில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் வலைப்பந்தாட்ட அணியிலும் , தடகள போட்டிகளிலும் சிறப்பான முறையில் பங்குபற்றி பாடசாலை ரீதியிலும் மன்னார் மாவட்டத்திலும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு வரலாற்றில் இடம்பிடித்தார்.
பாடசாலை ரீதியாகவும் ,மாவட்ட ரீதியாகவும் பிரகாசித்த கன்னிமலர் அவர்கள் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற போட்டிகளுக்காக மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி (D .S.O.) அவர்களால் ஊக்கப்படுத்தப்பட்டு ,பயிற்சிகளை பெற்று அகில இலங்கை மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றி சாதனை நிலைநாட்டியிருந்தார். தடகள போட்டிகளிலும் ஏனைய மைதான பெரு விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கிய கன்னிமலர் அவர்கள் விளையாட்டு விளையாட்டு பயிற்சி ஆசிரியராகவும் ,பெண்களுக்கான விளையாட்டு அதிகாரியாகவும் (L. S. O.) எமது மண்ணில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து கன்னி மலர் அவர்கள் அந்நாட்களில் மன்னார் மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் செயலாளராக பதவிவகித்திருந்தமையும் கன்னிமலர் அவர்களது சிறப்பம்சமாகும்.

எமது மண்ணில் ,மாவட்டத்தில், அகில இலங்கை ரீதியாக விளையாட்டுத்துறையில் பிரகாசித்த எமது கன்னிமலர் அவர்கள் துர்அதிஸ்டவசமாக எமது நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு
பிரச்சைனகள் காரணமாக நாட்டை விட்டு புலம்பெயர்ந்த நிலையில் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்துவருகிறார். பிரான்ஸ் தேசத்தில் நடைபெற்ற தமிழர் விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றி பல விளையாட்டு நிகழ்வுகளில் பரிசுகளையும், வெற்றிகளையும் தனதாக்கிய பெருமை எமது கன்னிமலர் அவர்களையே சாரும். அத்துடன் பிரான்ஸ் தேசத்தில் நடைபெற்றுவரும் விளையாட்டு போட்டி நிகழ்வுகளில் குறிப்பாக வலைப்பந்தாட்டம் மற்றும் மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளுக்கு நடுவராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக விடத்தல்தீவு மண்ணில் பிறந்த கன்னிமலர் என்ற விடிவெள்ளி எமது மண்ணிலும் எமது தாயகத்திலும் விளையாட்டுத்துறையில் ஒளிர்ந்து புலம்பெயர்ந்த தேசம் சென்றும் அங்கே தொடர்ந்தும் பிரகாசித்து வருது எமக்கும் எமது மண்ணுக்கும் பெருமையே.

மன்னார் மாவட்ட உதைபந்தாட்டத்தின் தந்தை அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லொஸ்

இலங்கையில் பல்வேறுபட்ட பகுதிகளில் வாழும் பல்வேறுபட்ட துறைகளில் வித்தகர்களாக மிளிரும் ஆயிரக்கணக்கான வர்களின் Role model எமது மண்ணின் மைந்தன் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் என்றால் அது மிகையாகுது.

“இஞ்ச பார் குஞ்சு விளையாட்டோடு படிப்பும் இருக்கோணும் தனிய விளையாட்டு மட்டும் இருந்து வேலயில்லை படிப்போட விளையாடணும்” என்று தமது சொந்த வாழ்கை வரலாற்றை முன்னுதாரணமாக கொண்டு கல்வியோடு கூடிய இணைப்பாடவிதானங்களை சிறப்பாக தமது மாணவர்கள் கொண்டு அதில் வெற்றியும் காண காரணகர்த்தாவாக இருந்துவருகிறார். இலங்கைத்தீவில் வடக்கே A32 யாழ்ப்பாண மன்னார் பிரதான வீதியில் மன்னார் மாவட்ட புகழ்பூத்த பல வரலாற்று சிறப்புகளை கொண்டிருக்கும் எமது விடத்தல்தீவின் அமரர் சுவக்கின், செபமாலை (முத்தம்மா) தம்பதிகளின் கடைசி பிள்ளையாக 3/10/1958 ம் ஆண்டு பிறந்தார்.

அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் தமது ஆரம்ப கல்வியை 1964 - 1968 காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் (தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் விடத்தல்தீவு.) தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்றிருந்தார் தனது சிறு பராயத்தில் இருந்தே உதைபந்தாட்டத்திலும் ,தடகள போட்டிகளிலும் முன்னிலை வகித்து 11வயது பிரிவு தடகள முதன்மை வீரனாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

பின்னர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1969 ம் ஆண்டு தொடக்கம் 1974 ம் ஆண்டு வரை தரம் 6 தொடக்கம் தரம் 11 (SSC) வரை கற்று 1D 4C 3S என்ற சித்திகளை பெற்றதுடன் கல்வி பொதுத்தர உயர்தர பரீட்சையில் 2B C S என்ற பெறுபேறுகளை பெற்றிருந்தார். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் விளையாட்டு வரலாற்றில் 13 வயது பிரிவு ,15 வயது பிரிவு மற்றும் 17வயது பிரிவு தடகள போட்டிகளின் முதன்மை வீரனாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் 1985 ம் ஆண்டு ,1986 ம் ஆண்டு ,1987 ம் ஆண்டு ,1988 ம் ஆண்டு மற்றும் 1989 ம் ஆண்டுகளில் யாழ்ப்பாண பல்கலைகழக உதைபந்தட்டம், கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்து, மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் சாதனை படைத்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைகழக உதைபந்தட்ட அணி ,கூடைப்பந்தாட்ட அணி ,மேசைப்பந்து அணி மற்றும் தடகள போட்டிகளின் அணி தலைவராக பதவி வகித்ததுடன் பல்கலைக்கழக விளையாட்டு சபையின் முதல்வராக பதவிவகித்துள்ளார். அத்துடன் 400 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் யாழ் பல்கலைகழக சாதனைவீரனாக அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் சாதனைபடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

புனித டிலாசால் சபையின் அருட்சகோதரராக தனது முதலாவது வாக்குத்தத்தை 17/9/1977 ம் வருடத்திலும், இறுதி வாக்குத்தத்தை 18/8/1984 ம் வருடத்திலும் நிறைவுசெய்துள்ளார். அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் தனது ஆசிரிய பணியின் நிமித்தம் கொட்டேனா கொழும்பு 15 இல் அமைந்துள்ள சென் பெனடிக்ற் கல்லூரியில் 1979 ம் ஆண்டில் இருந்து 1984 ம் ஆண்டுவரை 5 வருடங்கள் ஆசிரியராக பணியாற்றியிருந்தார்.

தொடர்ந்து எமது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் ஆசிரியராக 1993 ம் ஆண்டு நியமனம்

பெற்று பணியாற்றிவந்தார். அந்த காலப்பகுதியில் தான் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி உதைபந்தாட்ட அணி பல மாஜாயால உதைபந்தாட்ட ஜாம்பவான்களை உள்ளடக்கிய அணியாக உதைபந்தாட்டத்தில் சிறந்த கழகங்களுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக இருந்த வரலாறு மறக்கமுடியாததாகும். குயவன் கையில் கிடைத்த களிமண் அழகிய மண்பாண்டமாக மாறுவதை போலவே அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களது பயிற்சி பட்டறையில் வழிவந்த ஒவ்வொரு வீரரும் தத்தமது திறன்களை வளர்த்துக்கொண்டார்கள்.

காலையில் தொடங்கும் பயிற்சி, மாலையிலும் தொடரும். கல்வியோடு ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து விளையாட்டில் மேம்பட அனைத்து மாணவர்களையும் உருவாக்கிய சிறந்த சிற்பியாக எமது அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் இருந்துள்ளார் என்றால் அது மிகையல்ல. உதைபந்தாட்டம் ,மேசைப்பந்து, கூடைப்பந்து , மற்றும் தடகள போட்டிகளுக்கென ஒவ்வொரு வீரனையும் இனம் கண்டு அந்த துறையில் சாதாரணமாக இருப்போரை சரித்திர நாயகர்களாக்கி பெருமை சேர்த்தவர் எமது அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள்.

1993ம் ஆண்டின் பிற்பகுதியில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி உதைபந்தாட்ட அணி மன்னார் மாவட்ட சிறந்த உதைபந்தாட்ட அணிகளுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக திகழ்ந்த காலம் எனலாம். பார்வையாளர்கள், உதைபந்தாட்ட ரசிகர்கள் College விளையாடும் போட்டிகளை கண்டுகளிக்க முண்டியடித்து வந்து பார்வையிட்ட அந்த நாட்களை எளிதில் மறந்துவிட முடியாது. உதைப்பந்தாட்ட ஜாம்பவான்களான பங்ளி, அனஸ்ரின், ஜோகேஸ், கெஸி, வில்மன், செபமாலை யூட், எட்வின், ஞானராஜ், சங்கர் போன்ற வீரர்களை கொண்ட புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் இறுதி 10 நிமிடங்களில் மைதானத்தினுள் பிரவேசித்து விளையாட்டின் தன்மையை மாற்றி பெறுபேறுகள் என்ன நிலையில் இருந்தாலும் Xaverian Spirit இதுதான் என எதிரணிகள் விளங்கிக்கொள்ளும் வகையில் மாஜாயல வித்தைகளை நிகழ்த்தி மைதானத்தை சுற்றி கரகோசத்தால் நிறைந்த உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் மாணவர்களின் தோழில் வைத்து கொண்டாடப்பட்ட எமது அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களது நுட்பம் நிறைந்த விளையாட்டு அந்நாட்களில் திருவிழாவை ஒத்ததாகவே காணப்பட்டது.

ஆட்டம் சூடுபிடித்து இக்கட்டான நிலையில் முதல் பாதி நிறைவுற்றதும் college ரீம் வந்து அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களை சுற்றிநின்று அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் சொல்லும் ஒவ்வொரு நுட்பங்கள்யும், அறிவுறுத்தல்களையும்,விளையாடிய முதல்பாதியின் சரி பிழைகளை சொல்லும் விதத்தையும் அடுத்து வரப்போகும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் என்னமாதிரியான நுட்பங்களை கையாள வேண்டும் என்ற உதைபந்தாட்ட வியூகங்களை சொல்வதை கேட்பதற்காகவே கூடும் கூட்டம் அருட்சகோதர் ஸ்ரனி அவர்களது உதைபந்தாட்ட மதிநுட்பவியலுக்கு சான்றுபகரும்.

அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் கடந்த 1993 ம் வருடத்தில் புனித சவேரியாரா கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்று பணியாற்றியிருந்ததுடன் 1997ம் ஆண்டில் இருந்து 2010ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்று கல்லூரியின் கல்வி ,விளையாட்டு ,ஒழுக்கம் மற்றும் ஏனைய பாடசாலை சார் அனைத்து விடயங்களிலும் இமாலய சாதனை அடைய காரணகர்த்தாவாக இருந்துள்ளார். மன்னார் மாவட்டத்தின் பெருநிலப்பரப்பில் தமது சேவையை தொடரும் வகையில் தொடர்ந்து 2011 ம் ஆண்டு தொடக்கம் 2013 ம் வருடம் வரை முகாமைத்துவ பிரதி கல்வி பணிப்பாளராக மடு கல்வி வலயத்தின் தமது சேவையை ஆற்றியிருந்தார்.

பின்னர் மன்னார் பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலய அதிபராக கடந்த 2013 ம் ஆண்டில் இருந்து 2018 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அதிபராக நியமனம் பெற்று பேசாலை பகுதியில் சிறப்பான சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் அதிபராக 1997ம் ஆண்டு நியமனம் பெற்று சுமார் 10 தடவைகள் எமது கல்லூரியன் உதைபந்தாட்ட அணியானது மாவட்ட ரீதியாகவும், மாகாண ரீதியாகவும், தேசியளவிலும் தேசிய சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டிருந்த காலம் College வரலாற்றில் பொற்காலமாக இருந்தமை மறக்க முடியாததாகும்.

மேலும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியானது 5 தடவைகள் தேசிய ரீதியாக உதைபந்தாட்டத்தல் 2வது இடத்தையும், 5 தடவைகள் தேசீய ரீதியாக 3வது இடத்தை உதைபந்தாட்ட போட்டியில் பெற்றிருப்பதும் எமது அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களது பணிக்காலத்தில் என்பதும் சிறப்பே.

பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலய அதிபராக பணிபுரிந்த 2013 - 2018 வரையான காலப்பகுதியில் படசாலை புனித பற்றிமா மகாவித்தியாலயம் தடகள போட்டிகளில் மாகாண சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் பூப்பந்து போட்டியில் தேசிய ரீதியாக சம்பியனாக ஆண்கள் மற்றும் பெண்கள் அணியினர் சம்பியனாக தெரிவான வரலாறும் எமது அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களையே சாரும்.

அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் புனித டிலாசால் சபையின் *Postulancy* இயக்குநராக (கொழும்பு முத்வல்) பணியாற்றியதுடன் ,மன்னார் புனித டிலாசால் இல்லத்தின் இயக்குநராகவும், மன்னார் மறைமாவட்ட டிலாசால் சபையின் அருட்சகோதரர்களது , ஆலோசகராகவும் அவர்களது இணைப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

அருட்சகோதர் ஸ்ரனி அவர்களினதும் ,மன்னார் மண்ணில் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சியல் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் ஆற்றிய இமாலய சாதனைகளை கருத்தில் கொண்டு “மன்னார் மண்ணின் உதைபந்தாட்டத்தின் தந்தை” என்ற உயரிய கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை வரலாறாகும். மேலும் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களது வாழ்க்கை வரலாறு கல்வியோடு இணைந்த விளையாட்டாகவே இருந்து வந்தது . தமது உயர்கல்வியை யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் *1984*ம் ஆண்டு தொடக்கம் *1989* ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கற்று *B.Com* பட்டம் பெற்றவுடன், றோமாபுரியில் *1990*களில் *Formators* பாடநெறியை பூர்த்திசெய்திருந்தார். தொடர்ந்து *08/12/1992* ம் வருடத்தில் *M.A.*பட்டத்தையும் பெற்றிருந்தார். அத்துடன் கொழும்பு திறந்த பல்கலைகழகத்தில் *1/4/1996* ம் ஆண்டு காலப்பகுதியில் கல்வியில் டிப்ளோமா பட்டத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இன்னும் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் கொழும்பு பல்கலைகழகத்தில் *PGDEM* என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார். *2006* ம் வருடத்தில் *MED* பட்டத்தை யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் பெற்றுள்ளமை அருட்சகோதரர் ஸ்ரனி அவர்கள் கொண்டிருக்கும் தமது கல்வி சார் தகமைகளின் சிறப்பம்சமாகும்.

ஊரில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வலைப்பாடு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு போக முதல் *2* நாட்கள் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களுடைய தலைமையில் *A B* ஆகிய இரு அணிகள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. அந்த போட்டியில் எலியாஸ் அண்ணன் *Bro* .ஸ்ரனி ஆகியோரின் இணைந்த சிறப்பான ஆட்டத்தின் பயனாக *AB* அணிகள் இரண்டும் இறுதியாட்டத்திற்கு தெரிவாகியிருந்தமை வரலாறாகும். மேலும் எமது விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் தலைவராக கடந்த *3* வருடங்கள் பதவிவகித்து சிறப்பான சேவையை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தனது சிறுபராயத்தில் இருந்தே தனது கல்வியோடு, இணைந்த விளையாட்டையும் சமமாக பேணி அதில் வெற்றியும் கண்டு மன்னார் உதைபந்தாட்டத்தின் தந்தையாக கௌரவிக்கப்பபட்டுள்ளார்

“இடிபாடுகளிலிருந்து வேர்கள் வரை: ரிச்சர்டின் மறுமலர்ச்சி பயணம்”

சிறிய மற்றும் விளிம்புநிலை சமூகங்களுக்கு வளர்ச்சி என்பது ஒரு தொலைதூரக் கனவாகவே இருக்கும் உலகில், விடத்தல்தீவு மற்றும் அதன் அண்டை குடியிருப்புகளான ஈச்சலவக்கை, ஜோசவாஸ் நகர் மற்றும் தோட்டவெளி ஆகிய கிராமங்கள் நம்பிக்கை மற்றும் மாற்றத்தின் கலங்கரை விளக்கங்களாக மாறியுள்ளன. இந்த மாற்றத்தின் மையத்தில் விடத்தல்தீவின் மகனான சவேரியன் ரிச்சர்ட் தேவராஜ் உள்ளார், அவர் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்தாலும், தனது வேர்களை ஒருபோதும் துண்டிக்கவில்லை. சேவை நிறைந்த இதயத்துடன் அவர் நிறுவிய *SRT* அறக்கட்டளை மூலம், ரிச்சர்ட் தான் வீடு என்று அழைக்கும் சமூகத்தை மேம்படுத்தவும் மீண்டும் கட்டியெழுப்பவும் அயராது உழைத்து வருகிறார்.

அறக்கட்டளையின் மிக ஆழமான பங்களிப்புகளில் ஒன்று கல்வித் துறையில் உள்ளது. சமீபத்தில், *SRT* அறக்கட்டளை தோட்டவெளி நூலகத்திற்கு கல்விப் பொருட்களை குறிப்பிடத்தக்க அளவில் நன்கொடையாக வழங்கியது. தமிழ், சமூக ஆய்வுகள், அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற அத்தியாவசிய பாடங்களை உள்ளடக்கிய *3, 4* மற்றும் *5* ஆம் வகுப்புகளுக்கான தமிழ் கல்வி புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன, மேலும் பரந்த அணுகலை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு புத்தகத்தின் மூன்று பிரதிகளும் வழங்கப்பட்டன. கூடுதலாக, *G.C.E. 2013* முதல் *2022* வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கிய சாதாரண தர (சா/த) கடந்த கால வினாத்தாள் தொகுப்புகள், மூத்த மாணவர்கள் தங்கள் முக்கியமான தேர்வுகளுக்குத் தயாராக உதவுவதற்காக நன்கொடையாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு புத்தகமும் பெருமையுடன் *SRT* அறக்கட்டளையின் அடையாளத்தைத் தாங்கி நிற்கிறது - இது சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் அடையாளமாகும்.

இதன் தாக்கம் புத்தகங்களை ஒப்படைப்பது மட்டுமல்ல; கற்றலுக்கான இடத்தை புத்துயிர் பெறுவது பற்றியது. ஒரு காலத்தில் முழுமையடையாத சுவர்கள் மற்றும் ஜன்னல்கள் இல்லாத ஒரு இடிந்த கட்டிடம், உறுதியான காட்சி மேசைகள், ஒழுங்கமைக்கப்பட்ட அலமாரிகள் மற்றும் இயற்கை ஒளி ஊற்றப்படும் ஒரு துடிப்பான நூலகமாக மாற்றப்பட்டது. உள்ளூர் தன்னார்வலர்கள் ஒன்றிணைந்து பணியாற்றினர் - சம்பிரதாயங்கள் இல்லை, கைகள் மற்றும் இதயங்கள் மட்டுமே - இடத்தை கற்றலின் சரணாலயமாக மாற்றினர். இந்த எளிய ஆனால் ஆழமான செயலில், SRT அறக்கட்டளை ஒரு நூலகத்தை மட்டும் உருவாக்கவில்லை; அவர்கள் கிராமத்தின் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்கான ஒரு பாலத்தைத் திறந்தனர்.

கல்விக்கு அப்பால், ரிச்சர்டின் சேவை சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கையை மீட்டெடுப்பதில் நீட்டிக்கப்பட்டது. இழப்பு மற்றும் புறக்கணிப்பைக் குறிக்கும் ஒரு காலத்தில் பாழடைந்த கட்டமைப்பாக இருந்த பெரியமடு தேவாலயம், இப்போது அழகு மற்றும் நம்பிக்கையின் வீடாக மாற்றப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் அயராத நிதி திரட்டும் முயற்சிகள் மூலம், ரிச்சர்ட் தேவாலயத்திற்கு புதிய உயிர் கொடுக்க ஆதரவைத் திரட்டினார். இன்று, அது புதிதாக வர்ணம் பூசப்பட்டு, அழகாக ஒளிரச் செய்யப்பட்டு, ஒரு புதிய பலிபீடம் மற்றும் சரியான இருக்கை ஏற்பாடுகளுடன், கவனமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இடிந்து விழுந்த தேவாலயம், இப்போது அதன் இருக்கைகள் மக்கள் பிரார்த்தனை செய்து ஆறுதல் பெறுவதால் நிரம்பியிருப்பதைக் காண்கிறது - நம்பிக்கையின் துடிப்பான சின்னம் மீண்டும் பிறக்கிறது.

இருப்பினும், ரிச்சர்டின் சமூகத்திற்கான பார்வை கல்வி மற்றும் மதத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை; அது வாழ்க்கையை நிலைநிறுத்தும் மண்ணுக்கும் நீட்டிக்கப்பட்டது. SRT அறக்கட்டளை மூலம், ஈச்சலவாக்கை குடியிருப்பாளர்களிடையே தென்னை, வாழை மற்றும் மா மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த விநியோகம் வெறும் ஒரு துண்டுப்பிரசுரம் மட்டுமல்ல, நிலைத்தன்மை மற்றும் எதிர்கால செழிப்புக்கான உறுதிப்பாட்டின் ஆழமான அடையாளச் செயலாகும். சமூக உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் இந்த மரக்கன்றுகளை தங்கள் கைகளால் நட்டு, நிலத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்க ஒன்றிணைந்தனர். இன்று, ஒரு காலத்தில் தரிசு நிலங்கள் மீண்டும் பசுமையாக உள்ளன, மேலும் விவசாய நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர் பெறுகின்றன, இது உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார சுதந்திரத்திற்கு வழி வகுக்கின்றன.

SRT அறக்கட்டளையால் கொண்டு வரப்பட்ட மாற்றம் முழுமையானது. இது புனித இடங்களை புதுப்பிப்பதன் மூலம் ஆன்மாவை உயிர்ப்பிக்கிறது, கல்வி வளங்கள் மூலம் மனதை மேம்படுத்துகிறது மற்றும் சுற்றுச்சூழல் முயற்சிகள் மூலம் பூமியை வளர்க்கிறது. இது வெறும் வளர்ச்சி அல்ல; இது ஆன்மீக, அறிவுசார் மற்றும் சுற்றுச்சூழல் வாழ்க்கையின் முழுமையான மறுமலர்ச்சி.

சவேரியன் ரிச்சர்ட் தேவராஜின் சேவைப் பயணம் SRT அறக்கட்டளை நிறுவப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கியது. ஒரு சிறுவனாக, அவர் விடத்தல்தீவில் “மகிழ்ச்சி குழு”வை இணைந்து நிறுவினார், ஆரம்பத்தில் சமூக சேவையின் விதைகளை விதைத்தார். பல தசாப்தங்களுக்குப் பிறகு, கடல்களுக்கு அப்பால் வாழ்ந்தாலும், ஒருவரின் வேர்கள் மீதான உண்மையான பக்தி தூரத்தையும் நேரத்தையும் தாண்டியது என்பதை அவர் நிரூபித்துள்ளார். பணிவு மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மூலம், ஒருவரின் சமூகத்திற்கான சேவை ஒரு கட்டம் அல்ல, ஆனால் வாழ்நாள் அழைப்பு என்பதை ரிச்சர்ட் தொடர்ந்து நிரூபித்து வருகிறார்.

இன்று, விடத்தல்தீவின் குழந்தைகள் உறுதியான கூரைகளின் கீழ் படிக்கிறார்கள், விசுவாசிகள் புதுப்பிக்கப்பட்ட தேவாலயத்தில் மண்டியிடுகிறார்கள், புதிய மரக்கன்றுகள் தங்கள் தோட்டக்காரர்களின் கண்காணிப்பு கண்களின் கீழ் சீராக வளர்கின்றன - இவை அனைத்தும் ஒரு மனிதன் தான் எங்கிருந்து வந்தான் என்பதை மறக்க மறுத்ததால். சவேரியன் ரிச்சர்ட் தேவராஜின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் சமூகத்தின் கூட்டு முயற்சிகள் மூலம், விடத்தல்தீவு மீண்டும் கட்டியெழுப்புவது மட்டுமல்ல - அது செழித்து வருகிறது. இடிபாடுகளிலிருந்து வேர்கள் வரை, இது வெறும் மறுசீரமைப்பின் கதை மட்டுமல்ல; இது அன்பு, மீள்தன்மை மற்றும் நம்பிக்கையின் உயிருள்ள சான்றாகும்

விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர் ப.எட்வேட் றாஜா.

எமது மக்களால் புறோக்கர் என அறியப்படுகின்ற திரு.எட்வேட் றாஜா அவர்கள் 1967/6/22 ம் திகதி எமது கிராமத்தின் திரு.திருமதி பஞ்சலிங்கம் தம்பதியின் மகனாக பிறந்தார். 3 சகோதரர்களுடனும் 5 சகோதரிகளுடனும் வாழ்ந்து வந்த திரு.எட்வேட்றாஜா அவர்கள் மரிய ஜெனிற்றா அவர்களை 1989/2/24 ம் திகதி திருமணம் செய்து 4 ஆண் பிள்ளைகளுடன் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்க வாழ்ந்து வந்த நிலையில் 1999ம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் ஜோசப்வாஸ் நகரில் வசித்து வருகிறார். எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் A அணியில் பின்கள தடுப்பு வீரராக நெடுங்காலமாக விளையாடிய வீரரும் ,சிறந்த பின்கள வீரர் என்ற பெருமைக்கும் உரியவர் எமது எட்வேட்றாஜா அவர்களையே சாரும்.

1985 ம் ஆண்டு காலப்பகுதியில் நாச்சிக்குடாவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காக தனது முதலாவது உதைபந்தாட்ட போட்டியின் களமிறங்கி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார் எட்வேட்றாஜா அவர்கள். அல்ஜினா அணியுடன் நடைபெற்ற அந்த இறுதிப்போட்டியில் தோல்வியடைந்து இரண்டாவது இடத்தை எமது கழகம் பெற்றிருந்தது. தனது முதலாவது உதைபந்தாட்ட போட்டியில் தனது அனுபவத்தை பகிரும் போது திரு.எட்வேட் றாஜா தமது குடும்ப நிலையினை கருத்தில் கொண்ட எமது ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகம் அந்த காலத்தில் தான் விளையாடிய 3 போட்டிகளுக்கும் தலா 25/= வீதம் 75/= வழங்கி உதவியதை நினைவுபடுத்தியிருந்தார்.

இசுதோர், ஞானசீலன், எலியாஸ், தேவா, மரியதாஸ்,ஏசண்டு, கியோமர், அமரர் வீனஸ், பயஸ்,அருட்சகோதரர் ஸ்ரனி மற்றும் அருட்பணி ஸ்ரிபன் றாஜா அடிகளாருடன் இணைந்த அணியாக தமது ஆரம்ப கால உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டிவிரிச்சான், பாலம்பிட்டி, அடம்பன், முருங்கன், இத்திக்கண்டல், முழங்காவில், நாச்சிக்குடா, வலைப்பாடு, இரணமாதநகர், பெரியமடு, தட்சனாமருதமடு, காத்தாங்குளம், நெடுங்கண்டல் போன்ற இடங்களில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று சாதனைபடைக்க பின்கள வீரராக சிறப்பான ஆட்டத்தை அந் நாட்களில் வெளிப்படுத்தியிருந்தார். சக வீரர்களாக எலியாஸ், பயஸ், கியோமர் ஆகிய சிறந்த முன்கள வீரர்களின் இணைந்த தமது அணி செல்லும் இடங்களில்,பங்குபற்றிய போட்டிகளில் சுமார் 5 கோல்களுக்கு குறையாமல் பெற்றிருப்பதும், அதிகூடிய கோலாக அந்நாட்களில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி ஒரு அணிக்கு 12 கோல்களை அடித்த வரலாற்றையும் நினைவுபடுத்தியிருந்தார்.

இத்திக்கண்டலில் நெடுங்கண்டல் அணியுடனான நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி போட்டியில் தலையில் அடிபட்டு மயக்கமடைந்த நிலையில் நோயாளர் அவசர காவு வண்டியில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், அவ் போட்டியிலும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியதையும், எமது ஊரில் கருப்புலிகள் மைதானத்தில் நடைபெற்ற தளபதி விக்டர் நினைவு கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தண்ட உதையில் தோல்வியுற்ற அந்த சிறப்பான விளையாட்டையும் தனது வாழ்நாளில் மறக்கமுடியாத நினைவுகளாக விபரித்திருந்தார்.

அந்நாட்களில் விளையாட்டு வீரர்களுக்கும், எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் நிதி உதவிகளை வழங்கியதுடன் விளையாட்டு அணிகலன்களையும் , சாப்பாடுகளையும் வழங்கிய அமரர் சலமோன், அமரர் செபராசா, திரு. டோமினிக், திரு.ச.எலியாஸ் போன்ற எமது கிராமத்தின் கடலுணவு கொள்வனவு உரிமையாளர்களையம் தமது வாழ்நாளின் மறக்கமுடியாது என்றும் திரு. எட்வேட்றாஜா அவர்கள் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்தியிருந்தார். தற்காலத்தில் தம் காலத்தை போல் அல்லாத பல விளையாட்டு திறனை கொண்ட வீரர்கள் எமது கழகத்தில் இருந்து எமது ஊருக்காக விளையாடி வரும் வேளையிலும் கட்டுபாடு, தலமைத்துவத்திற்கு பணிவு போன்றவற்றை எமது இளம் சமூதாய வீரர்கள் தமது காலத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு.எட்வேட் றாஜா அவர்களே தாங்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணிக்காக எமது ஊருக்காக தமது காலத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எமது கழகம் பல வெற்றிக்கனிகளை சுவைக்க பல்வேறுபட்ட தியாகங்களை புரிந்த பங்களிப்பை 1993 ம் ஆண்டு எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக தொடர்ந்து எமது கழகம் சார்பாக பல உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் விளையாடினார்.

ஐக்கிய விளையாட்டுக்கழக வாழ் நாள் சாதனையாளர் எங்கள் எலியாஸ்.

தனது 72 வது வயதை கடந்தும் இன்றும் மைதானத்தில் கால்பதித்துக்கொண்டிருக்கும் மூத்த வீரர் எலியாஸ் அவர்கள் எமது மண்ணின் ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆரம்பமாகிய அன்று தொட்டு இன்று வரை எமது கழகத்திற்காக விளையாடி வரும் வீரர் எண்ணிலடாங்கா கோல்களை எமது கழகத்திற்காக பெற்றுத்தந்தவர் ..முன்களத்தில் அன்று முதல் எலியாஸ் என்றால் எதிரணியில் எந்த தடுப்பு எத்தனை தடுப்புக்கள் இருந்தாலும் எந்த கலக்கமும் இன்றி இலாபகமாக கோல்களைப்போடும் மாயாயால வித்தைகளைக் கொண்டவர்.

சுமார் 72 வயதைத்தாண்டியும் இன்றும் எமது 40 வயதிற்கு மேற்பட்ட உதைபந்தாட்ட அணியிலும் விளையாடுவது #எலியாஸ் அவர்கள் உதைபந்தின் மீது கொண்டிருக்கும் அதீத காதல் என்றால் அது மிகையல்ல. மிகச்சிறப்பான விடயம் எமது கிராமத்திற்குரித்தான சொத்து என நாம் நாமம் காக்கும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை ஒரு கழக அணியாக பதிவு செய்வதற்காக தன்னிச்சையாக பல முயற்சிகளை செய்த உத்தமன் எங்கள் #எலியாஸ் ஐயா நன்றிகள் கூற வார்த்தைகள் போதாது.50 வருடங்களை கடந்த எமது கிராமத்தின் அடையாளம் எமது ஐக்கிய விளையாட்டுகழகம். விடத்தல்தீவு வரலாற்றில் ஐக்கிய விளையாட்டு கழகத்தை உருவாக்கிய அப்போதைய பங்குத்தந்தை ரெஜிஸ் ராய நாயகம் அடிகாளாருடன் ,கழகத்தை பதிவு செய்ய கால்நடையாக சென்று அடம்பன் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பதிவு செய்த எலியாஸ் அவர்கள் வரலாற்று நாயகனாக மிளிர்கிறார்.

மாந்தை பெருநிலப்பரப்பில் அதிகளவு இளைஞர் யுவதிகளை கொண்டு A B C என ஒரே கழகத்தில் அணிகளை கொண்டு, விளையாட்டு நிகழ்வுகளில் குறிப்பாக உதைபந்தாட்டத்திலும், கரப்பந்தாட்டதககிலும் வலைப்பந்தாட்டத்திலும் பல வெற்றிகளை பெற்ற எமது ஐக்கிய விளையாட்டு கழக வீரர் எலியாஸ் அவர்களின் ஒரே நோக்கம் ஒன்றுபட்ட ஊரின் வெற்றிகள் மட்டுமே. நிரந்தர இளைஞனாக இன்றும் உதைபந்தாட்டம் என்றால் மைதானத்தில் கால்பதிக்கும் எலியாஸ் அவர்கள் தனது சாதனையின் கடந்தகால நினைவுகள் பலவற்றை இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

- வணக்கம் எலியாஸ் அண்ண தங்கள் குடும்ப பின்னனி பற்றி சுருக்கமாக கூறமுடியுமா?

வணக்கம், தம்பி. மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு என்னும் ஊரில் 4/11/1953 ம் ஆண்டு பிறந்தேன். அந்தோனிமுத்து ,செபமாலை எனது பெற்றோர். எனக்கு 3 சகோதரிகளும், 2 சகோதரர்களும். எனது மனைவியின் பெயர் மேரிமலர் .எங்களுக்கு 30/8/1976 இல் திருமணம் நடைபெற்றது. எமக்கு 9 பிள்ளைகள் .5 பெண்பிள்ளைகளும், 4 ஆண்பிள்ளைகளும். அனைவரும் திருமணம் செய்துவிட்டனர். 1999 ம் ஆண்டு நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது ஜோசப்வாஸ் நகரில் வசித்துவருகிறோம்.

- உதைபந்தாட்டம் இல்லை என்றால் நீங்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு உதைபந்தாட்டத்தையும் உங்களையும் பிரிக்க முடியாது, எவ்வாறு நீங்கள் உதைபந்தாட்டத்திற்குள் பிரவேசித்தீர்கள்?உங்கள் ஆரம்பம் என்ன?

இம்மனுவேல் மாஸ்ரர் தான் நான் உதைபந்தாட்டத்திலும் ,கரப்பந்தாட்டத்திலும் பிரகாசிக்க முழுக்காரணம், 1968/1969 ஆண்டுகளில் நான் எனது 15 வது வயதில் அடம்பன் செலக்ரர் அணிக்கு எதிராக முதலாவது போட்டியில் விளையாடினேன். அந்த போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் 3 கோல்களை பெற்றிருந்தது. நான் அதில் 1 கோலை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக பெற்றுக்கொடுத்தேன்.

- தைபந்தாட்டம் ,கரப்பந்தாட்டத்தை தவிர வேறு ஏதாவது தடகள போட்டி விளையாட்டுகளில் ஈடுபட்டதுண்டா?
- ஆம்,football,volleyball ஐ தவிர எமது மாந்தை மேற்கு பிரதேசத்தில் 100m, 200m, 400m ஓட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றி முதலிடம் களை பெற்றிருந்தேன். நீங்கள் விளையாடிய பிரதேசங்கள் மாந்தை மேற்கு மட்டுமா? அல்லது வெளிமாவட்டங்களுக்கும் சென்றுள்ளீர்களா?

மாந்தை மேற்கு பிரதேசம் மட்டுமல்ல, மடுப்பிரதேசம், யாழ்ப்பாணம், முழங்காவில், இரணைதீவு ,பள்ளிக்குடா போன்ற பல பிரதேசங்களில் விளையாடி வென்றுள்ளோம். எமது ஊரில் ஏதாவது உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி உங்களது காலத்தில் நடந்துள்ளதா ? ஞாபகத்தில் இருப்பதை பகிர முடியுமா?

ஆம், எமது ஊரில் கியோமராணி வெற்றிக்கேடயம் மன்னார் மாவட்டம் ,உட்பட பல பிரதேச அணிகள் பங்குபற்றியது. அந்த போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் இரணை தீவு அணிக்கு இறுதிப்போட்டியில் 3 கோல்களை போட்டு வெற்றியீட்டியது. அடுத்த இன்னுமொரு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி மெடோண், கீதா என்ற பெயரில் எமது ஊரில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இந்த போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி இறுதிப்போட்டியில் மன்னார் பனங்கட்டு கொட்டு சென். ஜோசப் அணியுடன் தோல்வியை தழுவிக்கொண்டது.

- *உங்களது உதைபந்தாட்ட காலத்தில் உங்களோடு அணியில் விளையாடிய வீரர்களை கூற முடியுமா?*

என்னோடு A ரீமில் விளையாடியவர்கள் ஞானசீலன் ,பயஸ், கியோமர், எட்வேட்றாஜா, சகாயாராசா, சத்தியகாந்தன், கொன்சாளஸ், இசுதோர், தவராஜ், தேவா, இப்படி கனபேர். நாங்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக அதிக வருடங்கள் விளையாடி பல போட்டிகளில் வெற்றிவாகை சூடிய வரலாறு உண்டு.எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A,B அணிகள் இரண்டும் இறுதிப்போட்டிக்கு தெரிவான சந்தர்ப்பங்கள் நிறைய இருந்துள்ளதாம். அதை பற்றி கொஞ்சம் கூறுங்கள்.

ஆம் ,நிறைய ,எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A,B அணிகள் இரண்டும் இறுதிப்போட்டிக்கு விளையாட தகுதிபெற்ற வரலாறு நிறையவே உள்ளது. குறிப்பாக சொல்லப்போனால் அடம்பன் பிரதேசத்தில் நிறைய தடவைகள், முழங்காவிலில், முத்துக்கள் மூன்று போட்டி பண்டிவிருச்சானில், தட்சனாமருதமடு, பாலம்பிட்டி போன்ற இடங்களிலும், முக்கியமா Bro .ஸ்ரனி , Fr.ஸ்ரிபன் அவர்களோடு வலப்பாட்டில் நாங்க A,Bயும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது மறக்கமுடியாது. Bro .ஸ்ரனி கிளிநொச்சி அணியான உரித்திர புர அணிக்கு எதிராக நடந்த போட்டியில் சொல்லி சொல்லி கோல் அடித்தது இன்றும் நினைவில் உள்ளது.

- *இறுதியாக நீங்கள் ஊரில் விளையாடிய போட்டி பற்றி கூறுங்கள்.*

எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கு அப்போது திரு.அ.லோறன்ஸ் அவர்கள் தலைவராக தலமைதாங்கிய காலப்பகுதி ஊரில் கரும்புலிகள் மைதானம் ஒன்றை உருவாக்கி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது. அந்த போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் அடிப்படையில் நாச்சிக்குடா அணியை வெற்றியீட்டியது. அதுவே எனது இறுதி,உதைபந்தாட்ட போட்டியாக அமைந்தது.

- *நீங்கள் விளையாடிய காலகட்டத்தில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதும் இருந்தால் பகிர முடியுமா?*

ஆம் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மாந்தை பிரதேசத்தில் பாலப்பெருமாள் கட்டு ,வட்டக்கண்டல் அணிக்கு எதிராக 11 கோல்களை போட்டோம், அதில் நான் 7 கோல்களை எமது அணிக்காக பெற்றுக்கொடுத்தேன். அத்துடன் எமது அணிக்கான 12வது கோலை போட அவர்களது கோல் கம்பத்தின் அருகில் சென்று அதை கோல் அடிக்காமல் திருப்பி கொண்டு வந்தது மறக்க முடியாததாகும்.

- *எமது ஊருக்காக விளையாடி பேரப்பிள்ளைகளை கண்டும் இன்றும் விளையாடிக்கொண்டிருக்கும் நீங்கள் எமது இளம் தலமுறைக்கு சொல்ல விரும்புவது எதனை?*

எமது ஊரில் ஆற்றல்கள், திறமைகளை கொண்ட இளம் வீர ,வீராங்கனைகள் நிறைய இருக்கிறார்கள் .ஊருக்காக விளையாட்டில் தமது அர்பணிப்புகளை வழங்கியும் வருகின்றார்கள் அவர்களுக்கு எனது பாராட்டுகள். ஆனால் எமது ஊரை பிரித்து கையாளும் வகையில் செயல்படும் ஒரு சிலருடைய சிந்தனைகளும், செயற்பாடுகளும் ஒன்றாய் இருந்த எமக்கு பெரிய வேதனையையும்,கவலையையும் உண்டுபண்ணியுள்ளது. எமது ஒரே நோக்கம் ஒன்றுபட்ட ஊரின் வெற்றி மட்டுமே.

மற்றும் ஊரில் ஏதாவது விளையாட்டு நிகழ்வுகள் என்றால் என்னை அடிக்கடி அழைத்து கௌரவப்படுத்தும் ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகம் மற்றும் எனது ஊர் மக்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நன்றிகள் எலியாஸ் அண்ண உங்கள் வரலாற்று நிகழ்வுகளை பகிர்ந்துகொண்டமைக்கு. 72வயதை கடந்தும் இன்றும் விளையாட்டிற்காக தனது துருதுருக்கும் கால்களால் மைதானத்தில் பிரவேசிக்கும் எமது நிரந்தர இளைஞன், ஐக்கிய விளையாட்டுக்கழக ஜாம்பவானான எலியாஸ் அண்ணன் .

பெயரிலேயே உதையை கொண்ட உதையனின் உதைபந்தாட்ட சரித்திரம்.

எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் மத்தியகள முன்னணி வீரனும் தனக்கென்று ஒரு விளையாட்டு ஸ்ரையிலை உருவாக்கி மிக இளம் வயதிலேயே எமது கழக A அணியில் இடம்பிடித்த உதையன் அவர்கள் தாம் ஐக்கிய விளையாட்டுக்கழக வீரனாக விளையாடி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த வரலாற்றை இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

1) வணக்கம் அத்தான். உங்களை அறிமுகப்படுத்தி கொள்ளுங்கள்.

வணக்கம் அத்தாம்புள்ள.நான் உதையன் , என்னுடைய முழுப்பெயர் உதயகுமார். எனது அப்பா பரமநாதன் அவரை அன்னதாஸ் என்று ஊரில் அழைப்பார்கள் அம்மா பத்திமேரி. நான் அவர்களுக்கு மூத்த பிள்ளை.1971/09/16ம் திகதி பிறந்தேன். எனக்கு 2 சகோதரர்களும் 2 சகோதரிகளும் என்னுடைய சகோதரன் (வவா) இந்தியாவில் இறந்துவிட்டார்.

2) உங்களுடைய திருமணம், மனைவி ,பிள்ளைகளை பற்றி சொல்லுங்கள்.
நான் 1990ம் ஆண்டு புலம்பெயர்ந்து இந்தியாவில் வசித்துவந்தேன் கடந்த 2019ம் ஆண்டு நாடு திரும்பி தற்பொழுது எமது ஜோசப்வாஸ் நகரில் வசித்துவருகிறேன். நான் ,மேரிநந்தினியை 1993/4/26ம் திகதி திருமணம் செய்துகொண்டேன். எமக்கு 3 பிள்ளைகள்.

3) உங்களுடைய உதைபந்தாட்டத்தை எங்கே?எப்போது ஆரம்பித்தீர்கள்?
நான் சிறுவயதில் இருந்தே உதைபந்து விளையாடுவதில் ஆர்வம் உடையவன்,எமது பாடசாலையில் படிக்கும் காலத்திலும், உள்ளூர் போட்டிகளிலும் விளையாடிவந்துள்ளேன்.

4) எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் எவ்வாறு இணைந்தீர்கள்? உங்களுடைய முதல்போட்டி எது?
1985,1986ம் ஆண்டுகள் என நினைக்கிறேன். எனக்கு14 ,15வயது இருக்கும் போது முதன் முதலாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A அணியில் மாந்தை மேற்கு டிவிசன் உதைபந்தாட்ட சுறாறுப்போட்டியில் பண்டிவிரிச்சானில் விளையாடினேன்.

5)உங்களை யாரும் விளையாடுவதற்கு சிபார்சு செய்தார்களா?
ஆம் . இதில் என்னை சிபார்சு செய்தவரை குறிப்பிட்டு சொல்லியே ஆகவேண்டும். எனது இளம் பராய விளையாட்டு திறனை கருத்தில்கொண்டு அப்போது இருந்த A அணியில் என்னை உள்வாங்க விடாப்பிடியாக இருந்து என்னை அணியில் சேர்த்தது எமது கீப்பர் இசுதோர் அண்ணன் தான், அவரை நான் மறக்க மாட்டேன். இந்நேரத்தில் எனது நன்றிகளை அவருக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

6) அந்நேரத்தில் நீங்கள் விளையாடிய எமது கழக A அணி வீரர்களை கூற முடியுமா?
நிச்சயமாக, எலியாஸ் அண்ணன், இசுதோர் அண்ணன், பயஸ் அண்ணன், கியோமர் அண்ணன், கொண்சாலஸ் (சின்னான்) அண்ணன் ,எட்வேட்ராஜா அண்ணன் (புறோக்கர்) இவர்களோடுதான் நான் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் A அணிக்காக விளையாடியது .

7) எமது பிரதேசத்திலும், ஏனைய வெளி இடங்களிலும் நீங்கள் விளையாடி வென்ற போட்டிகளை பற்றி சொல்லுங்கள்.
சிரிக்கிறார். ......அத்தாம்புள்ள நாங்க வெளிக்கிட்டா வெற்றிதான். தோத்திற்று வாறது அரிதிலும் அரிது. அடம்பன், மாந்தை ,நானாட்டான், இத்திக்கண்டல், உயிர்த்தராசன் குளம், காத்தான்குளம், பரப்புக்கடந்தான், சொர்ணபுரி, உயிலங்குளம், பண்டிவிருச்சான், பாலம்பிட்டி ,தட்சனாமருதமடு, நாகதாழ்வு, வலைப்பாடு, கிராஞ்சி,பூநகரி, முழங்காவில் பள்ளிக்குடா, இரணைதீவு, மன்னார் போன்ற இடங்களுக்கு சென்று விளையாடியுள்ளோம்.

8) நீங்கள் விளையாடிய போட்டிகளில் உங்களால் மறக்கமுடியாத உதைபந்தாட்ட போட்டியாக எதை சொல்வீர்கள்.?
எல்லா போட்டிகளும் எங்களால் மறக்கமுடியாத போட்டிகள் தான். அதிலும் குறிப்பாக சொல்லப்போனால் என்னை பொறுத்தமட்டில் அன்னை பூபதி நினைவு கிண்ணம் பூநகரி முழங்காவிலில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A அணி வெற்றிபெற்று சம்பியனாகியது மறக்கமுடியாத மெச் அது. ஐக்கிய விளையாட்டு கழகம் வென்ற வெற்றிகளை தவிர தனிப்பட்ட ரீதியில் விருதுகள் ஏதாவது பெற்றிருக்கிறீர்களா? இப்போ இருக்கிற மாதிரி அந்த காலத்தில் தனிப்பட்ட ரீதியாக எந்தவித விருதுகளும் கொடுக்கிற வழக்கம் இல்லை. அப்படி இருந்தும் பூநகரியல் நடந்த அன்னை பூபதி நினைவு கிண்ண போட்டியில் எனக்கு சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதை தந்து கௌரவித்தார்கள்.

இதில் நான் எமது அமரர் இம்மனுவேல் மாஸ்ரருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள வேண்டும் காரணம் இம்மனுவேல் மாஸ்ரர் தான் அன்னை பூபதி மெச் நான் விளையாட உந்துசக்தியாக இருந்து எனக்கு வாய்ப்பு பெற்றுத்தந்தது .இந்நேரத்தல் அவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

9) நீங்கள் தோல்வியடைந்த உதைபந்தாட்ட போட்டி ஏதாவது இருக்கிறதா?
அன்னை பூபதி மெச் வென்றதை எப்படி மறக்க முடியாதோ அதேபோலதான் மன்னார் தீவுக்குள் நடந்த முன்னாள் TEL0 தலைவர் அமரர் சிறி சபாரத்தினம் அவர்களது ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டியில் நாங்கள் தோத்ததை மறக்க ஏலாது.

10) நீங்கள் எமது கழகத்தில் விளையாடிய எமது ஏனைய விளையாட்டு வீரர்கள் பெயரை குறிப்பிடுங்கள்.
பற்றிக் ஆனந்த குமார், சத்திய காந்தன், சூசைப்பிள்ளை, மரியதாஸ் அண்ணன் முக்கியமான Bro ஸ்ரனி அவர்களோடு இரணைதீவு மெச் விளையாடியுள்ளேன்.

11) நீங்கள் விளையாடிய காலப்பகுதியில் உங்களுக்கு கிடைத்த *support* என்ன?
அந்த காலத்தில ஊரே சப்போட்டுக்கு நிக்கும், குறிப்பாக சொல்ல போனால் சலமோன் அண்ணன், செபராசா அண்ணன், டோமினிக் அண்ணன் போன்ற சம்மாட்டிகளின் சப்போட் எங்களுக்கு நிறைய கிடைத்தது. அதிலும் சலமோன் அண்ணனுடைய சப்போட் அதிகம் கிடைத்தது. *Boots, Jersey,* மெச்சுக்கு போக இலவசமாக வேன் இப்படி அந்தநேரத்தில எங்களுக்கு சப்போட் நிறைய கிடைத்தது.

12) அந்த காலத்தில் நீங்கள் விளையாடியதற்கும் இப்ப உள்ள உதைபந்தாட்ட வளர்ச்சிக்கும் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?
அந்த காலத்தில் யாரையும் யாரும் கட்டாயப்படுத்தவோ, நம்பி இருந்ததோ, அல்லது வீட்ட வந்து கூப்பிட்டு மெச்சுக்கு போனதோ கிடையாது காரணம் நான் சுமார் *90%*விளையாட்டு திறமையுடன் *A* அணியில் விளையாடிக்கொண்டு இருந்தால் வெளியால *100%* திறமையை கொண்ட பல பேர் வாய்ப்புக்காக காத்திருந்த சந்தர்ப்பமே அதிகம்.
இப்ப உள்ள வசதிகள் வாய்புகள், பயிற்சிகள் போல அந்த காலத்தில் எமக்கு இல்லை *,A ,B* அணிகளில் இடம்பிடித்து நான் நான் விளையாடவேண்டும் என்ற திறமையுடனான போட்டி எமக்குள்ளே இருந்தது. அவ்வாறான திறமையுடனான வீரர்களை உருவாக்கவேண்டும்.

13) இளம் வயதிலிருந்தே விளையாடி வந்துள்ளீர்கள், பார்வையாளர்கள் மத்தியில் உங்களைப்பற்றிய கருத்து நிலைப்பாடு என்னவாக இருந்தது ?
இப்ப மாதிரி உடனுக்ககுடன் தகவல்கள பரிமாறிக்கொள்ள சமூகவலைத்தளங்கள் அப்ப இல்ல. காணொளிகள், குறும் செய்திகள் மூலமாக ஒரு விளையாட்டு வீரன் அவன் விளையாடும் போட்டியின் போதே பிரபல்யம் பெற்றிடுவான் அல்லது போட்டி முடிந்த கையோடு பகிரப்படும் காணொளிகள் மூலமாக பிரசித்திபெற்று மக்கள் மத்தியில் பிரபல்யமாகிவிடுவான்

ஆனால் எமது காலத்தில் இவ்வாறான சமூகவலைதாதளங்கள் ஏதும் இன்றி பார்வையாளர்கள் மத்தியில், ரசிகர்கள் மத்தியில் நாம் பெயர் சொல்லி விளையாடினோம் என்றால் அதற்கு எமது திறமை மட்டுமே காரணமாகும்.
குறிப்பாக சொல்லப்போனால் இன்றும் எமது பிரதேசத்தில் எலியாஸ், பயஸ் ,உதையன் என விளையாட்டை கதைக்கும்போது பெயர் அடிபடுது என்றால் ரசிகர் மத்தியில் எங்களது பெயர் பிரபல்யமாவதற்கு எமது திறமைதான் காரணமாகிறது.

14) உதைபந்தாட்ட போட்டியில் நீங்கள் பெற்றுக்கொண்ட அதிகபடியான கோல்கள் எத்தனை?
எனது வரலாற்றில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக *A* அணிக்காக நான் *5* கோல்களை ஒரு போட்டியில் பெற்றுக்கொடுத்தேன்.

15) இளம் தலமுறையினருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?
நாங்கள் பயிற்றுவிப்பாளர்கள், பயிற்சிகள் இல்லாமலே தான் நாளாந்தம் பின்னேரத்தில் நாம் விளையாடும் உதைபந்தாட்ட விளையாட்டை எமது திறமையில் வளர்த்துக்கொண்டோம். ஆனால் தற்பொழது பயிற்சிகள் நிறைய வழங்கப்படுகிறது, பயிற்றுவிப்பாளர்கள் எம்மிடம் இருக்கிறார்கள், வசதிவாய்பபுகள் முன்பிருந்ததை விட அதிகமாகவே கிடைத்திருக்கிறது, ஒருவரை மட்டும் தங்கியிராது இன்னொருவரை உருவாக்குதல் அவசியமாகிறது. ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு ,கீழ்படிவு ,மதிப்பளித்தல் போன்ற பண்புகளை விளையாட்டோடு சேர்த்து வளர்த்துகொள்ளுதல் நன்மைபயக்கும்.

இசுதோர் கீப்பர் என்று அறியப்பட்ட அன்ரனி இசுதோர்.

எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் கோல்காப்பாளர்களாக திகழ்ந்தவர்களுள் சிறந்தவராக இசுதோர் கீப்பர் என எம்மவர்களால் அறியப்படுகின்ற அன்ரனி இசுதோர் அவர்கள் *1963/1/1* அன்று நீக்கிலாப்பிள்ளை, வேதநாயகி தம்பதிகளின் மகனாக விடத்தல்தீவில் பிறந்தார். அன்ரனி இசுதோர் அவர்களுக்கு ஒரேயோரு சகோதரி உள்ளார். மேரி ஜெஸ்மினா அவர்களை திருமணம் செய்த இவருக்கு, *4* பிள்ளைகளை உள்ளனர். *1999* ம் வருடத்தில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இடம்பெயர்ந்து ஜோசப்வாஸ் நகரில் தற்பொழுது வசித்துவருகிறார்.

இவரது பாடசாலை மாணவ பருவத்தில் தரம் *9* இல் கல்விகற்றுக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் *100m, 200m,* ஓட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றி முதல் இடங்களை பெற்றதுடன் தமது நன்பர்களான ஜெறோம், லாசர் ஆகியருடன் இணைந்து பல மைதான சுவட்டுநிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார். பாடசாலை உதைபந்தாட்ட அணியில் கோல்காப்பாளர்களாக திகழ்ந்த அன்ரனி இசுதோர் அவர்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் சக வீரர்களான எலியாஸ், பயஸ், மரியதாஸ், கியோமர், எட்வேட்றாஜா, சகாயராசா போன்ற

முன்னாள் ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்களுடன் உதைபந்தாட்ட போட்டிகளுக்கு கோல்காப்பாளர்களாக திகழ்ந்துள்ளார்.

உப்புக்குளம் மைதானத்தில் உப்புக்குளம் அல்பதா அணிக்கு எதிரான உதைபந்தாட்ட போட்டி இவரது முதலாவது உதைபந்தாட்ட போட்டியாக அமைந்துள்ளது. மாந்தை மேற்கு பிரதேசத்தில், வட்டக்கண்டல், காத்தான்குளம், சொர்ணபுரி, நாகதாழ்வு, ஆன்டான்குளம், அடம்பன், உட்பட பண்டிவிருச்சான், பாலம்பிட்டி, முழங்காவில்,இரணைமாதா நகர், வலைபாடு, போன்ற இடங்களில் அதிக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் விளையாடி வெற்றியீட்டியுள்ளார்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் தண்ட உதை மூலம் பல போட்டிகளில் வெறறிவாகை சூடிக்கொள்ள எதிரணியின் கோல் பெறம் வாய்ப்பை தட்டி வெற்றிக்கு வித்திடடவர் என்றால் அது மிகையாகாது.எதிரணி முன்கள வீரர்களின் ஒவ்வொரு கோல் பெறும் வாய்ப்புகளையும், தவிடுபொடியாக்குவதும், அதில் கோல் கம்பத்துக்குள் அடிக்கப்படும் பந்தை தட்டிவிட்டாமல் லாவகமாக பிடித்து எதிரணி முன்கள வீரர்களுக்கு மிகவும் சவாலாக இருந்துள்ளமை இவரது மற்றொரு சிறப்பம்சம்.

முழங்காவில், வலைப்பாடு மற்றும் முத்துக்கள் மூன்று வெற்றிக்கிண்ண போட்டிகள் தனது விளையாட்டு வரலாற்றில் முக்கியமான போட்டிகள் என்பதை விபரித்த இசுதோர் அவர்கள் தமது காலத்தில் உதைபந்தாட்ட அணிவீரர்களில் முன்கள வீரர்களாக எலியாஸ், பயஸ் மற்றும் கியோமர் ஆகியோர் திகழ்ந்துள்ளாரகள் எனவும் குறிப்பிட்டுள்ளார். உதைபந்தாட்ட போட்டியில் பல உபாதைகளை எமது அணிக்காக பெற்ற இசுதோர் அவர்களுக்கு வட்டக்கண்டல் மைதானத்தில் கை விரல் உபாதைக்குள்ளாகி முறிந்த நிலையில் அது இன்றுவரைக்கும் அதே நிலையில் இருப்பதும், ஆன்டான்குள மைதானத்தில் முழங்கால் உபாதைக்கு உள்ளானதும் குறிப்பிடத்தக்கதாகும். காலம் கடந்தாலும் இன்றும் உள்ளூரில் ,மற்றும் வெளியிடங்களில் நடைபெறும் உதைபந்தாட்ட போட்டிகளை பார்வையிட தவறுவதில்லை .இசுதோர் அண்ணன் உதைபந்தாட்ட போட்டிகளுக்காக, எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காக ,எமது பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்காக, விளையாட்டு உபகரணங்கள் ,சீருடைகள் உட்பட பல உதவிகளை வழங்கிக்கொண்டிருப்பதும் மறந்துவிட முடியாது.

தாங்கள் ஒற்றுமையாக இருந்து விளையாட்டை உயிராக மதித்தும் ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காக, ஊருக்காக ஒற்றுமையாக விளையாடிய அந்த நாட்களை எளிதில் மறந்துவிடமுடியாது என்றும் ,பிரிவுகளையும், பிரித்து கையாளும் ஒரு சில நபர்களின் நடவடிக்கைகளையும் தாம் துளியளவும் விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அசுர மின்னல் வேக ஓட்ட றெஜி

விடத்தல்தீவு மகாலிங்கம், ரெட்ணசீலி (தங்கம்) தம்பதியருக்கு மகனாக 2/8/1978 இல் பிறந்து 5 உடன்பிறப்புகளோடு வாழ்ந்து பெமிலா செறின் அவர்களை திருமணம் செய்து 2 பெண் பிள்ளைகளோடு குடும்பத்தில் மகிழ்ச்சிபொங்க கடலுணவு கொள்வனவு உரிமையாளராக வாழ்ந்துவருபவர் தான் எமது நண்பன் றெஜி என்று அழைக்கப்படுகின்ற ராஜநாயகம் அவர்கள்.

தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு அலிஹார் மகாவித்தியாலயத்தில் கற்று பின்னர் இடைநிலை கல்வியை தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்றிருந்தார். நண்பன் றெஜி தனது 13வது வயதிலிருந்தே உதைபந்தாட்டத்தில் பிரகாசிக்கத்தொடங்கியிருந்தார். தனது அபார மின்னல் வேக ஓட்டத்திறமையால் பாடசாலை உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரனாக திகழ்ந்து வலைய மட்ட, கோட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டிகளில் எமது அணிக்காக பல கோல்களை பெற்றுத்தந்திருந்தார்.

மேலும் பாடசாலை ரீதியான தடகள போட்டிகளில் முன்னணி வீரனாக வலம் வந்த நண்பன் றெஜி மடு வலய மற்றும் கோட்ட மட்ட தடகள போட்டிகளில் அதிக தடவைகள் முதன்மை வீரனாக தெரிவாகியிருந்தார். 100m, 200m, நீளம் பாய்தல் போன்ற விளையாட்டு நிகழ்வுகளில் முதன்மை வீரனாகவும் அஞ்சல் ஓட்ட போட்டிகளில் சிறந்த வீரனாகவும் வலம்வந்திருந்தார்.

ஊரில் நடைபெறும் உள்ளூர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது அமர்க்களம் அணி சார்பாக முன்கள வீரனாக விளையாடிய அந்த நாட்களை எளிதில் மறந்துவிட முடியாது. 1998ம் ஆண்டு உலக ஆசிரியர் தின உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் தேவா குழுவிற்கு எதிராக 3:0 என்ற

கோல் அடிப்படையிலும், மண்ணின் மைந்தர்கள் கிண்ணம், மண்ணின் மாவீரர்கள் கிண்ணம், மே தின உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள், பேசாலை நலன் புரி நிலையத்தில் நடைபெற்ற போட்டி, ஜோசப்வாஸ் நகரில் நடைபெற்ற உள்ளூர் போட்டிகள் போன்ற பல உள்ளூர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது அமர்கள அணி வெற்றிபெற்றதில் நண்பன் றெஜியின் தனித்துவமான பங்கு அளப்பெரியது.

1997ம் ஆண்டு மற்றும் 1998ம் ஆண்டுகளில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் நண்பன் றெஜி தனது அபார திறமையை வெளிக்கொணர்ந்த தருணங்கள் ஏராளம். பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு கழகம், பனக்கட்டு கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழகம் ,கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகம் ,தாழ்வுபாடு விளையாட்டுக்கழகம் மற்றும் அல்பதா போன்ற அணிகளுக்கெதிராக புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி உதைபந்தாட்ட அணிக்காக அப்போதைய ஜாம்பவான்களான நண்பர்கள் கமிலஸ், அமலன் மற்றும் அற்பு, சங்கர், அண்ணாமலை ,மதி போன்ற சக வீரர்களுடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பசுமையான நினைவுகளும் மறப்பதற்கல்ல.

ஆரம்பத்தில் அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களின் உதைபந்தாட்ட பயிற்சிபட்டறையில் *Boot* இல்லாமல் விளையாட அனுமதிக்கப்பட்ட வீரன் நண்பன் றெஜியாகத்தான் இருக்கமுடயும் அந்தளவிற்கு தனது மின்னல் வேக ஓட்டத்தாலும் விளையாட்டில் அதீத திறமையும் கொண்டிருந்தான். பள்ளிமுனை அணிக்கெதிரான ஒரு போட்டியில் கோல் அடித்து பள்ளிமுனை அணி வீரன் அண்ணன் எட்டா அவர்களால் அடி வாங்கிய அந்த போட்டி இன்னும் நினைவில் உள்ளது.

தனது 13, 14 வயதில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக C அணியில் இடம்பிடித்த நண்பன் றெஜி முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அமரர் அருட்பணி எட்வின் அடிகளார் தலைமையிலான எமது ஐக்கிய விளையாட்டுக்கழக C அணிக்கான தனது முதலாவது கோலை பெற்றுக்கொடுத்திருந்தான். 1993/1994 ம் ஆண்டு காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் தலைவராக திரு. ஸ்ரனிஸ்லஸ் (டெல்லாஸ்) அண்ணன் அவர்கள் தலைமைதாங்கிய காலத்தில் பெரியமடுவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றப்ப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக A அணியில் நான் எனது கன்னிப்போட்டியில் விளையாடுவதற்கு நண்பன் ஜோண்ராஜ்யோடு எனக்காக சிபார்சு செய்ததுடன் அந்த சுற்றுப்போட்டியில் நான் விளையாட காரணகர்த்தாவாக இருந்து அந்த சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக முன்களத்தில் சிறப்பாக விளையாடியிருந்தான்.

லெப்டினன் கேணல் விக்டர் ஒஸ்கா உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நண்பன் றெஜி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக B அணிக்காக விளையாடிய முதலாவது போட்டியாகும். அடம்பன் பிரதேசத்தில் நடைபெற்ற அந்த போட்டி உட்பட பலவேறுபட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் நண்பர்களான ரென்சி ,தேவானந்தன் ஆகியோருடன் இணைந்து முன்கள வீரர்களாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அந்த நாட்களில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் தலைவராக திரு.அ.லோறன்ஸ் அவர்கள் தலைமைதாங்கியிருந்தார்.

தனது அசுர வேகத்தால் எதிரணியை கலங்கடித்த நண்பன் றெஜி எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் A அணியில் மிக சொற்ப காலங்களிலேயே சாந்தகுமார், எட்வின் றோச் ,சதானந்தன், தயானந்தன் (வசந்தன்), எட்வேட் ஜோர்ச், ஸ்ரனிஸ்லஸ் (டெல்லாஸ்) ,மெக்ஸி, கொண்சாலஸ் (சின்னான்) ,பெல்மன், மற்றும் எட்வேட் றாஜா (புறோக்கர்) ஆகிய வீரர்களோடு இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது பிரதேசத்தில் நடைபெறும் உதவி அரசாங்க அதிபர் உதைபந்தாட்ட போட்டி ,கரப்பந்தாட்ட போட்டிகளிலும் முத்துக்கள் மூன்று வெற்றி கிண்ணம், கீப்பிங் ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் விடத்தல்தீவு, விக்டர் நினைவு கிண்ணம், கரும்புலிகள் நினைவு கிண்ணம், மற்றும் வட்டக்கண்டல், அடம்பன், இத்திக்கண்டல், முருங்கன், காத்தான்குளம், உயிர்த்தராசன் குளம், தட்சனாமருதமடு, இரணைமாதா நகர் போன்ற இடங்களில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக விளையாடியிருந்தான்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் தொடர் தோல்விகளை சந்தித்த அந்த குறிகிய காலத்தில் 1998 ம் ஆண்டில் எமது பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி ஜெயபாலன் அடிகளார் அவர்களால் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் மறு சீரமைப்பு செய்யப்பட்டிருந்தது. அந்நாட்களில் மண்ணின் மைந்தர்கள் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தட்சனாமருதமடு விளையாட்டு கழகத்தால் நடாத்தப்பட்டிருந்தது. நண்பன் றெஜி தலமையில் அந்த போட்டியில் விளையாட பதிவுசெய்து பங்குபற்றியதுடன் அந்த கிண்ணத்தை எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.யாழ் மாவட்டத்தில் தலைசிறந்த அணிகளில் ஒன்றான எமது சென். நீக்கிலஸ் அணியுடனான அரையிறுதி போட்டி எமது ஊரில் கரும்புலிகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அந்த பரபரப்பிற்கு பஞ்சமில்லாத விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்கள

வீரன் நண்பன் றெஜி தனது ஆபார திறமையாலும் மின்னல் வேக ஓட்டத்தாலும் சென். நீக்கிலஸ் அணியின் தலைவரும் அந்நாட்களில் யாழ்ப்பாண சிறந்த பின்கள மத்திய வீரனுமாகிய வாஸ் அவர்களை தாண்டி கட் செய்து அடித்த 2 கோல்களும் வரலாற்றில் பேசப்பட்ட நினைவுகளாகும்.

“தம்பி எனது விளையாட்டின் சரித்திரத்தில் நான் விளையாடிய போட்டிகளில் , எனது அனுபவத்தில் பின்களத்தில் என்னை தாண்டி கட் செய்து எமது அணிக்கு கோல் அடிச்சது நீ மட்டும்தான் என்று “மைதானத்தில் போட்டி நிறைவுற்றதும் சென்.நீக்கிலஸ் பின்கள வீரனாக யாழ் மாவட்ட சிறந்த வீரனாக திகழ்ந்த வாஸ் அவர்கள் றெஜியை கட்டியணைத்து பாராட்டியிருந்தார்.எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சார்பாக எமது கழக வீரனாக இருந்த பெல்மன் அவர்களுடன் மாந்தை பிரதேச அணியில் இடம்பிடித்த நண்பன் றெஜி மன்னார் பிரதேச அணியுடனான போட்டி ஒன்றில் மாந்தை பிரதேச அணி 1;2 என்ற கோல் அடிப்படையில் தோல்வியுற்றிருந்தாலும் எமது மாந்தை பிரதேச அணி சார்பாக நண்பன் றெஜி 1 கோலை பெற்றுக்கொடுத்திருந்தான்.

சமீபகாலமாக 40 வயதிற்கு மேற்பட்ட எமது விடத்தல்தீவு FC என்ற பெயரில் உதைபந்தாட்ட அணியில் இணைந்த நண்பன் றெஜி பள்ளிமுனை ,பனங்கட்டு கொட்டு அணிகளுடனான உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடியிருந்தான். உதைபந்தாட்டத்தை நேசித்த நண்பன் றெஜி எமது ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்காகவும் எமது விளையாட்டின் மேம்பாட்டிற்காகவும் தன்னாலான உதவிகளை வழங்கிவருகின்றமை மறப்பதற்கல்ல.

சகாயராஜா

1986 களின் பிற்பகுதியில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் அதன் வரலாற்றில் அதிகபடியான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்று ஊரைச்சுத்தி வெற்றிபவனி வந்த காலம் அது.

VAJ லொறி அதிர நிறைஞ்ச சனத்துடன் ஊரின் கடத்தெருவால திரும்பி வெற்றிக்கோசங்களை எழுப்பியவாறு ஊரை சுத்தும் போது அந்த வெற்றிக்கோசத்தில் அதிகம் எழுப்பப்படும் கோசம் “எங்கள் றாஜா சகாயராஜா, ‘‘எங்கள் றாஜா சகாயராஜா” என்ற கோசம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

1961/11/22ம் திகதி யாழ்ப்பாணம் நவாலியில் பிறந்து 1986ம் ஆண்டு காலப்பகுதியில் எமது றோசா அன்ரி அவர்களை திருமணம் செய்திருந்தார்.தனது ஆரம்ப கல்வியில் சிறந்து விளங்கி கல்வி பொதுத்தர சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற சிறந்த அழகான கையெழுத்துக்கு சொந்தக்கரரானவர்தான் சகாயராஜா அவர்கள்.

விடத்தல்தீவின் பூர்வீக கிராமத்தில் ஒன்றான நவாலியில் பிறந்த சகாயாராஜா அவர்கள் எமது றோசா அன்ரியை திருமணம் செய்து விடத்தல்தீவு மருமகனாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்திருந்தார்.இரண்டு காலாலும் பந்தை இலாபகரமாக உதைக்கும் நுட்பமான திறமையை கொண்டு பாதணிகளை பயன்படுத்தி உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அட்டை பதப்படுத்துதல் துறையில் சிறப்பு தேர்ச்சி பெற்று சிறந்த அனுபவசாலியாக ஆபிரிக்க நாடுகளுக்கு தொழில்வாய்ப்பின் நிமித்தம் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒருமுன்களவீரரைநம்பிபோட்டியில்இறங்கும்அணிகளைபோலவேதான்எமதுஐக்கியவிளையாட்டுக்கழக அணியில் பின்கள வீரன் சகாயராஜா அவர்களை நம்பி இறங்கிய போட்டிகள் அதிகம் அந்த அளவிற்கு விளையாட்டில் நுட்பங்களை கைக்கொண்டு விளையாட்டின் போக்கை திசைதிருப்பி ,நெருக்கடி நிறைந்த தருணங்களிலெல்லாம் தனித்துவமான தனது ஆட்டத்தால் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்ற பெருமை பின்கள வீரனான சகாயராஜா அவர்களையே சாரும்.

அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்ற அந்த காலகட்டங்களில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக A அணியில் தவிர்க்கபபட முடியாத ஒரு வீரனாக போட்டிகளில் பேசப்படும் அளவிற்கு திறமைகளுடனான சிறப்பான விளையாட்டை ஆடும் வீரன் தான் சகாயராஜா அவர்கள்.

தனியொருவனாக சவாலாக களமிறங்கும் எதிரணியின் முன்கள வீரர்களையும் அவர்களது ஒவ்வொரு கோல் பெறும் வாய்ப்புகளையும் தகர்க்கும் வண்ணம் தலையையும் இரு கால்களையும் பயன்படுத்தி நிண்டு

நிதானமாக அழகான ஆட்டத்தை வெளிப்படுத்தி பார்வையாளர்களையும், ரசிகர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவதும் சகாயராஜா அவர்களின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

சகாயாராஜா அவர்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக வட்டக்கண்டல், வலைப்பாடு ,அடம்பன், நாச்சிக்குடா, காத்தாங்குளம், கருங்கண்டல், பண்டிவிரிச்சான் மற்றும் தட்சனாமருதமடு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் பின்கள மத்திய வீரனாக களமிறங்கி பல வெற்றிகளை எமது அணி பெற்றிருப்பது மறட்கமுடியாததாகும்.

உதைபந்தாட்ட போட்டிகளின் போது சொல்லிவைச்சாற் போலவே எமது அணிக்கு கிடைக்கும் *Faul kick, Corner kick ,penalty kick* போன்றவற்றை நிதானமாக அளந்து அடிச்சு கோல் ஆக மாற்றும் அபார திறமையை கொண்டிருந்தவர் எமது சகாயராஜா அவர்கள் .ஆட்டம் ஆரம்பத்தில் இருந்து முடிவுறும் வரைக்கும் சோர்வு இல்லாத ஆட்டத்துடன் ,திடமான உறுதியுடன் தினமும் மாலை நேரங்களில் தவறாது விளையாட மைதானத்திற்கு வருவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

சக வீரர்களுடனும் ,நண்பர்களிடத்திலும் நல்ல நட்பை பேணிவந்திருந்தார். ஆயேசுராசா,புறுணோ பயஸ்,இசிதோர், றொபேட்கெனடி, கியோமர் பயஸ், எலியாஸ், எட்வேட்றாஜா, கொண்சாலஸ், யேசுதாசன், ஸ்ரனிஸ்லஸ், ஆகிய சக முன்னணி வீரர்களுடன் எமது கழக அணிக்காக விளையாடி வெற்றிவாகை சூடியிருந்தார்.

அருட்சகோதரர் ஸ்ரனி அவர்களது பயிற்சியில் வலைப்பாடு சுற்றுப்போட்டிக்கு செல்வதற்கான ஆய்த்தங்களும் பயிற்சிகளும் நடைபெற்ற அந்த முதல் நாள் எமது பாடசாலை மைதானத்தில் கோல் கம்பத்தில் *B* அணி கோல் காப்பாளரான லக்ஸ்மன் ஆய்த்தமாக இருந்த சமயம் சகாயாராஜா அவர்களை சென்டரில் இருந்து பந்தை வைத்து அடிக்க சொல்லி *Bro* ஸ்ரனி சொல்லி அடுத்த நிமிடம் பந்து கோல் போஸ்ற்றுக்குள் கிடந்தது. அருட்சகோதரர் ஸ்ரனி *Very Good* குஞ்சு என முதுகில் தட்டி சகாயாராஜா அவர்களை பாராட்டியிருந்த அந்த நாட்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியின் மறக்கமுடியாத தருணங்களே.

இவ்வாறு பல தடவைகள் எமது அணிக்காக தனித்துவமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓய்வுபெற்ற உதைப்பந்தாட்டத்தை நேசித்த எமது சகாயாராஜா அவர்கள் 2007ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ம் திகதி இறைபதமடைந்தார்.

டி. எஸ். டெனிஸ்டீன் சந்திரன்

ஜோசவாஸ் நகரைச் சேர்ந்த திருமதி டெனிஸ்டீன் சந்திரன், கலை, கலாச்சாரம், கல்வி, இளைஞர்அதிகாரமளித்தல்மற்றும்பொதுநிர்வாக சேவைகளில்தன்னிலைப்பாடான பங்களிப்புகளை வழங்கி வருகிறார். தமிழ் கிறிஸ்தவ ஆன்மீக இசை, கலாச்சார தலைமை, நிர்வாக சிறப்பு ஆகியவற்றில் அவர் உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பரவலான அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இசை மற்றும் கலாச்சார பங்களிப்பு
தமிழ் கிறிஸ்தவ வழிபாட்டுப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புற இசைகளை பாதுகாத்தலும், ஊக்குவித்தலும், அவர் செய்த முக்கிய பங்களிப்புகளாகும். கலையருவி (2017–2023) மற்றும் கலாசர் விழா (2024) போன்ற முக்கிய நிகழ்வுகளில் அவர் தனிப்பட்ட மற்றும் குழு பாடல் போட்டிகளில் தொடர்ந்து முதல் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்றுள்ளார். மாவட்ட மற்றும் மறைமாவட்ட அளவிலான பெண் இசைக்குழுக்களுக்கு வழிகாட்டி ஆவார். கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற கிறிஸ்தவ திருநாள்களில் தேவாலய இசை நிகழ்ச்சிகளுக்கும், கலாச்சார நிகழ்வுகளுக்கும் அவர் தலைமையேற்கின்றார்.

நிறுவன அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள்
மன்னார் மாவட்ட சமூக சேவை ஒருங்கிணைப்புக் குழு, *MOSCC*, கத்தோலிக்க அமைப்புகள் மற்றும் உள்ளூர் கலாச்சார அமைப்புகள் வழங்கிய பல்வேறு விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பாராட்டுகள் அவரது பங்களிப்புகளுக்கான அங்கீகாரங்களாக அமைந்துள்ளன. குறிப்பாக, கலையருவி விழாவில் (2021, 2022, 2023) அவரது வழிகாட்டுதலால் இளைஞர் குழுக்கள் முதலிடம் பெற்றுள்ளன.

மாகாண மற்றும் தேசிய அங்கீகாரம்
மன்னார் நகர பிரதேச செயலகம் அவருக்கு "ஆண்டின் சிறந்த அதிகாரி – 2022" என்ற விருதை வழங்கியுள்ளது. இலங்கை சமூகப் பாதுகாப்பு வாரியம் (2018, 2019) மற்றும் தேசிய தமிழ் கலாச்சார விழா (2018) ஆகியவற்றிலும் அவரது பங்களிப்புகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2018 இல் கொழும்பு BMICH மையத்தில் நடைபெற்ற

தேசிய விருது விழாவில் அவரது பங்கேற்பு மாவட்ட எல்லைகளை கடந்த அங்கீகாரமாகும்.
கல்வி மற்றும் திறன் மேம்பாடு
2015 ஆம் ஆண்டில் UNDP-EU நிதியுதவியுடன் நடைபெற்ற தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியில் (ISB வழியாக) அவர் பங்கேற்றுள்ளார். மேலும், 2001 மற்றும் 2007 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்று, பயிற்சியாளருக்கான பயிற்சிகளையும் (ToT) முடித்துள்ளார்.

சமூக ஈடுபாடும் வழிகாட்டுதலும்
அதிகாரப்பூர்வ விருதுகளுக்கு அப்பால், அவரது சமூக செல்வாக்கு மிகவும் முக்கியமானது. ஜோசவாஸ் நகரில் உள்ள இளைஞர்கள், குறிப்பாக பெண்கள், இசை மற்றும் கலாச்சாரவழியே தங்களை வெளிப்படுத்த அவர் ஊக்குவித்து வருகிறார். சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளூர் தலைவர்களின் பாராட்டுகளும், போட்டிகளில் வெற்றி பெற்ற குழுக்களுக்கு அவர் அளித்த வழிகாட்டுதலின் ஆவணங்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஆவணப்படுத்தல் மற்றும் சேவை மரபு
அவரது நன்கொடைகள், சமூக நிகழ்வுகள் ஒருங்கிணைப்பு மற்றும் இளைஞர் ஊக்குவிப்புக்கு உதவிய சான்றுகளாக கையெழுத்துப் பதிவுகள், சான்றிதழ்கள் உள்ளன. கலாச்சார தலைவராகவும், அரசு அதிகாரியாகவும் அவர் வகிக்கும் இரட்டைச் சீருடைப் பாத்திரம் மன்னார் மாவட்டத்தில் சேவை மற்றும் கலாச்சார நெறிகளை ஒன்றிணைக்கும் வலிமையான மரபாக இருக்கின்றது.

முடிவுரை
திருமதி டெனிஸ்டீன் சந்திரன், கலைஞராகவும், வழிகாட்டியாகவும், நாட்டு நிர்வாகத்தில் தன்னை அர்ப்பணித்த ஒருவராகவும், பன்முக ஆற்றல்களை கொண்டவர். அவர் பெற்றுள்ள விருதுகள் – கலையருவி முதல் தேசிய விருதுகள் வரை – அவரது பரந்தளவான தாக்கத்தை பிரதிபலிக்கின்றன. ஜோசவாஸ் நகருக்கு பெருமை சேர்க்கும் கலாச்சாரத் தூணாக, அவர் இன்னும் பல தலைமுறைகளுக்கு சீரான முன்னுதாரணமாக இருப்பவர்.

மண்வாடைப் பெருமிதங்கள் – சுஜப் எம் காசிம்

பெருமைப்படத்தக்க பல விற்பன்னர்கள் விடத்தல்தீவில் உருவாகுவதற்கு, அலிகார் இட்ட அடித்தளமே அச்சாணியாக இருந்தது. மிகச் சிறந்த ஆசிரியர் குழாம், அர்ப்பணிக்கும் பெற்றோர், சமூகப் பற்றுமிக்க ஊர்ப் பிரமுகர்களை உள்ளடக்கிய விடத்தல்தீவு கிராமியக் கட்டமைப்பு, ஆற்றலாளர் பலரை உருவாக்கியது.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், நிர்வாக சேவையாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் இன்னும் சமூக முன்னோடிகள் என இப்பட்டியல் நீள்கிறது. இந்த வகையில், முக்கிய சில துறைகளில், முதன்மையான பழைய மாணவர்களை இந்நூல் ஞாபகமூட்டுகிறது. இவர்களில் சிலர் மர்ஹு_ம்களாகவும் சிலர் வாழ்வோராகவும் உள்ளனர். இத்தகைய புகழுக்குரியவர்கள் சகலரும் விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களே.

மன்னார் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் ஆசிரியர், தலைமை ஆசிரியர் என்ற சிறப்புக்கள், விடத்தல்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியப் பணிபுரிந்த மர்ஹூம் அ.முஹம்மது அலிக்கு உள்ளது. இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த (Ceylon Administrative Service) மர்ஹூம் எம்.ஏ.சீ.மரைக்கார் மன்னார் மாவட்டத்தின் முதல் சிறப்புப்பட்டதாரி, ஆசிரியர், இறைவரி அதிகாரி (DRO), வக்பு ஆணையாளர் மற்றும் ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளரென சிறப்புற்றுத் திகழ்ந்தார்.

விடத்தல்தீவின் முதலாவது மருத்துவராக (அப்போதிகரி) மர்ஹூம் எம்.ஐ.அப்துல்லா நியமனம் பெற்றார். அக்காலத்தில் 'அப்போதிகரி" என்றழைக்கப்பட்ட இப்பதவி, பின்னர் உதவி மருத்துவ அதிகாரி (AMP) எனப்பட்டது. பின்னர், பதவி நிலை மாறி இவர் பதிவு செய்யப்பட்ட மருத்துவரானார் (RMP). மன்னாரின் முதலாவது ஆங்கில மொழி சிறப்புப் பட்டதாரியான மர்ஹூம் எம்.எஸ்.ஏ.றஹீம், இலங்கை கல்வி நிர்வாக சேவையை (SLEAS) சேர்ந்தவர். ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர், பிரதிக் கல்விப்

பணிப்பாளர், பதில் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதான கல்வி அதிகாரி (Ch.EO- ஆங்கிலம்) என பல பதவி நிலைகளில் பணியாற்றியதோடு அலிகாரின் அதிபராகவும் இவர் பணிபுரிந்தார்.

மர்ஹூம் எம்.எஸ்.ஏ.சரூர் : ஆசிரியர் கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எனப் பிரகாசித்த இவரின் ஆற்றல், விளையாட்டுத் துறையில் விரிந்து பரவியது. கிறிஸ்தவ இளைஞர் சம்மேளனத்தின் புலமைப்பரிசில் கிடைக்கப் பெற்று, விடத்தல்தீவிலிருந்து முதன் முறையாக 1962இல் இந்தியா சென்றவர். அங்கு, மிஸ்டர் மெட்ராஸ் (Mr.Madras) ஆணழகன் போட்டியிலும் வெற்றியீட்டினார். 1993இல், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராகும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. மேலும், அக்குறணை மத்திய கல்லூரி, கொழும்பு ஹமீத் அல்{ஹஸைனியா ஆகிய பாடசாலைகளில்; அதிபராகவும் பணியாற்றியவர். விடத்தல்தீவின் முதலாவது சட்டமாணியாக (LL.B) எம்.ஐ.றாசிக் (ஹமீது லெப்பை), 1974இல் சித்திபெற்றதுடன், பின்னர் சட்டத்தரணியானார். (Attorney at law) யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இவர் ஆசிரியராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஏ.வாஹித் : கல்விமாணி, கல்வி முதுமாணி, தேசிய கல்வி நிறுவக திட்ட மிடல் பணிப்பாளர், JICA செயற்றிட்ட நிபுணத்துவ ஆலோசகர் மற்றும் கல்வி அமைச்சின் முன்னாள் திட்ட ஆலோசகராகவும் கடமையாற்றியதுண்டு. பேர் போன கணித ஆசிரியராக மட்டுமன்றி, ஆசிரிய ஆலோசகராகவும் இவர் பணியாற்றினார். க.பொ.த. (சாதாரண தர) கணிதப் பாடத்தில், தமிழ் மொழி மூலக் கட்டுப்பாட்டுப் பிரதம பரீட்சகராக (Controlling Chief Examiner) 15 வருடங்கள் இவர் பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

மர்ஹூமா எம்.எஸ்.மஹ்ஜபின் சரீபா, அலிகாரில் பயின்று வெளியேறிய முதலாவது முதுகலைமாணியாக விளங்கினார். சமூகக் கல்வி உள்ளிட்ட முக்கிய பாடங்களை கற்பித்த இவர், கொழும்பில் பிரபல கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கும் கற்பித்ததுடன், ஆங்கில மொழியிலும் சிறப்புத் தேர்ச்சியுடன் திகழ்ந்தார். தேசிய கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகவும் பணியாற்றினார்.அதிபர் சேவை 01 ஐச் சேர்ந்த மஹ்ஜபின் சரீபா கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் தமிழ்ப் பிரிவு அதிபராகவும் பணியாற்றினார். இது தவிர (க.பொ.த.சாதாரண தர) சமூகக் கல்வி பாடத்தின் பிரதம பரீட்சகராகக் கடைமையாற்றிய பெருமைக்கும் உரியவர்.

வீ.எம்.அமீன்: விடத்தல்தீவின் முதலாவது முதுநிலை பட்டயக் கணக்காளர். (Fello Charted Accountant) கணித, விஞ்ஞான ஆசிரியரான வீ.எம்.அமீன் திறைசேரியின் மேலதிக பிரதிப்பணிப்பாளர் நாயகமாகவும் கடமை புரிந்தார். கலைத் துறையில் பல்கலைக்கழகம் நுழைந்து, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வர்த்தகத் துறையில் (Bcom.Hon) சிறப்புப் பட்டம் பெற்றவர். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றில் சுமார் 10 வருட காலமாக நிதி ஆலோசகராக பணிபுரிந்தார்.மன்னார் மாவட்டத்தின் முதலாவது மகப்பேற்று, பெண் நோயியல் விசேட மருத்துவ நிபுணரான (VOG) எஸ்.எப்.எல். அக்பர், மன்னார் மாவட்டத்தின் முதலாவது மருத்துவ போராசிரியருங்கூட இவர் நாடறிந்த பிரபலர். பேராசிரியர் அக்பரினது வைத்தியத்திறமைகள் சகலரதும் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

நஜ்முன்னிஸா ஜமால்தீன்: அலிகாரின் முதலாவது விஞ்ஞான சிறப்புப் பட்டதாரி (Bsc.Hon) தூய, பிரயோக கணிதம் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களின் ஆசிரியராக விளங்கியவர்.மர்ஹூம் சிஜ்ஜீன் மரைக்காத்தம்பி : விடத்தல்தீவின் முதலாவது முஸ்லிம் பொறியியலாளர் (Bsc.Hons in Civil Engineering), சிரேஷ்ட முதுநிலை பொறியியலாளரான இவர் பல முக்கிய நிறுவனங்களில் பணியாற்றினார். பொறியியல் துறையில் நல்ல தேர்ச்சி கொண்டவர்.மன்னாரின் முதலாவது சட்ட முதுமாணியான (LL.M) ஏ.எம்.பாயிஸ், தற்போது தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினராக பதவி வகிக்கின்றார். இவர், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரும் கூட சிவில், அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளரான சிரேஷ்ட சட்டத்தரணி பாயிஸ், பல நிறுவனங்களின் தலைவராகவும் செயற்படுகிறார்.

ஹினாயா சரீப் : விவசாய விஞ்ஞான பட்டதாரியான (Bsc.Ag) இவர், இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் (SLAS) சித்திபெற்று, வடமாகாணத்தி;ன் முதலாவது பெண் உதவி அரசாங்க அதிபரானார். இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திலும் உயர் பதவி வகித்தவர்.

அண்ணாவி பிரான்சிஸ்

பிறந்த ஆண்டு: 1955 (காலப்பகுதி)
தந்தை: மாசிலாமணி (நாடகக் கலைஞர், நாட்டுப்புறக் கலைஞர், கவிஞர், பாடகர்,)
தாய்: அக்னஸ்
கல்வி: விடத்தல்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
தொழில்: நாடகம், நாட்டுக்கூத்து, பாடல், ஒப்பாரி, பசாம் ,
திறமைகள்: சந்தியோகுமையோர் (சிறந்த நடிப்பு), ஒளி கொடுத்த உத்தமர் (ஜோசவாஸ் பள்ளி நாடகம்)

விடத்தல்தீவின் மண் மணத்துடன் வளர்ந்த அண்ணாவி பிரான்சிஸ், கலை என்றும் உயிர்த்தழிக்கும் ஒரு குடும்ப மரபின் தென்றலாக பிறந்தவர். மாசிலாமணி என்னும் நாடகக் கலைஞர் தந்தையின் சுவடுகளையும், அக்னஸ் என்னும் அன்னையின் பாசமான ஆசீர்வாதத்தையும் பெற்ற இவர், கலையின் பல்வேறு துறைகளில் தன்னை செம்மையாகக் காட்சிப்படுத்தியவர். நாடகம், நாட்டுப்புறக் கூத்து, பாடல், ஒப்பாரி,— இவை அனைத்தும் அவருக்குப் பிறப்பே சொந்தங்கள். மேடையில் உருமாறும் நாடகக் கலைஞராகவும், இசையின் ஓசையோடு உருகும் பாடகராகவும், தனது தனித்துவப் பாதையை வகுத்தவர். இவரது நடிப்புப் புலன்களை காட்சியளித்த சந்தியோகுமையோர் நிகழ்வும், ஒளி கொடுத்த உத்தமர் நாடகமும், இவரின் திறமைக்குச் சான்றாகத் திகழ்கின்றன.— இவரது கைகளில் உயிர் பெற்றன. கேட்போரை கட்டிப் பிடிக்கும் அவரது குரலும், பாரம்பரியத்தின் அடையாளமான நாடகங்களும் விடத்தல்தீவின் கலாச்சார வரலாற்றில் ஒரு அழியாத தடமாக எழுதப்பட்டுள்ளன. அண்ணாவி பிரான்சிஸ் — ஒரு தலைமுறை கலையியல்; ஒரு உயிர்மூச்சு நாடகம். கேட்போரை கட்டிப் பிடிக்கும் அவரது குரலும், பாரம்பரியத்தின் அடையாளமான நாடகங்களும் விடத்தல்தீவின் கலாச்சார வரலாற்றில் ஒரு அழியாத தடமாக எழுதப்பட்டுள்ளன.

பர்னபாஸ்

பிறந்த தேதி: 15.08.1958
தந்தை: சிலுவைராசா
தாய்: லூர்த்தம்மா
கல்வி: விடத்தல்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
கலையின் பலதரப்பட்ட நுணுக்கங்களை உள்ளடக்கிய பர்னபாஸ், விடத்தல்தீவின் நாட்டு நறுமணத்தை மணக்கச் செய்கிற கலைஞர். சிலுவைராசா என்பவர் புல்லாங்குழல், ஆர்மோனியம், வாலில்லா பட்டம் என இயற்கையின் இசையை இசைக்கும் சிறப்புநிபுணர். அந்த பாசமான கலை மரபைத் தொடர்ந்தே பர்னபாஸ் வளர்ந்தார். ஒப்பாரி இழையோடு புனைந்த நெஞ்சுக்கதைகள், — இவை அனைத்தையும் ஒரே பார்வையில் கொண்டாடும் ஆளுமை பர்னபாஸ். பரம்பரை இசைப் பயிற்சியோடு மேடையை உயிர்ப்பிக்கும் பங்களிப்பும் இவருக்கே உரியது. ஒரு கலைஞருக்கே உரிய ஆழம், இசை ஒரு மொழி என்ற உணர்வு, கலை ஒரு வாழ்வாகவே அவருடைய நிதான நடை.
இன்றும், ஒப்பாரியில் ஒரு தனக்கென ஓர் இடத்தை உறுதியாக்கி, விடத்தல்தீவின் கலாசாரச் சொரூபமாக விளங்குகிறார்.

அண்ணாவி கிளமெண்ட்

பிறந்த நாள்: 31.10.1966
பிறந்த இடம்: விடத்தல்தீவு, இலங்கை
ஆரம்பக் கல்வி: ஜோசவாஸ் பாடசாலை, விடத்தல்தீவு
துறை: நாடகம், நாட்டுப்புறக் கலை,
நூல்: நாடகத் தொகுப்பு – ஒப்பாரி, பிரசங்கம் விடத்தல்தீவின் அனல்வி குடும்பத்தில் 1966ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் தேதி பிறந்த அண்ணாவி கிளமெண்ட், கலைமிக்க பூர்வீகம் கொண்டவர். இவரது தந்தை திரு. மாசிலாமணி, நாடகக் கலைஞராகவும், நாட்டுப்புறக் கலைஞராகவும், சிறந்த பாடகராகவும் புகழ்பெற்றவர். தாய் திருமதி அக்னஸ், பிரான்சிஸ் சகோதரரின் குடும்பத்தைச் சேர்ந்த கலைப் பாரம்பரிய மிக்கவர்.
குறும்பருவத்திலேயே கலைப் பற்று வளர்த்த இவரது பயணம் 12ஆம் வயதில் மேடையை முதன்முறையாக எட்டிய “திராட்சைத் தோட்டம்” நாடகத்தில் நடித்ததுடன் தொடங்கியது. அதன் பின் நாடகம், நாட்டுப்புறக் கலை, ஆகிய கலைத் துறைகளில் இவர் தனித்துவம் பெற்றார்.
மறைந்தபின் ஒப்பாரி வழங்குதல், போன்ற கலைங்களில் திகழ்ந்து, தன் எழுத்து ஆற்றலாலும் கலையை விரிவாக்கினார். இவர் எழுதிய நாடகத் தொகுப்புகள், ஒப்பாரி மற்றும் பசாம் ஆக்கங்கள் பாராட்டுப் பெற்றவை. சமூகத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றார். தமது ஆரம்ப வாழ்க்கை, அவரை நிலைத்தமான வாழ்வின் அடித்தளமாகவும், உறுதியான கலைவாழ்வின் பாதையாகவும் வழிநடத்தியது.

MDRT and SILVER Awards - திருமதி மரியசேவியர் சிறாணி.

Hatton national bank Assurance மன்னார் கிளை சார்பாக *2024*ம் ஆண்டுக்கான *SALES CONVENTION* விருது வழங்கல் நிகழ்வில் திருமதி. மரிய சேவியர் சிறாணி அவர்கள் வெள்ளி மற்றும் *Million Dollar Round Table (MDRT)* விருதுகளை பெற்றுக் கொண்டார்.

கிளிமஞ்சரோ சிகரம் தொட்டு சாதனை படைத்த கீரன் (காந்தன்) அரசரட்ணம்.

உலக புகழ்பெற்ற,பிரசித்திவாய்ந்த மலைகளில் ஒன்றான கிளிமஞ்சரோ மலையில் ஏறி சாதனை படைத்தார் எமது மண்ணின் மைந்தன் கீரன் அரசரட்ணம் அவர்கள். நமது விடத்தல்தீவு கிராமத்தில் பிறந்து தற்பொழுது பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் அரசரட்ணம் கீரன் அவர்கள் *2009* ம் ஆண்டு சித்திரை மாதம் உலக புகழ்பெற்ற மலைகளில் ஒன்றான கிளிமஞ்சரோ மலையில் ஏறி சாதனயை நிலைநாட்டியுள்ளார்.

விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் ஜேம்ஸ் சுதாகரன்.......

வன்னி பெருருநிலப்பரப்பில் பல்வேறுபட்ட நில அடையாளங்களோடு, வரலாற்று பின்னணிகளோடு அமைந்துள்ள எமது விடத்தல்தீவில் விளையாட்டின் மீது எம்மவர்களுக்கு இருந்த ஈடுபாடும் அதன் தனிச்சிறப்புகளும் அதிகமாகவே காணப்பட்டது எனலாம்.

எமது ஊரில் பல்வேறுபட்ட விளையாட்டுகளில் எம்மவர்கள் ஈடுபட்டாலும் முக்கியமாக பலராலும் ரசிக்கப்படுகிற, விரும்பி கொண்டாடப்படுகிற உதைபந்தாட்டம் எமது ஊரில் அதிகளவில் ரசிக்கப்படுகிற விளையாட்டாக இருந்துவருகிறது. பாடசாலை மைதானம், கஸ்பார் பிட்டி, சுடுகாட்டு தரவ, வாசிகசால காணி, புதுக்கட்டு, தக்காப்பிட்டி, இவ்வாறான பல வெற்றுக்காணிகளில், பல இடங்களில் எமது ஊரில் சிறுவர்கள், இளைஞர்கள் என நாம் உதைபந்தாட்டத்தை விளையாடியிருந்தோம்.

எமது ஊரில் உதைபந்தாட்ட உள்ளூர் அணிகள் எக்கச்சக்கமாக இருந்தகாலம் *1967*ம் ஆண்டு அணி, அதிரடி, சிறுவர் முன்னேற்றக்கழகம், ஸ்ரார், உள்ளம் உடைந்தோர், நண்டு, மொண்டி கழுகுகள், செவன் லயன்ஸ், அமரக்களம், விண்மீன், காதலிக்காக, விழவிழ எழுவோம், டொல்பின், தேவா குழு, இவ்வாறான ஏகப்பட்ட உள்ளூர் உதைபந்தாட்ட அணிகள் ஊரில் இருக்கிற வெற்றுக்காணிகளில் தத்தமது வயதுக்கு ஏற்ற குழுக்கழாக ,அணிகளாக ஊரில் நாளாந்தம் உதைபந்தாட்டத்தை விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,திருமண நாட்கள், மேதின நிகழ்வுகள், ஆலய திருவிழாநாட்கள், நத்தார் மற்றும் வருடப்பிறப்பு போன்ற விசேட நாட்களை மையப்படுத்திய உள்ளூர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் எமது ஊரில் அடிக்கடி நடந்தேறிய உள்ளூர் உதைபந்தாட்ட சமர்களாகவே இருந்துவந்துள்ளது.

ஊரில் உதைபந்தாட்டத்தில் பிரகாசிக்கும் பல உள்ளூர் அணிகள் இருந்தாலும் எமது ஊரை பிரதிநிதித்துவப்படுத்திய விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் எமது தாய்கழகமாக இருந்துவருகிறது, வெளி இடங்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளுக்கு எமது ஊர் சார்பாக விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியே நாமும் எமது முன்னோரும் விளையாடி வந்திருந்தோம், விளையாடி வருகிறோம்.

எமது மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு போட்டிகள், ஏனைய உதைபந்தாட்ட கழகங்கள் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளுக்கு எமது ஊரில் இருந்து ஐக்கிய விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணி, வலைப்பந்தாட்ட அணி, கரப்பந்தாட்ட அணி ,கிரிக்கட் அணி என்பவற்றுடன் நடைபெறும் தடகள போட்டிகளிலும், மைதான , சுவட்டு நிகழ்ச்சிகளுக்கும் தனித்தனியாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வீர வீராங்கனைகள் பங்குபற்றி தேசிய ரீதியான பல வெற்றிகளையும் பெற்றுக்கொள்வதும் மறப்பதற்கல்ல.

1980 களிலும் அதற்கு பிற்பாடும் வெற்றிக்களிப்பில் ஊர சுத்தி ஆடல் பாடலோடு லொறி நிறஞ்ச ஆக்களோடு ஆத்தா ஆத்தோரமா, நடையலங்காரம் நாட்டியமப்பா, குடுகுடுத்த கிழவனுக்கு , போன்ற பாட்டோடு ஊரையே அதிரவைக்கிற அந்த நாட்களும் ,வெற்றிக்கொண்டாட்ட சமயல்களும் அடிக்கடி நிகழ்வதுண்டு.

உள்ளூரில் எமது அமர்க்கள அணியில் விளையாடி வந்த நான் *1993/1994*ம் ஆண்டுகளில் திரு.சி.ஸ்ரனிஸ்லஸ் (டெல்லாஸ்) அவர்களின் தலைமத்துவத்தின் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக *A* அணியில் ஊர் சார்பான எனது கன்னி உதைபந்தாட்டத்தை பெரியமடுவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சூ.சர்வானந்தன் (சுகுணன்/குட்டி) அ.எட்வேட் , ப.எட்வேட்றாஜா (புறோக்கர்) செ.எட்வேட்ஜோர்ச், பொ.தயானந்தன் (வசந்தன்) ம.மதுரநாயகம் , கி.சுரேஸ் (பொபி ஸ்ரூடியோ) அ.பாஸ்கால் பெனிற்றோ, அ.றெஜீஸ் ராஜநாயகம், அமரர் சூ.எட்வின் ஜோண்றாஜா (லொக்குட்டி) செ.எட்வின் கெனடி, ம.ராஜநாயகம் (றெஜி) செ.ரென்சி பேர்டினன்ற் ,ஜோ.ஸ்ராலின் வேட்ஸ் (விமல்) வ.தேவானந்தன் போன்ற சக வீரர்களுடன் விளையாடி வெற்றியீட்டி சம்பியனாகியது மறக்கமுடியாததாகும்.

*1997/1998*ம் ஆண்டு காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு பங்குத்தந்தையாக அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார் எமது ஊரில் பணியாற்றிய வேளையில் ஐக்கிய விளையாட்டுக்கழக நிர்வாகம் மற்றும் உறுப்பினர்களது உறுப்புரிமையை மறுசீரமைப்பு செய்து புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்திருந்தார். அந்த காலத்தில் நண்பன் ம.ராஜநாயகம் (றெஜி) மற்றும் தே.கனிஸ்ரராஜ் (ராஜன்) ஆகிய இருவரும் அங்கத்துவபணம் செலுத்தி நான் உட்பட எனது நண்பர்கள் அடங்கிய *11* வீரர்கள் கொண்ட அணியை பதிவுசெய்து தட்சனாமருதமடு கழகம் நடாத்திய மண்ணிண் மைந்தர்கள் கிண்ண உதைபந்தாட்ட போட்டயில் வெற்றிபெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டிருந்ததும் மறக்கமுடியாத வரலாற்று நிகழ்வாகும்.
தொடர்ந்து எமது மாந்தை பகுதிகளில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளிலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளிலும், இரணமாதா நகர், வலைப்பாடு, முழங்காவில், குமுளமுனை, நாச்சிக்குடா,பள்ளிக்குடா ஆகிய வெளி இடங்களில் சென்று விளையாடிய அந்த நாட்கள் என்றும் பசுமையே .குறிப்பாக எமது பகுதியில் நடைபெற்ற பண்டிவிரிச்சான் முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, மண்ணின் மைந்தர்கள் கிண்ண போட்டி தட்சனா மருதமடு, குமரன் ஞாபகார்த்த கிண்ணம் காத்தான்குளம், வீரப்பிரசவ ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி வட்டக்கண்டல் மற்றும் ஊரில் நடைபெற்ற கரும்புலி மைதான திறப்பு விழா போட்டி ,விக்ரர் கிண்ண உதைபந்தாட்ட போட்டி , நண்பன் ஜோண்றாஜ் ஞாபகார்த்த *Keeping Star* வெற்றிக்கிண்ண போட்டிகள் உட்பட உதவி அரசாங்க அதிபர பிரிவு போட்டிகளில் பலதடவைகள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றமையும் மறப்பதற்கல்ல.

மாவட்ட ரீதியில் *Srilanka National Novices Chess Championship* போட்டி

மேற்படி சதுரங்க போட்டியானது வயது பிரிவு அடிப்படையில் அல்லாத அனைவரும் பங்குபற்றக்கூடிய திறந்த போட்டியாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. அப் போட்டியில் எமது கிராமத்தின் செல்வி பிறேம்குமார்.பிரவீனா செல்வன். தயானந்தன் அஜேஸ், செல்வன் றொயிற்றன். டிவ்யன் மற்றும் செல்வன் கிருபாகரன். றொமேறோ ஆகியோர் வெற்றியீட்டி மாகாணமட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நகர *Rotaract* கழகத்தின் - *THE KING'S CROWN* சதுரங்க போட்டி

மேற்படி போட்டியில் *14* வயது பிரிவில் எமது கிராமத்தின் திரு. திருமதி தயானந்தன் , யூஜின் கெனடி தம்பதிகளின் புதல்வன் செல்வன். அஜேஸ் நடாத்தப்பட்ட *5* சுற்றுக்களில் *3* சுற்றில் வெற்றியீட்டியும், *14* வயது பிரிவில் திரு. திருமதி யூட்றோயர், தீபா தம்பதிகளின் புதல்வன் செல்வன். அஜந்தன் அஸ்வின் *4* சுற்றில் வெற்றியீட்டியும், *14* வயது பிரிவில் திரு. திருமதி றொயிற்றன், சாந்தினி தம்பதிகளின் புதல்வன் செல்வன் ஸ்ரெபான் டிவ்யன் *3* சுற்றில் வெற்றியீட்டியும் , *14* வயது பிரிவில் திரு. திருமதி தேவானந்தன், ஸ்ரெலா டெலாந்தினி தம்பதிகளின் புதல்வன் செல்வன் அடோணிஸ் *3* சுற்றில் வெற்றியீட்டியும் எமக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்து சான்றிதழை பெற்றார் டினோசன்.

திரு திருமதி பாஸ்கரதாஸ் அஞ்சலீனா தம்பதிகளின் புதல்வன் செல்வன் டினோசன் அவர்கள் கடந்த 2019 ம் ஆண்டு இந்தோனேசியாவில் இடம்பெற்ற 47 வது ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான தேசிய உதைபந்தாட்ட போட்டியில் எமது நாடு சார்பாக பங்குபற்றிய 18 வயதுப்பிரிவின் இலங்கை அணியில் இடம்பெற்று போட்டியில் பங்கு பற்றியமைக்காக நேற்றைய தினம் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட

கலையருவியால் நாடத்தப்பட்ட தவக்கால பசாம் மற்றும் ஒப்பாரி போட்டிகள்

- இரண்டாம்,நான்காம் இடங்களை பெற்றார் திருமதி சிறாணி மரியசேவியர் அவர்கள். - பிரிவு 2
- இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை பெற்றார் செல்வி. பீலிக்ஸ் பேக்ஸ்மன். மேரி பிறிஜிற்றா அவர்கள். - பிரிவு 1
- இரண்டாம் - பிரிவு 1 - மண்ணின் வசல்வி மரியநச்வியர் ஆன்ஸ்லயா
- மூன்றாவது இடத்தை பெற்றார் செல்வி. கிறிசாந்தன். கீர்த்திகா அவர்கள். - பிரிவு 1

- பிரிவு 1 ஒப்பாரி போட்டி - 1 ஆம் இடம். மா. பிரான்சிஸ், 3 ஆம் இடம். சி. பர்ணபாஸ்
- பிரிவு 3 ஒப்பாரி - 2 ஆம் இடம் ம. ஆன்ஸ்லயா, 3 ஆம் இடம் டெ. டேமியன்.
- **பிரிவு 1 இல் எமது மண்ணின் செல்வன். டென்சில்றாஜ் ஆரோண் டேமியன் அவர்கள் பங்குபற்றி ஒப்பாரி போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.**
- **ஒப்பாரி ,பிரசங்க போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றார் திருமதி அசெம்ரா அன்ரன் றேமன் அவர்கள்.**
- **பிரிவு 3 இல் எமது மண்ணின் திருமதி . அசெம்ரா. அன்ரன் றேமன் அவர்கள் பங்குபற்றி ஒப்பாரி பாடுவதில் முதலிடத்தையும் பிரசங்கம் வாசிப்பதில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.**
- **பிரிவு 3 இல் எமது மண்ணின் மைந்தன் திரு. மாசில்லாமணி. பிரான்சிஸ் அவர்கள் பங்குபற்றி வியாகுல பிரசங்கம் வாசிப்பதில் முதலாவது இடத்தையும், ஒப்பாரி பாடுவதில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.**



வியாகுல பிரசங்க மற்றம் ஒப்பாரி போட்டியில் இரண்டாம், நான்காம் இடங்களை பெற்றார் செல்வி. மரியசேவியர் ஆன்ஸ்லயா அவர்கள். - பிரிவு 1

நான்காவது இடத்தை பெற்றார் திரு. பிறேம்குமார் லடிஸ்லஸ் அவர்கள். - பிரிவு 2
நான்காவது இடத்தை பெற்றார் திரு. சிலுவைராசா. பர்ணபாஸ் அவர்கள்.- பிரிவு 3
2.3 .2024
பிரிவு 1. - 1 ஆம் இடம். மா. பிரான்சிஸ்., 3 ஆம் இடம். மா. கிளமென்ற்.
பிரிவு 2 - 1 ஆம் இடம். ம. சிராணி., 3 ஆம் இடம் வி. மேரி சியாளினி.
பிரிவு 3 - 3 ஆம் இடம். ஆன்ஸ்லயா, 3 ஆம் இடம். D. A. டேமியன்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரிவு 01 - 02 ம் இடம் ரென்சி பேர்டினன்ற் . ரெபேக்கா பேளின், 03 ம் இடம்- மரியசேவியர். ஆன்ஸ் லயா .
பிரிவு 02 (ஆண்கள்) - 2 ம் இடம்- மாசில்லாமணி . பிரான்சிஸ், 3 ம் இடம்- மாசில்லாமணி. கிளமென்ற்.
பிரிவு 02 (பெண்கள்)- 3 ம் இடம் மெலிட்டஸ் . மரிய கொறற்றி

ஒப்பாரி
பிரிவு 1 - 1 ம் இடம் - டென்சில்ராஜ். அரோன் டேமியன், 3 ம் இடம் - மரியசேவியர். ஆன்ஸ் லயா.
பிரிவு 2 (ஆண்கள்) - 1 ம் இடம் - மாசில்லாமணி .கிளமென்ற், 2 ம் இடம் - மாசில்லாமணி.பிரான்சிஸ்.
பிரிவு 2 (பெண்கள்) - 1 ம் இடம் - தேவநேசன் அல்போன்சியா, 2 ம் இடம் - மரியசேவியர். சிறாணி

பிரசங்கம் - 05/03/2022
கீழ் பிரிவு 1ம் இடம் - செல்வி .ரெரன்சியாபேளின் .ரென்சிபேர்டினன்ற்.
இடைநிலை பிரிவு -3ம் இடம். - திருமதி .மரியசேவியர். சிறாணி
மேற்பிரிவு -1ம் இடம்.- திரு .மாசில்லாமணி .பிரான்சிஸ்

ஒப்பாரி இசைத்தல்.
மேற்பிரிவு -
1 ம் இடம் . - திரு.சிலுவைராசா.பர்ணபாஸ்.
2ம் இடம் - திரு.மாசில்லாமணி.பிரான்சிஸ்

15/3/2025 - ஒப்பாரி போட்டியில் மூன்றாவது இடத்தை பெற்றார் திரு.மாசிலாமணி. கிளமென்ற் அவர்கள்.
5/4/2025 - தேசிய ரீதியில் நடைபெற்ற ஒப்பாரி, பசாம் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் மூன்றாவது இடம்.
அந்த வகையில் எமது பங்குத்தந்தை அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளாரின் பணிப்பின் பேரிலும், அவரது வழிநடத்துதலிலும் எமது ஜோசப்வாஸ் நகரை பிரதிநிதித்துவப்படுத்திய 2 குழுக்கள் பங்குபற்றியிருந்தன. அதன் அடிப்படையில் எமது ஜோசப்வாஸ் நகரில் இருந்து பங்குபற்றிய 8 நபர்கள் உள்ளடக்கப்பட்ட முதலாவது குழுவில் மரியசேவியர் ஆன்ஸ்லயா, பீலிக்ஸ் பேக்ஸ்மன் பிறிஜித்தா, பெல்மன் அல்மெய்டன் பிலோமி அக்ஸ்சயா, கிறிசாந்தன் கீர்த்திகா, அன்ரன் றேமன் அன்றினா, ஜீவானந்தன் சுஜா, ரென்சி பேர்டினன்ற் ரெஸ்மிக்கா, மற்றும் டென்சில்றாஜ் அரோண் டேமியன் ஆகிய மாணவர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி குழுவில் பக்கவாத்திய வயலின் இசையை செல்வி லயா அவர்கள் வழங்கியிருந்தார் .5 நடுவர்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் எமது ஜோசப்வாஸ் நகர் சார்பாக பங்குபற்றிய குழு 3வது இடத்தை பெற்றுள்ளதுடன் பங்குபற்றிய 8 மாணவர்களுக்கும் மன்னார் மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி மரியதாசன் குரூஸ் அடிகளாரினால் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்படி மாணவர்களுக்கான போட்டியை முன்னிட்டு ஆரம்ப பயிற்சியை எமது மண்ணின் திரு.சி.பர்ணபாஸ் அவர்களும் திரு.ம.பிரான்சிஸ் அவர்களும் வழங்கியிருந்தார்கள். பின்னர் அவர்களுக்கான ஒப்பனை ,உடையலங்காரம், போன்ற பல்வேறுபட்ட பொறுப்புகளை மறையாசிரியர்களான திருமதி ம.சிறாணி, திருமதி அ.அசெம்ரா, செல்வி கீ.தனுஜா மற்றும் திருமதி சு.டெனிஸ்ரின் அவர்களும் ஏற்றுருந்தார்கள்.

விமான பொறியியலாளரானார் டிலைக்ஸன் டக்ளஸ்.

புலம்பெயர்ந்த நாடுகளில் எமது இளையோர் தமது கல்வித் திறமைகளிலும் ,ஆற்றல்களிலும் பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளனர்.குறிப்பாக பிரான்ஸ் தேசத்தில் நமது ஊரின் 'திரு. டிலைக்சன் டக்ளஸ்' அவர்கள் விமானப் பொறியியலாளராக தனது படிப்பை நிறைவு செய்துள்ளார். இவர் எமது கிராமத்தின் திரு.திருமதி மரிய கொறற்றி டக்ளஸ் தம்பதிகளின் புதல்வராவார்.

4வது முறையாக கரோல் பாடல் போட்டியில் முதலாம் இடம்.

மன்னார் மறைக்கோட்ட பங்குகளுக்கு இடையிலான போட்டியில் கீழ்பிரிவில் ஒருமுறை முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர். மறுமுறை இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்

மேற்பிரிவு அணி மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்று பெருமையீட்டியுள்ளனர்.

சிறந்த பாடல் வரிகளுக்கான விருதை வென்று முதலிடம் பெற்றார் டெனிஸ்ரின்.

பாடலை எழுதி, அதனை இசையமைத்து முதலிடம் பெற்றார் எமது டெனிஸ்ரின். மன்னார் மேற்பிரிவு , கீழ்ப்பிரிவு பாடல் போட்டிக்கான பாடலை எழுதி, இசையமைத்த எமது கிராமத்தின் திருமதி .டெனிஸ்ரின் சுபாஸ்சந்திரன் அவர்களுக்கு சிறந்த பாடல்வரிகளுக்கான விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

"மீன் குஞ்சுக்கே நீச்சலா " -கீழ்பிரிவு முதலாம் இடம்.

மன்னார் கலையருவியினால் நடாத்தப்பட்ட வருடாந்த கரோல் பாடல் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் கிராமம் சார்பாகப் பங்குபற்றி 9 குழுக்கள் பங்குபற்றிய கீழ்ப்பிரிவில் முதல் கட்டமாக 5 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு பின்னர் அந்த 5 குழுக்களுக்கும் இடையிலான போட்டியில் பங்குபற்றி எமது கிராம கீழ்பிரிவினர் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.

"நட்டுவப்பிள்ளைக்கு நொட்டியா காட்டவேண்டும் "- மேற்பிரிவு இரண்டாம் இடம். மன்னார் கலையருவியினால் நடாத்தப்பட்ட வருடாந்த கரோல் பாடல் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் கிராமம் சார்பாகப் பங்குபற்றியதுடன் 9 குழுக்கள் பங்குபற்றிய மேற்பிரிவில் முதல்கட்டமாக5குழுக்கள்தெரிவுசெய்யப்பட்டுபின்னர்அந்த5குழுக்களுக்கும் இடையிலான போட்டியில் பங்குபற்றி எமது கிராமத்தைச்சேர்ந்த மேற்பிரிவினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

சிறந்த இசையமைப்பாளராக விருதை பெற்றார் டில்ஷிக்கா.

மன்னார் மறைகோட்ட பங்குகளுக்கு இடையிலான கரோல் பாடல் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் #ங்கின் கீழ்ப்பிரிவு #முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. மேலும் இவ் பாடலுக்கு ,இசையமைத்த எமது கிராமத்தின் திரு.திருமதி றொயிற்றன், சாந்தினி தம்பதிகளின் புதல்வி டில்ஷிக்கா அவர்கள் சிறந்த இசையமைப்பாளராக விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

எமது ஜோசப்வாஸ் நகர் பங்கை சேர்ந்த கீழ்ப்பிரிவு முதலிடம்.

மேலும் இப் பாடலுக்கான பக்க வாத்திய இசையை வழங்கியதுடன் (*Organist*)சிறந்த பக்க வாத்திய கலைஞருக்கான விருதை (*Organist*)செல்வி. டில்சிக்கா றொபிற்றன் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளார்.

டெனிஸ்ரின் சுபாஸ்சந்திரனின் பாடல் இரண்டாவது இடம்.

7/12/2024 நடைபெற்று முடிந்த மன்னார் மறைகோட்ட பங்குகளுக்கு இடையிலான கரோல் பாடல் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் பங்கின் கீழ்பிரிவு இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. மேலும் கீழ்ப்பிரிவு போட்டிக்கான பாடலை எழுதி , இரண்டாவது இடத்தை பெற்ற திருமதி . டெனிஸ்ரின் சுபாஸ்சந்திரன்.

டெலோசா பேபினின் முதலிடம் பெற்ற பாடல்.

7/12/2024 நடைபெற்று முடிந்த கரோல் பாடல் போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் பங்கின் மேற்பிரிவு முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. மேலும் முதலிடம் பெற்ற மேற்பிரிவு போட்டிக்கான பாடலை எழுதிய, எமது கிராமத்தின் திருமதி . டெலோசாபேபின் றெமிகுரூஸ். கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தை எமது ஜோசப் வாஸ் நகர் பங்கு பெற்றது .

இப் போட்டியில் பாடப்பட்ட பாடலை எழுதி இசையமைத்த எமது மண்ணின் மகளும், மன்னார் நகர பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலருமான திருமதி டெனிஸ்ரின் சுபாஸ் சந்திரன். கரோல் பாடலிசை போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர் பங்கு முதலாம் இடம். கீழ்பிரிவில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட முதல் ஆங்கில விஞ்ஞானப்பட்டதாரி. சோதிலிங்கம்

மன்னார் மாவட்ட முதன் முதல் ஆங்கில விஞ்ஞானப் பட்டதாரி திருவாளர் சிவகுரு சோதிலிங்கம் *B.sc (Hons)* இவர் *1940* ம் ஆண்டு திரு திருமதி சிவகுரு யோகம்மா தம்பதியினரின் மூத்த மகனாவார். இளமைக் காலத்துக் கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆண்டு 5 வரை கற்றார். பின் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலேயே கல்வி பொதுத் தராதர உயர்தரம் வரை கற்றுத் தேறினார். பின்னர் மருத்துவம் படிக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் வட இந்தியாவில் உள்ள பூனே மருத்துவ கல்லூரிக்கு தேர்வானார். ஆனால் சந்தர்ப்ப வசத்தால் அங்கு சென்று படிக்க முடியவில்லை பின்னர் *1960*ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கில வழி விஞ்ஞான பிரிவில் சேர்ந்து பட்டப்படிப்பு படித்தார்.

என். அண்ணாதுரை (அறிஞர் அண்ணா) கற்ற கல்லூரி. அவர் இருந்த கல்லூரி விடுதி எண் *83* அறையிலேயே இவரும் தங்கியிருந்து படித்தார். அந்த அறை தனக்கு கிடைத்தது பரிய சந்தோசம் என்று கூறுவார். இவர் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக மு. வரதராசனார் இருந்தார்.

பிரபல எழுத்தாளரும் இலக்கியவாதியும் மொழிப்பற்றாளருமான மு.வ. 67 601 அழைக்கப்படுவார்.இவர் தமிழ் பேராசிரியராக இருந்ததைப் பெருமையாகக் கூறுவார். அதனால் ஆங்கிலத்தில் மட்டுமல்ல தமிழிலும் மிக மிக பாண்டித்தியம் பெற்றவர். இவரோடு தமிழ்நாட்டில் 30 இலங்கை தமிழ் மாணவர்கள் கற்றார்கள். அதில் மூதூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை . சிவானந்தன் (புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தன்) அவரோடு கூட படித்தவர்கள். நீண்டகாலம் நட்புடன் இருந்தார்கள்.

ஆங்கில விஞ்ஞான கல்வி இலங்கையில் பெரிதாக வளர்ச்சி அடையாத காலம் பட்டப்படிப்பை முடித்து பின்னர் சிறப்பு பட்டம்பெற்றார். 1964 ஆம் ஆண்டு 24ம் வயதில் நாடு திரும்பினார். அந்த காலகட்டத்தில் அரசு வேலை நியமனம் வழங்கப்படவில்லை கொழும்பு லேக்கவுஸ் நிறுவனத்தில் பணிபுரிந்தார். பல ஆராய்ச்சி கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார் நரம்பியல் சம்பந்தமான தொடர் கட்டுரை அன்று வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. பின் கொழும்பு புனித சவேரியார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்தார். இது தனியார் கல்லூரி மாவட்ட முதல் பட்டதாரியாக இருந்தும் அரசு வேலை நியமனம் கிடைக்கவில்லை ஏழு வருடங்கள் வேலை இல்லா பட்டதாரி தந்தையாரின் நெருக்கமான தமிழ் கூட்டணி கட்சியின் பங்களிப்பாலும் அரசியல் பழிவாங்கல்களில் பதவி பெற முடியவில்லை அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் அழகக்கோன் அவர்கள் அடிக்கடி கூறுவார் எனது கட்சியில் இருப்பதால் வேலை கிடைக்கவில்லை வேறு கட்சியில் மாறடா தம்பி என ஆதங்கத்தோடு கூறுவார். இலஞ்சம் கொடுத்து வேலை பெறுவதையும் விரும்பவில்லை. இவரோடு படித்த பலர் இலஞ்சம் கொடுத்து பதவிபெற்றனர். திறமைக்கும் பட்டப்படிப்புக்கும் பதவி கிடைத்தால் போதும் என்ற மனப்பாங்குதான்.

அரசியல் பழிவாங்கல்களில் வேலை கிடைக்கவில்லை கிடைத்த வேலையும் அவரது விஞ்ஞான கல்விக் பொருந்தவில்லை அன்று ஆப்பிரிக்காவிலுள்ள லுமும்பா பட்டக கல்வி நிறுவனத்தில் பணிக்குச் செல்ல தெரிவு செய்யப்பட்டார் பயணிக்க பலனில்லை இறுதிக்காலத்தில் ஆன்மீகப் பணியில் ஆர்வம் கொண்டார். அதற்கிடையில் பணியிடத்தில் மேடையின் பேசிக் கொண்டு இருக்கும் போது ஏற்பட்ட தாக்கம் மாரடைப்ப மரணத்தில் முடிந்தது. அப்போது அவருக்கு வயது 49. 1989ம் ஆண்டு. இளம் வயதில் அவரின் திடீர் மரணத்தால் குடும்பமே பெரும் துயரத்தில் சுருண்டு விட்டது 10 பேருக்கு மூத்தவர் அவர் மரணித்து மறுவாரம் அவர் மகளின் பொறியியல் கல்வி நியமனம் வந்தது.

மேற்கத்திய இசை மற்றும் பேச்சு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டி

2023 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் தரப்படுத்தப்பட்ட தேர்வில் திரு. திருமதி சயிந்தன், மேரி சுமித்திரா தம்பதிகளின் புதல்வன் செல்வன் சாறுன் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் மேல் நிலைப்பிரிவில் சித்தியடைந்து அதற்கான நினைவு சின்னத்தையும் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

திரு. திருமதி ஏணஸ் துஷாந்தி தம்பதிகளின் புதல்வன் செல்வன் கிஷோக் ஜெய்றோ அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் ஆரம்ப தரத்தில் சித்தியடைந்து அதற்கான நினைவு சின்னத்தையும் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

திரு. திருமதி ராஜநாயகம் ,பெமிலா செறின் தம்பதிகளின் புதல்வி செல்வி ரியானா அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் ஆரம்ப தரத்தில் சித்தியடைந்து அதற்கான நினைவு சின்னத்தையும் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

திரு.திருமதி பிறீடன், மேரி ஆன் அக்னஸ் தம்பதிகளின் புதல்வன் செல்வன் அக்னலஸ் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் ஆரம்ப தரத்தில் சித்தியடைந்து அதற்கான நினைவு சின்னத்தையும் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

கரப்பந்தாட்ட போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவானத எமது மகளீர் அணி

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சம்பியனாக வலம் வருகின்றது. மேலும் எமது கரப்பந்தாட்ட அணியானது வருகிற மாதம் மன்னார் மாவட்டத்தில் நடைபெற உள்ள மாகாண மட்ட கரப்பந்தாட்ட போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை ரீதியான சிறந்த அதிபர்களுக்கான விருது - பிரதீபா பிரபா

ஆண்டு 2012. மற்றும் 2013 அதிபர் திரு ஜோன்சன் கியோமர் பயஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பித்து நடாத்தி க.பொ.த. சா/த வரை உயர்த்தி அகில இலங்கை ரீதியில் தங்கப் பதக்கம் வென்ற அதிபர்

மேற்கத்திய இசை மற்றும் பேச்சு நிறுவனத்தால் நடத்தப்பட்ட 2024 தரப் பரீட்சை

திரு.திருமதி ராஜநாயகம் பெமிலா செறின் தம்பதிகளின் புதல்வி செல்வி ரியானா அவர்கள் பேச்சு ஆங்கில மொழியில் தரம் 1 சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு.திருமதி ஏணஸ் கிசோக் துசாந்தி தம்பதிகளின் புதல்வன் செல்வன் ஜெய்றோ அவர்கள் பேச்சு ஆங்கில மொழியிலும் , ஆங்கில எழுத்திலும் ஆரம்ப தர சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு. திருமதி பிரபாகரன் நிர்மலோஜினி தம்பதிகளின் புதல்வன் செல்வன் அனஸ்ரியன் அவர்கள் பேச்சு ஆங்கில மொழியில் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு.திருமதி அன்ரன் றாஜகரியர், குமுதா தம்பதிகளின் புதல்வி செல்வி ஆன் சைலின் அவர்கள் பேச்சு ஆங்கில மொழியிலும் , ஆங்கில எழுத்திலும் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

சல்மான் மேரிஸ்ரா தம்பதிகளின் புதல்வன் செல்வன் சாம்ஷ் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு.திருமதி பிறீடன் மேரி ஆன் அக்னஸ் தம்பதிகளின் புதல்வன் செல்வன் அக்னலஸ் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு. திருமதி டயஸ்கிளின் தீபவதனி தம்பதிகளின் புதல்வன் செல்வன் கிறோஷன் அவர்கள் எழுத்து ஆங்கிலத்தில் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

திரு. திருமதி கிரிதரன் நிருபறோஜினி தம்பதிகளின் புதல்விகளான நிகிக்ஷா மற்றும் நிகன்க்ஷா ஆகிய இருவரும் அவர்கள் எழுத்து ஆங்கிலத்தில் சான்றிதழையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

சதுரங்க போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவான எம்மவர்கள்

20/12/2023 நடைபெற்ற மன்னார் வலய சதுரங்கப் போட்டியில் மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலையில் *4* மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். - றொணில்டன். றினோஷ், யூட்றோஜர். ஸ்ரெபான், தேவானந்தன். அடோனிஸ் மற்றும் தயானந்தன். அஜேஸ்

அந்த வகையில்.
11 வயதுப் பிரிவு
செல்வன். யூட் றோஜர். ஸ்ரெபான்.
(ஆறு சுற்றுக்களில் ஆறு வெற்றி) .

செல்வன் தயானந்தன். ஆஜெஸ்.
(ஆறு சுற்றுக்களில் நான்கு வெற்றி).

செல்வன். தேவானந்தன். அடினோஸ்.
(ஆறு சுற்றுக்களில் நான்கு வெற்றி)

7 வயதுப் பிரிவு
செல்வன்.ஜஸ்ரின். ஜக்ஸ்சன்.
(ஆறு சுற்றுக்களில் நான்கு வெற்றி)

THE KING'S CROWN சதுரங்க போட்டியில் சாதித்த எம்மவர்கள்.

மன்னார் நகர *Rotaract* கழகத்தின் ஏற்பாட்டில் *9/3/2025* நடைபெற்ற போட்டியில் *8* வயது பிரிவில் எமது கிராமத்தின் திரு.திருமதி அன்ரன் பிகிறாடோ, கசில்டா றக்சினி தம்பதிகளின் புதல்வன் செல்வன். ஹர்ஸித் பிகிறாடோ அவர்களும், *12* வயது பிரிவில் திரு. திருமதி யூட்றோயர், தீபா தம்பதிகளின் புதல்வன் செல்வன். யூட்ஸ்ரெபான் அவர்களும் வெற்றியீட்டி சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

18 வயது பிரிவில் எமது கிராமத்தின் திரு.திருமதி கில்டன் யோகராஜ், ஜெயமலர் தம்பதிகளின் புதல்வி செல்வி. கில்மா ஜெஷானிக்கா அவர்கள் *3* வது இடத்தைப் பெற்றுள்ளார். எமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மாகாண ரீதியான சதுரங்க போட்டிக்கு தெரிவு.

திரு.திருமதி அருள் ஜெயக்குமார், சுபோஜினி தம்பதிகளின் புதல்வி செல்வி ஆர்த்மிஹா, மற்றும் புதல்வன் செல்வன். அவிஷான் ஆகியோர் நடைபெற்ற மாவட்ட ரீதியிலான சதுரங்க போட்டியில் முறையே *7* வயது பிரிவில் வாட்ட ரீதியில் முதலிடத்தையும், *13* வயது பிரிவில் மாவட்ட ரீதியில் *4* வது இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

A, ஆர்த்மிஹா,
7 வயதுப் பிரிவு,
5 சுற்றுக்களில் *5* ம் வெற்றி
மாவட்டத்தில் முதலிடம்
CHAMPION

A. அவிஷான்
13 வயதுப் பிரிவு
6 சுற்றுக்களில் *5* வெற்றி
மாவட்ட நிலை *4*

தேவானந்தன் அடோனிஸ்

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாகாணமட்ட சதுரங்க ஒற்றையர் போட்டி பிரிவில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவானார் எமது அடோனிஸ்.கிளி/பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாகாண சதுரங்க போட்டிகளில் எமது கிராமத்தின் திரு.திருமதி. தேவானந்தன், ஸ்ரெலா டெலாந்தினி தம்பதிகளின் புதல்வன் செல்வன் அடோனிஸ் அவர்கள் (11 வயதுப் பிரிவில்) ஆறு சுற்றுக்களில் நான்கு சுற்றுக்களில் வெற்றிபெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்,

மன்னார் வலயமட்ட சதுரங்க போட்டியில் முதலிடம்.

கடந்த 13/12/2024 அன்று மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் எமது மண்ணின் திரு.திருமதி சியாம்சன், நிலோஜனா தம்பதிகளின்புதல்வி செல்வி.ஜஸ்லின் ஏஞ்சலா அவர்கள் மன்/பேசாலை சென் மேரிஸ் பாடசாலை சார்பாக பங்கேற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

வடக்கு மாஸ்டர் சதுரங்க இராச்சியம் பள்ளி சதுரங்க சாம்பியன்ஷிப் 2023.

மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் அருள் ஜெயக்குமார் - சுபோஜினி தம்பதியரின் மகள் ஆர்த்மிஹா தரம் 1, 7 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் 1ம் இடத்தை பெற்று மாவட்ட சம்பியனாகவும்,
அருள் ஜெயக்குமார் - சுபோஜினி தம்பதியரின் மகன் அவிஷான் தரம் 6, 11 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 5ம் இடத்தை பெற்று
மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
ஆறு சுற்றிலும் வெற்றியீட்டி மாவட்ட ரீதியான சதுரங்க ஒற்றையர் பிரிவு போட்டியில் வெற்றி பெற்று மாகாண போட்டிக்கு தெரிவானார் ஸ்ரெபான்.

11 வயதுப் பிரிவு - செல்வன். யூட் றோஜர். ஸ்ரெபான். - (ஆறு சுற்றுக்களில் ஆறு வெற்றி).

இலங்கை தேசிய புதிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டி

செல்வன் கிருபாகரன் றொமேறோ அவர்கள் வெற்றியீட்டி மாகாணமட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

10.3.2024 நடைபெற்ற *Battle of Mind Chess Championship* போட்டியில் ஜோசப்வாஸ் நகரின் பின்வரும் மாணவர்கள் பங்கேற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். - றொணில்டன். றினோஷ், தயானந்தன் அஜேஸ். யூட்றோஜர். ஸ்ரெபான், மற்றும் தேவானந்தன்.அடோனிஸ் ஆகிய நான்கு மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

29.10.2024 இன்றைய தினம் சென்/மேரிஸ் வித்தியாலயம் பேசாலையில் நடைபெற்ற தரம் 5 மாணவர்களுக்கான வலயமட்ட சதுரங்கப்போட்டி நடைபெற்றது. குறித்த போட்டியில் தோட்டவெளி அ.த.க பாடசாலை மாணவனுமான செல்வன் யூட் ஸ்ரெபான் நடைபெற்ற ஆறு சுற்றுக்களில் ஐந்து சுற்றில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளார்

மீண்டும் வருவோம்

சொந்த ஊரில் இருந்து இடம்பெயர்ந்த ஒரு சமூகம் பல இடர்களை, இன்னல்களை எதிர்கொண்டு அசூர வளர்ச்சியடைந்து பல்வேறுபட்ட துறைகளில் தன்னிறைவு பெற்றுள்ள சமூகமாக மன்னார் மாவட்டத்தில் இருப்பதென்றால் அது எமது சமூகம் என்பதற்கு மாற்றுகருத்தேதுமில்லை.

அந்த வகையில் கல்வி, பொருளாதாரம், ஆன்மிகம், போன்ற துறைகளில் எமது சமூகம் வளர்ச்சியடைந்திருந்தாலும் கலை மற்றும் விளையாட்டுத்துறையில் எமது ஆர்வம் குறைந்த தன்மை காணப்படுவதுடன் கலை, விளையாட்டு துறைகள் பாரிய சரிவை, வீழ்ச்சியை பெற்றிருப்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாக இருக்கிறது.

விளையாட்டுத்துறையை எடுத்துக்கொள்வோமானால் இயல்பிலேயே எம் அனைவருக்கும் ஆற்றல், திறமைகள் நிறையவே உண்டு. சுமார் 25 வருடங்களுக்கு முன் எமது ஊரில் விளையாடுவதை மட்டுமே

பொழுதுபோக்காக கொண்டிருந்ததுடன்,விளையாட்டு திறனை நாமாகவே வளர்த்துக்கொண்டவர்கள். நேரம் தப்பாமல் பெண்கள், ஆண்கள் என எல்லோரும் அவரவர் வயது பிரிவினருடன் உதைபந்து ,கரப்பந்து ,கிறிக்கட், வலைப்பந்து என தத்தமது திறன்களை வளர்த்துக்கொண்டோம் என்றால் அது மிகையாகாது.

எமது காலப்பகுதியில் எமது கழகம் விளையாட்டில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் தொட்டிராத இமாலய சாதனைகளை ஊரில் இருந்து இடம்பெயர்ந்த பிற்பாடு விளையாட்டுத்துறையில் அதாவது உதைபந்தாட்டத்தல் எமது கழகம் அடைந்து கிறிக்கட்டிலும் ஊரில இருந்த வளர்ச்சியை விட முன்னேற்றகரமாக நகர்த்தப்பட்ட போதிலும் இப்பொழுது இருக்கும் அணிகள் அதன் வீரர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கப்போகும் அணியினதும், வீரர்களினதும் பங்களிப்பு மற்றும் விளையாட்டில் அவர்களுக்குண்டான ஊக்கம் என்பது மங்கிபோகும் நிலையிலும் கேள்விக்குறியாகவுமே இருக்கிறது. உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கட் போன்ற விளையாட்டுகளுக்கான ஊக்கமும், அதற்கான ஆர்வமும் இளம் வீரர்கள் மட்டில் தேவைப்படும் ஒன்றாகவே இருந்துவருகிறது.

பெண்கள் கரப்பந்து மற்றும் வலைப்பந்து

எமக்கென்றொரு வரலாறு உண்டு அதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் எமது ஊரில் வெகு ஆர்வமாக எமது கழக வீராங்கனைகளால் விரும்பி சிறப்பாக விளையாடப்பட்டு பல வெற்றிக்கிண்ணங்களை சுவீகரித்த காலங்கள் அதிகம். பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமலே நாளாந்தம் பின்னேரங்களில் விளையாடுவதை மட்டும் பயிற்சிகளாக கொண்டு எமது வலைப்பந்தாட்ட அணி எமது பிரதேசத்தில் இருந்த ஏனைய அனைத்து வலைப்பந்தாட்ட அணிகளுக்கும் சிம்மசொப்பனமாக இருந்துள்ளனர்.

அந்தவகையில் எமது ஊரில் தங்கமலர் அக்கா, அலிஸ் அக்கா,டெய்சி அன்ரி ஆகியோரில் இருந்து ஆரம்பித்து , விற்றேசன் ரீச்சர், கலாமதி ரீச்சர், கன்னிமலர் அக்கா, றோகினி அக்கா,மரியசீலி ரீச்சர், உருசில்லா ரீச்சர்,மேரிராணி அக்கா,யூலியற் அக்கா, ஜெயவதி அக்கா, ஜொய்சி அக்கா, பிறேமலதா ரீச்சர், கோல்டா மேயர் ரீச்சர், சுஜி ரீச்சர், நேசமலர் ரீச்சர், றஞ்சினி அக்கா, நிர்மலா ரீச்சர், கொலஸ்ரிக்கா அக்கா,ஜீவமலர் அக்கா, றோஜி ரீச்சர், சைமினி அக்கா, சுஜாதா ரீச்சர், குமுதா, யூஜின்கெனடி, பிறேமா ,தேவி, சசீலா, பெமிலா ,மேரி ஆன் அக்னஸ், எல்மோ, சிறோமி, அனுசா, சிந்துஜா, டென்சில்டா போன்ற வீராங்கனைகளுடன் எமது பெண்கள் அணியினர் வலைப்பந்தாட்ட போட்டிகளில் எதிரணிகளை துவசம் செய்திருந்தார்கள்.

இடம்பெயரந்த பின்னர் ஆங்காங்கே நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டிகளில் விளையாடிய எமது வலைப்பந்தாட்ட அணி அந்நாட்களில் மாவட்ட ரீதியில் முன்னணி வலைப்பந்தாட்ட அணியாக திகழ்ந்த பள்ளிமுனை புனித லூரசியா வலைப்பந்தாட்ட அணியை வென்ற வரலாறும் உண்டு. ஆனால் காலம் செல்ல செல்ல வலைப்பந்தாட்டத்தில் உள்ள ஆர்வம் அற்றுப்போன நிலையில் அதனை விளையாட யாரும் முன்வராத துர்பாக்கிய நிலை தொடர்வது வருத்தமளிக்கிறது. அடுத்து பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தை எடுத்துக்கொள்வோமானால் தமது பாடசாலை மாணவ காலத்தில் இருந்து பாடசாலை அணிக்காகவும் எமது கழகத்திற்காகவும் மாவட்ட அணி சார்பாகவும் விளையாடி பல வெற்றிக்கனிகளை மாகாண ரீதியாக பெற்றுக்கொள்ள காரணகர்த்தாவாக இருந்தவர்களுள் திருமதி சியாந்தனா டெலிஸ்ரன் நிசாந் மற்றும் அவருடன் இணைந்த அணி வீராங்கனைகளும் என்றால் அது மிகையல்ல. ஒன்றல்ல, இரண்டல்ல பல ஆண்டுகளாக மாவட்டரீதியிலான முதல் நிலை சாதனையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டு பல்வேறுபட்ட போட்டிகளில் எமது கிராமத்தின் கரப்பந்தாட்ட அணி சார்பாக களமிறங்கி வெற்றியை பெற்றுத்தந்த எமது வீராங்கனைகளை பாராட்டுவது சாலச்சிறந்ததாகும்.

மாவட்டத்தில் பல பிரசித்திபெற்ற கிராமங்களையும், கழகங்களையும் புறம்தள்ளி பெண்கள் கரப்பந்தாட்டத்தில் எம் கழகமும், வீராங்கனைகளும் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு மத்தியிலும் ஊக்கத்துடன் பல பயிற்சிகளை மேற்கொண்டு தொடர்ச்சியான வெற்றிகளை மன்னார் மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியாகவும் பெற்ற வரலாறும் உண்டு. ஆனால் சமீப காலமாக எமது கிராமத்தில் பெண்கள் கரப்பந்தாட்ட விளையாட்டுத்திறன்கள் மங்கிப்போகும் அளவிற்கு ஊக்கமும், ஊக்கப்படுத்துதலும் குறைந்துகொண்டு செல்வதை அவதானிக்க முடிகிறது.

எனவே எமது கிராமத்தின் பல்வேறுபட்ட துறைகளில் வளர்ந்து சாதனைகளை நிலைநாட்டிக்கொண்டிருக்கும் நாம் விளையாட்டுத்துறையில் மங்கிப்போன,எம்மால் கைவிடப்பட்ட வலைப்பந்தாட்டத்தையும், ஊக்கம் குறைந்து மங்கிப்போகும் தருவாயில் இருக்கும் பெண்கள் கரப்பந்தாட்டத்தையும் வளர்த்துக்கொள்ள முன்வருவோம்.

விடத்தல்தீவின் முதலாவது மருத்துவர் திரு. சத்தியசீலன். கிறிசோஸ்ரொம் அவர்கள்.

திரு.கிறிசோஸ்ரொம் அவர்கள் விடத்தல்தீவின் திரு.திருமதி சத்தியசீலனின் இரண்டாவது பிள்ளை. தற்பொழுது பிரித்தானியாவில் வசிக்கிறார்.இவருடைய மூத்த சகோதரர் அல்பிறட், தங்கை மறிஸ்ரெலா சத்திய தேவி (கனடா) வசித்து வருகிறார். இவர் தனது ஆரம்ப கல்வியை நம் விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார் .1951ல் பாலர் வகுப்பிலும், 1961ல் SSC Arts (GCSE O/L) பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தார்.நாட்டின் ஏற்பட்ட அரசியல் குளறுபடியால் நமது பாடசாலையின் கல்வி நிலை சீராக நடக்கவில்லை. எனவே GCSE Art பூர்த்தி செய்ய அவரை அவருடைய ஐயா சத்தியசீலன் அவர்கள் அனுரதபுரம் புனித ஜோசப் கல்லூரியில் கொண்டுபோய் அங்கு சேர்த்தார்.

எமது ஊரின் ஆசிரியரும் அவரது அன்புக்குரிய சின்னையாவுமாகிய அமரர் இராயப்பு ஆசிரியர்தான் அவருக்கு அனுமதி பெற்றுக்கொடுத்திருந்தார் .1962ல் GCSC O/L Arts கற்று முடித்தவுடன் அவரது வாழ்க்கை மாறியது. அவரது ஆசிரியர்கள் எல்லோரும் அவரை GCSC O/L science பாடத்தை கற்ற அறிவுரை கூறினார்கள். அதனால் அவர் மீண்டும் 2 வருடங்கள் GCSC O/L படித்து முடித்து அதிலே விசேட சித்திகள் பெற்றார் பின்னர் 1966 ல் யாழ்பாணம் சுன்னாகம் கந்தரோடையில் உள்ள ஸ்கந்தவரோதயா கல்லூரியில் GCSE A/L கற்பதற்காக சேர்ந்தார்.

அங்கிருந்து 1969 ல் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெற்றார். மறுபடியும் கல்வி அமைச்சின் கோளாறினால் அவருடைய அனுமதி தாமதமாகியது. காலங்களை வீணாக்ககூடாது என்பதற்காக மருத்துவ க்கல்லூரி அனுமதிநாள் வரும்வரை பலாலியில் அமைந்திருந்த Junior universityல் விவசாய விஞ்ஞானம் (Agricultural science) கற்றுள்ளார்.1970 ல் நமது ஊரில் இருந்து முதன் முதல் மருத்த்துவக்கல்லூரி சென்றவர் இவரேயாவார்.

அவரது ஐயா சத்தியசீலன் அவர்களின் தளராத முயற்சியும் இடைவிடாத ஊக்கமும் கொண்டிருந்ததாலும் திருக் குறளின்படி ”தம்மின் தம்மக்கள் அறிவுடமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது” .அவரது பெற்றோரின் கடின உழைப்பாலும் இடைவிடாத செபதபங்களாலும், அவருக்கு அளித்த ஊக்கத்தாலும் அவருடைய ஆசான்களும், ஆசிரியர்களும் கொடுத்த நல்ல வழிநடத்தலாலும் ,அறிவுரைகளாலும் கிறிசோஸ்ரொம் அவர்கள் கல்வியில் சிறந்து நம் ஊரின் முதலாவது மருத்துவக் கலாநிதி பட்டம் பெற்றார்.

தொட்டனைத்தூறும் மணற்கேணி.......

தகவல் மண்ணின் முதல் வைத்தியர் திரு. கிறிஸ்தோதொம் அவர்கள்.

எமது விடத்தல்தீவு கிராமத்தின் புகழும் ,கீர்த்தியும் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமே உள்ளது. தொட்டனைத்தூறும் மனற்கேணி அதேபோல், தோண்டத் தோண்ட எமது மண்ணின் புகழ் ஊறிக்கொண்டேதான் போகிறது. அந்தவகையில் எமது விடத்தல்தீவு பிரதேச வைத்தியசாலையில் பிறந்து இன்று பனிப்பாறைகளால் சூழப்பட்டுள்ள அலஸ்கா நாட்டில் பிரபல புற்று நோய் நிபுணராக பணியாற்றுகிறார் திரு. அனுசாந்தன் மரியாம்பிள்ள புற்றுநோய் நிபுணர் திரு அனுசாந்தன் அவர்கள் தமது கிராமத்தின் திரு. திருமதி மரியாம்பிள்ளை அவர்களுடைய இரண்டாவது புதல்வராவார். இவ் உலகில் உள்ள மிகப்பெரிய பணிப்பாறைகளின் தொடர் மலை பிரதேசங்களிலும் எமது ஊரான விடத்தல்தீவினதும் அதன் மகிமையையும் பறைசாற்றும் புற்றுநோய் நிபுணர் திரு அனுசாந்தன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

மைலோ கிண்ண இறுதிப்போட்டியில் இரண்டாம் இடம்.

2024 ம் ஆண்டிற்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ண சம்பியன் சுற்றுப்போட்டி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. முன்னதாக எமது மன்/தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலய 12 வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட அணி இறுதிப்போட்டியில் மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியை அணியை எதிர்த்தாடிய நிலையில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்கள்.

அதிபர் - ஜோண்சன் கியோமர் பயஸ், மன்/தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம்,விடத்தல்தீவு.

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியுடனான அரையிறுதி போட்டியில் வெற்றி

எமது ஜோசப்வாஸ் நகர் வீரர்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்திய மன்/ தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் *12* வயது பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்ட அணி லீக் போட்டியின் தமது அரையிறுதிப் போட்டியில் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்தாடியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற அரையிறுதி போட்டியில் மிகவும் சிறப்பான அனல் பறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய எமது அணி ஆட்டநேர முடிவில் *1:1* என்ற கோல் அடிப்படையில் போட்டியை சமனிலைப்படுத்தியது. தொடர்ந்து வழங்கப்பட தண்ட உதையில் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

RENOWN அக்கடமியின் தேசிய ரீதியில் உதைபந்தாட்ட அணியில் டிவ்யன்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான *12*வயது பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்ட தேசிய வீரர்களை தெரிவு செய்யும் நிகழ்வானது கடந்த *22/1/2024* இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. முதற்கட்ட தெரிவில் குறிப்பாக வட மாகாணத்திலிருந்தும் மன்னார் மாவட்டத்திலிருந்தும் பங்குபற்றியதுடன் தேசீய ரீதியான *12* வயது உதைபந்தாட்ட தேசிய அணியில் செல்வன் றொயிற்றன் ஸ்றெபான் டிவ்யன் அவர்களும் செல்வன் யூதாததேயு டிலோசன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

சமபோசா கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அதிக கோல் அடித்த வீரர் விருதை பெற்றார் டிவ்யன். மன்னார் மாவட்ட ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் *14* வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர்-தோட்டவெளி அ.த.க பாடசாலை அணி சம்பியனாகியது. மேற்படி சுற்றுப்போட்டியில் எமது கிராமத்தின் திரு.திருமதி றொயிற்றன் தம்பதிகளின் புதல்வன் செல்வன் டிவ்யன் அவர்கள் அதிக கோல்களை எமது அணிக்காக பெற்றுக்கொடுத்து சுற்றுப்போட்டியில் அதிகப்படியான கோல்களை அடித்த வீரன் என்ற விருதை பெற்றுக்கொண்டார்.

சமபோசா கிண்ண இறுதிப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரர் எதன்.

14 வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஜோசப்வாஸ் நகர்-தோட்டவெளி அ.த.க பாடசாலை அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் எமது கிராமத்தின் திரு.திருமதி கமல்றாஜ் தம்பதிகளின் புதல்வன் எதன் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதை பெற்றுக்கொண்டார்.

பயிற்றுவிப்பாளர் ஜோண்சன் தலைமையில் உதைபந்தாட்ட போட்டியில் எம்மவர்கள்

மன்னார் வலய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட *20* வயது மற்றும் *18* வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகள் சம்பியனாகியது. மேற்படி உதைபந்தாட்ட அணிகளுக்கு புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பயிற்சி ஆசிரியருமான திரு. ஜோ.ஜோண்சன் அவர்கள் பயிற்சிகளை வழங்கியதுடன் *20* வயது பிரிவு உதைபந்தாட்ட அணியில் எமது கிராமத்தின் செல்வன் சர்வானந்தன் தருசன் சுயன்ஸ் அவர்களும், செல்வன் டொன்சுவான் டொனிஸ்ரன் அவர்களும் *18* வயது பிரிவு உதைபந்தாட்ட அணியில் செல்வன் சர்வானந்தன்

நிருசன் சுயன்ஸ் அவர்களும் இடம்பிடித்து வெற்றிவாகை சூடி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. பயிற்றுவிப்பாளர் எமது ஜோண்சன் தலமையில் மன்னார் வலயமட்ட உதைபந்தாட்ட போட்டியில் சாதித்த எம்மவர்கள். மன்னார் வலய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட 20 வயது மற்றும் 18 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகள் சம்பியனாகியது.

மேற்படி உதைபந்தாட்ட அணிகளுக்கு புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பயிற்சி ஆசிரியருமான திரு. ஜோ.ஜோண்சன் அவர்கள் பயிற்சிகளை வழங்கியதுடன் 20 வயது பிரிவு உதைபந்தாட்ட அணியில் எமது கிராமத்தின் செல்வன் சர்வானந்தன் தருசன் சுயன்ஸ் அவர்களும், செல்வன் டொன்சுவான் டொனிஸ்ரன் அவர்களும் 18 வயது பிரிவு உதைபந்தாட்ட அணியில் செல்வன் சர்வானந்தன் நிருசன் சுயன்ஸ் அவர்களும் இடம்பிடித்து வெற்றிவாகை சூடி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

மாணவி கிஷோரோனிகா - நாடகப் பிரதி ஆக்கம் போட்டி

2017–2018 தேசிய இலக்கிய விழாவில் நடைபெற்ற நாடகப் பிரதி ஆக்கம் போட்டிப் பிரிவில் முதல் இடத்தைப் பெற்று தேசிய அங்கீகாரம் பெற்றார். மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, சிறந்து விளங்கிய அவர், மாவட்ட மற்றும் அகில இலங்கை மட்டங்களில் விருதுகளை வென்றார். 2018 மார்ச் 5ஆம் திகதி, கொழும்பு பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற இந்த விருது வழங்கும் விழா, வடக்கு, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கலாச்சாரத் துறைகள், தேசிய கலாச்சார விவகாரத் துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்தன. இந்த நிகழ்வில், கிஷோரோனிகாவிற்கு சான்றிதழ், தங்கப் பதக்கம் மற்றும் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது, அவரது கலாச்சார சாதனைக்கு ஒரு முக்கிய அடையாளமாகும்.

நுட்பமான செதுக்கல் வேலைப்பாடுகளில் சிறப்புத்தேர்ச்சியடைந்த ஜெபநேசன் (சின்னான்)

தச்சுத்தொழிலை சுயமாக கற்று அதிலும் செதுக்கல் வேலைப்பாடுகளை செய்வதில் கைதேர்ந்தவர்தான் சின்னான் என்று எம்மவர்களால் அறியப்படுகின்ற ஜெபநேசன் அவர்கள்.

1961ம் ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி எமது கிராமத்தின் வலோரியான் ஆகுஸ்தம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக விடத்தல்தீவில் பிறந்தார். சின்னான் அவர்களுக்கு 6 சகோதரர்களும் 6 சகோதரிகளும் இருந்தனர். விடத்தல்தீவில் 1964ம் ஆண்டு ஏற்பட்ட புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பெரியமடுவுக்கு குடியேறி அங்கே தனது ஆரம்ப கல்வியை கற்று வளர்ந்தார்.

சின்னான் அவர்களது பள்ளிப்பருவ காலத்தில் இருந்தே சித்திர வேலைகள், செதுக்கல் வேலைகளை மற்றும் கொத்து வேலைகளையும் செய்யும் ஆர்வம் கொண்டு காணப்பட்டார். தனது 18வது 20வது வயதில் தச்சுத் தொழிலை இயந்திரங்கள் வசதியற்ற அந்த நாட்களில் உளி ,வாள் போன்ற ஆயுதங்களின் உதவியுடன் சிறிது சிறிதாக செய்து சுயமாகவே அந்த தொழிலை கற்றுத்தேர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது தந்தையார் வலோரியான் அவர்களால் நடாத்தப்பட்ட தச்சுத்தொழிலில் தனது சகோதரர்களுடனும் யாழ்ப்பாணத்திலிருந்து தச்சு தொழிலுக்காக வேலைதேடி வந்திருந்த சிலருடனும் இணைந்து குடும்பமாக மரவேலை மற்றும் கொத்துவேலைகளை செய்ய ஆரம்பித்தார்.

தச்சுத்தொழிலுக்கான இயந்திர சாதனங்கள் இல்லாதிருந்த அந்த காலப்பகுதியிலும் தச்சுவேலைக்கான உரிய ஆயுதங்கள் பற்றிய தெளிவும், அறிவும் அறியப்படாத தனது ஆரம்ப செதுக்கல் வேலைபாபாடுகளில் ஈடுபட்ட நிலையில் திராட்சை கொடி ,அணில் மாம்பழ கொடி ,கதவுகளில் பூக்கள் கீறுதல் போன்ற கொத்து வேலைகளை செய்திருந்தார்.

சகாயமலர் அவர்களை திருமணம் முடித்து 3 ஆண் மற்றும் 2 பெண் பிள்ளைகளுடன் வாழ்ந்துவருகிறார்.

1999ம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு யத்தம் காரணமாக விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த காலப்பகுதியில் திரு.ஜெபநேசன் அவர்களுக்கு செதுக்கல் வேலை சம்மந்தமான ஒரு சந்தர்ப்பம் அமைந்தது எனலாம் அதாவது அது வரை காலமும் சிறிய சிறிய செதுக்கல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சின்னான் எனபபடும் ஜெபநேசன் அவர்களுக்கு பேசாலை

பகுதியை சேர்ந்த செலஸ்ரின் மாஸ்ரர் அவர்களால் தேக்கு மரத்திலான 6 அடி அகலமும் 7அடி உயரமும் கொண்ட அளவுடைய கண்ணாடி கதவு பொருத்தப்பட்ட அலுமாரி ஒன்றில் திராட்சை கொடி ஒன்றை செதுக்கி செய்வதற்காக 6000/= (ஆறாயிரம் ரூபா) கூலியாக பேசப்பட்டது.

மேற்படி அலுமாரியை செதுக்குவதற்காக ஜெபநேசன் அவர்களுக்கு முதன் முதலாக கீத்துளி என அழைக்கப்படும் உளி வகைகளில் ஒன்றை கணேஸ் என்பவர் இனாமாக வழங்கியிருந்தார். அவர் வழங்கிய உளியின் உதவியுடன் ஏற்கனவே தீர்மானித்த 6000/= கூலியுடன் பேசி ஆரம்பித்த அந்த அலுமாரியின் செதுக்கல் வேலையில் இருந்த நுட்பத்தையும், வேலைப்பாடுகளையும் கண்ணுற்ற அலுமாரிக்கு சொந்தகாரரான செலஸ்ரின் மாஸ்ரர் அவர்கள் அந்த வேலைக்கு கூலியாக 72000/= ரூபா (எழுபத்தி இரண்டாயிரம் ரூபாய்) வழங்கியிருந்தமை ஜெபநேசன் அவர்களது செதுக்கல் வேலைக்கு கிடைத்த அங்கிகாரம் எனலாம்.

மன்னார் பகுதியில் தச்சுவேலை பட்டறையில் சுமார் 7 வருடங்கள் தச்சுத்தொழிலை மேற்கொண்டதுடன் 2 வருடங்கள் கட்டார் தேசத்திற்கு சென்று கதவு, கதவு நிலை செதுக்கல் வேலைகள், உட்பட தச்சுவேலையை அங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி எம்மவர்களால் அன்ரன் என அறியப்படுகின்ற சிறிஸ்கந்தராஜா அவர்களின் வேண்டுகைக்கு அமைவாக கையில் மன்னார் தீவை ஏந்தியுள்ளதை சித்தரிக்கும் வகையில் செதுக்கல் வேலையை செய்து பாராட்டையும் பெற்றிருந்தார். அத்துடன் இலங்கைக்குள் மயில் உள்ள காட்சியை சித்தரிப்பது போன்ற செதுக்கல் வேலைப்பாடுகளை ஜோசப்வாஸ் நகர், விடத்தல்தீவு, முருங்கன், தோட்டவெளி, பேசாலை மற்றும் தலைமன்னார் போன்ற கிராமங்களில் செய்துள்ளார்.

குறிப்பாக ஜோசப்வாஸ் நகரில் கதவு வேலை, பூக்கள், மயில், மீன் போன்ற உருவங்களை செதுக்கியதுடன் வெ.தயானந்தன் அவர்களது வீட்டிலும், அமரர் நூ.றொயிற்றன் அவர்களது வீட்டிலும் மற்றும் ம.எட்வின் றோச் அவர்களது வீட்டிலும் கதவுகளில் செதுக்கல் வேலை செய்ததுடன் எட்வின் அவர்களது வீட்டில் முதன்முதலாக தீபநாயகி தீபம் ஏற்றும் பெண் உருவங்கள் செதுக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது ஜோசப்வாஸ் நகர் பழைய சிற்றாலயத்தில் அமையப்பெற்ற பலிப்பீடத்தில் ஜெபநேசன் அவர்கள் தமது சகோதரன் சத்தியசீலன் அவர்களுடன் இணைந்து திராட்சை கொடியை தத்துரூபமாக செதுக்கியமை மறப்பதற்கல்ல.

ஜெபநேசன் அவர்களது சிறப்பியல்பு யாதெனில் தனது கற்பனையில் உருவங்களை வரைந்து, கதவுகளுக்கு, கதவு நிலைகளுக்கு மற்றும் அலுமாரிகளுக்கு ஏற்றால் போல் தானாகவே டிசைன்களை உருவாக்குவது தனிப்பட்ட கலையாக இருப்பதும், தேவைகருதி செதுக்கல் வேலைகளுக்கு ஒப்பந்தம் செய்வோர் தமது விரும்பத்திற்கேற்ப வழங்கும் உருவங்களின் புகைப்படங்களை அவர்களது விரும்பத்திற்கேற்ப செதுக்கிக்கொடுப்பதும் ஆகும்.

ஜெபநேசன் அவர்கள் களிமோட்டை, முருங்கன் பகுதியில் திருவள்ளுவர் மற்றும் ஆறுமுகநாவலர் போன்ற உருவங்களை செதுக்கிக்கொடுத்துள்ளமையும் சிறப்பாகும்.

மடு கல்வி வலயத்தில் எமது விடத்தல்தீவு மன்/தூய ஜோசப்வாஸ் ம.வி சாதனை.

இவ்வருடம் நடைபெற்ற வடு கல்வி வலய மட்ட பெரு விளையாட்டுகளில் எமது விடத்தல்தீவு பாடசாலை 16, 18, 20, வயது பிரிவு அணிகள் வலைப்பந்தாட்ட போட்டிகளில் முதலாம் இடங்களையும், உதைபந்தாட்ட போட்டிகளில் 16 வயது அணி முதலாம் இடத்தையும், 18 வயது பிரிவு அணி 2ம் இடத்தையும், 20 வயது பிரிவு அணி 3ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

ஞானமணி மரிய ஜெனிஸ்ரின் வயலின் இசைசைத் திறமை



2006.09.18 தரம் *9* இல் இலங்கை நம்பிக்கை ஊழியம் அஞ்சல் வழி வான்மலர் வேத பாடம் வெற்றிச் சான்றிதழ்

2012 (2013) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு இலங்கை பரீட்சை திணைக்களம் தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சத்திற்குமான சேவை கத்தோலிக்க மறைபாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை நான்கு பாடங்களிலும் விசேட சித்தி

2014 .04.30 திருகோணமலை மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலத்தில் கல்வி கற்று தமிழ்த்தின போட்டியில் தமிழ் இலக்கண வினா விடை போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றமை.

2014.04.22 திருகோணமலை மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று தமிழ் தின போட்டி தனி இசை பாடல் போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் இரண்டாவது இடத்தை பெற்றமை.

2014 ஆம் ஆண்டு உயர்தர பரிட்சைக்கு தோற்றி கலைப்பிரிவில் திருகோணமலை மாவட்டத்தில் *3* ஆம் இடத்தைப் பெற்றமையும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியமை

2015 ஆம் ஆண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கத்தோலிக்க தர்மாச்சாரியர் பரீட்சை ஐந்து பாடங்களிலும் சித்தி பெற்றமை ....

2016 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தா அழகிய கத்திகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழகம் மட்டக்களப்பு உள் நுழைவு.....

2017 ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை யாழ்ப்பாணம் நடாத்தப்பட்ட செய்முறை அறிமுறை தேர்வில் வயலின் வாத்தியம் தரம் இரண்டு பரீட்சையில் முதலாம் பிரிவில் *(A)* சித்தி அடைந்தமை...

2022 .01.10 மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நடாத்தப்பட்ட புது பட்டமளிப்பு விழாவின் போது நுண்கலைமானி இசையில் (வயலின்) சிறப்பு பட்டம் பெற்றமை.....

2022 ஆம் ஆண்டு *VMCT* கலாமன்றம் திறப்பு விழாவில் மன்னார் இளம் இசைக்கலைஞர்கள் கௌரவிப்பில் இளங்க கலைஞராக கௌரவிக்கப்பட்டமை .....

2023 ஆம் ஆண்டு *Dr.* கதிர்காமநாதன் அவர்களின் அனுசரணையுடன் இந்து கலாச்சார இசைக் கல்லூரியில் வயலின் வாத்திய ஆசிரியராக தேர்வு செய்யப்பட்டு மாணவர்களுக்கான வயலின் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டமை......

2023 ஆம் ஆண்டு கலா மன்றத்தில் வயலின் வாத்திய ஆசிரியராக அறிமுகம் செய்யப்பட்டு மாணவர்களுக்கு கற்றலை வழங்கி வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றதுடன் தற்போதும் ஆசிரியராக கடமை ஆற்றி வருதல் .....

2023 ஆம் ஆண்டு மன்னார் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட பொங்கல் விழா ஈச்சளவக்கையில் வரவேற்பு நிகழ்வு இணிய அணியில் வயலின் மாணவர்களால் எனது நெறியாள்கையால் நிறைவேற்றப்பட்டது...

2023 ஆம் ஆண்டு மன் தூய ஜோசபாஸ் மகா வித்தியாலய பாடசாலையில் பகுதிநேர சங்கீத ஆசிரியராக கடமை ஆற்றி *2023* ஆம் ஆண்டு உயர்தர பரிட்சைக்கு தோன்றிய மாணவர் ஒருவரை கர்நாடக சங்கீத பாடத்தில் அதி விசேட சித்தியில் வெற்றி பெறச் செய்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியமை.....

25.03.2023. வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் விசேட பணிப்பின் பிரகாரம் இந்து சமய கலாச்சார அலுவலர்கள் திணைக்களம் மற்றும் இந்து பண்பாட்டு நிதியம் என்பவற்றின் அனுசரணையில் வடக்கு மாகாண பண்பாட்டுலுவல்கள் திணைக்களம் மன்னார் மாவட்ட செயலகத்தில் அன்று நடாத்திய இளம் இசைக் கலைஞர் மற்றும் வாத்திய கலைஞர்களுக்கான கலையரங்கில் பங்குபெற்றி சான்றிதழ் பெற்றமை ...

2024 ஆம் ஆண்டு பேசாலையில் நடைபெற்ற *Griffin London exam* பரிட்சைக்கு மாணவர்களை தோற்றச் செய்து சிறந்த பெறுபேறுகளை பெற்றமை....

2024.12.17 அன்று மன்னார் நகர சபை பிரதான மண்டபத்தில் நடைபெற்ற வடமகான பண்பாட்டு திணைக்களத்தால் நடாத்தப்பட்ட விழாவில் தமிழ் மொழி வாழ்த்து குழுப் பாடலாக வழங்கியமை......

2025.04.13. அன்று நான் நாட்டான் பங்கில் நடாத்தப்பட்ட எதிர்நோக்கின் திருப்பயணிகளின் திருக்காட்சி தவக்கால ஆற்றுகையில் வயலின் அணிசேர் கலைஞராக பங்காற்றியமை.....

மன்னார் மாவட்டத்தில் பாடசாலை கல்வி பயிலும் பல மாணவர்களை வயலின் வாழ்த்திய பயிற்சியில் இணைத்து வகுப்புகளை நடத்தி வருவதிலும் தற்போதும் பல்வேறு ஆலயங்கள் மற்றும் கோவில்கள் திருவிழாக்கள் பிரதேச செயலக நிகழ்வுகள் போன்றவற்றில் எனது இசை கச்சேரியும் ஆற்றுகையும் நடைபெற்று வருகிறது என்பதை அறிய தருகிறேன்....

உதவி மாவட்ட செயலாளராக திரு..டிலுசன் பயஸ் அவர்கள்

எமது கிராமத்தின் திரு.திருமதி. புறுணோ பயஸ், சிறீமதி தம்பதிகளின் புதல்வன் திரு. டிலிசன் பயஸ் அவர்கள் *10/3/2023* தினம் மன்னார் மாவட்ட உதவி மாவட்ட செயலாளராக மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி *A.*ஸ்ரான்லி டிமல் முன்னிலையில் நியமனம் பெற்றுள்ளார்.

சங்கீத ஞானத்தை ஊட்டிய சுதா ரீச்சர் - ஆசிரியர் அ.பற்றிக் டயஸ்

எமது சுதா ரீச்சர் என்றவுடன் எமது நினைவுக்கு வருவது சங்கீதம். அவர் தாம் வாழ்ந்த காலத்தில் எமது கிராமத்திற்கும், எமது பாடசாலைக்கும் அளப்பெரிய சேவையாற்றியுள்ளார். எமது கிராமத்தில் இடம்பெற்ற கலை கலாச்சார, மறறும் சமைய நிகழ்வுகளில் சுதா ரீச்சர் இல்லாத நிகழ்வாக அமையாது. அவர் ஏதோவொரு வகையில் அதற்கான பங்களிப்பை சிறப்பாக வழங்கியிருந்தார்.

எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தை பொறுத்தவரையில் அவரது பணி வார்த்தையில் சொல்லி அடங்காது. எமது பாடசாலை பருவத்தில் எமது பாடசாலையில் சங்கீத ஆசிரியர்களுக்கு பெரும் வெற்றிடம் காணப்பட்டது, அழகியற் கலை பாடத்திற்கும் உரிய ஆசிரியர்கள் இல்லாதிருந்தனர், மாணவர்கள் ஆசிரியர்கள் இல்லாமல் மிகுந்த நெருக்கடியில் இருந்த காலம் அக்காலப்பகுதியில் தனது அயராத உழைப்பினாலும் தொடர்ச்சியான கற்பித்தலினாலும், முழுமையான அர்ப்பனிப்புமிகுந்த சேவையினாலும் தனது திறமையை பயன்படுத்தி மாணவர்களுக்கு சங்கீத ஞானத்தையும் அறிவையும் புகட்டிய பெருமை ஆசிரியர் சுதா அவர்களையே சாரும்.

அரசாங்க ஆசிரியர்கள் எமது பாடசாலையில் குறைவாக காணப்பட்ட நாட்களில் குறிப்பாக சங்கீத பாடத்திற்கு ஆசிரியர்கள் எமது பாடசாலையில் இல்லாத அந்த நாட்களில் தொண்டர் ஆசிரியராக பல ஆண்டுகள் எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக பணியாற்றியதுடன், சுதா ரீச்சர் தனது மாணவர்களுடன் மிகுந்த நட்பாகவும், பாசமாகவும், சிறந்த கரிசனையுடனும் செயற்படாடார்.

மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை அதிகரிப்பதற்காக பிரத்தியேகமாக மாலை நேர மற்றும் இரவு வகுப்புகளை தனது வீட்டிலும், சில மாணவர்களது வீட்டிலும் இலவசமாக கற்பித்தார். இவரது அயராத முயற்சியின் பயனாக எமது பாடசாலையில் மாணவர்கள் பலர் சங்கீத பாடத்தில் விசேட மற்றும் திறமை சித்திகளை கல்வி பொதுத்தர சாதாரண தர பரீட்சையில் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

*1999*ம் ஆண்டு நடைபெற்ற உள்நாட்டு போரினால் இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை நலன்புரி நிலையத்திலும், ஜோசப்வாஸ் நகரிலும் சுதா ரீச்சர் அவர்களது ஆசிரிய பணி சிறப்பாக அமைந்திருந்தது. சங்கீத மற்றும் தமிழ் தின போட்டிகளுக்கு மாணவர்களை சிறப்பாக தயார்ப்படுத்தி கோட்ட மட்டம், வலய

மட்டம், மாவட்ட மற்றும் மாகாண ரீதியாக பல வெற்றிகளை எமது மாணவ மாணவிகள் பெற்றுக்கொள்ள முன்னோடியாக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதா ரீச்சரால் கற்பிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பல்வேறுபட்ட இடங்களில் பல்வேறுபட்ட உயர் நிலைகளில் எமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறப்பாக பணியாற்றுவதை எமது கண்கூடாக காணலாம். இம் மாணவர்களின் முன்னேற்றத்திலும் அவர்களது வளர்ச்சியிலும் எமது சுதா ரீச்சரின் பங்கும் எண்ணிலடங்காது.
சுதா ரீச்சர் இவ்வுலகை விட்டு பிரிந்திருந்தாலும் எமது உள்ளங்களில் இருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆசிரியர் அ.பற்றிக் டயஸ், சென். ஜோன்ஸ் கல்லூரி,யாழ்ப்பாணம்.

உயிர்காக்கும் மருத்துவ சேவையை ஆற்றிய ஜோசப்வாஸ் அண்ணண்

திரு.திருமதி லூக்காஸ் என்பவர்களுக்கு மகனாக காமல் ஜோசப்பின் அவர்களது உடன்பிறப்பாக 27/2/1956 ம் ஆண்டு விடத்தல்தீவில் பிறந்தார்.

வாஸ் அண்ணண் தனது ஆரம்ப கல்வியுடன் கல்வி பொதுத்தர சாதாரண தரம் வரை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றுத்தேர்ந்தார்.

1980ம் ஆண்டு 5மாதம் 7ம் திகதி ஜெயராணி அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து 3 ஆண் பிள்ளைகளையும் ,3 பெண் பிள்ளைகளையும் பெற்று இன்றுவரை மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகிறார்.

வாஸ் அண்ணன் அவர்கள் ஆரம்பத்தில் சாதாரண தொழிலாளியாக மருத்துவத்துறையில் 1983ம் ஆண்டு 5மாதம் 5ம் திகதி இணைந்து சேவையாற்றத்தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. 1983ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து 1989ம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் திகதி வரையிலான காலப்பகுதியில் பல்வேறுபட்ட அசாதாரண சூழ்நிலைகள் நாட்டில் ஏற்பட்ட காலங்களில் குறிப்பாக எமது மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் வன்செயல்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகள் மத்தியிலும் உயிரை கையில் பிடித்து வாழும் வாழ்க்கையை ஒத்த தன்மையாக தனது சேவையை ஆற்றியுள்ளார்.

மன்னார் ஆதார வைத்திய சாலையில் இருந்து நோயாளரை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதும் ஆரம்பத்தில் மன்னார் வைத்தியசாலையில் இருந்த காயக்காரரை வைத்திருக்கும் 4ம் விடுதியிலும், காய்ச்சல், தலையிடி நோயாளரை வைத்திருக்கும் 2ம் விடுதியிலும் ,கசரோக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர் தங்கும் 8ம் விடுதியிலும், கதிர் இயக்கம் அறையிலும், மருந்து கட்டும் அறையிலும், வெளி நோயாளர் பகுதியிலும் (OPD) மற்றும் சத்திரசிகிற்சை அறையிலும் தனது சேவையை சிறப்பாக ஆற்றி நோயாளர் மனதிலும் வைத்திய சாலை சக ஊழியர்கள்,வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தின் நன்மதிப்பை பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இருந்து வாஸ் அண்ணன் அவர்கள் எமது விடத்தல்தீவு வைத்தியசாலைக்கு 1989ம் ஆண்டு வைகாசி மாதம் அளவில் பணிமாற்றம் செய்யப்பட்டு 1999 ம் ஆண்டு 7ம் மாதம் வரை ஏறாத்தாள 10 வருடங்கள் பல்வேறுபட்ட சேவைகளை ஆற்றியிருந்தார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் போர் காரணமாக செய்த சேவைக்குரிய ஊதியம் வாஸ் அண்ணண் அவர்களுக்கு சீராக வழங்கப்படவில்லை. வவுனியா மாவட்ட RDHS ஊடாக ஊதியமாக 1000/= ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்பட்டது.அதன் நிமித்தமாக எமது சமூகம்சார்ந்த கடற்றொழிலை சில நேரங்களில் மேற்கொண்டும், வேறு சில வேலைகளில் ஈடுபட்டு தமது குடும்ப வாழ்வாதார செலவீனங்களை சமாளித்திருந்தார்.

அந்நாட்களில் இடப்பெயர்வுகள் எமது பகுதிகளில் அடிக்கடி ஏற்படுவதுண்டு அந்த சந்தர்ப்பங்களில் தட்சனாமருதமடு, கள்ளியடி, மற்றும் தேவன்பிட்டி ஆகிய இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று அங்கே நோயாளர் பராமரிப்பு மற்றும் மருந்து கட்டும் சேவையில் ஈடுபட்டிருந்தார்.
அந்த காலத்தில் எமது விடத்தல்தீவு வைத்தியசாலையின் வைத்தியராக வைத்தியர் சாவித்திரி அம்மா அவர்கள் எமது பகுதி மக்களுக்கும் குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பில் வாழ்ந்த மக்களுக்கும் சிறப்பான சேவையை ஆற்றியிருந்தார். எமது வாஸ் அண்ணண் அவர்கள் மருந்தகத்தில் வேலை செய்யக்கூடிய

வகையில் அவரை தயார்படுத்தியது சாவித்திரி அம்மா அவர்களே. குறிப்பாக அந்த நாட்களில் வைத்தியர் சாவித்திரி அம்மா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழும் அவரது கற்பித்தலின் அடிப்படையிலும் எமது ஜோசப்வாஸ் அண்ணன் அவர்கள் வைத்தியசாலை மருந்தகத்தில் மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவது சம்மந்தமாக தேர்ச்சி பெறும் வகையில் அதற்கு தகுதியான சேவையாளனாக மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

விடத்தல்தீவு வைத்தியசாலையில் சேவையாற்றிய காலங்களில் வைத்தியசாலை அலுவலகத்திலும், உள்ளக வேலைகளில் ஈடுபடுவதும், வவுனியா, RDHS திணைக்களத்திற்கு பணியின் நிமித்தம் செல்வதும் ,மாதாந்த சம்பளத்தை பெறுவதற்கு வவுனியா வரை சைக்கிளில் போய் வருவதிலும் ஈடுபட்டிருந்தார்.
பிரச்சனை காலத்தில் தனது தாயின் இறப்பின் துயரில் ஆழ்ந்த மவ உளைச்சலுக்கு உள்ளானவராக வாஸ் அண்ணண் அவர்கள் இருந்த அந்த நாட்கள் அவர வாழ்வில் மறக்கமுடியாத வலிநிறைந்ததாக இருந்துள்ளது. அந்த காலங்களில் Tourch light இல்லாத காலம் இலாம்புடன் மக்கள் இரவு வேளைகளில் வைத்தியசாலைக்கு வந்து போன அந்த நாட்களில் கோவிற்குளத்தில் இராமசேது அவர்களின் தந்தையாருக்கு மாடு முட்டி அந்த இருட்டில் ஞானக்கோண் அவர்கள் மூலம் கோவிற்குளத்திற்கு சென்று மாடு முட்டிய காயத்திற்கு 32 தையல் போட்டு அவருக்கு ஊசி போட்டது தனது சேவையில் மறக்கமுடியாத அனுபவாக இருப்பதாக கூறியுள்ளார்.

ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் வரும் நோயாளர்களுக்கு அந்த இக்கட்டான சூழ்நிலையில் மருந்துகள், மருத்துவர்கள் பற்றாக்குறையான காலங்களில் சாவித்திரி அம்மா சொல்லிக்கொடுத்தது போலவே யார் யாருக்கு என்ன என்ன ஊசி போடவேண்டுமோ அவர்களுக்குரிய அந்த அந்த ஊசியை போட்டு குளுசைகளை கொடுத்திருந்தார்.

எமது ஊருக்கும் ஆஸ்பத்திரிக்கும் 1Km தூரமாதலால் நடுச்சாமத்திலோ அல்லது இரவு வேளைகளிலோ அல்லது அவசரமாகவோ சிறுவர்களுக்கு ,வயோதிபர்களுக்கு திடீரென ஏற்படும் காய்ச்சல், வயிற்றுக்குத்து, தலையிடி, காதுக்குத்து, மற்றும் வெட்டுக்காயங்கள் போன்றவற்றுக்கு எம்மவர்கள் அந்நாட்களில் வாஸ் அண்ணனின் வீட்டுக்கதவை தட்டி ,தையல் போட்டு குளுசை வாங்காதவர்கள் என்று யாரும் இருக்க முடியாது. அந்த அளவுக்கு சாமமாக இருந்தாலும் கண்விழித்து கடமைசெய்தவர் எமது வாஸ் அண்ணண் என்றால் அது மிகையாகாது.

அத்துடன் எம்மவர்களுக்கு கடலில் அடிக்கடி ஏற்படும் ஆர்க்கு வெட்டு காயங்களுக்கு தையல் போடுவதும், சுணை தாக்கத்தின் போது அந்த வலியை ,அந்த நோவை போக்க நித்திரையை வருவிக்கும் ஒருவகையான ஊசியை போட்டு எம்மவர்களுக்கு அவசரத்தில் தனது சேவையை செய்துள்ளமை மறப்பதற்கல்ல.

பேசாலையில் இடம்பெயர்ந்த நிலையில் பேசாலை வைத்தியசாலையில் வேலைக்கு சேர்க்கப்பட்டதை தொடர்ந்து அங்கே மருந்து கட்டுதலிலும் ,காயங்களுக்கு தையல் போடுவதிலும், சேலன் போடுவதிலும் ஈடுபட்டு சுமார் 5 வருடங்கள் பேசாலை வைத்தியசாலையில் தனது சேவையை ஆற்றியிருந்து பேசாலை மக்களினதும் வைத்தியசாலை நிர்வாகத்தினதும் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

தொடர்ந்து பேசாலை வைத்திய சாலையில் இருந்து மீண்டும் மன்னார் மாவட்ட வைத்திய சாலைக்கு 2009ம் ஆண்டளவில் பணிமாற்றம் செய்யப்பட்டு இறுதியுத்தம் நடைபெற்ற அந்த இக்கட்டான சூழ்நிலையில் 6 மாத காலமாக தொடர்ச்சியாக இரவு பகல் பாராது தனது சேவையை சிறப்பாக ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் கடந்த 2016ம் ஆண்டு தனது மருத்துவத்துறைசார்ந்த உயரிய சேவையில் இருந்து எமது வாஸ் அண்ணண் ஒய்வுபெற்றிருந்தார் .அவருடைய ஓய்வின் பின்னர் அவரது சேவையை நினைவுகூர்த்து பாராட்டிய பேசாலை சமூகம் அவருக்கு ஆடைகளை வழங்கியதுடன் சிறப்பாக தங்க மோதிரத்தை நினைவு பரிசாக வழங்கி வாஸ் அண்ணனை கௌரவப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சேவையில் இருந்து ஒய்வுபெற்றாலும் அவ்வப்போது எமது ஊரவர்களுக்கு ஏற்படும் அவர்களது இயலாமை நேரங்களிலும் ,மரணப்படுக்கை காலத்திலும் அவர்களுக்கு சேலன் போடுவதிலும்,மருந்து கட்டுவதிலும், தையல் போடுவதிலும் குறிப்பாக மரணத்தை உறுதிப்படுத்தவும் எமது ஜோசப்வாஸ் அண்ணண் இன்றும் எம் மக்களுக்கு தனது உயரிய சேவையை வழங்கிவருவதும் சிறப்பம்சமாகும்.

சிறந்த முன்கள வீரர் விருதையும், கோல் காப்பாளர் விருதையும் வென்ற எம்மவர்கள்

25/8/2024 மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஆயர் இராயப்பு ஜோசப் ஞாபகார்த்த வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் எமது மன்னார் மாவட்ட அணி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக சம்பியனாக கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

மேற்படி உதைபந்தாட்ட போட்டியில் சிறந்த முன்கள வீரர் என்ற விருதை எமது மன்னார் மாவட்ட அணி சார்பாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் விளையாட்டு வீரன் திரு.வ.தேவானந்தன் அவர்கள் பெற்றுக்கொண்டதுடன்,

எமது கழகத்தின் கோல்காப்பாளரும் கடினப்பந்து கிரிக்கெட் அணியின் வீரருமான திரு.#ஜேம்ஸ் கொலின்ரன் அவர்களும் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் சிறந்த கோல்காப்பாளர் விருதை வென்றுள்ளார்.

மன்னார் மாவட்ட SOCCER MASTER அணியில் இடம்பிடித்த எமது வீரர்கள்

Tamil School Sports Association UK அமைப்பினால் கடந்த வாரம் *6/4/2024*,மற்றும் *7/4/2024* ம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடாத்தப்பட்ட *40* வயதுக்கு மேற்பட்டோர்க்கான அணிக்கு *9* பேர் கொண்ட உதைபாந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது மன்னார் மாவட்ட *Soccer Master* அணியானது இறுதிப் போட்டி வரை முன்னேறி இறுதிப்போட்டியில் திருகோணமலை *Soccer Master* அணியிடம் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தோல்வியுற்று இரண்டாம் இடத்திற்கான ரூபா. *50,000.00* பணப் பரிசினையும் வெற்றிக் கிண்ணத்தினையும் தமதாக்கிக்கொண்டனர். இவ் அணியில் எமது மண்ணை பிரதிநிதித்துவப்படுத்தி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் உதைபந்தாட்ட வீரர்களான திரு.வ.தேவானந்தன் மற்றும் திரு. ஜேம்ஸ் கொலின்ரன் ஆகிய வீரர்கள் தமது அதீத திறமையினால் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தே

நீர்கொழும்பு புனித மறிஸ்ரெலா கல்லூரி அணியுடனான தண்ட உதையில் இரண்டாவது இடத்தை பெற்றது எமது அணி. தேசிய ரீதியாக நடைபெற்ற மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி போட்டியில் எமது *12* வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட அணி இறுதிப்போட்டியில் நீர்கொழும்பு புனித மறிஸ்ரெலா கல்லூரி அணியை எதிர்த்தாடிய நிலையில் தண்ட உதைமூலம் *6:5* என்ற கோல் அடிப்படையில் இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது.

பயிற்சி ஆசிரியர்கள் திரு. டிலைக்சன், திரு.சாள்ஸ்

தேசிய அணிக்கு தெரிவு

எமது மண்ணின் திரு.திருமதி பற்றிக், டிலானி தம்பதிகளின் புதல்வனும் மன்னார் *ROLL BALL* அணியின் வீரனுமாகிய செல்வன் கிஷாந் நடைபெற்று முடிந்த *Roll ball* சம்பியன்சிப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய அணிக்கு தெரிவாகியுள்ளார். சர்வதேச 'ரோலர் நெட்டெட் போல்' சாம்பியன் பட்டத்தை வென்ற இலங்கை அணியின் சார்பாக போட்டியிட்ட மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்கள் வைபவ ரீதியாக கௌரவிப்பு.

சர்வதேச 'ரோலர் நெட்டெட் போல்' விளையாட்டின் *2024*ம் ஆண்டு சர்வதேச ரீதியிலான நாடுகள் பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டிகள் கம்பஹா விமான நிலைய விளையாட்டு மைதானத்தில் கடந்த *11* மற்றும்.*12* ஆம் திகதிகளில் இடம் பெற்றது.குறித்த விளையாட்டு போட்டியில் பங்கு பற்றிய இலங்கை அணி ஒட்டுமொத்த விளையாட்டுப் போட்டிகளிலும் சாம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது.

NETTED BALL சுற்றுப்போட்டியில் முதலிடம்

இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச நட்புரீதியான *NETTED BALL* சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணி சார்பாக செல்வன் கிஷாந் அவர்கள் பங்கு பற்றி முதலாவது இடத்தை பெற்று எமக்கு பெருமையீட்டித்தந்துள்ளார். முன்னதாக இலங்கையில் நடைபெற தேசிய ரீதியிலான *NETTED BALL* சுற்றுப்போட்டியில் கிஷாந் அவர்கள் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் விருதுவென்றார் எவலின் நோபேட் நிர்மலதாசன்.

திரு. திருமதி நோபேட் நிர்மலதாசன் ,ஜெயராணி அவர்களின் புதல்வி எவலின் அவர்கள் கடந்த *15/5/2023* அன்றைய தினம் *Gold Duke of Edinburgh* எனும் விருதை பிரித்தானியாவில் உள்ள பக்கிங்காம் அரண்மனையில் இளவரசர் எட்வேட்டிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

முன்னதாக இளவரசர் எட்வேட் அவர்களின் உரையை தொடர்ந்து ,தங்க விருதை பெற்ற எவலின் அவர்களுக்கு மேலும் பெரிய விஷயங்களைச் சாதிக்க வேண்டும் என்று இளவரசர் ஊக்கமளித்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருந்து அதிலும் எமது கிராமத்திலிருந்து பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்றது ஒரு அற்புதமான சாதனை. எவலின் அவர்கள் இவ் உயரிய விருதை வென்றதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

மாவட்ட மட்டத்தில் உயர்தப் பரீட்சையில் முதலாம் இடம்

இம்மானுவேல் றொபினா கிறிசாந்தி

ஜெரோம் எமில் ரோஷிங்டன்

செல்வின் நிமல்ராஜ் எட்றிக்

சதானந்தன் ஆகாஸ்

சீமான்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் இசைத்துறையில் மேரி அன்னா

வீண போடும் அந்த மேரி அன்னா அக்காவா ? என எம்மவர்களால் அறியப்படுகின்ற மேரி அன்னா அக்கா எமது விடத்தல்தீவின் அந்தோனிப்பிள்ளை திரேசம்மா ஆகியோருக்கு மகளாக பத்து சகோதரர்களுடன் பிறந்தார்

குடும்பத்தில் நான்கு பெண் சகோதரிகளையும் ஆறு ஆண் சகோதரர்களையும் கொண்டு 1961.08.22 ம் திகதி விடத்தல்தீவில் பிறந்தவர் தான் எமது மேரி அன்னா அக்கா அவர்கள்

தனது ஆரம்ப கல்வியை விடத்தல் தீவு ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்று அதன் பின்னர் எமது முன்னாள் பங்குத்தந்தை அருடபணி.றெஜிஸ் ராஜநாயகம் அடிகளாரின் இறைபக்தியில் வளம் பெற்று நல்லாயன் அருட்சகோதரிகள் சபையில் இணைய விருப்பம் கொண்டு அருட்சகோதரி. கமலா அவர்களின் தேவ அழைத்தல் பயிற்சியில் ஊக்குவிக்கப்பட்டு 1978 ம் ஆண்டளவில் கொழும்பு கொட்டான் சேனை நல்லாயன் பாடசாலையில் மேலும் க/பொ/த/சாதாரண தர கல்வியை கற்றுத்தேர்ந்தார்

தொடர்ந்து நான்கு வருடங்கள் தனது அழைத்தல் வாழ்விலே மேலும் இறைபக்தியில் வளர்த்தார்.1981 ம் ஆண்டு பொது நிலை வாழ்க்கைக்கு மீண்டும் வந்து மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் தனது உயர் தர கல்வியைப் பயின்றமை குறிப்பிடத்தக்கது

அதன் பின்பு ஆலய பணிகளில் ஈடுபாடுடன் இருந்ததன் காரணமாகவும் விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் அவரது இல்லிடம் இருந்தமையாலும் பனித யாகப்பர் ஆலய பராமரிப்பு, ஆலய அலங்காரம், பாடகர் குழாம், மற்றும் ஆர்மோனிய இசை மீட்டல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தார்

இவ்வாறு பணியில் ஈடுபட்டிருந்த மேரி அன்னா அக்கா அவர்களது இசைப்பயணமானது அவர்களது பேரன் சலமோன் சீமான்பிள்ளை என்பவரால் வித்திடப்பட்டது. அவர் ஒரு ஆர்மோனிய வித்துவான். அவர் தமது இளமைக்காலத்தில் சங்கீத கோஷ்டி என்ற குழு ஒன்றை அமைத்து அதில் ஆர்மோனியம் ,புல்லாங்குழல், மிருதங்கம், கைத்தாளம் இன்னும் சில இசைக்கருவிகள் மூலமாக இசை அமைப்பாளர்களையும் உருவாக்கியிருந்தமை வரலாற்றில் பேசப்படவேண்டிய விடயமாகும்.

அந்த காலப்பகுதியில் தான் இவர்களின் இசைத்திறனில் ஆர்வம் கொண்ட மேரி அன்னா அக்கா அவரது பேரனிடம் இசையைக் கற்றுக் கொண்டார். அதன் பின்பு அவரது உறவினர்களாகிய எலிசபெத், மரிய செல்வம், மரிய தயாளன், யூப்பிரசியா, ஜெய்சன் போன்றவர்களுக்கு தான் கற்ற இசையை கற்றுக் கொடுத்திருந்தார்.

1978 ஆம் ஆண்டிற்குப் பின் மிகவும் ஊக்கம் பெற்று அமரர். அருட்பணி றெஜிஸ் றாஜநாயகம் அடிகளாரின் ஒத்திகையின் பின் தெரிவு செய்யப்பட்டு அருட்பணி. ஜெயசேகரம் அடிகளாரின் ஆலய சபைப் பரிந்துரையின் பின் எமது விடத்தல் ஊர் புனித யாகப்பர் ஆலயம் மற்றும் எமது
புனித அடைக்கல மாதா
ஆலயங்களில் இசை மீட்க ஆரம்பித்திருந்தார்

அதன்ஒபின்பு 1978 ம் ஆண்டு மாந்தை லூர்து மாதா , அடம்பன் வியாகுல மாதா ஆலயம் நெடுங்கண்டல் அந்தோனியார் ஆலயம் , ஆண்டாங்குளம் சவேரியார் ஆலயம், பருப்புகடந்தான் கர்த்தர் கோவில் , முழங்காவில் ஆரோக்கிய மாதா ஆலயம்,
குமுழ முனை அந்தோனியார் ஆலயம் ,9ம் கட்டை அந்தோனியார் ஆலயம்,
இலுப்பைக்கடவை அந்தோனியார் ஆலயம் சூசையப்பர் கோவில், , படகு துறை வேளாங்கன்னி மாதா ஆலயம்,
பெரிய மடு கிறிஸ்து அரசர் ஆலயம், சிறுத்தோப்பு அந்தோனியார் கோவில் பருத்திப்பண்ணை அந்தோனியார் கோவில்
கட்டுக்காரன் குடியிருப்பு யாகப்பர் ஆலயம்
தேவன்பிட்டி சவேரியார் ஆலயம், தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயம், தர்ச்சனா மருதமடு அந்தோனியார் கோவில் மற்றும் சாந்தி புரம் பூண்டி மாதா கோவில் போன்ற ஆலயங்களில் தனது இசைப்பயணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.மேரி அன்னா அக்கா அவர்களது இசைப்பயணமானது 1978 ம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுடன் முடிவுற்றது .மேலும் எமது ஜோசப்வாஸ் நகரில் நடைபெற்ற நாடக அரங்கேற்ற நிகழ்வில் இசை மீட்டி பல பாராட்டுக்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்விற்கு முன் விடத்தல் தீவு அலிகார் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வாணி விழாவில் எமது கிராமத்தின் சகோதரி ஜெனகம் அக்கா அவர்களது விருப்பத்தின் பேரில் இசை மீட்டியிருந்தார் மேரி அன்னா அக்கா அவர்கள்.

இறுதியில் தனது இயலாமை காரணமாகவும் தனது சகோதரியின் பராமரிப்பு காரணமாகவும் தனது இசைப்பபயணத்தில் இருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் தனிப்பட்ட முறையில் தனது இல்லத்தில் இருந்து இசைமீட்பதை பொழுது போக்காக கொண்டிருப்பது மறப்பதற்கல்ல.

இசை என்பது இறைவனோடு நம்மை நெருங்க வைக்கும் பக்தி முயற்சியாகும். இவற்றைக் கடைப்பிடிப்பது எமது ஆன்மீக வாழ்விற்கு ஆதாரமாகும் என மேரி அன்னா அக்கா அவர்களது இசை பயணத்தின் சிறப்புகளை எம்மோடு பகிர்ந்துகொண்டார்.

வட மாகாண மட்ட வலைப்பந்தாட்ட போட்டி 2025 - 3வது இடம்

வடமாகண ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் மன்னார் மாவட்ட வலைப்பந்தாட்ட அணி மூன்றாவது இடத்தை பெற்றுக்கொண்டது. மேற்படி மன்னார் மாவட்ட வலைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்து 3 வது இடத்தை பெற்ற வீராங்கனைகள் - செல்வி. விக்டர் ஆன் சௌமியா ,செல்வி கிறிஸ்துமேனன் மேரி நிஸ்மியா , செல்வி அருள்பிரகாசம் கிரிஜா

பிறீமன்ராசா புறோமியன் றெஷோன்

12 வயதுக்குட்பட்டோர் - 2022 - 4×50 relay - இரண்டாம் இடம் - மாகாணம்

உயரம் தாண்டுதல் - இரண்டாம் இடம் - முன்னேற்றம்=1.25

13 வயதுக்குட்பட்டோர் - உயரம் தாண்டுதல் - முதல் சாதனை=1.48 - மாகாணம்
முதல் சாதனை =1.50 - தேசியம்

14 வயதுக்குட்பட்டோர் - 2024 - உயரம் தாண்டுதல் - இரண்டாம் இடம் - 1.60 மீ - புதிய சாதனை

வடமாகாண ரீதியாக கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி

வடமாகாண ரீதியாக 5 மாவட்டங்களையும் உள்ளடக்கிய கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் எமது மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக பெண்கள் கரப்பந்தாட்ட அணி வீராங்கனை திருமதி சியாந்தனா டெலிஸ்ரன் நிசாந் அவர்கள் பங்குபற்றியிருந்தார்.

மேற்படி கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியின் முதலாவது போட்டியில் வவுனியா மாவட்ட அணியை எதிர்கொண்டு வெற்றீயீட்டியதுடன் இரண்டாவது போட்டியானது மிகவும் விறுவிறுப்பாக கிளிநொச்சி மாவட்ட அணியுடனான போட்டியாக நடைபெற்ற நிலையில் குழு நிலையில் அணிக்கு தலா 1 போட்டியில் வெற்றியீட்டிய இரு அணிகளும் பலப்பரீட்சை நடாத்தி இரண்டாவது குழு நிலையில் 1 புள்ளி வித்தியாசத்தில் தோல்வியை தழுவி மாகாண ரீதியில் 3 வது இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண ரீதியாக நடைபெறும் கரப்பந்தாட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் தொடர்ச்சியாக எமது கரப்பந்தாட்ட அணி பெற்று சாதனை படுத்திருக்கிறது.

ROLL BALL பயிற்றுவிப்பாளரானார் எமது கிஷாந் அவர்கள்

இலங்கை விளையாட்டு அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட ROLL BALL சம்மேளனத்தால் மன்னாரில் அமைந்துள்ள மாகாண ஆங்கில உதவி நிலையத்தில் கடந்த 11/5/2025 அன்று நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திரு. திருமதி பற்றிக் தம்பதிகளின் புதல்வன் கிஷாந் அவர்கள் பங்குபற்றி பயிற்சியை நிறைவுசெய்து ROLL BALL பயிற்றுவிப்பாளராக சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

தேசிய பைபிள் வினாடி வினா
தங்கப் பதக்கம் - 2024. பிரபாகரன் அஸ்தியன்

புனித பத்திரிசியார் கல்லூரி உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராக கிறிஸ்தோப்பர் சுரேஸ்

எமது மண்ணின் திரு.திருமதி கிறிஸ்தோப்பர், மரிய பெனி தம்பதிகளின் புதல்வனும் சுலோஜினி அவர்களது கணவருமான சுரேஸ் அவர்கள் கடந்த 27 வருட காலமாக யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரியின் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிவருகிறார்.

கல்லூரியில் எனது சாதனைகள் மற்றும் பிரதிநிதித்துவம்.

1986ம் ஆண்டு காலப்பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரியின் உதைபந்தாட்ட Baby XI அணியில் இடம்பிடித்த சுரேஸ் அவர்களது உதைபந்தாட்ட பயணம் 27 வருடங்களை கடந்து தொடர்கிறது.

1987-1988 ம் ஆண்டு காலப்பகுதியில் பத்திரிசியார் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட கால்பந்து மற்றும் கிரிக்கெட் அணியில் திரு.கி.சுரேஸ் அவர்கள் இடம்பிடித்திருந்தார்.

அத்துடன் 1989 - 1990 ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட கால்பந்து அணியில் முக்கிய வீரனாக திகழ்ந்திருந்தார். பின்னர் 1992 ம் ஆண்டில் 19 வயதுக்குட்பட்ட கால்பந்து மற்றும் கிரிக்கெட் அணியில் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் பின்னர் 1992ம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித பத்தரிசியார் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியின் தலைவராக பதவிவகித்து அணியில் தொடர்ந்து விளையாடிவந்தார்.

தொடர்ந்து 1992ம் ஆண்டு தொடக்கம் 2006 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த திரு. கி.சுரேஸ் அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராக திகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்நாட்களில் 1992 ம் ஆண்டு கல்லூரியின் தடகள விளையாட்டு நிகழ்ச்சிகளின் தலைவராக பதவிவகித்ததுடன், 1993 ம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டியின் இல்ல தலைவராகவும் செயற்பட்டு 1990ம் ஆண்டு தொடக்கம் 1992ம் ஆண்டு வரை கல்லூரியின் மாணவ முதல்வராகவும் பதவிவகித்திருந்தார்.

அத்துடன் கி.சுரேஸ் அவர்கள் கல்லூரியின் பாடகர் குழுவில் *1988* ம் ஆண்டு தொடக்கம் *1993* ம் ஆண்டுவரை உறுப்பினராக அங்கம் வகித்திருந்தார். தொடர்ந்து *1994*ம் ஆண்டு தொடக்கம் *2003*ம் ஆண்டு வரை யாழ்ப்பாண புனித பத்திரிசியார் கல்லூரியின் அனைத்து கால்பந்து அணியின் உதவி பயிற்சியாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் *2004* ம் ஆண்டு தொடக்கம் *2014* ஆண்டுகள் வரை *Baby XI* அணி முதல் *16* வயதுக்குட்பட்ட அணி வரை பயிற்சியாளராக பயிற்சிகளை வழங்கியிருந்தார். அதன் பின்னர்

2021 ம் ஆண்டு தொடக்கம் *2024*ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் *Baby XI* அணி முதல் *13* வயதுக்குட்பட்ட அணி வரை கல்லூரியின் பயிற்சியாளராக பயிற்சிகளை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண இடம்பெயர்வின் பிற்பாடு *1995*ம் ஆண்டு தொடக்கம் *1997*ம் ஆண்டு காலப்பகுதியில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணிக்காக திரு. கி.சுரேஸ் அவர்கள் விளையாடியிருந்தார். குறிப்பாக பறப்பாங்கண்டல், கறுக்காக்குளம், நாச்சிக்குடா, பெரியமடு ,மற்றும் எமது ஊரில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் எமது அணியில் இடம்பிடித்திருந்தார்.

ஊரில் நடைபெற்ற உள்ளூர் உதைபந்தாட்ட போட்டிகளிலும் பங்குபற்றியதுடன் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்து நாச்சிக்குடாவில் நடைபெற்ற தளபதி விகரர் நினைவு கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டியதை மறக்கமுடியாத அனுபவமாக உள்ளதை நினைவுபடுத்தியிருந்தார்.

திரு.சி.ஸ்ரனிஸ்லஸ்(டெல்லாஸ்) அவர்களது தலைமையில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணி பெரியமடுவில் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியது .அந்த அணியில் திரு.சுரேஸ் அவர்களும் விளையாடிய அந்த நாள் நினைவுகள் என்றும் பசுமையே.

பாடசாலையை கட்டமைத்ததால் ஈச்சளவக்கை மக்கள் வழங்கிய கௌரவம்

கடந்த *05.06.2024* அன்றை தினம் ஈச்சளவக்கை பாடசாலையின் முன்னாள் அதிபரும், மன்/தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய அதிபருமான திரு. ஜோண்சன் கியோமர் பயஸ் அவர்களுக்கு ஈச்சளவக்கை கிராமமக்களால் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

ஈச்சளவக்கை கிராம அமைப்புகளினால் ஈச்சளவக்கை பாடசாலையில் பத்து வருட பாடசாலைச் சேவை ஆற்றியமை , மற்றும் பாடசாலையின் முதலாவது அதிபராக கடமையேற்று பாடசாலையை உயர்வு நிலைக்கு வழிநடத்தி இலங்கையின் மத்திய மலைநாடு மற்றும் தலைநகரப் பிரதேசத்தில் ஈச்சளவக்கையின் பெருமையை அறியச் செய்தமையை கௌரவித்து பாராட்டுவிழா ஒன்று நடத்தப்பட்டது

அதிபர் திரு. ஜோன்சன் கியோமர் பயஸ் *2012* ம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மன்/ஈச்சளவக்கை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முதலாவது அதிபராக பொறுப்பேற்றார். அப்போது அது ஒரு தரம் மூன்றுப் பாடசாலை. மாணவர் எண்ணிக்கை *60* வகுப்புகள் *1* தொடக்கம் *5* வரை ஆசிரியர் எண்ணிக்கை *02* எவ்வித கட்டடங்களும் இல்லை பாடசாலை க்கான வங்கிக் கணக்கு இல்லை காணி இல்லை கட்டடங்கள் ஏதுமில்லை.

இந்த நிலையில் அப்போதைய பிரதேச செயலாளர் திரு. மா. சிறிஸ்கந்தராஜா(அன்ரன்) அவர்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலைக்கென சொந்தமாக காணியைப் பெற்றுக்கொண்டார். பின்னர் *ZOA* நிறுவனத்துடன் கலந்துரையாடி தற்காலிக கொட்டகைகளை கிராம மக்களின் சிரமதானப் பணிகளுடன் அமைத்தார். தொடர்ந்து மாணவர்களின் நலன் கருதி வலயக்கல்விப் பணிமனை மூலம் போதுமான ஆசிரியர் வளத்தினைப் பெற்றார். மாணவர் தொகை அதிகரிப்பை கவனத்தில் கொண்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை அனுப்பி தரம் *1* தொடக்கம் *8* வரையான வகுப்புகளை நடாத்துவதற்கான அனுமதியைப் பெற்று பாடசாலையை கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக தரம் உயர்த்தி கல்வி மற்றும் இணைபாட செயற்பாடுகளில் பாடசாலையை வளர்த்துச் சென்றார். கட்டடங்கள்

நிரந்தர கட்டடங்கள் ஏதுமில்லாத குறையைப் போக்க *Plan Sri Lanka* நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறைக்கட்டடம் செயற்பாட்டு அறை அதிபர் அலுவலகம் மலசல கூடங்கள் என்பவற்றை நிறுவி மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில வழிசமைத்தார். பாடசாலை க்கான சரியான விளையாட்டு மைதானத்தை உருவாக்குவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவிகளைப் பெற்று சிறந்த விளையாட்டு மைதானத்தின்னை அமைத்தார். கல்வியிலும் விளையாட்டிலும் பாடசாலையின் பெறுபேறுகள் அதிகரித்துச் சென்றமையால் அயல் கிராமங்களிலிருந்து மாணவர்கள் மன்/ஈச்சளவக்கை பாடசாலையை நாடியதால் மாணவர் தொகை மேலும் அதிகரித்தது எனவே பாடசாலையின் தரத்தை உயர்த்த வேண்டிய தேவையை உணர்ந்து மீண்டும் வடக்கு மாகாண கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டு தரம்1 தொடக்கம் 11 வரையான வகுப்புகளை நடத்தும் வகையில் 1C வகைப் பாடசாலையாக 2016 ம் ஆண்டில் அனுமதியைப் பெற்று மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். இதற்கமைய 2018ம் ஆண்டில் முதற் தடவையாக இப்பாடசாலை மாணவர்கள் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பை இக்கிரா மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் 2012 ற்கு முன்னர் பாடசாலைக் கல்வியை தரம் 05 .06. வகுப்புகளுடன் நிறுத்திக்கொண்ட மாணவர்கள் 2018 ற்குப்பின் குறைந்தது க.பொ.த.சா/தரம் வரை கற்க வழி சமைத்தார்.

பாடசாலைத் தர உயர்வினால் ஏற்பட்ட வகுப்பறைப் பற்றாக்குறையை போக்க *UN Habitat* நிறுவனத்தின் உதவியுடன் மேலும் 5வகுப்பறைக் கட்டடங்கள் சிற்றுண்டிச்சாலை பாடசாலை நுழைவாயில் என்பன நிறுவப்பட்டது. பாடசாலையை கற்பதற்கு மகிழ்ச்சியான இடமாக மாற்றும் நோக்குடன் 100 நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு இன்று பெருஞ்சோலையாக காட்சியளிக்கின்றது .மேலும் ஆசிரியர்கள் தங்குவதற்கு ஆசிரியர் விடுதியை மன்னார் மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளரின் ஏற்பாட்டில் அரச நிதி மூலம் நிறுவினார். அத்துடன் விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாத குறையைப் போக்க வடமாகாண கல்வி அமைச்சரின் கூட்டத்தில் கோரிக்கையை முன்வைத்து நிதியுதவியை பெற்று விஞ்ஞான கூடம் வகுப்பறை நூலகப் பிரிவு என்பன கொண்ட தொகுதியை ஏற்படுத்தினார். விளையாட்டுத்துறையில் அகில இலங்கை ரீதியில் மூன்றுமுறை 5 தங்கப் பதக்கங்களை இவ் அதிபரின் வழிகாட்டலில் பாடசாலை பெற்றுக் கொண்டது. 2012 முதல் 2021 வரை அதிபராக மன்/ஈச்சளவக்கை அ.த.க.பாடசாலையில் பணிபுரிந்து பாடசாலையை கல்வியிலும் இணைபாட துறைகளிலும் கட்டுமானத் துறையிலும் வனப்பிலும் உயர்த்தி அக்கிராம மக்களின் மனதில் தனக்கென தனியான ஓர் இடத்தினைப் பெற்று தனது பிறந்த மண்ணாம் விடத்தல் தீவுக்கு பெருமை சேர்த்து தந்துள்ளார்.

விருதுகளை வென்று பெருமைசேர்த்த எமது ஜோசப்வாஸ் நகர் பங்கு

எமது மன்னார் மறைமாவட்ட த்தில் தேசிய திருவிவிலிய போட்டிகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் 13/4/2023 மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் எமது ஜோசப்வாஸ் நகர் பங்கை சார்ந்த எமது கிராமத்தின் மாணவர்கள் சான்றிதழ்களையும் ,விருதுகளையும், பெற்றுள்ளனர்.

1.யேசுதாசன். கிறிஸ்ரிக்கா.
2.கியோமர் பயஸ். பிறைற்றி பயஸ்.
3.றொயிற்றன். டில்சிகா.
4.பொஸ்கோ. ஜொனில்டா.
5.மரிய சேவியர். ஆன்ஸ்லயா.
6.ஸ்ரனிஸ்லஸ். ஸ்ரெலானி.
7.கிங்ஸ்லி. நிஸ்றின்.
8.அருள்ராஜன். அக்ஸ்சனா.
9.பேக்ஸ்மன். மேரி பிறிஜிற்றா.
10.பெல்மன். பிலோமி.
11.மாயக்கிருஸ்ணன். அலைக்ஸ்.
12.மாயக்கிருஸ்ணன். ஸ்ரெபன்.
13.தேவானந்தன். அபிசாளினி.
14.தயானந்தன். தர்மிகா.
15.எட்மன். நர்மதா.
16.கனகராஜ். கெனோரின்.
17.சுரேஸ். சுயஸ்சனா.
18.கில்மன். அக்சயா.
19.கனிஸ்ரராஜ். ஸ்ரிமா.

சமூக விஞ்ஞான போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு

மன்னார் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைக்கு இடையிலான நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் எமது மன் தோட்டவெளி அ.த.க பாடசாலை தரம் 10 மாணவி செல்வி கியோமர் பயஸ். பிறைற்றி பயஸ் அவர்கள் தெரிவாகி மாகாண மட்ட போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளார்.

சாரணியத்தில் ஜனாதிபதி விருதைப்பெற்றுக்கொண்ட செல்வின் நிமல்ராஜ் எட்றிக்

மன்னார் மாவட்ட சாரணிய வரலாற்றில் மீண்டும் இரு ஜனாதிபதி விருதினை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் வென்றுள்ளார்கள். இதுவரை எமது மாவட்டத்தில் 09 ஜனாதிபதி விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வரிசையில் இன்று 10வது ,11வது ஜனாதிபதி விருதை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் சாரணர்கள் பெற்றுள்ளனர். அதன் அடிப்படையில் எமது கிராமத்தின் திரு.திருமதி. செல்வின் நிமல்ராஜ், கிறிஸாந்தி தம்பதிகளின் புதல்வனும், மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் மாணவனுமான செல்வன்.செல்வின் நிமல்ராஜ். எட்றிக் அவர்கள் சாரணியத்தில் ஜனாதிபதி விருதை பெற்றுள்ளார்.

பல்கலைக் கழகத்தில் பதக்கங்களை வென்ற அருள்பிரகாசம் கிரிஜா

2025.04.22 தினம் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தின் போது "சிறந்த ஆற்றல் வீராங்கனை" என்ற கௌரவத்தைப் எமது மண்ணின் திரு.அருள்பிரகாசம், திருமதி. மேரி கிறிஸ்ரின் தம்பதிகளின் புதல்வி செல்வி கிரிஜா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வருடந்தோறும் இடம்பெறும் பொதுப்பட்டமளிப்பு விழாவில் 21/3/2025 பேராசிரியர் அழகையா துரைறாஜா விருது, சகாதேவன் நிலக்சன் தங்கப்பதக்கம், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை தங்கப்பதக்கம் ஆகியவற்றை தனதாக்கினார்.

தற்போது அவர் யாழ்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் தற்காலிக உதவி விரிவுரையாளராக பணியாற்றுகிறார்.

செல்வி கிரிஜா இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட நடுவர் "B" தர பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக இன்றைய தினம் 6/4/2024 இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் மண்டபத்தில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மகளீர் தினத்தில் கௌரவிக்கப்பட்டார் திருமதி சியாந்தனா அவர்கள்

சர்வதேச மகளீர் தினமாகிய 8/3/2025 சனிக்கிழமை இன்றைய நாளிலே மன்னார் நகர பிரதேச செயலகத்தில் சர்வதேச மகளீர் தின கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றது. திருமதி சியாந்தனா டெலிஸ்ரன் நிசாந் அவர்கள் விளையாட்டுத்துறையில் நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மன்னார் மாவட்ட ரீதியாகவும், வடமாகாண ரீதியாகவும் பாடசாலை மாணவியாக இருந்த காலங்களில் இருந்து பல்வேறுபட்ட போட்டிகளில் பங்குபற்றியதுடன் சாதனைகளை நிலைநாட்டியமைக்காகவும், மன்னார் மாவட்ட பெண்கள் கரப்பந்தாட்ட அணியின் தலைவியாக பதவிவகித்து சிறப்பாக மாகாண போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை மாவட்டத்திற்கு பெற்றுக்கொடுத்ததை கௌரவப்படுத்தி சிறந்த விளையாட்டு வீராங்கனையாக மன்னார் மாவட்ட சாதனை பெண்ணாக மன்னார் நகர பிரதேச செயலகத்தில் இன்றைய தினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

உயரம் பாய்தலில் வெள்ளிப்பதக்கத்தை பெற்று பிறோமியன் புதிய சாதனை

வடமாகாண கல்வி திணைக்கள பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு. திருமதி பிறிமன் ராஜா, பிறேமலதா தம்பதிகளின் புதல்வனும், புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவனுமான செல்வன். பிறோமியன் றிசோன் அவர்கள் 14 வயது பிரிவு உயரம் பாய்தல் நிகழ்வில் ஏற்கனவே உயரம் பாய்தலில் அமையப்பெற்ற சாதனையை முறியடித்து 1.60 cm பாய்ந்து மாகாண மட்டத்தில் 2 வது இடத்தை பெற்று ,வெள்ளிப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார்.

UCMAS இன்டர்நேஷனல் சம்பியன்ஷிப் போட்டி- *1st Runner up* ரியானா

புது டில்லி இந்தியாவில் நடைபெற்ற *UCMAS* சர்வதேச சம்பியன்ஷிப் போட்டியில் திரு.திருமதி. ராஜநாயகம், பெமிலா செறின் தம்பதிகளின் புதல்வி செல்வி ரியானா அவர்களும் சர்வதேச ரீதியல் நடைபெற்ற போட்டியில் பங்கேற்று *1st Runner up* ஆக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். செல்வி ரியானா அவர்கள் மாகாண ரீதியாக நடைபெற்ற *Imacs* போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். *10/8/2024* கொழும்பு சுகதாச உள்ளரங்கில் நடைபெற்ற *UCMAS* தேசிய போட்டியில் *GRAND CHAMPION* ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த *12/8/2023 BMICH* இல் *UCMAS* தேசிய போட்டியில் *B* பிரிவில் தகுதி விருதை வென்றுள்ளார். மலேசியாவின் கோலாலம்பூரில் *03.12.2023* அன்று நடைபெற்ற சர்வதேச மனக்கணித போட்டியில் *(UC-MAS Abacus)* கலந்து கொண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மாணவர்களுள் எமது மண்ணின் ரியானா அவர்கள் மலேசியாவில் #மூன்றாமிடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

குயின்ஸ்லாந்தில் கௌரவிக்கப்பட்டார் செபதேயு லெபோன்.

கடந்த காலங்களில் சமூகத்திற்காகத் தொண்டாற்றியதற்காகவும், *(High Achievement)* உயர் சாதனைகளுக்காகவும் குயின்ஸ்லாந்தில் "கலை கலாசார பண்பாட்டுக் குழுவினரால்" நடாத்தப்பட்ட பாராட்டுவிழாவில் செபதெயு லெபோன் அவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். செபதேயு லெபோனுடைய இரண்டரை வருடகால அயராத முயற்சியே இந்த "டிறோபொட்" என்ற இயந்திரமனிதனாகும். இது நிறைவேறி இன்றுடன் 14வது வருடங்கள் பூர்த்தியாகின்றது. எப்போதும் எனது தேடல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கும். முயன்றுகொண்டேயிருந்தால் ஒருநாளில் எம் கனவுகள் மெய்ப்படும் என்பது வெற்றியின் இரகசியம். (செபதேயு லெபோன்)

மழையின் வரவை முன்கூட்டியே அறிவதற்காக செபதேயு லெபோனால் *2009*ம் வருடம் வடிவமைக்கப்பட்ட குடை இதுவாகும். பாடல்களைக் கேட்டபடியும், படங்களைப் பார்த்தபடி செல்லும் வகையில் உருவாக்கப்பட்டது. இரவுநேரத்தில் ஒளிரும் மின்விளக்குகள், வெயில் காலங்களில் செயற்படக்கூடிய விசிறிகள், அசுத்தமான சூழலில் வீசும் துர்நாற்றங்களிலிருந்து பாதுகாக்க குடையினுள்ளே வாசனைத் திரவத்துடன்கூடிய சிவிறி, வீட்டிலிருந்தவாறே எம் உறவுகள் எம்மை தெடர்புகொள்ளும் வசதி, மற்றும் மீள்மின்னேற்றம் செய்யும் வசதிகள் போன்றவை வடிவமைப்பின்போது உள்ளடக்கப்பட்டன.

மாகாண மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றார் தக்ஸ்மன்

10/12/2022 நடைபெற்ற மாகாண மட்ட துரித கணித போட்டியில் எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய தரம் 2 மாணவன் ஜோர்ஜ் திலீபன். தக்ஸ்மன் அவர்கள் இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

கணிதப்போட்டியில் மூன்றாவது இடத்தை பெற்றார் சாருஜன்

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கணிதப்போட்டியில் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையான எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய தரம் 9 இல் செல்வன் சதானந்தகுமார் சாருஜன் அவர்கள் பங்குபற்றிய போட்டியாளர்களில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளார்.

விளையாட்டில் ரசிகர் மனதை கொள்ளை கொண்ட ஜோண்சனின் சரித்திரம்

விளையாட்டுத்துறையில் பல்வேறுபட்ட சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருப்பவர்களுள் எமது ஜோண்சன் அவர்களும் விதிவிலக்கானவரல்ல. ஜோண்சன் அவர்கள் 1995/2/2 ம் திகதி ஜோகராஜன் ஜோசப், லதா மேரி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக பிறந்தார். இவருக்கு ஒரு சகோதரியும் இரண்டு சகோதரர்களும் உள்ளனர்.

மாணவ பருவத்தில் கல்வியும், விளையாட்டும் தமது ஆண்டு 1, ஆண்டு 2 ஆரம்ப கல்வியை மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கற்று பின்னர் 3ம், 4ம், 5ம் தரங்களை எமது வீடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்றார். தனது சிறு பராயத்தில் இருந்தே விளையாட்டை கல்வியோடு ஒருங்கே கற்று தேர்ந்தார். 11வயது பிரிவு உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் மடு கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும், வலய மட்டத்தில் முதலிடத்தையும் பெற்ற ஜோண்சன் மன்னார் மாவட்ட மட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.தரம் 5 இல் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பொழுது நடைபெற்ற ஆங்கில பார்த்தெழுதுதல்போட்டியில்வலய மட்டத்தில்முதலிடத்தையும்மாவட்ட மட்டத்தில்மூன்றாம்இடத்தையும் பெற்றிருந்ததுடன் ,ஆங்கில கதை சொல்லுதல் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் தரம் 5 வரை கல்வி கற்று பின்னர் தரம் 6 இல் இருந்து கல்வி பொதுத்தர உயர்தரம் வரை மன்னார் புனித சவேரியார் தேசிய பாடசாலையில் விளையாட்டோடு கல்வியை ஒருங்கே சிறப்பாக கற்றுத்தேர்ந்தார்.

2006 ம் ஆண்டு நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணியில் ஜோண்சன் அவர்கள் இடம்பிடித்திருந்ததுடன் அவ் அணியானது மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றிருந்தது. அவ் ஆண்டிலே நீளம் பாய்தல் போட்டி நிகழ்ச்சியில் மூன்றாவது இடத்தை ஜோண்சன் பெற்றிருந்தார்.

தொடர்ந்து 2007 ம் வருடத்தில் நடைபெற்ற உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் வலைய மட்டத்தில் முதலிடத்தையும், மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தையும், பெற்றதுடன் மாகாண ரீதியாக நடைபெற்ற போட்டியிலும் முதலிடத்தை பெற்றுக்கொண்ட ஜோண்சன் 4×100m அஞ்சல் ஓட்ட நிகழ்ச்சியில் வலய மட்டத்திலும், மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும் முதலிடத்தை பெற்று நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மாவட்ட ரீதியாக இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

அதன் பிற்பாடு 2008 ம் ஆண்டில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மாகாண ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன், கொழும்பில் நடைபெற்ற புனித டிலாசால் சபையின் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் அணிக்கு தலைமைதாங்கி பங்குபற்றியிருந்ததுடன், தடை தாண்டல் போட்டியில் மாவட்ட ரீதியாக மூன்றாவது இடத்தையும் தனதாக்கியிருந்தார்.

தொடர்ந்து மாகாண ரீதியாக 2009 ம் வருடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் முதலிடம் பெற்று மாகாண சம்பியனாக வெற்றியீட்டி அவ்வருடத்தில் நடைபெற்ற தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில்

தேசிய ரீதியாக இரண்டாவது இடத்தை பெற்றிருந்தார். தொடர்ந்து அவ் வருடத்தில் கடினப்பந்து மாவட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டதுடன், கரப்பந்தாட்ட போட்டியில் மாவட்ட ரீதியாக முதல் இடத்தை பெற்று மாகாண ரீதியாக 4 வது இடத்தையும் பெற்றிருந்தார்.

ஜோண்சன் அவர்கள் 2010 ம் ஆண்டு நடைபெற்ற கோட்ட மட்டத்திலான மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டார். மேலும் அவ் வருடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மாகாண ரீதியாக முதலிடத்தை பெற்றதுடன் தேசிய ரீதியாக நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியிலும் முதலிடத்தையும் பெற்று சம்பியனாக தெரிவானார்.

2011ம் ஆண்டு ஜோண்சன் அவர்களது விளையாட்டு வரலாற்றில் மறக்கமுடியாத சில முக்கியமான நிகழ்வுகளும், சாதனைகளும் நடந்தேறியது. நடைபெற்ற மாகாண ரீதியான உதைபந்தாட்ட போட்டியில் ஜோண்சன் 12 கோல்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்ததுடன் ,மாகாண ரீதியாக உதைபந்தாட்ட போட்டியில் முதலிடத்தையும் பெற்றிருந்தார். தேசிய ரீதியில் நடைபெற்ற அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தேசிய ரீதியாக முதலிடத்தை பெற்று சம்பியனாக தெரிவானதுடன், அந்த உதைபந்தாட்ட தொடருக்கான சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் நடைபெற்ற மைலோ கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அந்த தொடரில் 16 கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்ததுடன் திருகோணமலை மைதானத்தில் நடைபெற்ற நீர்கொழும்பு சென். மேரிஸ் அணிக்கெதிரான காலிறுதிப்போட்டியின் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த நிமிடத்தில் தனியொருவனாக எதிரணியை துவசம் செய்து தனது அணிக்காக அடித்த கோல் இன்று வரை உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றமையும் தேசிய ரீதியில் உதைபந்தாட்ட அணி இரண்டாம் இடத்தை பெற்றதும் மறக்கமுடியாததாகும். அத்துடன் ஜோண்சன் தனது கல்வி பொதுத்தர சாதாரண தர பரீட்சையை 2011 ம் ஆண்டு புனித சவேரியார் தேசிய பாடசாலையில் தோற்றி 5A ,B 3C என்ற சித்திகளை பெற்றிருந்தார். தொடர்ந்து 2012 ம் வருடத்தில் மாகாண ரீதியாக நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் 2 ம் இடத்தை பெற்றதுடன் தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனாக வெற்றிவாகை சூடியிருந்ததுடன், தேசிய ரீதியாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் தனது அணிக்காக 2 கோல்களை ஜோண்சன் அவர்கள் பெற்றுக்கொடுத்திருந்தார்.

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்கு இலங்கை உதைபந்தாட்ட அணி சார்பாக 18 வயது பிரிவுக்கு 2013 ம் ஆண்டு எமது ஜோண்சன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அத்துடன் அதே வருடத்தில் நடைபெற்ற மாகாண ரீதியான உதைபந்தாட்ட போட்டியில் முதலிடத்தை பெற்றுக்கொண்டதுடன் இறுதிப்போட்டியில் 4 கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்து அந்த சுற்றுப் போட்டியில் மொத்தமாக 12 கோல்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. மற்றும் 19 வயது பிரிவு உதைபந்தாட்ட இலங்கை அணிக்கு 2014 ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டிருந்த ஜோண்சன் அவர்கள் நட்பு ரீதியான உதைபந்தாட்ட போட்டிக்காக ஜோர்தான் தேசத்திற்கும் சென்றுள்ளதும் இவரது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட அணிக்கு அணித்தலைவராக கடந்த 2007ம் 2009ம் , 2011 ம் மற்றும் 2013 ம் ஆண்டுகளில் எமது ஜோண்சன் அவர்கள் தலமைதாங்கியிருந்ததுடன், கடந்த 2007 ம் ஆண்டு தொடக்கம் 2013 ம் ஆண்டு வரை நடைபெற்ற மெய்வல்லுனர் தடகள போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தனிநபர் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். ஜோண்சன் அவர்கள் கடந்த 2015 ம் வருடத்தில் தனது கல்வி பொதுத்தர உயர்தர பரீட்சைக்கு தோற்றி வர்த்தக பிரிவில் 3C சித்திகளை பெற்றிருந்தார். தமது பாடசாலை மாணவ பருவத்தில் பாடசாலையின் கனிஸ்ட மாணவ பிரிவின் தலைவராக பதவி வகித்ததுடன், பாடசாலையின் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் பதவிவகித்திருந்தார்.

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட அணியில் :

2019 ம் ஆண்டு நடைபெற்ற NEPL உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அம்பாறை அணிக்கு எதிராக 4 கோல்களை பெற்றுக்கொடுத்ததுடன் அவ் போட்டியின் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதையும் எமது ஜோண்சன் அவர்கள் தனதாக்கியிருந்தார்.

மன்னாரில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளில் மாதோட்ட அணி தலைவராக தலமைதாங்கியிருந்தார். அத்துடன் நடைபெற்ற MPL சுற்றுப்போட்டியில் 2 தடவைகள் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதையும் பெற்றிருந்ததுடன் எமது கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்திய BRO STANY UNITED அணிக்கு தலைமைதாங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்கடந்த 2022 ம் வருடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் அணி சார்பாக பங்குபற்றியதுடன் அவ் அணியானது மாவட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தது.

மாவட்ட ரீதியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் :

ஜோண்சன் அவர்கள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியின் முன்னணி வீரனாக விளையாடி வருகிறார். முத்துக்கள் மூன்று வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக ஜோண்சன் விளையாடிய முதலாவது போட்டியாகும். அந்த போட்டி தொடரில் அரையிறுதி ஆட்டத்தில் சென். ஜோசப் பனங்கட்டு கொட்டு அணியுடன் 2 : 4 என்ற கோல் அடிப்படையில் தோல்வியுற்றது. அவ் போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சார்பாக பெற்ற 2 கோல்களில் ஒரு கோல் எமது ஜோண்சன் அவர்களால் பெறப்பட்ட கோல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜோண்சன் எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக விளையாடிய ஈச்சளவக்கை கிராமத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக்கழக அணியை வெற்றியீட்டி சம்பியனானது .கிராஞ்சியில் நடைபெற்ற நாச்சிக்குடா அணிக்கெதிரான உதைபந்தாட்ட போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. மூன்றாம்பிட்டியில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றப்போட்டியில் தேவன்பிட்டி அணியை வெற்றிகொண்டு எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியது.

நானாட்டானில் நடைபெற்ற புனித லூசியா விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியுடனான போட்டியில் இரண்டாவது இடத்தை பெற்றிருந்தது. தொடர்ந்து மாளிகைப்பிட்டியில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் புனித லூசியா விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்ட எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணி சம்பியனாக வாகை சூடியதுடன் அவ் சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் விருதையும் எமது ஜோண்சன் அவர்கள் பெற்றிருந்தார்.

நடைபெற்ற இருதயநாதர் அணியுடனான AA கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் இரண்டாவது இடத்தை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி பெற்றதுடன் அவ் போட்டிக்கான சிறந்த ஆட்ட நாயகன் விருதை எமது ஜோண்சன் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பனங்கட்டு கொட்டு சென்.ஜோசப் அணியுடனான பியூஸ்லஸ் நினைவு கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டி எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவானது. தொடர்ந்து நடைபெற்ற கில்லறி விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணியுடனான தம்பா கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரண்டாவது இடத்தை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி பெற்றிருந்தது.

FA கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணி வங்காலை அணியுடன் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று சம்பியனாக வெறறிவாகை சூடியது.
மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற எமது தாய் கழகமான விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணியுடனான போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. எமது ஜோசப்வாஸ் நகரில் நடைபெற்ற சென்.ஜோசப் பனக்கட்டு கொட்டு உதைபந்தாட்ட அணியுடனான போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனானதுடன் அவ் போட்டிக்கான சிறந்த ஆட்ட நாயகனாகவும், தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்த எமது ஜோண்சன் அவர்கள் அந்த சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சார்பாக 16 கோல்களை பெற்றுக்கொடுத்து அதிக கோல் அடித்த வீரன் என்ற விருதையும் தனதாக்கிக்கொண்டமை சிறப்பம்சமாகும்.

மாகாண ரீதியில் :

மாகாண மட்ட ரீதியாக நடைபெற்ற குறிஞ்சி குமரன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணிக்காக 16 கோல்களை பெற்றுக்கொடுத்ததுடன் விண்மீன் அணியுடனான போட்டியில் 3வது இடத்தையும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி பெற்றிருந்தது.
அதன் பின்னர் நெரியகாடு தொடரில் பாடும்மீன் அணியுடனான போட்டியில் 3வது இடத்தை எமது ஐக்கிய விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணி பெற்றிருந்தது. பின்னர் நடைபெற்ற திக்கம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தொடரில் ஆதிசக்தி அணியுடன் மோதி 3ம் இடத்தை எமது ஐக்கிய விளையாட்டுக்கழகம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பயிற்றுவிப்பாளராக :

ஜோண்சன் அவர்களுக்கு உடற்கல்வி பாடநெறியை பயில்வதற்கு வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கான அனுமதி -2017 கிடைத்திருந்தது. இருந்தும் குடும்ப சூழல் காரணமாக அந்த உடற்கல்வி ஆசிரிய பயிற்சியை தொடர முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது.

பின்னர் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளராக கடந்த 2019.05.06 ம் திகதி நியமனம் பெற்றார். பாடசாலையின் மாணவர்களது விளையாட்டு திறனை மேம்படுத்தும்

வகையில் பாடசாலை உடற்கல்வி பாடவேளைகளில் மட்டுமின்றி காலை மற்றும் மாலை நேரங்களில் மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறார். திரு.ஜோண்சன் அவர்கள் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பயிற்றுவிப்பாளராக 10 வயது பிரிவு ,18 வயது பிரிவு, மற்றும் 20 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கான பயிற்சிகளை கடந்த 2023 ம் வருடத்திலும் 2024 இவ்வருடமும் வழங்கிவருகின்றார். இவரது பயிற்சியின் பயனாக புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையஙன் உதைபந்தாட்ட அணிகள் பல்வேறுபட்ட போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது அந்த வகையில் திரு. ஜோண்சன் அவர்கள் பயிற்றுவித்த 18 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி கடந்த 2023 ம் வருடத்தில் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தை பெற்றிருந்தது.
கடந்த 2023 ம் வருடத்திற்கான தேசிய ரீதியில் குழுநிலை சம்பியனாக 10 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி இவரது பயிற்றுவிப்பின் கீழ் பெற்றுள்ளது. கடந்த வாரத்தில் நடைபெற்ற மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் 20 வயது பிரிவு புனித சவேரியார் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணி மாகாண ரீதியாக முதலிடத்தை பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் திரு. ஜோண்சன் அவர்களது பயிற்றுவிப்பின் கீழ் 10 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி மற்றும் 12 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகள் மாவட்ட சம்பியன்களாக இவ்வருடம் 2024 தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜோண்சன் அவர்களது தந்தை திரு. இ. ஜோகராஜன் ஜோசப் அவர்கள் எமது கழகத்தின் முன்னாள் வேகமான ஓட்ட வீரரும் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் உதைபந்தாட்ட வீரருமாவார்.

விளையாட்டுத்துறையில் பல சாதனையாளர்களையும் உருவாக்கும் எம்மவர்கள்

எமது மண்ணின் மைந்தர்களாக எமது மாவட்டத்திலும், மாவட்டத்திற்கு வெளியிலும் பாடசாலைகளில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களாகவும், உடற்கல்வி ஆசிரியர்களாகவும் கடமையாற்றி பல்வேறுபட்ட சாதனைகளையும், சாதனையாளர்களையும் உருவாக்கிவரும் திரு.ஜோ.ஜோண்சன், திரு.அ.டிலைக்சன், திரு. ஞா.கிசோகுமார் மற்றும் திரு. எ.ஜெனோசன் ஆகியோராவர்.

திரு. ஜோ. ஜோண்சன்.

புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளராக கடந்த 2019.05.06ம் திகதி நியமனம் பெற்றார். பாடசாலையின் மாணவர்களது விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை உடற்கல்வி பாடவேளைகளில் மட்டுமின்றி காலை மற்றும் மாலை நேரங்களில் மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறார்.
திரு.ஜோண்சன் அவர்கள் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பயிற்றுவிப்பாளராக 10 வயது பிரிவு ,18 வயது பிரிவு, மற்றும் 20 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கான பயிற்சிகளை கடந்த 2023 ம் வருடத்திலும் 2024 இவ்வருடமும் வழங்கிவருகின்றார். இவரது பயிற்சியின் பயனாக புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையஙன் உதைபந்தாட்ட அணிகள் பல்வேறுபட்ட போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது அந்த வகையில் திரு. ஜோண்சன் அவர்கள் பயிற்றுவித்த 18 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி கடந்த 2023 ம் வருடத்தில் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தை பெற்றிருந்தது.

கடந்த 2023 ம் வருடத்திற்கான தேசிய ரீதியில் குழுநிலை சம்பியனாக 10 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி இவரது பயிற்றுவிப்பின் கீழ் பெற்றுள்ளது. மேலும் திரு.ஜோண்சன் அவர்களது பயிற்றுவிப்பின் கீழ் 10 வயது பிரிவு உதைபந்தாட்ட அணி மற்றும் 12 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகள் மாவட்ட சம்பியன்களாக இவ்வருடம் 2024 தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. அந்தோணிப்பிள்ளைடிலைக்சன்.

திரு.அ. டிலைக்சன் அவர்கள் உடற்கல்வி ஆசிரியர் நியமனத்தின் கீழ் மன்னார் அல்மினா மகாவித்தியாலயத்தில் உடற்கல்வி ஆசிரியராக கடந்த 22/5/4 ம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். உடற்கல்வி தேசிய டிப்ளோமா பட்டத்தை நிறைவு செய்த திரு. அ. டிலைக்சன் அவர்கள் கடந்த 02/01/2023 இடம்மாற்றம் பெற்று மன்/தோட்டவேளி அ.த.க பாடசாலை உடற்கல்வி ஆசிரியாக நியமனம் செய்யப்பட்டார்.

கடந்த வருடம் 2023 தேசிய ரீதியில் நடைபெற்ற மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் 12வயது பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தை இவரது பயிற்றுவிப்பால் பெற்றுக்கொண்டது. திரு. அ. டிலைக்சன் அவர்கள் இலங்கை பாடசாலைகளின் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

20 வயது பிரிவு பெண்களுக்கான வலய ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் வலய மட்டத்தில் 20 வயது பிரிவு பெண்கள் உதைபந்தாட்ட அணி திரு.அ.டிலைக்சன் அவர்களது பயிற்சியில் கடந்த 2023 ம் வருடத்தில் சம்பியனாக வெறாறீயீட்டியுள்ளது. மேலும் கடந்த 2023 வருடத்தில் நடைபெற்ற 20 வயது பிரிவு கடற்கரை வலைப்பந்தாட்ட போட்டியில் 20 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணி வடமாகாண ரீதியில் 4 வது இடத்தை பெற்றுக்கொண்டது. இவ்வருடம் 2024 14 வயது பிரிவு ஆண்களுக்கான மாவட்ட ரீதியில் நடைபெற்ற சமபோசா உதைபந்தாட்ட போட்டியில் மாவட்ட சம்பியனாக 14 வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட அணி தெரிவுசெய்யப்பட்டதுடன் தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு.ஞானசேகரன்கிசோகுமார்.

மன்/வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையில் கடந்த 06/05/2019 ம் ஆண்டில் விளையாட்டு பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்று உடற்கல்வி ஆசிரியாக கடமையாற்றுவதுடன்,உதைபந்தாட்டம், கிறிக்கற் மற்றும் தடகள விளையாட்டு நிகழ்வுகளுக்கு பயிற்சிகளை காலை மற்றும் மாலை வேளைகளில் வழங்கி வருகிறார். கடந்த 2022ம் வருடத்தில் மாகாண ரீதியாக நடைபெற்ற யோகா பயிற்சி போட்டியில் இரண்டாவது இடத்தை பாடசாலையின் யோகா ஆண்கள் அணி இவரது பயிற்றுவிப்பால் பெற்றுக்கொண்டது.

2023 ம் வருடத்தில் நடைபெற்ற 12 வயது பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் மாவட்ட ரீதியில் முதலிடத்தை 12 வயது பிரிவு பெண்கள் அணி பெற்றுக்கொண்டதுடன் ,அதே வருடத்தில் 10 வயது பிரிவு பெண்கள் அணி மாவட்ட ரீதியில் இரண்டாவது இடத்தை திரு.கிசோகுமார் அவர்களது பயிற்றுவிப்பால் பெற்றுக்கொண்டது.

2023 ம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற 12 வயது பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் 3வது இடத்தையும் ,மாவட்ட ரீதியில் நடைபெற்ற Bed minton போட்டியில் 3வது இடத்தை ஒரு மாணவனும் 2019 ம் ஆண்டு மாவட்ட ரீதியில் நடைபெற்ற Bed Minton போட்டியில் 12வயது பிரிவு போட்டியில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை இவரது பயிற்றுவிப்பால் வீரர்கள் பெற்றுக்கொண்டனர்.

2024 இவ் வருடம் 10 வயது பிரிவு மற்றும் 14வயது பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியின் மாவட்ட ரீதியில் இவரது பயிற்சியின் பயனாக 10 ,!4 வயது பிரிவு பெண்களுக்கான அணிகள் இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. வலய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான கிறிக்கற் போட்டியில் 16 வயது பிரிவு பெண்கள் அணி மூன்றாவது இடத்தையும், 16 வயது பிரிவு பெண்கள் உதைபந்தாட்ட அணி முதலாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

திரு.கிசோகுமார் அவர்களது பயிற்சியின் கீழ் மாணவி ஒருவர் 19 வயது பிரிவு பெண்களுக்கான கிரிக்கற் அணியில் தெரிவு செய்யப்பட்ட நிலையில் ,இவரது பயிற்சியின் கீழ் மாணவிகள் இருவர் மாவட்ட லெதர் Ball அணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்ட ரீதியில் 2024 இவ் வருடம் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் இவரது பாடசாலை அணி மாவட்ட மட்டத்தில் மூன்றாவது இடத்தை பெற்றுக்கொண்டது .
இவ்வருடம் 2024 ம் ஆண்டு பாடசாலை ரீதியாக இடம்பெற்ற ஜெசாக்கா கிறிக்கற் போட்டியில் திரு. கிசோகுமார் அவர்களது பயிற்றுவிப்பின் பயனாக பாடசாலை கிரிக்கற் அணியானது இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. கடந்த 2022ம் வருடம் நடைபெற்ற யோகா பயிற்சி போட்டிகளில் வெற்றியீட்டியதை முன்னிட்டு திரு.கிசோகுமார் அவர்களுக்கு சிறந்த யோகா பயிற்றுவிப்பாளர் என்ற விருதையும் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், மெய்வல்லுனர் தடகள தொழில்நுட்ப அலுவலர் தரம் 4 நிறைவுசெய்துமுள்ளமை குறிப்பிடத்தக்கது.
பாடசாலையில் சமீபகாலமாக உடற்கல்வி ஆசிரியர் நியமிக்கப்படாமையால் விளையாட்டு பயிற்றூவிப்பாளராக நியமனம் பெற்ற திரு.கிசோர்குமார் அவர்கள் உடற்கல்விக்கான பொறுப்பையும் பெற்றுள்ளார்.

திரு.எ.ஜெனோசன்.

எட்வேட்ராஜா. ஜெனோஷன் அவர்கள் 2/2/1995 ம் ஆண்டு பிறந்தார்.
திரு.ஜெனோசன் அவர்கள் தான் கடமையாற்றும் பாடசாலைகளில் பயிற்றுவித்து அதற்கான அடித்தளங்களை உருவாக்கி வெற்றிவாகை சூடிய தருணங்களே அதிகமாக இருக்கிறது.

2018.08.16 செட்டிபாளையம் மாகா வித்தியாலயத்தில் ஆசிரிய மாணவனாக இருந்ததுடன் மாகாண மட்டத்தில் 08 தங்கப்பதக்கங்களையும், 06 வெள்ளி பதக்கங்களையும் , 07 வெண்கல பதக்கங்களையும் பெற்றதுடன் மாணவர் விடுதியின் காப்பாளராக இருந்த இரண்டு வருட காலத்தில் காற்பந்தாட்ட முழு நேர பயிற்சியாளராக இருந்தார். தற்போது தற்காலிகமாக பணியாற்றும் பாட சாலையில் காலை மற்றும் மாலை நேர பயிற்சியாளராக இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

கெகுணாகொல தேசிய பாடசாலை அதன் வரலாற்றில் முதலாவது கிண்ணத்தை வென்றதும், காலியில் நடைபெற்ற போட்டிகளில் பாடசாலை உதைபந்தாட்ட அணி தேசிய ரீதியாக தெரிவுசெய்யப்பட்டதும் , கெகுணாகொல தேசிய பாடசாலை வரலாற்றில் முதலாவது அணியாகவும், பொலகாவெல லீக் நடாத்திய போட்டியில் இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டதும், பாடசாலை அணியால் பெறப்பட்ட அனைத்து வெற்றிகளுக்கும் பயிற்றுவிப்பாளராக திரு.ஜெனோசன் அவர்களே திகழ்ந்துள்ளார்.

ஆசிரியர்ஜெனோசன்அவர்கள்திறமையானவராக,நற்குணமுடைய ஆசிரியராக,மாணவர்களுடன்சகஜமாக பழகுவதுடன் , அனைத்து மாணவர்களாலும் தலைநிமிர்ந்து மதிக்கக்கூடிய ஒருவராகவும் மாணவர்களது கல்வியாக இருந்தாலும் சரி விளையாட்டாக இருந்தாலும் சரி மாணவர்களுக்கு அதை முழுமையாக மனதில் விதைப்பவராக பணியாற்றியுள்ளார் “தான் சேவை ஆற்றும் பாடசாலையையும் தான் பயிற்றுவிக்கின்ற மாணவர்களையும் சிறந்த முன்னேற்ற மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்” என்ற எதிர்பார்ப்பும், ஆசையும் அவரின் ஒவ்வொரு செயல்களிலும் வெளிப்படுத்திக்கொண்டே இருந்து வந்துள்ளது. பாடசாலையில் ஆசிரியர் ஜெனோசன் பயிற்றுவித்து வழிநடாத்தி , தட்டிக்கொடுத்ததில் பல முதலிடங்களை அவரது பாடசாலை பெற்றுள்ளது. வீழ்ந்திருந்த பாடசாலை விளையாட்டு துறையை மீண்டும் ஒரு நல்ல நிலைக்கு மீட்டெடுத்து தந்த ஆசானாக இன்றும் மதிக்கப்படுபவராக ஜெனோசன் அவர்கள் திகழ்கிறார். எமது மண்ணின் மைந்தனும் குருநாகல் தேசியபாடசாலையின் பயிற்றுவிப்பாளருமான திரு.எ.ஜெனோசன் அவர்களின் கடின உழைப்பாலும், பயிற்றுவிப்பாலும் குருநாகல் தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட அணிகள் சமகாலத்தில் வெற்றிவாகை சூடி வந்தமை மறக்கமுடியாததாகும்.

2023 ம் ஆண்டிற்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு இரன்டிற்கான உதைபந்தாட்ட போட்டித் தொடரில் குருநாகல் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணி தொடர் வெற்றிக்கனிகளை சுவைக்க காரணகர்த்தாவாக பயிற்றுவிப்பாளராக எமது மண்ணின் மைந்தன் ஆசிரியர் திரு.எ.ஜெனோசன் அவர்கள் திகழந்துள்ளார். ஆசிரியர் ஜெனோசன் அவர்களது பயிற்றுவிப்பால் கெகுணா கொல்ல தேசிய பாடசாலையானது 2019.09.16 தொடக்கம் 2024.07.15 வரை பங்குபற்றிய போட்டிகளில் 11 அரையிறுதி ஆட்டங்கள் ,14 காலிறுதி ஆட்டங்கள் அடங்கலாக சம்பியனாக ஒருமுறையும் ,இரண்டாவது இடத்தை ஒருமுறையும் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்ற ஜனாதிபதி கிண்ண போட்டியை வென்று சம்பியனாகிய அணியில் திரு.ஜெனோசன் அவர்கள் அவ் அணிக்காக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது

மைலோ கிண்ண இறுதிப்போட்டி

மைலோ கிண்ண இறுதிப்போட்டியில் எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய அணி இரண்டாம் இடம் பெற்றதை முன்னிட்டு மாணவர்களை வரவேற்று நடைபெற்ற பாராட்டு விழா 2024 ம் ஆண்டிற்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ண சம்பியன் சுற்றுப்போட்டி கடந்த வாரம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது .

எமது மன்/தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய 12 வயது பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட அணி இறுதிப்போட்டியில் மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியை அணியை எதிர்தாடிய நிலையில் இரண்டாம் இடத்தை பெற்றிருந்தது. மேலும் 10வயது பிரிவு பெண்கள் அணி அரையிறுதி போட்டிவரை முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உதைபந்து வீரன் சனுசன்

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 18வயது பிரிவு உதைபந்தாட்ட அணியின் முன்கள வீரனும் திரு.திருமதி றாஜா, கியோமரானி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன் சனுசன் விளையாடிய, பயிற்றுவிப்பாளரும் எமது ஆசிரியர் ஜோண்சன் அவர்களின் பயிற்சிபெற்ற 18 வயது பிரிவின் உதைபந்தாட்ட அணி தேசிய மட்த்தில் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டது.

தனிப்பட்ட நிலை சாதனையாளர்கள் மற்றும் விருது பெற்றவர்கள்

தேசிய ரீதியில் நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் மூன்றாவது இடம்

தேசிய ரீதியில் நடைபெற்ற பளுதூக்குதல் போட்டியில் 3ம் இடத்தினை வென்ற எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய பாடசாலை மாணவன் செல்வன். நிக்சன் ராஜா நிதர்சன் அவரது பெற்றோர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர் படசாலையில் 20/6/2024 கௌரவிக்கப்பட்டனர்.

அனுரா சேவியர் அவர்களுக்கு கௌரவம்.

யாழ், உடுவில் குபேரகா கலைமன்றம் ஈஸ்டர் இன்னிசை பெருவிழா- 2025 துறை சார் சாதனையாளர் மதிப்பளிப்பு. இலங்கை நாட்டின் வடபுல மண்ணில் கலை, பண்பாடு, கலாசாரம்,விளையாட்டு மற்றும் சமூக ஆக்கற்செயற்பாடுகள் மூலம் இன மொழி சமய பேதம் கடந்து வடமாகாண ரீதியாக சேவையாற்றி துறை சார் வல்லுனர்களாக சாதித்துவரும் சாதனையாளர்களின் சேவையை மதிப்பளிக்கும் வண்ணம் 27/4/2025 அன்று திருநெல்வேலி நல்லூர் பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்ற சாதனையாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வில் மக்களின் மனங்களை கவர்ந்த திரு.அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர் அவர்களுக்கு "ஆன்மீக ஜோதி" உயரிய விருது வழங்கப்பட்டதுடன் இரண்டாம் இடத்தைக் குழுப் போட்டியிலும், தனிப்பாடல் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று வடமாகாணம் வடதாரகை, வட மாகாண மனித உரிமை குழு இணைந்து வழங்கிய விருதுகளை பெற்றுக்கொண்டார்

வடமாகாண வலைப்பந்தாட்ட போட்டியில் மூன்றாவது இடம்.

வடமாகாண ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் விடத்தல்தீவு 16 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணி மூன்றாவது இடத்தை பெற்றுள்ளது. வடமாகாண கல்வி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 5 மாவட்டங்களிலிருந்து சுமார் 1000 பாடசாலைகளுக்கிடையிலான மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 29 அணிகளுடன் மோதி வலைப்பந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலை அணி 3 ம் இடத்தினை பெற்று சாதனை படைத்துள்ளது.

மடு வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய அணிகள் முதலிடம் 12/6/2024 மடு கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டிகள் எமது பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.
மேற்படி போட்டியில் எமது பாடசாலையின் 16. 18. 20 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணிகள் போட்டியிட்டன. இதில் எமது 18 .20 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணிகள் சிறப்பாக விளையாடி வலய மட்டத்தில் முதலாம் இடங்களை வென்றன.

வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி - 9/4/2022

எமது விடத்தல்தீவு மன்/தூய ஜோசப்வாஸ் ம.வி. வலைப்பந்தாட்ட அணிகள் மாகாண மட்டத்திற்கு தெரிவு. 9/4/2022 நடைபெற்ற வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் எமது மன் தூய ஜோசப் வாஸ் மகா வித்தியாலய வலைப்பந்தாட்ட அணிகள் முறையே 16 வயது 18 வயது 20 வயது ஆகிய மூன்று அணிகளும் முதல் இடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன.

தேசிய ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி

தேசிய ரீதியில் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த *2003 /2004* ம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்றது. மேற்படி எமது வலைப்பந்தாட்ட போட்டியில் எமது ஜோசப்வாஸ் இளைஞர் கழக வலைப்பந்தாட்ட அணியினர் மாவட்ட ரீதியில் வெற்றியீட்டி களுத்துறையில் தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியிருந்தனர். திரு.ஜோண்சன். கியோமர் பயஸ், திருமதி சிறோமி டென்சில் றாஜ், திருமதி டென்சில்டா யஸ்ரின், திருமதி யூஜின் கெனடி தயானந்தன், திருமதி மேரி ஆன் அக்னஸ் பிறீடன், திருமதி மேரி எல்மோ அருந்தவறாஜன், சிந்துஜா அருமைதாஸ், திரு.யூட் அவர்களோடு அமர்ந்திருப்பவர்கள். ஜோண்சன். மேரி சுஜாதா, திருமதி.அனுசா கமல்றாஜ், திருமதி பெமிலா செறின் ராஜநாயகம், மற்றும் திருமதி தேவி ஆகிய வீராங்கனைகள் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் வலைப்பந்தாட்ட வீராங்கனைகளாக பல வெற்றிக்கிண்ணங்களை எமது ஊரை பிரதிநிதித்துவப்படுத்தி எமது கழகத்திற்காக பெற்றுத்தந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வலைப்பந்தாட்ட அணியின் கலாமதி

விடத்தல்தீவை பிறப்பிடமாக கொண்டு *1999* நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மன்னாரில் வசித்துவரும் ஞானமணி ,எலிசபேத் தம்பதிகளின் மூத்தமகளாக *1964* ம் ஆண்டு பிறந்தார்.

தனது ஆரம்ப கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். தனது சிறுபராயத்தில் இருந்தே எமது கிராமத்தின் மூத்தோரின் விளையாட்டு திறன்களை கண்டு மகிழ்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

தனது *12* வயதில் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்று பல போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளார். திருமதி கலாமதி அவர்கள் தனது *14*வது வயதில் தனது கல்வியை தொடர மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் இணைந்தார். அங்கே கல்வியோடு மட்டுமல்லாது வலைப்பந்தாட்ட போட்டி, ஈட்டி எறிதல், தட்டு எறிதல் மற்றும் அஞ்சல் ஓட்ட போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி பாடசாலை ரீதியாகவும் ,மாவட்ட ரீதியாகவும் பல வெற்றுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுமுறை கால்களில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வலைப்பந்தாட்ட அணியில் இணைந்து வன்னி பெருநிலப்பரப்பு பிரதேசம் எங்கும் சென்று எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணி பல வெற்றிகளை பெறுவதற்கு திருமதி கலாமதி ஆசிரியர் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்தார் என்றால் அது மிகையாகாது.

1979 ம் ஆண்டு முதன்முதலாக மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட எல்லே விளையாட்டு அணிக்கு தலமைதாங்கியதுடன் பல வெற்றிகளை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. தனது உயர்கல்வியை நிறைவுசெய்ததன் பின்னர் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வலைப்பந்தாட்ட அணியில் முழுமையாக இணைந்து மாந்தை கோட்டக் கழகங்களுக்கிடையிலான பல்வேறுபட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றிவாகை சூடியுள்ளார்.
மேலும் திருமதி கலாமதி அவர்கள் பங்குபற்றிய *1991*ம் ஆண்டு மாந்தை கோட்ட கழகங்களுக்கிடையிலான *06* குழுக்கழுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வலைப்பந்தாட்ட அணி வெற்றிக்கேடயத்தை கைபெற்றியிருந்தது .

எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வரலாற்றில் வலைப்பந்தாட்ட அணிக்காக பல ஆண்டுகளாக மாந்தை பிரதேசமெங்கும் போட்டிகளில் பங்குபற்றி எதிரணிக்கு பல சவால் நிறைந்த அணியாக திகழ்ந்ததுடன் பல வெற்றிவாகைகளை சூடிய எமது வலைப்பந்தாட்ட அணியில் திருமதி கலாமதி அவர்களது பங்கு அளப்பெரியது. வலைப்பந்தாட்ட அணியில் சகலதுறை ஆட்ட வீராங்கனையாக திகழ்ந்த கலாமதி அவர்கள் மத்தியகள வீராங்கனையாகவும், தடுப்பு மற்றும் கோல் போடுவதில் சிறந்த ஆட்டநாயகியாகவும் திகழ்ந்திருந்தமை மறக்கமுடியாததாகும்.

எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் திருமதி கலாமதி அவர்களோடு ஆசிரியர் திருமதி மரியசீலி அவர்களும், திருமதி கன்னிமலர் அவர்களும், ஆசிரியர் திருமதி உருசில்லா அவர்களும், திருமதி மேரிராணி அவர்களும், திருமதி றோகினி அவர்களும், ஆசிரியர் திருமதி சகாயமேரி (விக்ரேசன்) அவர்களும் சக வீராங்கனைகளாக மாந்தை மேற்கு பிரதேசத்தில் சாதனை நிலைநாட்டிய வலைப்பந்தாட்ட அணியாக இருந்தமை மறப்பதற்கல்ல.

இவ் வலைப்பந்தாட்ட அணிக்காக பயிற்சிகளை வழங்கி இவ் அணியை வழிநடத்தி தலமைதாங்கிய பெருமை எமது கிராமத்தின் திருமதி தங்கமலர் மற்றும் திருமதி டெய்சி ஆகியோரையே சாரும்.
திருமதி கலாமதி அவர்கள் *1990*ம் ஆண்டு தொடக்கம் *2024* ம் ஆண்டு வரை தமது ஆசிரியப்பணியை திறம்பட ஆற்றி வெற்றிகரமாக நிறைவுசெய்தும் உள்ளார்.

ஆசிரிய பணிக்காலத்தில் எமது மாணவர்களை, ஒழுக்கத்திலும், கல்வியிலும்,ஆன்மீகத்திலும், குறிப்பாக எமது பாடசாலை வலைப்பந்தாட்ட அணிகளை திறமையான அணிகளாக உருவாக்கியதில் இவரது பங்கும் நிறைந்துள்ளமை மறக்கமுடியாததாகும்.

மடு கல்வி வலய ரீதியில் நடைபெற்ற விளையாட்டுகளில் அடைவுமட்டங்கள்

கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்ற மடு வலய மட்ட பெருவிளையாட்டுக்களில் எமது பாடசாலையான மன்/தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம் பெற்ற அடைவுமட்டங்கள்.

உதைபந்தாட்ட போட்டி.
16 வயது ஆண்கள் அணி *1*ம் இடம்.
18 வயது ஆண்கள் அணி *3*ம் இடம்.
20 வயது பெண்கள் அணி *2*ம் இடம்.

வலைப்பந்தாட்ட போட்டி
20 வயது அணி *1*ம் இடம்.
18 வயது அணி *1*ம் இடம்.
16 வயது அணி *4*ம் இடம்.

எல்லே
20 வயது பெண்கள் அணி *3*ம் இடம்.
உடற்கல்வி ஆசிரியர்கள் - திரு. கஜேந்திரன், திரு. இன்பதாசன் , பயிற்றுவிப்பாளர் திரு. இம்மானுவேல்

வலைப்பந்தாட்டத்தில் வரலாறு படைத்த ஐக்கிய விளையாட்டுக்கழக அணி

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக பெருநிலப்பரப்பில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் மைதான சுவட்டு நிகழ்ச்சிகளிலும், உதைபந்து கரப்பந்து, கடினப்பந்து மற்றும் வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் தனக்கென சரித்திரம் படைத்த வரலாறுகள் நிறையவே.

அந்த வகையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் எமது வன்னி பெருநிலப்பரப்பில் நடைபெறுகின்ற அனைத்து வலைப்பந்தாட்ட போட்டிகளிலும் பங்குபற்றி தமது அதீத திறமையால் எதிரணிகளை திறனடித்து , மாஜாயால வெற்றிகளை பெற்ற வலைப்பந்தாட்ட அணி எமது ஐக்கிய விளையாட்டுக்கழக வலைப்பந்தாட்ட அணி என்பதில் பெருமையே.

இவ் புகைப்படத்தில் இடமிருந்து வலமாக எமது ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னாள் நிர்வாக உறுப்பினரும், பயிற்றுவிப்பாளருமான திரு. ய. ஞானசீலன் அவர்களும், திருமதி கொலஸ்ரிக்கா அவர்களும், திருமதி பி.பிறேமலதா அவர்களும், திருமதி சகாயமேரி (விக்ரேசன்) ஆசிரியர் அவர்களும், ஆசிரியர் திருமதி ஸ். நேசமலர் அவர்களும் நிற்பதையும் நூலக அலுவலர் திருமதி நே. நிர்மலா அவர்களும், ஆசிரியர் திருமதி கலாமதி அவர்களும், திருமதி பி.றஞ்சினி அவர்களுடன் அணியின் பயிற்றுவிப்பாளர் எமது மண்ணின் திருமதி தங்கமலர் அவர்களும் அமர்ந்திருந்த வண்ணம் உள்ளனர்.

யாழ் பல்கலைகழகத்தில் பல்துறைகளில் பிரகாசித்த நீல் ஆம்ஸ்ரோங்

விடத்தல்தீவு திரு.திருமதி அருளப்பு தம்பதிகளின் புதல்வன் ஆம்ஸ்ரோங் என்று பலராலும் அறியப்படுகின்ற நீல் ஆம்ஸ்ரோங் அவர்கள் 20/08/1969 ஆண்டு பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருக்கிறார்கள். தனது ஆரம்ப கல்வியை எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் கற்றார்.

தொடர்ந்து தனது கல்வியை தொடர மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் இணைந்து உயர்கல்வியை நிறைவு செய்ததுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்.

ஆரம்பத்தில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் இணைந்து அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையாலான போட்டிகளில் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் யாழ் பல்கலைகழக உதைபந்தட்ட அணியில் இணைந்து 1990 - 1993 காலப்பகுதிகளில் சிறப்பாக விளையாடியதுடன் 1992 இல் இடம்பெற்ற அகில இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைகழக அணியில் விளையாடி, கொழும்பு பல்கலைக்கழத்துடனான இறுதிப் போட்டியில் 2 : 1 என்ற கோல் வித்தியாசத்தில் தங்கப்பதக்கத்தையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த இறுதிப்போட்டியில் திரு.ஆம்ஸ்ரோங் அவர்கள் தனது யாழ் பல்கலைக்கழக அணிக்காக ஒரு கோலையும் அடித்திருந்தமை மறக்கமுடியாத வரலாறாகும். அதுமட்டும்மல்லாமல் இக்காலப்பகுதிகளில் திரு. ஆம்ஸ்ரோங் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைகழக தடகள அணியிலும், *ping pong* அணியிலும், கூடைப் பந்து (*basketball*), அணியிலும் இடம்பெற்றதுடன், 110 m தடைதாண்டும் போட்டியில் 17. 5 *seconds* என்ற நேரக்கணக்கில் தடைதாண்டி அந்நாட்களில் பல்கலைக்கழக வரலாற்றில் புதிய சாதணையையும் பதிவுசெய்திருந்தார்.

அத்துடன் திரு. நீல் ஆம்ஸ்ரோங் அவர்கள் தடைதாண்டி ஓடும் போட்டியில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அனைத்து பல்கலைகழகங்களுக்கிடையிலான போட்டியிலும் இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கமும் பெற்று சாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.1988ம் ஆண்டு தொடக்கம் 1995 ம் ஆண்டுவரை திரு.நீல் ஆம்ஸ்ரோங் அவர்கள் உதைபந்தட்டத்தில் பிரகாசித்திருந்தார். தனது பாடசாலை மற்றும் பல்கலைகழக நாட்களை தவிர விடுமுறை நாட்களில் எமது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக சிறப்பாக விளையாடி எமது கழகத்தின் வெற்றிக்கு காரணகர்த்தாவாக இருந்துள்ளார்.

பண்டிவிரிச்சான் முத்துக்கள் மூன்று உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, அடம்பன், மற்றும் முருங்கன் பிரதேசங்களில் எமது ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்காக உதைபந்தட்ட போட்டிகளில் பங்குபற்றி எமது கழகம் வெற்றிவாகை சூடிய தருணங்கள் அதிகம். மன்னார் றோயல் கல்லூரியில் உயர்தர மணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நாடாத்தியதுடன் சின்னக்கடை கிறீன் பீல்ட் உதைபந்தட்ட அணிக்காகவும் உதைபந்தட்ட போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்.

இன்னும் திரு.நீல் ஆம்ஸ்ரோங் அவர்கள் எமது விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றியிருந்தார். இயல்பிலேயே அதீத கலை சார் திறமைகளை தன்னகத்தே கொண்டிருக்கும் இவர் கிற்றார் இசைக்கும் தனது அதீத திறமையை கொண்டிருப்பதும் , இனிமையான குரல்வழத்தால் பாடல்கள் பலவற்றை பாடியுள்ளமையும் இவரது சிறப்பம்சமாக இருந்துவருகிறது.

புலம்பெயர்ந்த நிலையில் நோர்வே தேசத்தில் தனது குடும்பத்துடன் வசித்துவரும் திரு. நீல் ஆம்ஸ்ரோங் அவர்கள் எமது ஊரின் பாடசாலை அடங்கிய பல பொதுவான விடயங்களுக்கு தனது உதவிக்கரத்தை நீட்டிவருகிறமை குறிப்பிடத்தக்கது.

மாகாண மட்ட விளையாட்டு விழாவில் தங்கம் வென்றார் அக்ஸ்சனா

எமது மன் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த மாணவி அக்ஸ்சனா அவர்கள் *12* வயதின் கீழ் பிரிவில் *60 m, 100 m* குறுந்தூர ஒட்டத்தில் முதலிடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டுள்ளார். இவர் எமது கிராமத்தின் காமலீற்றா, அமலநாதன் (நிக்ஸ்சன்) தம்பதிகளின் புதல்வியாவார்.

*2022*ம் ஆண்டு *13* வது மாகாணமட்ட விளையாட்டு போட்டியின் *12* வயதுப் பிரிவில் *100m* மற்றும் *60m* ஓட்ட நிகழ்ச்சியில் முதலாம் இடத்தை பெற்று சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
உடற்கல்வி ஆசிரியர் - திரு. றூபன் பெர்னான்டோ, பயிற்றுவிப்பாளர் - திரு. ஜோயல்

தேசியமட்ட மெய்வல்லுனர் *100m* , *80m* ஓட்டபோட்டி
சுகதாச விளையாட்டரங்கில் நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை தடகள சபையினால் *(Sri lak Athletic Club)* வருடாந்த தடகள சாம்பியன்ஷிப் *-2022 (Sri Lak Annual Athletic Championship -2022)* தேசியமட்ட மெய்வல்லுனர் போட்டி நிகழ்வில் *12* வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் பங்கேற்ற செல்வி *A.* அக்ஷனா அவர்கள் *100* மீற்றர் ஓட்டபோட்டியில் *2*ம் *(14.17)* இடத்தையும் ,*80m* ஓட்ட போட்டியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

வடமாகாண ரீதியில் முதலிரு இடங்களை பெற்று எம்மவர்கள் சாதனை

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் *2024* ம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் எமது ஜோசப்வாஸ்நகர்-- மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலை வீராங்கனைகளான செல்வி *A* அக்ஷனா அவர்கள் *14* வயது பெண்களுக்கான *80* மீற்றர் ஓட்டநிகழ்வில் முதலாம் இடத்தையும் செல்வி *.A.* லிப்னிக்கா அவர்கள் இரண்டாம் இடத்தையம் பெற்றுள்ளனர்.
பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் ஜோயல் சில்வா

தடகள போட்டியில் வீராங்கனை லிப்னிகா இரண்டாவது இடம்

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிந்த *2024*ம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் எமது ஜோசப்வாஸ்நகர், மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலை வீராங்கனை *A* .லிப்னிக்கா அவர்கள்
14 வயது பெண்களுக்கான *60* மீற்றர் ஓட்ட நிகழ்வில் இரண்டாம் இடத்தையும் *100* மீற்றர் ஓட்ட நிகழ்வில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அஞ்சல் ஓட்ட நிகழ்ச்சியில் தங்கம்

மன்/தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 12 வயது பிரிவின் பெண்கள் அஞ்சல் ஓட்ட அணி தமத 4×50 m ஓட்டத்தில் வடமாகாணத்தில் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

மெய்வல்லுனர் விளையாட்டு விழா - முருங்கன் மைதானம்

மேற்படி போட்டியில் எமது கிராமத்தின் திரு.திருமதி.அல்வினஸ் தம்பதிகளின் புதல்வி செல்வி. டெல்சிக்கா அவர்கள் 20 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் குண்டு போடுதல்,தட்டெறிதல் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தையும் ஈட்டி எறிதல் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். 21,22,23/06/2023 ல்
இதில் மன்/தோட்டவெளி G.T.M.S பாடசாலை சார்பாக மாணவர்கள் கலந்து கொண்டு 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் A.யதுர்சிக்கா ஈட்டி ஏறிதல் ,குண்டு போடுதல் ,தட்டெறிதல் ஆகிய நிகழ்ச்சி மூன்றிலும் முதலாம் இடத்தைப்பெற்று 18 வயது பெண்கள் பிரிவில் சம்பியனாக தெரிவுச்செய்யப்பட்டார். 20 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் A.டெல்சிக்கா குண்டு போடுதல் தட்டெறிதல் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தையும் ஈட்டி ஏறிதல் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

14 வயது பெண்கள் பிரிவில் A.அக்சனா 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 1ம்இடத்தையும் 60மீற்றர் ஓட்ட நிகழ்வில் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். அடுத்ததாக 100*4 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் 14 வயது பெண்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

மொத்தமாக ஒரு சம்பியன் ஆறு முதலாம் இடங்களும் ஒரு இரண்டாம் இடமும் இரண்டு மூன்றாம் இடங்களும் எமது பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றன.

சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார் எமது டெல்சிக்கா

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தினால் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை 22/10/2023 மன்னார் புனித லூசியா விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட பிரதேச ரீதியான மெய்வல்லுனர் போட்டியில் எமது மண்ணின் திரு.திருமதி அல்வினஸ் தம்பதிகளின் புதல்வியும் மன்/தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவியுமான செல்வி A.டெல்சிக்கா அவர்கள் குண்டு போடுதல், தட்டு எறிதல், மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்று சிறந்தவீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பரிதி வட்டம் வீசுதல் போட்டி நிகழ்ச்சியில் மாவட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண போட்டிக்கு தெரிவானார் டெல்சிக்கா.

BRONZE AWARD பெற்று கௌரவிக்கப்பட்டார் மரிய ஜெனிஸ்ரின்

Griffin collage London சர்வதேச பரீட்சை நிலையத்தால் நடாத்தப்பட்ட கர்நாடக சங்கீத வயலின் பரீட்சைக்கு *17* மாணவர்கள் தோற்றுவதற்கும் அவர்கள் அதிவிசேட சித்தியை, மேற்படி பரீட்சையில் பெறுவதற்கும் காரணமானவரும் என்ற வகையில் எமது மண்ணின் திரு. திருமதி ஞானமணி, மரியராணி ஆகியோரின் புதல்வியும் வயலின் ஆசிரியருமான திருமதி ராஜ்குமார் மரிய ஜெனிஸ்ரின் அவர்கள் *1/6/2025* நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் *BRONZE AWARD* வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

செல்வி எட்மன் ஜோசப் சிந்துசா பேர்ளின்

மன்னார் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரி மாணவியும் எமது கிராமத்தை சேர்ந்த செல்வி எட்மன் ஜோசப் சிந்துசா பேர்ளின் அவர்கள் அகில இலங்கை ரீதியில் *86* புள்ளிகளை பெற்று *15* வது இடத்தை பெற்றுள்ளார்.

கடந்த *2024* ஆம் ஆண்டு நடைபெற்ற கிறிஸ்தவ கற்கைநெறி உயர்கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பு இறுதிப் பரீட்சையில் முழு இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புனித யோசேவ் வாஸ் கல்லூரியின் மறைமாவட்ட நிலையங்களில் இருந்து மொத்தமாக தோற்றிய *87* மாணவர்களில் மன்னார் யோசேவ் வாஸ் கல்லூரி சார்பாக தோற்றிய *18* மாணவர்களில் எமது கிராமத்தின் திரு.திருமதி எட்மன் ஜோசப், மேரி ஆன் பெலிக்ஸ் ஆகியோரின் புதல்வி செல்வி சிந்துசா பேர்ளின் அவர்கள் *86%* புள்ளிகளை பெற்று *15* வது இடத்தை பெற்றுள்ளார்.

எமிலியானுஸ்பிள்ளை டெயான்சன் சார்ளஸ்

எமிலியானுஸ்பிள்ளை டெயான்சன் சார்ளஸ் *2010* ம் வருடத்தில் நடைபெற்ற கல்வி பொதுத்தர உயர்தர பரீட்சையில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்று வணிக துறையில் *2AB* சித்திகளை பெற்று மாவட்ட ரீதியாக 2 வது இடத்தை பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமிலியானுஸ்பிள்ளை டெலிஸ்ரன் நிஷாந்த்

விசேடமாக ஓர் திணைக்கள தலைவரால் வழங்கப்படும் பாராட்டு சான்றிதழ் *2* தடவை வழங்கப்பட்டது

2014. மாந்தை மேற்கு பிரதேச செயலரால் வழங்கப்பட்டது.

2023 மன்னார் நகர பிரதேச செயலரால் வழங்கப்பட்டது

இலண்டனில் உதைபந்தாட்ட அணியில் கிண்ணம் வென்ற எமது மைந்தர்கள்

மன்னார் நலன்புரிச்சங்கம் ஐக்கிய இராச்சியம் இலண்டனில் நடாத்தப்பட்ட *13* வயதிற்கு உட்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் எமது மன்னார் மாவட்ட அணி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

மேற்படி மன்னார் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய உதைபந்தாட்ட அணியில் எமது கிராமத்தின் திரு.திருமதி டொனைக்சன், தர்சினி தம்பதிகளின் புதல்வன் ஸ்ரெபான் அவர்களும், திரு.திருமதி சீத்தா டொறின், நந்தன் தம்பதிகளின் புதல்வன் கிறேஸ்ரன் அவர்களும் இடம்பெற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் கடந்த வருடம் இவ் மன்னார் அணிக்கு கிறேஸ்ரன் அவர்கள் தலமை தாங்கியிருந்தார். இம்முறையும் அணியின் தலைவராக எமது ஸ்ரெபான் அவர்களது தலமையில் மன்னார் அணி கிண்ணத்தை வென்றிருப்பது எமக்கும் எமது மண்ணுக்கும் பெருமையே.

“சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்”

“சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்” என்ற தலைப்பிலான தேசியளவில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்று தங்கம் வென்ற மண்ணின் சுஜாதா அவர்கள்.

தொழில் மற்றும் தொழிற் பயிற்சி முன்னாள் அமைச்சரான கௌரவ எம். எல். எம். அபுசாலி (பா.உ) அவர்களின் வழிகாட்டலுடன் சர்வதேசத் தொழில் நிறுவனத்தின் 75-வது ஆண்டு நிறைவினையும், பிலடெல்பியா பிரகடனத்தின் 50-வது ஆண்டு நிறைவினையும் கொண்டாடும் முகமாக

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அவர்களின் தலைமையின் கீழ் கடந்த 1994 ம் வருடத்தின் வைகாசி மாதம் 12-ம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9. 30 மணியளவில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் எமது கிராமத்தின் திரு.திருமதி எட்வேட் பூபாலசிங்கம் அடைக்கலமுத்து ஆகியோரின் மகளும் மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலையின் மாணவியுமான செல்வி சுஜாதா அவர்கள் தேசிய ரீதியில் தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் நடாத்தப்பட்ட கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை தொழில் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. நெவில் பியதிகம அவர்களின் அழைப்பின் பேரில் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தங்கப்பதக்கம் அடங்கலாக 18 பதக்கங்களை சுவீகரித்தது ஜோசப்வாஸ் ம.வி

மாகாண மட்ட விளையாட்டு போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் மன்/தூய யோசவ்வாஸ் ம.வி. வீரர்கள் 16 வயது பெண்கள் பிரிவில் 4×400m போட்டியில் தங்கபதக்கத்தையும் ,16 வயது ஆண்கள் பிரிவில் 4×400m போட்டியில் வெள்ளி பதக்கத்தை பெற்றுள்ளனர். ஐந்து நாட்கள் நடைபெற்ற விளையாட்டு போட்டியின் முடிவுகளின் அடிப்படையில் எமது வீரர்கள் மொத்தமாக 18 பதக்கங்களை சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

பயிற்சி ஆசிரியர் சதன் லெம்பேட், பயிற்றுவிப்பாளர் A.P. இம்மானுவேல்

மாகாண மட்ட விளயாட்டு போட்டி- 2022

மாகாண மட்ட விளையாட்டு போட்டி நிகழ்வில் எமது விடத்தல்தீவு மன்/தூய யோசவ்வாஸ் ம.வி மாணவர்கள் E.யெபா மற்றும் J.ஈசாக் ஆகிய இரு மாணவர்களும் 800m ஓட்ட போட்டியில் வெண்கலபதக்கம் பெற்றுள்ளனர்.

கல்வித்திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்ட ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம்

க.பொ.த. சாதாரண தர பரீட்சை (2021) 100% சித்தி பெற்றமைக்கு வடக்கு மாகாணத்தினால் 2022.12.11 இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை எமது மன்/ தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயம் விடத்தல்தீவு கௌரவிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வானது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இடம்பெற்றதுடன், இவ் கௌரவத்தினை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உயர்திரு. வரதீஸ்வரன் அவர்கள் எமது பாடசாலையின் அதிபர் திரு. ஜோண்சன். கியோமர் பயஸ் அவர்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சுமார் 100 பாடசாலைகள் கெரவிக்கப்பட்டன அவற்றுள் 22 பாடசாலைகள் கல்வி பொதுத்தர சாதாரண தர பரீட்சையில் 100% சித்தியை பெற்றது அதில் மடு வலயத்தில் எமது தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலயமும் உள்ளடக்கப்பட்டு இவ் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சமூக விஞ்ஞான போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு

மன்னார் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைக்கு இடையிலான நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் எமது மன் தோட்டவெளி அ.த.க பாடசாலை தரம் 11 மாணவி செல்வி தயானந்தன் தர்மிகா அவர்கள் தெரிவாகி மாகாண மட்ட போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளார்.

சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு 2024

சிறந்த நிலக்கடலை செய்கையாளர் விருதை வென்றார் எமது மண்ணின் மைந்தன் திரு. செ. யூட்றொசர் அவர்கள். விவசாய திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சு வடக்கு மாகாணம் இணைந்து மன்னார் மாவட்ட ரீதியில் சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்களுக்கான போட்டி ஒன்றை நடாத்தியிருந்தது.

மேறபடி சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டியில் எமது கிராமத்தின் திரு. செபமாலை. யூட்றொசர் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமையை கௌரவித்து சான்றிதழும் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 3 வது நிலையை பெற்ற ஆன் கில்டா

எமது கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி சூசைப்பிள்ளை, விக்டர் மேரிக்கலிஸ்ரா ஆகியோரின் புதல்வி செல்வி ஆன் கில்டா கடந்த வருடம் இடம்பெற்ற கா.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றி விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்று மாவட்ட ரீதியில் 3ம் நிலையைப் பெற்றுள்ளார்.

தேசிய மட்ட சதுரங்க போட்டிக்கு தெரிவானார் ஆர்த்மிகா.

2023/2024 ம் ஆண்டுக்கான மன்னார் மாவட்ட தேசிய இளையோர் சம்பியன்ஷிப் போட்டி 7/10/2023, 8/10/2023 புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியில் நடைபெற்றது. மேற்படி சதுரங்க போட்டியில் எமது மண்ணின் திரு.திருமதி ஜெயக்குமார், சுபோஜினி தம்பதிகளின் புதல்வி செல்வி ஆர்த்மிகா அவர்கள் 7 வயது பிரிவின் கீழ் இரண்டாவது இடத்தை பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

கரோல் பாடல் போட்டியில் ஜோசப்வாஸ் நகர் கீழ்பிரிவு இரண்டாவது இடம்.

மன்னார் மாவட்ட கலாசார பண்பாட்டு பெருவிழாவானது 13/9/2024 நகர மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் எமது மண்ணின் திருமதி டெனிஸ்ரின் சுபாஸ் சந்திரன் அவர்கள் 4 சான்றிதழ்களையும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

மன்னார் மாவட்ட மணி மாஸ்ரர் விருதுக்கான திருக்குறள் போட்டி 2024.

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் மாணவனும் எமது கிராமத்தின் திரு.திருமதி பிறேம்குமார், குமுதா தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன். பௌஸ்ரின் அவர்கள் பிரிவு 4 இல் மாவட்ட ரீதியாக முதலாவது இடத்தை பெற்று விருதையும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இரண்டாம் இடம் பெற்று தேசியமட்டத்திற்கு தெரிவு .

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையம் ஊடாக நடாத்தப்பட்ட திருவிவிலிய பேச்சுப்போட்டியில் செல்வி .றொ .டில்சிக்கா இரண்டாம் இடத்தைப்பெற்று தேசியமட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

மறைக்கல்வி வினாவிடை

மறைக்கல்வி வினாவிடை போட்டியில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை வென்ற எமது ஜோசப்வாஸ் நகர் மாணவ மாணவிகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட நிகழ்வு இடம்பெற்றது.

விவிலிய வினாவிடை

தேசியரீதியில் கடந்த வருடம் 2024ம் ஆண்டில் நடைபெற்ற விவிலிய வினாவிடை போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பதக்கங்களும் 12/1/2024 புனித அடைக்கல மாதா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியின் பின்னர் மாணவ, மாணவிகளுக்கு பங்குத்தந்தை அருட்பணி ஜெகானந்தன் அடிகளார் மற்றும் அருட்சகோதரிகளால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மூன்று தங்கப்பதக்கங்கள் உட்பட வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வெற்றி

2023 ம் வருடத்திற்கான தேசிய மட்டத்திலான விவிலிய வினாவிடை போட்டியில் எமது விடத்தல்தீவு பங்கு மாணவர்கள் மூன்று தங்கப்பதக்கங்கள் அடங்கலாக ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் ஏழு வெண்கல பதக்கங்களையும் அதற்கான சான்றிதழ்களையும் பெற்று எமக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

1.தங்கப்பதக்கம்.
செல்வி. டோல்டன் பிறின்ஸ் டிறைக்சா 96%
செல்வன். ஞானசீலன். ஜெனிஸ்லன் 92%
செல்வி. ஜெஸ்மன் றோச். நிருஷா 90%

2.வெள்ளிப்பதக்கம்.
செல்வி . கிறிஸ்துமேனன் மேரி நிஸ்மியா 85%

3.வெண்கல பதக்கம்.
செல்வி. சுரேந்திரன். சுகர்னியா 74%
செல்வன். பிறேமானந்தன். ஜோண் கலிஸ்ரஸ் 79%
செல்வன். ஜெயக்குமார். மெலோடியஸ் 73%
செல்வி. சுதாகர். ஆன் ஜஸ்மிக்கா 72%
செல்வன். சதானந்தக்குமார். சாருஜன் 72%
செல்வன். றெஜீஸ். றொகான் 70%
செல்வி. எமிலிபியாண்டா. எமோறினா 70%

மறையாசிரியர்கள் திருமதி போல்ராஜ். மேரி கிறீஸ்ரின் திருமதி. டோல்டன் பிறின்ஸ். இதயமலர் செல்வி. யேசுதாசன். ஜெயான்சி
பங்குத்தந்தை அருட்பணி லக்கோண்ஸ் அடிகளார்

விவிலிய வினாவிடை போட்டியில். 12 தங்கப்பதக்கங்களையும், 24 வெள்ளிப்பதக்கங்களையும், 6 வெங்கலப்பதக்கங்களையும் எமது மாணவர்கள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மும்மத ஒற்றுமைக்கான பிரதிபலிப்பு வரவேற்பு வளைவு திறந்துவைப்பு

மும்மதங்களும் தத்தமது மத விளிமியங்களுடன் ஒன்றாக வாழும் ஊரான எமது விடத்தல்தீவு பிரதான நுழைவாயிலில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவானது இன்றைய தினம் 15/01/2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:30 மணியளவில் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் எமது பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள், அருட்பணி டெனிக்கலிஸ்ரஸ் அடிகளார் ,விடத்தல்தீவு மண்ணின் மைந்தர்களாக பல்வேறு அரச அரசசார்பற்ற திணைக்களங்களங்களில் பதவி வகிக்கும் எமது ஊரவர்களும், அழைக்கப்பட்ட விருந்தினர் பலரும், கிராம மக்களும் வருகைதந்திருந்தனர்.

முன்னதாக பங்குத்தந்தை அருட்பணி லக்கோண்ஸ் அடிகளார், அருட்சகோதரிகள், குருக்கள் ஐயா அவர்கள், மற்றும் பள்ளிவாசால் மௌலவி ஜனாப் அவர்களும் சமூகம்தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் திட்ட அமுலாக்கத்தில் அமைக்கப்பட்ட இவ் வரவேற்பு வளைவானது பொறியியலாளரும், மண்ணின் மைந்தனுமாகிய திரு.சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

மேலும் இவ் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பலர் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகைதந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ் நிகழ்வில் பல்வேறு நிலைகளில் உதவிநல்கியவர்களும், நிர்வாக உறுப்பினர்களும், பொன்னாடை போர்த்தப்பட்டு ,நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

விடத்தல்தீவு ஊர் முக வளைவிற்கான அடிக்கல் நாட்டிவைப்பு

இலங்கையின் வடமேற்கே தன்னகத்தே பல அருமை பெருமைகளை கொண்டு மும்மதங்களும் தத்தமது மத விழுமியங்களுடனும் ஒற்றுமையுடனும் சிறப்பாக வாழும் இடம் மன்னாரில் எமது விடத்தல்தீவு என்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் திட்ட அமுலாக்கத்தின் ஒரு அங்கமான எமது ஊர் வரவேற்பு வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைக்கும் நிகழ்வானது இடம்பெற்றது.

18/03/2022 வெள்ளிக்கிழமை இன்றைய தினம் சுமார் *12:00* மணியளவில் அமைப்பின் செயலாளரும் மன் /தூய ஜோசப்வாஸ் ம.வி. அதிபருமாகிய திரு. ஜோண்சன் .கியோமர் பயஸ் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இவ் நிகழ்வின் முதல் நிகழ்வாக அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

அதன் அடிப்படையில் அமைப்பின் தலைவர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லொஸ் அவர்களும் ,விடத்தல்தீவு பங்குத்தந்தை சார்பில் வருகை தந்திருந்த எமது மண்ணின் மைந்தன் அருட்பணி டெனிகலிஸ்ரஸ் அடிகளாரும்,எமது ஊரின் கற்பக பிள்ளையார் கோவில் குருக்கள் ஐயா அவரகளும், விடத்தல்தீவு பள்ளி மௌலவி ஜனாப் அவர்களும்,வளைவு அமைப்பதற்கான திட்டமிடல் பொறியியலாளரும் மண்ணின் மைந்தனுமாகிய திரு. விமலேஸ்வரன் அவர்களும் மற்றும் எமது அமைப்பின் சிரேஸ்ட உறுப்பினரும் அமைப்பாளருமான திரு. இராசேந்திரா அவர்களும் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டணர்.

பின்னர்விடத்ததல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின்தலைவரால் அமைப்பின் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மும்மதங்களின் வழி பாடுகள் இடம்பெற்றது. பின்னர் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. அதனடிப்படையில் முதலாவது கல்லினை அருட்பணி டெனி கலிஸ்ரஸ் அடிகளார் அவர்களும்,இரண்டாவது கல்லினை குருக்கள் ஐயா அவர்களும், மூன்றாவது கல்லினை மௌலவி ஜனாப் அவர்களும் நாட்டிவைத்தனர்.

அதன் பின்னர் அமைப்பின் தலைவரால் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் அமைப்பின் புலம்பெயர் அமைப்பாளர் திரு. இராசேந்திரா அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பின்னர் ஊரின் முதியோர்கள் சார்பில் திருமதி மரியாம்பிள்ளை யக்கோவா அவர்கள் தமது 99 வது வயதில் அடிக்கல்லினை நாட்டிவைத்தார். தொடர்ந்து திரு .நீக்கிலாப்பிள்ளை. செபரெட்ணம் அவர்களும், பள்ளியின் மூத்த உறுப்பினர் சார்பில் ஜனாப் காலீத் அவரகளும், திரு ராதா வைரமுத்து அவர்களும் அடிக்கல்லினை நாட்டிவைத்தனர்.

இறுதியாக பொறியியலாளர் திரு. விமலேஸ்வரன் அவர்களும்,பள்ளியின் தலைவர் அவர்களும், மேற்கு மாதர் சங்க உறுப்பினர்களும் அடிக்கல்லினை நாட்டிவைத்து சிறப்பித்தனர். பின்னர் அமைப்பின் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் அழைக்கப்பட்ட விருந்தினர்கள், பொறியியலாளர் ,அமைப்பின் புலம்பெயர்ந்த மற்றும் புலத்திலுள்ள நன்கொடையாளர்கள் அனைவருக்கும்,அமைப்பாளர் இராசேந்திரா அவர்களுக்கும் அமைப்பின் ஏனைய உறுப்பினர்களுக்கும் நன்றிகளை கூறிக்கொண்டதுடன்

அழைப்பை ஏற்று வருகை தந்த கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள்,கிராம மக்கள் , கல்விமான்கள் அந்த வகையில் வருகைதந்த திரு. திருமதி. மரிய செல்வம் நொறிஸ் தம்பதியினர், மடு வலய உதவி கல்வி பணிப்பாளர் மண்ணின் மைந்தன் திரு. செல்ரன் அவர்கள் மற்றும் எமது மண்ணின் மைந்தன் அமல்ராஜ் ஆசிரிய ஆலோசகர் மடு வலயம் ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்

தேசிய ரீதியில் சாதனைபடைத்த எமது மண்ணின் மைந்தர்கள்

தேசிய ரீதியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் எமது ஜோசப்வாஸ் #நகர் வீரர்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்திய மன்/ தோட்டவெளி அரசினர்தமிழ்கலவன்பாடசாலையின் *12* வயது பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்ட அணி.இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது.

தேசிய ரீதியாக முன்னிலை வகிக்கும் பல மாவட்டங்களை உள்ளடக்கிய பல முன்னனி பாடசாலை அணிகளை புறம்தள்ளி மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலை அணி இரண்டாவது இடத்தை பெற்றிருப்பது எமக்கு பெருமையே.

அந்தவகையில் சாதனை வீரர்களான செல்வன் *M.*தஸ்வின், செல்வன் யூ.டிலோசன், செல்வன். *S.*சந்தோஸ், செல்வன். *A.*அனிஸ்ரன், செல்வன் *A.*அஜக்ஸ்சன். செல்வன். *R.*டிவ்வியன், செல்வன். *R.*அஸ்மியன். செல்வன். *J.*அஸ்வின், செல்வன். *K.*எதன், செல்வன்.*A.*ஆத்மிகன், செல்வன். *S.*ஆரோண், செல்வன்.*J.*இலக்கியன், செல்வன். *S.*அன்ஜலோ, செல்வன். *V.*விசாளன், மற்றும் செல்வன். *A.*அருண் ஆகிய வீரர்களை பாராட்டி வாழ்த்துகிறோம். பயிற்சி ஆசிரியர்கள் திரு..டிலைக்சன் மற்றும் திரு. சாள்ஸ்

துரித கணிதபோட்டியில் முதலாம், இரண்டாம் இடங்கள்

17-11-2022 வியாழக்கிழமை அன்றைய தினம் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற மன்னார் கோட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கான துரித கணிதப் போட்டியில் எமது #மன்/#தோட்டவெளி அரசினல் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த மாணவர் இருவர் #முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்றுள்ளனர்.

தரம் - இரண்டில் செல்வி, அல்வின் கமல்றாஜ் அபிரா இரண்டாம் இடத்தையும்,

தரம் - மூன்றில் செல்வன், யூட்றொஜர் யூட்ஸ்ரெபான் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மைலோவின் தெரிவில் எம்மவர்கள்.

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட திருவிழா தேசியரீதியில் மைலோ நிறுவனத்தால் நடாத்தப்பட்டது.

மேற்படி உதைபந்தாட்ட போட்டிகளில் மைலோ நிறுவனம் *6* வகையான திறன்களை உள்ளடக்கிய காணொளி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் எமது *12*வயது பிரிவு உதைபந்தாட்ட அணியின் வீரர்களான றொயிற்றன் ஸ்ரெபான் #டிவ்யன் அவர்கள் *POWER* திறனிலும், மெலிட்டஸ். தஸ்வின் அவர்கள் *GRIT* திறனிலும் உள்ளடக்கப்பட்டு காணொளியில் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த அணியாக தேசிய மட்ட போட்டிக்கு தெரிவான உதைபந்தாட்ட வீரர்கள்.

மைலோ கிண்ண இறுதிப்போட்டியில் எமது மன்/தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை *10 ,12* வயது உதைபந்தாட்ட அணிகள் போராடி தோற்றது. மேலும் *12* வயது பிரிவு அணியானது பார்வையாளர்களினதும், உதைபந்தாட்ட பயிற்சி ஆசிரியர்களினதும், விளையாட்டு அதிகாரிகளினதும் மனம்கவர்ந்த சிறப்பான அணியாக பாராட்டை பெற்றமை குறிப்பிடத்தக்கது. மன்னார், நானாட்டான் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற

சதுரங்க ஒற்றையர் பிரிவு போட்டியில் மாகாண போட்டிக்கு தெரிவானார் ஸ்ரெபான்

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட சதுரங்க ஒற்றையர் போட்டி பிரிவில் 11 வயது பிரிவில் நடைபெற்ற 6 சுற்றிலும் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவான எமது மண்ணின் திரு.திருமதி. யூட் றோயர் ,தீபா தம்பதிகளின் புதல்வன் செல்வன். ஸ்ரெபான்
11 வயதுப் பிரிவு
செல்வன். யூட் றோஜர். ஸ்ரெபான்.
(ஆறு சுற்றுக்களில் ஆறு வெற்றி) .

NORTHERN MASTER CHESS KINGDOM SCHOOL CHESS CHAMPIONSHIP 2023

சதுரங்க போட்டியில் யூட்றோஜர் ஸ்ரெபான் மன்னார் மாவட்டத்தில் மூன்றாவது இடம். மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் எமது மண்ணின் திரு.திருமதி யூட்றோயர், தீபா தம்பதிகளின் புதல்வன் ஸ்ரெபான் 9 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 3ம் இடத்தை பெற்றுள்ளார்

கிறிஸ்ரி திவ்வியன் சதுரங்க போட்டியில் மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் இடம்.
சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் எமது மண்ணின் திரு.திருமதி விமலேஸ்வரன், மரியா தம்பதிகளின் புதல்வன் கிறிஸ்ரி திவ்வியன் 11 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 2ம் இடத்தை பெற்றுள்ளார்,

10/11/2024 மன்னார் மாவட்ட ரீதியில் இலங்கை தேசிய இளையோர் சதுரங்க போட்டியில் எமது கிராமத்தின் திரு.திருமதி ஜெயக்குமார், சுபோஜினி தம்பதிகளின் புதல்வி செல்வி ஆத்மிகா அவர்கள் 7வயது பிரிவில் மாவட்டத்தில் முதன்மை நிலையை பெற்றுள்ளார்.

புனித சிசிலியா விருது .

மன்னார் மறைமாவட்ட கலையருவியால் 2015ம் ஆண்டு நடைபெற்ற கரோல் பாடல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று மன்னார் நகரசபை மண்டபத்தில் இயக்குநர் அருட்பணி நேசன் அடிகளார்,அருட்பணி றஜனிகாந்த் அடிகளார் சகிதம் சிசிலியா விருதுபெற்ற ஜோசப்வாஸ்நகர் பங்கு

மருத்துவர் ம. மதுரநாயகம்

கால்பந்து மருத்துவம், விளையாட்டு நிர்வாகம் மற்றும் சர்வதேச அடையாளப்படுத்தலில் முன்னோடி ஒருவர்

மருத்துவர் ம. மதுரநாயகம் இலங்கையைச் சேர்ந்த புகழ்பெற்ற விளையாட்டு மருத்துவ நிபுணரும் கால்பந்து நிர்வாகியுமாவார். தேசியம் தாண்டி, உலக அரங்கிலும் தனது சாதனைகளைப் பதிந்தவர். இவர் ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் (AFC) மருத்துவ அதிகாரி, ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும் தொற்று தடுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட முதல் இலங்கைத் தமிழர் என்பதோடு, இந்த நியமனம் நாட்டின் மற்றும் பிராந்தியத்தின் விளையாட்டு மருத்துவ வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்புமுனையாகும்.

கல்வி மற்றும் ஆரம்ப கால விளையாட்டு சாதனைகள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றபோது, கால்பந்தில் அவரது திறமை சிறப்பாக வெளிப்பட்டது. இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு சங்கம் (SLUSA), 2003 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்து போட்டிகளில் சிறந்து விளங்கியதற்காக SLUSA விருதை இவருக்கு வழங்கியது.

- தேசிய விளையாட்டு மற்றும் மருத்துவத்தில் பெருமைபடத்தக்க பங்களிப்புக்காக, மாத்தளை காந்தி சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை அரசாங்கத்தின் இரண்டாவது உயரிய குடிமகன் விருதான தேசமான்ய பட்டம் (2024) வழங்கப்பட்டது.
- தாய்லாந்தின் பாங்காக்கில், AFC, பாங்காக் மருத்துவமனை மற்றும் மஹிடோல் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய கால்பந்து மருத்துவப் பயிற்சிப் பணியில் பங்கேற்று பயணப் பெல்லோஷிப் விருது பெற்றார் (2020).
- கால்பந்து மருத்துவத்தில் இவரது பங்களிப்புகளுக்காக, FIFA தனது மருத்துவ நெட்வொர்க்கில் இவரது புகழைப் பதித்துள்ளது.
- AFC மருத்துவ அதிகாரி; AFC ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரி; AFC தொற்று தடுப்பு அதிகாரி
- AFC U23 சாம்பியன்ஷிப் 2020 – தாய்லாந்து மற்றும் AFC சாம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட பல்வேறு மேம்பட்ட சர்வதேச போட்டிகளில், வீரர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சுகாதார ஒழுங்குமுறைகளை உறுதி செய்யும் பொறுப்பில் இருந்தார்.
- FIFA வின் அதிகாரப்பூர்வ ஊடகங்களில், இவரது பட்டங்கள் மற்றும் பணி பற்றிய அங்கீகாரம்.
- இலங்கை மற்றும் ஆசியாவின் பல்வேறு நகரங்களில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக்கள் மற்றும் மரியாதை நிகழ்வுகள்.

குறுந்திரைப்பட விழா 2024.

செல்வி கிரிஜா அருள்பிரகாசம் அவர்களது இயக்கத்தில் “மெய்மை” குறுந்திரைப்படம்.
யாழ்ப்பாண பல்கலைகழக பொன்விழா கொண்டாட்டத்தின் ஒர் அங்கமாக ஊடகத்துறை யாழ் பல்கலைகழக ஏற்பாட்டில் குறுந்திரைப்பட விழா 2024 11/10/2024 கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட்டது .

மரியசெல்வத்தால் 25 வருடங்களுக்கு முன் யாழ் பல்கலைகழகத்தில் சாதனை

எமது விடத்தலூர் மண்ணின் மைந்தர்களும் யாழ்ப்பாண பல்கலைகழக கலைப்பிரிவு முன்னாள் மாணவர்களாக திகழ்ந்த திரு. திருமதி மரியாம்பிள்ளை றோசாமலர் (தங்கா) தம்பதிகளின் புதலவன் மரியசெல்வம் சுமார் 2000 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் திரு. மரியசெல்வம் அவர்கள் நான்கு தங்கப் பதக்கங்களை பெற்றிருந்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் Sports Council தலைவராகவும் செயல்பட்டடமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் 2000 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகம் மற்றும் கலைப் பீடத்தின் அனைத்து சுற்று செயல்திறனுக்காகவும் #பேராசிரியர் அழகையா துரைராஜா தங்கப் பதக்கத்தை எமது மண்ணின் மைந்தனும் ஜோர்தான் நாட்டில் UNICEF நிறுவனத்தில் பிரதம சிறுவர் பாதுகாப்பு அதிகாரியாகவும் பணியாற்றும் #திரு.#மரியாம்பிள்ளை. #மரியசெல்வம் அவர்கள் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இஸ்லாமிய நண்பர்களும் ஒன்றாக நாம் இணைந்தே இங்கே வாழ்ந்தோம்.
இடர்களும் துன்பங்களும் வந்தபோதிலும்
விவசாயம் செய்தே வென்றோம்!
விடத்தல்தீவு உறவு என்றும் மாறாது –
அட எங்கு சென்றாலும் இந்த சொந்தம் விலகாது!
ஆலமர்கள் பரவும் மீண்டு,
பரிகாரங்கள் பலவாக உண்டு;
கோவிலொன்றும் இங்கே என்றும் உள்ளது.
கலைக்கூடம் இரண்டு உண்டு,
கல்விமாணவர்கள் பலரும் உண்டு.
கலைஞர்களும் என்றும் இங்கே உள்ளனர்,
வைத்திய நிபுணர்களும் உண்டு,
பொறியியல் நிபுணர்களும் உண்டு.
போதித்தலும் ஆசான் பலவும் இங்கே உள்ளனர்.
விடத்தல்தீவு உறவு என்றும் மாறாது –
அட எங்கு சென்றாலும் இந்த சொந்தம் விலகாது!

ஊருக்கு போகின்றேன்

~ மஸாஹிரா கனி ~

==================

ஊருக்குப் போகின்றேன்
உடையாத நினைவோடு

காலாற நடை நடந்து
மனமாற கதை பேச
பள்ளமடுப் பாலம்
நாயா ஆற்று நீர் கை அசைக்க

ஆனா, ஆவன்னா
அரவனைத்து அறிவு தந்த
அலிஹார் பள்ளி காண
ஆசையுடன் அமர்ந்து அங்கே -

கணிக்காத சில கணக்கும்
கண்டு களித்த கனவுகளும்
விஞ்ஞான கூடத்தின்
தொக்கி நிற்கும் - ஆவர்த்தனம்.

எழவாய் - பயனிலையும்
எதுகை - மோனைகரளும்
எழுந்து நின்று ஒப்பிக்கும்
என் கணக்கு தப்பாமல்

மனையியல். கூடமும்
மாற்று வழி கொட்டகையும்
மாணவ மன்றத்தின்
கவித் தலைப்பை வாசிக்க
ஊருக்கு போகின்றேன்
உடையாத நினைவோடு

என் குச்சி குடிலுக்குள்
உரல், உலக்கை அம்மியுடன்
பணை ஓலை பெட்டிகளும்
பெட்டகமும், வட்டாவும்
குளக் கரையின் மறுகரைக்கு
மாராப்பு முட்டை கட்டி
படிக்கட்டில் நானமர்ந்து
பழய கதை பேச
உம்மாவின் கை பட்ட.
மண்பானை சட்டி எல்லாம்
தயிர் கடைந்த நெய்வாசம்.
மணம்வீசும் இடம்காண

பசு ஈன்ற வெண் நாகு
விசுவாசமாய் எனை பார்க்க
பூவரசு மர நிழலோ
ஏக்கமுடன் எனை நோக்க

அன்றாட அடுப்புக்கு
சுடராக விறகு தந்த
கன்னா காட்டை
கண்ணாற கண்டு வர

ஊருக்கு போகின்றேன்
உடையாத நினைவோடு

குடி தண்ணி கிணற்றுள்ளே
பல வாளி அடிபட்டு
குடம் சுமந்த குமரிகளாய்
கூடி நின்று கதை பேச

சங்கக்கடையும், சரிந்து நின்ற
பூவரசும் சுந்தாரத்தார்
உழகலப்பை
சுபைர் நாநா மாட்டுவண்டி
சுகம் கேட்டு உறவாட

ஊருக்குப் போகின்றேன்
உள்ளார்ந்த நினைவோடு

ஊசி மல்லிகையும்,
காசித்தும்பையும்
மாதுளையும், கொய்யாவும்
மாறுபடிவா -எனக்கூற
மறக்காமல் கதை பேச
பள்ளிக் காலமதில்
அந்த நாள் பருவத்தின்
அவனும், அவளும் கொண்ட
காதலின் மீதிக் கதை-கேட்க
ஊருக்குப் யோகின்றேன்
உடையாத நினைவோடு.
வயல் வெளியின்
கதிரெல்லாம்
என வரவேற்று தலை
அசைக்க
நெல் அறுத்த கிளி வந்து
நேற்றய கதை சொல்ல

உப்பளத்து கீறல்களால்
பாதத்து ரணம் அன்று
இறால் ஓடைக் கரைதனை
ஒரு முறை காண்டு வர

ஒழுக்கமும்,ஓதலும்
ஒப்புவித்த ஓதும் பள்ளி
பள்ளயாக் குன்று
பாசித் தண்ணியுடன் கதை
பேச
ஐயனார் கோயில்
அட்சனைத் தட்டும்
மாதாகோவில்
மணியோசையும் மறவாத
இடம் காண
கடலோரக் கனவுகளும்
குட்டூறு வெள்ளோர
எட்டூரும் மீன் கொடுக்கும்
எம்மூரின் கதை பேச

ஊருக்குப் போகின்றேன்
உடையாத நினைவோடு
ஆலமரக் குயிலும்
அதில் அமற்தே மைனாவும்
என் வரவை பார்த்திருக்க
ஆறஅமர அழகாக் கதை பேச

ஒற்றை வடலியிடம்
ஒப்பிவித்த கதை கொஞ்சம்
ஒருவருக்கும் தெரியாமல்
ஓசையின்றி கேட்டுவர

ஊருக்குப் போகின்றேன்
உடையாத நினைவோடு.....

ஓலைக்கிடுகெடுத்து
உன் வீட்டுக் கூரை வேய
மரநிழலின் விருந்தோம்பல்
ஒற்றுமை இடம் தேட ;;

சுதந்திரக் காற்றும்
சுத்தத் தமிழும்
வஞ்சமற்ற நெஞ்சுரமும்
விருந்தோம்பல் பண்புகளும்
;;

முழுதாய் விட்டுச்சென்ற
என் மூதாதயர் ஆசி பெற
ஊருக்குப் போகின்றேன்
உடையாத நினைவோடு ;;

உள்ளத்தில் உந்தி நிற்கும்
ஊர் நினைவு போகுமட்டும்
.....
வருவாயா?
என்றுமட்டும் கேட்காதீர்
விரும்பிய நிறை வாழ்க்கை
திரும்பி வரும் வரைக்கும்

நான் ....
ஊருக்குப் போகின்றேன்
உடையாத நினைவோடு ;;

நம்ம அந்த விடத்தலூரு கதையக்கேளு - நீல் ஆம்ஸ் ஸ்ட்ரோங்

நம்ம அந்த விடத்தலூரு
நம்ம ஊரு கதையக்கேளு-
தோழா நீயும் தோழா-
நம்ம விடத்தலூரின் புகழப்பாடு- தோழா நீயும் தோழா-
கடற்கரையில் நடந்த கதையைச் சொல்வேன் நீயும் கேளு -
எங்கள் கடைத்தெருவில் நடந்த கதையை சொல்றேன் நீயும் கேளு-
பள்ளமடுக்குளத்தில் நடந்த கதை கேளு -
எங்கள் பள்ளமடுக்குளத்தில் நடந்த கதை கேளு-
இந்தப் பொன்மாலை நேரத்தில் -
நம் நாட்டின் சங்கதியை - பண்பாடிச்சொல்லப்போறேன் நீயும் கேளு-
நாளாந்தம் போய் வந்தோம்- கடலுக்குள்ளே போய் வந்தோம்- ஏராளம் மீன்கள் அள்ளி அள்ளி வந்தோம்-

நாங்கள் நாளாந்தம் போய்வந்தோம்- வயலுக்கும் போய் வந்தோம்-வேளான்மை செய்து நெல்லுக்கொண்டு வந்தோம்-

நம்ம ஊரு கதையக்கேளு தோழா நீயும் தோழா .....
அடைக்கலம் அன்னையும் சந்தியோடு மையோரும்-
எமை நாளும் காத்து நின்ற கதை சொல்வேன் நீ கேளு-
பள்ளி வாசலிலும் பிள்ளையார் கோவிலிலும் -
நோன்புக்கஞ்சியும் பொங்கல் சோறும் உண்ட கதை கேளு-
றம்ழான் திருநாள் என்றல் ஊருகக்கெல்லாம் பலகாரம்- நந்தாரும் தீபாவளியும் ஊரே சேந்து கொண்டாடும்-
ஜாதிமதபேதம் இல்லா ஊரு நம்ம ஊரடா -
காக்கா குருவி கூட வியந்து நிற்கும் பாரடா -
நம்ம ஊரு கதையக்கேளு-
தோழா நீயும் தோழா-

தண்ணிக் குடம் கொண்டு பெண்கள் வரும் அழகைப்பார்-
அதை சந்திக்கட்டுக்கட்டி பார்த்து நிற்கும் காளையர் பார்-
நொங்கு வண்டிக்கதை கேளு- சீட்டாட்ட கதை கேளு-
புதுக்கட்டில் *Football* விளையாடிநின்ற கதை கேளு -
கோவில் மணியோசையும் பள்ளி பாங்கோசையும் -
நாளாந்தம் கேட்டு நிற்கும் அதுதான் எங்கள் ஊரடா-
திருந்தாதி அடித்த பின்ன வீட்ட போனா அடி விழும் -
செபமால சொன்ன பின்தான் இரவுச்சோறு மடி விழும்-

மீரான் காக்க கடையும் இருந்தது-
மகுறுப் கடையும் இருந்தது-
காறுமேன் காக்கா புடவக்கடையும் இருந்தது-

அந்தோனிப்பிள்ளையரும் வெள்ளச்சிலுவையரும் -
இசைகள் வாசிக்க கேட்டு நின்றோமே-
அடைக்கலம் ஐயாவும் சவிரியப் அண்ணயும் -
நாட்டுக்கூத்துக்கள் கட்ட பார்த்து நின்றோமே-
கணபதி அண்ணயின்ர சைக்கிள் கடையும் நீபாரு-
ஆசமுத்து அண்ணையின்ர சலூன் கதையும் நீ கேளு-
ஆடிக்காற்றில் பட்டம் விட்டு மகிழ்ந்து நின்ற ஊரடா-
நம் ஊரப் போல ஒரு ஊரே இங்கு இல்லடா

சுமந்தவளை நாம் சுமப்போம்

வ. நிஷாந்தான்

==================

படைத்தவனும்
படைத்திட்டான்
பாரினிலே
பாவி எம்மை

பத்து மாசம் எம்மை சுமந்தாள்
பத்திரமாய் தாய் எம்மை

எம் தாயை சுமந்தவள் நீ
என்னவென்று உன்னை மறப்போம்

தவண்டு நாம் திரிகையிலும்
தடம் பதித்து நடக்கையிலும்

தடுமாறி விழுந்திடாமல்
தாங்கியே சுமந்தவள் நீ

படிப்பதற்கு பள்ளி தந்தாய்
படிப்பிக்க நல் ஆசான் தந்தாய்

குளிப்பதற்கு குளம் தந்தாய்
குடிப்பதற்கு நல்
நீர் தந்தாய்

பணம் சேர்க்க கடல் தந்தாய்
பயிர் செய்ய வயல் தந்தாய்

வந்தோரை வாழ வைத்தாய்
வாயார புகழ வைத்தாய்

வயிறார உணவளித்தாய்
வாய்க்கு ருசியா மீன் தந்தாய்

பழகிடவே நல் பண்பு தந்தாய்
பண்பான மனிதர் தந்தாய்

எம்மையும் சுமந்தவள் நீ
எம் பிள்ளைகளையும் சுமக்கின்றாய்

பரம்பரையாய் வாழ்கின்றோம்
பார் எல்லாம்
பரவி விட்டோம்

படைத்தவனை மறந்திடினும்
பாவி மகன் உன்னை மறவேன்

எம்மை நீ சுமந்ததனால் உயிருள்ளவரை உன் நாமம்
நாம் சுமப்போம்

சுமந்தவளை சுமந்துடுவோம்
பாரெங்கும் போற்றிடுவோம்

சுறா கறியும் சுட்ட கருவாடும்

வ. நிஷாந்தான்

சுறா கறியும்
சுட்ட கருவாடும்

குட்டூறு கறியும்
குஞ்சு கணவாய் பொரியலும்

அரிசி மா பிட்டும்
அடுக்கடுக்காய் குழல் புட்டும்

பெரியமடு மாம் பழமும்
பெரிதான பிலா பழமும்

பழங்கஞ்சியும்
பானையில் அவித்த ஓராவும்
பனையோர காத்தும் பானையில் கள்ளும்

வெள்ளை பிட்டி மண்ணும்
வெள்ளி பார்த்த வானும்

அட்டத்தீவு பிட்டியும்
அதில் இருக்கும் முயலும்

பள்ளமடு குளமும்
படுத்துறாங்கும் ஆலமர நிழலும்
குடித்தண்ணி கிணறும்
கூடி நின்ற சனமும்

வயல் வெட்டு காலமும்
வயலினிலே சமையலும்

கொடுவா பள்ளமும்
கொம்புத்தூக்கி ஆறும்

கல்லோடை கல்லும்
கரையினிலே இறாலும்

மர வள்ளமும்
மறைந்திருந்த பூச்சியும்

கண்ணா காடும்
கண் திறந்த கிளி குஞ்சும்

சல்லி கடலும்
சண்டையிடும் மீன் கூட்டமும்

மத்தேஸ் அப்பா கடையும்
மருந்து பெட்டியும்

மீரான் காக்கா கடையும்
மீன் காசை நம்பி கடனும்

வையித்தியசலையும்
வாங்கியஊசிகுத்தும்

கழுத்து பிடிப்பும்
கால் ஏலா சின்னப்பையா வைத்தியமும்

கண்டி வலையும்
கைநிறைய காசும்

பள்ளி பருவமும்
பட்டம் விட்ட காலமும்

மரங்களில் கோழியும்
மறைந்து பிடித்த நேரமும்

திருவிழா காலமும்.
திரும்பி பார்க்கும் காதலும்

நோன்பு காலமும்
நோன்பு காஞ்சி ருசியும்

பிள்ளையார் கோவிலும்
பிட்டு உண்ட வடையும்

விளையாட்டு கழகமும்
விடாத வெற்றியும்

இன்னும் எத்தனை எத்தனை இன்பங்கள்
கிடைக்குமா? இனிவரும் காலங்களில்

அலிகார் எனும் அமுத ஊற்றே!

வி.எம்.காசிம்

அலிகார் எனும் அருங்கலை நிலையம்
அமுத ஊற்றாய் விளங்கிய தன்று
கலையக சரித்திரம் பெருமை மிக்கது
கல்விப் போதனையில் முதலிடம் பெற்றது

தகைமையும் திறமையும் மிக்க நல்லதிபர்கள்
தந்த நற் பணிகளால் கலையகம் உயர்ந்தது
முன்னோடியாகக் கலை யகம் உயர
முயன்ற சான்றோர் அனைவர்க்கும் நன்றி

அதிபர் பதவி வகித்தோர் அனைவரும்
அர்ப்பணிப் புடனே நற்பணி செய்தனர்
ஆசிரியப் பணி செய்தோர் அனைவரும்
அரும் பெரும் கல்விப் போதனை செய்தனர்

உபகரணங் களின் குறைபாடு நீக்கியே
உரிமைகள் சமமாய் மாணவர்க் களித்தனர்
தம்மிடம் வந்த மாணவர் தமக்குத்
தக்கபடி நல் லுதவிகள் செய்தனர்

ஆசிரியத் தொழில் சார்ந்த முறைகள்
அனைத்தும் நீங்கிட வழிவகை செய்தனர்
அனைவரும் ஒரு தாய் மக்கள் போலவே
அன்புடன் பழகியே கல்வி புகட்டினர்

ஆசிரியர் செய் பணியினை ஒழுங்காய்
அவதானிக்கவும் முறைமை வகுத்தனர்
பெற்றோர் ஆசான் அதிபர் தம்மிடையே
உற்ற நல் லிணக்கம் மலர்ந்து சிறந்தது

புரிந்துணர் வுடனே கருமங்கள் நடந்தன
புத்துயிர் பெற்றது மாணவர் கல்வி
ஒழுக்க சீலத்தில் உயர் பண்புகளில்
விழுப்பம் அடைந்தனர் மாணவர் அனைவரும்

பழைய மாணவர் குழாம் ஆற்றிய
பயன் தரும் பணிகளை கலையகம் பெற்றது
பெற்றோர் ஆசான் கூட்டங் களிலே
படிப்பின் தேவை உணர்த்தப் பட்டது

சாந்தம் தவழும் அலிகார் கலையகம்
தமக்கே சொந்தமாய்க் கலைப்பணி செய்தது
கல்வியே செல்வம் கல்வியே வாழ்வென
அறிஞர்கள் பலரை ஆக்கிய கலையகம்

உம்மு ஹபீபா தவமணி கிறிஸ்ரி
ஒரு தாய் பிள்ளை போல் அன்புடன் பழகினர்
இன நல்லுறவுக் கிலக் கணமாக
எங்கள் கலையகம் இயங்கியது அன்றோ!

விடத்தல் தீவின் விந்தைமிகு மருந்தகம்.

பொனிப்பாஸ். "ஊர்க்குருவி"

அம்பலத்திற்கு அருகில்
ஆரம்பமான வீதியின்
அருகிலோர் இத்திமரம்
அதனருகில் சிறியதோர்
ஆதிகாலக் கட்டிடம்
ஆஸ்பத்திரி எனும்பெயரில்.

உவர்காற்றின் தாக்கத்தால்
உலர்ந்துபோன சுவர்களும்
களிமண்ணும் காட்டுக்கல்லும்
குடைமார்க் ஓட்டுடன்
காட்டுமரக் கூரையும்
காட்டியதே பழமைதனை

முற்றிய காட்டுமரம்
முறையாய் தறித்தெடுத்து
சீராய் செப்பனிட்டு
செய்த தூண்கள்பல
நிறமதுவும் சாம்பலாய்
நின்றனவே கம்பீரமாய்

நோயாளர் அமர்ந்திட
நீளமான வாங்குகளும்
இருபுறம் கையுள்ள
இலகுவான இருக்கைகளும்
வந்தோர் இளைப்பாறும்
வராண்டாவும் இருந்ததுவே

வந்திடுவார் வைத்தியர்
வாரத்தில் சிலநாட்கள்
வருத்தம் என்று வருவோரை
வரிசையாய் பரிசோதித்து வாங்கிடவே
மருந்தினை
வழங்குவார் துண்டொன்று

வந்த நோயாளரை
வைத்தியரிடம் காட்டியே
நோயாளர் தேவைகளை
நாசூக்காய் கூறியே
அவசிய பணிசெய்தார்
அரச இரத்தினம் என்பவரே

பெப்பர்மன் ருசியில்
பருகிட ஓர் மருந்து
பச்சைக் கசப்பாய்
பருகிட சில மருந்து
ருசியது ஏதுமின்றி
தண்ணிபோல் ஓர்மருந்து

கண்ணாடிக் குவளைகளில்
கலர்கலராய் மருந்துண்டு
வயிற்றுலி காய்ச்சல்

வாந்திபேதி நெஞ்சுவலி
குணமாகக் கலந்துகலவை
கொடுத்திடுவார் சின்னையாவும்

பல் வருத்தம் என்று
பதறிப்போய் வருவோர்க்கு
பஞ்சில் மருந்துதோய்த்து
பல்லிடுக்கில் சரியாய்வைத்து
பல்வலி நீங்கிட
பணியும் செய்தாரே

சொறிசிரங்கு படர்த்தி என
சொல்லிக்கொண்டு வந்தோர்க்கு
களியொன்று வெள்ளையாய்
கடதாசியில் மடித்து
களுவியபின் பூசு என
கலவையாளர் தந்திடுவார்

காயத்துடன் வந்தோரை
கவனமாய் இருத்தியே
காயமதை சுத்தமாக்கி
கவனமாய் மருந்திட்டு காயமதை ஆறவைத்தார்
இராசரெத்தினம் என்பவரே

வெட்டுக் காயத்திற்கும்
வேதனை தெரியாமல்
தையல் போட்டு
தரமான மருந்திட்டு
ஆறவைத்தே காயமதை
அளப்பரிய சேவைசெய்தார்

கை,கால், மூட்டுவலி
கடுமையான இடுப்புவலி
கண்டுமே வருவோர்க்கு
கறுவாத் தைலம் போல்
களி பூசித் தேய்த்திடுவார்
கௌது காக்காவும்.

அரசன் உயரம் என்றால்
அதைவிட சின்னையா
இராசரெத்தினம் இங்கே
இருவருக்கும் சமமாக
கொஞ்சம் குள்ளமாய்
கௌதும் அங்கிருந்தார்

நோய் என்று வந்தோரை
நோகாமல் மனமதுவும்
உயர்வான சேவை தந்த
உன்னத மருந்தக
நினைவலை என்றும்
நீங்காதே மனதைவிட்டு.

ஒற்றைப் பனை
~ மஸாஹிரா கனி ~

செவ்வானம் கீழ்த்திசையில்
செங்கதிரோன் கிளர்ந்தெழும்ப
ஒருஜோடி ஓலைஅசைவுறு தென்றல்
பனங் கூடல் அழகொழிர;;

ஆணி வேர் ஊன்றி
மண்ணறுத்து உறுதியுடன்
விண்ணுயர வாழ்ந்தோங்கி
சர சரத்த சாரலதாய்;;

பள்ளமடுப் பாதையிலே
பரம் பரையாய் நீ... வாழ
விதை, விதைத்தோம் ... அன்று
விருட்ச்சமாய் .... இன்று ;;

அன்றிலுடன், அணில் பேச
குயில் கூவி மரம் தாவ
என் ஒற்றைப் பனை மரமே
உன் .. விந்தை என் என்பேன்;;

உன் வேர் முதல் நார்வரை
பயனாகும் மனிதனுக்கு
காலத்தின் தேவையாய்
பலன் தரும் பக்குவமும்;;

சுற்றி வர வேலிகட்ட
மட்டையும், ஓலையும்
சுவர் எழுப்பி மனையமைக்க
கப்பும், கைமரமும்;;

குருத்தோலை பிரித்து
ஈக்கில் கிழித்து
பல வண்ணமிட்டு
பாய் , பெட்டி இழைத்து;;

பிட்டவிக்க நீத்துப் பெட்டி
சமையலுக்குஅஞ்சறைபெட்டி
நெல் அரிசிக்கு கடகப்பெட்டி
காசுவைக்க தைலாபெட்டி;;

வளம் கொழிக்கும் எம் ஊரில்
வளமாக வளர்ந்திருந்தும்
பணப் பயிர் இது என
கனம் பண்ணவில்லை அந்நாளில்.......;;

குளிப்பதற்கு குளம் நோக்கி
பனை, பனையாய் பழம்தேடி
உடையார் கேணியும்
அய்யனார்கோயில் மதகடியும்;;

ராமன்குளமும், புலியாகம்மும்
தட்டாம் பிட்டியும்
கொம்பு தூக்கியும்
பனம் பழம் பொறுக்க;;

கால் நடந்த கதை சொல்ல.....

எவ்வூர் சென்றிடினும்
எம்மூர் போலில்லை
பனைகள் அங்கில்லை
பனங் கள்ளும் அங்கில்லை;;

பனங்கள்ளும், பதநீரும்
பனங்கற்கண்டாய் மாறியே
பனம்பழமும், பலகாரமும்
பனாட்டும், பனங்கழியும்;;

வெயில்கால வியர்குரு
நுங்கு குடித்து
தண்ணீர் தேய்க்க
விரைந்தோடிடும் விந்தை;;

கூடலின் நடுவே
கூட்டாய் ஒன்று கூடி
நுங்கு வெட்டி, நோண்டி
குதூகலமாய் குடித்தகாலம்;;

பருவகாலப் பங்குனியில்
பனங்கிழங்கு, தவன்கொட்டை
தவனது உள்ளீடு
தேனமுது எங்களுக்கு;;

பச்சை, புழுங்கலாய்
காயவைக்கும் கிழங்குதனை
மாவாகப் பதனிட
உருசியான ஒடியற் கூழ்;;

இத்தனையும் வழங்கி நிற்க்கும்
என்..... ஒற்றைப் பனைமரமே...

இளமைப் பூங்காற்று
உன் போல் பூப்பூக்க
அற்றை நாளதனில்
ஆனந்த கூத்தாட;;

உள்ளம் நினைந்த ஒன்று
ஊருக்குச் சொல்லாமல்
உன் மேல் வரைந்து வைத்தேன்
உறவொன்றை அந்நாளில்;;

ஊர் துறந்த வேளையிலே
நான் உனைநிமிர்ந்து பார்க்கையிலே......!

கருக்கு மட்டையால்
கழுத்தறுத்த உணர்வாய்
நீ.... ஊமையாய் அழுதகுரல்
ஓலைச் சரசரப்பாய்....
இன்னும் .. என் .காதுகளில்;;

மௌனமாய்... நீ
உன் மனம் போல் உயர்ந்திருக்க;;

விரதமாய்.... நான்
விடயங்கள் கூறி நின்றே
விடை கொடுத்து பிரிந்தே......

உனதான என் நாட்கள்
மௌனமாய்.......
என் ஒற்றைப் பனை மரமே........!!!

இறால்.........
தாசீன்

விடத்தல் தீவின் கல்லோடை
இறைவன் தந்த அருட்கொடை

கல்லோடை முதல்
கள்ளியடி வரை

கல்லோடை முதல்
பாப்பாமோட்டை வரை

சிற்றாறுகள் பல
சின்ன ஓடைகள் பல

சின்ன குடாக்கள்
பெரிய குடாக்கள்

அவற்றிற்கு பெயருண்டு
அடையாளம் காண்பதற்கு

கண்ணாப் பற்றைகளும்
கண்டல் காடுகளும்

சதுப்பு நிலமும்
சடை முளைகளும்

காக்கா கூடுகளும்
கொக்கு கூடுகளும்

கிளி பொந்துகளும்
மைனா பொந்துகளும்

வெள்ளை சிப்பிகளும்
கருப்பு ஊரிகளும்

சிவப்பு சிறுநண்டுகள்
கருநீல பெருநண்டுகளும்

இயற்கை சாகியத்தை
இறக்காமல் காத்திட

அடைக்கலம் அக்காவும்
ஆயிஷா ராத்தாவும்

தாவீது அண்ணாவும்
தாவுது காக்காவும்

பாஸ்கரன் தம்பியும்
கிரிகரன் தம்பியும்

வேவியும் தேவியும்
பற்றிமாவும் பாத்துமாவும்

நாமும் எமது பெற்றோர்களும்
எமது பெற்றோர்களின்
பெற்றோரும்

இதிலிருந்து வாழ்வாதாரத்தை
பெற்றனர்

கடல் வற்றினை அறிந்து
காற்றின் திசையினை அறிந்து

அமவாசை பௌர்ணமியென
காலத்தையும் அறிந்து

சந்திரனைப் பார்த்து
கடல் வற்றினை கணிப்பர்

யூரியா பேக்கினை
இடுப்பில் கட்டி

செருப்பின்றி
சேறு சுரி தாண்டி

ஆற்றில் இறங்கி
ஆழமாக இருந்தாலும்

வெறும் கையினால்
வெகு நேரத்தில்

துள்ளி திரியும் இறாலினை
துள்ளியமாக பிடிப்பர்

வெள்ளை இறால்
கருப்பு இறால்

மட்டை இறால்
மள மள வென

கலக்கு என்றால்
கட கட வென

வெற்றுப்பையை நிறப்புவர்
வெற்றிலை பாக்கு உண்டு

வெற்று வாயில் அசைபோட்டு
வெற்று வயிற்றின் பசிபோக்கி

கருத்த நண்டின்
கடிவாங்கி கதரும்போது

கொழுத்த நண்டின்
கொடுக்குத்தான்

காலின் கட்டைவிரலை
கடித்தபடி களட்டிய கொடுக்கு

கலிமா ராத்தாவின் கதறலை
கத்தரீன் அக்கா கண்டு

களற்ற வேண்டு மென்று
கடித்தாள் கொடுக்கினை

களைந்தது பூட்டு
களர்ந்தது கொடுக்கு

கடலில் கை வைக்க பயம்
காசு தேவை கை நிறைய

டசின் கணக்கில் பிள்ளைகுட்டி
டபிள் செலவு சித்து

பை நிறைய இறால்
கை நிறைய பாரம்

செபமாலை சம்மாட்டி
சலமோன் சம்மாட்டி

கொட்டிலிலே இறாலை
கொட்டி

இறாத்தல் தராசினில்
இறாலை இடைபோட்டு

ராசிக் நானவிற்கு
ரசீதும் கிடைத்தது

சம்மாட்டி வீட்டினில்
சாயிமானம் சல்லியும்

கை நிறைய காசு
கைச் செலவு செய்திட

வீறு நடைபோட்டு
வீடு வந்து சேரும்

முதல் தேவையில்லை
முத்து ஐயாவிற்கு

முயற்சிதான் தேவை
முகமட் நானவிற்கு

பாடசாலை லீவு காலத்தில்
பக்குவமாய் மாணவரும்

பழகிடுவர் இறால் பிடிக்க
பணம் சேர்த்திடுவர்

புத்தகம் வாங்கிடுவர்
புதிய பேனா வாங்கிடுவர்

விடத்தல் தீவு என்பது
வித்தியாசமான ஊரு

64 புயலில் பள்ளிவாயல்
குளத்தில் இறால் இருந்ததாம்

பள்ளமாடு ரேட்டில்
பக்கதிலுள்ள துருஸடியின்

பள்ளங்களில் இறால்களை
பானைகளில் பிடித்தனரே

கோவாலி கட்டு ஆற்றில்
கோலகலமாய் குடும்பமாய்

இறால் பிடித்தனரே
இறால் சோறு ஆக்கினரே

இறால் ரொட்டி
இறால் வற்றல் போட்டனரே

எல்லார் வீட்டினிலும்
எல்லா மரக்கறியினுள்ளும்

இறால் தூள் போட்ட
இறால் தேங்காய் சம்பல்

அந்தகால அம்மாக்களின்
அஜின மோட்டோ

அந்த இறால் தூள்
அதி வாசம் அதி சுவை.

அம்மாவின் நண்டுக்கூழ்.
“ ஊர்க்குருவி “. பொனிப்பாஸ்.

கட்டுத் திருக்கைதனை
கீர் கீராய் கூறுபோட்டு
கிளி மீனும் வெட்டி
காலுடைத்த நண்டினையும்
கழுவிச் சுத்தம் செய்து
கலந்திட்டு பானையிலே
காரியம் ஆரம்பிப்பாள்
கூழ்காச்ச அம்மாவே.

சீரகம் பெருஞ்சீரகம்
சிறிதாய் கொத்தமல்லி
மிளகுடன் மஞ்சளும்
மிளகாயும் சேர்த்தெடுத்து
அம்மியில் வைத்தரைத்து
ஆக்கிய மசாலாவும்
கலந்தே அளவாய் உப்பும்
கரைத்திடுவாள் பானையிலே.

முற்றத்தில் அடுப்பமைத்து
மூன்றுபக்கம் விறகுவைத்து
யானைமார்க் குச்சியால்
யாகம்போல் தீ மூட்டி
அடுப்பில் பானைவைத்து
அமர்ந்துமே வட்டமாய்
காத்திருப்போம் சகலரும்
கூழது கொதிக்கும்வரை.

கால்மணி நேரத்தில்
கொதித்திடுமே கூழது
கம கம வாசனையும்
காற்றிலே கலந்துவர
கண்டவர் நா ஊற
கூழ்காச்ச அன்று நீ
காட்டிய கைவண்ணம்
கனவிலும் தெரியுதம்மா.

பதமாய்க் கொதித்த கூழ்
பக்குவமாய் இறக்கிவைத்து
குண்டாளக் கோப்பைகளில்
கூழ் நிரப்பி அளவாக
நண்டுக் கூழ்தனை
நா ஊறக் குடிக்கவைத்த
அன்னையே உன்நினைவு
அகலாதே மனதைவிட்டு.

அடியில் மிஞ்சியதை
அளவாய் ருசிபார்த்து
அன்றுதந்த நண்டுக்கூழ்
அடிமனதில் தேங்கியதே
ஊற்றித்தர நீயுமில்லை
ஊரிலே நாமும் இல்லை
கூடிநாம் ஊர்தனில்
கூழ்குடிக்கும் நாள் வருமோ.

சுடுகின்ற நினைவுகள்

எம் ரீ எப் அமீர்

சுடுகின்ற நினைவுகள்.......
ஓர் ஊர் ஆகையினால்
ஒன்றாக உறவாடினோம்.
தாயும், பிள்ளையும் போல்....
சொந்தங்களும் ஒன்றாய்
நண்பர்களும் சொந்தம் போல்.....
சொந்தங்களைப் பிரிந்து
நட்புக்களை இழந்து
இதயத்தில் சோகங்களைச் சுமந்து
எங்கோ பல ஊர்களில்
உயிர் காக்கக் காலடி வைத்தோம்....
ஓர் ஊர் என வாழ்ந்தவர்கள்
பல ஊர்களிலும்....
சென்ற சென்ற இடங்களில்
சிதறுண்டு வாழ்ந்தனர்....
சொத்துக்கள் சிதைந்தன.
சொந்தங்கள் சிதறியது.
கலாச்சாரம் கை நழுவியது.
கல்வி சீரழிந்தது.
நட்புக்கள் திசை மாறியது.....
ஓர் ஊர் என வாழ்ந்த எம்மவர்கள்
பல ஊர்களுக்கும்,
அகதி என்ற முத்திரையுடன்
விதைக்கப்பட்டனர்......
புலம் பெயர்ந்தோர்,
புலத்தில் மீளக் குடியேறியோர்,
புத்தளம் நகரிலும்,
அல்-ஜித்தா, கரம்பை,
ஹுசைனியாபுரம், இருபத்தைந்து
ஏக்கர்,
குருநாகல், பாணந்துறை,
பகுதிகளிலும்,
தோட்டவெளி கிராமத்திலும்,
கொழும்பு மா நகரின் பல
இடங்களிலும்.......
இங்கு அறுவடையாகும் விதைகள்
இன்னும் நாட்டின் எட்டுத்திக்கிலும்.
இப்புதிய விதைகளுக்குத் தெரியாது
எமது பூர்வீகம் விடத்தல் தீவென....
சொந்த மண்ணை இழந்து,
மாற்றான் மண்ணில் அகதியாக....
சொந்த மண்ணில்
வேற்றூரான் காலூன்றி
சொந்தக்காறன் செல்லும் வேளை
சொந்த ஊர் எது என
வேற்றூரான் கேட்க
என் மனம் எரிமலையாய்
வெடிக்கின்றது...
புதிய இருப்பிடத்தில்
புதிய சொந்தங்கள் உருவாகியது.
பழைய சொந்தங்களும்
பழைய நட்புக்களும்,
மறக்கடிக்கப்பட்டது.
பெண் கொடுத்து, பெண் எடுத்த
திருமண பந்தத்தால்
திசை மாறியது உறவு.....
சொந்த ஊரில்
அனைத்து வீட்டிலும்
அனுமதி இன்றி நுளையும் விசா
எமக்குண்டு.....
இங்கு அயலவர் வீட்டில் நுளைவதற்கு
அழைப்பு மணி அளுத்தியபின்
அனுமதிக்காகக் காத்திருக்கும் விசா...
சிறகடித்துப் பறந்து திரிந்த எமக்கு
கூண்டிற் கிளியாக...
பத்துப் பேச் காணிக்குள்
சிறகை விரித்துப் பறக்கவே
பாவி எமக்கு வழியில்லை.....
மூன்று பிள்ளை பெற்றவர்கள்
முப்பது பேச் காணி,
வீடு வாங்க
மூன்று×(முப்பது+முப்பது) இலட்சம்
காணி, வீடு வாங்கக் காசேது ?
கட்சி ஒன்றே என்ற எம்மிடம்
கண்டவன்,
கண்டவன் கைகளில் கட்சி தாவும்
அரசியல்.
கை நீட்டாத எம்மவரை
கை நீட்டப் பழக்கிய அரசியல்.
கட்சி வெல்ல
இனங்களுக்கிடையே
முட்டி, மோதப் பழக்கிய அரசியல்.
சுய நல அரசியல் ஆனதுவே....
இன்னும், இன்னும்
காலம் போகப், போக.......
இருக்குது எமக்குப் பிரட்ச்சினை....
கடந்த கால நினைவுகள்
கண் முன் தோன்றும் வேளையிலே
என் மனம் சுடுகின்றது.........

நடந்து வந்த பாதை

ஜனகம் ஜெகநாதன்

நடந்து வந்த பாதை
கடந்து போனகாலங்களில் நாம்
நடந்து வந்த பாதைகள் இன்று
பறந்து போய் விட்டதோ இல்லை
மறந்து தான் போனோமா? நாம்
தினம் குளிக்க ஒரு மைல் நடந்தோம்
மனம் கனக்கும் நேரமில்லை ஆங்கே
மனதிற்குப் பிடித்த நண்பர்களைக்
காணின்
கனத்த சுமையது கடிதில்
பறந்திடுமே
நடந்தோம்
பள்ளமடுக்குளம் பச்சையாய் வற்றி
விடும்
உள்ளவே உள்ளதே உடையான்
கேணி
உதலிப்பழமரமேறிக் குத்திய
உடமுள்
உடனடி தேய்த்த எச்சில் வைத்தியம்
ஊர்ந்தூர்ந்து நடந்தோம்
மொங்கனார் குளம்
முழுகச் சென்றோம்
நொங்குமரச்சோலை
கடந்து வந்தோம்
அங்கு குளமில்லை
நீருமில்லை
அருகில் பூவல் பள்ளங்களில்
படுத்துக்குளித்து
வாதம் நோக நடந்தோம்
காட்டிலே பாலைப் பழம்
பனையோலைப்
பெட்டியோடு மேட்டுப்பக்கம்
இலைந்தைப்பழம் வாட்டும்
வெப்பம்
வழி தெரிந்த இடமெங்கும்
நடந்தோம்
அட்டைத்தீவு சற்று
அருகில் தானே
ஆற்றில் பாயும்
நீரில் இறால்
பிடிக்க
அற்றுப்பறந்து
அவசரமாய் நடந்தோம்
நீரெடுக்கப் போகும் ஊற்றாங்கரை
நெடுந்தொலைவாய் தெரியாது
நிழலாற
அங்கு மரமோ கிடையாது
நிதானித்து வர நேரமும் பத்தாது
நடந்தோம்
கண்ணாக்காடு விறகும் கல்லாய்
குத்தும் மூச்சு வேர்
முள்ளும் கிள்ளும் பாதமதை
கண்ணை மறைக்கும்
புழுதிக் காற்று
எம்மையும் தள்ளும்
நடந்தோம்
உப்பும் ஊரியும்
சுமந்தோம்
ஊரோடு உறவாட
ஊரையும் சுமந்தோம்
காலணியில்லாக் காலால்
காலமாகிப்போகும் வரை
நடந்தோம்
சொல்லிக்கொள்ள
வளமற்ற வரண்ட நிலமது
சுற்றியுள்ள காடும் களனியும்
கடலும்
கண்ணாப்பற்றையும்
கொண்டலும்
வாடையும் சோழமும்
தென்றலாய் தந்த
இதம்கண்டு நடந்தோம்
இன்று வைத்தியரோ
நடநடவென்கிறார்
அன்று நாம் நடந்த
நடை அவருக்குத் தெரியுமா?
அரைமணியாவது
நடவென்கிறார்
வெறுந்தரையில்
நடக்கத்தள்ளாடும்
காலது தவிக்கிறது
தான் நடந்த பாதையை
நினைத்து
ஏனோ ஏங்குகிறது

பள்ளமடுக் குளம் எங்கள் சமத்துவப் பிறப்பிடம்.

ஜனகம் ஜெகநாதன்

விடத்தல் எல்லையிலே
சடைத்த நல் மருதக் காவுடனே
வடலியும் பனையுமாய்
வயற் காடு சூழ்ந்து காண
தெளிபுனல் வானம் காட்டும்
எங்கள் பள்ளமடுக்குளம்.

மாரி காலத்தில்
நிறை மாதக் கர்ப்பிணியாய்
நீர் நிறைந்து நிற்கும் - ஆங்கே
துள்ளி விளையாடும்
மீன் குஞ்சுக்கூட்டமும்
நீர்ப்பாம்பு குட்டியுடன்
நீச்சல் பழகுமே...

வழிப்போக்கர் கால்கழுவி
மருத மரத்தடியில்
உட்கார்ந்து அளவளாவ
குடை நிழல் போல்
உவந்தளிக்கும்.
நீராடும் குழந்தைகளும்
கரையின் விளிம்பில் நின்றே
பாத்திரத்தால் நீரெடுத்து
ஓப்பிச்சா! ஓப்பிச்சா! - என்று
குரலெழுப்பி நீராடுவார்.

ஆண்களும் பெண்களுமாய்
அவரவர் கரை நின்று
வேடிக்கைக் கதை பேசி
கூடிக் குளிக்கையிலே
கடிகார முள்ளும்
அது காட்டும் நேரமும்
ஓட்டப் பந்தயத்தில்
ஓடிக் களிக்குமாம்....

துணிமணி அலச வந்தோர்
துவைத்துவிட்டு பிழிந்தெடுத்து
செடிகள் மீது உலரவைத்தே
பக்குவமாய் அதை மடித்தே
வீடுசேர்வார் சோர்வின்றி..

சனிக்கிழமையென்றாலே
ஊராரும் உற்றாரும்
உவப்புடனே குளம் நோக்கி
அதிகாலை கருக்கலுடன்
பைய நடைபயின்று
பெய்யும் பனிமறந்து
கூடி வருவார்......
மாட்டு வண்டிகளில் -
பொருத்திய
காளை மணிச்சத்தம்

ஜல் ஜலென்று சவாரி போக
அதிகாலை அமைதியும்
அதிர்ந்து போம்....

மருத மரமேறிக் குதிக்கும்
மந்திகள் போல
பயமறியா இளைஞரும்
நீச்சலுடன் மனம் நிறைந்து
குளிரதனைப் போக்கிடவே
கூச்சலுடன் குதித்தெழுவார்.
உடுத்த சாரமதில்
அடைத்த காற்றுடனே
முட்டைபோல இடுப்பில் கட்டி
நீந்துவார் களிப்புடனே.....

இந்துக்கள் இசுலாமியர்
இவர்களுடனே
கிறிஸ்தவ நண்பர்களும்
ஒற்றுமையாய் தாயொன்றின்
மதலைகள் போல அவரும்
மகிழ்ந்து நிற்பார்.
ஒற்றைக் காலில் நின்றே
தவமிருக்கும் கொக்குகளும்
ஏற்ற நல் மீன்பிடித்து
மகிழ்ந்து செல்லும்.....

சமத்துவத்தின் இருப்பிடமாய்
நிலைத்து விளங்கும் எங்கள்
பள்ளமடுக் குளமது
விஞ்சும் தன் அழகுதனை
இயற்கையது காட்டி நிற்கும்
பன்புல்லும் மூங்கில் போல
ஓங்கி நிற்கும்.
ஆங்காங்கே தவளைகளும்
அரட்டி நிற்கும்...
பதுங்கி நிற்கும் பாம்புகளும்
அதைப் பிடித்து
மகிழ்ந்துண்ணுமே.

மறக்கமுடியுமோ
பள்ளமடுதனை
மறப்பாரும் உள்ளராயின்
மகத்துவமே இல்லை என்பேன்........p
சமரசப் பூங்கா......

விடத்தல் என் ஊர். பெனடிற் பொனவெஞ்சர்.

கோடையில் வரண்டிருக்கும்
ஓடைகளில் நீர் இருக்கா
அன்பு என்ற சொல்லிருக்கும்
அது பாசத்துடன் கலந்திருக்கும்.
கணபதியும் கஸ்பாரும்
காதருடன் கதைபேச
பஸ்ராண்டு ஒன்றிருக்கும்
கந்தையா கடை இருக்கும்
தம்பர் கடையினிலே
மூக்கரிக்கும் தூள் இருக்கும்.

மத்தேசர் கடையினிலே
மிட்டாசுதான் இருக்கும்
சின்னத்தம்பி கடையினிலே
இன்சுவை தேனீர் இருக்கும்.
மீரான் கடையிருக்கும்
பலசரக்கு நிறைந்திருக்கும்
கடைத்தெருவை நாடிவரும்
பெருங்கூட்டம் அங்கிருக்கும்
மாதா ஆலயமும் யாகப்பர் ஆலயமும்
பள்ளிவாசலுடன் பிள்ளையார் கோவிலும்
மறை உணர்வை வளர்த்திடும்
பாங்கான தலங்கள் உண்டு.

யக்கோ கடல் சென்று
கடல்படும் திரவியமாம்
விளமீனும் ஓராவும்
பாலையும் பாரையும்
வகைவகையாய் மீனினம்
கொண்டுசேர்ப்பர் அனுதினம்

வயல் வெளியின் படங்களை
வாறிடும் மரைக்காரும்
அறுவடை செய்து
நடையுடன் வீடு வருவர்.

தோட்டத்துக் காணிகளில்
படர்ந்திருக்கும் காய்கறிகள்
பக்குவமாய் அதை அறுத்து
பாங்குடன் விற்பாரே
பாஸ்கரதாஸ் என்பவரும்.

சோறுண்டு நல்ல மீனுண்டு
இலை கறியும் அங்குண்டு
பெரியமடு மாம்பழமும்
எம்மூரே களித்திருக்கும்
சத்தியம் இது சத்தியம்.

வளைவு சுளிவுகள் எமக்கில்லை
வளைந்து கொடுக்கும்
நல்ல மாண்பு காண்பீர்
நுளைந்துபோக சூரியக்கீற்றும்
நற்காவல் பதியும் நம் ஊர்தானே.

கண்ணாப் பற்றை - விடத்தலீ கன்னிமலர் செல்வம் (செபமாலை)

விடத்தல்தீவு எனும்
சிறு கிராமத்தில்
அடியாளும் ஒருத்தி
இங்கு வாழ்ந்தவள்நான் என்று அதை
உரக்கச் சொல்வதில்
எனக்கு மகிழ்ச்சி
இது மூன்று பக்கமும்
கடலால் சூழப்பட்டது
விடத்தல்மரங்களையும் கொண்டுள்ளதால்
இதற்கு விடத்தல்தீவு
எனும் பெயர்
வந்ததோ
இங்கு கிறீஸ்தவர்கள்
முஸ்லீம்கள்
இந்துக்கள் என்று
மூவின மக்களும்
வாழ்கின்றார்கள்
. ஆகா
விடத்தல்தீவினை
நினைத்தாலே எனது
உள்ளம் குமுறுகின்றது
பசுமையான நினைவுகள்
இனிமையான
எண்ணங்கள் இங்கு
நின்று இதன் காற்றை சுவாசித்துப்
பார் கதை சொல்லும்
சுத்தமான காற்றும்
சுத்தமான உள்ளங்களும்
வாழ்ந்த காலம் அது
தெரியுமா உங்களுக்கு
மூன்று சமூகங்கள்
அன்பாக வாழ்ந்த காலம்
அறிந்தவர்களுக்கு
அமிர்தம்
பள்ளமடுக்குழத்திற்கு ஒருமைல் வரை
நடந்த காலம்
தலையில் தண்ணீர்க்
குடம் சுமந்து
அன்புச்சண்டை
போட்டு வந்தகாலம்
இந்தக்காலத்தில்
வாழ்ந்த எங்கள்
வாழ்க்கை இனிமையிலும் இனிமை
மாதா கோவில் மணி
ஆறு மணிக்கு
அடித்ததும் திருப்பலிக்கு
ஓடிச்செல்வோம்
திருப்பலிமுடிந்து
வீட்டிற்கு வந்து
உள்ளதை உண்டு
வெள்ளை சீருடை
அணிந்து
பாடசாலைக்கு
புறப்படுவோம்
அது அப்போ
றோமன் கத்தோலிக்க
தமிழ் கலவன்
பாடசாலையாக
இருந்தது
இப்போ பெயர்
மாற்றம்
பெற்று விட்டது
பாடசாலைக்கு
நேரத்துடன்
செல்லவேண்டும்
எட்டு மணிக்குப்
பிந்தினால்
வாசல்க் கதவைப்
(கேற்றை) பூட்டி
விடுவார்கள்
பின்னர்
இராயப்பு அதிபரும்
பெனடிற் மாஸ்ரரும் வந்து கையை
நீட்டச்
சொல்லி பிரம்பினால்
இரண்டு அடி அடித்து
உள்ளே போகச்
சொல்வார்கள்
எட்டு மணிக்கெல்லாம்
ஒழுங்காக வரி வரியாக வெள்ளை
சீருடைகளில்
அணி வகுத்து நிற்க
கடவுள் புகழ் பா
தொடங்கும் இறைவனைப் பாடித்
துதித்து அனைவரும்
வகுப்பறைக்குள்
செல்வோம்
இராயப்பு அதிபரும்
பெனடிற் மாஸ்ரரும்
பொலீன் ரீச்சரும்
அல்வீனஸ் ரீச்சரும்
அமீன்மாஸ்ரரும்
அரியம் மாஸ்ரரும்
இம்மானுவேல் மாஸ்ரரும்
யாழ்ப்பாண ஆசிரியர்களும்
பாடம் கற்ப்பித்த
காலம் அது
கல்வித் தகுதிகளிலும்
விளையாட்டுத்துறைகளிலும்
பாடல் போட்டிகளிலும்
தழைத்தோங்கிய
காலம் அது
குரு முதல்வர்களாக
றெஜீஸ்ராஜநாயகம்
அடிகளாரும்
ஜெயசேகரம் அடிகளாரும் இருந்த
காலம்
விடத்தல் மண்ணின்
எழிற்சிக்காலம்
விழாக்கோலம்
பூண்ட காலம்
ஒளி விழாக்களும்

பட்டிமன்றங்களும்
விளையாட்டுப்போட்டிகளும் போட்டி
போட்ட காலம்
உழவு வண்டிகளில்
ஏறி விளையாட்டுப்
போட்டிகளுக்கு
சென்ற காலம்
கிறீஸ்தவர்கள்
முஸ்லீம்கள்
இந்துக்கள் என்ற
பேதம் இல்லாமல்
அனைவரும் ஒன்றாக
ஆடிப்பாடிய காலம்
ஒன்றாக உணவு உண்ட காலம்
அப்போ கிராம
சேவகராக திரு
இஸ்சதீன் G S
இருந்தார்
அவரின் தலைமயின்
கீழ் விளையாட்டுப்
போட்டிகளுக்கு
அடம்பன் வரை
சென்ற காலம்
வெற்றி வாகை சூடி
வந்து ஊரைச் சுற்றி
வெற்றி முழக்கம்
இட்ட காலம்
ஊர் மக்கள் எல்லாம்
ஒன்று திரண்டு
பாடசாலைக்கு முன்
நிமிர்ந்து நின்று
எங்களை வாழ்த்திய
காலம்
கால்பந்தாட்டம்
வலைப்பந்தாட்ட
மைதானத்துக்குள்
இளையோர் முதியோர்
என்று கூடி நின்று
கூச்சல் போட்ட காலம்
இந்தக் காலத்தில்
விடத்தல் மண்ணில்
வாழ்ந்தவர்கள்
இருந்தால் இரை
மீட்டிப் பாருங்கள்
ஆகா ஆகா
இனிமை இனிமை
அது மட்டுமா
மூன்று பக்கமும்
கடலால் சூழப்பட்ட
ஒரு அழகிய தீவு
கடல் அலை அடித்துக்
கரை ஒதுங்கும்மீன்கள்
மழை பெய்து
வெள்ளம் எடுத்தால்
இறால்கள் கரையில்
துள்ளி விளையாடும்
இறால் முட்டைகளை
காலால் மிதித்து
விளையாடியகாலம்
கண்ணாப் பற்றைகளைப் பற்றி
கேள்விப்பட்டிருப்பீர்களா
கடலுக்குள் கண்ணாப் பற்றைகளின் அழகு
வள்ளங்களும்
போட்டுகளும்
அழகழகாக அணி
வகுத்து நிற்கும்
வலைகளை கரையில்போட்டு
நண்டுகளும்
மீன்களும் இறால்களும் தெரிவு
செய்வார்கள்
இவற்றை வாங்குவதற்கு வரும்
மூவினத்தோர்
களை கட்டும்
கடற்கரை
அது மட்டுமா
வள்ளங்களை பழுது
பார்ப்பவர்கள்
வள்ளங்களைக்
கடலுக்குள் இறக்குபவர்கள்
வள்ளங்கள்
செய்பவர்கள் என்று
ஒரு பகுதி
காட்சி அளிக்கும்
கண்ணாப் பற்றைகளின்
சிறப்பைப் பார்த்தால்
இந்தப் பற்றைகள்
வளர்ந்து மரங்களாகும்
இந்த மரங்களை
வெட்டி வந்து வெய்யிலில் காய
வைப்பார்கள் பின்பு
இவற்றைப் பட்டைகளாகத்
தட்டுவார்கள்
இந்தப் பட்டைகளை
தண்ணீரில்போட்டு
அடுப்பில் கொதிக்க
வைத்தால் இது
சிவப்புக் கலராக
மாறி வரும் இதனை
புதிதாக வாங்கும்
வலைகளுக்கு சாயம்
இடுவார்கள்
வெள்ளை வலைகள்
சிவப்பாக மாறிவிடும்
வெய்யில் காய வைத்து பின்
கடலுக்கு கொண்டு
செல்வார்கள்
இந்த வலைகளை
நடுவதற்கு தேவையான கம்புகளையும்
இந்தக் கண்ணாப்
பற்றைகளே தருகின்றன
கண்ணாப்பற்றைகள்
வளர்ந்து மரங்களாகியதும்
இதனை கண்டல்
மரங்கள் என்றழைப்பார்கள்

இதனை வெட்டி வந்து
சீவிக் காய வைத்து
இந்தக் கம்புகளை
கடலுக்குள் வலைகளை நடுவதற்கு
பயன்படுத்துவார்கள்இயற்கை அன்னை
எங்களுக்குத் தந்த
அளவில்லா
செல்வங்களிவை
ஆலமரங்களையும்
அரச மரங்களையும்
தந்த மண்
நெற்செய்கைக்குரிய
வளங்களைத் தந்த மண்
மூன்று கால போகங்களிலும்
விளைச்சலைத் தந்த
மண்
இங்கு வாழும்
மக்களுக்குத் தேவையான உணவு
வகைகளை இங்கேயே பெற்றுக்
கொள்வோம்
மறப்போமா எங்கள்
மண்ணை
வளங்கள் பல நிறைந்த விடத்தலம்
பதியை மறக்க முடியுமா
புலம் பெயர்
நாட்டிலிருந்து
ஏங்கித் தவிக்கின்றேன்
அடைக்கலமாதா
ஆலயமும்
யாகப்பர் ஆலயமும்
கடைத்தெருக்களும்
கடற்கரையோரங்களும்
ஓடி ஆடித்திரிந்த
இடங்கள்
நெஞ்சில் சுகமான
வேதனையைத்
தருகின்றன
விடத்தல்தீவில்
வாழ்ந்தோர் பலர்
உள்ளனர்
அநுபவித்தவர்கள்
சிலர் உள்ளனர்
இவற்றையெல்லாம்
அறிந்தவர்களும்
உள்ளனர்
அறியாதவர்களும்
உள்ளனர்
எங்கள் விடத்தலம்
பதியினைப் பற்றி
அறியாதோர்
அறிந்து கொள்ளுங்கள்
தெரியாதோர்
தெரிந்து
கொள்ளுங்கள்
இவற்றில் நானும்
பங்கு கொண்டவள்
நான்உணர்ந்தவற்றை
அறிந்தவற்றை
கண்களால்
பார்த்தவற்றை
உங்களுக்குத்
தெரிவிப்பதில்
மிக்க மகிழ்ச்சி
அடைகின்றேன்
விளையாட்டுப்
போட்டிகளிலும்
பாடல்போட்டிகளிலும்
கல்வியிலும்
வெற்றி வாகை
சூடியவர்களில்
நானும் ஒருத்தி
என்னை
அறிந்தவர்களுக்கு
நன்கு தெரியும்
காலத்தின்
கட்டாயம் நாங்கள்
ஒருசிலர்
நாடு விட்டு நாடு
வந்து விட்டோம்
பள்ளித்தோழர்
ஒரு சிலர்
இறைவனடி
சேர்ந்து விட்டார்கள்
இருப்பவர்களும்
சிதறிப் போய்
இருக்கின்றார்கள்
ஆனாலும்
எங்கள் விடத்தல் மண் தற்போது
பல கல்விமான்களையும்
வைத்தியர்களையும்
அதிபர்களையும்
ஆசிரியர்களையும்
பல அரச ஊளியர்களையும்
தந்து ஆலமரமாகி
விழுதாகித்
தாங்கி
நிற்கின்றது
எங்கள்
விடத்தலம்பதி
அன்னை
இருகரம் நீட்டி
இளைஞர்களை
வரவேற்க்கின்றாள்

பள்ளமடு குளம்

பெனடிற் பொனவெஞ்சர்.

பள்ளமடுக் குளம் எங்கள்
சமத்துவப் பிறப்பிடம்

விடத்தல் எல்லையிலே
சடைத்த நல் மருதக் காவுடனே
வடலியும் பனையுமாய்
வயற் காடு சூழ்ந்து காண
தெளிபுனல் வானம் காட்டும்
எங்கள் பள்ளமடுக்குளம்.

மாரி காலத்தில்
நிறை மாதக் கர்ப்பிணியாய்
நீர் நிறைந்து நிற்கும் - ஆங்கே
துள்ளி விளையாடும்
மீன் குஞ்சுக்கூட்டமும்
நீர்ப்பாம்பு குட்டியுடன்
நீச்சல் பழகுமே...

வழிப்போக்கர் கால்கழுவி
மருத மரத்தடியில்
உட்கார்ந்து அளவளாவ
குடை நிழல் போல்
உவந்தளிக்கும்.
நீராடும் குழந்தைகளும்
கரையின் விளிம்பில் நின்றே
பாத்திரத்தால் நீரெடுத்து
ஓப்பிச்சா! ஓப்பிச்சா! - என்று
குரலெழுப்பி நீராடுவார்.

ஆண்களும் பெண்களுமாய்
அவரவர் கரை நின்று
வேடிக்கைக் கதை பேசி
கூடிக் குளிக்கையிலே
கடிகார முள்ளும்
அது காட்டும் நேரமும்
ஓட்டப் பந்தயத்தில்
ஓடிக் களிக்குமாம்....

துணிமணி அலச வந்தோர்
துவைத்துவிட்டு பிழிந்தெடுத்து
செடிகள் மீது உலரவைத்தே
பக்குவமாய் அதை மடித்தே
வீடுசேர்வார் சோர்வின்றி..

சனிக்கிழமையென்றாலே
ஊராரும் உற்றாரும்
உவப்புடனே குளம் நோக்கி
அதிகாலை கருக்கலுடன்
பைய நடைபயின்று
பெய்யும் பனிமறந்து
கூடி வருவார்......

மாட்டு வண்டிகளில் -
பொருத்திய
காளை மணிச்சத்தம்
ஜல் ஜலென்று சவாரி போக
அதிகாலை அமைதியும்
அதிர்ந்து போம்....

மருத மரமேறிக் குதிக்கும்
மந்திகள் போல
பயமறியா இளைஞரும்
நீச்சலுடன் மனம் நிறைந்து
குளிரதனைப் போக்கிடவே
கூச்சலுடன் குதித்தெழுவார்.
உடுத்த சாரமதில்
அடைத்த காற்றுடனே
முட்டைபோல இடுப்பில் கட்டி
நீந்துவார் களிப்புடனே.....

இந்துக்கள் இசுலாமியர்
இவர்களுடனே
கிறிஸ்தவ நண்பர்களும்
ஒற்றுமையாய் தாயொன்றின்
மதலைகள் போல அவரும்
மகிழ்ந்து நிற்பார்.

ஒற்றைக் காலில் நின்றே
தவமிருக்கும் கொக்குகளும்
ஏற்ற நல் மீன்பிடித்து
மகிழ்ந்து செல்லும்.....

சமத்துவத்தின் இருப்பிடமாய்
நிலைத்து விளங்கும் எங்கள்
பள்ளமடுக் குளமது
விஞ்சும் தன் அழகுதனை
இயற்கையது காட்டி நிற்கும்
பன்புல்லும் மூங்கில் போல
ஓங்கி நிற்கும்.
ஆங்காங்கே தவளைகளும்
அரட்டி நிற்கும்...
பதுங்கி நிற்கும் பாம்புகளும்
அதைப் பிடித்து
மகிழ்ந்துண்ணுமே.

மறக்கமுடியுமோ
பள்ளமடுதனை
மறப்பாரும் உள்ளராயின்
மகத்துவமே இல்லை என்பேன்...

விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு - 2025
பிரமாண்ட அழைப்பு

திரு/திருமதி/செல்வி/செல்வன்/வணக்கத்துக்குரிய/கலாநிதி

....

இடம்: மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபம் & நகரசபைக் கலாச்சார மண்டபம், மன்னார்

நாள்: 11ம், 12ம் திகதி, ஆடி மாதம், 2025

"விடத்தல்தீவு - நமது வளமான வரலாறு, வளங்கள் மீள்தன்மையை கொண்டாடுதல்"

அழைப்பு

உலகளாவிய விடத்தல்தீவு சமூகத்தை ஒருங்கிணைக்கும் இந்த முக்கியமான பன்னாட்டு மாநாட்டில் வரலாறு, அறிவியல், கல்வி, கலாச்சாரம், சுற்றுச்சூழல், இலக்கியம், மற்றும் சமூக பொருளாதாரம் தொடர்பான ஆராய்ச்சி கட்டுரைகள், கருத்தரங்குகள், கலாச்சார நிகழ்வுகள், மற்றும் சமூக ஒத்துழைப்பு முயற்சிகள் நடைபெறும்

பிரதம அதிதிகள்

சிரேஷ்ட பேராசிரியர்
அருளம்பலம் அற்புதராஜா
உபவேந்தர், வவுனியா பல்கலைக்கழகம் (முதல் நாள்)

பேரருட்கலாநிதி
அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை
மன்னார் மறைமாவட்ட ஆயர் (இரண்டாம் நாள்)

சிறப்பு சொற்பொழிவாளர்கள்

கௌரவ. அ. செல்வம் அடைக்கலநாதன்
பாராளுமன்ற உறுப்பினர், வன்னி (முதல் நாள்)

திரு. க. கனகேஸ்வரன்
மாவட்டச் செயலாளர், மன்னார் (முதல் நாள்)

சிவஸ்ரீ தியாக. கருணானந்த குருக்கள்
பிரதம குரு, திருக்கேதீச்சர திருத்தலம் (இரண்டாம் நாள்)

மௌலவி எஸ். ஏ. அலீம்
தலைவர், ஜமீயத்துல்லா, காதி நீதிபதி, மன்னார் மாவட்டம் (இரண்டாம் நாள்)

சிறப்பு சொற்பொழிவாளர்கள்

பேராசிரியர் (கலாநிதி) எம்.எஸ்.எம். அனஸ்
ஓய்வுபெற்ற மெய்யியல் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி எஸ். விஜயமோகன்
தலைவர், உயிரியல் விஞ்ஞான துறை, வவுனியா பல்கலைக்கழகம்

பேராசிரியர் நேவிஸ் மொறாய்ஸ்
பொருளியல் பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மேலும் பல புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள், சமூக தலைவர்கள், எழுத்தாளர்கள், மற்றும் கல்வியாளர்களின் பங்கேற்புடன்

- 20இற்கும் மேற்பட்ட விடத்தல்தீவு பற்றிய பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள்
- விடத்தல்தீவில் தோன்றிய பாரம்பரிய, கலாச்சார இசை, நடனம், நாடகம்
- மாநாட்டு வலைப்பின்னல் சந்திப்புகளும் உணவு உறவாடல்களும்
- உலகளாவிய பங்கேற்புக்கான மெய்நிகர் நேரலை

அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்
உங்கள் ஆதரவும் பங்கேற்பும் முக்கியம்

அழைப்புக்குழு - விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு 2025

மாநாட்டுக்கு நிதிப் பங்களிப்புச் செய்தோர்

(as of 21.06.25 at 9.30 am SL time)

	பெயர்	பங்களித்த தொகை
1	பேராசிரியர். கலாநிதி. ஞானசீலன் ஜெயசீலன் (இலங்கை)	100,000.00
2	திரு.திருமதி மரியாம்பிள்ளை மரியசெல்வம் நொறிஸ் (இலங்கை)	100,000.00
3	திரு.கே.பாலசுந்தரம் (பாலு) - (சுவிட்சர்லாந்து)	100,000.00
4	திரு.எஸ். பூபாலசிங்கம் - (கனடா)	100,043.10
6	மருத்துவர் ஞானசீலன் தவசீலன் சாந்தாதேவி (இலங்கை)	100,000.00
7	திரு.சோமசுந்தரம் குடும்பம் (இலண்டன்)	90,000.00
8	மருத்துவர் ஞானசீலன் குணசீலன் சத்தியா (அவுஸ்திரேலியா)	50,000.00
9	மருத்துவர் மரியாம்பிள்ளை மதுரநாயகம் (இலங்கை)	50,000.00
10	பொறியியலாளர் ஞானசீலன் சாந்தசீலன் ஜொய்லின் (அவுஸ்திரேலியா)	50,000.00
11	திருமதி மங்களேஸ்வரி நடராஜா (இலண்டன்)	30,000.00
12	திருமதி நந்தினி சிறிதரன் (இலண்டன்)	30,000.00
13	திரு.நடராசா ஜெயதீபன் (இலண்டன்)	30,000.00
14	திரு.சவிரிமுத்து மாசில்லாமணி (நோர்வே)	30,000.00
15	திரு.வரப்பிரகாசம் நிசாந்தன் (கட்டார்)	10,065.56
16	திரு.ஞானசீலன் வசந்தசீலன் (இலங்கை)	25,000.00
17	மருத்துவர் கிறிசோஸ்ரொம் சத்தியசீலன் (இலண்டன்)	300,000.00
18	திரு. ஜேம்ஸ் சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா)	45,929.33
19	திரு.வரப்பிரகாசம் கிருபாகரன் (அவுஸ்திரேலியா)	64,301.06
20	திரு.அல்பேட் ஜேசுபாலன் சஜனா (அவுஸ்திரேலியா)	27,557.60
21	திரு.பொன்ராசா ஜோர்ச் நிசாந்தன் (அவுஸ்திரேலியா)	27,557.60
22	திரு.றெஜினோல்ட் வீனஸ் (அவுஸ்திரேலியா)	24,801.84
23	திரு.மனுவல்பிள்ளை நெவில்ஸ் (அவுஸ்திரேலியா)	45,929.33
24	திரு.இசைக்கியேல் நோபேட் றாஜன் (அவுஸ்திரேலியா)	27,557.60
25	திரு. திருமதி சவிரிமுத்து சகாயநாதன் கலிஸ்ரா (அவுஸ்திரேலியா)	55,115.19
26	திரு.றெஜினோல்ட் கலிஸ்ரஸ் (அவுஸ்திரேலியா)	27,557.60
27	திரு.பங்கிராசா லூயிஸ் மொண்போட் (அவுஸ்திரேலியா)	101,963.10
28	திரு.அந்தோனிப்பிள்ளை ஜோசப்கில்லறி (அவுஸ்திரேலியா)	27,557.60
29	திரு.திருமதி அலோசியஸ் அமல்றாஜ் திரேசா (இலங்கை)	35,000.00
30	திரு.திருமதி சூசைப்பிள்ளை டக்ளஸ் கபிலா (இலங்கை)	20,000.00
31	திரு.கொண்சாலஸ் ஸ்ரனிஸ்லஸ் (அவுஸ்திரேலியா)	18,524.31
32	மருத்துவர் அக்ரம் ஜபார் (அவுஸ்திரேலியா)	46,310.78
33	திரு.திருமதி எலியாஸ் சுதாகரன் குரூஸ் யசோதாதேவி (அவுஸ்திரேலியா)	46,310.78
34	திரு.திருமதி வெற்றிவேல் சத்தியானந்தன் மோகனறஞ்சிதா (அவுஸ்திரேலியா)	37,048.62
35	திரு.திருமதி நிஸ்கலன் கீதபொன்கலன் நான்சி (இலங்கை)	40,000.00
36	திரு.திருமதி ஜோண்சன் கியோமர் பயஸ் கிறிஸ்ரின் (இலங்கை)	10,000.00
37	திரு.திருமதி இம்மனுவேல் யூட்வின் டிமல்றாஜ் யாழினி (கனடா)	50,000.00
38	திரு.சிலுவைராசா ஸ்ரனிஸ்லஸ் (இலங்கை)	10,000.00
39	திரு. மாஷாறிக் மஹ்ரூப் (கனடா)	30,000.00
40	திரு.அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங் (நோர்வே)	100,000.00
41	டோறஸ் குடும்பம் (இலங்கை)	50,000.00
43	திரு.திருமதி தக்சினி றகுநாதன் (இலண்டன்)	47,000.00
44	திரு.திருமதி செல்வம் கன்னிமலர் - (பிரான்ஸ்)	50,000.00
45	திரு.திருமதி ஜெகநாதன் ஜெனகராணி (சிவகுரு) - (பிரான்ஸ்)	50,000.00
46	திரு.திருமதி பிரான்சிஸ் குணநாயகம் குடும்பம் (இலங்கை)	30,000.00
47	திரு.சந்தியாப்பிள்ளை அகுஸ்ரின் (அவுஸ்திரேலியா)	9,492.82
48	திரு.திருமதி பாலதாஸ் மில்ரன்றாஜ் (அவுஸ்திரேலியா)	18,985.63
49	திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை மஷிறா (அவுஸ்திரேலியா)	18,985.63
50	திரு.திருமதி குணசிங்கம் குடும்பம் (ஜெர்மனி)	50,000.00
51	திரு.திருமதி செல்வின் நிமல்றாஜ் கிறிசாந்தி - பிரான்ஸ்	50,000.00
52	மஷிறா (இலங்கை)	5,000.00
53	திரு.திருமதி ஜெகநாதன் மரிய மற்றின் (டென்மார்க்)	50,000.00
54	திரு திருமதி தாவீது பீற்றர் ஜறின் றோகினி குடும்பம் (கனடா)	75,000.00
55	திரு.திருமதி அலோசியஸ் அருண் கொண்சன்ரைன் (இலண்டன்)	11,900.00
56	திரு.திருமதி இம்மனுவேல் எட்வின் அமல்றாஜ் (நோர்வே)	100,000.00

57	திரு.திருமதி ஞானசிங்காரம் ஜுயின் பேக்ஸ்மன் (டென்மார்க்)	50,008.28
58	திரு.திருமதி ஜோண்கில்மன் நிறோஜினி தேவி (அவுஸ்திரேலியா)	25,000.00
59	1974ம் ஆண்டு பள்ளி மாணவர்கள் (சவிரிமுத்து ஜோட்ஸ்மணி, போல்றாஜ் மேரி றாகினி, யூட் கொலஸ்ரிக்கா, றொபேட் நிக்சன் றூபிற் அஞ்சலா, மேரி இருதயநாயகி, எட்மன் ஜோசப் மேரி ஆன் பெலிக்ஸ்) - (இலங்கை)	35,000.00
60	திரு.திருமதி மகாலிங்கம் ராஜநாயகம் (இலங்கை)	50,000.00
61	திருமதி. சுதாமதி விஜயராஜா (விஸ்வலிங்கம்) - இலண்டன்	51,350.00
62	திரு. விஸ்வலிங்கம் சுதாகரன்- (பிரான்ஸ்)	32,327.61
63	திருமதி சுமித்திரா விக்னேஸ்வரன் (விஸ்வலிங்கம்) - லண்டன்	20,000.00
64	திரு விஸ்வலிங்கம் பிரபாகரன் (லண்டன்)	20,000.00
65	திரு விஸ்வலிங்கம் சிவாகரன் (பபா) பிரான்ஸ்	17,100.00
66	இஸ்லாமிய சகோதரர் (இலங்கை)	25,000.00
67	திரு.திருமதி தேவதாஸ் அனுரா வேர்ஜினி (ஜெர்மனி)	47,689.05
68	திரு.திருமதி பத்மநாதன் றமேஸ்குமார் சைமிலி (நியூசிலாந்து)	30,000.00
69	திரு. திருமதி அருளப்பு கிருபா (இலங்கை)	5,000.00
70	திரு.திருமதி யேசுதாசன் யூட் ஜோர்ச் வக்ஸ்சலா - (பிரான்ஸ்)	50,000.00
71	திரு.திருமதி தாவீது அம்புறோஸ் மெக்ரலின் றோசா (கனடா)	50,000.00
72	திரு.திருமதி றொயிற்றன் சாந்தினி குரூஸ் (இலங்கை)	10,000.00
73	திரு.வெற்றிவேல் விமலானந்தன் - (பிரான்ஸ்)	25,000.00
74	திரு.திருமதி வெற்றிவேல் தயானந்தன் யூஜின் கெனடி குடும்பம் (இலங்கை)	25,000.00
75	திரு.திருமதி வெற்றிவேல் சதானந்தன் டிவ்னா பத்மலோஜினி குடும்பம் (இலங்கை)	25,000.00
76	திரு.திருமதி யோகேஸ்வரன் டினோசா (டினோசா கண்டல் தாவர வளர்ப்பகம்) - (இலங்கை)	15,000.00
77	திரு.திருமதி சந்தியாப்பிள்ளை சாந்தகுமார் - (இலங்கை)	5,000.00
78	செல்வி அந்தோனிப்பிள்ளை மேரி அன்னா - (இலங்கை)	2,000.00
79	திரு.திருமதி ஞானபாஸ்கரன் நிசாந்தன் குடும்பம் - (இலங்கை)	5,000.00
80	திரு.திருமதி ஞானபாஸ்கரன் டொறிசன் குடும்பம் - (இலங்கை)	5,000.00
81	திரு.திருமதி ஞானபாஸ்கரன் ஜோண்சன் - (இலங்கை)	5,000.00
82	திரு.திருமதி அன்ரனி இசுதோர் மேரி ஜஸ்மின் குடும்பம் - (இலங்கை)	10,000.00
84	லெம்டா விளையாட்டு கழகம் - (இலங்கை) 90,000.00	
85	திரு.திருமதி கியோமர் டினேஸ் டிலைக்சனா குடும்பம் (இலங்கை)	25,000.00
86	திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை - மரியறெஜீஸ் (இலங்கை)	10,000.00
87	திரு.திருமதி ஞானமணி எலிசபேத் குடும்பம் (இலங்கை)	66,200.00
88	திரு.திருமதி பத்மநாதன் பிறேம்குமார் ஜஸ்மின் (நியூசிலாந்து)	50,000.00
89	திரு.திருமதி எஸ். தயாபரன் (இலங்கை)	5,000.00
90	திரு.திருமதி எமிலியானுஸ் பிள்ளை அற்புதராணி குடும்பம் (இலங்கை)	50,000.00
91	திரு.திருமதி சின்னப்பர் ஜெனிபர் யூட் அயூண் குடும்பம் - (பிரான்ஸ்)	16,003.50
92	திரு.திருமதி ரவிக்குமார் மேரி இமாக்குலேற் (இலங்கை)	2,000.00
93	திரு.திருமதி எலியாஸ் போள்றாஜ் மேரி றாகினி குடும்பம். (பிரான்ஸ்)	25,000.00
94	திரு.திருமதி தாவீது இயூகொறஸ்ரியா றூபன் குடும்பம் (இலண்டன்)	50,000.00
95	திரு.திருமதி அருளானந்தம் லோறன்ஸ் ஜெயவதி (இலங்கை)	10,000.00
96	திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை கிறிஸ்ரி மனோ (இலண்டன்)	20,000.00
97	மணி மாஸ்டர் குடும்பம் (இலங்கை)	200,000.00
98	திரு.திருமதி சின்னப்பர் மரியபூரணி (இலங்கை)	30,000.00
99	திரு.திருமதி சவேரியான் றிச்சேட் தேவராஜ் (கனடா)	50,000.00
100	திரு.திருமதி மரியாம்பிள்ளை எட்வின் ஜெயக்குமார் (இலண்டன்)	100,000.00
101	அமரர்களான திரு.திருமதி பெனடிக்ற் திரேசம்மா நினைவாக அவர்களது பிள்ளைகள் (இலங்கை)	10,000.00
102	திரு.திருமதி யேசுதாசன் நோபேட் நிர்மலதாசன் (இலண்டன்)	50,000.00
103	திரு.திருமதி ஜெயராசா ஜாக்குலின் (இலங்கை)	5,000.00
104	விடத்தல்தீவு மேற்கு பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கம் (இலங்கை)	10,000.00
105	திரு.திருமதி சுரேஸ் நிலாந்தினி குடும்பம் (கனடா)	50,000.00
106	அமரர்களான மாசில்லாமணி அக்னஸ் அவர்களது நினைவாக அவர்களது பிள்ளைகள் (இலங்கை)	25,000.00
107	திரு.திருமதி சவிரிமுத்து ஜோட்ஸ்மணி குடும்பம் (பிரான்ஸ்)	25,000.00
108	அமர்களான யாக்கோப்பு, தவமணி, சற்குணசீலன் அவர்களது நினைவாக அவர்களது பிள்ளைகள் (இலங்கை)	30,036.60
110	திரு.திருமதி குருசுமுத்து கபிரியேல் லூக்மன் (கனடா)	100,200.00

111	திரு.திருமதி ஜீவரெட்ணம் யசிந்தா (இலங்கை)	5,000.00
112	திரு.திருமதி திலீபன் ஞானராணி (இலங்கை)	15,000.00
113	திரு.திருமதி தாவீது ஞானசிங்காரம் குடும்பம் - (பிரான்ஸ்)	50,000.00
114	திரு.திருமதி ஜோசப் மேரிநாதன் (இலங்கை)	5,000.00
115	திரு.திருமதி அமிர்தநாதன் செல்வராணி (இலங்கை)	5,000.00
116	அமர்களான சிலுவைராசா கிறிஸ்தம்மா அவர்களது நினைவாக அவர்களது பிள்ளைகள் (ஜெர்மனி)	84,880.00
117	திரு.திருமதி கெலின்ரன் மதுராணி (பிரான்ஸ்)	10,000.00
118	திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை அன்ரனைனஸ் ஆன்றோச் குடும்பம் (சுவிட்சர்லாந்து)	100,000.00
119	திரு.திருமதி சலமோன் விக்ரறீனஸ் றெஜி குடும்பம் (சுவிட்சர்லாந்து)	100,000.00
120	திரு.திருமதி மரியாம்பிள்ளை மசனட் குடும்பம் (சுவிட்சர்லாந்து)	36,400.00
121	திரு.திருமதி நீக்கிலாப்பிள்ளை மரியாம்பிள்ளை மரிஸ்ரெலா (கனடா)	25,000.00
122	திரு.திருமதி ஸ்ரிபன் ரெட்ணராசா மரியகொண்செப்ரா (அவுஸ்திரேலியா)	50,000.00
123	திரு.திருமதி சவேரியான் அமல்றாஜ் றஜனி (இலண்டன்)	31,302.14
124	திரு.திருமதி கியோமராசா கியோம டொணைக்சன் தர்சினி (இலண்டன்)	30,000.00
125	திரு.திருமதி கியோமராசா சுரேஸ் டெவ்ளின் (இலண்டன்)	30,000.00
126	இஸ்லாமிய சகோதரர் (கனடா)	30,000.00
127	திரு.திருமதி பங்கிராஸ் சுமத்திராதேவி (இலங்கை)	5,000.00
128	திரு.திருமதி பீ கனகா (இலங்கை)	5,000.00
129	திரு.திருமதி ஏ.தேவராசா (இலங்கை)	5,000.00
130	திரு.திருமதி மகாலிங்கம் எட்வின் றோச் மேரி சைமினி (இலங்கை)	30,000.00
131	திரு.திருமதி சின்னக்கண்டு மகாலிங்கம் ரெட்ணசீலி (இலங்கை)	20,000.00
132	திரு.திருமதி மரியாம்பிள்ளை வரப்பிரகாசம் மேரி ஐடா (இலங்கை)	5,000.00
133	திரு.திருமதி மனுவல் கிறிஸ்தியான் லூர்த்தம்மா, ஆசிரியை கிறிசாந்தி (இலங்கை)	10,000.00
134	திரு.திருமதி ஜோசப் ஜோர்ஜ் ஸ்ராலின் (அவுஸ்திரேலியா)	30,000.00
135	திரு.திருமதி செபராசா ஸ்ரிபன் றொபினா குடும்பம் (இலண்டன்)	50,000.00
136	அமரர்களான அருளப்பு ஜேம்ஸ் றீற்றம்மா சுதாஜினி அவர்களது நினைவாக அவர்களது பிள்ளைகள் (இலங்கை)	20,000.00
137	திரு சவிரிமுத்து யேசுமணி (அவுஸ்திரேலியா)	38,614.86
138	திரு.திருமதி ஜெயச்சந்திரன் ஜெயந்தி (அவுஸ்திரேலியா)	38,614.86
139	அமர்களான அடைக்கலம், றோசாமலர் அவர்களின் நினைவாக அவர்களது மகன் அன்ரன்லஸ் (டென்மார்க்)	50,000.00
140	விடத்தல்தீவு யூனியன் விளையாட்டுக்கழகம் (இலங்கை)	10,000.00
141	திரு.திருமதி இம்மனுவேல் கோட்வின் விமல்றாஜ் டென்சில் நியோமி (இலங்கை)	25,000.00
142	அமர்களான விக்ரோரியான் சிலுவைராசா லூர்த்தம்மா அவர்களது நினைவாக பேரன் பங்கிராசா லூயிஸ் மொண்போட் (இலங்கை)	10,000.00
143	அமர்களான குருசுமுத்து கிருத்தோ திரேசம்மா அவர்களது நினைவாக பங்கிராசா லூயிஸ் மொண்போட் (இலங்கை)	10,000.00
144	அமர்களான சவேரிதாசன் ஞானலங்காரம் அவர்களது நினைவாக அவர்களது மகள் அமுதினி மற்றும் மருமகன் ஜெயமன் (பிரான்ஸ்)	100,000.00
145	திரு.திருமதி யேசுராஜா நிரஞ்சன்றாஜ் றொசானா குடும்பம் (பெல்ஜியம்)	50,000.40
146	ஐக்கிய விளையாட்டுக்கழகம் விடத்தல்தீவு (இலங்கை)	10,000.00
147	திரு.திருமதி இந்துஜன் நிமலி குடும்பம் (இலங்கை)	10,000.00
148	திரு.திருமதி சவேரியான் குரூஸ் (வசி) நிறோஜா குடும்பம் (இலங்கை)	10,000.00
149	திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை கீர்த்திசீலன் லூர்த்தம்மா குடும்பம். (இலங்கை)	10,000.00
150	கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தநாதன் அடைக்கலநாதன் (இலங்கை)	100,000.00
151	அமர்களான கிருஸ்தோ யக்கோப்பிள்ளை (பிச்சையப்பா) செபமாலை அவர்களது நினைவாக (இலங்கை)	25,000.00
152	திரு.திருமதி மிக்கேல் யுஸ்தீனப்பர் றெஜீனா (இத்தாலி)	35,010.13
153	திரு.திருமதி இம்மனுவேல் அல்வின் கமல்றாஜ், மேகலா (இலங்கை)	10,000.00
154	அமர்களான பொன்ராசா மரியபூரணி நினைவாக றொபெட் பாலசிங்கம் (றாயன்) (இலங்கை)	5,000.00
155	அமர்களான தனது பூட்டி சூசனா (பிரகாசியா) மற்றும் அம்மம்மா திரேசம்மா அவர்களது நினைவாக அவர்கள் பூட்டனும் பேரனுமாகிய பிரான்சிஸ் மைக்கல் பிறீடன் (இலங்கை)	10,000.00
156	திரு, திருமதி தியூசியார் மிக்கேல் குடும்பத்தினர் (கனடா)	21,800.00
157	திரு. திருமதி இளையதம்பி பொன்னுத்துரை அன்னம்மா குடும்பத்தினர் - (இலங்கை)	10,000.00
158	திரு, திருமதி அற்புதமணி எக்ஸ்பெற்றா குடும்பத்தினர் - (சுவிட்சர்லாந்து)	50,000.00

நினைவுக்கல்
விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு 2025

நினைவுக்கல் நிறுவுதல் குழுத்தலைவர்
சோமசுந்தரம் ராஜேந்திரா